அமோகமாக இருக்கிறது. பனிச் சிகரத்தில் சறுக்கிச் செல்லும் ஆப்பிளைப்போல வழுக்கிக் கொண்டு ஓடுகிற எழுத்து நடையழகுக்கு ஒரு சிறப்பு பாராட்டு.

இந்தப் படைப்பு உங்களுக்கு ஒரு இனிய அனுபவமாகவும், புதிய தகவல்களின் அறிமுகமாகவும் அமையும். நண்பர் இந்திரா சௌந்தரராஜனின் உயரம் அளக்க இந்தப் படைப்பும் ஒரு நல்ல கருவி. ஆனால் நான் அறிவேன். அவரின் உயரம் இன்னும் இன்னும் அதிகம். அவரின் பேனாவின் சுழற்சி புதிய உச்சங்களைத் தொடும். தொட வேண்டும். தொட வாழ்த்துக்கள்.

சென்னையிலிருந்து...

வியர்க்கத்துவங்கியிருக்கும் மார்ச் இறுதியில்...

மின்வெட்டை சமாளிக்கும் இன்வெர்ட்டர் தயவில்...

பிரியங்களுடன்...

28.3.2012 பட்டுக்கோட்டைப் பிரபாகர்.

சென்னை - 20

# மாயவன் காதலி

## 1

'வானில் மேகம் கோட்டை கட்டியிருந்தது. ஊடாக குதிரைகள் ஓடுவது போல் ஒரு சீர் இல்லாத இடிச்சப்தம். காற்றும் ஊவ்வ்.. ஊவ்வ்' என்று தன் பாஷையில் வரதம்பட்டியின் வயல்வெளி நாற்றுக்களை எல்லாம் பிடுங்கி எரியும் விசையோடு வீசிக் கொண்டிருந்தது.

வரதம்பட்டியில் இருந்து வத்தலகுண்டு நோக்கிச் செல்லும் சாலையோரமாக அந்த நாளில் அம்மாவாசித் தேவர் வைத்து வளர்த்திருந்த புளியமரங்கள் சாமி வந்த கோடாங்கி போல ஆடத் தொடங்கி விட்டன.

அதன் நிழல் பாகத்தில் சின்னப் பூச்சியும் அவன் மகள் கோசலையும் தங்களின் மேய்ச்சல் ஆடுகளோடு முடங்கியிருந்தனர். பார்க்க முடிந்த தூரத்தில் கொடைக்கானல் மலையின் துவக்க பாகம் தெரிந்து கோட்டை மேகங்கள் அந்தப் பக்கமாய் ஒதுங்கி அந்த மலையில் பெய்வதில் தான் தங்களுக்கு ஆனந்தம் என்பது போல ஒதுங்கவும் பார்த்தன.

இருந்தும் ஒரு மின்னல் வெட்டவும் மழைப் பொட்டுக்கள் பொலபொலவென்று உதிரத் தொடங்கின. நஞ்சையும், புஞ்சையுமான ஊர்தான் வரதம்பட்டி. வானம் பார்த்தப் பூமிவேறு. மஞ்சளாறுப் பாசன நீர் உபரியாக இருக்கும் தருணங்களில் எப்போதாவது கிடைத்து ஒரு போகம் வரை பயிர் செய்வார்கள். மற்ற நாட்களில் மழை பெய்து பெருமாள் கண்மாய் நிரம்பினால் தான் உண்டு.

கண்மாயும் காய்ந்த நிலையில் சிந்தும் மழைநீரை உற்சாகமாய் உள் இழுக்கப் பார்த்தது. தலைக்குக் கோணிச்சாக்கை மூடக் கொடுத்த நிலையில் மழை விழுவதை மகளோடு சேர்ந்துப் பார்த்தபடி இருந்தான் சின்னப்பூச்சி. கோசலை அவனை ஒட்டிக் கொண்டு நின்றாள். ஒரு பக்கம் தகப்பன். மறுபக்கம் புளிய மரத்தின்

பருத்த முறுக்கிப் பிழிந்த மாதிரியான மரத்தண்டுப் பகுதி. அதில் பெரிய அளவில் துவாரம் ஒன்று இருந்தது அதனுள் எங்கிருந்தோ வந்திருந்த நாகம் ஒன்று சரசரவென்று உள் புகுந்தபடி இருந்தது!

கோசலை அதனாலே சற்று விடைத்து அப்பாவை அழுந்தத் தள்ளியபடி கீழேயும் விழுந்தாள்.

''அட கெரகம் பிடிச்சவளே... இப்ப எதுக்கு என்னிய தள்ளிவிட்டே?''

''பாம்புப்பா...'' படபடத்தாள் கோசலை.

''எங்க... எங்க?'' அவனும் சற்று பயத்தை காட்ட அவள் புளிய மரத்து பொந்தைக் காட்டினாள்.

மழை வலுத்து இருவர் மேலும் சாரல் படத் தொடங்கியிருந்தது. சின்னப்பூச்சி மெல்ல அந்த பொந்தருகே செல்லப் பார்த்தான்.

''அப்பேய் வேணாம்...'' -கோசலைக் குரல் நடுங்கினாள்.

''இருபுள்ள... பொந்து எம்புட்டு ஆழம்னு பாக்கறேன்'' என்று தன் கைவசம் இருந்த தொரட்டிக் குச்சியை உள்விட்டான். சரிபாதி உள்ளே போயிற்று. அது போனதாலோ என்னவோச்சற்று முன் உள்ளே நுழைந்திருந்த அரவம், அதை வளைத்துப் பிடித்துக் கொண்டே சீற்றமுடன் வெளியேத் தலையை நீட்டியது. அப்போது இடியும் மின்னலும் சேர்ந்து வெட்டவும் நீட்டிய தலையை அது வேகமாக உள் இழுத்துக் கொண்டது.

''நல்ல வெளஞ்ச நாகம் தான்'' - என்றான் சின்னப்பூச்சி. தொரட்டியையும் வெளியே உருவி எடுத்தான்.

ஆயிரமாயிரும் கண்ணாடிக் கம்பிக் குழாய்களை பூமிக்கும் வானுக்கும் நட்டு வைத்தது போல் மழை வலுத்து பூமியும் சொதச் சொதவென்று ஊற ஆரம்பித்து விட்டது.

''இப்ப எதுக்கு அதைப் பாத்தே... அது கடிக்க வந்துருந்தா என்னா பண்ணியிருப்பே?'' கோசலை அப்பனிடம் சற்று கோபப்பட்டாள்.

''அடிக்கோட்டி... நான் சேட்டைக்கு வம்பிழுத்ததா நினைச்சுட்டியோ? அது என்ன ஜாதின்னு பாத்தேன் புள்ள''

''பாம்புலசாதியா?''

''பின்ன... நல்ல பாம்புலயே கோதுமை நாகம், சாம்பல் நாகம், கருநாகம், ராஜநாகம், செந்நாகம்னு ஏகப்பட்டச் சாதிங்க



இருக்குது. இதுல ராஜநாகம் தான் ரத்தினத்தைத் தலைல வெச்சுகிட்டுச் சுத்தும். அது மட்டும் நம்ம கைலச் சிக்கிட்டா அப்புறம் நம்மளை யாரும் கைலயேப் பிடிக்க முடியாது...''

-முகத்தில் வழியும் மழைநீரை வழித்தபடியே அவன் பேசியதை கோசலை மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டாள். சுற்றி நின்று கொண்டிருந்த ஆடுகளும் மழையில் நனைந்தபடியே விரைக்க ஆரம்பித்து விட்டிருந்தன. ஒண்ணுக்கு ஐம்பது ஆடுகள். வெள்ளாடும் செம்மறியும் கலந்தே இருந்தது. கிடாய்களும் இருந்தது அவைகள் சக ஆடுகளை முட்டுவதும் சிலிர்ப்பதுமாய் மனிதர்களில் ரௌடிகளைப் போல் ஆடுகளில் நாங்கள் என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

''ஏப்பேய்... பாம்பு தலைல ரத்தினமெல்லாமா இருக்கும்?'' கோசலை நம்பமாட்டாதவள் போலக் கேட்டாள்.

''இல்லாமத்தான் நம்ம தலைவரய்யா கிட்ட இருக்குதாக்கும்?''

''நெசமாவா?''

''பொறவு... எனக்கும் அவருக்கும் ஒரே வயசுதான் புள்ள. என்னால அஞ்சாம் வகுப்ப தாண்ட முடியில. ஆனா தலைவரு பட்டணமெல்லாம் போய் படிச்சு மந்திரியால்லாம் ஆயிட்டாரு. எல்லாம் அந்த கல்லு வந்த நேரம்னுதான்னு சொல்லுறாங்க.''

''அப்ப அது சாமி மாதிரியா?''

''பொறவு?''

''நீ பார்த்துருக்கியா?''

''அத்த எல்லாம் நம்ம கண்ணுல காட்டுவாங்களாக்கும். பொச கெட்டவளே...''

-சின்னப்பூச்சி மழைக்கு நடுவில் மகளிடம் சொல்லிக் கொண்டிருந்தது எல்லாம் எந்த அளவுக்கு உண்மையோ தெரியாது. ஆனால் சொல்லுபவன் தகப்பன் என்பதால் கோசலை அதை நம்பினாள்.

அப்போது மழை மேலும் வலுத்து வானிலும் மின்னல் கோடொன்றுச்சாட்டைக் சொடுக்காய் ஓடியது. கோசலை கண்களை மூடிக் கொண்டு காதையும் பொத்திக் கொண்டாள். அந்த சப்தத்துக்கு ஆடுகளும் மிரண்டு போய் தெரித்து ஓடப் பார்த்தன. அதைப் பார்த்துவிட்டு மழையைப் பொருட்படுத்தாமல் சின்னப் பூச்சி அந்த ஆடுகளை திரும்பவும் ஒன்று படுத்துவதற்காக அந்த மரத்தடியை

விட்டு சற்று வெளியேறவும் காத்திருந்தது போல ஒரு இடி அவன் தலைமேல் இறங்கியது.

கோசலை அந்தக் காட்சியில் அப்படியே உறைந்து போய்விட்டாள்!

வரதம்பட்டி முழுக்க சின்னப்பூச்சியின் மரணத்தைச் சொல்லும் இரண்டுக்கு இரண்டு சுவரொட்டிகள்! 'இமயம் சரிந்தது' என்று சின்னப்பூச்சியை இமயத்துக்கு உயர்த்தி விட்டிருந்தது ஒரு போஸ்டர், அதை பார்த்தபடியே அவன் குடிசை நோக்கி சிலர் சென்றபடி இருந்தனர்.

கொட்டு சப்தம் கேட்டபடி இருந்தது. பெரியப்பட்டி சுதந்தரமும் அவன் சகாக்களும் காலில் சதங்கையோடு சற்று அழுக்கான ராஜபார்ட் உடையோடு ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தனர்.

குடிசைக்குப் பக்கமாய் கண்மாய் கரை மேட்டுப் பரப்பு. அந்த பரப்பில் மஞ்சக் கடம்ப மரங்கள் மண்டி வளர்ந்திருக்க அதற்கு கீழே வேலிப்படலுக்குள் அவனது ஆடுகள் அடைபட்டிருந்தன.

வீட்டினுள் பலமான ஒப்பாரிச் சப்தம்.

சின்னப்பூச்சி உயிரோடு இருந்தபோது ஐம்பது ரூபாய் கடன் தர யோசித்தவர்கள் கூட துக்க விசாரிப்புக்கு வந்திருந்தது ஆச்சரியமாகத்தான் இருந்தது. வந்த இடத்தில் சாராயக்காரச் சங்கையன் அலுமினிய டேக்சா ஒன்றில் குடி தண்ணீர்ப் போல சாராயத்தை நிரப்பி அதை வந்து நிற்பவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு கிளாஸ் என்று விநியோகித்துக் கொண்டிருந்தான்.

நெருடல் இல்லாமல் ஓசியில் குடிக்க சாவு வீட்டை விட ஒரு இடம் கிடைக்குமா என்ன? பக்கமாய் ஒரு சட்டியில் பச்சை மிளகாயும் வெங்காயமும் நறுக்கி நிரப்பப்பட்டிருக்க குடித்த நாக்குக்கு அவை இரண்டும் படு சுள்ளாய்பாக இருந்தன.

சின்னப்பூச்சி வரதம்பட்டியில் நல்ல பெயர் எடுத்திருந்தவன். ஊரில் எல்லா நல்லது கெட்டதிலும் முன்னாலும் நிற்பவன். அதனால் கிட்டத்தட்ட எல்லோரும் வந்திருந்தனர். அவனுக்கு சொந்தமான அரசாங்கம் தந்திருந்த பஞ்சமி நிலமான மூன்று ஏக்கரா இடத்தில் மழையைப் பொறுத்து விவசாயம் செய்வான். மற்றபடி ஆடு வளர்த்து சந்தைக்கு போய் விற்பதில் தான் அவன் பிழைப்பு ஓடிக் கொண்டிருந்தது.



ஒரே மகள்தான் கோசலை! அவளை தன் பெரிய சகோதரி மகன் மாயவன் என்பவனுக்கு கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது அவன் பிரியம். ஆனால் மாயவன் கள்ளத் தொழிலுக்கு காப்பு கட்டிக் கொண்டதில் அவனுக்குப் பெண் கொடுப்பதில் ஒரு முடக்கம் ஏற்பட்டு கோசலைக்கு வேறு இடம் பார்க்கும் எண்ணத்தில் இருந்தான்.

இப்படி ஒரு நிலையில்தான் இடி அவன் தலையில் இறங்கி கரிக்கட்டையாக்கி விட்டிருந்தது.

உள்ளே அந்த கட்டைக்கு பக்கத்தில் அமர்ந்த நிலையில் கோசலையும் அவள் தாயான பருத்தியும் பொங்கிப் பொங்கி அழுது கொண்டிருந்தனர். அப்போது வெளியே சற்று சலசலப்பு. கொட்டு சப்தமும் அடங்கி ஆட்டமுடும் நிறுத்தப்பட்டு ''வாங்க தலைவரே... வாங்க'' என்று அழைப்புக் குரல்கள் கேட்டன. கையில் ஒரு ரோஜாப்பூ மாலையோடு நின்று கொண்டிருந்தார் மாஜி மந்திரியும் வரதம்பட்டிக்கே நாட்டாமையுமான பாண்டிய மாணிக்கம். கூடவே அவரது தொண்டரடிப் பொடிகள்.

அவரைப் பார்க்கவும் சிலர் ஓடிப்போய் கையைப் பற்றிக் கொண்டு அழுதனர்.

''ஐயா... எம்புட்டோ கொலகாரப் பாவிங்கல்லாம் ஊருக்குள்ளத் தெம்பா நடமாடிக் கிட்டிருக்க, அவங்க தலைல விழ வேண்டிய இடி அப்பாவி பூச்சி தலை மேல விழுந்துடிச்சேய்யா...'' என்று ஒரு கிழவி கருத்து வேறு படித்தாள்.

''அவன் விதி அப்படி... யாரால மாத்த முடியும்? போவட்டும் இடிப் பொணத்த ரொம்ப நேரம் போட்டு வைக்கக் கூடாது. சட்டுன்னு எடுக்கணும் அங்காளி பங்காளி அம்புட்டு பேரும் வந்தாச்சா? மயானப் பல்லாக்க கட்டிப்பிடலாமா?'' என்று காரியமாகப் பேசினார் ஒருவர்.

''ஆவட்டும்... ஆவட்டும்...'' என்றார் இன்னொருவர். தலைவர் பாண்டிய மாணிக்கமும் சின்னப்பூச்சி சடலத்துக்கு மாலையை போட்டுவிட்டு ஒரு வெள்ளைக்கவரைச் சின்னப்பூச்சி மனைவியிடம் நீட்டினார்.

உள்ளே நிறைய ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

''பூச்சி என் உசுர் சினேகிதன்... வெச்சுக்கதாயி. அவன் காரியத்துல ஒரு குறையும் வந்துடக்கூடாது. நல்லவிதமாச் செய்யிங்க'' என்று ஆறுதல் வார்த்தைகளையும் கூறினார். அதை உடன் அமர்ந்திருப்பவர்கள் அழுத்தமாய் கவனித்தபடி இருக்க

பருத்தி வசம் அவர் தந்த வெள்ளைக் கவரை அவன் தம்பி வீரையன் பிடுங்கிக் கொண்டான். அவன் நல்ல போதையில் இருந்தான். தலைவர் பாண்டியமாணிக்கம் குடிசைக்கு வெளியில் வந்தார். எல்லோரையும் பார்த்து ஒரு ராஜ நமஸ்காரமும் புரிந்தார். அப்படியே நடந்து தூரத்தில் நின்றபடி இருக்கும் அவரது டாடா சுமோ நோக்கி நடக்கலானார். கிட்டே நெருங்கவும் கதவைத் திறந்து விட்டான் அவரது வலது கையான கிட்டான்.

உள்ளே அமரும் முன் தன் நரைத்த மீசையை ஒரு நீவு நீவியபடியே சுமோ நிற்கும் இடத்தை ஒட்டி நீண்டு கிடக்கும் வயல்வெளியை பார்த்தார். சின்னப்பூச்சியின் இடம்.

அவர் பார்ப்பதை வைத்தே கிட்டான் புரிந்து கொண்டு விட்டான்.

''இனி நம்ம இடம்தான் தலைவரே... பூச்சி தான் இடமொடக் கானவன். பருத்திகிட்ட சுலபமா எழுதி வாங்கிடலாம்'' என்றான்.

அப்போது விசையோடு ஒரு குதிரை பூட்டிய ரேக்ளா அவர்களைக் கடந்து போனது. ரேக்ளாவில் காகிபேண்ட் சட்டையில் முறுக்கி விட்ட மீசையோடு மாயவன்! அவனைப் பார்க்கவும் பாண்டியமாணிக்கத்துக்கு மிளகாயைக் கடித்து விட்டது போல ஒரு முகமாற்றம்.

''இவன் பூச்சியோட மருமவன் மாயவன் தானே?''

''ஆமாம் தலைவரே... கள்ளப்பய!'' - ஆமோதித்த கிட்டானின் பதிலில் ஒரு அழுத்தமான காட்டம்.

''கள்ளப்பயன்னா... இப்பவும் வேட்டைக்கெல்லாம் போறாங்களா என்ன?''

''ஆமாம் தலைவரே... இதுவரை ஏகப்பட்ட வேட்டைக்கு போய் ஏராளமா காசும் பாத்துட்டான். போலீசாலதான் சாட்சியோட புடிக்க முடியல''

சகாக்கள் சொன்னதைக் கேட்டபடியே சுமோவுக்குள் அடங்கினார் பாண்டியமாணிக்கம். அதுவும் புழுதியை கிளப்பியபடி பறக்க ஆரம்பித்தது.

சாவுக் குடிசை முகப்பில் மாயவனின் குதிரை ரேக்ளாவும் தேங்கி நின்றது. இறங்கியவனைப் பார்த்துவிட்டு மொத்த கூட்டமும் ஓடிவந்தது. சாராயக்கார சங்கையன்தான் முதல் ஆளாக ஓடி வந்தான்.



ஆட்டம் பாட்டமும் திரும்ப நின்றதில் உள்ளிருந்தபடியே வெளியே பார்த்தாள் கோசலை. மாயவன் தெரியவும் அவளது அழுது சிவந்த முகத்தில் ஒரு சின்னப் பிரகாசம்!

## 2

**மா**யவன் தன்னை சூழ்ந்து நிற்பவர்களிடம் இருந்தும், தன்னிடம் குசலம் விசாரிப்பவர்களிடம் இருந்தும் மெல்ல விலகி குடிசையினுள் நுழைய ஆரம்பித்தான். ரேக்ளாவில் வந்தபோது அவன் பயன்படுத்திய சாட்டைக் குச்சி அவன் கையிலேயே இருந்தது.

அது உள்நுழைந்த நிலையில் சின்னப்பூச்சியின் இடி பாய்ந்த உடம்பைப் பார்க்கையில் கை நழுவிக் கீழே விழுந்தது.

''மாமேய்...'' என்று உரத்த குரல் எடுத்து அழுதபடியே அப்படியே மண்டியிட்டு விழுந்து அழத் தொடங்கினான்.

அவன் அழுவது என்பது ஆலங்கட்டி மழை பெய்கிற மாதிரியான ஒரு அதிசயம். அவனது அழுகுரல் வெளியே திரண்டு நிற்பவர்கள் காதுகளில் விழவும் அவர்களும் ஆச்சரியத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''மாயவனா அழுவறது?''

''பொறவு... என்ன இருந்தாலும் தாய்மாமன் இல்லையா... பாசம் விட்டுப்போகுமா?''

''எனக்கு அழுறவனைக் கண்டாலே பிடிக்காதுன்னு சொல்ற மாயவன் அழுவறான்னா அதாம்பா பாசத்துக்கு இருக்கற சக்தி'' ஒரு பெருசு தன் கரகரப்பான குரலில் வெளிப்படுத்திய கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டது போலத்தான் தெரிந்தது.

''ஆமா இவன் எங்க இருப்பான்னே தெரியாதே... இவனுக்கு யாருய்யா சேதி சொன்னது?''

''நமக்கு தான் மாயவன் எங்க இருப்பான்னு தெரியாது. ஆனா அவன் வளக்கற புறாவுக்கு தெரியும்ல?''

இப்படியும் இருவர் பேசிக் கொள்ள அவர்கள் பார்வை அந்த கூரை வீட்டை ஒட்டி உள்ள நொணா மரத்துப் பக்கம் சென்றது. அங்கே கோழிப் பஞ்சாரம் ஒன்றுக்குள் ஒரு தாய்க்கோழியும் அதன் குஞ்சுகளும் 'தக்... தக்... தக்' என்று முனகல் சப்தத்தோடு தவித்தபடியே இருந்தன. பக்கத்திலேயே ஒரு கோழி

வலைக்கூண்டு ஒன்று... அதனுள்ளே ஒன்றுக்கு நான்கு புறாக்கள். கூண்டின் மேல் பாகம் திறந்துதான் இருந்தது. அதன் வழியாக அவைகள் எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம் எனும்படியாக ஒரு சுதந்திரமும் அவைகளுக்கு தரப்பட்டிருந்தது. ஆனாலும் அவைகள் உள்ளடங்கியே இருந்தன.

உள்ளே அழுதபடி இருந்த மாயவனை கோசலை சற்று பூரிப்போடு பார்த்தாள். மாயவன் அவள் கரத்தையும் அவளுடைய தாயான பருத்தியின் கரத்தையும் ஒரு சேர பிடித்துக் கொண்டான்.

''அத்தே... கோசல... மாமா நம்மை எல்லாம் விட்டுட்டு இம்புட்டு சீக்கிரமா வைகுண்டம் போவார்னு நான் கனவுல கூட எதிர்பார்க்கல. ஆனா அதான் விதின்னு ஆகிப்போச்சு. கவலப்படாதீங்க... நான் இருக்கேன் இனி உங்களுக்கு'' என்றான்.

''ஆமாம் ராசா... இனி எங்களுக்கும் உன்னை விட்டா யார் இருக்கா?'' என்று பருத்தியும் அவன் மேல் விழுந்து அழுதாள்.

கோசலை மட்டும் அந்த நிலையிலும் அவனது பருத்த தோள்களையும், சுருட்டை தலை முடியையும் கண்கலங்க ரசித்தாள்.

வெளியில் திரும்பவும் கொட்டுச் சப்தம் ஒலிக்கத் தொடங்கி விட்டது.

வப்பாளத்தான் கால் சலங்கை கதறக் கதற ஆட்டம் போடத் தொடங்கினான். அவனோடு கூட்டணி சேர்ந்து கொண்ட பொன்னழகி என்பவள் தனது பெரிய மார்புகளை முடிந்த அளவுக்கு குலுக்கி ஆட ஆரம்பித்தாள்.

சாராய போதையோடு இருந்தவர்களுக்கெல்லாம் பொன்னழகியின் குலுக்கல் ஒருகோடி ரூபாய் லாட்டரி குலுக்கலை விட பெரிய குலுக்கலாக இருந்தது. அப்போதுதான் அந்த கூட்டத்துக்குள் புதிதாக ஒரு நான்கு பேர் உள் நுழைந்திருந்தனர். நான்கு பேருமே நான்குபுறம் பிரிந்து போய் நின்றபடி இருந்தனர். அவர்கள் கண்களில் ஒரு தேடல். ஒருவன் தன்விரல் இடுக்குகளுக்கு இடையே சவர பிளேடை இரண்டாக ஒடித்து அதில் ஒரு பகுதியை லாவகமாக பிடித்தபடி இருந்தான். இன்னொருவன் கையில் உள்ளடக்கமாக கோழிமுட்டை ஒன்று இருந்தது.

மூன்றாமவன் ஊசிக்குழலை வைத்திருந்தான். வாயில் வைத்து தம்கட்டி ஊதினால் உள்ளிருக்கும் விஷஊசி எதிரில் இருப்பவர்கழுத்தில் போய் ஒரு இரண்டு இஞ்சுக்கு உள் ஏறிவிடும். நான்காமவனிடம் ஒரு சாணுக்கு வீச்சு கத்தி இருந்தது. அவர்களை



சாவுக் கூட்டமும் கவனிக்கவில்லை. இப்படியும் அப்படியுமாக அவர்களும் நகர்ந்து இடம் மாறிக் கொண்டே இருந்தனர்.

அவர்கள் குறி எல்லாம் மாயவன்தான்!

உள்ளிருந்து அவன் வெளியே வந்த நொடி ஒரு நான்கு முனைத் தாக்குதலில் ஒன்று தவறினாலும் ஒன்றில் மாயவன் சிக்கியே தீரவேண்டும். அதிலும் முட்டை மாயவன் மேல்பட்டு உடைந்தால் உள்ளிருக்கும் ஆசிட் அவனை உருக்குலைத்து விடும். அதன் எரிச்சலில் அவன் சிக்கும்போது பிளேடும் கத்தியும் விஷ ஊசியும் மாறி மாறி அவனைப் பதம் பார்த்து விடும்.

ஆனால் நெடுநேரம் அவர்கள் காத்திருந்தும் மாயவன் உள்ளிருந்து வெளியே வரவில்லை. ஒரு கட்டத்தில் மாயவன் ஏறி வந்த ரேக்ளா வண்டி குதிரை கனைப்போடு கிளம்ப தயாரானதை நால்வரும் திரும்பிப் பார்த்தபோது மாயவன் ரேக்ளா மேல் இருந்தான்!

கைச்சவுக்கு குதிரையின் தொடையில் சுளீர் என்று படவும் அதுவும் ஒரு சீண்டலோடு ரேக்ளாவை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. அந்த நொடிப் பொழுதில் மாயவன் திரும்பி ஒரு பார்வை மட்டும் பார்த்தான். அப்படியே மீசையையும் நீவி விட்டுக் கொண்டான். அது அந்த நால்வருக்குமே பேரதிர்ச்சியாக இருந்தது. அவர்கள் அதிர்வு கலைவதற்குள் அவன் ரேக்ளா வெகுதூரத்துக்கு போய் விட்டிருந்தது.

ஆட்டம் போட்ட வப்பாளத்தானும் தாளம் போட்ட தாளக்காரனும், பொன்னழகியும் கூட நின்று ஒரு அதிசயம் போலத்தான் அந்த காட்சியைப் பார்த்தனர். சாவுக் கூட்டமும் ஒரு ஷணம் ஸ்தம்பித்து விட்டு அப்போதுதான் அந்த நான்கு பேரையுமே கவனிக்கத் தொடங்கியது.

''ஏய் மஞ்சப்புதூர் வல்லாளனுங்க'' என்றார் ஒருவர் அந்த நால்வரில் ஒருவனும் விசுக்கென்று பிணம் கிடக்கும் உட்புறம் சென்று ஆத்திரத்தோடு பார்த்தான். உள்ளே கூரைச் சரிவில் ஒரு இடத்தில் ஓட்டை போட்டு அதன் வழியாக வெளியேறி குடிசையின் பின்பக்கத்தில் இறங்கி, பின் பக்கவாட்டின் வழியாக ரேக்ளா இருக்குமிடத்திற்கு குனிந்தபடியே வந்து அதில் ஏறிக்கொண்ட நிலையில் பறந்திருக்கிறான் மாயவன்!

திரும்பி வெளியில் வந்தவன் ''கூரைல ஓட்டபோட்டு பின் வழியா இறங்கி தப்பிச்சுட்டான்பா'' என்றான். மற்ற மூவரும் பெருமூச்சோடு அதை கேட்டுக் கொண்டனர்.

எப்படியோ ''இந்த வட்டம் தப்பிட்டான். அடுத்த வட்டம் அவன் கதையை முடிச்சே தீரணும்'' என்றபடியே அங்கிருந்து விலகப் பார்த்தனர். வெகு தொலைவில் அவர்கள் ஏறி வந்திருந்த புல்லட் மோட்டார் சைக்கிள். அதன் இஞ்ஜின் சப்தமே அலாதியானது. அதுதான் மாயவனை உஷார்ப்படுத்தியிருக்க வேண்டும்!

சாவுக் கூட்டம் அவ்வளவும் அந்த நான்கு பேரை சற்று பயத்தோடு பார்த்தது. ''எலே ஏண்டா ஆட்டத்தை நிறுத்திட்டீங்க. ஆடுங்கடா... எங்க குறி அந்த களவாணி மாயவன் மேலதான். நீங்க யாரும் கிடையாது. எங்க ஊருக்கு வந்து எங்க மிட்டா பங்களாவுலயும் புகுந்து பவுனையும் பணத்தையும் அள்ளிகிட்டு போன அந்த களவாணிக்கு சட்டமும் போலீசும் தண்டனை தருமோ தராதோ எங்களுக்குத் தெரியாது. ஆனா நாங்க தந்தே தீருவோம். அவன் இன்னிக்கு எங்ககிட்ட இருந்து தப்பிச்சிருக்கலாம். ஆனா என்னிக்கும் தப்ப முடியாது'' என்று எல்லோருக்கும் கேட்கும்படி பேசிக் கொண்டு தங்கள் புல்லட் மோட்டார் சைக்கிள் நோக்கிச் சென்றனர். அதை கோசலையும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவர்கள் விலகிச் செல்லவும் அவளிடம் ஒரு நிம்மதிப் பெருமூச்சு!

**பா**ண்டிய மாணிக்கத்தின் பங்களா! மாடியின் உச்சியில் டிஷ் ஆண்டனா சகிதம் இன்றைய நவீனங்கள் எதுவும் எங்களுக்கு விலக்கு கிடையாது என்பது போல பளிச்சென்று காட்சியளித்தபடி இருந்தது.

மையத்தில் அவர் சார்ந்திருந்த கட்சியின் கொடி பறந்து கொண்டிருந்தது. முகப்பில் நிறைய பேர்களும், ஜீப்புகளும் நின்று கொண்டிருந்தனர். வத்தலகுண்டு தாசில்தாரில் இருந்து ஆர்.டி.ஓ. வரை அவ்வளவு பேரும் வந்திருந்தனர்.

அத்தனைப் பேருக்கும் கோழிக்குழம்பும் கறி பிரியாணியுமாய் ஒரு பெரும் விருந்து! கூடவே அவை செறிக்கத் தோதாக அரைக் கோப்பைக்கு வாசம் தெரியாத ஜின் சரக்கு!

விழுங்கிவிட்டு உதட்டையும் துடைத்தபடி 'அப்ப நாங்க ஜமாபந்திக்கு கிளம்பறோம்' என்று தாங்கள் வந்த வேலையையும் ஞாபகப்படுத்திக் கொண்டனர்.

''பாத்து சூதானமா போய்ட்டு வாங்க. இந்த பக்கம் வந்தா நம்ப மனைல கை நனைக்காம மட்டும் போயிடக் கூடாது'' என்று பாண்டிய மாணிக்கமும் அவர்களிடம் வெகு நயமாகச்



சொல்லியபடி இருந்தார். அவர்களும் சிரித்தபடி பெரியகும்பிடு போட்டுவிட்டு அவரவர்கள் வாகனங்களில் ஏறிக் கொள்ள, அவைகளும் புழுதி பறக்க புறப்படத் தொடங்கின. ஒரு ஜீப் மட்டும் கிளம்பாத நிலையில் அதனுள்ளிருந்த டி.ஆர்.ஓ. ரங்கசாமி எதையோ சொல்ல மறந்து விட்டவர் போல இறங்கி பாண்டிய மாணிக்கத்திடம் வந்தார்.

''என்ன ரங்கசாமி?''

''ஒண்ணும் இல்லைங்கய்யா நம்ம வரதம்பட்டில ஒரு எஞ்ஜினியரிங் காலேஜ் கட்டப் போறதா சொல்லிகிட்டிருந்திங்களே அது எந்த அளவுலய்யா இருக்கு?'' என்று ஆரம்பித்தார்.

''இருக்குய்யா... இங்க எஜிகேஷன் மினிஸ்டர்கிட்டயும், டெல்லியிலயும் பேசி பர்மிஷனுக்கு ஏற்பாடு செய்துட்டேன். வாட்டமா ஒரு இருவது ஏக்கராவது வேணும். துண்டு துண்டா இடம் கிடக்குது... அங்கையும் இங்கையுமா, ஆனா ஒரே சதுரமா இருந்தால்ல எல்லாத்துக்கும் வசதியா இருக்கும்?''

''ஐய்யாவுக்கா இடம் கிடைக்கறதுல சிக்கல்?''

''சிக்கலெல்லாம் ஒண்ணுமில்ல... எப்படியும் இந்த மாசம் இடத்தை முடிச்சிடுவேன். ஆமா நீ எதுக்கு கேக்கறே?''

''இல்லீங்கய்யா என் மாமனார் போன மாசம்தான் யூனிவர்சிடில இருந்து ரிட்டையர் ஆனார். அவரை நீங்க பாத்தீங்கன்னா விடமாட்டீங்க. ஒரு என்ஜினியரிங் காலேஜோட இன்ஃப்ராஸ்ட்ரக்சர் அவ்வளவும் அவருக்கு அத்துப்படி... பொதுவுல புதுசா தொடங்கறவங்க இப்படி ரிடையர் ஆகி வர்றவங்களைத் தான் அண்டர் டேக் பண்ணி அவங்களதான் பாத்துக்க சொல்லுவாங்க... அதான்...

''ரொம்ப சௌகர்யமா போச்சு... உன் மாமனாரை என்னை வந்து பார்க்கச் சொல்லு...''

''ரொம்ப சந்தோசம்யா... அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன்...''

ஆர்.டி.ஓ.வின் ஜீப்பும் இறுதியாக புறப்பட்டது. பாண்டியமாணிக்கம் முகத்தில் ஒரு இனம்புரியாத செருக்கு. அதை பார்த்தபடியே ஒதுங்கியிருந்த அவரது வலது கையான கிட்டான் நெருங்கி வந்தான்.

''ஐயா அப்ப சின்னப்பூச்சி பொண்டாட்டி பருத்தியை வரச் சொல்லட்டுங்களா?'' என்று கேட்டான்.

''வரச் சொல்லிடு...'' -என்னும் போதே ஒரு படகுக்கார் ஒன்று உள்நுழைந்தது. உள்ளே இருந்து தேவதைப் போல வெண்ணிற சுடிதார் உடுப்பில் இறங்கினாள் பாண்டிய மாணிக்கத்தின் ஒரே மகளான செண்பகக்குழல்வாய் மொழி எனும் செண்பகம்!

## 3

செண்பகக் குழல்வாய்மொழி-யைப் பார்க்கவும் பாண்டிய மாணிக்கத்துக்கும் ஆகாயமிதப்பு ஏற்பட்டது.

சென்னையிலிருந்து வந்திருக்கிறாள்.

ஆனாலும் முகத்தில் பெரிதாய் பயணக் களைப்பு இல்லை. அப்பாவை பார்க்கவும் உற்சாகமாகிச் சிரித்தாள்.

''ஹாய் டாட்...''

''வா கண்ணு... நீ வர மதியம் ஆகும்னு நினைச்சேன், சீக்கிரமாவே வந்துட்டியே...''

''அதான் இப்ப உங்க கவர்மெண்ட்ல வழவழன்னு ரோடு போட்டுட்டாங்களேப்பா... சென்னை டு வரதம்பட்டிக்கு அதிகபட்சம் இப்ப ஆறுமணி நேரம்தான். நம்ப டிரைவர் மணி இங்க புழுதி ரோட்டுலையே எம்பது கிலோ மீட்டர் ஸ்பீடுல பறப்பான். அந்த ரோடுல கேக்கணுமா?''

-கலகலப்பாய் பேசியபடி உள் நுழைந்தாள் செண்பகக்குழல்வாய் மொழி.

''செம்பா... வந்துட்டியா?'' என்று ஒரு வயதான குரலும் எதிர் கொண்டது. பாண்டியமாணிக்கத்தின் வயதான தாயான பழனியம்மாள்தான் அது.

''அப்பத்தா...'' -என்று ஓடிப்போய் பாட்டியை கட்டிக் கொண்டாள் செண்பகம். கன்னத்தோடு கன்னம் வைத்து ஒட்டி உறவாடிய போது சிலு சிலுவென்று இருந்தது.

''எத்தினி நாளைக்கு கண்ணு காலேஜி லீவு?''

''இனிமேட்டு லீவெல்லாம் கிடையாது அப்பத்தா... காலேஜ் படிப்பு முடிஞ்சிச்சு'' -சோபாவில் அமர்ந்தபடியே செண்பகம் பாட்டியையும் அருகில் அமர்த்திக் கொண்டாள்.

''அப்படியா சங்கதி. அப்ப உனக்கொரு கல்யாணத்தை பண்ணிட வேண்டியது தான்...''



''பாத்தியா... உடனே கல்யாணத்துக்கு ஓடிட்டியே? நான் அமெரிக்காவுக்கு போய் மேல்கொண்டு படிக்கப் போறேன்''

''அதுசரி... நீ இவ்வளவு படிச்சதே ஜாஸ்தி. இந்த படிப்புக்கு உனக்கு மாப்ளை பாக்கறதே பெரும்பாடு. இதுல நீ மேற்கொண்டும் படிச்சாக்கா அம்புட்டு தான்''

''ஆமா உனக்கு கல்யாணத்தை தவிர வேற பேச்சே பேசத் தெரியாதா?''

-பாட்டியும் பேத்தியும் உரசிக் கொள்வதை பாண்டிய மாணிக்கமும் வெகுவாக ரசித்தார்.

''உன் கல்யாணத்த பாக்கத்தானே கண்ணு நான் இன்னும் உசுரோட இருக்கேன். நானும் இல்லாட்டி உன் அப்பன் பாட்டுக்கு உன்னை எந்த குடிகாரன் தலைலயாவது கட்டிட்டான்னு வை... என்னத்த பண்றது?''

''ஐயோ அப்பத்தா... இது ஒண்ணும் நீ வாழ்ந்த காலம் மாதிரியான காலம் இல்ல. நான் படிச்சவ... யாரை எப்படி சூஸ் பண்ணணும்னு எனக்குத் தெரியும்'' - செண்பகம் அழுத்தமாக சொன்னது பழனியம்மாளை திருப்திப்படுத்தவேயில்லை.

''என்னத்த தெரியும்? இந்த குடும்பத்து சாபம் தெரிஞ்சா நீ இந்த மாதிரி பேச மாட்டே... இந்த ஊட்டு பொண்ணுங்களுக்கு கல்யாண ராசியே கிடையாது. இந்த ஊட்டுக்கு வாழவர்றவங்களுக்கும் நிறைஞ்ச வாழ்க்கை கிடையாது. அதான் உங்கம்மா ஒரு கார் விபத்துல உன்னைய தவிக்க விட்டுட்டு போய் சேர்ந்தா... உன் அத்தையாச்சும் நல்லா இருக்காளான்னா அதான் கிடையாது. என்னாட்டம் தாலியறுத்துட்டு தனிமரமா கிடக்கறா''

-பழனியம்மாளிடம் புதிது புதிதாக கருத்துக்கள் செண்பகம் பாண்டிய மாணிக்கத்தை பார்த்தாள். அவருக்கும் புரிந்தது.

''யம்மா... உடும்மா! அவ இப்பதான் ஊட்டுக்குள்ள நுழைஞ்சிருக்கா அவகிட்ட போய் சாபம் பாவம்னுகிட்டு. அத்தை எல்லாம் பேசாதே - அப்படி எல்லாம் எதுவும் கிடையாதுன்னா நீயும் கேக்கவே மாட்டேங்கறே'' - அலுத்துக் கொண்டார்.

''போதுண்டா... நீ சாமியே இல்லேங்கறவன் என் பேச்சை எங்க இருந்து கேப்பே?''

''சாமி இருந்துருந்தா அதை நம்பற நீ இப்படியா இருந்துருப்பே? இல்லாததால தான் புத்தி உள்ளவன் பொழச்சிக்கற இடமா இந்த பூமி இருக்கு. அது இல்லாததாலதான் உன்னைப் போல உள்ளவங்களும் புலம்பி கிட்டே இருக்கீங்க''

பாண்டிய மாணிக்கத்தின் பதில் பழனியம்மாளை சங்கடப்படுத்தியது. செண்பகமும் அதற்கு மேல் அவர்களை பேச விடாதவளாக எழுந்து கொண்டாள்.

''அப்பத்தா அப்பா பேச்ச கேட்டு வருத்தப்படாதே. இந்த விசயத்துல நான் எப்பவும் உன்பக்கம் தான். அப்பா ஒரு அரசியல்வாதி. சாமி பக்தியெல்லாம் இருந்தா அரசியல்ல குப்பை கொட்டி மந்திரியால்லாம் ஆக முடியாது. இவர் கிடக்கிறார் விடு. நான் உன் ஆசைப்படிதான் நடந்துக்குவேன் போதுமா?'' என்று கேட்டபடியே பாட்டியின் கன்னத்தை தன் வலது கை விரல்களால் வருடி முத்தமிட்டபடியே தனது அறை நோக்கி செல்லத் தொடங்கினாள். அப்போது பாண்டியமாணிக்கத்தின் செல்போனில் அழைப்பொலி. மஞ்சப்புதூர் மிராசுதான் பேசினார். ஒரே புலம்பல் மாயவன் பற்றி.

பாண்டிய மாணிக்கமும் அதை வெகுவாக ரசித்தார். அப்போது கிட்டான் அவரைத் தேடி வந்தவனாக காதோரமாய் கிசுகிசுக்கத் தொடங்கினான்.

''ஐய்யா... சாவு ஊட்டுக்கு வந்த மாயவனை தூக்கறதுக்காக மஞ்சப்புதூர் வல்லாளனுங்க வந்துருக்காங்க. ஆனா மாயவன் எஸ்ஸாயிட்டான். அவனுங்களும் கருவருக்காம விடமாட்டோம்னு சொல்லிட்டு போயிருக்காங்களாம்''

''அடப்போடா... ஆமாம் அவன் எப்படிடா எஸ்ஸானான்? நாமளும்தான் பாத்தோமே?''

''அவன் சுள்ளான்யா... பேர்ல மட்டும் மாயவன் இல்ல அவன்... நிஜமாலுமே மாயக்காரன்யா''

''இப்படி ரசிச்சுப் பேசிதாண்டா திருட்டுப் பயலுங்கள எல்லாம் ஹீரோவாக்கியிருக்கோம்... ஆமா நாம போலீசுக்கு தகவல் தந்தோமே அவங்க என்ன பண்ணாங்களாம்... போனைப் போடு முதல்ல ஸ்டேஷனுக்கு''

-அவரின் அதட்டலைத் தொடர்ந்து கிட்டானும் தன் செல்போனில் லோக்கல் சப்இன்ஸ்பெக்டர் இளங்கோ என்பவரைத் தொடர்பு கொண்டான்.

''ஐயா ஊட்ல இருந்து பேசறோம். மாயவன் சாவு ஊட்ல இருக்கான்னு சொன்னோமே என்னாச்சுன்னு கேக்கறாரு ஐய்யா''

''நீ போனை ஐய்யாகிட்ட கொடு. பதிலை நான் அவர்கிட்டயே சொல்லிக்கறேன்...''



இன்ஸ்பெக்டரின் தாட்டியமான பதிலைத் தொடர்ந்து போன் கைமாறியது.

''சொல்லுய்யா... அந்த களவாணியை புடிச்சி உள்ள போட்டுட்டீங்களா?''

''அதுவந்துய்யா நீங்க தகவல் தரவும் வேகமா புறப்பட்டோம். ஆனா மஞ்சப்புதூர்காரனுங்க கணக்குத் தீக்க சாவு ஊட்டை நெருங்கிட்டாங்கன்னு தகவல் வந்துச்சு. அவங்க எப்படியும் தூக்கிடுவாங்கன்னு நினைச்சோம். ஆனா மாயவன் கடுக்கா கொடுத்துட்டு தப்பிட்டான்யா...''

''அடச்சீ... ஒரு சப்இன்ஸ்பெக்டர் பேசற பேச்சாய்யா இது. நீ உன் டிபார்ட்மென்ட்டை நம்பாம எவனோ நாலு பேரை போய் நம்பியிருக்கியேய்யா... வெக்கமா இல்லை...''

''ஐய்யா தெரிஞ்சு பேசறீங்களா இல்லை தெரியாம பேசறீங்களான்னு தெரியில எனக்கு... நான் போனா அரெஸ்ட் பண்ணி உள்ள வைக்கலாம். அம்புட்டுதான்! அப்பால கோர்ட்டு விசாரணைன்னு போகும்போது அவன்மேலே இருக்கற குத்தத்தை நிரூபிக்கறது கஷ்டம்யா. எனக்கு தெரிஞ்சு யாரும் சாட்சி சொல்ல வரமாட்டாங்க. இரண்டு வட்டம் நான் அவனை புடிச்சிருக்கேன். ஒரு கேஸ்கூட கோர்ட்டுல நிக்கல. ஆனா நல்லா தெரியும் அவன் ஒரு ஜெகஜ்ஜால களவாணிப் பயன்னு... தெரிஞ்சு என்ன பிரயோஜனம்... கோர்ட்டுக்கு சாட்சி முக்கியம்கறது உங்களுக்குத் தெரியாதா? அதனால் தான் மஞ்சப்புதூர்காரங்க வந்துருக்காங்கன்னு தெரியவும் நான் கொஞ்சம் சைலண்ட்டாயிட்டேன். ஆனா இவனுங்க கோட்டை விட்டுட்டானுங்க...''

''ஏய்யா... மஞ்சப்புதூர்காரனுங்க பாதிக்கப்பட்டதால தான் மாயவனை தூக்க வந்திருக்காங்க?''

''ஆமாங்கய்யா... மஞ்சப்புதூர் மிராசு வீட்லயே மாயவன் கைவரிசையை காட்டிட்டான்ல?''

''அப்புறம் என்ன... மிராசை கம்ப்ளைண்ட் கொடுக்கச் சொல்லி இவனை புடிச்சி உள்ள போடவேண்டியது தானே?''

''மிராசு கறுப்புல நிறைய வெச்சிருப்பார் போல... கம்ப்ளைண்ட் கொடுத்தா எவ்வளவு களவு போச்சுன்னு விபரமெல்லாம் சொல்ல வேண்டி வரும். இன்னிக்கு எந்த மிட்டா மிராசுங்க இதுக்கு சம்மதிப்பாங்க''

''ஓ... விசயம் அப்படிப் போகுதா?''

''ஆமாய்யா... நீங்க கவலைப்படாதீங்கய்யா. மாயவனை

ஏதாவது கொலை கேஸ்ல பிடிச்சு உள்ற போட்டு அவனை நான்

வெளிய வரமுடியாதபடி பண்ணிட்றேன்.''

''ஏன் என்கவுண்டர்ல போட்டுத் தள்ளச் சொன்னா சுடாதா

உங்க துப்பாக்கி?''

''என்கவுண்டர்ல போட்டுத் தள்ள அவன் ரெக்கார்ட் ரொம்ப

முக்கியம்யா... இதுவரை அவன் மேல ஒரு கேஸ் கிடையாது.

அதோட அதுக்கு கலெக்டர் உத்தரவோ இல்லை எனக்கு மேல்

உள்ளவங்க உத்தரவோ வேணும்''

''எல்லாத்துக்கும் ஒரு பதிலை ரெடியாதான் வெச்சிருக்கே நீ''

''உள்ளதைச் சொல்றேன்யா. ஆமா மாயவன் உங்க வரைல

ஏதாவது விளையாட்டு காட்டிட்டானாய்யா?''

''என்னடா கேக்கலையேன்னு பார்த்தேன். அவன் குறி

வைக்காத ஒரே ஆளு இந்த ஜில்லாவுலயே நான் ஒருத்தன் தான்...

தெரியும்ல?''

''பொறவு எதுக்குய்யா அவனைப் பத்தின கவலை

உங்களுக்கு?''

''கேக்க மாட்டே நீ... நாளைக்கு எனக்கும் அவன் குறிவைக்க

மாட்டாங்கறதுக்கு என்ன உத்தரவாதம் இருக்கு?''

''இல்லைய்யா... நான் கேள்விப்பட்ட வரைல மலையூரான்

ரூட்டுல தான் இவனும் போறான். அவனைச் சீண்டுனவங்க யாரா

இருந்தாலும் விட்டு வைக்கறதில்ல... சீண்டாதவரை அவன்

எதுவும் செய்யதில்லைய்யா''

''விட்டா மாலை போட்டு பதக்கமே கொடுப்பே போல

இருக்குதே? மஞ்சப்புதூர் மிராசு போன போட்டு புலம்பறார்யா...''

''உள்ளதைச் சொன்னேன் யா... நீங்க அநாவசியமா அவனை

நினைச்சு கவலைப்பட வேண்டாம். அதுக்காகவும் சொன்னேன்''

''அதையும் பாக்கறேன். அப்படி ஒருவேளை தப்பித் தவறி அவன் என் பங்களா பக்கம் வந்தான்னா நான் லைசென்ஸ் வாங்கி துப்பாக்கி வெச்சிருக்கேன். அதுவும் தோட்டாவை லோட் பண்ணி... நீ பண்ணாத என்கவுண்டரை நான் பண்ணிடுவேன். ஞாபகம் வெச்சுக்க...''



''ஐயா நீங்க பண்ணாக்கா அது கொலைங்க. நாங்க பண்ணாதான்யா என்கவுண்டர்''

''போதும்யா... வார்த்தைக்கு வார்த்தை வக்கீல் மாதிரி நல்லா பதில் சொல்லிகிட்டு... வைய்யா போனை''

-எரிச்சலோடு போனை கட் செய்தார் பாண்டிய மாணிக்கம். எதிரில் செண்பகக் குழல்வாய் மொழியும் மாற்று ஆடை உடுத்திக் கொண்டு எதிரில் வந்தாள்.

மகளைப் பார்க்கவும் தீப்பட்ட மெழுகு போல மனது நெகிழத் தொடங்கி விட்டது அவரிடம்...

**கூ**மாச்சி மலை அடிவாரப் பகுதியில் மாயவனின் ரேக்ளா புகுந்திருந்தது. ஒரு பெரிய ஆலமர நிழலடியில் போய் தேங்கியும் நின்றது. அடுத்த நொடி மரத்தின் விழுதுகளின் வழியாக சரசரவென்று சிலர் கீழ் இறங்கி மாயவன் ரேக்ளாவை சுற்றி நின்றனர்.

மாயவனும் அவர்களை வெறித்தான்.

''நீ எப்ப வருவே எப்ப வருவேன்னு மரத்து மேல இருந்து பாத்துகிட்டேயிருந்தோம் மாயவா... உன் மாமனைப் பாத்தியா... தப்பா எதுவும் ஆயிடலையே?''

அவர்களில் உளியன் என்பவன் மார்பை நீவி விட்டுக் கொண்டே கேட்டான்.

''தப்பாகத் தெரிஞ்சிச்சு... ஆனா எஞ்சாமி கருப்பன் கூட நின்னதால தப்பிச்சு வந்திருக்கேன்'' - என்று அவன் சொன்னதைக் கேட்டு அவர்கள் அத்தனை பேரிடமும் அதிர்ச்சி.

## 4

**க**ருப்பன் அருளால் தப்பி வந்தேன் என்ற மாயவனை அவன் சகாக்கள் அதிர்ச்சியோடு மட்டுமல்ல ஆச்சரியத் தோடும் பார்த்தனர்.

''அப்படின்னா பிரச்சினை இந்த வட்டம் யாரால மாயவா?''

''மஞ்சப்புதூர் மிராசால...!''

''ஏ... அவன் வீட்டை தேட்ட போட்டதுக்கான பதிலடியா?''

''ஆமாம்... அதுக்காக அந்த ஆள் வல்லாளனுங்க கால்ல போய் விழுந்துருக்கான்...''

''வல்லாளனுங்களா?'' -மாயவனை சுற்றி நிற்கும் நால்வருமே அதிர்ச்சியை எதிரொலித்தனர்.

''ஏண்டா வல்லாளனுங்களான்னு இழுக்கறீங்க?''

''மாயவா உனக்கு வல்லாளனுங்களப் பத்தி தெரியாதா? அவங்க ஒத்துகிட்ட விசயத்தை முடிக்க முடியாம போனா ஊர் மரத்துல நாண்டுகிட்டு தொங்கிடுவாங்க...''

''அப்ப என் விசயத்துலயும் தொங்கப் போறானுங்கன்னு வெச்சுக்க...''

''எதுக்கும் ரொம்பவே கவனமா இருக்கணும் மாயவா..''

அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாகவும் நட்போடும் பேசிக்கொண்ட அவ்வேளையில் உளியனின் செல்போனில் அமட்டல். நாய் குலைக்கும் சப்தத்தை தனக்கான ரிங் டோனாக வைத்திருந்தான். அவன் உள்ளாடைக்குள்ளும் நாய் குலைத்தது. செல்போனை வெளியே எடுத்து காதைக் கொடுத்தான்.

''யாரு பேசறது?''

''உளியா... நான் மார்த்தாண்டம் பேசறேன்''

''எந்த மார்த்தாண்டம்?''

''கள்ளிப்பட்டி பிராந்திக்கடை மார்த்தாண்டம்ப்பா...''

''சரி சொல்லு... என்ன விசயம்?''

''என்னை இன்னிக்கு ஒரு அடிதடி கேஸ் விஷயமா விசாரிக்க ஸ்டேஷனுக்கு வரச் சொல்லியிருந்தான் ஸ்டேஷன் சப்இன்ஸ்பெக்டர். என் கடைல சரக்கு வாங்கி அடிச்ச பயலுகளுக்குள்ள அடிதடி! அதான் என்னை விசாரிக்க கூப்ட்டுருக்கான். போன இடத்துல மாஜி மந்திரி பாண்டிய மாணிக்கத்துக்கிட்ட இருந்து சப்இன்ஸ்பெக்டருக்கு போன்! மாயவன் மாமன் சாவுக்கு துக்கம் கேட்டு வந்துருக்கான் போய் புடிங்கடான்னு... ஆனா சப்இன்ஸ்பெக்டர் சரின்னுட்டு போவலை. மஞ்சப்புதூர் வல்லாளனுங்க ஜோலிய முடிச்சிடு வாங்கன்னு பேசிகிட்டத கேட்டேன். மொத்தத்துல மாயவனை போட்டுத்தள்ள எல்லாரும் ஒண்ணா சேர்றாங்க. மாயவனை சூதானமா பாத்துக்குங்க.

மாயவன் இருக்கற வரைதான் இந்த பெரிய மனுஷனுங்க அடங்கி இருப்பாங்க. இல்லாட்டி ஆட்டம் தாங்க முடியாதுங்கறது தான் எம் மாதிரி ஆளுங்க அபிப்ராயம். அதான் அக்கரையா சொல்றேன்...''



மார்த்தாண்டத்திடம் மெய்யாகவே ஒரு அக்கரையும் ஆதங்கமும் வெளிப்பட்டது.

''சரி மார்த்தாண்டம்... நான் மாயவன்கிட்ட சொல்லி சூதானமா இருக்கச் சொல்றேன்...'' -என்று உளியனும் பேச்சை முடித்துக் கொண்டான். நிமிரவும் மாயவன் தான் குத்துவது போல பார்த்துக் கேட்டான்.

''போன்ல யாரு உளியா?''

''பிராந்திக் கடை மார்த்தாண்டம்''

''என்னவாம்?''

''ஏதோ விசாரிக்கணும்னு சப்இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்கு கூப்ட்டுருக்கான். அப்ப மந்திரி பாண்டிய மாணிக்கம் போன் போட்டு உன்னை புடிக்க சொல்லி யிருக்காப்ல... வல்லாளனுங்க அலையறதும் மார்த்தாண்டத்துக்கு தெரிஞ்சிருக்கு... உன்னை சூதானமா இருக்கச் சொல்றான்...''

''மந்திரி எதுக்கு என்வழில குறுக்க வர்றான்?''

''அதான் எனக்கும் புரியலை''

''மாயவா மஞ்சப்புதூர் மிராசு மந்திரிக்கு தகவல் கொடுத்து புலம்பியிருக்கான். அதான் உன்னை உன் மாமன் சாவு ஊட்ல பாக்கவும் போட்டு கொடுத்துருக்கான் அந்த மாஜி மந்திரி.''

''இருக்கலாம் மாயவா... ஒரு பத்து நாளைக்கு நீ மேலயே இரு. கீழே வந்துடாதே... நாங்க தினம் மேல வந்து பாக்கறோம். அப்புறம் ஒரு முக்கியமான விசயம்?''

''என்ன?''

''மலைக்காட்டு குகைல தவம் பண்ணிகிட்டு இருப்பாரே ஒரு சாமியார்...''

''அவருக்கென்ன?''

''அவரு உன்னை பாக்க உன் குகை பக்கம் வந்தார்! என்ன சாமி விசயம்னு கேட்டேன். என்கிட்ட எதுவும் சொல்லலை. சாமி உன்கூட பேச நினைக்கறார்னா நிச்சயமா ஏதோ விசயம் இருக்கணும். என்னன்னு நீயே சாமியை பாத்து கேட்டு தெரிஞ்சிக்க. அவரை தேடிவர உடாதே...''

-உளியன் சொன்னது மாயவனை பரபரப்பாக்கியது. அங்கேயே ரேக்ளாவை விட்டு இறங்கி சாட்டைக்குச்சியை தூக்கி உளியன் கையில் கொடுத்து விட்டு விறுவிறுவென்று பச்சைக் கூமாச்சி மலைமீது ஏற ஆரம்பித்து விட்டான்.

உளியனும் ரேக்ளாவில் ஏறிக் கொண்டு மற்ற மூவரைப் பார்த்தான். அவர்கள் இரவு மலையில் மாயவனோடு சந்திக்கலாம் என்றவர்களாக பிரிந்து செல்லத் தொடங்கினர்.

சின்னப் பூச்சியின் கர்மகாரியங்கள் முடிந்து விட்டன. சின்னப்பூச்சியின் மனைவி பருத்தியின் தம்பி வீரைய்யன் தான் சின்னப்பூச்சி உடலுக்கு கொள்ளி போட்டிருந்தான். கொள்ளி போட்டதால் சின்னப்பூச்சி அவனுக்கு தந்தை முறையாகி விட்டான். கோசலையும் தங்கை முறையாகி விட்டாள். இது அவனை மிகவே பாதித்து விட்டிருந்தது.

''இப்படின்னு தெரிஞ்சிருந்தா நான் கொள்ளி போட்டிருக்கவே மாட்டேன். யக்கா நீ என்ன ஏமாத்திப் புட்டே...'' என்று குதித்துக் கொண்டிருந்தான். கோசலை அதை ரசித்துக் கொண்டிருந்தாள். அவள் வரையில் மாயவன் தான் அவளுக்கு எல்லாம்... தாய்மாமன் உறவோடு உரிமை கொண்டாடிக் கொண்டிருந்தவனை அப்பனின் சாவு கட்டிப் போட்டு விட்டது. சின்னப்பூச்சி அவனுக்கு ஒரு நல்ல வழி பிறப்பதற்காகவே செத்தானோ என்று கூடத் தோன்றியது. பருத்தி அவனோடு மல்லுக் கட்டிக் கொண்டிருந்தாள்.

''எலேய்... அந்த ஆள் வைகுண்டம் போய் முழுசா நாலு நாள்கூட ஆவல... நச்சு பண்றியேடா! நீ எனக்கு தம்பி மட்டுமில்லடா மவனும்கூட... இனி அந்தாள் இடத்துல நீதாண்டா இருந்து இந்த குடும்பத்துக்கு காவலா இருக்கணும்'' என்று அழுதாள். அப்போது உறவினர் ஒருவரும் வந்து சேர்ந்தார்.

''என்ன சத்தம்... என்னடா உடைசலை கொடுத்து கிட்டிருக்கே?'' என்று ஆரம்பித்தார்.

''வாங்க மாமா... இந்த பயலோட பெரிய இம்சையா இருக்கு மாமா. எம்புருசனுக்கு கொள்ளி போட வெச்சு இவனுக்கு நான் என் மகளை இல்லாம பண்ணிட்டேனாம். கெடந்து குதிக்கறான். எனக்குன்னு ஒரு ஆம்பள வாரிசு இருந்திருந்தா இந்த நாயை நான் எதுக்கு கொள்ளி போடச் சொல்லப் போறேன்...''

-விசும்பி அழுதாள் பருத்தி.

''அதானா விசயம்... அட போக்கத்தவனே! இப்ப சின்னப்பூச்சி மவன்டா நீ. அவன் சொத்து பத்துல இருந்து ஆடு மாடு வரை அம்புட்டும் உன் சொந்தமடா! அக்கா மவ இல்லாட்டி என்ன? ஆயிரம் பொண்ணுங்க உனக்கு ஊருக்குள்ள கிடைப்பாங்கல்ல?''



அவர் எடுத்துக் கொடுத்தார். அவனிடம் ஒரு மாற்றம். குறிப்பாக ஆடுமாடுகளில் இருந்து நிலம் நீச்சு வரை சொந்தம் என்று சொன்னது அவனுக்கு பிடித்துப் போய்விட்டது.

அப்போதுதான் அந்த குடிசை வாசலில் மந்திரி பாண்டிய மாணிக்கத்தின் வேலையாட்களில் ஒருவன் வந்து நின்றிருந்தான்.

''பருத்தி... ஏ பருத்தி...'' -என்று காட்டமான குரலில் அழைத்தான்.

''யாருவே அது?'' -பருத்தி முகத்தை வெளியே நீட்டி அவனைப் பார்த்தாள்.

''மந்திரி அய்யா உன்னை கொஞ்சம் ஊடுவரை வந்துட்டு போகச் சொன்னார்?''

''அப்படியா... ஆமா என்னா விசயம்?''

''அதெல்லாம் தெரியாது. நீ வேகமா வருவியாம். உனக்காகத்தான் காத்து கிட்டிருக்காரு''

''ஐயோடா... எம்புருசன் செத்து பத்து நாள்கூட ஆவலையே... நான் எப்படி ஊட்டை விட்டு வரது?''

''எந்த காலத்துல இருக்குற நீ... அய்யா கூப்ட்டா நிச்சயம் அர்த்தமிருக்கும். புறப்பட்டுவா...''

''எலேய் எவண்டாவன் கூறுகெட்டவன்... அவதான் தன் நிலைய சொல்றால்ல... அந்தக் காலம் இந்தக் காலம்னு நீ உன் சௌகரியத்துக்கு பேசறே... அய்யாவுக்கு சாவு ஊட்டு சாங்கியம் என்னன்னு தெரியாதாக்கும்? போய் சொல்லு இன்னும் 1 மாசத்துக்கு பருத்தி எங்கயும் வரமாட்டா. ரொம்ப அவசரம்னா அவரை இங்க வரச் சொல்லு'' என்றார் உறவுக்கார மாமா.

அவன் அவரை ஒருமுறை முறைத்துப் பார்த்தான்.

''என்ன முறைக்கறே... கண்ணு முழிய தோண்டிப் புடுவேன் ஆமா...''

''எங்க தோண்டு பாப்போம்...'' அவனும் மார்பை தூக்கியபடி முன்னால் வந்தான் அதே வேகத்தில்.

''அய்யா பெருசா உதவி செய்யற எண்ணத்துல இருக்காரு. இப்படி சாங்கியம், சம்பிரதாயம்னு பேசி உருப்படாம போகப் போறீங்க. சரி எக்கேடோ கெட்டுப் போங்க'' என்றவனாக திரும்ப முற்பட்டவனை பருத்தியின் தம்பியான வீரைய்யன் வேகமாக சென்று தடுத்தான்.

''யோவ் இருய்யா... எங்க அக்கா வராட்டி என்ன நான் வரேன்... மந்திரி அய்யா என்னன்னு என்கிட்ட சொல்லட்டும்...'' என்றான்.

''அடப் போய்யா... நீ ஒரு தண்ணி வண்டி. ஒழுங்கா ஒரு கூலி வேலைக்கு கூட போவாத வெறும்பய நீ. உன்னை பாத்தா அய்யா சுத்துவாருய்யா?''

''ஏய் யாரப்பாத்து வெறும் பயன்னே... நான்தான் இப்ப இந்த ஊட்டுக்குன்னு இருக்கற ஒரே ஆம்பளை தெரியுமில்ல?''

''ஆம்பளையா இருந்தா ஆச்சா... மந்திரி அய்யால்லாம் உன்னை மாதிரி வெறும்பய கூடல்லாம் பேசமாட்டாருய்யா.''

''சும்மாசும்மா வெறும் பயங்காதே... நான்தான் எங்க அக்கா மாமனோட சொத்துக்கெல்லாம் இப்ப வாரிசு. கொள்ளி போட்டு கருமத்தைச் செஞ்சவன் நான். தெரியும்ல?''

வீரைய்யன் கையை ஆட்டி கேட்ட தோரணையே அலாதியாக இருந்தது. வந்தவனையும் அது சற்று யோசிக்க வைத்தது.

''சரி வா... ஆனா அய்யா உன் கூட பேசமாட்டேன்னா பொத்திக்கிட்டு திரும்பிடணும். அங்க நின்னுட்டு சளம்பக்கூடாது'' -என்று வீரைய்யனை ஒரு கட்டுக்குள் அடக்கியவனாக அழைத்துச் செல்லத் தொடங்கினான்.

பருத்தியிடமும் கோசலையிடமும் பாண்டிய மாணிக்கம் எதற்காக அழைத்திருப்பார் என்ற கேள்வி!

**ப**ங்களா முகப்பில் விஸ்தாரமான புல்தரை. அதில் சாமியானா கூரையோடு கூடிய ஊஞ்சல் நாற்காலி. அந்த நாற்காலியில் செண்பகக் குழல்வாய் மொழி. அவள் கையில் ஒரு ஆங்கில நாவல். அதை வாசித்தபடி இருந்தாள். சற்றுத் தள்ளி புல்தரை மேல் ஒரு கார்ப்பெட் விரிக்கப்பட்டு அதன்மேல் ஃப்ளாஸ்க், பிரெட், பழவகைகள். அதுபோக ஐ பாட் ஒன்றும் ஹியரிங் ஸ்பீக்கருடன் கிடந்தது.

வேலைக்காரன், வீரைய்யனுடன் நுழைவதை சற்று நிமிர்ந்து பார்த்தாள். வீரைய்யனும் பார்த்து விடைத்துப் போனான்.

''ஏய்... யாருய்யா இந்த குட்டி?'' -என்று ரகசிய குரலிலும் கேட்டான்.

''குட்டி கிட்டின்னே சங்க அறுத்துப்பிடுவேன். அது அய்யாவோட பொண்ணு செண்பகம்...''



''தீயா இருக்காய்யா...!''

''சரியாச் சொன்னே... ரொம்ப பேசுனே சுட்டே பிடுவா. பொத்திட்டுவா...''

-அதட்டியபடியே பங்களாவுக்கு பின்பக்கம் உள்ள குளத்தங்கரைக்கு அவனை பங்களாவைச் சுற்றி அழைத்துச் செல்லத் தொடங்கினான்.

ஒரு காலத்தில் ஊருக்குப் பொதுவாக இருந்த குளம் அது. பாண்டிய மாணிக்கம் அரசியலில் நுழைந்து அதை ஒட்டிக் கிடந்த இடத்தை வாங்கி, பின் அதோடு குளத்தையும் விழுங்கி விட்டார் என்பார்கள்.

குளத்தில் வருடம் முழுக்க தண்ணீர் இருக்கும். கரையோரமாக நெட்டிலிங்கம், நெல்லி, சவுக்கு என்று மரங்களை வைத்து ஒரு எஸ்டேட் தோட்டம் போல ஆக்கி விட்டார்.

ரகசிய சந்திப்புகள் அரசியல் பேச்சுக்கள் எல்லாம் அங்கே தான்... குளத்து மீன்களுக்கு பொரிபோடுவது அவரது பொழுது போக்கில் ஒன்று. அப்போதுதான் வீரைய்யனும் வந்து நின்றான்.

''என்னாடா... அவளை கூட்டிகிட்டு வரச் சொன்னா இவனோட வந்துருக்கே?'' -என்று வீரைய்யனைத் திரும்பிக் கூடப் பார்க்காதபடி கேட்டார் பாண்டிய மாணிக்கம்.

''ஆண்டே... ஊட்டை விட்டு வரமுடியாதபடி சாங்கியம் தடுக்குதாம். அதான் தம்பியை பருத்தி அனுப்பித் தந்துருக்கா. கொள்ளி போட்டதால இவன்தான் இப்ப சின்னப்பூச்சி சொத்துக்கெல்லாமும் சொந்தமாம்...''

அவனது தகவல் பாண்டிய மாணிக்கத்தையும் வீரைய்யனை பார்க்கச் செய்தது.

''உக்காருய்யா...'' -என்றும் சொல்ல வைத்தது!

## 5

**பா**ண்டிய மாணிக்கம் உட்காரச் சொன்னது வீரைய்யனுக்கு பெரிய ஆச்சரியம்! பெரிய பெரிய அதிகாரிகளெல்லாமே எதிரில் நின்றுதான் பேசுவார்கள்... தனக்கு இணையான அந்தஸ்து உள்ளவர்களிடம் மட்டும்தான் சமமாக உட்கார்ந்து பேசுவார்.

இதெல்லாம் ஊருக்கே தெரியும். வீரைய்யனுக்கு தானா தெரியாது? அதனால் தான் அவர் சொன்ன பிறகும் உட்காரமாட்டாமல் நெளிந்தான்.

''உக்காருன்னு சொன்னேன்ல?''

''இருக்கட்டும்யா... உங்க முன்னாடி உக்கார என்னவோ மாதிரி இருக்குங்கய்யா...''

அதைக் கேட்டு ரசித்து சிரித்தார் பாண்டிய மாணிக்கம்.

''போவட்டும்... சின்னப்பூச்சிக்கான எழவு காரியமெல்லாம் முடிஞ்சிச்சா?''

''ஆச்சுங்க''

''நீதான் கொள்ளி போட்டியாமே...?''

''ஆமாங்க''

''அப்ப பருத்திக்கு நீ மவன் மாதிரியும் ஆயிட்டேன்னு சொல்லு.''

''ஆமாங்க...''

''இப்ப நான் பருத்திய கூப்ட்டு உட்டது கூட ஒரு முக்கியமான விசயத்துக்காகத்தான். எப்ப நீ தான் இனி அந்த ஊட்டு ஆம்பளையோ உன்கிட்டதான் நான் இனி பேசணும்...''

''அய்யா... இதெல்லாம் ரொம்ப பெரிய வார்த்தைங்க...''

''அதானய்யா உண்மை. சின்னப்பூச்சியோட சொத்துக்கெல்லாம் இனி நீதானே வாரிசு?''

''என்னங்க பெரிய சொத்து... ஒரு அம்பது அறுவது ஆடு மாடுங்க, குடிசை வீடு ஒண்ணு... இது போக மூணு ஏக்கர் நிலம்... அது விளைஞ்சாதான் உண்டு... நம்ம வரதம்பட்டி தான் மானம் பாத்த பூமியாச்சுங்களே...?''

''சரியாச் சொன்னே... அந்த இடத்தை ஒட்டித்தான் நானும் இடத்தை வாங்கிப் போட்டுருக்கேன். இனிமேலெல்லாம் விவசாயத்த நம்பி எல்லாம் பொழைக்க முடியாது அதனால நம்ம ஊர்ல நான் ஒரு காலேஜ் கட்டலாம்னு இருக்கேன்...''

''இந்த பெரிய படிப்பு படிப்பாங்களே... அதுங்களா?''

''பரவால்ல வீரைய்யா... உனக்கு எல்லாம் நல்லா தெரிஞ்சிருக்கே ரொம்ப விவரமா ஆளாதான் இருக்கே. அந்த காலேஜிக்கு நீ தான் வாட்ச்மேன்... அதாவது காவக்காரன். உனக்கு மாசம் பத்தாயிரம் சம்பளம்... பாக்கறியா?''

பாண்டிய மாணிக்கத்தின் பக்குவமான பேச்சும் நண்டுபோல் அவர் வளைத்த விதமும் வீரைய்யனுக்குப் புரியவில்லை. ஆனால்



அவர் பத்தாயிரம் சம்பளம் என்று சொன்னதில் அப்படியே வாயைப் பிளந்திருந்தான்.

''என்ன வீரைய்யா... உன்னால நம்ப முடியலையா? எனக்கு நேர்மையாவும் அதே சமயம் சூதானமாவும் உள்ள ஒருத்தன் வேணும். அவன் நம்ம ஊர்க்காரனாவும் இருந்தா எனக்கு சந்தோஷம் தானே?''

''அய்யா... இப்படி கூப்ட்டு வேலை கொடுத்து பெருசா ஆதரிப்பீங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலய்யா. ரொம்ப சந்தோசம்யா...''

''இரு... அவசரப்படாதே! இந்த வேலைக்கு உன் அக்கா புருஷன் சின்னபூச்சியைதான் போட்றதா இருந்தேன். ஏன் தெரியுமா?''

கேட்டுவிட்டு அவனைப் பார்த்தார். அந்த கேப்பில் குனிந்து விஸ்கி பாட்டிலை எடுத்து ஒரு வாய் குடித்தும் கொண்டார். பின்னர் இரண்டு சிப்ஸ் துண்டுகளையும் எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்.

அப்படியே மிச்சமிருந்த விஸ்கி பாட்டிலைத் தூக்கி வீரைய்யனிடமும் நீட்டினார்.

''அய்யா...''

''புடிய்யா... ஊட்டுக்கு போய்குடி. சீமச்சரக்கு. நீ பட்டதான் அடிச்சிருப்பே இல்ல?''

''ஆ... ஆமாங்க...''

''நான் ஒருத்தன் உன் மச்சானை பத்தி பேசிட்டு எங்கியோ போய்ட்டேன் பாரு...''

''சொல்லுங்கய்யா...''

''அந்த மூணு ஏக்கரா இடத்தை சின்னப்பூச்சி காலேஜ் கட்றதுக்காக எனக்கு வித்துடறேன்னு சொன்னான். ஆனா இடையிலேயே தலைல இடிவிழுந்து செத்தும் போயிட்டான். எனக்கும் பொக்குன்னு ஆயிடிச்சு. அப்புறம்தான் யோசிச்சேன். நல்லவேளை அந்த திருட்டுப்பய மாயவன் கொள்ளிப் போடல. நீ போட்டே, எனக்கும் சந்தோஷமா போச்சு. உனக்கு இதுல ஆட்சேபணை இருக்காதுன்னு நினைக்கறேன்...''

-பாண்டிய மாணிக்கம் இடத்தை விற்று வாங்குவதில் வந்து நின்றார். அதுவும் ஏகப்பட்ட சுற்று வளைப்புக்களோடு... அதில் சின்னப்பூச்சி அவருக்கு விற்று விடுவதாக சொன்னதெல்லாம்

பச்சைப் பொய். ஆனால் சின்னப்பூச்சி தான் செத்து விட்டானே? அவன் தன்னிடம் லட்ச ரூபாய் கடன் வாங்கினான் என்று கூட அள்ளிவிடலாமே?

வீரைய்யன் மௌனமாக நின்றான்.

''என்ன யோசனை வீரைய்யா...?''

''அது வந்துங்கய்யா... இது விசயமா அக்காகிட்ட கேக்காம என்னால முடிவுக்கு வரமுடியாதுங்கய்யா...''

''சரி... கேட்டுச் சொல்லு. இப்ப என்ன?''

''எனக்கென்னவோ இதுக்கு அக்கா சம்மதிக்கும்னு தோணல?''

''ஏன் அப்படி?''

''அதுதான் குடும்பத்துக்குன்னு இருக்கற ஒரே பிடிப்பு. வருசத்துக்கு ஒரு வெள்ளாமைதான்னாலும் அதனாலதான் ஒருவேளை கஞ்சியாவது குடிக்கறோம்''

''இப்ப என்ன கெட்டுப் போச்சு. உனக்குதான் நான் இடத்துக்கு பணமும் தரப்போறேன். மாசாமாசம் உனக்கு சம்பளமும் தரப்போறேன்ல?''

''ஆமாய்யா... இருந்தாலும் அது அக்கா சொத்து. அதானேங்கய்யா முடிவு சொல்லணும்?''

''உன் கையெழுத்தும்தான் செல்லுமே?''

''ஊர்சாங்கியம் சட்டப்படி செல்லுமாய்யா?''

''அது எப்படி... பத்திரத்துல எல்லாம் பருத்திதான் கைய்யெழுத்து போட்டாகணும். அக்ரிமெண்ட்டுல நீ கையெழுத்து போடு. பத்திரத்துல உன் அக்கா போடட்டும்''

''அங்கதான்யா இடிக்குது. அக்கா நிச்சயம் அதுக்கு சம்மதிக்காது''

''அப்ப சின்னப்பூச்சி எதை வெச்சு எனக்கு விக்கறேன்னு சொன்னான்?''

''அதான்யா எனக்கும் தெரியல...?''

''சரி... விட்டுரு. நான் வேற யார்கிட்டயாவது இடத்தை வாங்கி காலேஜையும் அங்கேயே கட்டிக்கறேன். நீ கிளம்பு''

சட்டென்று அவன் எதிர்பாராத விதத்தில் அந்த விஷயத்தையே பிரட்டியும் போடத் தொடங்கினார். அது



வீரைய்யனையும் என்னவோ செய்தது. அவன்கூட அதை எதிர்பார்க்கவில்லை.

''அய்யா என்னய்யா இப்படி ஒரு பதிலை சொல்லிட்டீங்க?'' என்று நெளிய ஆரம்பித்தான்.

''பின்ன என்னய்யா... பருத்தி சம்மதிச்சாதான் நான் இடத்த வாங்க முடியும். ஆனா அவ சம்மதிக்க மாட்டாங்கற மாதிரி பேசறே. நான் உனக்கும் உன் குடும்பத்துக்கும் எதாவது உதவி செய்ய நினைக்கறேன். அதை நல்லவிதமா புரிஞ்சுகிட்டு உன் அக்காவை சம்மதிக்க வைக்க முடிஞ்சா செய். இல்லாட்டி பரவால்ல''

திரும்பவும் புதிதாக ஒரு விஸ்கி பாட்டிலை திறந்தார். அவனுக்கு நாக்கில் நீர் ஊறியது. தன் கை வசம் உள்ள விஸ்கி பாட்டிலை எடுத்துச் செல்லவும் தயக்கமாக இருந்தது. இப்படியும் அப்படியும் ஊசலாடத் தொடங்கினான். பின் சற்று விரைப்பாகவும் வேகமாகவும் ''அய்யா எப்படியாச்சும் என் அக்காவை நான் சம்மதிக்க வைக்கறேன்யா... அது முடியாதுன்னாலும் நான் விடமாட்டேன்யா... எனக்கு நீங்கதான்யா பெருசு. நீங்க கட்டாயம் காலேசு கட்றீங்கய்யா...''

என்று ஆவேசமாக பேசியவனாக வேகமாக புறப்படப் பார்த்தவனிடம் ''இருந்து விஸ்கியை இங்கேயே குடிச்சுட்டுப் போ. உங்கக்கா அப்புறம் உன்னை நான் குடிக்க வெச்சு புத்தியை மாத்தப் பாத்தேன்னு எதையாவது சொல்லும்''

''ஆமாங்கய்யா... அதுக்கு என் நியாயம் மட்டும் எப்பவுமே புரியாது'' -என்றவன் பிளாஸ்டிக் டேபிள்மேல் இருந்த பாதி சிப்ஸ் பாக்கெட்டையும், வரக் கடலையையும் எடுத்துக் கொண்டு குளத்தங்கரைப் பக்கமாக ஒதுங்கத் தொடங்கினான். கிட்டான் மெல்ல நெருங்கி வந்து ''இவன்கிட்ட இவ்வளவு பேசணுங்களாய்யா... நீ இடத்தை விக்கறே... நான் வாங்கறேன்னா இவனால என்னய்யா பண்ண முடியும்?'' என்று கேட்டான். அவனுக்குப் பதில் கூறாமல் பல உள்ளர்த்தங்களோடு சிரிக்க ஆரம்பித்தார் பாண்டிய மாணிக்கம்.

**கூ**மாச்சி மலை!

இயற்கையின் பல அதிசயங்களில் ஒன்று அது. அடர்வான காடும் நடுநடுவே பசுமையான புல் வெளியுமாய் ஒரு கோடை வாசஸ்தலம் போல் இருக்கும். பார்க்க எத்தனை அழகோ அத்தனை ஆபத்தும் உடைய மலை. நரிக்கூட்டம் மிகுந்த மலை! நான்கு நரிகள்

துப்பாக்கியோடு நிற்கும் ஒரு
ஒன்றாகச் சேர்ந்தால் வேட்டைத் துப்பாக்கியோடு நிற்கும் ஒரு
மனிதனையே போக்கு காட்டி கொன்றுவிடும். இதன் உச்சிக்கு
செல்ல முறையான பாதையோ இல்லை வழித் தடங்களோ
அவ்வளவாக இல்லை.

மலைப் பளியர்கள் நடந்து நடந்து ஒருவழிப் பாதையை
உருவாக்கியுள்ளனர். அதில் கூட இடை இடையே பெரும்
பள்ளங்கள் உண்டு. அந்த பள்ளங்களை துணிச்சலாக தாண்டத்
தெரிய வேண்டும். வன இலாகாவின் கட்டுப்பாட்டில் உள்ள
மலையாக இருந்தும் அவர்களால் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு
மேல் ஏற முடியவில்லை! இத்தனை வருடங்களில் இரண்டுமுறை
ஹெலிகாப்டர்மூலம் உச்சியில் ஏறி பெரும் மரங்கள் பற்றியும் அந்த
சூழல் பற்றியும் குறிப்பெடுத்திருக்கிறார்கள்.

மலை அடிவாரத்தில் ஒரு ஹெலிபேட் அமைத்து அதில்
இருந்து ஹெலிகாப்டரில் புறப்படுவதற்கு முன் எஃப் ஆர் ஓவும்,
ஸ்டேட் சீஃப் ஆபீசரும் ஜீப் வழியாக அடிவாரத்தில் வந்தபடி
இருந்தனர். அப்போது கோவணம் கட்டிய சடைப்பிடித்த மனிதர்
ஒருவர் விரைப்பாக சாலை ஓரமாக நடந்து சென்றபடி இருந்தார்.
பார்க்க விலுவிலுவென்று மிக வித்யாசமான ஒற்றை நாடி சரீரம்.

சீஃப் ஆபீசருக்கு அவரை பார்த்த நொடி ஒரு மரியாதை
ஏற்பட்டது. பின் ஹெலிகாப்டரில் ஏறி மேலே சர்வேவுக்காக போய்
இறங்கியபோது அங்கேயும் அவர் நடந்து சென்றபடி இருந்ததுதான்
ஆச்சரியம்.

சீஃப் ஆபீசர் திகைத்து விட்டார். அவரைப் பின் தொடர்ந்து
சென்று பார்க்க ஆசைப்பட்டும் முடியவில்லை. பின்னர் திரும்ப
கீழே வந்து அவர் பற்றிய சிந்தனையாகவே இருந்தபோது அவரை
மணவாளன் சாமி என்று ஒரு தேன் விற்கும் பெண் குறிப்பிட்டாள்.

அந்த மணவாளன் சாமி ஒரு சித்தர். எங்கு வேண்டுமானாலும்
எப்போது வேண்டுமானாலும் தோன்றக் கூடியவர். பல
வருடங்களாக கூமாச்சி மலையில்தான் திரிந்தபடி இருக்கிறார்.
தியானத்தில் உட்கார்ந்து விட்டால் வாரக்கணக்கில் கூட
தியானத்தில் இருப்பார். என்ன சாப்பிடுகிறார்? எங்கே தூங்குகிறார்?
எல்லாமே எல்லோருக்குமே ஆச்சரியமளிக்கும் விஷயம்.

மாயவனும் கூமாச்சி மலைதான் தனக்கான புகலிடம் என்று
தீர்மானித்து தங்கிய சமயம் மணவாளச் சித்தர் சாமியை பல சமயம்
பார்த்திருக்கிறான். சிரித்துக் கொண்டே போய் விடுவார். ஒரு சமயம்
மாயவன் ஒரு பள்ளத்தை தாண்ட முனையும்போது தவறி



பள்ளத்தில் விழுந்து விட்டான். மூன்று நாட்கள் அந்த பள்ளத்திலேயே கிடந்து பரிதவித்தவனை சாமிதான் காப்பாற்றினார். கால் ஒடிந்து கிடந்த மாயவனை பின் தோளில் உப்பு மூட்டை போல தூக்கிக் கொண்டு அந்த பள்ளத்தில் இருந்து அவரால் மட்டும் எப்படி மேலே ஏற முடிந்தது என்பது உண்மையிலேயே அவனுக்கே இன்று வரை புரியாத அதிசயம்தான். காப்பாற்றியதோடு மட்டுமில்லாமல் அவனை ஒரு குடிசைக்குள் படுக்க வைத்து ஒதிய மரத்துப்பட்டை கொண்டு எலும்பு முறிந்த பாகத்தை கட்டுப்போட்டு பத்து நாளில் குணப்படுத்தி விட்டார். இதுவும் மாயவன் வரையில் பெரிய ஆச்சரியம். அத்தனை நாட்களில் அவனிடம் ஒரு வார்த்தைகூட பேசாத மணவாளச் சித்தர் அன்று அவன் அந்த குகையை விட்டு வெளியேற முயன்றபோது தடுத்து ''நீ இங்கேயே இரு... இங்க நீ இருக்கற வரை உன்னை யாராலையும் எதுவும் செய்ய முடியாது...'' என்று மட்டும் அவனிடம் பேசினார். பேசிவிட்டு போய் விட்ட அவரை அதன் பிறகும் பல சமயங்களில் பார்த்து சிரித்திருக்கிறான். ஆனால் நிறைய பேசவேண்டும் என்று நினைத்ததெல்லாம் அவர் முன் ஞாபகத்துக்கு வராமல் போய்விடும். அதுவும் எதனால் என்று அவனுக்குத் தெரியாது.

இப்படி புதிராக விளங்கிக் கொண்டிருக்கும் மணவாளச் சித்தர் அவனைத் தேடி அவன் குகை வாசலுக்கே வந்துவிட்டு போனதுதான் மலை உச்சியை அடைந்த நொடியில் மாயவனுக்கும் முதல் எண்ணமாக இருந்தது. அவரது குகையைத் தேடிச் சென்று அவரிடமே கேட்போம் என்கிற நோக்கோடு வானத்தை பார்த்தான். அஸ்தமன சூரியனிடம் ஆரஞ்சு நிறக் கொந்தளிப்பு.

இருட்டுவதற்குள் அவரைப் பார்த்து வரும் எண்ணம் மூண்டு அவரது குடிசையை நோக்கி நடக்கத் தொடங்கியவன் அப்படியே தேங்கி நின்றான்.

எதிரே அவரே வந்தபடி இருந்தார்!

## 6

**எ**திரே தெரிந்த அந்த சாமியாரைப் பார்த்த மாத்திரத்தில் மாயவனிடம் ஒரு சிலிர்ப்பு!

நின்ற இடத்தில் இருந்தபடி மார்புக்கு நேராக கைகளைக் கூப்பினான். அவரும் அவனை நெருங்கி நின்றார்.

அந்திநேரம்...

சிலு சிலுவென்று காற்று வீச்சல்...

அவர்கள் நிற்கும் சமவெளி போன்ற பரப்பில் இடுப்புயரத்திற்கு முளைத்திருக்கும் கோரைப் புற்களிடம் கிலுகிலுவென்று சதங்கை குலுங்கியது போல் ஒரு ஆட்டம்.

நெருங்கிவிட்ட அந்த கிழட்டு மனிதரின் முகத்தில் ஒரு பெரும் சாந்தம் தெரிந்தது. அதில் சன்னமாய் சின்னதாய் ஒரு புன்னகை பரவிடும்போது மிகவே தெய்வீகமாய் இருந்தது.

அவர் இடுப்பில் ஒரு கோவணம் மட்டும்தான் கட்டியிருந்தார். கையில் தோள் உயரத்துக்கு கோல், நெற்றியில் விபூதியோ குங்குமமோ எதுவுமேயில்லை.

''சாமி... என் குகைப் பக்கம் வந்துருக்கீங்க போல இருக்கு...'' மாயவனே பேச்சைத் தொடங்கினான்.

''ஆமாம்ப்பா... உன்னை பாக்கணும்போல இருந்தது. வந்தேன்...''

''ரொம்ப சந்தோசம் சாமி... பெரியவங்க என்ன பாக்க நினைச்சிருக்கீங்கன்னா நிச்சயம் ஏதோ விசயம் இருக்கணும்''

''பெருசா ஒண்ணுமில்லப்பா... இரண்டு நாள் முந்தி இந்த மலைல செம்போத்துப் பறவை ஒண்ணு அழற சப்தம் கேட்டது...''

''செம்போத்து அழுதிச்சிங்களா... அது அழக்கூட செய்யுங்களா?''

''சிரிப்பும் அழுகையும் மனுஷனுக்கு மட்டும்தான் சொந்தமா?''

''எனக்கு தெரியாது சாமி... தெரிஞ்சிக்கத்தான் கேட்டேன். நீங்க மேற்கொண்டு சொல்லுங்க''

''செம்போத்து பட்சிகள்ல தேவபட்சி. அது கண்ணுல பட்டாலே நல்லதுன்னு சகுன சாஸ்த்ரத்துல இருக்கு. ஆனா அது துக்கத்தோட அழறது காதுல விழுந்தா அது நல்ல அறிகுறி இல்ல...''

''அப்படின்னா...?''

''இந்த கூமாச்சி மலைல நீயும் நானும்தான் இருக்கோம். அதனால நம்ம உயிருக்கோ இல்லை நம்ம உறவினர்களுக்கோ ஒரு கெடுதல் நடக்கப் போறதுக்கு அது அறிகுறி...''



''சரியாத்தான் சாமி சொன்னீங்க. என் தாய்மாமன் இறந்துட்டாரு. தங்கமான மனுஷன். அநியாயமா தலைல இடி விழுந்து இறந்துட்டாரு! நேத்து காலைல அதுக்கு எழவு கேக்கப் போயிருந்தேன். போன இடத்துல என் உயிருக்கும் குறி வெச்சு ஒரு கூட்டமே வந்துச்சு. வழக்கம் போல தப்பிச்சு வந்தேன்... உங்க சகுனக்குறி ரொம்பவே சரியா இருக்கு சாமி...'' என்றான். மாயவனும்... திரும்பவும் சிரித்தார் அந்த கிழட்டு மனிதர்.

''என்ன சாமி சிரிக்கிறீங்க?''

''உன்கிட்ட எப்படி சொல்றதுன்னு எனக்குத் தெரியல. நீ ரொம்பவே ஜாக்ரதையா இருக்கணும்.''

''என் சக்திக்கு எவ்வளவு இருக்கணுமோ அவ்வளவு தூரம் நான் ஜாக்ரதையா இருக்கத்தான் சாமி செய்யறேன்... ஆமா இவ்வளவு நாளா இல்லாம இப்ப இதை ஏன் சாமி சொல்றீங்க?''

''எப்ப தோணுதோ அப்ப தானே சொல்ல முடியும்''

''அப்ப சரி சாமி... பள்ளத்துல கிடந்த நான் எப்பவோ செத்துருக்க வேண்டியது... உங்களால இப்ப முழு மனுஷனா நிக்கறேன். இது எந்த ஜென்மத்து புண்ணியமோ?''

''ஆமாம். புண்ணியம்தான்! கொஞ்சம் மாத்தி கணக்குன்னு கூட சொல்லலாம்...''

''கணக்கா?''

''ஆமாப்பா... எல்லாமே நம்ம வாழ்க்கைல கணக்குதான்''

''சாமி நான் கள்ளன்... ஒளிஞ்சு வாழணும்கறது என் தலைவிதி. நீங்க ஏன் சாமி இங்க இப்படி தனியா கஷ்டப்படணும்?''

''இங்கதான் நான் சந்தோஷமா இருக்கேன். இந்த மலை உச்சிலதான் மனித நடமாட்டம் இல்லை. செல்போன், டி.வி., ரேடியோன்னு ஆகாயமும் அழுக்கா இல்லை. இங்க தான் மனசு சுலபமா அடங்குது. என்ன மாதிரி உடம்ப பாரமா நினைக்கறவங்களுக்கு இந்த மலையும் தன்மையும் தான் சரி...''

''உங்க குருநாதரர் யார் சாமி?''

''என் அனுபவங்கள்தான் என்வரைல குரு. பொதுவா சித்தனுங்களுக்கு பெருசா குருநாதர்னோ, சிஷ்யப் பிள்ளைகள்னோ யாரும் இருக்க மாட்டாங்க. குழவிப் புழு பட்டுப் பூச்சியா மாறுகிற மாதிரி தான் நாங்களும்...

''அப்ப உங்களுக்கு உறவுன்னு யாரும் கிடையாதா சாமி...''

''இருக்காங்க... ஆனா நான் எல்லாத்தையும் அறுத்துகிட்டு வந்துட்டேன். உன்னை ஒண்ணு கேக்கவா?''

''கேளுங்க சாமி?''

''உனக்கு எதுக்கு இந்த திருட்டுப் பிழைப்பு?''

-அந்த மனிதர் அப்படி ஒரு கேள்வியிடம் வந்து நிற்பார் என்று மாயவன் துளி கூட எதிர்பார்க்கவில்லை. சட்டென்று ஒரு பதிலையும் கூற முடியவில்லை. தேங்கினான், திணறினான்.

''உன்னால சட்டுன்னு ஒரு பதிலைச் சொல்ல முடியல இல்ல?''

''அப்படி இல்ல சாமி... நீங்க ஏன் இந்த கேள்வியைக் கேட்டீங்கன்னு புரியாம திகைச்சுட்டேன்...''

''நீ நல்லா இருக்கணும்னு நினைச்சு தான் கேட்டேன்...''

''சாமி இப்ப நான் சொல்லப் போறத கேட்டு தயவு செய்து என்னை தப்பா நினைச்சுக்காதீங்க. நான் உண்மைல திருடன் இல்ல சாமி. உண்மையான திருடனுங்கள் தண்டிக்கற வேட்டக்காரன். இதுவரை நான் உழைச்சு சம்பாதிக்கற யாரோட காசையும் அபகரிச்சதில்ல. ஊரை உலைல போட்டு கொழுத்துப்போய் கிடக்கற ஒரு கூட்டத்துகிட்ட இருந்து மட்டும் தான் நான் எடுக்கறேன். அதையும் இல்லாதவங்களுக்கு பகிர்ந்து கொடுத்துடறேன்''

''உன் தப்பை நீ எப்படி நியாயப்படுத்தினாலும் சரி... நீ செய்யறது திருட்டுதான். இப்ப சொல்றேன் கேட்டுக்கோ. இந்த திருட்டாலேயே நீ திருட்ட விடுவே. உன் வாழ்க்கையே ரொம்பவும் மாறப் போகுது...''

''என்ன சாமி... இது ஜோசியமா - இல்ல உங்க ஆசையா?''

''போகப் போகப் பார். அப்புறம் உனக்கு நான் இப்ப ஒன்று தரேன். இது உனக்கு ரொம்பவே பயன்படும்...''

''என்ன சாமி?''

-அவன் கேட்க அவர் ஒரு மைடப்பி போல ஒன்றை நீட்டினார். அதுவரை அவன் எதிரில் கை அசைத்து பேசிக் கொண்டிருந்தபோது அவரது கையில் இல்லாத அந்த மைடப்பி அப்போது மட்டும் எப்படி வந்தது என்று தெரியவில்லை.

''இந்தா... இதுக்கு பேர் மாயாஞ்சனம்! இதுல இருக்கற மையை புருவத்துல தடவிகிட்டு நீ இனி களவுக்கு போ. பிறர் உன்னைப் பார்த்தாலும் உணர மாட்டாங்க...''



''மந்திரம் தந்திரம் மை வேலைங்கறாங்களே... இது அந்த ரகமா?''

''கொஞ்சம் அப்படித்தான். ஆனா இது மூலிகையால தயாரானது.''

''நான் எப்பவாவது நகர்ப்புறம் நடமாட நினைக்கும் போது இதை பூசிகிட்டு போவேன். இனி நான் நகர்ப்புறமே போகப் போறதில்ல. உனக்காவது பயன்படட்டும்னுதான் தரேன்...''

''சாமி... கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. அது எப்படி சாமி இதை பூசிகிட்டா பிறர் பார்வைல நாம படமாட்டோம். இதுக்கு மட்டும் எப்படி சாமி அப்படி ஒரு சக்தி?''

அவர் பதில் கூறாமல் சிரித்தார்.

''சாமி நான் தப்பா ஏதாவது கேட்டுட்டேனா?''

''இல்லப்பா... ஆனா நான் உனக்கு சொன்னா புரியாது. அதான் சிரிச்சேன்...''

''சொன்னா புரியாதுன்னா எப்படி சாமி... இது இன்னும் குழப்பமா இருக்குங்களே?''

''நீ கள்ளன் - நான் சித்தன்... நீ கண்ணுக்கு புலனாகற விஷயங்களை பார்த்து வளர்ந்தவன். நான் புலனாகாததையும் பாக்க முடிஞ்சவன். ஆகாய விமானம் உலோகத்தால் ஆனது. அது எப்படி ஆகாயத்துல பறக்குதுன்னு கேட்டா உன்னால சொல்ல முடியுமா?''

''சொல்ல முடியாட்டியும் அது மேல எனக்கு சந்தேகம் இல்லை சாமி. அதுக்குன்னு ஒரு படிப்பு இருக்கு. அந்த படிப்பை படிச்சா அது விளங்கிடும். ஆனா இது அப்படியில்லையே?''

''யாருப்பா சொன்னது...? இதுவும் ஒரு படிப்புதான்... ஆனா இந்த படிப்பை எல்லாராலயும் படிக்க முடியாது. அதுக்குன்னு ஒரு விதி இருக்கு.''

''சரி சாமி... நீங்க சொல்லப் பிரியப்படலைன்னு மட்டும் நல்லா தெரியுது. இது மாய மந்திரமா தான் இருந்துட்டு போவட்டுமே. நீங்க என்னை மதிச்சு கொடுத்ததே பெரிய விசயம். உங்களுக்கு ரொம்ப நன்றி சாமி...'' -என்றான் மாயவன்.

மணவாள சித்தரும் விலகிச் செல்லத் தொடங்கினார்!

**வீ**ரைய்யன் எவ்வளவோ சொல்லியும் பருத்தி அந்த மூன்று ஏக்கர் இடத்தை விற்க சம்மதிக்கவில்லை. அந்த கோபத்தில் குடித்துவிட்டு வந்து குடிசை வாசலில் நின்று புலம்பிக் கொண்டிருந்தான் வீரைய்யன்.

''யக்கா... நீ என்னக்கா அந்த இடத்தை தரமாட்டேன்னு சொல்றது? நான் தரப்போறேன்கா... நான் தரப்போறேன்... நீ இடம் தெரியாம மோதிகிட்டு இருக்கக்கா... இடம் தெரியாம மோதிகிட்டு இருக்கே... அய்யா நினைச்சா அஞ்சு நிமிசத்துல நம்மையெல்லாம் அழிச்சு உருத்தெரியாம பண்ணிடுவாரு. ஆனா பரிதாபப்பட்டு நிலத்தை நல்ல விலைக்கு எடுத்துக்கறேங்கறாரு. எனக்கு பத்தாயிரம் ரூபா சம்பளத்துல வேலையும் போட்டுத் தரேன்னு சொல்றாரு. ஆனா இது உனக்கு புரியமாட்டேங்குது.''

-வீரைய்யன் பாட்டும் மனைப் பல்லி போல கத்திக் கொண்டே இருந்தான். கோசலைக்கு காது வலித்தது. பெற்றவளான பருத்தியைப் பார்த்தாள்.

''அடியே இவன் தொல்ல தாங்க முடியல... பேசாம உன் அத்த மவனுக்கு சேதி அனுப்புடி... அவன் வந்தாதான் இவனும் அடங்குவான்'' -என்றாள் பருத்தி.

அதைத் தொடர்ந்து கோசலை மாயவனுக்காக மணிப்புறாவை தன்வீட்டு வலைக்கூண்டில் இருந்து எடுத்து அதில் 'அவசரம் உடனே வா' என்று எழுதப்பட்ட சீட்டை தாயத்து போன்ற குப்பிக்குள் அடைத்து காலில்கட்டி புறாவை வானில் வீசி எறிந்தாள். அதுவும் உச்சி வானுக்கு ஏற ஆரம்பித்து விட்டது.

சற்று போதையில் தளர்ந்திருந்த வீரைய்யனிடம் வந்தவள் ''மாயவத்தான் வரட்டும்... உன்னைக் கிண்டி கிழங்கு எடுத்தாதான் நீ அடங்குவே...'' என்றாள்.

அப்போது பார்த்து அங்கு வந்த பாண்டிய மாணிக்கத்தின் வீட்டு வேலைக்காரனான சுப்பையா என்பவன் அதைக் கேட்டுவிட்ட நிலையில் வந்த சுவடு தெரியாதபடி திரும்பத் தொடங்கினான்.

டெல்லிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார் பாண்டிய மாணிக்கம். புதிய கல்லூரி தொடர்பாக மட்டுமில்லாமல் சில சில்லரைச் சிக்கல்களும் அவருக்கு இருந்தது. அவருக்கு சொந்தமான ஒரு பெட்ரோல் பங்க்கில் விதிமுறைகளை மீறி விட்டதாக கூறி அதற்கான உரிமத்தை ரத்து செய்வது தொடர்பாய் நோட்டீஸ் வந்திருந்தது. இதுபோக வரதம்பட்டியை சேர்ந்த ஒரு ராணுவ வீரனுக்கு லீவுக்காக ஊருக்கு வந்த இடத்தில் ஒரு கொலை கேசில் சிக்கிக் கொண்டு விட்ட சிக்கல்...



இப்படி எல்லாவற்றுக்குமாய் டெல்லிக்கு போய் ஒருவாரம் தங்கிவிட்டு வந்தால் அவ்வளவு சிக்கல்களும் நீங்கி அதன்பிறகு தான் மூச்சு விடவே முடியும். யாரை எப்படி அணுக வேண்டுமோ அப்படி அணுகுவதில் பாண்டிய மாணிக்கமும் ஜித்தன்.

அவரது சாமான்கள் ஒவ்வொன்றாக காரில் ஏறிக் கொண்டிருந்தன. காரில் மதுரை வரை பயணம். பின் மதுரையில் இருந்து விமானப் பயணம்! வழி அனுப்புவதற்காக அவரது எடுபிடிகளும் சகாக்களும் கூடியிருந்தனர்.

வீட்டு முகப்பில் வரிசையாக கார்கள், பொன்னாடை, மலர் மாலை என்று எப்போதும் உள்ள ஜபர்தஸ்துகளுக்கும் குறைவே இல்லை. அப்போது தான் சுப்பையாவும் வந்து அவர் காதோரமாக பருத்தி நில விஷயத்தில் எதிர்திசையில் இருப்பதைச் சொல்லி முடித்தான்.

''இந்தப் பய வீரைய்யன் குடிச்சுபுட்டு புலம்பி கிட்டிருக்கான். இவன் வேலைக்கு ஆக மாட்டான்யா...'' என்றவனை விட்டுவிட்டு அங்கே வந்திருந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரைப் பார்த்தார்.

''ஐயா...''

''அந்த பருத்தி பிசாத்து மூணு ஏக்கர் இடத்த வெச்சுகிட்டு விக்கறதுக்கு ரொம்பவே யோசிக்கறா... நீ என்ன செய்வியோ தெரியாது... நான் டெல்லில இருந்து வரும்போது அவ விக்கறதுக்கு சம்மதிச்சிருக்கணும்''

''சரிங்கய்யா... நீங்க கிளம்புங்கய்யா... அதை எல்லாம் நான் பாத்துக்கறேன்''

''பாத்து... பாத்துக்கறேன்னு பத்திரிகைகாரனும், டி.வி. காரனுங்களும் வந்து என்ன பாத்துடப் போறாங்க...''

''என்னங்கய்யா நீங்க... கள்ளன் மாயவனோட மாமன் ஊடுதானே அது? ஒரு அரை கிலோ கஞ்சாவை உள்ற வெச்சுட்டு போய் அள்ளிகிட்டு வந்துட்டா சொன்னபடி கேட்டுத்தானே தீரணும்?''

-அந்த எஸ்.ஐ. அப்போதே ரூட் போட்டு காட்ட பாண்டிய மாணிக்கம் முகத்தில் ஒரு பிரகாசம்.

''அப்படிப்போடு அருவாள...'' -என்றபடியே தாயான பழனியம்மாளிடம் சென்று ''ஆத்தா டெல்லி வரை போய்ட்டு ஒரு வாரத்துல திரும்பிட்றேன்'' என்றவர் ''எங்க செண்பகம்?'' என்று

கேட்க செண்பகமும் ஐ பாடில் பாட்டு கேட்டபடி ஒரு அறைக்குள் இருந்தபடி எட்டிப் பார்த்தாள்.

“கண்ணு அப்பா டெல்லி வரை போய்ட்டு வந்துட்றேன்”

“ஓ. கே. டாட்... ஆல்த பெஸ்ட்...” என்றாள் செண்பககுழல் வாய்மொழி. பாண்டிய மாணிக்கம் முகத்தில் பெருமிதம். புறப்பட்டு வாசல் வரை சென்று விட்டவர் எதையோ மறந்து விட்டவர் போல திரும்பி வந்தார். விறுவிறுவென்று மாடிப்படிகளில் ஏறியவர் கன்னி மூலையில் இருக்கும் அவரது கஜானா அறைக்குள் நுழைந்தவர் கதவைச் சாத்திக் கொண்டு அங்கு இருக்கும் ஒரு லாக்கர் போன்ற பீரோவை முழுநீளச் சாவி போட்டு திறந்தார். உள்ளே நிறைய தங்கப்பாளங்கள் - வெள்ளிப் பாளங்கள்! ஒரு சமயம் அவருக்கு கட்சித் தொண்டர்கள் சூட்டி மகிழ்ந்த தங்க கிரீடம் முதல் எல்லாம் இருந்தது. அவைகள் அத்தனைக்கும் நடுவில் ஒரு மரப்பெட்டியும் இருந்தது. அதை எடுத்து திறந்து பார்த்தவரின் கண்களில் பட்டு ஜொலித்தது. அந்த நாகமாணிக்கம்!

## 7

அந்த நாகமாணிக்கத்தை கண்களிலும் ஒற்றிக் கொண்டார். அப்படி ஒற்றிக் கொள்ளும்போது அதற்காக இருபது லட்ச ரூபாயை தூக்கிக் கொடுத்ததும், அது வந்த பிறகே அரசியலில் ஆரம்பித்து அனைத்திலும் முன்னுக்கு வந்தது அவருக்கு நினைவுக்கு வந்தது.

வடநாட்டைச் சேர்ந்த பைராகி ஒருவனிடம் இருந்து வாங்கியது. விற்கும்போதே அவனும் பல விஷயங்களைச் சொல்லித்தான் கொடுத்தான்.

“இந்த நாகமாணிக்கம் கன்னிமூலை கஜானா பெட்டிக்குள்ளதான் இருக்கணும். இதை சுத்தி தங்கம், வைரம், வெள்ளின்னு இருந்தா எல்லாமே இரண்டு மடங்கு மூணு மடங்குன்னு பெருகும். இதுக்கு வெள்ளிக்கிழமை தவறாம பூஜை செய்யணும். இதை கும்பிடக் கும்பிடத்தான் இது நல்லா வேலை செய்யும்”.

என்று அந்த பைராகி சொன்னதெல்லாம் ஞாபகத்தில் வந்தது. அதனால் தான் இந்தக் கும்பிடு...!

டெல்லிக்கு போய் முடிக்க வேண்டிய வேலைகளுக் கெல்லாம் ஒரு அதிர்ஷ்டம் வேண்டும். சட்டப்படியும் நியாயப்படியுமான வேலைகளே அதில் எதுவும் கிடையாது.



அதனாலேயே நாகமாணிக்கத்தை ஒரு அதிர்ஷ்ட தேவதையாகவே அவர் நினைக்கத் தொடங்கி விட்டார்.

முடிந்தது கும்பிடு... திரும்பவும் அதை உரிய இடத்தில் வைத்து விட்டு கஜானாவையும் பூட்டி சாவிக் கொத்தையும் அங்கேயே ஒரு குபேரபுத்தர் சிலையின் வயிற்று பாகத்தை திறந்து அதனுள் வைத்து, வயிற்று பாகத்தை மூடவும் அந்த குபேர புத்தர் சிலை அவரை பார்த்து சிரித்தது.

வயிற்று பாகத்தை திறந்து மூட முடியும் என்பதே பார்வைக்கு தெரியாதபடி காட்சி தந்தது.

வெளியே வந்து அறையையும் பூட்டிவிட்டு மாடியில் இருந்து கீழே இறங்கி வந்தார்.

பாண்டியமாணிக்கம் எதற்காக மேலே போனார் என்பதை ஆளுக்கு ஆள் பலவிதமாக கற்பனை செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவரின் தாயான பழனியம்மாள் மட்டும் அது நாகமாணிக்கத்தைப் பார்ப்பதற்காக என்பதை தெரிந்து கொண்டவள் போல,

“என்னய்யா சாமி கும்புட்டியா?” -என்று ஒரு வார்த்தையில் கேட்டாள்.

“ஆமாம் ஆத்தா... அப்ப நான் வர்றேன்”

“பத்ரமா பாத்து போய்ட்டு வாய்யா...”

பழனியம்மாள் வழியனுப்ப பாண்டிய மாணிக்கத்தின் காரும் அந்த கிராமத்து பங்களாவை விட்டு ஒரு ஊர்வலம் போல புறப்பட்டு போனது. இதை எல்லாம் பார்த்தபடி இருந்த செண்பகக்குழல்வாய் மொழியிடமும் ஏராளமான கேள்விகள்.

“அப்பத்தா...” -என்று பழனியம்மாளிடம் வந்தவள், “பூஜை ரூம் கீழே தானே இருக்கு... அப்பா எதுக்கு மாடிக்கு போய் சாமி கும்பிடணும்” என்று கேட்டாள்.

“மாடியிலதானே அதிர்ஷ்டத்த அள்ளி அள்ளி தர்ற சாமி இருக்கு...”

“அது என்ன சாமி அப்பத்தா... நான் அப்படி ஒரு சாமியை இந்த வீட்ல கேள்விப்பட்டதே இல்லையே?”

“அது எனக்கும் உங்க அப்பனுக்கும் மட்டும் தெரிஞ்ச விசயம்... அரசப் புரசலா ஊருக்குள்ள சில பேருக்கு மட்டும் தெரியும்...”

“அப்படி என்ன விசயம் அப்பத்தா அது?”

''உங்கப்பன்கிட்ட இந்த ஜில்லாவுலயே... ஜில்லா என்ன ஜில்லா இந்த தமிழ்நாட்டுலயே யார்கிட்டயும் இல்லாத நாகரத்தினக்கல்லு இருக்குல்ல!''

''நாகரத்னக்கல்லா... இது என்ன புதுசா?''

''நீங்கள்ளாம் இந்த காலத்து புள்ளைங்க. உங்களுக்கு கல்லத்தான் தெரியுமா இல்ல கனியத்தான் தெரியுமா? அதெல்லாம் ரொம்ப பெரிய விஷயம். ஏதோ என் மவன் செஞ்ச அதிர்ஷ்டம் நாகரத்னக்கல்லு அவனைத் தேடி வந்துச்சு. அவனும் இருவது லட்ச ரூபாய்க்கு அதை விலை கொடுத்து வாங்கினான். பதிலுக்கு அது கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்துகிட்டு இருக்குது.''

''ஒரு கல்லு கோடிகளைக் கொடுத்ததா?''

''பொறவு... நாகரத்னம்னா என்ன சாமான்யமா?''

''தங்கம், வைரம், முத்து, பவழம் கேள்வி பட்டுருக்கேன். நாகமாணிக்கம்கறது நான் கேள்விப்படாத ஒண்ணு அப்பத்தா...''

''அதான் நீங்கள்ளாம் இந்த காலத்து புள்ளைங்க. உங்களக்கு அபூர்வமானத பத்தி எல்லாம் தெரியாதுன்னு சொன்னேனே...''

''சரி... அப்பா அந்த கல்லை எந்த ஜுவல்லரில வாங்கினார்''

''நகை கடைய கேக்கறியா நீ...?''

''பின்ன...?''

''விவரம் கெட்டவளே... நல்ல பாம்பு வாயில இருந்து உதுக்கற நாகமாணிக்கத்தை நகை கடைல வாங்க முடியுமா?''

''இது என்ன கூத்து... நல்ல பாம்பு வாய்ல இருந்து உதுக்கற நாகமாணிக்கமா... அப்பத்தா அப்படி எல்லாம் ஒண்ணு கிடையவே கிடையாது. நல்ல பாம்பு வாயில விஷம் தான் இருக்கும்''

''அந்த விஷம்தான் கல்லா மாறி மாணிக்கமா மாறிடுது''

''மை காட்... யாரோ ஏமாத்தியிருக்காங்க. விஷம் கல்லால்லாம் மாறாது அப்பத்தா. நீ டி.வி.ல ஜாக்ரஃபி சேனல் பாரு. அதுல பாம்பு முட்டை போட்றதுல இருந்து குஞ்சு பொறிக்கறது வரை காட்றாங்க. அது மட்டுமில்ல இருபது மீட்டர் நீளமுள்ள அனகோண்டா பாம்பை எல்லாம் வாயைப் பிளந்தே காட்றாங்க. பாம்பு வாய்ல பல்லும் விஷப்பையையும் தவிர எதுவும் இருக்க சான்ஸே இல்லை''

''அடிப்போடி பொச கெட்டவளே... நீயும் உன் டி.வி.யும்... சந்தேகமா இருந்தா மேலபோய் கஜானா பீரோவை திறந்து பார். அப்ப தெரியும்''



''ஐயோ அப்பத்தா அது வேற எதாவது கல்லா இருக்கும்''

''வேற கல்லா... அப்படி இருந்தா உங்கப்பன் எப்படி எலெக்ஷன்ல ஜெயிச்சு மந்திரியாகி இப்பவும் மதிப்பா இருக்கான். வெறும் கல்லா இருந்தா இவன் இந்த ஊர்ல பிரசிடெண்டாகூட ஆகியிருக்க முடியாதே...''

''அப்பா முயற்சி செய்தாரு. ஆனாரு அவ்வளவுதான். கல்லெல்லாம் எதுவும் பண்ணாது. அது ஜடம்''

''போதும் பேத்தியம்மா... போதும்... ஊட்டு லட்சுமிய கல்லு ஜடம்னுல்லாம் சொல்லாதே. இதுக்குத்தான் பொட்டச்சிறுக்கிகள படிக்க வைக்க கூடாதுங்கறது... போய் வாயக் கழுவு.''

- என்ற பழனியம்மாளிடம் அசாத்ய கோபம் வெளிப்பட்டது. ஆனால் செண்பகக் குழல்வாய்மொழிக்கு சிரிப்புதான் வந்தது!

பருத்தியின் குடிசை... உம்மென்று ஏகப்பட்ட சோகத்தில் ஒரு மூலையில் கிடந்த கட்டிலின் மேல் கிடந்தான் வீரைய்யன். எங்கிருந்தோ அவன் மேல் ஒரு கல் வந்து விழவும் திரும்பிப் பார்த்தான்.

சுப்பையாதான் அவன்மேல் கல்லெறிந்து விட்டு அவன் பார்க்கவும் அருகில் வரும்படி அழைத்தது.

ஆட்டுப்படப்பை ஒட்டிய நொணா மரத்தடியில் இருந்துதான் கல்லெறிந்திருந்தான். பருத்தி உள்ளே அயர்ந்து படுத்திருந்தாள். கோசலை பால் ஊற்றப் போயிருந்தாள். வீரைய்யனுக்கு வசதியாகப் போய் விட்டது. சுப்பையாவை நெருங்கி ''என்னய்யா?'' என்று கேட்டான்.

''உன்னை சப்இன்ஸ்பெக்டரு இளங்கோ கூட்டிக்கிட்டு வரச் சொன்னாரு?''

''போலீஸா... என்னையா? எதுக்குய்யா... நான் ஒரு தப்பும் பண்ணலியேய்யா...''

''டெல்லி போகைல மந்திரி அய்யா ஏதோ சொல்லிட்டு போயிருக்காரு... பயப்படாம வா...''

''அப்படியா சங்கதி... சரி நீ போ நான் வரேன்...''

- வீரைய்யன் அவனை முன்னே போகச் சொல்லி விட்டு குடிசைக்குள் சென்று கிடைத்த சட்டையில் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டு புறப்பட்டான்.

கட்டிலில் புரண்டு படுத்த பருத்தியும் அவன் வெளியே போவதைப் பார்த்தவளாக ''எங்கடா கிளம்பிட்டே?'' என்று கேட்டாள்.

''நான் எங்க போனா உனக்கென்ன...?'' என்று பதிலுக்கு எரிந்து விழுந்தான்.

''நீ பாட்டும் இப்படி எனக்கென்னன்னு வெளிய கிளம்புனா பட்டி ஆடுங்களுக்கு யாருடா இலைதழை ஒடிச்சு போடறது...?''

''அதான் அழகு பெத்த மவ ஒருத்திய பெத்து வெச்சிருக்கியே அவளையே எல்லாத்தயும் செய்யச் சொல்லு...''

''அப்ப நீ எதுக்குடா இந்த ஊட்ல... அப்படியே போயிடு- திரும்பி வராதே...''

''போவணும்னுதான் பாக்கறேன். ஆனா அதுக்குத்தான் நேரம் வரமாட்டேங்குது... பத்தாயிரம் ரூபா சம்பளத்துல வேலை ஒண்ணு கிடைக்கப் பாத்துச்சு... ஆனா எனக்கு அந்த வேலை கிடைக்கறதுல உனக்கு பிரியமில்ல...''

''உளறாதடா வெறும் பயலே... மந்திரிய பத்தி உனக்கு தெரியாது... அவருக்கு வாய் தான் நீளம். கை கரட்டுக் கெழங்குடா. நம்மகிட்ட இருக்கற இடத்தைப் புடுங்க அவர் இப்படியெல்லாம் பேசறாரு...''

''ஆமா நீ தான் பாத்தே... கை கரட்டுக் கெழங்குன்னா மாமா செத்து பொணமா கெடந்த அன்னிக்கு வந்து நோட் நோட்டா தந்தது எதுக்காம்?''

''எல்லாம் எழவெடுத்த அந்த இடத்துக்கு தாண்டா?''

''ஆமா... பெரிய இடம்! அவர் கிட்ட கோடி கோடியா இருக்கு. அதுக்கு ஊரையே வாங்க முடியும். நம்ம மூணு ஏக்கராங்கறது பிசாத்து...''

''நீ ஒரு கூறில்லாதவண்டா. குடிச்சு குடிச்சு உனக்கு புத்தி மழுங்கிப் போச்சு... நம்ம இடம் அளவுல சிறுசுடா ஆனா அவர் தேவைல பெருசு. அத்தோட நம்ம இடம் ராசியான பூமி.

''அதான் மாமா இடி பாய்ஞ்சு செத்துப் போனாராக்கும்?''

''கூறு கெட்டவனே... அவரும் அந்த இடத்தை அப்பப்ப விக்க ஆசைப்பட்டாருடா. இடமும் பொண்ணும் ஒண்ணு! மதிச்சு கொண்டாடினா அது அருளைத் தரும். இல்லாட்டி இருளைத்தான் தரும்.''





''நல்லா பேசறேக்கா நீ... இருந்தாலும் நான் இப்ப சொல்றத நல்லா கேட்டுக்கோ இந்த இடத்தை ஐயா வாங்காம விடப் போறதில்ல...''

''அது நான் செத்ததுக்கு பிறகு வேணும்னா நடக்கலாம். நான் உசுரோட இருக்கற வரை நடக்காது. அதோட மந்திரி அய்யா இப்படி இடத்துக்கு அலை பாயறது மட்டும் அந்த மாயவனுக்கு தெரிஞ்சா அவரோட கதி அவ்வளவு தான்...''

''மண்ணாங்கட்டி. அந்த மாயவனை வெட்டிச் சாய்க்க ஒரு கூட்டமே அலைமோதிக்கிட்டு இருக்கு. தெரிஞ்சுக்க! சாவுக்கு வந்துட்டு தலைதெறிக்க ஓடிப் போனவன் அந்த மாயவன். கொள்ளி போட்டு கூட நிக்கறவன் நான்...''

''சரிடா... இனி உன்கிட்ட பேசிப் பிரயோஜனமில்ல. நீ கிளம்பு. இது ஆம்பளை இல்லாத ஊடுன்னு நினைச்சு நானும் என் மகளும் எப்படிப் பொழைக்கணுமோ அப்படி பொழைச்சிக்கறோம்'' என்ற பருத்தியை வெறுப்புடன் வெறித்த வீரய்யன், அழுக்கு வேட்டியை ஒரே தூக்காக தூக்கி மடித்துக் கட்டிக் கொண்டு,

''உனக்கெல்லாம் பட்டாத்தான் புத்தி வரும்'' என்றபடியே வெளியேறினான்.

போலீஸ் ஸ்டேஷன்!

உள்ளே நுழைய அவனுக்கு கால் வரவில்லை.

'ஒருவட்டம் உள்ள போனேன்னுவை... போய்கிட்டே இருக்க வேண்டியதுதான்...' என்று அவனது சீட்டாட்ட சகாக்கள் சொன்னது ஞாபகத்திற்கு வரவும் வாசலிலேயே நின்றான்.

சப்இன்ஸ்பெக்டர் இளங்கோ எழுந்து வெளியே வந்தவராக,

''ஏய்யா உள்ள வரமாட்டியா?'' என்று கேட்டார்.

''மனசுக்கு கருக்குன்னு இருக்கு சார்...''

''சரி வராத... நான் உன்கூட வரேன்... வா அப்படியே நடந்து போய்ட்டு வருவோம்...''

- என்று அவன் தோள்மேல் கை போட்டபடி ஒரு சிகரெட்டையும் பற்ற வைத்துக் கொண்டார் இளங்கோ. சுப்பையா தூர நின்று கொண்டான்.

ஒரு பத்து பதினைந்து நிமிட நடைக்கு பிறகு திரும்பி வந்தனர் இருவரும். வீரய்யன் முகத்தில் லேசாக பயமும் மிரட்சியும் தெரிந்தது.

''தைரியமாபோ... எதுவும் ஆகாது...'' என்றார் சப்இன்ஸ்பெக்டர் இளங்கோ.

''இல்லீங்கய்யா... இடம் கைக்கு வந்த உடனே எங்கக்காவையும், கோசலையையும் விட்டுடணும். அவங்க மேல கேஸ் போட்டு இழுத்துடக்கூடாது''

''இடம் வந்தா நான் எதுக்கு கேஸ் போடறேன். இடத்தை எழுதி வாங்கத்தானே இந்த நாடகம்...''

''அப்புறம்யா... மந்திரிய்யா எனக்கு சொன்ன மாதிரி பத்தாயிரம் ரூபா சம்பளத்துல வாட்ச்மேன் வேலை தருவாருல்ல? ஏன் கேக்கறேன்னா அக்கா கொஞ்சம்கூட நம்ப மாட்டேங்குது''

''அட பைத்தியகாரா... நான்லாம் சாதாரண கான்ஸ்டபிளா டிபார்ட்மென்ட்ல வேலைக்கு சேர்ந்தவன். இன்னிக்கு சப்இன்ஸ்பெக்டரா இருக்கேன்னா ஐயாவால தான்! அவர்ர எப்பவும் கொடுத்த வாக்கை மீற மாட்டாரு...''

''அப்ப சரிங்க...'' -என்ற அவனிடம் ஒரு துணிப்பையை கான்ஸ்டபிள் ஒருவர் எடுத்து வந்து தந்தார்.

உள்ளே மூணு கிலோவுக்கு குறையாத கஞ்சாத்தூள்!

## 8

அந்த மஞ்சள் பையை வீரைய்யன் தயங்கியபடியே எடுத்துக் கொண்டான். திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே ஸ்டேஷனை விட்டு வெளியேறத் தொடங்கினான்.

''தைரியமா போ... உங்கக்கா மாதிரி பொம்பளைங்கல்லாம் மயில் மாதிரி! கெஞ்சினால்லாம் மயில் இறகு போடவே போடாது. புடுங்கினாத்தான் உண்டு...'' -என்று அவனை சமாதானப்படுத்திய சப்இன்ஸ்பெக்டரை ஸ்டேஷனில் இருக்கும் சக போலீஸ்காரர்களே ஒரு மாதிரியாக பார்த்தனர்.

குறிப்பாக லாக்கப்பில் இருந்த அன்வர் என்கிற கைதி அந்த காட்சியை பார்த்து வெறியேறிப் போயிருந்தான்.

மனதுக்குள் 'நீயெல்லாம் ஒரு போலீஸாடா... உன்னை எல்லாம் என்ன வேணும்னாலும் செய்யலாம்டா' என்று தனக்குள்ளே மருகிக் கொண்டிருந்தான்!



கூமாச்சி மலை உச்சி!

'கொக்கரக்கோ... கோ...' என்கிற சேவலின் குரலை முன் அனுப்பி விட்டு பின்னாலேயே நடந்து உச்சியை நோக்கி ஏறிக் கொண்டிருந்தனர் மாயவனின் சகாக்கள். அவர்களில் உளியனிடம் ஒரு தார்ப்பாய் துணிப்பையும் அதனுள் மதுவகைகளும், பிரியாணிப் பொட்டலமும் இருந்தது. கூடவே சிகரெட் பாக்கெட், சிப்ஸ், எண்ணெய் பாக்கெட், டீத்தூள், பனங்கருப்பட்டி என்று பலப்பல ஐட்டங்கள்.

ஓரிடத்தில் புலியின் கால் தடயங்கள் கண்ணில் பட்டன! அங்கே மளமளவென்று மரக்கிளையை உடைத்து அதன் நுனியில் தலையில் கட்டியிருந்த முண்டாசுத் துணியை உருண்டையாகக் கட்டி, அந்த உருண்டைமேல் பையிலிருந்த எண்ணெய் பாக்கெட்டை எடுத்து ஊற்றி நனைத்து பின் அதில் தீயை மூட்டி பந்தம் போல ஆக்கிக் கொண்டனர்.

தீப்பந்தத்தோடு வருபவர்களிடம் புலியோ, கரடியோ அருகே வராது என்பது காட்டு வாழ்க்கை கற்றுத் தந்த பாடம்.

உளியனோடு வந்த கடாரன், மலையன், பெருமாள் ஆகிய மூவரும் அண்ணாந்து மரக்கிளைகளை பார்த்தபடியே நடந்தனர். சில நேரங்களில் சிறுத்தைப் புலி மரக்கிளையில் அமர்ந்திருக்கும். ஒரே தாவில் மேலே பாய்ந்து குரல்வளைப் பகுதியை பிடித்துவிடும். குறைந்த பட்சம் ஐந்து நிமிடங்களுக்கு உடம்பு துடித்து அடங்கும் வரை விடவே விடாது.

எனவே எச்சரிக்கையுடன் மேலேறினர்.

இடை இடையே அந்த கொக்கரக்கோ சப்தத்தை எழுப்பத் தவறவில்லை. மேலே உச்சியில் தன் குகைப் பரப்புக்கு வெளியில் கம்பு சுழற்றியபடி இருந்த மாயவன் காதிலும் அந்தக் கொக்கரக்கோ குரல் விழுந்தது.

சகாக்கள் வருவது தெரியவும் அவன் முகத்தில் ஒரு மலர்ச்சி, வேட்டியை கச்சம்போல இறுக்கமாக கட்டிக் கொண்டு கம்பு சுழற்றியவன் அப்படியே அதை பழனி தண்டாயுதபாணி சாமியை போல பிடித்தபடி நின்றுகொண்டு எதிர்திசையையும் பார்த்தான். நண்பர்கள் ஒவ்வொருவராக மூச்சிரைக்க வந்து சேர்ந்தனர். இறுதியாக தீப்பந்தத்தோடு உளியன் வந்து சேர்ந்தான்.

மாலை நேரம்!

சூரியனிடம் ஆரஞ்சு வண்ணம்.

மழை பெய்தாலும் பெய்யலாம் என்கிற மாதிரி ஈசான மூலையில் ஆரம்பித்து அக்னிமூலை வரை மேகக்கூட்டம் மண்டியபடி வந்து கொண்டிருந்தது. வாலாட்டி குருவிகளிடம் கூச்சல் அதிகமாக இருந்தது. அவைகள் அதிகம் அமட்டினாலும் கூட மழை வரும்.

மாயவன் நண்பர்களைப் பார்த்து புன்னகைக்க உளியன் எரிந்த தீப்பந்தத்தை காலடியில் போட்டு மிதித்து அணைத்தான்.

பின் ஒன்று கூடி மூச்சை சமப்படுத்திக் கொண்டபோது கோசலை அனுப்பியிருந்த புறா செய்தியோடு அவன் முன் வந்து அமர்ந்தது. அதனிடமும் வெகுதூரம் பறந்து வந்த களைப்பு!

மாயவன் புன்னகையோடு அதைப் பார்த்தான். வேகமாய் குகைக்குள் சென்று கைநிறைய தினை வகைகளை அள்ளி வந்தான். அத்தோடு ஒரு கொட்டாங்கச்சியையும் கொண்டு வந்து வைத்து அதனுள் உள்ளே இருந்து எடுத்து வந்த ஒரு மினரல் வாட்டர் பாட்டிலை திறந்து தண்ணீர் விட்டான். அந்த புறா முதல் காரியமாக தண்ணீர் குடித்தது. குடித்து முடிக்கவும் அதை தொட்டு எடுத்து காலில் கட்டப்பட்டிருந்த செய்தித் துண்டை உருவி எடுத்துக் கொண்டான். பின் அதை தானியம் மேயவிட்டான். கோசலை அனுப்பிய செய்தியையும் ஆவலாக படிக்கப் போனான்.

''யாரு மாயவா - உன் மாமன் மவகிட்டயிருந்தா?''

''ஆமா...''

''வேற யார் இப்படி புறாக் கால்ல செய்தி அனுப்புவா... சொல்போன் வந்தும் அந்த புள்ள புறாவை உடமாட்டேங்குது பார்...''

''இங்க டவர் கிடைக்காதுங்கறது தெரியாதா உனக்கு? கோசலை இந்த காலத்து புள்ளை அதுக்கு சொல்போனை தான் யூஸ் பண்ணத் தெரியாதாக்கும்?''

''டவர்கிடைச்சாலும் சார்ஜ் பண்ண எங்கிட்டு போக?''

அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ள செய்தியை படித்து முடித்திருந்த மாயவன் முகத்தில் பலமான மாறுதல்கள்.

''என்ன மாயவா... வில்லங்கமா ஏதாச்சும்?''

''ஆமாம் உளியா... மாஜி மந்திரி எங்கக்காவை குறி வெச்சுட்டான்!''

''அடக் கொடுமையே... விபரமா சொல்லுப்பா?''



''அந்த கொழுப்பெடுத்தவன் வரதம்பட்டில காலேஜ் கட்டப்போறானாம். அதுக்கு என்மாமன் இடமும் அவனுக்கு தேவையா இருக்கு. வித்துடு இல்லாட்டி விபரீதம்தான்னு விரலை ஆட்டியிருக்கான். இந்த வீரைய்யன் நாயும் அவன் வலைல விழுந்துட்ட மாதிரிதான் தெரியுது''

''மந்திரி இப்ப ஊர்ல இல்லையே... மதியம்தான் கேமான்னு கூட்டமா மருதைக்கு கௌம்பிப் போனான். டெல்லி போவப் போறதா டிக்கட்டையும் பேசிக்கிட்டாங்க...''

''அப்ப, வந்து நிலத்துக்காண்டி கட்டயக் கொடுக்கப்பாப்பான். என்ன பண்ணப் போறே மாயவா?''

''கோசலையும் அவனுக்கு அம்புப் போடச் சொல்லித்தான் குறிப்பு அனுப்பியிருக்கா. அம்பு போட்டாத்தான் அவனும் ஒரு கட்டுக்கு அடங்கி வந்து பேசாம இருப்பான்.''

''அப்ப அவன் ஊர்ல இல்லாத இன்னிக்கு ராத்திரியிலயே போய் அம்பப் போட்ருவோம்...''

''இனி இங்க இருந்து போய் அம்பு போடறது சாத்யமில்ல. நாளைக்கு ராத்திரி போட்றோம். இந்த வட்டம் ஒரு உசுரு, ஒரு களவு, ஒரு பச்சைங்கற மூணையும் மிச்சம் உழுவாமப் போட்றோம்.''

''உசுர் பொறுப்பு எனக்கு... அவன்கிட்ட சுப்பையாங்கற ஒரு பேமானி இருக்கான். அவனை நான் தூக்கறேன்'' -என்றான் பெருமாள்.

''களவை நான் பாத்துக்கறேன். கன்னிமூலை உச்சமான தார்சு கட்டிடம் அது. நிச்சயம் அந்த மூலைல தான் கஜானா இருக்கணும். அதை தோட்டாவால தொளபோட்டு தொறந்து தேட்ட போட்றேன்'' என்றான் கடாரன்.

''மந்திரியோட கணக்குப்பிள்ளை நெத்தில நான் பச்சைய குத்தறேன்'' என்றான் உளியன்.

நண்பர்கள் வந்த ஜோரில் படுவேகமாய் ஒரு திட்டமிடலும் முடிந்துவிட்டது.

மாயவனின் களவுக்குள்ளே நிறைய வித்தகங்கள் உண்டு. சொல்லி அடிப்பது, திசைமாற விட்டு அடிப்பது, எதிர்பாராமல் சென்று அடிப்பது, உள்ளிருந்தே அடிப்பது, மறைந்திருந்து அடிப்பது' என்று ஒவ்வொன்றுக்கும் ஒரு இலக்கணமே உண்டு. அதற்கு ஒட்டுமொத்த பேர்தான் அம்பு போடுதல் என்பது!

அதில் அப்போது அவர்கள் 'எதிர்பாராமல் சென்று அடிப்பது' என்னும் விதத்துக்குள் செல்ல முடிவு செய்து பேசினர். வந்து சென்றதன் அடையாளமாக பச்சை குத்தி, உயிர் ஒன்றையும் பணயமாக பிடித்துச் சென்று விடுவது அடக்கம்.

பின்பு களவுபோன பொருளைப் பற்றி அறிந்தும் பச்சையை பார்த்தும் பயந்து போய் பணிவாகப் போய்விட முன் வந்தால் பதினைந்தாவது நாள் பணய உயிரை திரும்ப ஒப்படைப்பார்கள். ஏட்டிக்கு போட்டியாக போலீஸ், பதிலடி என்று இறங்கினால் அதையும் கண்காணித்து பதிலுக்கு பதிலாக பணயம் பிடித்தவரின் விரல்களை வெட்டி வீட்டுக்குள் வீசிவிட்டு போவார்கள். அதன் பின்னும் அடங்கிப் போகாவிட்டால் விரலை இழந்தவர் உயிரையே இழந்து தலையில்லாத முண்டம் மட்டும் அவர் வீட்டு முன்னால் போடப்படும். வெட்டப்பட்ட தலையை மலைப்பகுதியில் ஒரு வேல் கம்பில் பொருத்தி நிறுத்தி விடுவார்கள். பருந்தும் கழுகும் வந்து கொத்தித் தின்று விட்டு செல்லும்.

மாயவன் இதுவரையில் இந்த எதிர்பாராமல் சென்று அடிப்பதில் அவன் இறங்கியதில்லை. சொல்லி அடிப்பது தான் அவன் பாணி. முதல் தடவையாக சகாக்கள் மந்திரி விஷயத்தில் எதிர்பாராமல் அடிப்பதில் போய் நின்று பேசினர். மந்திரி வரையில் அதுதான் சாத்யமும் கூட...

முதலில் மௌனம் சாதித்த மாயவனும் அப்படியே செய்துடுவோம் என்றான்.

''சரி மாயவா... வா மழை பிடிக்கற மாதிரி இருக்கு எங்களுக்கு சரக்கும் உனக்கு பிரியாணியும் வாங்கிட்டு வந்துருக்கோம். சாப்ட்டு கச்சேரி கட்டுவோம்'' என்று சீட்டுக்கட்டை வெளியில் எடுத்தபடி குகைக்குள் நுழைந்தான் உளியன். மளமளவென்று பந்தங்களில் தீபற்ற ஆரம்பித்தது. உள்ளிருட்டும் ஓடியது. வெளியே தானியங்களை மேய்ந்திருந்த புறாவும் புறப்பட்டு விட்டிருந்தது!

சின்னப்பூச்சி வீட்டுமுன் இருட்டி விட்ட அந்த வேளையில் போலீஸ் ஜீப்பும் ஒரு பத்து பதினைந்து போலீசாரும் வந்து நிற்கவும் அரண்டு போனாள் பருத்தி. ஏற்கனவே போடப்பட்ட திட்டப்படி வீரய்யன் உள்ளே கஞ்சாவை வைத்து விட்டு நழுவி விட்டிருந்தான்.

எனவே திபுதிபுவென்று உள் நுழைந்த போலீஸ் கையில் கஞ்சாவும் சிக்கியது. பருத்தி ஆடிப்போய் விட்டாள். மேய்ச்சல்



மாடுகளை இழுத்து வரப்போயிருந்த கோசலையும் மாடுகளோடு வந்து, போலீஸ் நிற்பதைப் பார்த்து கிறுகிறுத்துப் போனாள்.

பருத்தியின் தலைமுடியை கொத்தாகப் பிடித்து வெளியே இழுத்து வரும் போதே இன்ஸ்பெக்டரிடம் அதற்கான காரணம் கோசலை கேட்கும் படியாக ஒலிக்கத் தொடங்கியது.

''கஞ்சாவா விக்கிறே கஞ்சா... கழுத முண்ட! மந்திரி இருக்கற ஊருக்குள்ள இருந்துகிட்டே நீ கஞ்சா விக்கறேன்னா உனக்கு எவ்வளவு தினவு இருக்கணும்?''

கோசலை ஆவேசமானாள்.

''ஏய் உடுய்யா... யார் ஊட்டுக்கு வந்து என்ன பேசறீங்க... கஞ்சா கறுப்பா செவப்பான்னு கூட எங்களுக்கு தெரியாது. மரியாதையா எங்கம்மாவை உடுங்க...''

கோசலையின் ஆவேசம் எடுபடவில்லை.

''டேய் இவளையும் தூக்குங்குடா... விட்டா அரிச்சந்திரன் ஊட்டு பொடக்காலில பொறந்து மகாத்மா காந்தி ஊட்ல ட்யூஷன் படிச்சேன்னு கூட சொல்லுவா போல இருக்குதே...''

என்ற இன்ஸ்பெக்டர் இளங்கோவை கோசலை அனல்கக்க பார்த்தாள்.

''என்ன பாக்கே... ஏறு ஜீப்புல! ஏழு வருசம் பெரியகுளம் சப்ஜெயில்ல நீ தான் தினம் அரிசில கல்லு பொறுக்கி கஞ்சியும் காச்சப் போறவ...''

''அப்ப ஒரு முடிவோட வந்துட்டேன்னு சொல்லுங்க...''

''அப்படிக் கூட வெச்சுக்க... இப்ப என்ன? கையும் களவுமா புடிச்சிருக்கேன். அதோ வீடியோ படம் கூட எடுத்தாச்சு. கோர்ட்டுல கொண்டு போய் நிறுத்தி உள்ளார போட வேண்டியது மட்டும்தான் பாக்கி. மந்திரி வரவும் அவர்கிட்டயும் ஒரு வார்த்தை கேட்டுக்குவோம். ஏன்னா அவர் ஊர்லயே ஒருத்தி கஞ்சா வித்தான்னா அவருக்கு தானே கெட்டப்பேரு?''

- வெகு நயமாக தன் பேச்சில் மந்திரியிடமும் வந்து இனி அவர் மனது வைத்தால்தான் வாழ்க்கை என்று இன்ஸ்பெக்டர் இளங்கோ பேசவும் கோசலைக்கு எல்லா உண்மைகளும் புரிந்து விட்டது!

# 9

அந்த சப்இன்ஸ்பெக்டர் பாண்டிய மாணிக்கத்தைத் தொட்டு பேசிய நொடியே பருத்திக்கு இது அவர் திருவிளையாடல்தான் என்பது புரிந்து விட்டது. பொங்கி வந்த கண்ணீரோடு கோசலையை பார்த்தாள். அப்படியே ''கோசா... நமக்கு நாயம் கிடைக்காது புள்ள இது இந்தாளோட சதி வேலை. இவங்கல்லாம் அந்தாள் அதிகாரத்துக்கு பயந்து கோவணத்தை கூட தொவச்சி போடுவாங்க. நாம மடங்கிப் போறத தவிர வேற வழியே இல்ல புள்ள'' - என்று எடுத்த எடுப்பிலேயே பாய்ண்ட்டுக்கு வந்து விட்டாள்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த சப்இன்ஸ்பெக்டரும் ஒரு கூறிய பார்வை பார்த்தார்.

''நீ படிக்காதவளா இருந்தாலும் உனக்கு கற்பூர புத்தி அதான் நான் அய்யா பேரைச் சொன்ன உடனேயே புரிஞ்சிகிட்டே. நான் இன்னும் எஃப்ஐ.ஆர் போடல. அய்யாகிட்ட கேட்டுட்டு தான் போடணும். அய்யா உன்னை காப்பாத்தணும்னா அவர் கேக்கற இடத்தை கொடுத்துட்டு ஆகற வழியைப் பார். சென்ட்டு ரெண்டாயிரம் போவற இடத்தை உனக்காக மூவாயிரம் போட்டு நானே முடிச்சு உட்றேன். மூணு ஏக்கருக்கு ஒன்பது லட்ச ரூபா வரும். ரவுண்டா பத்துலட்சம் கூட தரச் சொல்றேன். அப்படியே இந்த கேஸையும் ஒண்ணுமில்லாம பண்ணிட்றேன். என்ன சொல்றே?''

சப்இன்ஸ்பெக்டரிடம் வியாபாரப் பேச்சு தொடங்கி விட்டது.

கோசலைக்கு கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது கோபம்.

''நீங்க போட்டுக்கற இந்த உடுப்பு நாடகத்துல நடிக்க போட்டதுங்களா? நீங்க அய்யா கிட்ட புரோக்கரா வேலை பாக்கறீங்களா?''

-என்று சற்று இடக்காகவே கேட்டு விட்டாள் கோசலை.

அடுத்த நொடியே அவள் கன்னத்தில் ஒரு அறை விழுந்து அவள் காதுக்குள்ளும் ஒரு விமானம் பறக்கத் தொடங்கியது.

''தொலச்சி புடுவேன் நாயி... என்ன பேச்சு பேசறே நீ. பிசாத்து நிலத்த வெச்சுகிட்டு பேச்சா பேசறே பேச்சு...''

- என்று எகிறவும் கவனித்துக் கொண்டிருந்த ஒரு கான்ஸ்டபிள் அருகில் வந்து காதைக் கடிக்கத் தொடங்கினார்.

''சார்...''

''என்னய்யா?''



''கொஞ்சம் இப்படி வர்றீங்களா?''

''இங்கயே சொல்லுய்யா...''

''ரெண்டு பேரும் பொம்பளைங்க...''

''இது எனக்கு தெரியாதா...?''

''அது இல்ல சார், அரெஸ்ட் பண்ணும்போது ஒரு லேடி கான்ஸ்டபிளாவது கூட இருக்கணும். ஆனா அப்படி இல்லாமலே அள்ளிகிட்டு வந்துட்டோம். இப்ப ஆறு மணிக்கு மேல நம்ம லாக்கப்புல வெச்சிருக்கவும் சட்டத்துல இடம் கிடையாது. கஞ்சா கேஸ் வேற... ஸ்பெஷல் ஆக்ட்ல வருது... இதுல அடிச்சு வெச்சு அந்த புள்ள ஏதாவது பண்ணிகிட்டா விவகாரம் பெரிய வில்லங்கத்துல போய் நிக்கும் சார்...''

''எல்லாம் தெரியும்யா... எனக்கு எல்லாத்துக்கும் அய்யா இருக்காரு. அவர் பாத்துப்பாரு...''

''அப்படி இல்ல சார்... சினிமா, பத்திரிகை, டி.வி. எல்லாம் அத்து மீறல், ஊழல்னாலே கிழிச்சு கேப்பையை நட்டுட்றாங்க. லோக்கல் மேட்டர் டெல்லிவரை நியூஸாயிடுது. படம் புடிச்சி ஒருநாளைக்கு பத்து இருவது தடவை டெலிகாஸ்ட் பண்ணும்போது பிரதம மந்திரியே டர்ராயி ஒதுங்கற மாதிரி ஆயிடுது சார். மந்திரி அய்யாவை எல்லாம் ஒரு அளவுக்கு மேல நம்பறது நமக்கு நல்லதில்ல சார்...''

''என்னய்யா... நீ எதிர்கட்சிகாரனா? அந்த ஆட்சி நடந்தப்போ டிபார்மெண்ட்ல ஜாய்ன்ட் பண்ணியா?''

சப்இன்ஸ்பெக்டர் கான்ஸ்டபிளுக்கும் அடங்கற மாதிரி தெரியவில்லை.

''சாரி சார்... இனி உங்க இஷ்டம்'' என்று அவர் ஒதுங்கும் போது அப்போதுதான் விஷயம் தெரிந்து வந்தவன் போல வீரைய்யன் வந்தான்.

''ஐய்யோ அய்யா என்னய்யா இது... எங்கக்கா ஒருபாவமும் அறியாதவங்கய்யா. அவங்கள எதுவும் பண்ணிடாதீங்கய்யா'' என்று அவனுக்கான ராகத்தையும் பாடினான்.

''நிறுத்துய்யா... உங்கக்காவுக்கு என்ன புரியணுமோ அது புரிஞ்சிடிச்சு. ஆனா உங்கக்கா மவதான் ஒரு மார்கமா பேசறா. போய் நீயாவது நல்ல புத்தி சொல்லு...'' என்றார்.

வீரைய்யனும் பருத்தி கோசலை இருவரையும் நெருங்கினான். பருத்தி அவன் நெருங்கவும் காரி உமிழ்ந்து விட்டாள்.

''யக்கா... என்ன கொழுப்பா?'' அவனும் சீறினான்.

''அது உனக்குடா. எனக்கில்லை! ஏண்டா அந்த மாஜி மந்திரிக்காக அவன் வீசப்போற எலும்புக்காக கஞ்சாவை கொண்டு வந்து வெச்சு எங்கள சிக்க வெச்சது மட்டுமில்லாம இப்ப நல்லவன் மாதிரி வந்து நிக்கறியா?''

''நா... நான் கஞ்சாவை கொண்டு வந்து வெச்சேனா?''

''பின்ன... அதுக்கு காலு முளைச்சு அதுவா நடந்து வந்துச்சா?''

''இதோ பார்... பேச்சுக்கு பேச்சுன்னு பேசிகிட்டுருந்தா பிரச்சினை தீராது. அந்த எழவெடுத்த இடத்தை வித்து காசை வாங்கிக்கற வழியை பார். இப்பவே நீட்ற இடத்துல கையெழுத்து போட்றேன்னு சொல்லு. அய்யா உங்களை விட்றுவார்...''

''அப்படியாடா விசயம்?''

''என்ன அப்படியாடா... நீங்க இப்ப வகைதொகை இல்லாம மாட்டிகிட்டிருக்கீங்க தெரியுமா?''

''அதை நீ வேற சொல்லணுமாக்கும். எங்களுக்கு தெரியாது பாரு...''

''சரி... நாசமா போங்க... உன்னை மயங்கற அளவுக்கு அடிச்சி உன்கிட்ட ரேகை எடுத்துக்க ரொம்ப நேரம் ஆகாது. பொறவு அய்யா தர இருந்த பணமும் இல்லாம போய் இடமும் போய் சீரழிய வேண்டி வரும்...''

பேச்சுப் போக்கில் வீரைய்யன் சப்இன்ஸ்பெக்டருக்கே எடுத்துக் கொடுத்தான். அது கோசலையை கொந்தளிக்கச் செய்தது.

''டேய் மாமா... இங்க நாங்க இப்படி இருக்கறது இன்னேரம் என் அத்தை மவன் மாயவனுக்கு போயிருக்கும். கஞ்சாவை இவன் கொடுத்தான்னு ஊட்ல கொண்டு வந்து வெச்ச உன் கையும் சரி, எங்கள அரெஸ்ட் பண்ணி இழுத்துகிட்டு வந்த இந்த சப்இன்ஸ்பெக்டர் கையும் சரி இரண்டு துண்டா ஆவப் போறது கம்மாக்கரை கருப்பச்சாமி மேல சத்தியம். தெரிஞ்சுக்க...'' என்று வெடித்தாள்.

மாயவன் பேரை கோசலை சொல்லவும் வீரைய்யனுக்கு சற்று அச்சமாகி விட்டது. ஆனால் அதுவே அந்த சப்இன்ஸ்பெக்டரை உசுப்பி விட்டது போலவும் ஆகிவிட்டது.

''மாயவன் வந்து என் கையை வெட்டுவானா? அடியே குட்டச் சிறுக்கி... போலீஸ்காரனை நீ என்ன போண்டாவுக்கு பொட்லம் கட்றவன்னு நினைச்சிட்டியா?



அதையும் பாக்கறேண்டி. இப்பவே உங்ககிட்ட ரேகையை எடுத்துட்டு கேஸையும்... ஃபைல் பண்றேன். இனி வெளியுலகம்கறதே உங்க வரைல கிடையாதுங்கடி'' என்று கொக்கரித்த சப்இன்ஸ்பெக்டர் இளங்கோ செல்போனை எடுத்தபடி விறுவிறுவென்று வாசல்பக்கமாய் போய் பாண்டிய மாணிக்கத்தை பிடிக்கப் பார்த்தார். ஆனால் நாட்ரீச்சபுள் என்றே வந்தது.

ச்சே...! என்று சடைத்துக் கொண்டபோது வீரைய்யன் கலக்கத்தோடு அருகில் வந்தான். ஆனால் அவனை அந்த எஸ்.ஐ.ஏரெடுத்துக்கூட பார்க்கவில்லை.

''அய்யா...''

''வீரைய்யா பேசாம போயிடு... நான் இப்ப டென்ஷன்ல இருக்கேன்''

''கொஞ்சம் விட்டுப் பிடிங்கய்யா. கோசலையை தனியா, எங்கக்காவை தனியா போட்டா, எங்கக்கா அடங்கி கையெழுத்து போட்ருவாங்க''

''அப்படிங்கறே...''

''ஆமாங்கய்யா...''

''உங்கக்காக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் இருக்குது. அதான் மந்திரி அய்யாவோட லைன் கிடைக்காம இருக்கு. லைன் மட்டும் கிடைச்சிருந்தா அவபேசுன பேச்சுக்கு நீ ரேப் கூட பண்ணிக்க நான் பாத்துக்கறேன்னு சொல்லியிருப்பாரு. சரி... இரண்டு பேரையும் பிரிச்சு போட்றேன். அப்படியே அந்த மாயவன் என்ன பண்றான்னு பாக்கறேன்...''

''எதுக்கும் எச்சரிக்கையா இருங்கய்யா...''

''என்னய்யா நீ பயந்துட்ட மாதிரி தெரியுது...''

''மாயவன் ரொம்ப சூதான மானவன்யா நேருக்கு நேர்னு கைச் சண்டை போட்டா உருண்டு பிரண்டு சமாளிக்கலாம். ஆனா அவன் பச்சைப் பாம்பை பிடிச்சுகிட்டு வந்து நம்ம கண்ணயே புடுங்க வைப்பான்யா. கொசப்பட்டில ஒரு புள்ளைய ஒருத்தன் கெடுத்துட்டான்னு அறுத்தே புட்டான்யா...''

வீரைய்யனின் எச்சரிக்கை இளங்கோவை கொஞ்சம் யோசிக்க வைத்தது. செல்போனை பாக்கெட்டில் போட்டபடி விறுவிறுவென்று திரும்பி வந்த அவர் லாக்கப்பில் இருந்த ஒருவனை வெளியில் எடுத்து வந்து கோசலையை காட்டி ''இவகூட விபச்சாரம் பண்ணேன்னு கோர்ட்ல சொன்னா உன்னை கொலை

கேஸ்ல இருந்து விடுவிச்சிட்றேன். என்ன சொல்றே?'' என்று கேட்கவும் அவனும் தலையை ஆட்டினான்.

அதைக்கேட்ட பருத்தி வெலவெலத்து போய் ''டேய் போலீஸ்காரா... போதுண்டா! அநியாயம் பண்ணாதே. எங்கடா பத்ரம்... கொண்டாடா கையெழுத்து போட்றேன்...'' என்று சட்டென்று முடிவு செய்து அதை உரத்த குரலிலும் கூறினாள்.

ஒரு வினாடி ஸ்டேஷன் மொத்தமும் உறைந்து போனது போல ஒரு அமைதி! மேஜை டிராயரிலேயே பத்திரம் தயாராக இருந்தது.

பருத்தி அதில் கண்ணீரோடு கையொப்பமிட்டாள். ஆனால் கோசலையிடம் ரத்தச்சிவப்பாகி விட்டிருந்தது கண்கள்.

''புறப்படு... உன் பணம் வீடு தேடி வரும்...'' என்ற இளங்கோவிடம் ''அதை நீயே எடுத்துக்க. அந்த மந்திரிக்கு எங்க இடத்தை நாங்க பிச்சைபோட்டதா இருக்கட்டும்'' என்றாள் பருத்தி. செருப்பாலடித்தது போல் இருந்தது சப்இன்ஸ்பெக்டருக்கு.

''அது கிடக்குதுங்கய்யா... அய்யாகிட்ட நான் பணத்தை கேட்டு வாங்கிக்கறேன்'' என்றான் வீரைய்யன்!

இடம் பறிபோன விஷயம் மாயவன் காதுக்கு வந்தபோது மாயவனுக்குள் ஓடும் ரத்தம் அவ்வளவுமே ரசாயன திரவமாக மாறிவிட்டது போல் இருந்தது.

கூடவே அவன் சகாக்கள்!

''மாயவா... அந்த எஸ்.ஐ.கையையும், அந்த வீரைய்யன் கையையும் வாங்குனாதான் அந்த மாஜி மந்திரிக்கு புத்தி வரும்'' என்றான் உளியன்.

''இவனுங்கல்லாம் அம்புங்க... ஏவிவிட்ட மந்திரியை கதற உடணும். அப்பதான் நாம ஊருக்கு நல்லது செஞ்சதா இருக்கும்'' என்றான் கடாரன்.

மாயவனிடமும் அதே எண்ணம்தான். அப்போதுதான் ''மண்ணும் பொண்ணும் ஒண்ணும்பாங்க... அதுல மண்ணைப் பறிச்ச அந்த மந்திரி பொண்ணை பறிச்சு அவனை நம்ம வழிக்கு கொண்டுகிட்டு வரணும்'' என்ற பெருமாளின் பேச்சு மாயவனுக்குள் ஒரு பெரும் தீயாக பற்றி எரிய ஆரம்பித்தது.

''மந்திரி பொண்ண நாளைக்கே தூக்கறோம்...'' என்றான் உறுதியான குரலில்!



## 10

**பா**ண்டிய மாணிக்கத்தின் பங்களா! அவர் டெல்லியில் இருப்பதால் பங்களா சற்று சோபையிழந்து வெறிச்சோடிக்கிடந்தது. தோட்டத்துக் களைச் செடிகளை பார்த்துப் பார்த்து வெட்டிக் கொண்டிருந்தான் முனியசாமி என்கிற தோட்டக்காரன். இது ஒரு பக்கம்... இன்னொரு பக்கத்தில்-

-பாண்டிய மாணிக்கத்தின் அந்தரங்க வேலைக் காரனான சுப்பையா அதிசயமாக சட்டை போட்டு கீழே வேட்டியும் கட்டியிருந்தான். அவன் தோள்களில் தோட்டத்தில் தார் போட்டிருந்த பேயன் வாழையின் பருத்த தார் ஒன்று குழந்தை ஒன்று சாய்ந்திருப்பது போல் சாய்ந்திருந்தது. வாழைத்தார் கரைபட்டு விடக்கூடாது என்பதற்காக ஒரு குற்றாலத்துண்டை மேலே போட்டு அதன்மேல் வாழைத்தாரை சாய்த்து எடுத்தபடி வந்து கொண்டிருந்தான் சுப்பையா. தற்செயலாக முனியசாமியும் அதை பெரும் ஏக்கத்தோடு பார்த்தான். அவன் வளர்த்த வாழை மரத்து தார்... பாண்டிய மாணிக்கம் ஊரில் இல்லாததை பயன்படுத்தி சுப்பையா ஆட்டையப் போட்டுவிட்டான். சுப்பையாவும் முனியசாமியின் கொத்தும் விழிகளைப் பார்த்தான்.

''என்னடா... எதுக்கு இப்படி பாக்கறே... கண்ணா முழியைத் தோண்டிப் பிடுவேன்...''

''நீ தோண்ட மாட்டே... உரம் போட்டு தண்ணி விட்டு வளர்த்தது நான். நல்லா திரண்டு வரவும் வெட்டி எடுத்து கிட்டு போவுறியோ? அதுவும் ஐயா ஊர்ல இல்லாத நேரத்துல?''

மண்வெட்டியும் கையுமாக முனியசாமி கேட்ட சமயம் எதற்கோ தோட்டத்துப் பக்கம் வந்த செண்பகக் குழல்வாய்மொழி காதுகளிலும் அது விழுந்தது. அவள் வந்து நிற்கவும் இருவரிடமும் ஒரு தேக்கம். சுப்பையா வாழைத்தாரை சுமக்க மாட்டாமல் இறக்கி வைத்தான்.

''என்ன சுப்பையா... வாழத்தாரோட எங்க கிளம்பிட்டே...''

''அப்பத்தாட்ட சொல்லிட்டுதாம்மா எடுத்துகிட்டு போறேன்...''

''நான் என்ன கேட்டேன் நீ என்ன சொல்லிகிட்டு இருக்கே?''

''அது வந்தும்மா... இந்த வாழத்தாரோட சின்னமனூர்ல இருக்கற எங்க அக்கா வீட்டுக்கு போய்கிட்டுருக்கேன்மா.

அக்காவை பாத்து ரொம்ப காலமாச்சு... ஐயா டெல்லி போயிருக்கற இந்த தருணத்துல ஒரு எட்டு எட்டி பாத்துட்டு வந்துடலாம்னு...''

''அதுசரி... இந்த தோட்டத்தை பாத்துக்கறது யாரு?''

''வேற யாரும்மா... இந்த நாயி தான்!'' -சுப்பையா முனியசாமியை ஒருமாதிரி கோணல் முகத்தோடு பார்த்துச் சொன்னான்.

''நாயா... என்ன பேசறே நீ...? முனியசாமி இந்த வீட்டு கார்டனர். உன்னை விடவும் வயசுலயும் மூத்தவர். அதுக்காகவது மரியாதை கொடுக்கணும்னு உனக்கு தோண வேண்டாம்?''

-செண்பகத்திடம் கூர்மையான ஒரு கோபம் வெளிப்பட்டது. முனியசாமி முகத்தில் ஒரு பிரகாசமும் வந்து தொற்றிக் கொண்டது. ஆனால் சுப்பையாவிடம் கதவிடுக்கில் வால் மாட்டிக் கொண்ட ஒரு எலியின் வேதனை. மெட்டி மெட்டி நின்றான்.

''இப்படி எல்லாம் இனி பேசக்கூடாது... அண்ணே அதுல பாதிய நீங்க எடுத்துகிட்டு நீங்களும் உங்க வீட்டுல போய் கொடுங்க. மிச்சத்த சுப்பையா எடுத்துக்கட்டும்...''

செண்பகத்தின் பளிச்சென்ற நியாயத்தை வீட்டு வேலைக்காரியான ராமாயியும் ரசித்தபடியே வந்தாள்.

''அம்மா உள்ள வாங்கம்மா... அப்பத்தா உங்களுக்கு எண்ணெய் வெச்சு விடச் சொன்னாங்க...'' என்றாள்.

''யூ மீன் ஆயில் பாத்?''

''எண்ணக் குளியலும்மா... இன்னிக்கு செவ்வாக்கிழமை. செவ்வா வெள்ளி பொம்பளப் பிள்ளைங்க எண்ண முழுக்கு போட்றது உடம்புக்கு ரொம்ப நல்லதும்மா...''

''ஐடோன்ட் திங்க் ஸோ... நான் ஹாஸ்டல்ல இருந்தப்ப ஒரு தடவை கூட குளிச்சதில்ல ராமாயி...''

''அதாம்மா இன்னும் பொன்னா இருக்க வேண்டிய உங்க தோலு கொஞ்சம் மங்கி இருக்குது. நீங்க மட்டும் எண்ணக் குளியல் போட்டுப் பாருங்க. தூக்கமெல்லாமும் எப்படி வரும் தெரியுமா?''

''ரியலி?''

''என்னம்மா அப்படி கேட்டுட்டீங்க... எண்ணையால வளர்றது தானம்மா உடம்பு?''

''ஓ... நோ... நீ தப்பா சொல்றே... ஆயில் அய்ட்டம்னாலே கொலஸ்ட்ரால்னு அதை பாத்து பயப்படாதவங்களே இல்லை.



-செண்பகம் தோளை குலுக்கிக் கொண்டு ஸ்டைலாக சொன்ன விதத்தை எதிரில் வந்த அவள் அப்பத்தாள் பழனியும்மாளும் கேட்டுச் சிரித்தாள்.

''ஏன் அப்பத்தா சிரிக்கறே?''

''இப்படி விவரம் புரியாம பேசற நீங்கள்ளாம் என்னத்த படிச்சீங்கடி?''

''என்ன... ஆயில்ல கொலஸ்ட்ரால் இருக்குன்னு நான் சொன்னது தப்பா... அப்பத்தா உனக்கு ஒரு விசயம் தெரியுமா? இன்னிக்கு இந்த உலகத்தோட முதல் உடம்புப் பிரச்சினையே மொபிசிடி'ங்கற குண்டாகிப் போற பிரச்னைதான். வாக்கிங் போனா குறையுமா? நீச்சல் அடிச்சா குறையுமான்னு சிட்டியே போராடிகிட்டு இருக்கறது அவங்க உடம்போட தான்...''

செண்பகம் பேசிக் கொண்டு நிற்க ராமாயி அவள் கூந்தலை பிரித்து விட்டு மண்சட்டியில் காய்ச்சியிருந்த நல்லெண்ணையை விரல்கள் தோய எடுத்து உச்சந்தலையில் வைக்கத் தொடங்கினாள்.

''ஐய்யோ ராமாயி... நான் போய் டிரெஸ் மாத்திகிட்டு வரேன். இப்படியே வெச்சா என்ன அர்த்தம்?''

''அப்ப சரிங்கம்மா... போய் பாவாடையை மாராப்புக்கு மேல ஏத்தி கட்டிக்கிட்டு வாங்க''

''பாவாடையா... எனக்கு இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் ஆஃப் பேண்ட்தான்... நீயும் வா...''

-செண்பகக் குழல்வாய்மொழி உள்ளே ஓடினாள். பழனியம்மாளுக்கு அவளைப் பார்க்க பெரும் பூரிப்பாக இருந்தது. அப்போது பழனியம்மாளின் உடன் பிறந்த சகோதரனும் ரைஸ்மில் அதிபருமான தங்கராஜ் உள்நுழைந்தபடி இருந்தார்.

அண்ணனைப் பாக்கவும் பழனியம்மாளிடம் பெரும் மகிழ்ச்சி.

''வாண்ணே வா... வா... என்ன இது திடுதிப்புன்னு?''

''பாண்டி இல்லையா பழனி...?''

''அவன் டெல்லிக்குல்ல போயிருக்கான். ஏண்ணே உனக்கு சேதி தெரியாதா? உக்காருண்ணே...''

-அவரும் உட்கார்ந்தார். முகத்தில் தீவிரமாய் ஏதோ சிந்தனை.

''என்னண்ணே குடிக்கறே. இளநீ வெட்டி வரச் சொல்லவா?''

''வேண்டாம் பழனி. வழிலதான் கம்மாக்கரைல ஒரு சொம்பு பதனி குடிச்சேன். நெஞ்ச முட்டி கிட்டு இருக்கு. ஆமா... உன் பேத்தி வந்துருக்காளாமுல்ல?

''ஆமண்ணே... இப்பதான் உள்ளப் போனா? இன்னிக்கு செவ்வாக்கிழமை எண்ண முழுக்கு போடச் சொன்னா கொலஸ்ட்ராலு-கொழுப்புன்னு ஏதோ பேசிகிட்டிருக்கா என்னமா வாயாட்றா தெரியுமா?''

-பழனியம்மாள் விமர்சிப்பது போல பெருமிதப்பட்டுக் கொண்டாள்.

''அங்க என் பேரன் மட்டும் என்ன? வாயத்திறந்தா இங்கிலீசுதான்! டாக்டருக்கு படிச்சபுள்ள இன்னும் கவுச்சையா நம்ம பேச்ச பேசிகிட்டிருந்தா எப்படி? அதனால நானும் கண்டுக்கறதில்ல... என் பேரன் என்னையும் இங்கிலீசு கத்துக்க சொல்லியிருக்கான். இங்கிலீசுல உனக்கும் எனக்குமான உறவுக்கு என்ன பேர் தெரியுமா?''

''என்னண்ணே?''

''யு ஆர் மை யங்கர் சிஸ்டர்''

-தங்கராஜ் தன் நரை மீசையை நீவிக் கொண்டே சொன்னதை கேட்டு பழனியம்மாளிடம் மேலும் பூரிப்பு.

''ஐய்யோ அண்ணே நல்லாவே பேசறேண்ணே...''

''அத்த விடு... உன்கிட்ட நான் இப்ப ஒருமுக்கியமான விசயம் பேசிட்டு போக வந்துருக்கேன்...''

''சொல்லுண்ணே... ஒரு நிமிசம்ணே... ஏ... மலர்க்கொடி எவடி அவ சமையக்கட்டுக்குள்ள...?''

''இதோ வந்துட்டேன் அப்பத்தா...''

-மலர்க்கொடி என்னும் பெயரில் கருப்பாய் ஒரு காட்டுக்கொடி போன்றவள் சேலைத்தலைப்பை துடைத்தபடி முன்னால் வந்தாள்.

''எங்கண்ணன் வந்துருக்குது... இன்னிக்கு சமையல் பிரமாதமா இருக்கணும். தோட்டத்துல விடைக்கோழி இருக்குல்ல?''

''இருக்கும்மா?''

''அத்த அடிச்சு ஒரு பாதில கொழம்பும், மறுபாதிய பொறிச்சும் வெச்சுரு. அப்படியே நம்ம தோட்டத்து பீர்க்கங்காய்ல பால் கூட்டும் பண்ணிப்புடுடி...''



''சரிங்க அப்பத்தா...''

அவள் விலக தங்கராஜ் பழனியம்மாளை கண்களில் பாசத்தோடு பார்த்தவராக...

''இவ என்ன உன்னை அப்பத்தாங்கறா...?'' என்றும் கேட்டார்.

''இந்த ஊட்டுல எல்லாருக்கும் நான் அப்பத்தாதான். செம்பகம் கூப்பிட்றத பாத்துட்டு இதுங்களும் கூப்புடுதுங்க. நல்லாதான் இருக்குன்னு நானும் விட்டுட்டேன். ஏண்ணே?''

''அப்படி இல்ல பழனி... உறவுங்கறது பரிசு மாதிரி. அதை போற வர்றவங்கல்லாம் மலிவுபடுத்திடக்கூடாது. உன்னையெல்லாம் நாச்சியாரம்மான்னு நம்ப பரம்பரைப் பேரோட கூப்ட்டாதானே கேக்க நல்லாருக்கும்?''

''விடுண்ணே... காடு வாவாங்குது... இதுல நான் நாச்சியாரா இருந்து எந்த மண்ணை கட்டி ஆளப்போறேன்...? முக்கியமான விசயம்னியே அத்த சொல்லு...''

''சொல்றேன்... ஆமா எங்க உன்பேத்தி இன்னும் கண்ணுலயே படலை?''

''எண்ணெய் வெச்சு குளிக்கறான்னேன்ல... வருவா! ஆமா ஏன் அவ மேலயே கண்ணா இருக்கே?''

''என்ன இருந்தாலும் என் ஊட்டுக்கு மருமவளா வரப்போறவ இல்ல?''

''அண்ணே!''

''என்ன அண்ணே... உன் மவன் உன்கிட்ட அதோட கல்யாணப் பேச்சையே எடுக்கலியாக்கும்?''

''அது இந்த பங்களாக்கு வந்தே இப்பதானே ரெண்டு நாளாவுது?''

''படிச்சு முடிச்சிடுச்சுல்ல?''

''பொறவு?''

''அப்ப கால்கட்டு போட்டுட்லாம்ல?''

''தாராளமா... ஆமா உன் மவனுக்கும் பேரனுக்கும் ஆட்சேபணையில்லையே...?''

''என் மவன்தான் ஆதிகாலத்துல இருந்தே செண்பகம்தான் என் மருமகள்னு சொல்லிகிட்டிருக்கானே... ஆனா என் பேரன்தான்...''

தங்கராஜ் ஒருமாதிரி இழுத்தார். அதில் அழுத்தமாய் ஒரு மர்மம்! அப்போது பங்களா முகப்பில் ஒரு தென்னை மரமேறி, கூர்மையான அரிவாளோடும், இடுப்பில் மட்டைக் கூடையோடும் மார்பு மேல் பெருக்கல் குறிபோல அணைப்பு எனப்படும் மரமேறும் போது பயன்படும் வட்ட வடிவிலான தென்னை நாரிலான பாகம் இடக்க பங்களா முகப்பில் நின்று பங்களாவை சுற்றி எழும்பி நிற்கும் தென்னை மரங்களை பார்த்தான்.

உற்றுப் பார்த்த பிறகே தெரிந்தது அவன் மாயவனின் சகாக்களில் ஒருவனான கடாரன் என்று...

செண்பகக் குழல்வாய்மொழியை தூக்கும் திட்டத்தின் முதல் கட்ட வேஷத்தில் கடாரனை அடையாளம் காண்பதும் சிரமம். முகத்தில் செயற்கையாக பருவெல்லாம் முளைத்திருந்தது.

அவனைப் பார்த்து விட்டு வந்த முனியசாமியிடம்,

''மரமெல்லாம் மண்டிக் கிடக்கே சுத்தம் செய்யவா?'' என்று கேட்டான். முனியசாமியோ அலட்சியமாக,

''இங்க நான் இருக்கறதே அதுக்குதான் நீ கிளம்பு'' என்றான்.

''அது எனக்கும் தெரியும். ஆனா மரத்து மேலே கருநாகம் பதுங்கியிருக்குதே கண்ணுல படலையா?'' -என்று கடாரன் கேட்கவும் முனியசாமியிடம் திகைப்பு!

உள்ளே தங்கராஜூம் ''தன் பேரன் விஜய்குமார் உடன் படிக்கும் ஒரு கிறித்தவ பெண்ணை காதலிப்பதாக சொல்லியதில் பழனியம்மாளிடமும் திகைப்பு!

## 11

மரத்திலே கருநாகம் என்று கடாரன் சொன்ன பதில் முனியசாமியை உலுக்கி விட்டது. லேசான உதறலும் அவனிடம் ஏற்பட்டது.

''என்னா நம்ப முடியலியா... இந்த பங்களாவுல மரத்துல மட்டுமில்ல இந்த தோட்டத்துலயே நிறைய நாகங்கள் இருக்கு...'' என்று பீதியை தொடர்ந்தான் கடாரன்.

அப்போது எதேச்சையாக வெளியில் வந்த பழனியம்மாள் இருவரையும் கவனித்தாள். கடாரன் அதுதான் சமயம் என்பது போல ஒரு கும்பிடு போட்டான் பலமாக.

''யாருவே நீ?''



''மரமேறிங்க ராணிம்மா...''

''ராணியம்மாவா... நானா?'' -சற்று பூரிப்போடு சிரித்தாள் பழனியம்மாள்.

''இல்லீங்களா பின்னே... ஊர்லயே பெரிய குடும்பம். ஐயா வேற இந்த நாட்டுக்கே மந்திரி...''

''இப்ப எங்க மந்திரியா இருக்கான். அதான் எந்திரின்னுட்டாங்களே...''

''ஆயிருவாருங்க... கூடிய சீக்கிரம் ஆயிருவாருங்க''

''நீ என்ன ஜோசியக்காரன்ா, இல்ல சாமியாரா? ஆயிருவாங்கறே... அவனும் தலையால தண்ணி குடிச்சு கிட்டிருக்கான். பாப்பம்...''

''ராணிம்மா நான் மரமேறிதான்... ஆனா ஜக்கம்மா அருளால முகம் பார்த்தே குறி சொல்வேங்க... அப்படி நான் சொல்லி இதுவரை எதுவும் நடக்காமலும் இருந்ததில்லீங்க...''

எனும்போதே பழனியம்மாளின் அண்ணன் தங்கராஜூம் வெளிப்பக்கம் வந்தார்.

திறந்த மார்பும் கச்சவேட்டியும் கையில் அரிவாளுமாய் நின்றபடி இருக்கும் கடாரனிடம் பழனியம்மாள் பேசிக் கொண்டிருப்பதை கேட்டு அருகில் சென்றார்.

''என்ன பழனி... யாரு இவன்... என்னா தர்க்கம்?''

''தர்க்கமில்லண்ணே... மரமேறி இவன். ஜோசியமும் சொல்லுவானாம்! உன் மருமவனும் திரும்ப மந்திரி ஆயிடுவானாம்''

''அப்படியா சங்கதி... ஏலேய்... தேங்கா பறிக்க வந்த நீ சோசியம் சொல்லுறியா. இன்னும் என்னல்லாம் கத்து வெச்சிருக்கே?''

''நல்லா பாம்பும் புடிப்பேனுங்க...!''

''ஒண்ணுக் கொண்ணு சம்பந்தமில்லாமலே சொல்றி யேப்பு?''

-அவனுடன் தங்கராஜூம் பழனியம்மாளும் சகஜமாக பேச ஆரம்பித்து விட்டது தோட்டக்காரன் முனியசாமியை உறுத்தியது.

''ஐயா... இவன் பாட்டும் இஷ்டத்துக்கும் கதை உட்டுகிட்டு இருக்கான்யா. தென்ன மரத்துல கருநாகம்னு என்கிட்ட ஆரம்பிச்சவன் அம்மச்சிய பாக்கவும் ராணியம்மாங்கறான்.

உங்களாண்ட பாம்பு பிடிப்பேங்கறான். விவகாரமான ஆளா இருக்கான்யா...'' என்று வெடித்தான்.

''என்னது தென்னமரத்துல கருநாகமா...?'' -என்று முனியசாமியின் புலம்பலை காதிலேயே வாங்காமல் எதிர்கேள்வி கேட்டார் தங்கராஜ்.

''ஆமாங்க... நான் வரைல மரத்துக்கு மேல கழுகு வட்டம் கட்டுறுச்சுங்க... தென்னமரத்துல கழுகு வட்டம் கட்டுனா அந்த மரத்துல பாம்பு இருக்குதுன்னு அர்த்தம்... கருநாகத்தால மட்டும்தான் தென்னமர மேறவும் முடியும்''

அவன் பதிலில் அழுத்தமான நியாயங்கள் இருப்பதை உணர்ந்த தங்கராஜின் முகத்தில் சலன ரேகைகள்!

''ஐயா... நம்ம தோட்டத்துல ஒரு புழு பூச்சிகூட கிடையாதுங்க. நான் தினம் மருந்து தெளிச்சு சுத்தபத்தமா இருக்கறவன் இவன் பேச்சை நம்பாதீங்க.

-முனியசாமி திரும்ப அலறினான்.

''ஏய்... பொத்திகிட்டு இரு. இப்ப நான் உன் தோட்டத்துல ஒண்ணுக்கு நாலு பாம்புகள புடிச்சிட்டா...''

''என்னா சவால் உட்றியா...?''

''வெச்சுக்க... அப்படியே வெச்சுக்க...''

-அவர்கள் பேச்சு சூடுபிடிக்கவும் செண்பகக்குழல்வாய் மொழியும் வெளியில் வந்தாள். அழகான சின்னமீடியம் டிஷர்ட்டும் அணிந்து பார்க்க வெகு கவர்ச்சியாகவும் தெரிந்தாள். கூந்தலை பின்பக்கமாய் ஒரு கிளிப்பில் அடக்கியிருந்தாள். அந்த காட்சியே கடாரனை ஒரு கலக்கு கலக்கி விட்டிருந்தது. அவளை பார்த்தபடியே விட்ட சவாலை நிறைவேற்ற தோட்டத்துக்குள் இறங்கிவிட்டான் கடாரன்.

கையில் மகுடி இல்லாமல் அதைக் கொண்டு இசைக்காமலே மூக்கை வாசம் பிடிப்பது போல உணுப்பிக் கொண்டு தோட்டத்து செடிகளை நோட்டம் போட்டான். சில இடங்களில் செடிகளுக்குள் முகத்தை விட்டும் பார்த்தான். ஒரு குண்டு மல்லிச்செடி அடர்வாக வளர்ந்திருக்க அதன் அடிபாகத்தில் ஜிலேபிபோல் சுருண்டு படுத்திருந்தது ஒரு நாகம். அதை லாவகமாக பிடித்து தூக்கி வெளியில் போட்டான்.

அதைப் பார்த்தவர்களிடமும் அதிர்ச்சி.



குறிப்பாக முனியசாமியை தலையில் யாரோ கொத்தியது போல இருந்தது.

அடுத்தடுத்து நான்கு பாம்புகள். ஒன்று மூன்று அடி... இன்னொன்று ஆறு அடி... ஒரு சாக்கை கொண்டு வரச்சொல்லி அதில் அவைகளை போட்டு சாக்கின் வாயையும் கட்டினான்.

அடுத்து அவன் பார்த்தது முனியசாமியைத்தான்!

முனியசாமி கிணற்றில் விழுந்தவன் போல வெளிறிப் போயிருந்தான்.

தங்கராஜ் ''சபாஷ்டா மரமேறி... நீ பெரிய ஜித்தண்டா...'' என்றார். செண்பகக்குழல்வாய் மொழி இரு கன்னங்களிலும் கைகளை வைத்துக் கொண்டு பாம்புகளைப் பார்த்த அச்சத்தில் இருந்தாள். அவள் அப்படி இருந்த கோலம் இருகைகள் ஒரு முழுநிலவை ஏந்திப் பிடித்து கொண்டிருப்பது போலவும் இருந்தது.

''மரத்துமேல ஏறி அந்த கருநாகத்தையும் பிடிச்சுடு...'' என்றார் தங்கராஜ். கடாரன் படுவேகமாய் தாவி ஏறினான். மேலிருந்தபடியே மொத்த பங்களாவை பார்த்தான். சுற்றுப்புறத்தையும் பார்த்தான். பின் பக்கத்தில் குளம். குளத்தை ஒட்டிய தோட்டம், அங்கே ஒரு மகிழமரம். அதனடியில் ஒரு வெள்ளைக்குதிரை என்று பாண்டிய மாணிக்கத்தினுடைய டாப்வியூ அப்படியே அவனுக்குள் பதிவாகி விட்டது. இந்த பாம்புகள் எல்லாம் முதல் நாள் இரவில் அவன் கொண்டு வந்துவிட்டவை. இரையை விழுங்கிய பாம்புகளை புதர்களில் விடும்போது பெரும்பாலும் அங்கிருந்து எங்கும் போகாது. ஒருநாள் முழுக்க அப்படியே மதமதவென்று கிடக்கும்.

மரத்தின்மேல் வீசி எரிந்திருந்த கருநாகத்தை நிஜமாலுமே கழுகு கொண்டு போயிருந்தது. வெறும்கையுடன் கீழிறங்கியவன் ''கழுகு தூக்கிட்டு போயிடுச்சாட்டம் இருக்கு'' என்றான்.

''எலேய்... நீ இம்புட்டு செஞ்சதே எங்களுக்கு சுருக்குன்னு இருக்கு. ஜோசியமும் தெரியும்னியே அதுக்கு வா...'' என்று பழனியம்மாள் அவனை கலைத்தாள். அப்படியே செண்பகக் குழல்வாய்மொழியை காட்டி ''இவளுக்கு ஒரு கல்யாணம் நடந்து அதை கண்ணார பாக்கணும்கறது என் ஆசை எப்ப நடக்கும்னு சொல்ல முடியுமா?'' என்று கேட்டாள்.

கடாரனும் அவள் முகத்தை அழுத்தமாய் பார்த்தான். பின் சிரித்தான்.

''என்னலே சிரிக்கே?''

''சிரிக்காம... குலதெய்வத்தோட கோவம் தெரியுதே?''

''அப்படியா?''

''பொறவு... உங்க குலதெய்வம் எது?''

''வண்டிச்சோலை கண்ணாரம்மன்...''

''ஓ... கூமாச்சி மலைக்கு போற வழில தெக்கால பனங்காட்டுக்குள்ள இருக்கற கண்ணாரம்மனா?''

''உனக்கு எங்க குலதெய்வம் கோவில் இருக்கற இடம் கூட தெரிஞ்சிருக்குதே...''

''முகத்தை பாக்கைல ஜக்கமா அருளால் மனசுக்குள்ள ஓடுது. நான் எங்க சொல்றேன். அவ இருந்து சொல்றா...''

''அப்ப குலதெய்வத்தை பாத்து பொங்க வெச்சு கும்புட்டா அவகோபம் சரியாயிடுமா?''

''ஆமா... மொதல்ல அதை செய்யிங்க... அப்பால இந்த ஊட்டைச்சுத்தி ஏன் பாம்புங்க சுத்துது தெரியுமா?''

''ஏன்?''

''அது சம்மந்தமான ஏதோ ஒண்ணு இந்த ஊட்டுல இருக்கு''

''பாம்பு சம்மந்தமாவா?'' தங்கராஜ் முகம் சுளித்தார். ஆனால் பழனியம்மாளுக்கு சட்டென்று முகம் பரபரப்பானது. அந்த நாகமாணிக்கம் நினைவுக்கு வந்தது.

''நீ சொல்றது வாஸ்தவம் தான்... யார்கிட்டயும் இல்லாத நாகமாணிக்கம் என்மகன்கிட்ட இருக்குல்ல?'' என்று கேட்டாள்.

''அதை மறைவா வெச்சுருந்தாலே இப்படிதான் சர்பங்க வீட்டை தேடி வந்துடும். அதை பால்ல போட்டு பூசை அறைல ஒரு மண்டலம் வெச்சா தோஷம் போயி வீட்லயும் நல்ல காரியம் நடக்கும். ஐயாவும் திரும்ப மந்திரியாயிடுவாரு'' என்றான்.

தங்கராஜும், பழனியம்மாளும் அதைக் கேட்டு அப்படியே பரவசத்தின் உச்சிக்கே சென்றுவிட்டனர்.

''எம்மவன் இப்ப டெல்லில இருக்கான். வார நாலு நாள் ஆவும். வரட்டும். அவனாண்ட சொல்லி கஜானா பொட்டிக் குள்ளார இருக்கறதை எடுத்து பால்ல போட்டு பூசைலயும் வைக்கறேன்...'' என்றாள் பழனியம்மாள்.



''நாள கடத்தாதீங்க... வேகமா செய்யுங்க. அவர் வந்து செய்யறதுக்குள்ள காளிங்கன் பாம்பு ஊட்டுக்குள்ள பூந்தாக்கா ஒரு உசுரை வாங்காம போவாது...''

''என்னாது காளிங்கன் பாம்பா?''

''ஆமாங்க... பன்னெண்டு வருசமா உசுரோட ஒரு பாம்பு இருந்துட்டாலே அதை நாங்க காளிங்கம் பாம்பும்போம். அதுக்கு மோப்ப சக்தி அதிகம். நாகரத்னமுள்ள ஊடுங்கள அது தேடிகிட்டு வந்து பதுங்குனா ஆபத்து. சொல்றத சொல்லிட்டேன். அப்புறம் உங்கபாடு.

அப்பால... கண்ணாரம்மனையும் கும்புடத் தவறிடாதீங்க. வார வெள்ளிக்கிழமை உச்சி வேளைல மூணே மூணு பொம்பளங்க தலமேல அரிசியும், வெல்லமும் வெச்சு எடுத்துகிட்டு போய் குளிச்சு முழுகி சுத்தபத்தமா பொங்க வெச்சு கோவிலையும் 12 சுத்து வரணும். மூணு பேர்னா மூணு பேர்தான் போவணும் கூடவும் கூடாது, குறையவும் கூடாது. இதெல்லாமே இந்த குடும்பத்துக்கு நல்லது. சொல்லரத சொல்லிட்டேன். கேக்கறதும் கேக்காததும் உங்க பாடு... நான் கிளம்பறேன்...''

-கடாரன் புறப்பட காலெடுத்தான். தங்கராஜ் தடுத்து ''இரு அப்பு... நல்லவிசயமா சொல்லியிருக்கே ஒரு வா சாப்ட்டுப் போ...'' என்றார்.

''நல்லது நடக்க வேண்டிய ஊடு... நடக்கறதுக்கு முந்தி ஜோசியம் சொன்னவங்க கை நனைக்கக்கூடாது... அதான் எங்க வழக்கம்'' என்று ஒரு பதிலைக் கூறிவிட்டு நடந்தான்.

''சரி... இந்தா இந்த காணிக்கையையாவது வாங்கிக்க...'' என்று ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை நீட்டினார்.

வாங்கிக் கொண்டான்.

தோளில் பாம்புச்சாக்கையும் போட்டுக் கொண்டான். நடக்க ஆரம்பித்தான். தோட்டக்காரன் முனியசாமிக்கு எல்லாமே கனவுபோல இருந்தது.

காவலுக்கு இருந்த போலீஸ்காரர் மட்டும் கடாரனை நிறுத்தி ஊன்றி ஊன்றி பார்த்தார்.

''உன்னையை நான் எங்கியோ பாத்துருக்கேன்யா...'' என்றார்.

''பொழப்ப பாக்க உடுசாமி...'' என்று விலகினான்.

எல்லா ஸ்டேஷன்களிலும் இருக்கும் அவன் புகைப்படம் தான் ஞாபகத்திற்கு வந்தது.

''என்னதான் வேஷம் கட்டுனாலும் கண்ணு முழிய வெச்சே சந்தேகப்பட்டுட்றானுங்க...'' என்று முணு முணுத்துக் கொண்டே வெகுதூரம் போய் செல்போனில் மாயவனை பிடித்தான்.

''மாயவா... வந்த வேலையை சூதானமா முடிச்சுட்டேன். பாண்டியமாணிக்கம் மவளும் ஷோக்கா இருக்கா... வெள்ளிக்கிழமை பனங்காட்டு கண்ணாரம்மன் கோவிலுக்கு அவ வரப்போறது நிச்சயம். அந்த நாகமாணிக்கமும் கஜானாவை உட்டு பூசை ரூமுக்கு வந்துடும். கோவில்ல மவளை நீ தூக்கிடு. ஊட்ல மாணிக்கத்தை நான் தூக்கறேன். வெள்ளிக்கிழமை மதியம் பாண்டியமாணிக்கம் தலைல இடி உழுவணும். அது அவன் டெல்லியில இருந்தாலும் சரி. அதுக்கு அங்கிட்டு இருந்தாலும் சரி...''

-கடாரனின் குரலில் ஒரு மிகுந்த காட்டம்!

## 12

கடாரன் பேசிவிட்டுப் போய்விட்டான்.

ஆனால் ஒரு குறி சொல்லி போல அவன் பழனியம்மாளிடமும், தங்கராஜிடமும் சொல்லியிருந்த விஷயங்கள் அவர்களுக்குள் ஒரு பெரும் தீயை மூட்டியிருந்தன.

செண்பகக்குழல்வாய்மொழி கடாரன் பேச்சை யெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல் தனது லேப்டாப்பை திறந்து கொண்டு அலாஸ்காவில் இருக்கும் அவளது பாய்ஃப்ரெண்ட் ஒருவனுடன் சாட் செய்யத் தொடங்கி விட்டிருந்தாள்.

தங்கராஜும் பழனியம்மாளும் மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்தனர்.

''ஏண்ணே பாண்டிக்கு நீயே போன் போட்டு பேசேன்... அவன் என்ன சொல்றான்னு கேட்போம்...''

''அப்ப இருந்து முயற்சி செய்துகிட்டே தான் இருக்கேன் பழனி. டெல்லி என்ன இங்க பக்கத்தாலையா இருக்குது... இந்த செல்போன் பொட்டியும் சமயத்துல கழுத்தறுக்கும். வாயில என்னத்தையோ மெல்ற மாதிரி இடைல இடைல கண்டவளுக பேசுவாளுக... ஒரு எழவும் புரியவும் புரியாது...''

''சரிண்ணே... மரமேறி சொன்னத பத்தி நீ என்னண்ணே நினைக்கறே?''



''நினைக்க என்ன இருக்கு... நம்ம குலதெய்வம்தான் அவன் மூலமா வந்து இந்த குடும்பத்துக்கு நல்லது சொல்லியிருக்குதுன்னு எடுத்துக்க வேண்டியது தான்...''

''அப்ப வெள்ளிக்கிழமை செண்பகத்தை பனங்காட்டு கண்ணாரம்மன் கோவிலுக்கு அனுப்பி பூசையை முடிச்சிடுவோம். ஆனா இந்த பொண்ணு நான் போவமாட்டேன்னு அடம்பிடிக்கும்...''

''ஏன் பழனி அப்படி?''

''பெரிய பெரிய படிப்பை எல்லாம் படிக்க வெச்சா அப்படித்தான். நீ எதைச் சொன்னாலும் அமெரிக்காவுல இப்படி எல்லாம் இல்ல அவங்க என்ன நல்லா இல்லாம போய்ட்டாங்களான்னு ஒரு கேள்வி கேப்பா...''

''நீ உடு... அதுகிட்ட நான் பேசறேன். எல்லாம் சொல்ற விதமா சொன்னா கேட்டுக்கும்...''

''தாராளமா சொல்லு... எனக்கு நல்லது நடந்தா சரி...''

-என்றாள் பழனியம்மாள்.

தங்கராஜ் மாடியில் இருக்கும் செண்பகக்குழல்வாய்மொழியின் தனியறை நோக்கி நடந்தார். அறை கதவு மூடியிருந்தது. கைப்பிடியை அழுத்தித் திறக்கவும் திறந்து கொண்டது. உள்ளே லேப்டாப்பில் செண்பகக்குழல் வாய்மொழி.

அவளுக்குப் பின்னால் போய் நின்றவராக எட்டிப் பார்த்தார். லேசாக திரும்பியவள் ஒரு உருவம் நெருக்கமாக நிற்கவும் பயந்து போய் வீல் என்று அலறி விட்டாள்.

''ஆத்தி... ஆத்தி... நான்தான்... நான்தான்...''

''அடபோங்க தாத்தா... இப்படியா பூனை மாதிரி பின்னால வந்து நிப்பீங்க?''

''யதார்த்தமா வந்தேம்மா... நீ பயந்துட்டே...''

''இனி இப்படி எல்லாம் வராதீங்க... கதவைத் தட்டாம ஒருத்தர் ரூமுக்குள்ளல்லாம் வரக்கூடாது... மேனர்ஸ்னு ஒண்ணு இருக்குல்ல?''

''நான் உன் தாத்தா தாயி...''

''கடவுளே வந்தாலும் கதவை தட்டிட்டு வந்தாதான் நான் மதிப்பேன். சரி எங்க வந்தீங்க? கொஞ்சம் தள்ளி நின்னு பேசுங்க... ஒரே பேட் ஸ்மெல்!''

‘‘அது ரத்தனம் பட்டணம் பொடியோட வாசனை தாயி...’’

‘‘மண்ணாங்கட்டி... நீங்க விஷயத்த சொல்லுங்க...’’

‘‘என்னத்த சொல்றது... அந்த மரமேறி குறி சொல்லிட்டு போனத கேட்டேல்ல?’’

‘‘இந்த பாம்பெல்லாம் புடிச்சானே அவனா?’’

‘‘அவனேதான் அவனேதான்... வெள்ளிக்கிழமை அன்னிக்கு நம்ம குலதெய்வம் கோவிலுக்கு போய்ட்டு வந்துடு தாயி...’’

‘‘எதுக்கு?’’

‘‘சாமி கும்பிடத்தான்...’’

‘‘நோ... நோ... நான் அந்த சாமிய இங்க இருந்தே கும்புட்டுக்கறேன். வேணும்னா நீங்கல்லாம் போய்ட்டு வாங்க...’’

‘‘நாங்கதான் நினைச்சா போய்ட்டு வரோமே... இதுக்கு நீதான் கண்ணு போய்ட்டு வரணும்...’’

‘‘லுக், தாத்தா... தெருவுல போற ஒருத்தன் உளறிட்டு போனதுக்கெல்லாம் என்னால எதுவும் செய்ய முடியாது. சரி நீங்க வந்த விஷயத்துக்கு நான் பதில் சொல்லி முடிச்சுட்டேன். நீங்க கிளம்புங்க. என் ஃப்ரெண்ட் லைன்ல வெயிட் பண்ணி கிட்டிருக்கான்...’’

-செண்பகக்குழல்வாய் மொழியின் நேரான கல் உடைப்பது போன்ற பேச்சு தங்கராஜுக்கு ரொம்பவே புதிது. முகம் சுருங்கி கலங்கியவராக ஏமாற்றமுடன் அறையை விட்டு வெளியேறினார்.

படியில் இறங்கி வரும் போதே பழனியம்மாளுக்கு புரிந்துவிட்டது.

‘‘என்னண்ணே பருப்பு வேகலையா?’’

‘‘என்ன பழனி இந்த பேச்சு பேசுது. ஒரு மட்டு மரியாதையே இல்லையே...?’’

‘‘அப்படி சொல்லாதண்ணே... ரொம்ப மரியாதை தெரிஞ்சவதான் என் பேத்தி. இங்க இருந்து வளந்துருந்தா நம்ம கலாச்சாரம் தெரிஞ்சிருக்கும்’’

‘‘என்னவோ போ... அங்க என்பேரன் தான் திசைமாறிப் போறான்னா, இதுவும் அப்படித்தானே இருக்குது... இதை எப்படி நீபூஜைக்கு அனுப்பப்போறே?’’

‘‘இவளுக்கு பாண்டி தான் சரி... சைஸா பேசி அனுப்பிடுவான்பாரு. முதல்ல அவனுக்கு தகவல் சொல்வோம்.



மரமேறி சொன்ன மாதிரி பாம்பு கடிச்சு யாராச்சும் சாகறதுக்குள்ள அந்த நாகமாணிக்கத்தை எடுத்து பால்ல வேற போடணும்’’

-பழனியம்மாள் அலுத்துக் கொண்டபோது பாண்டிய மாணிக்கமே போனில் வந்தார்.

‘‘எலே மருமவனே... நான் உன்மாமன் தங்கராசு பேசறேம்ப்பா...’’

‘‘சொல்லுங்க மாமா’’

‘‘என்னத்த சொல்றது... நீ எப்ப வருவே?’’

‘‘வந்த வேலை அம்புட்டும் முடிஞ்சிடிச்சு மாமா... நாளைக்கு காலம்பற நம்ப ஊட்ல இருப்பேன்.’’

‘‘தங்கமாப் போச்சு போ... நான் காத்திருக்கேன் சீக்கிரமா வா... நிறைய நல்ல விஷயம் பேச வேண்டியிருக்கு...’’

‘‘வந்துட்டேன் மாமா...’’ -தங்கராஜும் அந்த பதிலோடு திரும்பி மாடியைப் பார்த்தார். திரும்பவும் ஒரு பெருமூச்சு அவரிடம்!

பருத்தியின் குடிசை!

புறாவின் காலில் மாயவனுக்கான செய்தியை கட்டி பறக்கவிடத்தயாராக இருந்தாள் கோசலை.

ஒரு பெரிய வாழைப்பழ தாருடனும் நிறைய பலகாரங்களுடனும் குடிசை முகப்புக்கு வந்திருந்தான் வீரய்யன்.

உள்ளே ஒரு பிணம் போல விழுந்து கிடந்தாள் பருத்தி. வீரைய்யன் உள்ளே புகப் பார்த்தான்.

‘‘வந்த வழிய பாத்துகிட்டு அப்படியே போயிடு... உனக்கு இனி இந்த ஊட்ல வேலை இல்லை...’’ -கோசலையிடம் ஆத்திரம் கனல் கக்கியது.

‘‘புரியாம பேசாத புள்ள அதான் கையெழுத்த போட்டாச்சுல்ல இன்னும் என்ன வீம்பு? பத்து லட்ச ரூவா வரப்போகுது. இந்த குடிசையை தட்டிட்டு தார்சு கட்டிடமா கட்டப் போறேன் தெரியுமா’’

-வீரைய்யன் வெகு சகஜமாக பேசினான். பருத்தி அவன் குரல் கேட்டு எழுந்து வந்தாள் அக்காவை பார்க்கவும் அவனிடம் ஒரு தயக்கம் வாழைத்தாரை சுவர் ஓரமாய் சாய்த்து வைத்தான்

‘‘இத தூக்கி வீசி எறிடி.. அப்படியே அந்த விளக்குமாத்தை எடுத்துக்கிட்டு வா...’’ என்ற பருத்தியின் பேச்சு அவனை

மிரட்டியது. கோசலை அவள் சொன்னது போலவே வாழைத்தாரை தூக்க மாட்டாமல் தூக்கி அவன் முன்னால் பொத்தென்று போட்டாள். பலகாரங்களையும் வீசி எறிந்தாள்.

''ஏ பொட்டச்சிறுக்கி... உங்களுக்குன்னு இருக்குற ஒரே ஆம்பளக் காவல் நாய் நான்தான். என்கிட்ட இப்படி திகிடுதம்பா நடந்துகிட்டு தலைல மண்ண அள்ளி போட்டுக்காதீங்க...''

''இப்ப நீ கிளம்பறியா இல்லை சாணியை கரைச்சு ஊத்தட்டுமா?''

''வேணாம்கா... வயசுப் பொண்ண வெச்சுகிட்டு நீ ரொம்பவே கஷ்டப்படுவே...''

''அதான் உன் துணையால ஊட்டுக்குள்ள கஞ்சா வந்து ஸ்டேசன்லயும் பாடாப்பட்டேனே... அப்படியா?''

-அந்த கேள்வி அவன் மனதைக் குத்தியது. பேச்சு வரவில்லை. பம்மிப் பம்மி நின்றான்.

''நல்லா கேட்டுக்க... என் வீட்டுக்குள்ள கஞ்சா வெச்ச உன் கை அதிகபட்சம் இன்னும் இரண்டொரு நாள்தான் உன் கூட இருக்கும். அந்த கையால நல்லா சாப்ட்டுக்க... அதால என்னவெல்லாம் செய்யணுமோ செய்துக்க...''

-கோசலையின் எச்சரிக்கையிலும் ஒரு மிரட்டல் இருந்தது. இருந்தும் நிமிரப் பார்த்தான்.

''என்னாடி... உன் அத்த மவன் மாயவன் வந்து என் கைய வெட்டப் போறான்னு உதார் கொடுக்கறியா?''

''உதாரா இல்லையாங்கறத இந்த ஊர் பார்க்கத்தான் போகுது''

''அவன் உசுரைக் குறிவெச்சு வல்லாளனுங்க அலையறது மறந்து போச்சா உனக்கு?''

''ராணுவமே வந்தாலும் என் மாமனை ஒண்ணும் பண்ண முடியாது''

''உன் மாமனா... அது நான் ஒருத்தன் தாண்டி...''

''நீ என் தாய்மாமாவா இருந்தாலும் அந்த மாதிரி மாமாவா நீ மாறி ரொம்ப நாளாச்சு. ஆனா என் அத்தை மவன்தான் என் மாமன்...''

''என்னமோ உன்னத்தான் அவன் கட்டிக்கப் போறாங்கற மாதிரி பேசறே?''

''பின்ன... நான் வளர்ந்து நிக்கறதே அவனுக்காக தானே?''



''அவனை கட்டிகிட்டு எங்க குடுத்தனம் பண்ணுவே... ஜெயிலுக்குள்ள அதுக்கெல்லாம் அனுமதி கிடையாது... தெரியும்ல?''

''நான் அவனோட எப்படி வாழப் போறேங்கறது என்னோட கவலை. நீ இடத்தை காலி பண்ணு...''

-கோசலை போடு போடென்று போட்டாள். முறைத்துக் கொண்டே திரும்பிச் செல்லத் தொடங்கினான் வீரைய்யனும்!

**கூ**மாச்சி மலை முகடு!

தேவதாரு மரக்கிளை ஒன்றை வெட்டி எடுத்து வந்து அதன் நுனியில் அம்பு போன்ற கூர்மையை உருவாக்கிக் கொண்டிருந்தான் மாயவன். கோசலையின் புறா பறந்து வந்து அவன் முன் அமர்ந்து சிறகுகளையும் உதறிக் கொண்டது.

'அடடே... வந்துட்டியா?' என்றபடியே அதை வாஞ்சையோடு எடுத்து கடிதத்தையும் எடுத்துக்கொண்டு அதற்கு தண்ணீர் காட்டி தானியமும் போட்டான்.

பின்னரே கடிதத்தை பிரித்தான்.

'மாயவ அத்தானுக்கு!

நிலம் பறி போய்விட்டது. பழி போடப் பார்த்தே எழுதி வாங்கி விட்டார்கள். பத்திர அலுவலகத்துக்கு மந்திரி கூப்பிடும் நாளில் போய் கையெழுத்து போடவேண்டும். அந்த சப்-இன்ஸ்பெக்டர் தனசேகரனும், என் மாமன் வீரைய்யனுமே விளையாடி விட்டனர். வீரைய்யன் கை இரண்டு நாளில் போகும் என்று கூறியுள்ளேன். சப்-இன்ஸ்பெக்டர் மிக தரக்குறைவாக பேசினான். அவனுக்கு நாக்கே இருக்கக்கூடாது. இது என் விருப்பம். அம்மாவுக்கோ நாம் கல்யாணம் செய்து கொண்டு பிள்ளை குட்டிகளோடு வாழவேண்டும் என்பது விருப்பம்.

எனக்கென்று தனி விருப்பமில்லை? உன் விருப்பம் தான் என் விருப்பம். உன்வழிதான் என்வழி...

இப்படிக்கு

கோசலக்குட்டி.'

கோசலை எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறாள். அந்த படிப்புக்கான எழுத்து நயம் அவள் கடிதத்தில் தெரிந்தபோது கடாரன் உட்பட மற்ற நண்பர்கள் தங்கள் பாணியில் சமிக்ஞை கொடுத்தபடியே வந்து சேர்ந்தனர்.

கடிதத்தோடு நிற்கும் மாயவனைப் பார்த்ததுமே புரிந்தும் கொண்டனர்.

''கோசலைகிட்ட இருந்தா மாயவா?''

''ம்...''

''பாவம்... ஸ்டேசன்ல ரொம்பவே கதற உட்டுட்டான் அந்த சப்-இன்ஸ்பெக்டர். உள்ள ஒரு கேஸ்ல சிக்கியிருந்த அன்வர் பாய் ஜாமின்ல வந்துட்டான். என்னை தேடி வந்து ஸ்டேசன்ல நடந்ததை அப்படியே சொல்லி அந்த சப்-இன்ஸ்பெக்டரை இரண்டுல ஒண்ணு பாக்கணும்னான்...''

''ம்...''

''நீ கவலைபடாதே மாயவா... அந்த ஊட்டை அப்படியே படம் புடிச்சுட்டேன். யார்கிட்டயும் இல்லாத நாகமாணிக்கம் தன்கிட்ட இருக்கற தைரியத்துல தான் பாண்டியமாணிக்கம் இந்த ஆட்டம் ஆட்றதா ஊரே பேசிக்குது. அந்த நாகமாணிக்கத்த நான் வெள்ளிக்கிழமை ஆட்டயப் போட்றேன். நீ அவன் மகளைத் தூக்கறே...''

''ம்...''

''என்ன மாயவா... வாயத்திறந்து கலகலன்னு பேசாம உம்முன்னு மொணங்கறே... மனசுக்குள்ள வேற எதாவது புது குழப்பமா?''

''கொஞ்சம் அப்படித்தான்... கோசல என்னை கட்டிக்கற ஆசைல இருக்கா... தப்புல்ல?'' மாயவன் கேட்டவிதமே மிக அழுத்தமாக இருந்தது.

## 13

**மா**யவனின் பதில் அவன் நண்பர்களை சற்று யோசிக்க வைத்தது. பெருமாளால் அதை ஜீரணிக்க முடியவில்லை.

''அப்ப காலம்பூரா கல்யாணம் காச்சின்னு ஒண்ணுமே இல்லாம வாழறது தான் உன் முடிவா மாயவா?'' என்று திருப்பிக் கேட்டான். பதிலுக்கு ஒரு விரக்திச் சிரிப்புடன் அவனை பார்த்தான் மாயவன்.

''இந்த சிரிப்புக்கு என்னப்பா அர்த்தம்?''

''ஏ பெருமாள்... உனக்கு தெரியாதா?''



''கள்ளத் தொழில் பண்ணி இப்படி மலைக்காட்டுல பதுங்கி வாழற நமக்கு குடும்பம் குட்டியெல்லாம் சரிப்பட்டு வராதுன்னு நினைக்கறே... அப்படித்தானே?''

''அது மட்டுமா... எப்ப யார் கையால உசுரு போவும்னு தெரியாது. தாலிகட்டி குடும்பம் நடத்த வரப்போறவனை எப்பவும் திக்கு திக்குங்கற மனசோடையா இருக்க வைக்கறது?''

''அதுவும் சரிதான்... ஆனா இதெல்லாம் எனக்கு ஒரு விசயமில்ல ஒருநாள் வாழ்ந்தாலும் உன்கூடத்தான் வாழ்வேன்னு உன் மாமன்மவ சொல்றான்னு வை... அப்ப என்ன பண்ணுவே?''

''அடப் போங்கடா கூறுகெட்டவனுங்களா... அப்படி ஒருவேளை அவ சொன்னாலும் நாமதான் புத்தி சொல்லணும். நல்லா தெரிஞ்சிக்குங்க இந்த ஜென்மத்துல நமக்கு பொம்பள சிநேகம் சரிப்பட்டு வராது. அது நம்மளை பெரும் பாவத்துல கொண்டு போய் விட்டுறும்...''

''களவாட்ற பாவத்த விடவா மாயவா இந்த பாவம் பெருசு?''

''யார்கிட்ட களவாட்றோம்? இல்லாத பட்டவங்ககிட்ட இருந்தா... ஏழ பாழைகளை ஏச்சு ஏமாத்தி மூட்டை கட்டி வெச்சிருக்கறவன்கிட்ட இருந்து தானே களவாட்றோம்? அப்படியே களவாண்டு நாம என்ன இங்க சொகத்துல மிதக்கறோம்? இந்த மலைக்குளிர்ல போத்திக்க ஒரு நல்ல போர்வை கூட இல்லாம தானே இருக்கோம்...?''

''அப்ப புள்ள குட்டிங்களோட வாழ ஆசைப்பட்டா களவை விட்டுப்பிடணும்... அப்படித்தானே?''

''இனி நாம நினைச்சாலும் இது நம்மளை விடாது. இதால உருவான பகையும் விடாது. வேணும்னா இந்த நாட்டை விட்டே போனா ஏதோ பொழைக்கலாம். ஆனா அது என்ன பொழப்பு... இதுல ஒரு வீரம் இருக்கு... இதுல ஒரு மனசு நெறவு இருக்குல்ல...?''

''மன நெறவுன்னு சொல்லவும்தாம்ப்பா ஞாபகம் வருது... கடம்பங்குளம் மாரிக்கோனாருக்கு ஒரு சிறுநீரகம் போச்சாம்பா. யார்க்கிட்டயாவது வ்ாங்கி பொருத்துனா தான் உயிர் பொழப்பாராம். பிச்சை கேக்காத குறையா பேப்பர்ல விளம்பரம் கொடுத்திருந்தான் கோனார் மவன் கோவாலு. கவலப்படாத மாயவன்கிட்ட சொல்றேன்னு உத்தரவாதமா ஏதாவது செய்லான்னு சொல்லிட்டு வந்தேம்பா...'' என்றான் உளியன்.

''சிறுநீரகம் போச்சா... பாவம் மாரிக்கோனார். நல்ல மனுஷன். பல ராத்திரி அவர் மாட்டுக் கொல்லைல வைக்கோல் படப்புக்குள்ளார நமக்கு மறைவா இடம் கொடுத்து சோறெல்லாம் போட்டவரு. கட்டாயமா அவருக்கு நாம எதாவது பண்ணனும். என்ன செய்யலாம்?'' மாயவன் திருப்பிக் கேட்டான்.

''என்னிய கேட்டா மொத்த செலவை நாமளே ஏத்துக்கலாம். ஆமா நம்ப கைய்யிருப்பு எம்புட்டு தேறும்?''

''நோட்டா ஒரு முப்பதாயிரம்தான் இருக்கு... தங்கம், வெள்ளிதான் எச்சா இருக்கு. அதுல ஒரு அம்பது பவுன் தங்கத்தை இப்பவே உறுக்கி உருண்டை பிடிச்சு அவன் மவன் கைல போய் கொடுத்துட்டு வந்துரு உளியா...''

-சொன்னதோடு நில்லாமல் குகைக்குள் நுழைந்து உள்ளே இருந்த மரப்பெட்டியை திறந்து குவிந்து கிடந்த நகைகளில் ஒரு ஐந்தாறு சங்கிலி வகையறாக்களை தன் உள்ளங்கையையே தராசாக்கி அதில் எடையிட்டு தோராயமாக ஒரு ஐம்பது பவுன் அளவு நகைகளுடன் வந்து நின்றான் மாயவன்! அதை அப்போதே உறுக்கி ஊற்றி தங்கக் குழம்பாக்கி பின் உருண்டையாக்க உளியனும் தயாராகி விட்டான். அதற்கான எல்லா ஐட்டங்களும் அங்கேயே இருந்தன. ஒரு புதருக்குள் இரும்புப் பெட்டி ஒன்று சாக்கு போட்டு மூடப்பட்டு கிடந்தது. அதனுள் மினிகேஸ் சிலிண்டரில் இருந்து வெல்டிங் ராட் வரை எல்லாமே இருந்தது. முன்பெல்லாம் களவாடி எடுத்து வரும் நகைகளை ஆசாரியிடம் எடுத்துப் போய் உறுக்கித் தரச் சொல்லி கேட்பார்கள். அவரும் உறுக்கும் சாக்கில் சில கிராம்களை ஆட்டையை போட்டு விடுவார்.

திருட்டுத்தங்கம்தானே?-

ஒரு சமயத்தில் போலீசுக்கு பயந்து அதற்கும் முடியாது என்று கூறி விடவும் வேறு வழியின்றி தங்கத்தை உறுக்கிக் காச்சும் வித்தையை உளியனே ஒரு ஆசாரியிடமும் கெஞ்சிக் கூத்தாடி கத்துக் கொண்டான். அதைத் தொடர்ந்து அதற்கான சாதனங்களையும் வாங்கி வந்து வைத்துக் கொண்டான். சரி அடுப்பில் ஊதி ஊதி பழுக்கக் காய்ச்சி இரும்புச் சட்டியில் ஊற்றி ஆறவைத்து கையாள்வதில் இருந்து, சிலிண்டர் நெருப்பில் ஐந்தே நிமிடத்தில் உறுக்கி விடுவது வரை உளியன் ஜித்தனாகி விட்டிருந்தான்.

அப்போது கூட அவ்வளவு தான் காலமாகியிருந்தது.

ஒரு கொய்யாப்பழ அளவுக்கு தங்க உருண்டையோடு வந்து நின்றான்.



''இத்த கொண்டு போய் நீயே கொடுத்துடு. மேற்கொண்டு எந்த உதவி வேணும்னாலும் கேக்க சொல்லு'' என்று உளியனையே அனுப்பியும் வைத்தான். பெருமாளும் கூடவே கிளம்பிப் போனான்.

அவர்கள் விலகவும் கடாரன் அண்ணாந்து சூரியனைப் பார்த்தான். பார்த்து விட்டு ''இன்னிக்கு புதன்கிழமை மாயவா... வெள்ளிக்கிழமை அதாவது நாள மறுநாள் இதே நேரம் நீ அந்த மாஜி மந்திரி பொண்ணத் தூக்கறே, நான் நாகமாணிக்கத்தை தூக்கறேன்'' என்றான்.

கடாரன் வசம் மணவாளசாமி சித்தர் தந்த மாயாஞ்சனத்தை எடுத்து நீட்டினான் மாயவன்.

''என்ன இது?''

''மையி...''

''பார்றா... என்னா மையி?''

''சித்தர் சாமி தந்தார். புருவத்துல பூசிகிட்டு போனா யார் கண்ணுலயும் படமாட்டோமாம்...''

''அட்றா சக்கைன்னானாம்... ஏ... மாயவா இதெல்லாம் நெசமா?''

''சித்தர்சாமி பொய் சொல்றவரில்லை...''

''ஆமால்ல... இந்த மோடி மஸ்தானோட மை வித்தைன்னு சொல்வாங்களே அந்த ரகமோ?''

''தெரியாது... நீயும் பூசிகிட்டுப்போ - நானும் போறேன். நான் நேத்தே அந்த மந்திரி மவளை தூக்கி யிருப்பேன். நீ தான் இந்த நாகமாணிக்கத்தைச் சொல்லி என்திட்டத்தை தள்ளிப் போட்டுட்டே...''

''இப்பகூட சொல்றேன் மாயவா... நாம கடத்துனதுக்கு பிறகு மந்திரி தன் மக கடத்தப்பட்டதை பத்திகூட பெருசா கவலப்படமாட்டான். நாகமாணிக்கத்துக்கு தான் தவிப்பான் நீ வேணா பாரு...''

''ஹூம் அப்படி என்னதான் அதுல இருக்குதோ?''

''நீ இப்படி சாதாரணமா கேட்டுட்டே... உனக்கும் எனக்கும் அது ஒரு விலைமதிப்புள்ள கல்லு மட்டும்தான்... ஆனா அவன் வரைல அது கிட்டதட்ட சாமிமாதிரி. அது வந்ததால தான் தானொறு மந்திரியாவே ஆனதா அவன் நம்பறான்பா''

''அந்த மந்திரி பதவிதான் போச்சே... அப்ப அந்த கல்லுக்கும் சக்தி போயிடுச்சின்னு அர்த்தமா?''

''இப்படி வில்லங்கமால்லாம் கேக்காதே... எதுக்கும் நம்ம சித்தர்சாமியை பாக்கைல நாகமாணிக்கம் பத்தி கேளு... அவருக்கு தெரியும் அதை பத்தின உண்மை...''

''கேக்கறேன்... அதே சமயம் என் மாமன் குடும்ப சொத்தை மிரட்டிப் பிடுங்குன அந்த மந்திரிக்கு பாடம் கத்துக் கொடுக்காம விடக்கூடாது''

''அதுக்கு தானே இத்தன திட்டமும்... வெள்ளிக் கிழமை மதியம் மந்திரி மவளை கடத்தற. அதேசமயம் உளியன் போய் அந்த வீரைய்யன் கையை வாங்கணும். பெருமாள் போய் அந்த போலீஸ்காரன் காலை வாங்கணும். என்ன சொல்றே?''

''நம்ம நாலு பேருக்குமே நாலு திட்டம். நாலும் நல்ல படியா முடியணும். இடைல பிசிறு தட்டிறக்கூடாது...''

''எதுவும் தட்டாது... வெள்ளிக்கிழமை காலைல நாம நம்ம கானகக் கருப்பருக்கு பூசை போட்டு ரத்தப் பொட்டு வைக்கறோம். அவரு எப்பவும் போல நம்மகூட வருவாரு. என்ன சொல்றே?''

கடாரன் கேள்விக்கு எங்கோ வெறித்து பார்த்தபடி சம்மதம் சொன்னான் மாயவன். எவ்வளவுதான் இவர்களுடன் பேசியபடி இருந்த போதும் கோசலை தன் மேல் காதலாக இருப்பதை எப்படி மறுதலித்து அவளுக்கு வேறு வழிகாட்டுவது என்பதில் தான் அவன் மனசு சிக்கிக் கொண்டிருந்தது.

ஏகப்பட்ட கார்கள் புடைசூழ வந்து விட்டார் பாண்டிய மாணிக்கம். முகத்தில் வெற்றிப் புன்னகை! சென்னை, டில்லி என்று போய்விட்டு வந்தாலே வீட்டுப் பெண்களை விட்டு ஆரத்தி எல்லாம் எடுக்க வைப்பாள் பழனியம்மாள். அந்த கூத்தெல்லாமும் நடந்தது...

ஆரத்தித் தட்டில் அவர் பணம் போடுவதை வைத்தே போன காரியமெல்லாம் எந்த அளவுக்கு வெற்றியடைந்தது என்பதை கண்டு பிடித்துவிடலாம்.

இன்று நூறுரூபாய் நோட்டுக்கள் இரண்டைப் போட்டார். பின் தொடர்ந்து வந்தவர்களில் ஸ்டேஷன் எஸ்.ஐ இளங்கோவும் இருந்தார்.

பாண்டியமாணிக்கம் கொடுத்து விட்டு போன அசைன்மெண்ட்டை அப்படியே நிறைவேற்றி விட்ட செருக்கும் சிரிப்பும் அந்த எஸ்.ஐ முகமெங்கும் வழிந்து கொண்டிருந்தது.



மாமா தங்கராஜ் வேகமாக முன்வந்து ''வா மருமவப் பிள்ளை நீ எப்ப வருவேன்னு தான் உக்காந்துகிட்டிருக்கேன்'' என்று ஆரம்பித்தார்.

''இருங்க மாமா... குளிச்சிட்டு பலகாரமும் சாப்ட்டுட்டு உங்க கூட ஆற அமர பேசறேன். இவுகள முதல்ல கவனிச்சிட்றேன்'' என்று தன்னோடு வந்த சகாக்கள் பக்கம் திரும்பினார்.

''ஏய்... பெட்ரோல் பங்க் லைசென்ஸ் பேப்பர் இந்த வாரம் கையெழுத்தாகி வந்துடும்யா... இனிமே பாத்து சூதானமா நடந்துக்கணும். இப்பவே கொச்சினுக்கு போன் போட்டு சரக்க இறக்கச் சொல்லிடு'' என்று ஒருவனிடமும்,

''உன் கேஸ் விசயத்தையும் பேசிட்டேன்... மிலிட்டரி மேட்டர்னாலே பலாப்பழத்தை கண்ட மாதிரி கைய உதற்றானுங்கப்பு... முழுக்க முழுக்க பிரதம மந்திரி ஆபீஸ் கண்ட்ரோல்ல இருக்கற விசயம். ஹோம் மினிஸ்டர் வேற இப்ப பாத்து ஆஸ்திரேலியா பக்கம் போயிட்டாரு... அங்கதான் நம்ம நாட்டுகாரங்களையா பாத்து கொன்னுகிட்டே வர்றாங்களே?'' என்று இன்னொருவனிடமும் பேசி அவர்களை அனுப்பி விட்டு எஸ்.ஐயிடம் வந்தார்.

''உன்கிட்ட இருந்து போன் வரவும்தான் மனசுக்கு தெம்பா இருந்துச்சு. உன்கிட்ட ஒரு வேலையை கொடுத்துட்டா முடிக்காம விடமாட்டேங்கறத நிரூபிச்சிட்டே. ஆமா எவ்வளவுன்னு பேசியிருக்கே?''

''பத்து லட்சம். ஒரே செட்டில்மென்ட்டுய்யா...''

''கொடுத்தொழிவோம்... நூறுக்கும் இருநூறுக்கும் வாங்க ஆளில்லாத படி கிடந்த பூமிக்கு இன்னிக்கு வந்த வாழ்க்கையை பாத்தியா?''

''பத்து லட்சம்தான் தரணும்னு ஒண்ணும் கட்டாய மில்லையா. அந்த பருத்தி காசே வேண்டாம். நான் ஐயாவுக்கு பிச்சை போட்டதா நினைச்சுக்கறேன்னு கொழுப்பா தான் பேசி கைய்யெழுத்து போட்டா. இந்த வீரைய்யன் தான் பத்து லட்சத்துக்கு குறையக் கூடாதுன்னு சுத்திச் சுத்தி வர்றான்யா...''

''அப்பசரி... இந்த பருத்தி எனக்கு பிச்சை போட்றாளாமா? இவ குடும்பத்துக்கு நான் போட்டதெல்லாம் இவளுக்கு மறந்து போச்சாமா...?''

''விடுங்கய்யா... ரொம்ப கத்துனா நிஜமாலுமே கஞ்சா கேஸ்ல தூக்கி உள்ள போட்டா அடங்கிட்டு போறா...'

''இல்ல இளங்கோ... இவளுக்கு காசு மதிப்பு தெரியல. இது எனக்கு பிச்சை போட்றேன்னு சொன்னதுக்கு இவளை நான் பிச்சை எடுக்க வெச்சு பாத்தாதான் என் மனசு ஆறும்...''

''நீங்க இப்பதான் வந்துருக்கீங்க. ரெஸ்ட் எடுங்கய்யா. நான் சாயந்தரம் போல வர்றேன். நிதானமா பேசுவோம்.''

''சரி நீ புறப்படு... ரிஜிஸ்தர் ஆபீஸ்ல கையெழுத்தாகற வரை எம்புட்டு கோபப்பட்டாலும் அடங்கித்தான் போகணும்''

-அவரின் கோபத்துக்கு இடையிலும் காரியத்தில் அவர் கண்ணாக இருப்பதை ரசித்தபடியே கிளம்பிப் போனார் எஸ்.ஐ. இளங்கோ!

ஒரு ஆங்கில நாவல் புத்தகமுடன் மாடிப்படிகளில் இறங்கி வந்த செண்பகக் குழல்வாய்மொழி இந்த பரபரப்பு எதையும் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அவள் கண்கள் அந்த ஆங்கில நாவல் பக்கத்தின் மேலேயே இருந்தது.

மகளைப் பார்க்கவும் பாண்டியமாணிக்கம் மனசுக்குள்ளேயும் ஒரு மத்தாப்பு பூத்தது.

''கண்ணு...'' -என்றார் சற்று ராகமாய்...

அவள் கவனம் கலையவேயில்லை.

''எம்மா செம்பகம்...'' என்று அடுத்த கட்டத்துக்கு போகவும் நிமிர்ந்தாள்.

''என்ன கண்ணு படிக்கறே?''

''நாவல்பா...''

''இங்கிலீஷ் புத்தகமாட்டாம் இருக்கு...''

''ஆமாம்...'' அந்த ஒரு வார்த்தை பதிலோடு கொத்தாக முன்விழுந்த தலைமுடியை கோதி விட்டவளாக அவரைக் கடந்தும் போனாள். அடுத்து அவர் ஏறிட்டது பழனியம்மாவைத்தான்... அவளோ கோபத்தோடு அவரைப் பார்த்தாள்.

''ஏன் தாயி இப்படி வெறிக்கே?''

''வெறிக்காம... நான் உன்கூட பேசணும்னு ரெண்டு நாளா துடிச்சிகிட்டிருக்கேன்டா. நீ இல்லாதப்ப இங்க என்னவெல்லாம் நடந்துச்சி தெரியுமா?''

பழனியம்மாளின் பீடிகையே பலமாக இருந்தது.



## 14

பாண்டியமாணிக்கம் என்னவென்று கேட்ட நொடி அதை கப்பென்று பிடித்துக் கொண்டாள் பழனியம்மாள்.

''பாண்டி... நேத்து காலைல ஒரு மரமேறி நம்ம ஊட்டுப் பக்கம் வந்தான்'' -என்று ஆரம்பித்தாள்.

''யம்மா... நீ ஆரம்பிக்கறத பாத்தாக்கா விசயம் ரொம்ப பெருசா ஒரு கதை போல இருக்கும் போல தெரியுதே?''

''இப்படி குறுக்க பேசுனா எப்படிடா... எனக்காக ஒரு பத்து நிமிசம் இப்படி உக்காந்து என்னன்னு தான் கேளேன்''

''நான் இப்ப இருக்கற நிலைல உக்காந்து பேசல்லாம் முடியாது. ஏ.சி. குளிர்ல அடங்கி கிடந்ததால வயித்துல முட்டிகிட்டு நிக்குது மூத்திரம்! புரிஞ்சுக்க... நான் மேல போய்ட்டு வரேன். வந்து நிதானமாவே பேசறேன்'' என்று பாத்ரூமை நோக்கி ஓடினார்.

பழனியம்மாளும், தங்கராஜூம் காத்திருக்கத் தொடங்கினர். அந்த இடைவெளியில் ஒரு பூனைக்குட்டியை பிடித்து மார்போடு அணைத்து அதை வருடிய படியே கடந்து போனாள் செண்பகக்குழல்வாய்மொழி.

இன்றைய பெண்கள் தலைக்கு எண்ணெய் பூசி அதை பின்னிக் கொள்வது என்பதை எல்லாம் கைவிட்டு எவ்வளவோ நாட்களாகி விட்டது. தலை விரிகோலமாய் திரிவதுதான்... ஃபேஷன்!

செண்பகத்தை அந்த கோலத்தில் பார்க்கவும் தங்கராஜூக்கு வலித்தது.

''வாழற வீட்டுக்குள்ள இப்படியா தலைவிரி கோலமா திரிவாங்க?''

''அண்ணே கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு இரு... அவகாதுல விழுந்தாக்கா என் தலைமுடி என் விருப்பம் உங்களுக்கு எங்க வலிக்குதும்பா! இவன்னு இல்லை... நான் டிவி பொட்டியிலயும் பாக்கறேன். ஒருத்தி கூட தலையை எண்ணை பூசி வாரிக்கறதே இல்லை. அது முகத்துல முன்னால் விழுவணும். கையால தள்ளி தள்ளி உட்டுக்கணும், அதை பார்க்கைல எனக்கு ஒரு கத்தரிகோலை எடுத்துகிட்டு போய் அப்படியே வெட்டிப்பிட்டு வந்துடலாமான்னு ஆத்திரமா வரும்...''

-பழனியம்மாள் பொறுமினாள். நேரமும் ஓடி முடிந்தது. பாண்டியமாணிக்கம் பாத்ரூம் போய்விட்டு ஒரு நல்ல ரிலாக்ஸ்

மூடுடன் வந்து அமர்ந்தார். பழனியம்மாளும் நடந்த அவ்வளவையும் சொல்லி முடித்தாள். தங்கராஜ் அருகில் இருந்து சுருதி கூட்டினார்.

"ஆமாம் மருமவனே... அவன் பாட்டும் பாம்பா புடிக்கறான் எத்தினி. பாம்புங்கறே? நாலு பாம்புங்க... அதுல ஒரு பாம்பு கிட்டத்தட்ட பன்னெண்டு அடி.."

"நம்ப தோட்டத்துலயா மாமா...?"

"பொறவு...?"

"நம்பவே முடியலியே மாமா...?"

"கண்ணால நான் மட்டுமில்ல... உன் பொண்ணும் பாத்தா. கூப்ட்டு வேணா கேட்டுப்பாரு..."

"சரி அதான் எல்லா பாம்பையும் புடிச்சாச்சுல்ல?"

"என்ன நீ அப்படி கேட்டுட்டே... புடிக்க புடிக்க அது வந்துகிட்டே இருக்குமாம். அதுலயும் காளிங்க நாகம்னு ஒரு நாகம் இருக்குதாம். அது வந்தா ஒரு உசுரையாவது வாங்காம விடாதாம்.

-தங்கராஜ் பேசும் விதமே கடாரன் சொன்னதை அவர் நூறு சதம் நம்புகிறார் என்பதை உணர்த்தியது. பாண்டியமாணிக்கம் யோசிக்க ஆரம்பித்தார்.

"என்ன பாண்டி யோசனை... அந்த மரமேறி நமக்கு குலதெய்வ குத்தம் இருக்கறதையும் சொல்லிட்டான். வெள்ளிக் கிழமை உச்சி நேரத்துல மூணு கன்னிப் பொண்ணுக மட்டும் தலைல அரிசி வெல்லத்த சுமந்துகிட்டு போய் அவுங்க கையால பொங்கல் வெச்சு கும்பிடணுமாம்"

"இதெல்லாம் சரியாத்தா... ஆனா இந்த பாம்பு சமாச்சாரம் தான் குழப்புது..."

"குழப்புதா?"

"பொறவு... நான் நாகமாணிக்கத்தை விலை கொடுத்து வாங்கி ஏழெட்டு வருசம் ஆச்சு. இவ்வளவு நாள் வராத பாம்பும் தேளும் இப்ப மட்டும் வந்துச்சின்னா எப்படி மாமா?"

"அப்ப அவன் புடிச்சானே?"

"மாமா உங்களுக்கு சில விசயமெல்லாம் புரியாது. எனக்கு நிறைய எதிரிங்க உருவாயிட்டாங்க. அவங்களுக் கெல்லாமும் என் நாகமாணிக்கம் மேலதான் கண்ணு. அதை ஆட்டைய போட அவனுங்களே கூட பாம்பை விட்டு மரமேறியையும் அனுப்பி நம்மளை உசுப்பேத்தியிருக் கலாம்ல?"



"அப்ப குலதெய்வ விசயத்தையும் தெளிவா சொன்னானே?"

"அட போங்க மாமா... நம்ம குலதெய்வம் பனங்காட்டு கண்ணாரம்மன்னு ஊருக்கே தெரியும். இது ஒரு விசயமா?"

"முடிவா நீ என்னதான் சொல்ல வர்றே?"

"அந்த மரமேறியை நான் பாக்கணுமே..."

"அவனை எங்கன்னு போய் தேட...?"

"அவன் டுபாக்கூரா இருந்தா கட்டாயம் திரும்ப தேடி வருவான். நாம் என்ன பண்ணோம்னு பாக்க... நிஜமாலுமே குறி சொல்றவனா இருந்திருந்தா வரமாட்டான்..."

"அப்ப..."

"போய் வேலைய பாருங்க... செண்பகமும் அது பாட்டும் அது வேலைய பாக்கட்டும். குலதெய்வ பூசையை இந்த வெள்ளிக்கிழமை தான் செய்யணும்னு ஒண்ணும் இல்லை. அடுத்த வெள்ளி அதுக்கடுத்த வெள்ளிக்கிழமை கூட செய்துக்கலாம்"

-பாண்டியமாணிக்கம் தான் ஒரு தேர்ந்த அரசியல்வாதி மட்டுமல்ல, தெளிவான பகுத்தறிவுவாதியும் கூட என்பதை அவர்களுக்கு உணர்த்தாமல் உணர்த்தி விட்டு எழுந்து கொண்டார். அவர் விலகவும் தங்கராஜ் வாட்டமாய் பழனியம்மாளை பார்த்தார்.

"என்னண்ணே அப்படி பாக்கறே... அவன் கேட்டதுலயும் ஒரு அர்த்தம் இருக்குல்ல...?"

"அப்ப அந்த மரமேறி திரும்ப வருவாங்கறியா?"

"அதை நாமளும் பொறுத்திருந்து பார்ப்போம் இப்ப என்ன கெட்டுப் போச்சு?"

பழனியம்மாளும் மகன் பக்கம் சாய்ந்துவிட்டாள். அது தங்கராஜுக்கு சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது!

கோசலை ஆடுகளை மேய்ப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தாள். பட்டிக்குள் கிட்டத்தட்ட இருபது ஆடுகள்! அதில் நான்கு செம்மறி, இரண்டு கிடாய்... அந்த இரண்டு கிடாயும் மொத்த ஆடுகளையும் முட்டித்தள்ளி ரவுடித்தனம் செய்து கொண்டிருந்தது. இதனால் வெள்ளாடுகளிடம் ஒரே கத்தல்.

பட்டியிலிருந்து வெளியேற்றி பக்குவமாக அவைகளை கம்மாய்கரை பக்கமாய் ஓட்டிச் சென்று மரங்களில் கொப்புகளை ஒடித்துப் போட்டு தின்னச் செய்து பின் அவைகளை திரும்பவும்

பட்டிக்கு அழைத்து வந்து கட்டிப் போடுவது என்பது ஒன்றும் லேசான காரியமல்ல.

சின்னப்பூச்சி இருந்தவரை ஆடுகளை மேயவிட்டு திரும்ப பட்டிக்கு அழைத்து வருவது ஒரு கஷ்டமான காரியமாகவே கோசலைக்கு தெரிந்ததில்லை. இன்று அவனில்லாத நிலையில் அவள் மட்டுமே மேய்த்தாக வேண்டும்.

சின்னப்பூச்சி அணியும் சட்டை ஒன்றை எடுத்து அணிந்துகொண்டு அவனைப் போலவே தலைப்பாகையை கட்டிக் கொண்டு அவள் புறப்படவும் அதைப் பார்க்க பருத்திக்கு கரகரவென்று கண்களில் கண்ணீர் பிரண்டு வந்தது.

''ஆத்தா... இன்னுமா அப்பன் நினைப்புல உன் கண்ணுல தண்ணி வருது?''

''வத்திப் போக இது என்ன மானம்பாத்த கம்மாயா இல்ல கேணியாடி... பாழாப் போன மனசுடி...''

''நெசம்தான்... அப்பச்சி சட்டையை எடுத்தப்ப எனக்கும் அழுகை வந்துச்சி. கோசா... கோசா'ன்னு அது கூப்டுகிட்டே இருக்கும். இப்ப கூட அது அப்பப்ப கூப்புட்ற மாதிரி எல்லாம் காதுல கேக்குது...''

-சொல்லும் போதே கோசலையும் அழுதாள்.

''சரி கண்ணு... பாத்து மேச்சுட்டு வா! இனி இந்த ஆடும் மாடும்தான் நமக்கு சோறு. இருந்த இடத்தையும் அந்த களவாணிப் பய புடுங்கிட்டான். இத்த கொண்டுதான் நான் உனக்கு ஒரு கல்யாணத்தை பண்ணிப் பாக்கணும்''

''அதான் மாயவ மாமா இருக்குல்ல... உனக்கு எதுக்கு அந்த கவலை?'' -கோசலை வேகமாக பதில் சொல்வது போல தன் விருப்பத்தையும் கூறிவிட்டாள்.

சற்று திடுக்கிட்டவள் போல பார்த்தாள் பருத்தி.

''எம்மா அப்படி பாக்கறே?''

''மாயவனை சொல்லவும் கருக்குன்னிச்சுடி''

''கருக்குன்னிச்சா... அப்ப உனக்கு வேற மாதிரி எண்ணமும் இருக்குதா?''

''அடிப்போடி பொசகெட்டவளே... மலைக்காட்டுல பதுங்கி வாழற அவனோட உன்னை எப்படிடி சேத்து வைக்க முடியும்? ஏழெட்டு தலைமுறைக்கு முந்தியே களவை கைவிட்டு



விவசாயக்கூலியா மாறிட்ட சாதிடி நம்ம சாதி. ஆனா விட்ட குறை தொட்டகுறையா இவன் மட்டும் திரும்பவும் குலத்தொழிலுன்னு அதுக்கே போயிட்டான். அப்படி போய்ட்டாலே குடும்பம் குட்டின்னுல்லாம் கிடையாதுன்னு தாண்டி அர்த்தம். எப்ப எந்த எதிரியால உசுரு போகும்னு தெரியாம வாழற வாழ்க்கைகுள்ள நீயும் போக ஆசைப்பட்றியேடி...?''

''நீ இப்படி எல்லாம் சொல்லி என் மனசை மாத்த முடியாது தெரிஞ்சிக்க... அதுக்கும் என் மனசு நல்லா தெரியும்...''

-என்று தன் விருப்பத்தை அழுத்தமாய் கூறிவிட்டு பட்டி ஆடுகளை விடுவித்து அப்படியே மேய்த்துக் கொண்டு புறப்பட்டு விட்டாள் கோசலை.

சற்று தூரமாக போய்விட்ட அவளைப் பார்த்தபோது சின்னப்பூச்சியே அவைகளை மேய்த்தபடி நடந்து செல்வது போல் இருந்தது பருத்திக்கு... அப்படியே கோசலையின் விருப்பத்தை எண்ணி ''இந்த பொண்ண நான் எப்படி மனசு மாத்தி ஒருத்தன் கைல புடிச்சி கொடுக்கப் போறேன்னு தெரியலியே...'' என்று புலம்பவும் விட்டது.

சின்னப்பூச்சியின் அந்த மூன்று ஏக்கரா வயலுக்குள் சர்வேயர் இறங்கி டேப்பை பிடித்து அளந்து கொண்டிருந்தார். ஒரு டிராக்டர் ட்ரெய்லரில் நடுகற்கள் வந்து இறங்கி யிருந்தன... வீரைய்யனும் சர்வேயரோடு இருந்தான். அவன்தான் டேப்பை பிடித்தபடி அங்கும் இங்குமாய் அல்லாடிக் கொண்டிருக்க தடதடவென்று மோட்டார் பைக்கில் எஸ்.ஐ. இளங்கோவும் வந்திருந்தார்.

''என்னய்யா சர்வே பண்ணி முடிச்சிட்டியா?''

''ஆச்சுங்கய்யா... எல்லாம் சரியா இருக்குது...''

''அப்ப கல்ல நட்டு வேலியை போட்டுடலாம்ல?''

''தாராளமா...''

''அங்க என்னய்யா அது... கிணறா?''

''ஆமாங்க... கமலை இறைக்கற கிணறு. அதுல தண்ணி பெருகும்போது வயல்ல ஒரு போகம் தாராளமா விளையும்...''

''இப்ப தண்ணி இருக்குதா?''

''முழங்காலுக்கு தாங்க இருக்கு...''

-இளங்கோ கேட்க சர்வேயர் சொல்லும்போது கோசலை ஆடுகளோடு வயலை ஓட்டி வந்தபடி இருந்தாள். வீரைய்யன் அவளைப் பார்த்தான். ஆனால் அவள் கவனிக்கவில்லை. வயலோரமாக அடர்வாய் புதரும் கூபா புல்வகை மரங்களும் வளர்ந்திருந்தன. அதன் கிளைகளை ஒடித்துப் போட்டால் ஆடுகளும் அமுத்தமாய் மேயும். அவளும் அதற்காக தன்வசம் இருந்த தொரட்டியை உயரத்தூக்கும்போது பக்கவாட்டில் அவளது இளமை அழகு வீரைய்யன் கண்ணில் பட்டு காந்தியது.

இளங்கோவும் கவனித்தார்.

''என்ன வீரைய்யா... என்ன சொல்றா உன் முறைப் பொண்ணு?'' என்று ஆரம்பித்தார்.

''அது முறைப் பொண்ணு இல்லீங்கய்யா... முறைக்கற பொண்ணு. ஆசையா நான் வாங்கிட்டு போன வாழப்பழத்தாரையும் பலகாரத்தையும் வீசி எறிஞ்சிட்டாய்யா...''

''நீ சும்மாவா உட்டே...?''

''என்ன பண்ணச் சொல்றீங்க... எங்க அக்கா ஒரு கைல விளக்குமாத்தைல்ல எடுத்துகிட்டு வந்துட்டா...''

''பின்ன... நீ வீட்டுக்குள்ள கொண்டு போய் கஞ்சா வைப்பே அவங்க உன்னை கொஞ்சுவாங்களா?''

''என்ன சார் நீங்க... இந்த பக்கமும் பேசறீங்க. அந்த பக்கமும் பேசறீங்க?''

''உள்ளதைச் சொன்னேன். இந்த மாதிரி விசயத்துல வாழப்பழமும் பலகாரமும்லாம் வேலைக்கு உதவாதுய்யா...''

''என்னய்யா சொல்றீங்க?''

''புரியாத ஆளா இருக்கியே... நானும் சர்வேயரும் ஒதுங்கிக்கறோம். நீ அப்படியே போய் பாஞ்சுடு''

''பாயறதா?''

''கதையை முடிச்சிடுய்யா... ஐயாட்ட சொல்லி பஞ்சாயத்த கூட்டி உனக்கே கட்டி வைக்க சொல்லிட்றேன்''

''அது எப்படிங்க... நான் இப்ப அதுக்கு சகோதரன் முறைங்க. எப்ப என் மச்சானுக்கு கொள்ளி போட்டேனோ அப்பவே உறவு மாறிப் போச்சுங்க...''

''அப்ப அந்த திமிற் பிடிச்சவளை அப்படியே விட்டுடப் போறியா?''



''வேற எதாவது சொல்லுங்க... கேட்கறேன்''

-வீரைய்யன் கேட்ட விதம் இளங்கோவை தீவிரமாக யோசிக்க வைக்கத் தொடங்கியது.

## 15

இளங்கோ தன் சொர சொரப்பான தாடையை தேய்த்தபடி சிந்திக்க தொடங்கும்போது தொலைவில் பாண்டியமாணிக்கத்தின் கார் புழுதியை கிளப்பிக் கொண்டு வருவது தெரிந்தது. காரின் சப்தமும் புழுதியும் கோசலையை யும் கவனிக்க வைத்தது. நிமிர்ந்தாள். ஆடுகள் கார் சமீபமாய் வரவும் அங்கும் இங்கும் சிதறி ஓடின. அவளது ஆடுகள்தான் என்று தெரிந்தே டிரைவரும் வளைக்காமல் ஓட்டினான்.

உள்ளே பாண்டியமாணிக்கமும் ''அந்த திமிர்பிடிச்சவ ஆடுங்க தானே?'' என்று கேட்டார்.

''ஆமாங்கய்யா...''

''அப்ப அடிச்சு விடு. ஒரு அஞ்சாறு ஆடாவது போய் சேரட்டும். கோட்டிக்கும் அப்பதான் நாமன்னா ஒரு பயம் இருக்கும்'' எனும் போதே காருக்குள் ஒரு ஆட்டுக்குட்டி சிக்கி அநியாயமாக உயிரைவிட்டது. மற்ற ஆடுகள் தெரிந்து ஓட அப்படியும் இரண்டு ஆடுகள் சிக்கி அவைகளும் வயிற்றுப் பகுதி கிழிந்து குடல் வெளியே சரிந்துவிழ உயிரை விட்டன.

''ஆத்தி... அங்காளம்மா...'' என்று குலதெய்வம் பேரைச் சொல்லி கோசலையும் பதறிவிட்டாள்.

கார் இளங்கோவுக்கும் வீரைய்யனுக்கும் அருகில் சென்று நின்றது.

''அய்யா வாங்கய்யா... வழில இந்த வீம்பு பிடிச்சவ ஆட்ட விட்டு மறிக்க பார்த்தாளா?'' என்று பாண்டிய மாணிக்கத்துக்கு பிடித்த மாதிரியில் கேட்டார் இளங்கோ. ஆனால் வீரைய்யன் ஒரு மாதிரி ஆகிவிட்டிருந்தான். அது அவன் முகம் இருக்கும் விதத்திலேயே தெரிந்து போனது.

''யோவ் எஸ்.ஐ. வண்டில ஏறுய்யா... உன்கூட நிறைய பேச வேண்டியிருக்கு...''

''நீங்க முன்ன போங்கய்யா... நான் என் மோட்டர் பைக்ல வந்துட்றேன்''

''அப்புறம் இடத்தை அளந்தாச்சுல்ல...?''

''ஆச்சுங்கய்யா... ஸ்கெச்சோட நான் பங்களாவுக்கு வர்றேங்க...'' என்றார் சர்வேயர்.

அடுத்த நொடி கார் கிளம்பிவிட்டது.

திரும்பும்போது காரைப் பார்த்த ஆடுகள் எமனைப் பார்த்தது போல தெரித்து ஓடின.

இறந்து கிடந்த ஆடுகளுக்கு அருகில் ஓடிந்துபோய் உட்கார்ந்து விட்டாள் கோசலை. அதிலும் அந்த குட்டி ஆடு சமீப நாட்களாக அவள் மடியிலேயே ஒரு குழந்தை போல கிடந்தது. அது கண்களைத் திறந்தபடி உயிரை விட்டிருந்தது. வெண்பட்டு போன்ற அதன் உடம்பை ரத்தம் சிகப்பாக்கி விட்டிருந்தது. எதிர்பாராத இந்த தாக்குதல் கோசலையை நிலைகுலைய வைத்துவிட்டது.

தடதடவென்று மோட்டர்பைக் வரவும் நிமிர்ந்தாள்.

இளங்கோ தான்...

''உனக்கு நல்ல நேரம்... வீரைய்யன் உன்னயைவே சூரையாடத் தெரிஞ்சான். நல்ல வேளையா அய்யா கார் வரவும் கவனம் அதுல போயிடிச்சு.

ஆமா எத்தினி ஆடுங்க அவுட்டு...?

ஒண்ணு, ரெண்டு, மூணு... நாலா...? போவட்டும் போ. அள்ளிகிட்டு போய் உப்புகண்டம் போட்டு காயவை. ஆறு மாசத்துக்கு வெச்சு திங்கலாம்.

இப்படியா மேய்க்கத் தெரியாம ஆடு மேய்ப்பே...?''

-நின்று நிதானமாய் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல பேசிவிட்டு கியரை மாற்றி பைக்கை கிளப்பிக் கொண்டு புறப்பட்டுப் போனார் இளங்கோ.

அப்படியே திரும்பினாள் கோசலை. வீரைய்யனும் அவளை நோக்கித்தான் வந்தபடி இருந்தான். வெறித்தாள் கோசலை... அவனும் சமீபித்தவனாய் செத்துக் கிடந்த ஆடுகளை பார்த்தான். அப்படியே ''ஐய்யாக்கு உன்மேல கோவம்... அதான் இப்படி பண்ணிட்டு போய்ட்டாரு. இதுக்குதான் பெரிய இடத்துல வெச்சுக்க வேண்டாம்னேன். கேட்டியா... பாரு... இப்ப ஒண்ணுக்கு நாலு ஆடு செத்ததுதான் மிச்சம்...'' என்றான்.

அடுத்த நொடியே 'த்தூ' என்று அவன் முகத்தில் காரி உமிழ்ந்தாள் கோசலை.



நெற்றியில் பெரும் நுரைத்திப்பியோடுபட்ட அந்த எச்சில் திவலை அப்படியே மூக்கின் மேல் ஒழுகிடத் தொடங்கியது.

''அந்த ஆளை இரண்டுல ஒண்ணு பாக்கத்துப்பில்லாம என்கிட்ட வந்து அடங்கிப் போகச் சொல்றியா?

இதுவே என் மாயவன் மாமானா இருந்துருந்தா வகுத்திருப்பாரு. உன் உடம்புல தான் நல்ல ரத்தமே ஓடலியே... சாக்கடையல்ல ஓடுது'' என்று வெடித்து விட்டாள் கோசலை. அவனாலும் அவளிடம் அதற்கு மேல் பேசவோ கோபிக்கவோ முடியவில்லை.

பாண்டியமாணிக்கம் பங்களா!

காரும் உள்புகுந்து நின்றது. இறங்கிய பாண்டிய மாணிக்கம் பார்வை பங்களா முகப்பில் உள்ள புல்வெளித் தோட்டம் பக்கம்தான் சென்றது. தோட்டக்காரன் முனியசாமி கவ்வாத்து செய்தபடி இருந்தான். ''பாண்டியமாணிக்கம் பார்க்கவும் சிறிய மண்வெட்டியை அப்படியே போட்டு விட்டு ஓடிவந்தான்.

''முனியா... நான் இல்லாதப்ப அந்த மரமேறி வந்தானா?''

''நீங்க ஊர்ல இல்லாதப்ப வந்து பாம்பு புடிச்சானே அவனுங்களா?''

''அவனே தான்...''

''இல்லீங்கய்யா...''

''அவன் கட்டாயமா வருவான். வந்தா ஐயா உன்னை பாக்கணும்னாருன்னு சொல்லி உள்ள கூட்டிகிட்டு வந்துடு''

''ஐயா அவன் ஒண்ணும் கோடாங்கியோ குறி சொல்லியோ இல்லீங்க... சரியான ஏமாத்துக்காரன்யா''

''தெரியும்யா... அதனாலதான் அவனை பிடிக்கத்தான் உள்ள கூட்டிகிட்டு வரச் சொல்றேன்...''

''அப்ப சரிங்க... மாட்டேன்னா மம்புட்டியாலயே மண்டைல ஒரு போடு போட்டுப் புட்றேங்க...''

''அடிக்கறது அப்புறம். அவன் நோக்கம் என்னன்னு தெரியணும் அதான் எனக்கு முக்கியம்...''

''சரிங்க... உத்தரவுங்க...''

-அவன் விலகிக் கொள்ள உள்ளே சென்றார் பாண்டிய மாணிக்கம்.

உள்ளே ஊஞ்சலில் தேவதை கணக்காய் செண்பகக் குழல்வாய்மொழி! வெண்ணிற சுடிதாரில் துப்பட்டா அலைபாய்ந்திட ஆங்கில நாவல் ஒன்றில் மூழ்கியிருந்தாள்.

நின்று ஒரு வினாடி ஆழமாய் ரசித்தவர் முன் பழனியம்மாள். பார்வையில் ஒரு எதிர்பார்ப்பு.

''என்னாத்தா...?''

''ஒண்ணுமில்லப்பா. நான் எதாவது சொன்னாலும் கேக்கவா போறே?''

''கேக்கற மாதிரி சொல்லு ஆத்தா...''

''இத்தோட குலதெய்வம் கோவிலுக்கு மட்டுமாவது போய்ட்டு வந்துடு பாண்டி...''

''ஆரம்பிச்சுட்டியா... அதான் சொன்னேன்ல... கோயிலுக்கு எப்ப வேணா போய்க்கலாமுன்னு...''

''சரி... அந்த மாணிக்க கல்லை எடுத்து அத கொஞ்ச நேரமாவது பால்ல போட்டு வைக்கலாம்ல...?''

''அப்ப நீ அந்த மரமேறி பேச்சை பெருசா எடுத்துகிட்டுருக்கேன்னு நல்லா தெரியுது...''

''காசா பணமா பாண்டி... கருத்தா இருக்கச் சொல்லிட்டு போயிருக்கான். இதுல என்னப்பா தப்பு...?''

-பழனியம்மாள் பேச்சு செண்பகக்குழல்வாய் மொழியையும் கலைத்தது. குறிப்பாக நாகமாணிக்கம் பற்றி அவள் சொன்னது காதில் விழவும் நாவலை மூடியவள் ''டாடி...'' என்றாள். அவள் அப்படிக் கூப்பிட்டது பாண்டிய மாணிக்கம் வரையில் காதில் தேனை ஊற்றினாப் போல் இருந்தது.

''ஏங்கண்ணு?''

''அது என்ன டாடி நாகமாணிக்கம்... அப்பத்தா அதை பத்தி சொன்னாங்க... ரியலி இட்ஈஸ் எ ஒண்டர்...''

''ஒண்டர்தாண்டா... அபூர்வமான விசயமில்லியா?''

''அப்ப அது உண்மையா?''

''பொறவு... இருவது லட்ச ரூபாய்க்கு நான் வாங்கியிருக்கேன்னா சும்மாவா?''

''பாம்பு மாணிக்கத்தை கக்கும்கறத சைன்ஸ் ஏத்துக்கல அது ஒரு ஃப்ராட்...''



''நீ படிச்ச புள்ள... அப்படித்தான் பேசுவே. ஆனா அது வந்த பின்னால எனக்கு எம்புட்டெல்லாம் நல்லது நடந்திச்சு தெரியுமா?''

''சரி... அதை நான் பாக்க முடியுமா?''

''உனக்கு காட்டாமலா... வா என்கூட...'' -பாண்டிய மாணிக்கம் செண்பகத்துடன் மாடி அறை நோக்கி நடந்தார். அறைக்குள் நுழைந்து கதவையும் தாழிட்டுக் கொண்டவர் ரலாக்கர் எண்ணை ஞாபகத்துக்கு கொண்டு வந்து பீரோவை திறந்தார். உள்ளே ஜாதிக்காய் மரத்தினாலான பெட்டி ஒன்றுக்குள் பச்சைப்பட்டு வஸ்திரம் மேல் ஒரு கோலிகுண்டு கணக்காய் கிடந்த அந்த நாகமாணிக்கம் ஒரு பூரணமான வட்ட வடிவத்தில் இல்லாமல் சற்று பேரபோலா ஷேப்பில் இருந்தது. கருநீல வண்ணத்தில் இருந்த அதை பார்த்த மாத்திரத்தில் முதலில் கன்னத்துல ஒத்திக்கோ என்றவர், அவர் ஒத்திக் கொண்டார்.

''இதா நாகமாணிக்கம்?''

''பொறவு...?''

''இதை யார்கிட்டையாவது காட்டி செக் பண்ணீங்களா?''

''எதுக்கு... அதான் அனுபவிக்கறேனே... எதுக்கு சோதனை''

''எனக்கென்னவோ ஒரு சாதாரண கல்லாட்டம்தான் தெரியுது''

''என்ன கண்ணு புரியாம பேசறே... இது நமக்கெல்லாம் சாமி மாதிரி. அப்படி எல்லாம் பேசாதே...'' என்று திரும்ப அதை உள்ளே வைத்தவர் பீரோவையும் பூட்டி விட்டு அறையை விட்டு மகளுடன் வெளியில் வந்தார்.

அப்போது முனியசாமி பதறிக் கொண்டு ஓடி வந்தான்.

''அய்யா... அய்யா...''

''என்னய்யா அந்த மரமேறி வந்துருக்கானா?''

''இல்லய்யா... அந்த செத்துப்போன சின்னப்பூச்சியோட மவ செத்துப் போயிட்ட ஆடுங்களோட வாசல்ல நிக்கறாய்யா... மாமிச வாடை வீசுதுய்யா...''

-முனியசாமி சொன்ன மறுநொடி பாண்டியமாணிக்கத்துக்கு புரிந்து விட்டது.

''அந்த ஆடுங்களை தூக்கி தெருவுல எறி. அவளையும் பிடிச்சு தெருவுல தள்ளி...'' என்றார்.

சொல்லிக் கொண்டே வாசல்பக்கம் வந்தார். கூடவே செண்பகக்குழல்வாய்மொழியும் வந்து போர்ட்டிகோ அருகில் கிடக்கும் குடல் பிதுங்கிய ஆடுகளைப் பார்த்தாள். கண்ணைக் கரித்தது.

கோசலையோ சற்று கலைந்த தலையோடு பாண்டியமாணிக்கத்தையே வெறித்துப் பார்த்தாள்.

''ஏண்... என்னா உன்மனசுல பெரிய கண்ணகின்னு நினைப்பா?''

-அவளிடம் அதற்கு ஒரு பதிலும் இல்லை. வெறிப்பு மட்டும் தொடர்ந்தது.

''கோட்டி மவளே... என்னாடி வெறிக்கே. எலேய் முனியசாமி'' அவர்ர கத்தவும் முனியசாமியும் இன்னும் சில வேலைக்காரர்களுடன் வந்து அந்த ஆடுகளை எல்லாம் அள்ளி எரியத் தொடங்கினான்.

அவளையும் தரதரவென்று இழுத்துச் சென்றனர்.

ஆனால் அவள் பார்வை மட்டும் பாண்டியமாணிக்கத்தை விட்டு விலகவே இல்லை.

செண்பகக் குழல்வாய்மொழிக்குள் ஆச்சரிய அதிர்ச்சி. டாடி இவ எதுக்கு இப்படி நடந்துக்கறா?'' என்று கேட்டபடியே அவர் காரின் பக்கவாட்டையும் டயர் பகுதியையும் பார்த்தாள். அதில் ரத்தம் தோய்ந்திருந்தது. புரிந்துவிட்டது.

''டாடி... நீங்கதான் அந்த ஆடுங்க மேல காரை ஏத்தி கொன்னீங்களா?'' என்று கேட்டாள்.

அவருக்கு சுருக்கென்றது.

''சேச்சே... அதுங்க குறுக்க வந்து உழுந்திடிச்சும்மா...''

''இட்ஸ் ஓ.கே... அதுங்க சாக உங்க கார்தானே காரணம்?''

''என்னம்மா நீ... உள்ள போம்மா... உனக்கு இதெல்லாம் புரியாது''

''என்ன புரியாது... பாவம் அந்த பொண்ணு... அவங்களுக்கு இந்த ஆடுகள் வெச்சுதானே ஜீவனமே நடக்குது?''

-செண்பகத்தின் நியாயமான கேள்வி நடுத்தெருவில் தள்ளப்பட்டு விழுந்து கிடக்கும் கோசலையின் காதுகளிலும் எதிரொலித்தது.



## 16

தெருவில் கிடந்த கோசலை ஆச்சர்யத்தோடு திரும்பிப் பார்த்தாள். செண்பகம் தெரிந்தாள்.

செண்பகம் மாமிசமாய் கிடந்த இறந்த ஆடுகளைப் பார்த்து மிகவே பரிதாபத்தில் இருந்தாள். முகத்தில் அதற்கான உணர் வோட்டங்கள். பாண்டியமாணிக்கமோ செண்பகம் பேசியதில் அடங்கிப் போய்விட்டது போல ஆகிவிட்டிருந்தார்.

''அம்மாடி... இந்த சிறுக்கி விஷயம் பத்தி உனக்கு எதுவும் தெரியாது. நீ உள்ற போம்மா...'' -என்று அவளை சமாளிக்கப் பார்த்தார்.

''நோடாட்... நீங்கதான் தப்பு பண்ணியிருக்கீங்க. உண்மையா பாதிக்கப்படும் போதுதான் இப்படி ஒரு கோபமும் ஒருத்தருக்கு வரும். இந்த பொண்ணுக்கும் அப்படித்தான் கோபம் வந்துருக்கு.

நீங்க பொறுப்புள்ள மந்திரியா இருந்துருக்கீங்க. யூ ஆர் நாட் எ ஆவரேஜ் சிடிசன். ஹைலி ரெஸ்பான்சிபிள் பர்சன் நீங்க போய் இப்படி நடந்துக்கலாமா?''

செண்பகக்குழல்வாய் மொழியின் ஆங்கிலமும் தமிழும் கலந்த பேச்சு பாண்டிய மாணிக்கத்தை நெளிய விட்டது. அவ்வளவையும் பார்த்தபடி இருந்த அவரது மாமா தங்கராஜ் முகத்தில் ஒரு குரூர சந்தோஷம்.

'மருமவப் பிள்ளைக்கு இப்பதான் தன் பொண்ணை தான் வளர்த்த விதமே சரியில்லங்கறது தெரியப்போகுது!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டிருந்தார்.

கோசலை கொஞ்சம்கூட பயமோ பதட்டமோ இன்றி அங்கு நடப்பதை பார்த்தபடி இருந்தாள்.

''சரிம்மா நான் இப்ப என்ன செய்யணும்கறே?'' என்று பாண்டியமாணிக்கம் மகளுக்காக இறங்கி வர தொடங்கினார்.

''செத்துப்போன இந்த ஆடுங்களுக்கு உரிய காம்பன்சேஷனைக் கொடுங்க''

''நஷ்ட ஈடு தாங்கறே... அப்படித்தானே?''+

''ஆமாம்...''

''எலேய்... இந்த செத்த ஆடுங்களுக்கு ஒரு விலையை போட்டு அவ மூஞ்சியில வீசி எரிஞ்சிட்டு வாங்கடா...'' என்று கோபமாக கூறிவிட்டு உள்ளே செல்ல பார்த்தவர்,

''நீ வாம்மா...'' என்று செண்பகத்தையும் உள் அழைக்க செண்பகமோ கோசலையை நெருங்கியிருந்தாள்.

கோசலையின் விழிகளில் துளிகூட இமைப்பில்லை. அது ஆச்சரிய வெறிப்பா இல்லை ஆத்திர வெறிப்பா என்று இனம் பிரிக்கவும் முடியவில்லை.

''சாரிம்மா... வெரிசாரி... எங்கப்பாக்காக நான் உன்கிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன். இப்ப பணம் தருவாங்க. அதை வெச்சு நீ ஆடுங்கள வாங்கி வளத்துக்கோ. என்ன?'' எனஎறு மிக பணிவான குரலில் பேசிவிட்டு திரும்பத் தொடங்கினாள். அவளது அந்த அணுகுமுறை கோசலைக்கே மிக இதமானதாகத்தான் இருந்தது. சற்றைக்கெல்லாம் உள்ளிருந்து வந்த கணக்குப்பிள்ளை செத்த ஆடுகளைப் பார்த்து தோராயமாக அவைகளின் வயதை கணக்குப் போட்டு ஒரு ஏழாயிரம் ரூபாயை கோசலை முன்னால் நீட்டினார்.

கோசலை அதை வாங்காமல் வெறித்தாள்.

''தா... புடி... என்னா முறைக்கே? உன் நேரத்துக்கு சின்னம்மா வந்துட்டாங்க. இல்லாட்டி கால ஒடிச்சு அனுப்பியிருப்போம் பாக்கறதப்பாரு...'' என்று அவர் குரலில் ஒரு காட்டம். குடிசைவாசிகள் என்றாலே கேட்க நாதியற்றவர்கள் என்கிற மமதை தான் இப்படி எல்லாம் கணக்குப்பிள்ளைகளை கூட பேச வைக்கிறது. ஆனால் கோசலை அசரவில்லை.

அவளுக்குள் வீட்டுக்குள் கஞ்சாவை வைத்து கைது செய்ததில் இருந்து பத்திரத்தில் எழுதி கைய்யெழுத்து வாங்கியது வரை எல்லாமுமே பற்றி எரிந்தபடி இருந்தது.

கணக்குப்பிள்ளை நின்று பார்த்துவிட்டு முகத்தின் மேலேயே பணத்தை வீசி எரிந்தபோது மரமேறி வேடத்தில் கடாரனும் வந்தபடி இருந்தான்.

அவனையும் அந்த காட்சி உலுக்கிவிட்டது.

வெகு அருகில் வந்தவன் ''கோசலை... என்ன இது?'' என்றான் மெல்லிய குரலில். கீழே கணக்குபிள்ளை எரிந்த ரூபாய் நோட்டுகள் சிதறிக் கிடந்தன. அதை குனிந்து பொறுக்கியபடியே அவளுடன் பேச முற்பட்டான். அதை தோட்டக்காரன் முனியசாமி பார்த்துவிட்டான். அவனிடம் பாண்டியமாணிக்கம் சொன்னதுதான் ஞாபகத்திற்கு வந்தது. உடனேயே தகவல் சொல்ல உள்ளே ஓடினான். அதை கடாரனும் கவனித்து விட்டான்.

''கோசா... ஆடுங்க செத்துகிடக்கு. இங்க உன் முன்னால பணம். எனக்கு வெளங்கிடிச்சு. கவலப்படாம இந்த பணத்தை



எடுத்துகிட்டு கிளம்பு. இன்னிக்கு வியாழகிழமை. நாளைக்கு இன்னேரம் இந்த மந்திரி வாலறுந்த நரி வலி தாங்காம ஊளையிட்ற மாதிரி ஊளையிட்டுகிட்டு இருப்பான். சுத்தி வளைச்சு ஒய்க்கப் போறோம். எல்லா திட்டமும் ரெடியாயிட்டுகிட்டு இருக்கு. நீ மனசை தேத்திகிட்டு புறப்படு... புறப்படு...' -என்று குரல் கொடுக்க கோசலையும் சற்று தெம்பு வந்தவளாக புறப்பட்டு போனாள்.

பாவம் கடாரன்...

உள்ளே பாண்டியமாணிக்கம் வேறுமாதிரி யோசித்து கொண்டிருப்பது தெரியாமல் கூண்டுக்குள் இருக்கும் ஆட்டை நோக்கி செல்லும் புலியை போல பங்களா கதவினை விலக்கிக் கொண்டு போய் நின்றான்.

அதற்குள் பாண்டியமாணிக்கமே வெளியே வந்து விட்டார். கூடவே பழனியம்மாள், தங்கராஜ் என்று அவ்வளவு பேரும்.

பாண்டியமாணிக்கம் கடாரனைப் பார்த்து,

''எலே வாலே... பாம்பெல்லாம் புடிச்சி கோடாங்கி யாட்டம் குறியெல்லாம் சொல்லியிருக்கியாம்ல... சந்தோசமப்பா ரொம்ப சந்தோசம்'' -என்று அவனை மிக நம்பி விட்டது போலவே பேசினார்.

''ஆமாங்க... நீங்களும் ஊர்ல இருந்து வந்துட்டதா காதுல விழுந்துச்சு அதான் உங்களயும் பாத்துட்டு போகலாம்னு வந்தேன்...''

''ரொம்ப சந்தோசம்... ஆமா மரமேறியா இருந்துகிட்டு எப்படிலே குறியெல்லாமும் சொல்லுறே...'' என்று கேட்டபடியே செல்போனை எடுத்து மெல்லிய குரலில் எஸ்.ஐ. இளங்கோவுக்காக முயற்சிக்கும் போது இளங்கோவே அங்கு மோட்டர் பைக்கில் வந்து இறங்கினார்.

இளங்கோவை பார்க்கவும் கடாரனுக்கு சற்று சுருக்கென்று இருந்தது. முகத்தை இளங்கோ தெளிவாக பார்த்து விடாதபடி திரும்பி நின்றுகொண்டான்.

''வாய்யா... எங்க காணமேன்னு பார்த்தேன்'' என்று பாண்டியமாணிக்கம் அவரையும் எதிர்கொண்டார். இளங்கோவை பார்க்காதபடி கடாரன் நிற்பதிலேயே பாண்டிய மாணிக்கத்துக்கு பாதி சந்தேகம் தீர்ந்துவிட்டது.

''என்ன மரமேறி... பேச்ச காணோம். எப்படி இப்படி உள்ளது உள்ளபடி குறி சொல்லுறே...? கேட்டேனே பதிலக்

காணோமே...'' - கடாரனை தன் பேச்சில் மெல்லத் தூண்டி விட்டபடியே புல்வெளியில் போடப்பட்டிருக்கும் நாற்காலிகளை நோக்கி நடந்தார்.

கடாரன் மென்று விழுங்கிய படி பதில் சொல்லத் தொடங்கினான்.

''எல்லாம் குருசாமி அருள்தாங்க. அதோட அப்பப்ப காட்டுப்பக்கம் முயல்வேட்டைக்கும் போவேங்க. அப்ப காட்டுக்குள்ள ஒரு சாமியாரை பார்த்தேங்க. அவரு என் நெத்தியில் விபூதி வெச்சு ஆசீர்வாதம் பண்ணாருங்க. அதுல இருந்தே மனசுக்குள்ளே தோணுதுங்க சாமி...'' என்றான்.

பாண்டியமாணிக்கம் பதிலுக்கு ரசித்து சிரித்தபடியே பழனியம்மாள், தங்கராஜ், முனியசாமி என்று எல்லோருக்கும் ஜாடை காட்டி விலகிப் போகும்படி செய்தார். அவர்களும் விலகிக் கொண்டனர்.

பாண்டியமாணிக்கம் நாற்காலியில் அமர்ந்து கொண்டார். எஸ்.ஐ.இளங்கோவை உட்கார சொல்லியும் உட்காரவில்லை. கடாரன்தலையை குனிந்து ஏதேதோ செய்யத் தொடங்கியிருந்தான். இளங்கோ நேருக்கு நேர் பார்த்தால் என்னதான் மாறுவேடம் என்றாலும் கண்டுபிடித்து விடுவான் என்கிற பயம் கடாரனுக்குள் மண்டிக் கொண்டு இருந்தது.

இளங்கோவுக்கும் குரலில் வைத்தே சந்தேகம் வந்து விட்டது. அதே சமயம் பாண்டியமாணிக்கம் விதரணையாக ''மரமேறி.. தாகமா இருக்கு இப்ப மரத்துல ஏறி ரெண்டு எளநியை வெட்டு பார்ப்போம்'' என்றார். கடாரனுக்கும் தவித்தபடி நிற்பதக்கு அது மேலாக தோன்றியது இடுப்புத் துண்டை எடுத்து தலைப்பாகை போல கட்டி பக்கவாட்டில் துண்டுப் பகுதி தொங்கி முகத்தை மறைக்கும் விதமாய் செய்து கொண்டே விறுவிறுவென்று சற்று தொலைவில் நிறைய காய் பிடித்திருந்த மரமாக பார்த்து ஏற தொடங்கினான். அவன் அகலவும் சற்று கிசுகிசு குரலில் பாண்டியமாணிக்கம் இளங்கோவிடம் கிசுகிசுக்க தொடங்கினார்.

''இளங்கோ, இவன் மரமேறி இல்ல... எவனோ களவாணி! பயங்கர திட்டம் போட்டு என் ஊட்டுக்குள்ள நான் இல்லாதப்ப நுழைஞ்சிருக்கான். இவன் யார்னு தெரியுதா உனக்கு?''

''எங்கய்யா முகத்தையே காட்டாம நெளிஞ்சு கிட்டேல்ல இருக்கான்.''



''விடாதே... இவனை வெளிய விட்றக்கூடாது. எப்படியும் இவன் வருவான்னு நான் கணக்கு பண்ணது சரியாப் போச்சுய்யா.''

''என் யூகம் சரியா இருந்தா இவன் அந்த மாயவன் கூட்டத்தவனா தான்யா இருக்கணும். அவனுங்கதான் வேஷம் போட்றதுல சுள்ளானுங்க.''

- இளங்கோ மாயவன் பேரைச் சொல்லவும் ஒரு வினாடி நெஞ்சடையடைத்தது பாண்டியமாணிக்கத்துக்கு.

''என்னய்யா சொல்றே... மாயவன் கூட்டமா?''

''ஆமாய்யா... அவங்கதான் எந்த மரம்னாலும் ஏறுவாங்க. இவனும் தாவி ஏறுவதை பார்த்தா அப்படித் தான்யா தெரியுது.''

''அவனுக்கு என்னா நெஞ்சழுத்தம்... இவனுங்களுக்கு என்கிட்ட இருக்கிற நாகமாணிக்கம் மேலயும் ஒரு கண்ணு இருக்கறது இப்பல்ல தெரியுது.''

''அப்ப சந்தேகமேயில்லைய்யா... இவன் அனேகமா கடாரனாத்தான் இருக்கணும்'' என்று முடிவு கட்டும்போதே மேலே ஏறி மள மளவென்று இளநீரை சீவி கீழே போடத் தொடங்கியிருந்தான் கடாரான்.

''சரி இப்ப என்ன பண்ணலாம்...!''

''அய்யா... இப்ப இவனை பிடிக்கறது பெரிய விசயமில்ல. இவன் போக்குக்கு போய் இவன், கூட்டத்தையே பிடிச்சாதான்யா நமக்கு நிம்மதி...''

''அதுக்கு நான் என்ன செய்யட்டும்...?''

''அவன் எது சொன்னாலும் சந்தேகமே படாம அத நம்பற மாதிரி நடியுங்க...''

''என் ஒரே மகளை நாளைக்கு குலதெய்வம் கோவில் பூசைக்கு போக சொல்றான். நாகமாணிக்கத்தையும் வெளிய எடுத்து பால் கிண்ணத்துல போட்டு பூசையறைல வைக்க சொல்றான்.''

''அப்ப ரெண்டுக்கும் ஒத்துக்குங்க... அவன் இறங்கறான் பேச்ச மாத்துங்க...''

பாண்டியமாணிக்கமும் பேச்சை வேகமாய் மாத்தினார்.

''அப்பறம் இளங்கோ... சர்வேயர் நிலத்தை அளந்து முடிச்சு வேலியை போட்டுட்டா உள்ள கட்டட வேலையை தொடங்க வேண்டியதுதான். கட்டட தொடக்க விழாவுக்கு நான் முதல் அமைச்சரையே கூப்பிடலாம்னு இருக்கேன். பந்தோபஸ்தெல்லாம்

பிரமாதமா இருக்கணும் என்னும் போது இளநீரை உடைத்து நீட்டினான் கடாரன். பாலைவனக்காரர்களை போல துண்டால் முகத்தை முழுதாகவே மூடிக் கொண்டிருந்தான்.

அதை பாண்டியமாணிக்கமும் ஏன் என்று கேட்காதபடி இளநீரை குடித்தார். ஒரு இளநீரை இளங்கோவுக்கும் கொடுத்தார். இளங்கோ குடித்து முடித்த வேகத்தில் ''அப்ப நான் வர்ரேன்யா...'' என்று விலகிக் கொண்டார்.

கடாரனுக்கும் பிறகுதான் படப்படப்பே குறையத் தொடங்கியது. முகத்து துண்டையும் சற்று விலக்கிக் கொண்டு பாண்டியமாணிக்கத்தையும் பார்த்தான்.

''ரொம்ப சந்தோசமய்யா... நீ சொன்னமாதிரியே நாகமாணிக்கத்தை எடுத்து பால் சொம்புல போட்டு பூசை அறைலயும் வெச்சிட்டேன். நாளைக்கு என் மவனையும் பனந்தோப்புக்கு சாமி கும்பிட அனுப்பப் போறேன். நீ சொன்னது அம்புட்டுதானா - இல்ல இன்னும் ஏதாவது இருக்கா?'' என்று மிக நம்பிக்கையோடு கேட்பது போல நடித்தார். கடாரனும் ''அம்புட்டுதாங்கய்யா... இதை செஞ்சாலே போதும் நீங்க திரும்ப மந்திரி ஆயிடுவீங்க...'' என்றான்.

''அப்படி மட்டும், ஆயிட்டாக்கா புறம்போக்குல ஒரு பத்து ஏக்கராவை உனக்கு பட்டா போட்டு ஒதுக்கிடறேன் போதுமா?''

''அது போதுங்க... அது போதுங்க... அப்பால இன்னொரு விசயங்க.''

''என்ன?''

''நாளைக்கு ஒருநாள் ஊட்ல யாரும் வாய தொறக்காம மௌனமா இருக்கறது நல்லதுங்க.''

''மௌன விரதம் இருங்கறே?''

''ஆமாங்க... என்னமோ மனசுல படுதுங்க சொல்லிட்டேன்.''

''அதுக்கென்ன... இருந்துட்டா போச்சு.''

''நாளைக்கு நான் இதே நேரத்துல வர்றேங்க. அப்ப எங்க பொண்ணு ஜாதகத்தை காட்டுங்க. அது நேரம் எப்படி இருக்குதுன்னுல்லாம் சொல்லிட்றேன்.''

''என்னிய பேச வேணாங்கறே. ஜாதகபலன் சொல்றேங்கறே நான் கேள்வி கேட்காம நீ என்னத்த சொல்லுவே?''

''நீங்க எழுதிக் கேளுங்க. நான் வாயால சொல்லிட்டுப் போறேன்...''



''அப்படிங்கறே?''

''ஆமாங்க...''

''சரி அப்ப நீ இன்னிக்கு போய்ட்டு நாளைக்கு வா...'' - அவனை உற்சாகமாக வழியனுன்பி வைத்தார். பாவம் கடாரன் விபரம் புரியாமல் புறப்பட்டான்.

## 17

பங்களாவினுள் திரும்பிய பாண்டியமாணிக்கத்தை பழனியம்மாள் காத்திருந்து எதிர்கொண்டாள்.

''பாண்டி... அந்த மரமேறி வந்திருந்தான் போலிருக்குதே?''

''ஆமாம் தாயி... நான் நினைச்ச மாதிரியே அவன் களவாணிப் பயதான்...''

''அப்புறம் ஏன் அவனை போக உட்டே?''

''எங்க போக உட்டேன்... கூட்டத்தோட புடிக்கல்ல திட்டம் போட்டுருக்கேன்...''

''கூட்டத்தோடயா?''

''பொறவு... அவனை நீ யாருன்னு நினைச்சே...?''

பாண்டியமாணிக்கம் கேட்ட சமயம் செண்பக்குழல் - பாண்டியமாணிக்கம் கேட்ட சமயம் செண்பக்குழல் வாய்மொழியும் வந்து எதிரில் அமர்ந்தான். ஆசை மகளைப் பார்க்கவும் பாண்டியமாணிக்கத்திடம் ஒரு தேக்கம். அந்த பேச்சும் தடைப்பட்டது.

செண்பகமும் கால்மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்தாள். அப்போது பார்த்து கணக்குப்பிள்ளை ஒரு லெட்ஜர் நோட்டோடு வந்து.

''அய்யா ஏழாயிரம் கொடுத்தேங்க...'' என்றார்.

''எதுக்குய்யா அவ்வளவு கொடுத்தே?'' என்று அவர் மேல் ஒரு பாய்ச்சலை காட்டினார் பாண்டியமாணிக்கம்.

கணக்குப்பிள்ளை சற்று முழித்தார்.

''அந்த கோட்டி மவளுக்கு ரெண்டாயிரம் அதிகம். ஏழாயிரத்த கொடுத்துருக்கியே... உன் சம்பளத்துலதான் அஞ்சாயிரத்த நான் கழிச்சு அட்ஜஸ் பண்ணணும்'' என்றார்.

அவர் முகத்தில் முழிப்போடு ஒருவகை பீதியும் பரவியது. கவனித்தபடியே இருந்த செண்பகக் குழல்வாய்மொழிக்கு அவரைப் பார்க்க பாவமாக இருந்தது.

''அங்க்கிள் எத்தன ஆடுங்க செத்துப் போச்சு?'' அவரை உரிமையோடு அங்கிள் என்றழைக்கவும் அவரிடம் ஒரு இன்ப அதிர்வு.

''ஒரு அஞ்சாறு ஆடு இருக்கும்மா...!'' என்றார் அந்த அதிர்வுடன்.

''ஒரு ஆடு என்ன விலை?''

''அது சாதிய பொருத்து, ஊட்டமா வளந்ததை பொருத்து இருக்கும்மா...''

''ஓ...கே... ஒரு ஆட்டுக்குட்டி இன்னிக்கு என்ன விலை?''

''நேத்து பொறந்த குட்டின்னா ஆயிரத்துல இருந்து ஆயிரத்தைந்நூறு வரை போவுமா...''

''உங்க கணக்குப்படி இந்த ஆடுங்களுக்கு எவ்வளவு தரலாம்?''

''அந்த பொண்ணுக்கு எப்படியும் பத்தாயிரம் வரை தந்தாதாம்மா கட்டுப்படியாகும். ஆனா நானே ஏழாயிரம்தான் தந்தேன்...''

''பத்தாயிரத்துக்கு ரெண்டாயிரம்தான் தரணுமா... டாடி என்னாச்சு உங்களுக்கு... ஏன் இப்படி கஞ்சத்தனமா யோசிக்கிறீங்க...?''

- கணக்கு போட்டு விட்டு அப்படியே பாண்டிய மாணிக்கம் மேல் பாய்ந்தாள். அவளது வெளிப்படை நேர்மையான மனோபாவம் நியாயத்தை மதிக்கும் போக்கு எல்லாமே பாண்டிமாணிக்கத்திடம் அறவே இல்லாதவை. நெளிந்தார். பழனியம்மாளுக்கு முகம் கோணிக் கொண்டது. தங்கராஜும் பெருமூச்சுடன் வந்து இணைந்து கொண்டார்.

நல்லவேளையாக செண்பகக் குழல்வாய்மொழிக்கு செல்போனில் அழைப்பு வரவும் எழுந்து விலகிப் போனாள்.

இவர்களிடம் கச்சேரி தொடங்கிவிட்டது.

''பாண்டி... உன் மவ கொஞ்சம்கூட உன்னை கொள்ளலை. இவ அப்படியே செத்துப் போன உன் பொஞ்சாதிய கொண்டுருக்கா...'' என்றார் தங்கராஜ் மாமா.



''ஆமா மாமா... எனக்கும் என்ன பண்றதுன்னு தான் தெரியல.''

''என்ன தெரியல. புரியலன்னுகிட்டு... நான் உன்ன பாக்க வந்துருக்கிறது'' எதுக்கு தெரியுமா?''

''சொன்னாத்தானே மாமா தெரியும்?''

''என் பேரன்... உன் மருமவன் விஜயகுமாருக்கும் உன் மவளுக்கும் முடிச்சி போடத்தான் வந்தேன். ஆனா அந்த பேச்சைத் தவிர மத்த எல்லாப் பேச்சும் இங்க நடந்துகிட்டிருக்குது...''

''அட என்ன மாமா நீ... விஜயகுமார் செண்பகத்துக்கு முறைப்பையன்... ரெண்டு பேருக்கும் பொருந்திப் போனா நான் என்ன முடியாதுன்னா சொல்லப் போறேன்?''

''அப்ப உன்பொண்ணு கிட்ட கல்யாணப் பேச்சு எடுத்துட வேண்டியது தானே?''

''அது வந்து மாமா... நான் மந்திரியா பதவில இருக்கும் போது என் மகளுக்கு கல்யாணத்த பண்ணா நல்லா இருக்கும்னு பாக்கறேன். அதுவரை கொஞ்சம் பொறுத்துருக்க கூடாதா?''

''நீ சொல்றத கேக்க நல்லா இருக்கு... ஆனா அதுக்குள்ள என் பேரன் ஒரு சிலுவை போட்ட பொண்ணை பொண்டாட்டியாக் கிட்டான்னா...?''

''என்ன மாமா குண்டத் தூக்கிப் போட்றீங்க?''

''ஆமா பாண்டி... அப்படி ஒரு பொண்ணை அவன் லவ் பண்றான்பா நம்ம குடும்பத்துக்கு இதெல்லாம் ஒத்து வருமா?''

- தங்கராஜ் கவலை தோய்ந்த முகத்துடன் கேட்கவும் பாண்டியமாணிக்கமும் யோசிக்கத் தொடங்கினார்.

''என்ன பாண்டி யோசனை... ஒருத்திய காதலிக்கறான்ன உடனே உனக்கு இடிக்குதா?''

''இடிக்காதா மாமா... மருமவப்பிள்ளை மேல நான் பெருசா நம்பிக்கைல்ல வெச்சிருந்தேன்?''

''யப்பா எல்லாம் இளவட்ட வயசுல வர்ற விசயம்தானேப்பா... இங்க உன் மவகிட்டயும் நமக்கு புடிக்காத விசயங்க இருக்கத்தானே செய்யுது?''

''என்ன மாமா நீங்க... என் மவவிசயமும் மருமகப்புள்ள விசயமும் ஒண்ணா... என்ன பேசறீங்க நீங்க?''

''இல்ல தான்... நான் ஒத்துக்கறேன் உன்னையும் கெஞ்சி கேட்டுக்கறேன். ரெண்டு பக்கமும் பல கோடிக்குச் சொத்து இருக்குது. இந்த சொத்தை அனுபவிக்க வெளிய எங்க இருந்தோ ஒருத்தன் வரதுக்கு உறவுக்குள்ளேயே கொடுத்து வாங்கிக்கிட்டா கஷ்டப்பட்டு சம்பாரிச்ச சொத்தும் கைக்கு அடக்கமா இருக்குமில்ல...

உனக்குத் தெரியாதா?''

''அந்த ஒரு விசயம்தான் மாமா இவுக ரெண்டுபேர் விசயத்துலயும் எனக்குள்ள ஒத்துப்போற விஷயம். விடுங்க... நெட்டையோ குட்டையோ என்மவ உங்க பேரனுக்குத்தான். இப்ப அதைவிட பெரிய விசயம் ஒண்ணு என் கண்ணு முன்னால நின்னுகிட்டிருக்குது. நான் அதை கவனிக்கிறேன்.''

''அப்படி என்னப்பா விசயம் அத என்கிட்டே சொல்லக் கூடாதுன்னா வேணாம் விட்று...''

''அதுசரி... உங்ககிட்டதான் முதல்ல நான் சொல்லியாகணும். இது அப்படி ஒரு விசயம்.''

''என்னப்பா?''

''மாமா! கள்ளன் மாயவனைப் பத்தி கேள்விப் பட்ருப்பீங்களே?''

''அவனை தெரியாதவங்க யாரப்பா... மேற்க சந்தனக் கடத்தல் வீரப்பன்னா இங்க தெக்க அவன்தானப்பா பெரிய கள்ளன்.''

''அந்தக் கள்ளன் என்னைக் குறிவெச்சுட்டான் மாமா...''

- பாண்டியமாணிக்கம் சொன்ன நொடி தங்கராஜிக்கும் பொறி கலங்கி விட்டது. பழனியம்மாளும் அதிர்ந்தாள்.

''நெசமாவா பாண்டி.''

''என்ன நெசமாவா... இந்த மரமேறி யார் தெரியுமா?''

''யாரு?''

''மாயவனோட ஆளு...''

''ஆத்தாடி... ஆமா எப்படி பாண்டி கண்டுபிடிச்சே?''

''எல்லாம் நாகமாணிக்கத்த வெச்சுதான். எப்ப அதை வெளிய எடுத்துவையுன்னானோ அப்பவே முழிச்சுகிட்டேன்ல?''

''குலதெய்வம் கோவிலுக்கு உன் மவளை போவச் சொன்னது?''



அனேகமா கடத்தறதுக்காதான் இருக்கும்...''

- பாண்டியமாணிக்கம் சாதாரணமாகத்தான் சொன்னார். ஆனால் பழனியம்மாளுக்கு நெஞ்சின்மேல் திம்மென்று குத்து விழுந்த மாதிரி இருந்தது.

''என்னாடா பாண்டி... இதை ரொம்ப சாதாரணமா சொல்றே எனக்கு பக்குங்குதுடா...''

''ஏம்மா... அதான் முழிச்சுகிட்டேன்ல... பொறவெதுக்கு பயந்துகிட்டு...''

''சரி பாண்டி. அவனை ஏன் போக உட்டே?''

''அவனா...'' இல்ல நானான்னு பாக்கத்தான்...''

''புரியல பாண்டி...''

''மாமா... பொறுத்திருந்து பாருங்க... எனக்கு குறி வெச்சவன் நாளைக்கு இன்னேரமெல்லாம் கம்பி எண்ணிக்கிட்டிருப்பான். இல்லாட்டி நெஞ்சுல தோட்டா பாஞ்சு பொணமாகியிருப்பான்.

தெக்க உள்ள பதினெட்டு பட்டிக்கும் நாளைக்கு தீவாளி மாமா...''

''அப்ப பெருசா ஏதோ திட்டம் போட்டிருக்குறேன்னு சொல்லு...''

''பொறவு?''

- பாண்டியமாணிக்கம் தெம்பாய் மீசையை நீவினார். அந்த நீவுதலுக்கு பின்னாலலே வேகமாய் சில முடிவுகளும் கூட... கணக்குப்பிள்ளையை அழைத்தவர்.

''நீ போய் பத்திரப்பதிவு ஆபீஸ்ல ரிஜிஸ்தரார் இருந்தா நான் கூப்ட்டேன்னு வரச்சொல்லு. அப்படியே அந்த பருத்திகிட்ட எழுதி வாங்கின பத்திரத்தை வெச்சு நிலத்தை எழுதி வாங்க பத்திரம் போடவும் ஏற்பாடு பண்ணு.''

இப்ப மணி ஒண்ணாவுது... சாயந்தரம் 5 மணிக்குள்ள சின்னப்பூச்சி இடம் என்பேருக்கு மாறியிருக்கணும்'' என்றார்.

''அப்ப கையெழுத்து போட பருத்தியும் அவ மவளும் வரணுங்களே?''

''கட்டாயமா... அவளுங்கள சப்-இன்ஸ்பெக்டர் இளங்கோ கூட்டிகிட்டு வந்துடுவாரு. நீ மத்த வேலையை முடி' என்றார்.

தங்கராஜும் அதையெல்லாம் கேட்டபடி ஒருமாதிரி கூட்டிக் கழித்தார்.

''பாண்டி... சின்னப்பூச்சியோட மூணு ஏக்கரா இடத்தைதானே முடிக்கப்போறே?''

''ஆமா மாமா...''

''அதான் சின்னபூச்சி அக்கா மவன் மாயவன் உன்னை குறி வெச்சுட்டானோ?'' - கணக்கு போட்டு கேட்டார் தங்கராஜ்.

''இருந்தாலும் இருக்கலாம் மாமா...'' என்ற பாண்டிய மாணிக்கத்தின் பதிலுக்குள் அவரும் அப்போது தான் அதைப்பற்றி யோசிப்பது போல தோன்றியது...

''என்ன யோசனை?''

''ஒண்ணுமில்ல மாமா... நீங்க கேக்கவும்தான் நானும் அந்த கோணத்துல யோசிச்சேன். ஆனா அப்படித்தான் இருக்கணும்னு தோணுது.''

''இல்லாட்டி இத்தன நாளா உன்பக்கம் திரும்பாதவன் இப்ப எதுக்கு குறி வைக்கணும்?''

''நெசம்தான்... ஆனா குறிவைச்சா போதாது... ஜெயிக்கணும்.''

''அதான் நீ முழிச்சிட்டியே. இனி அவன் எங்க ஜெயிக்கப் போறான்?''

''அவன் தோக்கப் போறது மட்டுமில்ல என் நாகரத்னத்தையும் மகளையும் தூக்க திட்டம் போட்ட அவன் மாமன் மவளை நான் தூக்கறேன். அந்த கோசலையை நான் என்ன பண்றேன்னு பாருங்க...''

- பாண்டியமாணிக்கம் ஒரு புதிய முடிவுக்கும் வந்துவிட்டிருந்தார்.

**கூ**மாச்சி மலை உச்சியில் குளுகுளுவென்று காற்று வீசிக்கொண்டிருந்தது. கடாரன் பட்சிக்குரல் கொடுத்த படியே உச்சியில் உள்ள குகை பாகத்துக்கும் வந்து சேர்ந்தான். அப்போது மாயவன் துப்பாக்கியின் உள்பாகத்தை துடைத்து சுத்தம் செய்தபடி இருந்தான். கடாரன் வரவும் நிமிர்ந்தான்.

''மாயவா என்ன தயாராயிகிட்டிருக்கியா?''

''பாத்தா எப்படி தெரியுது?''

''இப்பகூட அந்த மாஜி மந்திரி வீட்டுக்கு போய்ட்டுதான் வரேன்.''



''சும்மா அந்த பக்கம் போய் சிக்கிக்காதே.''

''அந்த பயம் உனக்கு வேண்டாம். இந்த வட்டம் நான் போனப்ப உன் மாமன் மவ கோசலையை அங்க பாத்தேன்.''

- கோசலை பேரை கடாரன் எடுக்கவும் மாயவனிடம் ஒரு சின்ன அதிர்வு. அதன்பின் ஆடுகள் செத்துக் கிடந்ததையும் அதற்கு கணக்குப்பிள்ளை பணம் தந்ததையும் கூறவும் மாயவனுக்கு நரம்பில் முறுக்கேறத் தொடங்கியது.

''என்ன மாயவா... மந்திரியோட சேட்டைய நினைச்சு ரத்தம் கொதிக்குதா?''

''கொதிக்காம... ஏழைங்கன்னா அவனுக்கு எம்புட்டு எளக்காரம்?''

''விடு... அதான் நாளைக்கு இன்னேரம் கணக்கு தீர்த்திருப்போமே...'' கடாரன் சமாதானப் படுத்தியபோது பெருமாளும் வந்து விட்டிருந்தான். தங்கத்தை எடுத்துச் சென்றவன் அதை மாரிக்கோனாரிடம் கொடுத்துவிட்டு வந்திருந்தான்.

மூவரும் உளியனுக்காக காத்திருக்கத் தொடங்கினர்.

உளியன் வந்து விட்டால் பிசகில்லாதபடி திட்டம் போடவேண்டியதுதான். ஆனால் பாண்டியமாணிக்கம் முழித்துக் கொண்டு விட்டது தெரியாதே?

முதல் முறையாக மாயவனுக்கும் எல்லாம் எதிராக முடியப் போகிறதோ?

அந்த கேள்விக்கு ஆதரவாக அந்த மலைக்காட்டில் நரி ஒன்று ஊளையிடத் தொடங்கியது. அதுவே மாயவனுக் குள்ளும் ஒருவித எச்சரிக்கை உணர்ச்சியை உருவாக்கி விட்டது.

''சகுனம் சரியில்ல பங்காளிங்களா... திட்டத்தை மாத்திப் போடணும்'' என்றான் துளியும் தாமதமின்றி.

## 18

**க**டாரன் போட்ட திட்டத்தை மாற்ற வேண்டும் என்று மயாவன் சொல்லவும் கடாரனிடம் லேசான அதிர்ச்சி.

''மாயவா... நரியோட ஊளைச் சப்தம்கறது காட்டுல எப்பவும் கேக்கற சப்தம்தானேப்பா... இதுக்கா நீ நாம போட்ட திட்டத்தை மாத்தணும்னு சொன்னே?'' என்று எதிர்கேள்வி கேட்டான்.

''சகுனம்கறதே ஒரு விசயத்த பத்தி நாம பேசும் போதோ இல்ல ஒரு காரியமா புறப்படும் போதோ அது எப்படிப் பட்டதுன்னு காட்டிக் கொடுக்கறதுதான்... நாம ஊர்கதை பேசிக்கிட்டிருக்கும் போது இதே நரி நூறு வட்டம் ஊள போட்டிருக்கலாம். அது வேற... இப்ப நீ திட்டத்தை பத்தி சொல்லும்போது செம்போத்து கண்ணுலபட்டுருந்தா இதுல நமக்குதான் வெற்றின்னு நான் முடிவு கட்டியிருப்பேன். ஆனா ஊள சப்தம்தான் காதுல விழுந்திச்சு இதுக்கு அர்த்தம் எதிரி நீ நினைக்கிற மாதிரி ஏமாந்தவன் இல்லேங்கறது தான்...''

- மாயவனின் விளக்கம் கடாரனை கட்டிப் போட்டது.

''சரி மாயவா... நாளைக்கு நாம வேட்டைக்கு போக வேண்டாம். வேற எப்பப்பா போகப் போறோம். அங்க அந்த மந்திரியோட அட்டகாசம் அதிகமாயிட்டே போகுதுப்பா...'' என்றான் பெருமாள்.

''ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கத் தெரியணும். இல்லாட்டி சட்டி சுட்டுச்சு கையும் விட்டுச்சின்னு ஆயிடும்.''

மாயவன் முளைக்கம்பு ஒன்றை ஈட்டி போல் சீவியபடியே சொன்ன பதிலுக்குள் நல்ல அழுத்தம்.

''சரிப்பா அவன் வரல நம்ம அடுத்த திட்டம் என்ன?''

''சொல்றேன் உளியன் வரட்டும்... நாலுபேருமா வனக்கருப்பன் சன்னதிக்கு போவோம். அங்க அவன் முன்ன திட்டம் போட்டு கட்டம் கட்டுவோம். அதுதான் நமக்கும் நல்லது.''

''அப்ப நாம இப்ப அடிவாரம் வனக்கருப்பு கோவிலுக்கு போறோமாப்பா...''

''நிச்சயமா?''

''வெறும் கைய வீசிகிட்டா போக...?''

''யார் அப்படி சொன்னது? சுருட்டு, சாராயம், சாவக்கோழி மூணையும் தயார் பண்ணுங்க...''

''அப்ப அத்த வாங்க நான் கீழ ஊருக்குள்ள போவணுமேப்பா...''

''இப்பவே புறப்படு...''

- மாயவன் கட்டளை படுவேகமாய் வேலை செய்தது. கடாரனே அவைகளை வாங்கிட கீழிறங்கத் தயாரானான்.

''நில்லு...''



''ஏ மாயவா...''

''சாமி கொடுத்த மை உங்கிட்ட இருக்குல்ல?''

''ஓ... அத்த பூசிகிட்டு போங்கறியா?''

''காரணமில்லாம எதுவுமே இந்த உலகத்துல நடக்கறது கிடையாது. சித்தர்சாமி நேர்ல வந்து தந்நதுருக்குறார்னா நிச்சயம் அர்த்தம் இருக்கணும்.''

''புரியுது மாயவா... பூசிகிட்டே போறேன்...''

- கடாரன் அவன் எதிரிலேயே இடுப்பு மடிப்பில் இருந்து அந்த மை டப்பாவை எடுத்து ஒரு பொட்டு வைத்துக் கொள்ளும் அளவு மையை ஆள்காட்டி விரலால் தொட்டு பின் இரு புருவத்தின்மீதும் பூசிக்கொண்டான்.

''வெரசலா போய் வா... அந்தி கருக்கறதுக்குள்ள ஐயனை கும்புட்டாவணும்...''

''அவ்வளவு வேகமாவா... எப்பவும் போல நடு சாமத்துக்கு போவோம்பா...''

''சரி... பாத்து சூதானமா யோட்டுவா...''

- மாயவனின் எச்சரிக்கையை தொடர்ந்து கடாரன் மேலிருந்து இறங்கத் தொடங்கினான். அவன் விலகவும் உளியன் வரவும் சரியாக இருந்தது.

உளியனிடம் மூச்சின் இளைப்பு -

''ஏண்டா மெதுவா வரவேண்டியது தானே?''

''விஷயம் அப்படி மாயவா...''

''என்ன சேதி?''

''இப்ப மணி என்னாவுது?'' - உளியனின் கேள்விக்கு குகைக்குள் பாறை ஒன்றின் மேல் கிடந்த தனது அந்தக் கால கை கெடிகாரத்தை எடுத்து பார்த்தான்.

மணி மூன்றைக் காண்பித்தது!

''இன்னும் கொஞ்ச நேரத்துல வத்தலகுண்டு ரெஜிஸ்தர் ஆபீஸ்ல உன் மாமன் சின்னப்பூச்சியோட இடத்தை மந்திரி தன் பேருக்கு பதிஞ்சுக்கறான்.

அடிவாரத்துல இருக்கைல என் செல்போனுக்கு சேதி வந்துச்சு. ஸ்டேஷன்ல லாக்அப்ல இருக்கற நம்ம பய ஒருத்தன் காதுல நம்ம பய ஒருத்தன் காதுல விசயம் கசியவும் அவன் அங்க

போதும் புறப்படுங்கடி...'' என்று அடக்கியே வாசித்தார். அவர்களும் அரைமனதாக புறப்பட்டனர்.

பத்திரப்பதிவு அலுவலகம்!

கசகசவென்று கூட்டம். அந்த கால டைப்ரைட்டரை வைத்துக் கொண்டு வயதான ஒருவர் மூக்குமேல் உட்கார்ந்திருக்கும் கண்ணாடி வழியாக பத்திர விஷயங்களை டைப் செய்தபடி ஒருபுறமும், கட்டுக்கட்டாக ரூபாய் நோட்டுக் களை எண்ணிக் கொண்டு சிலர் மறுபுறமும் நின்றபடி இருக்க இடைத்தரகர்கள் நடுவில் புகுந்து புகுந்து வந்தபடி இருந்தனர்.

பாண்டியமாணிக்கத்தின் கார் வரவும் கூட்டத்தில் ஒரு சலசலப்பு அலுவலகத்துக்குள் ஒரு மேடைமேல் மேஜை நாற்காலி போட்டு அமர்ந்திருந்த பதிவாளரே பாண்டிய மாணிக்கம் வருவதைப் பார்த்து எழுந்து வந்து வரவேற்றார்.

''என்னா பச்சமுத்து... நல்லாயிருக்கியா?''

''உங்க புண்ணியத்துல ரொம்ப நல்லாயிருக்கேங்க...''

''சரி... சரி... நம்ப விஷயத்த மளமளன்னு முடிச்சுவிடு பார்க்கலாம்...''

''எல்லாம் ரெடியா இருக்குதுங்க பார்ட்டி கையெழுத்து போட்டா முடிஞ்சிச்சுங்க...'' - என்று பதிவாளர் சொல்லும் போதே கோசலையும், பருத்தியும் அங்கு அழைத்து வரப்பட்டனர். கூடவே வீரைய்யனும் இருந்தான். இளங்கோ முகத்தில் ஒரு குறுஞ்சிரிப்பு!

பதிவாளர் பின்புறமுள்ள சுவர் கெடிகாரத்தில் மணி ஐந்தைக் காட்டிக் கொண்டிருந்தது. பதிவாளர் அலுவலக ஊழியர்கள் மளமளவென்று கோசலையிடமும் பருத்தி யிடமும் கையெழுத்து ரேகை என்று வாங்க வேண்டியதை வாங்கி பத்திரப் பதிவையும் முடித்தார்கள்.

''அய்யா எல்லாம் முடிஞ்சிச்சு. இனி அந்த இடம் உங்க இடம். இரண்டு நாள்ல மொத்த பத்திரமும் கையெழுத்தாகி எல்லா ஃபார்மாலிட்டீசும் முடிஞ்சு கைக்கு வந்துடுங்க. நானே வீட்ல கொண்டு வந்து தரேங்க...'' என்றார் பதிவாளர்.

கோசலையும் பருத்தியும் மெல்ல வெளியேற்றப்பட வீரைய்யன் எஸ்.ஐ. இளங்கோவிடம் ''ஐயா... கைக்கு இன்னும் பணம் வரலீங்களே'' ஆரம்பித்தான்.

''அதை கைய்யெழுத்து போட்ட அவங்கில்லய்யா கேக்கணும்'' என்று இளங்கோ சொல்லவும் பகீர் என்றது.



''என்னய்யா சொல்றீங்க?''

''போய்யா... போய் ஐயாவோட தோட்டத்துல வேலைபார். யாரோட இடத்துக்கு யாருய்யா பணம் கேக்கறது?''

''ஐயா...?''

''என்ன ஐயா உய்யான்னுகிட்டு...''

''என்னய்யா இப்படி பேசறீங்க. கஞ்சாவை நான் மட்டும் கொண்டு போய் வைக்காட்டி அவங்க வழிக்கு வந்துருப் பாங்களா?''

''அப்ப அதுக்கு எனக்கு ஏதாவது கொடுங்கன்னு கேளு... அத்த உட்டுட்டு மொத்த நிலத்துக்கான பணத்தையும் நீ கேட்டா என்ன அர்த்தம்?''

''சரிய்யா பணத்தை அவுக கைலயாவது கொடுங்க.''

''அவுக கேக்கவேயில்லையே... அம்மாவும் பொண்ணும் பிர்லாவோட பேத்தி மாதிரில்ல நிக்கறாளுங்க.''

- இளங்கோ பச்சோந்தியை விட வேகமாக மாறியதை வீரய்யனால் ஜீரணிக்க முடியவில்லை. பாண்டியமாணிக்கம் தன் காரை நெருங்கி விட்டிருந்தார். அவரிடமே பேசிவிடும் ஆசையுடன் ஓடினான். கதவைத் திறந்து கொண்டு காருக்குள் ஏறிவிட்டவரை பார்த்து அலறினான்.

''ஐயா நில்லுங்கய்யா...''

அவன் கத்துவதை கோசலையும் பருத்தியும் கூடப் பார்த்தனர்.

''என்னய்யா?''

''பணம் தராம போறீங்களேய்யா.''

''என்ன பணம்... நான் எப்ப உனக்கு தரணும்?''

''எனக்கு இல்லீங்க... எங்க அக்காக்கு...''

''அவள வந்து கேக்கச் சொல்லு... திமிறா நின்னுகிட்டு அப்படியே மொறைச்சிக்கிட்டே இருந்தா ஆச்சா...''

''இருங்கய்யா போய் கூட்டிகிட்டு வரேன்...''

- அவரும் என்னதான் நடக்கிறது பார்ப்போமே என்பது போல காரில் அமர்ந்தபடியே பார்த்தார்.

வீரைய்யன் பருத்தியிடம் போய் மன்றாட தொடங்கினான்.

''யக்கா... போக்கா... போய் இடத்துக்கானகாசை கேட்டு வாங்கிக்க இப்படி வீம்பா இருந்தா உனக்குதான்கா நஷ்டம்... போக்கா... கோசலை நீயாச்சும் போய் கேளு...''

- வீரைய்யன் தொனப்பி எடுத்தான். ஆனால் பருத்தி கீழே குனிந்து தரையில் இருந்து மண்ணை எடுத்தாள்.

''இந்த மண்ணுமேல சத்தியம்... அவனுக்கு சும்மா கொடுத்தாலும் கொடுப்பேன். அவன்கிட்ட ஒரு வியாபாரம் மட்டும் கிடையவே கிடையாது. வியாபாரம்னு வந்துட்டா வித்தேன் வாங்குனேன்னு கணக்கு நேராயிடும். ஆனா நான் இப்படியே போனாதான் என்கிட்ட தானம் வாங்குனான் மந்திரின்னு ஊர் சொல்லும். வாங்கற தானத்தை சந்தோஷமா வாங்கணும். தர்றவங்களும் சந்தோஷமா தரணும். ஆனா இங்க அதுக்கு மட்டும் இடமில்லாம போயிடுச்சு. என் வயிறெரிஞ்சு சொல்லுறேன்... அந்த மந்திரி வாழ்க்கையலயும் சந்தோசமே இல்லாம போகப் போவுது அதை இந்த ஊரும் பாக்கும். வர்றேன். வாடி போவலாம்'' என்று கோசலையை இழுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினாள் பருத்தி.

## 19

பருத்தி கண்ணீரோடு பேசியது வீரைய்யன் மனதைத் தைத்தது. முதல் தடவையாக அப்போதுதான் தன்னை ஒரு முட்டாளாகவும் அவசரக்காரனாகவும் உணர்ந்தான். அப்போது சற்றும் எதிர்பாராதபடி அவன் முன் வந்த கோசலை கமறுதலுடன் காரி உமிழ்ந்தாள். எச்சில் திப்பிகள் அவன் நெற்றியில் மேல் பட்டு மூக்கின் மேல் ஒழுக ஆரம்பித்தது. அதை பார்த்துக் கொண்டிருந்த எஸ்.ஐ. இளங்கோ வீரைய்யன் அருகில் வந்து ''ஏய்யா அவ காரிஉமியறா... மரம் மாதிரி நிக்கறே. பதிலுக்கு ஒரு அறை உடமாட்டே அவகன்னத்துல...'' என்றார்.

வீரைய்யனுக்கோ அவரைத்தான் அறைய வேண்டும் என்று தோன்றியது. பல்லைக் கடித்துக் கொண்டான். கோசலையும் பருத்தியும் வெளியேறி விட்டனர். பாண்டியமாணிக்கமும் தனது காரில் ஏறிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தார். வீரைய்யனும் முகத்தை துடைத்துக் கொண்டு இளங்கோவை வெறித்து வெறித்து பார்த்தபடி விலகத் தொடங்கினான்.

ரிஜிஸ்தர் ஆபீசுக்கு வந்திருந்த பலரும் வீரைய்யனை மிக பரிதாபமாக பார்த்தபடி இருந்தனர். இளங்கோவும் தன் மோட்டார் பைக்கை நோக்கி நடந்தார். அவரது செல்போனில் 'விளையாடு மங்கத்தா' எனும் அழைப்பொலி திரையில் பாண்டியமாணிக்கம் பெயர்.



''சார் சொல்லுங்க...''

''என்ன அந்த வீரைய்யன் தாட்பூட்டுங்கறானா?''

அதெல்லாம் இல்லய்யா... அந்த சோகலைதான் அவன் முகத்துலயே காறி உமிஞ்சிட்டா.''

''அவளுக்கு ரொம்பதான்யா கொழுப்பு. ஆடு மேய்யறவளுக்கு இவ்வளவு இருந்தா நமக்கு எவ்வளவு இருக்கணும்?''

''விடுங்கய்யா... இவன் என்கிட்ட பணம் கேட்டான். வித்தவங்களே கேக்கல நீ கேக்கறேன்னேன். ஆடிப் போயிட்டான்.''

''விரட்டி விடு... இனி எந்த நாயும் தேவை இல்லை... அதான் கையெழுத்தாயிடுச்சுல்ல?''

''நான் பாத்துக்கறேன்யா...''

''அப்புறம் நாளைக்கு ரொம்ப முக்கியமான நாள். ஞாபகம் இருக்குல்ல?''

''நல்லாய்யா... உங்க குலதெய்வம் கோவிலை சுத்தி போலீசை காவலுக்கு போட்டுட்றேன். அதேபோல வீட்டுக் குள்ளயும் டிபார்ட்மென்ட் நுழைஞ்சுடும். அவன் வந்தாக்கா முதலை வாய்ல சிக்குன ஆடுகதிதான்...''

''நீ சொல்லும்போது கேக்க நல்லா இருக்கு... ஆனா மாயவன் ஜெகஜ்ஜாலன் கடைசி நிமிசத்துல ஏதாவது தகிடுதத்தம் பண்ணி தப்பிக்க பார்ப்பான் கவனம்...''

''அதெல்லாம் இந்த வட்டம் எதுவும் பண்ண முடியாதுய்யா... தேனி டி.எஸ்.பி. கிட்ட பேசி ஒரு பட்டாலியன் போலீசை எப்பவோ ரெடி பண்ணிட்டேன்யா.''

''மாயவனை மட்டும் உசுரோடயோ இல்ல பொணமாவோ நீ மட்டும் புடிச்சிடு உன்ன இந்த மாவட்டத்து எஸ்.பி. வரைதூக்கிட்டு போய் நிறுத்தறேன்...''

''சந்தோசம்யா...''

- செல்போனை அணைத்து பாக்கெட்டிலும் போட்டுக் கொண்ட எஸ்.ஐ. இளங்கோ முகத்தில் ஒரு சந்தோஷச் சிரிப்பு!

இரவாகிவிட்டது.

வன இரவுகள் வினோதமானவை...

ரொய்ங்... ரொய்ங் எனும் சுவர் கோழிகள்... குளுமை காரணமாக அடங்கிக் கிடந்த நிலையில் இருந்து விடுபட்டு கன்னாபின்னாவென்று பறந்தபடி இருக்கும் தெள்ளுப் பூச்சிகள்... இது போக கருவண்டுகளும், கடுகு வண்டுகளும் மனித உடம்புகளை கண்டுவிட்டால் அந்த உடம்பின் வியர்வை வாடைக்கும், உஷ்ணத்திற்கும் அவர்களையே சுற்றிச் சுற்றி வரும்.

மாயவனும் அவன் சகாக்களும் கறுப்பு போர்வைக்குள் உடம்பை அடக்கிக் கொண்டு கையில் தீப்பந்தமோடு புறப்பட்ட போதும் அதுதான் நடந்தது.

இரவுப் பொழுது பிடிக்காத உள்ளான் என்னும் ஒரு பறவை ஒன்று உண்டு. அது மட்டும் அவ்வவ்போது ஹக்கக் ஹக்கக்... என்று தொண்டையில் எலும்பு சிக்கும்போது நாம் செருமுவது போல செருமும்.

அப்படி ஒரு உள்ளானும் செருமிக் கொண்டிருந்தது.

''பாத்து வாங்கப்போய்... மழை பேஞ்சு நச நசன்னு வேற இருக்கு. அட்ட பூச்சி தொத்துனா அரைபடி ரத்தத்த குடிச்சுட்டு தான் விடும்...'' என்ற மாயவன் படையை நடத்தி செல்லும் தளபதி போல முன்னால் நடந்தபடி இருந்தான். அடர்வான தோளுயர காட்டுச்செடிகளுக்கு நடுவில் பார்த்துப் பார்த்து நடக்க வேண்டும். மலைபாம்பு இருந்து காலைக் கவ்வி விட்டால் முடிந்தது கதை... என்ன முயன்றாலும் காலை விடுவித்துக் கொள்ள முடியாது. அதற்காக முயலும் போது அப்படியே தன் மற்ற உடல் பாகத்தால் வளைத்துப் பிடித்து எலும்புகளை அப்பளம் போல நொறுக்கி விடும்.

காட்டிலே கிடந்து கிடந்து மாயவன் கற்ற பாடம் அவனுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்த மாயவன் மூக்கை வேறு வித வாசம் ஒன்றும் ஊடுருவியது யாரோ சுருட்டு புகைத்திருக்க வேண்டும் என்றால் மனித நடமாட்டம் இருந்திருக்க வேண்டும். கூமாச்சி மலை உச்சியில் மனித நடமாட்டம் என்றால் அது தன்னைக் குறிவைத்து வரும் வன இலாகா போலீசாக மட்டுமே இருக்க முடியும் என்பதுதான் மாயவனின் அனுமானம்.

இரவுக் குளிருக்கும் சுருட்டு இதமானது.

எனவே வேகமாக சுதாரித்தவன் அதே வேகத்தில் திரும்பி, ''எலேய் ஆயுதங்கள எடுத்துக்குங்க... சுத்தி ஆள் இருக்கு...''



என்றான் சற்று கிசுகிசு குரலில். அதை தொடர்ந்து கடாரன் இடுப்புக் கட்டாரியை எடுத்துக் கொண்டான். பெருமாள் தன் முரட்டு துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். உளியன் கைவசம் இருக்கும் வேல் கம்பையே ஆயுதமாக்கிக் கொள்ள தயாரானான். நான்கு பேருமே நான்கு தீப்புள்ளிகளாய் நாலாபுறமும் நகர்ந்து சென்று பரபரப்போடு பார்த்தனர்.

''எங்க மாயவா யாரையும் காணோம்?'' எனும்போது மேலே மரத்தில் சலசலப்பு கேட்டது. பார்வை மேலேறவும் அங்கே மொத்த உடம்பையும் போர்வைக்குள் மறைத்துக் கொண்டு முகம் மட்டும் தெரியப் பார்த்தபடி இரண்டு பேர் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன் கையிலதான் சுருட்டும் இருந்தது.

உளியன் அடுத்த நொடியே வேல்கம்பை அவர்களை நோக்கி வீச தயாரானான்.

''ஐயோண்ணே... நாங்க பாம்பு பிடிக்கற மூப்பமாருங்க எதுவும் பண்ணிப்புடாதீங்க...'' என்று பதில் குரல் ஒலிக்கவும்தான் உயர்த்திய கையை இறக்கினான்.

''இறங்குங்கடா... பாம்பு பிடிக்கறவங்களுக்கு மரத்து மேல என்னடா சோலி?'' என்ற பெருமாளின் அதட்டல் குரல் அவர்களை சரசரவென்று கீழிறங்கியது.

அவர்கள் அருகில் தீப்பந்தமுடன் செல்லவும்தான் அவர்கள் போலீஸ் இல்லை. மூப்பர்கள்தான் என்பது தெரிந்தது. ஒருவன் கையில் ஒரு மூங்கில் கூடை இருந்தது.

''என்னா இது?''

''பாம்படக் கூடயா...? என்னாடா சொல்றே?''

''பிடிக்கற பாம்பை இந்த கூடைல போட்டு அடைக்கறதால இதுக்கு பாம்படக் கூடன்னு பேர்.''

''எதுக்கு மரத்து மேல ஏறுனீங்க?''

''இன்னிக்கு அம்மாசிங்க...''

''அம்மாசியா... ஓ அம்மா வாசையா... சரி அதுக்கென்ன?''

''அம்மாசி அன்னிக்கு நாக ரத்னப்பாம்பு வெளிய வருங்க...''

''நாகரத்னப் பாம்பா?''

''ஆமாங்க... நல்ல முத்துன பாம்பு நூறு வருசத்து பாம்பு.''

''பார்றா... அந்த பாம்புதான் நாகரத்னம் கக்குமா?''

''ஆமா... இந்த மலைக்காட்டுல அப்புடி ஒரு பாம்பு இருக்கறதா எங்களுக்கு அருள் வாக்குல வந்துச்சு. அதான் இங்க வந்து காத்துருக்கோம்.''

''அருள் வாக்குல வந்துச்சா... என்ன சொல்றே நீ?''

''ஆமாங்கோ... மேகமலைல ஒரு சித்தர்சாமி இருக்காரு. அவர்தான் எங்க வழிகாட்டி அவர்தான் சொன்னாரு. அவர் எதை சொன்னாலும் எங்களுக்கு அருள்வாக்கு தான்...''

''மாயவா இவங்க சொல்றத நீ நம்பறியா?''

- கடாரன் சந்தேகப்பட்டான்.

''எலேய் புளுகாதீங்க... நீங்க போலீஸ் தானே?''

''அய்யோசாமி... போலீஸ்னாலே எங்களுக்கு பயங்க. நாங்க பாம்பு புடிக்கறதுக்கு லைசென்ஸ் இருக்குதா அது இருக்குதான்னு உசுரை எடுத்துருவாங்க...''

''அவர்கள் இருவர் பேசிய விதமும் தோற்றமும் மாயவன் முகத்தில் ஒரு நம்பிக்கையை உருவாக்கியது.

''கடாரா, இவங்கள சந்தேகப்படாதே. பாவம் இவங்க.''

''அதுசரி மாயவா... இந்த பாம்பு நாகமாணிக்கம் கக்கும்கறதெல்லாம் நெசமா... நீ நம்புறியா?''

''அட என்ன சாமி நீங்க. எங்க முப்பாட்டன்ல ஒருத்தர் நாகமாணித்த எடுத்து கொடிகட்டி ஆண்டாருங்க... அது கைல இருந்தா அவ்வளவு அதிர்ஷ்டம்.''

''அது எப்படிய்யா இருக்கும்... வைரக்கட்டி மாதிரி இருக்குமா?''

''தீக்கங்கு மாதிரி இருக்குங்க... பகல்ல பார்த்தா கருநீலமா தெரியும்னு சொல்வாங்க... நாங்களும் எங்க காலத்துல ஒரு கல்லையாவது எடுத்துடணும்னு பாக்கறோம். ஆனா எப்பன்னுதான் தெரியில...''

''இந்த மலைல அப்படி ஒரு பாம்பு இருக்குன்னு நீ சொன்னது தான்யா ஆச்சர்யம். ஒரு நா கூட அது எங்க கண்ணுல பட்டதே இல்லையே...''

''அது எப்பவும் புத்துக்குள்ள சுருண்டு தாங்க கிடக்கும். பெரும்பாலும் பூமியில் இருக்காது. மர பொந்துக்குள்ள இருக்கும் மரத்த உட்டும் இறங்காது. அம்மாசி அன்னிக்கு மட்டும் இருட்டும் இரை கண்ணுக்கு தெரியாம மரபொந்தை விட்டு வெளிய வரும்...



அப்படி வந்தப்ப இரை சிக்கிட்டா வாய்ல இருக்கற கல்லை உமிஞ்சுட்டு இரையை விழுங்கும் திரும்ப கல்லை விழுங்கிட்டு போய் படுத்துக்கும்னு சொல்வாங்க. அப்படி அது தேடி வந்து புடிக்கணும்தான் அதோ அங்க ஒரு கோழிக்குஞ்சை கட்டி வெச்சிருக்கோம் பாருங்க.''

- அவன் ஒரு புதரை நோக்கி காட்டினான். செத்துப் போய் கோழிக்குஞ்சு ஒன்றும் தொங்கியபடி இருந்தது.

''அடேங்கப்பா இப்படி எல்லாம் கூட விசயமிருக்குதா...''

''சரி சரி... நீங்க உங்க ஜோலிய பாருங்க... நாங்க வர்றோம். பங்காளிங்களா புறப்படுங்க...'' - மாயவன் வேகமானான். மணிக்கட்டு கெடிகாரம் மணி 11.30ஐ காட்டியது. நால்வரும் விலகவும் அவர்களும் சரசரவென அவர்களின் தீப்பந்த வெளிச்சம் இருக்கையிலேயே ஏறிவிட வேண்டும் என்பது போல ஏறினர்.

வழியில் உளியனுக்குள் நாகமாணிக்க விஷயம் நெறிசலெடுத்தது.

''கடாரா... மந்திரிகூட ஒரு கல்லு வெச்சிருக்கான்ல?''

''ஆமாம்ப்பா... நாளைக்கு அதையும்ல அடிக்கறதா இருந்தோம். ஆனா மாயவன் திட்டத்தை மாத்தணும்னு சொல்லிட்டான்ல...

''பேசாம வாங்க... வனக்கருப்பருக்கு பூசைய போட்டுட்டு எதையும் பேசுவோம். அங்க நாம பேசற எந்த ஒரு பேச்சும் வீண்போகாது. நம்ம சாமியும் நின்னு காப்பாத்தும்...'' எனும்போது மலையின் அடிப்பாகம் விட்டது. அடிப்பாகத்தில் செக்போஸ்ட் ஒன்று உள்ளது. அதில் தூங்கி வழிந்தபடி ஒரு வாட்சர் மட்டும் இருப்பான். ஆனால் அன்று அந்த நேரத்தில் விளக்கெறித்தபடி இருந்தது. உள்ளேயும் பேச்சு சப்தம்.

நால்வரும் ஓசைப்படாமல் அந்த செக்போஸ்ட்டை தாண்ட திட்டம் போட்டு தீப்பந்தத்தை அணைத்தனர்.

பூனைபோல நடந்து செக்போஸ்ட்டை ஒட்டி நடந்தனர். அப்போது உள்ளே பேசும் குரல் காதில் கேட்டது. உள்ளே இரண்டு பேர் சீட்டு விளையாடியபடி பேசிக் கொண்டிருந்தனர்.

''அடுத்த வாரம் என் மாமன் மகனுக்கு சின்னமனூர்ல வெச்சு கல்யாணம்ப்பா... நாலு நாள் லீவு வேணும். எப்.ஆர்.ஓ.கிட்ட எப்படி கேக்கறதுன்னுதான் தெரியலை...''

''அது சரி உன்மாமன் மவன் என்ன பண்றான்?''

''தேனி போலீஸ் ஸ்டேஷன்ல ஏட்டா இருக்கான்பா.''

''குடும்பமே போலீஸ்கார குடும்பம்னு சொல்லு.''

''என்ன பொழப்புப்பா இந்த பொழப்பு... பாரு இந்த பேக்காட்டுக்குள்ள தனியா கிடக்கோம். யானை வந்து மிதிச்சாலோ புலி வந்து அடிச்சாலோ முடிஞ்சிச்சு நம்ம கதை...''

''நல்ல பேச்சு பேசுப்பா...''

''என்ன நல்ல பேச்சு...? என் மாமன் மவனும் புலம்பறான். நாளைக்கு வீட்ல புதுமாப்பிள்ளைன்னு விசேஷம் வெச்சிருக்காங்க. ஆனா பாரு... டி.எஸ்.பி. கூப்ட்டு பனங்காட்டு கண்ணாரம்மன் கோவிலை சுத்தி மாறுவேஷத்துல நிக்கச் சொல்லியிருக்காராம். கேட்டா இந்த கள்ளன் மாயவன் நாளைக்கு அங்க வர்ற திட்டம் இருக்குதாம். அமுக்கி புடிக்கவாம்... என்னப்பா பொழப்பு இது?''

- அவர்கள் பேசிக் கொண்டதில் இறுதியாக சொன்னது நால்வர் காதுகளிலும் விழவும் நால்வரிடமுமே நடுக்காலில் ஊசி ஏறியது போல ஒரு அதிர்ச்சி!

## 20

**கா**தில் விழுந்த செய்தியோடு ஓசைப்படாமல் அந்த செக்போஸ்ட்டை கடந்தவர்களிடம் பேச்சு மூச்சு இல்லை. நடக்கும்போது காலடிகள் பட்டு இலை தழை வதங்கும் சப்தம் மட்டுமே கேட்டது.

மாயவன் நெஞ்சு நிமிர்த்தி முன் சென்றபடி இருந்தான்.

மற்ற மூன்று பேரும் அவன் பேச்சை கேட்டதற் காகவும், அவனுக்கிருக்கும் அனுபவ அறிவையும் எண்ணி பெருமிதப் படவும் செய்தனர். அடர்த்தியான காட்டுப் பகுதி மெல்ல குறைந்து புற்கள் மட்டுமே வளர்ந்திருந்த சமவெளிப் பகுதி தட்டுப்படவும் தீப்பந்தங்களை நான்கு பேருமே அணைத்தனர்.

அங்கிருந்து வெகுதூரத்தில் முல்லையாறு பாயும் கரைப்பகுதியில் ஒரு காட்டுப் பகுதி தொடங்குகிறது. அந்த காட்டுக்குள்தான் இருக்கிறது வனக்கருப்பர் சன்னதி.

விசுக்விசுக்கென்று நடந்தாலே அரைமணி நேரத் தொலைவுதான் மாயவன் பாண்டியமாணிக்கத்தின் கணக்கை எப்படி நேர் செய்யலாம் என்கிற சிந்தனையிலேயே நடந்தான்.



இடைவழியில் ஒரு ஐம்பதடி உயரத்திற்கு கரடு ஒன்று! பெரும்பாறைளும், கத்தாழைப் புதர்களுமாய் வழிமறித்தது. அந்தக் கரட்டில் சாமியார் குகை என்று ஒன்று உண்டு. ஒரு சாமியார் ஒருவர் அங்கே இருந்து அங்கேயே செத்தும் போனார். அவரை அங்கேயே குழி தோண்டி புதைத்தும் விட்டனர். அதற்குப் பின் அங்கே ஆவி வடிவில் நடமாடியபடி இருப்பதாகவும் ஒரு பேச்சு உண்டு. அதனால் அந்த கரட்டுப் பக்கம் வரவே ஜனக்கூட்டம் அஞ்சும். காட்டைப் பார்த்ததும் மாயவனுக்குள்ளும் சாமியார் நினைவுகள் எழும்பி நின்றன.

பின் தொடர்ந்து வந்தபடி இருந்த மூவரும் ஆளுக்கொரு பீடியை எடுத்து பற்ற வைத்துக் கொண்டனர். சுமாரான குளிருக்கு அந்த பீடியால் கொஞ்சம் போல கதகதப்பு.

சாமியார் கரட்டை நெருங்க நெருங்க ஒருவிதமான சப்தம் மாயவனுக்கு கேட்டது. சுதாரித்து கொண்ட மாயவன் தேங்கி நின்றான். பின்னால் வந்தவர்களும் ஓசைப்படாமல் அருகில் வந்தனர். அவர்கள் காதுகளிலும் சப்தம் கேட்டது.

''நெருங்கிப் போய்த்தான் பாப்பமே...?'' - என்று காற்றுக் குரலில் கேட்டான் உளியன்.

''சாமியார் ஆவியா இருக்குமோ?'' கடாரன் சற்று பயந்தான்.

''உள்ள குகைக்குள்ள ஏதோ தப்பு நடக்குது...'' என்று மாயவன் மட்டும் அவர்கள் எதிர்பாராத பதிலைச் சொன்னான். அடுத்தநொடி இருபுறமும் கைகளை நீட்டினான். அவர்கள் அவன் கையோடு தங்கள் கையை கோர்த்துக் கொண்டனர். நான்கு பேருமாக கபடிப்போட்டியில் எதிரியை பிடிக்கும் ஒரு மதில் சுவரைப் போல மெல்ல முன்னேறினர்.

நெருங்க நெருங்க ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

''விடுங்கடா... போதுண்டா... வலிக்குதுடா... உங்க கால்ல கூட உழுவறேண்டா...'' என்று அந்தக் குரலிடம் கெஞ்சல். சாமியார் குகைக்குள் இருந்துதான் குரல் வந்தபடி இருந்தது. உள்ளே சிறியதாய் ஒரு மெழுகுவர்த்தி வெளிச்சம். மூன்று பேரிடம் ஒரு பெண் சிக்கியிருந்தாள். ஒருவர் மாற்றி ஒருவர் அவள் மேல் விழுந்து எழுந்து கொண்டிருந்தனர். மிருகங்கள்கூட ஒரு முறைக்கு மேல் வற்புறுத்தாது...

அவர்களில் ஒருவன் யதார்த்தமாக குகைக்கு வெளிப்பக்கம் பார்த்தான். கறுப்புத் தூண்களைப் போல மாயவனையும் அவன் சகாக்களையும் பார்க்கவும் அவனுக்கு பகீர் என்றது. ''பங்காளி

வெளிய யாரோ வந்து நிக்கறாங்க...'' என்றான் மிக வேகமாக. மற்ற இருவரும் கூடத் திரும்பினர். அந்த இடைவெளியில் உள்ளே பாறை மேல் மல்லாக்க கிடந்த அந்தப் பெண் சுதாரித்து எழுந்து அமர்ந்தாள்.

அவர்களும் பதட்டத்தோடு மெல்ல குகைக்கு வெளியே வந்தனர். இரவுப் பொழுதாக இருந்தாலும் மாயவன் கர்சீப்பை எடுத்து பாதிமுகத்தை மூடி பின்புறமும் கட்டிக் கொண்டான்.

அந்த மூவரிடமும் ஒரு பதட்டம் தெரிந்தது.

''ஏய் யாரப்பு... நீங்களும் நம்பள மாதிரி ஜாலிக்காகத்தான் வந்தீங்களோ?'' என்றான் ஒருவன். அடுத்த நொடி மாயவன் கரம் அவன் கன்னத்தில் ஒரு அறை விட்டது.

''ஏய் என்னாடா பேசிக்கிட்டிருக்கைல கைய நீட்றே? நாங்க யார் தெரியுமா?'' அடுத்தவன் உதாராக முன்வந்து கடாரனிடம் அவனும் அடிபட்டான். மூன்றாமவனை உளியன் தாவிப் பிடித்து அவன் கையை வளைத்துக் கட்டினான்.

பெருமாள் உள்ளே இருந்த மெழுகுவர்த்தியை எடுத்து வந்து அவர்கள் முகத்தைப் பார்த்தான். அவர்கள் வெளிச்சம் படவும் தலையைக் குனிந்து முகத்தைக் காட்டாதபடி நெளியவெல்லாம் செய்தனர். அந்தப் பெண் எழுந்து அவர்களிடம் வந்தவளாக.

''அண்ணே என்ன காப்பாத்துங்கண்ணே... தோப்புல தேங்காய்க்கு மட்டை உரிக்கணும்னு கூட்டிகிட்டு வந்த இவங்க கடைசில இங்க தூக்கிகிட்டு வந்துட்டாங்க... இவங்க மூணு பேருமே மைனருங்க. காளிங்கராயர் தோப்பை குத்தகைக்கு எடுத்து தேங்கா வியாபாரம் பாக்க வந்தவங்க தோப்புல வேலைக்கு வர்ற என்ன மாதிரி பொண்ணுங்க வாழ்க்கையை நாசம் பண்ணிட்டாங்க...'' என்று அவர்கள் யார் என்பதையும் அவர்களின் யோக்யதையையும் நொடிக்குள் உணர்த்திவிட்டாள்.

மாயவனுக்கு அந்த நொடியே ரத்தம் கொதிக்கத் தொடங்கியது.

''ஏலே... தேவடியாளா இருந்தாளே அவ விருப்ப மில்லாம தொடக்கூடாதுங்கறதுதான் நல்ல ஆம்பளையோட லட்சணம். ஒரு ஏழைப் பெண்ணை தூக்கி வந்து ஒருத்தனுக்கு மூணு பேர் போட்டுத் தாக்கியிருக்கீங்களேடா உங்கள...''

- மாயவன் திரும்பவும் தீப்பந்தத்தை கொளுத்தினான். மற்றவர்களும் கொளுத்தினர். திகுதிகுவென்று வெளிச்சம் உருவானதில் அந்தப் பெண் பூரணமாக தெரிந்தாள். மேலாடையில்,



இருந்து சகலத்தையும் சரி செய்து கொண்டாள். தோளில் சிராய்ப்பும் ரத்தச் சகதியும் தெரிந்தது.

அந்த மூன்று பேரும் ஒரு மாதிரி வெளிரிப் போயிருந்தனர். அவர்களுக்கும் வெளிச்சத்தில் மாயவனை ஓரளவு அடையாளம் தெரிந்து விட்டது. என்னதான் அவன் பாதி முகத்துக்கு கர்ச்சீஃப் கட்டியிருந்தாலும் குரல் அடையாளம் காட்டிவிட்டது.

''ஐயா நீங்க கள்ளன் மாயவன் தானே?'' - என்று தொண்டை அடைக்கக் கேட்டான் ஒருவன். அதற்கு மேல் அவர்கள் எதிரில் மாயவன் முகத்தை மூடிக் கொள்ள விரும்பவில்லை. கர்ச்சீப்பை கழட்டி விட்டு ஈட்டிபோல் கூர்மையாகப் பார்த்தான்.

''ஐயா எங்கள அப்படிப் பாக்காதீங்க... ஏதோ தெரியாம பண்ணிப்புட்டோம்...'' என்றான் இன்னொருவன்.

''இல்லய்யா இவங்களுக்கு இதே பொழப்பு... என்கூட வேலை பாக்கற ராசாத்தி வயித்துல பிள்ளையையே கொடுத்துட்டானுங்க. இவங்க... அவ கடைசில அரளி விதையை அரைச்சு குடிச்சு செத்துப் போனா. இவங்க கேடு கெட்டவங்கய்யா. கழுதப்புலிய விட மோசமானவங்க.''

அந்தப் பெண் இடையிட்டு குமுறினாள். அப்போது அந்த மூன்று பேருமே அங்கிருந்து தப்பி ஓட முயற்சிக்கும் விதமாக அவர்களை ஒரு தள்ளு தள்ளி விட்டு எதிரில் தெரிந்த இருளில் காட்டுப் பாறைகளின் மேல் ஏறிக் குதித்து ஓடப் பார்த்தனர்.

அவர்களைவிட வேகமாக அவர்களின் மேல் மாயவன் கடாரன் உளியனின் கூட்டாளிகள் பாய்ந்து சென்று தாக்கினர். ஒருவனுக்கு தோளில், ஒருவனுக்கு கழுத்தில், ஒருவனுக்கு முதுகில் என்று தைத்த அந்த கூட்டாளிகள் அவர்களை அறைவிட்டு சரியவும் விட்டனர். அங்கங்கே அப்படியப் படியே விழுந்தனர்.

தீப்பந்தங்களோடு அவர்களை நெருங்கிய மாயவன் அங்கிருந்தபடியே திரும்பி அந்த பெண்ணைப் பார்த்தான். அவளும் அவர்களோடு வந்து விட்டிருந்தாள். உளியனும் கடாரனும் தைத்த கட்டாரிகளை தைத்த பாகத்தில் இருந்து பிடுங்கி ரத்தக்கரையையும் துண்டால் துடைத்தனர். கீழே விழுந்துவிட்ட மூவரிடமும் தீயில் விழுந்த பாம்புகளைப் போல நெளிசல்.

''தப்பிச்சா ஓடப்பாக்கறீங்க. தறுதல நாயுங்களா... பெருமாள்... வனக்கருப்பரை நாம இன்னொரு நாள் கும்புட்டுக்குவோம். இன்னிக்கு இவனுங்கள தூக்குவோம். கை காலுல இருக்கற மோதிரம் நகைங்க அம்புட்டையும் உருவுங்க.

அப்படியே இவனுங்கள குகைப் பள்ளத்துல உருட்டி விடுங்க'' என்றான். அவர்களுக்கு அவன் அப்படிச் சொன்ன உடனேயே புரிந்துவிட்டது.

''அய்யா... வேண்டாம்யா... விட்றுங்கய்யா...'' என்று கதறினர்.

''விட்றதா... விட்டா இன்னும் எத்தனை பொண்ணுங்களடா அழிப்பீங்க.''

''ஐயோ... இனி பொட்டச்சிங்க நிழலகூட தொட மாட்டோம்யா'' அவர்கள் கதறியதை காதிலேயே வாங்காமல் ''இந்தா பொண்ணு இப்படிவா...'' என்று அந்தப் பெண்ணை அருகில் அழைத்தான்.

அந்த மூவரிடம் இருந்து உருவிய மோதிரம் மைனர் செயின் இடுப்பு அரையணா இதுபோக பாக்கெட்டில் இருந்த ரூபாய் நோட்டுக்கள் என்று அவ்வளவையும் ஒரு கர்ச்சீப்பை விரித்து அதில் போட்டு கட்டி அவளிடம் நீட்டினான்.

''வேண்டாங்கய்யா...''

''புடி... இது அபராதத் தொகை. இதனால உன்வரைல போனது வரப்போறதில்ல. ஆனா எங்களுக்கு ஒரு திருப்தி வேணும் பாரு... பிடி...''

- அவளும் அரைமனதாய் வாங்கிக் கொண்டாள். ''கொஞ்சம் அப்படி ஒதுங்கி இரு. இவங்க என்ன ஆகப் போறாங்கன்னு பாரு...'' என்று மாயவன் அவர்கள் மூன்று பேரையுமே முதுகோடு முதுகு இணைத்து தன் இடுப்பு வேட்டியால் இறுக்கமாகக் கட்டினான். கட்டும்போதே பின்பக்கமாய் கைகளையும் சேர்த்துக் கட்டினான். அவர்களோ பெரும் கூச்சல் போட்டு கத்தத் தொடங்கினர். யாராச்சும் காப்பாத்துங்க. என்று கூவி முடிக்குமுன் திறந்த வாய்க்குள்ளேயே நுழைந்தது உளியனின் கட்டாரி. அப்படியே பின் கழுத்து வழியாக முனையைக் காட்டி நின்றது. மற்ற இருவரும் அதைப் பார்த்து விக்கித்துப் போயினர். ஆனால் அவர்களையும் கட்டாரிகள் அடுத்தடுத்து கழுத்தில் இறங்கி அவர்கள் மூவரையுமே ஒன்று போல உயிர்பலி வாங்கி முடித்தது.

அதை பார்த்த அந்த பெண்ணுக்குள் இதயம் வேகமாக துடித்தாலும் அவர்களுக்கு அப்படி ஒரு முடிவு ஏற்பட்டதுதான் சரி என்று அவள் மனதுக்கும்பட்டது. செத்த சவங்களான அந்த மூன்று பேரையும் தீப்பந்த வெளிச்சம் உதவியோடு பக்கத்தில் இருந்த பள்ளத்தில் உருட்டித் தள்ளிய நான்கு பேரும் தொடர்ந்து சின்னச்



சின்ன பாறைகளையும் கற்களையும் பள்ளத்தில் உருட்டி மேலிருந்து பார்த்தால் உடம்பு தெரியாதபடி மூடவும் செய்தனர்.

கை மணலை தட்டி விட்டுக்கொண்டு கெடிகாரத்தைப் பார்த்த போது மணி ஐந்தைத் தொட்டிருந்தது. அந்த பெண் அவர்கள் நால்வரையும் பார்த்து கைகளைக் கூப்பினாள். கண்களிலும் கண்ணீரின் வழிசல்.

''அழுவாத புள்ள... நீ எங்க கூடப் பொறந்த பொறப்பு மாதிரி! இந்த மாதிரி தப்புக்கெல்லாம் எங்க வரைல இப்படித்தான் தண்டனை கொடுப்போம். இந்த மாதிரி காமவெறி புடிச்சு அலையறவனுங்ககிட்ட எல்லாம் அப்பப்பவே கணக்கு தீர்த்துப்பிடணும். இவன்லாம் ஒருவேளை உசுரோட இருந்தா நாளைக்கு நீ புருஷன் புள்ளகுட்டின்னு வாழும்போது தெகட்டலா இருக்கும். அதோட எப்ப இவனுங்களால ஒருத்தி நாண்டுகிட்டு செத்தான்னு சொன்னியோ அப்பவே இவனுங்களுக்கு மரண தண்டனையை நான் தீர்மானம் பண்ணிட்டேன். பொழுது விடியப் போகுது... ஊர் முழிச்சுக்கறதுக்குள்ள நீ ஊட்டப்பாக்க போய் சேரு. உளியாகூட போய் எல்லைல விட்டுட்டு வா'' என்றவுடன் அவளும் தலையசைத்தாள்.

''அப்படியே தர பார்புள்ள இங்க நடந்ததை இப்பவே இங்கையே மறந்துடணும். இந்த மூணு நாயிங்கள். காணம்னு இவன் உறவுக்காரங்களும் போலீசும் நாயா அலையப் போறாங்க. நீ எதையும் கண்டுக்காம உன் சோலியப்பார். இந்த மோதிரம் சங்கலிய இப்ப வெளிய எடுக்காதே... அப்படியே யும் வெச்சுக்காத! சின்னமனூர் சுந்தரம் ஆசாரிகிட்ட போய் கொடுத்தா சும்மாவே உறுக்கி எலுமிச்சங்கா உருண்ட மாதிரி கொடுத்துடுவாரு... எங்க பேரை மட்டும் சொல்லு போதும்... என்ன?''

- கடாரனின் விளக்கம் அவளுக்குள் ஓரளவு தெம்பைக் கொடுத்தது.

''உங்கள நான் அண்ணேன்னு கூப்பிடலாமா?'' அவள் நின்று நிதானமாக கேட்டாள்.

''தாரளமா... நாங்க உங்க அண்ணன்மாருங்க மாதிரிதான்'' என்றான் மாயவனும்.

''இல்ல... நீங்க நாலு பேருமே என்வரைல சாமிங்க. இப்படி ஒரு ராத்திரில, இந்த மாதிரி ஒரு இடத்துல நான் உருத்தெரியாம போயிருக்கணும். ஆனா, எங்கிருந்தோ வந்து என்னை காப்பாத்தினதோட இந்த கழுதைப் புலிங்கள கொன்னு எங்க

அப்படியே இவனுங்கள குகைப் பள்ளத்துல உருட்டி விடுங்க'' என்றான். அவர்களுக்கு அவன் அப்படிச் சொன்ன உடனேயே புரிந்துவிட்டது.

''அய்யா... வேண்டாம்யா... விட்றுங்கய்யா...'' கதறினர்.

''விட்றதா... விட்டா இன்னும் எத்தனை பொண்ணுங்களடா அழிப்பீங்க.'' என்று

''ஐயோ... இனி பொட்டச்சிங்க நிழலகூட தொட மாட்டோம்யா'' அவர்கள் கதறியதை காதிலேயே வாங்காமல் ''இந்தா பொண்ணு இப்படிவா...'' என்று அந்தப் பெண்ணை அருகில் அழைத்தான்.

அந்த மூவரிடம் இருந்து உருவிய மோதிரம் மைனர் செயின் இடுப்பு அரையணா இதுபோக பாக்கெட்டில் இருந்த ரூபாய் நோட்டுக்கள் என்று அவ்வளவையும் ஒரு கர்ச்சீப்பை விரித்து அதில் போட்டு கட்டி அவளிடம் நீட்டினான்.

''வேண்டாங்கய்யா...''

''புடி... இது அபராதத் தொகை. இதனால உன்வரைல போனது வரப்போறதில்ல. ஆனா எங்களுக்கு ஒரு திருப்தி வேணும் பாரு... பிடி...''

- அவளும் அரைமனதாய் வாங்கிக் கொண்டாள். ''கொஞ்சம் அப்படி ஒதுங்கி இரு. இவங்க என்ன ஆகப் போறாங்கன்னு பாரு...'' என்று மாயவன் அவர்கள் மூன்று பேரையுமே முதுகோடு முதுகு இணைத்து தன் இடுப்பு வேட்டியால் இறுக்கமாகக் கட்டினான். கட்டும்போதே பின்பக்கமாய் கைகளையும் சேர்த்துக் கட்டினான். அவர்களோ பெரும் கூச்சல் போட்டு கத்தத் தொடங்கினர். யாராச்சும் காப்பாத்துங்க. என்று கூவி முடிக்குமுன் திறந்த வாய்க்குள்ளேயே நுழைந்தது உளியனின் கட்டாரி. அப்படியே பின் கழுத்து வழியாக முனையைக் காட்டி நின்றது. மற்ற இருவரும் அதைப் பார்த்து விக்கித்துப் போயினர். ஆனால் அவர்களையும் கட்டாரிகள் அடுத்தடுத்து கழுத்தில் இறங்கி அவர்கள் மூவரையுமே ஒன்று போல உயிர்பலி வாங்கி முடித்தது.

அதை பார்த்த அந்த பெண்ணுக்குள் இதயம் வேகமாக துடித்தாலும் அவர்களுக்கு அப்படி ஒரு முடிவு ஏற்பட்டதுதான் சரி என்று அவள் மனதுக்கும்பட்டது. செத்த சவங்களான அந்த மூன்று பேரையும் தீப்பந்த வெளிச்சம் உதவியோடு பக்கத்தில் இருந்த பள்ளத்தில் உருட்டித் தள்ளிய நான்கு பேரும் தொடர்ந்து சின்னச்



சின்ன பாறைகளையும் கற்களையும் பள்ளத்தில் உருட்டி மேலிருந்து பார்த்தால் உடம்பு தெரியாதபடி மூடவும் செய்தனர்.

கை மணலை தட்டி விட்டுக்கொண்டு கெடிகாரத்தைப் பார்த்த போது மணி ஐந்தைத் தொட்டிருந்தது. அந்த பெண் அவர்கள் நால்வரையும் பார்த்து கைகளைக் கூப்பினாள். கண்களிலும் கண்ணீரின் வழிசல்.

''அழுவாத புள்ள... நீ எங்க கூடப் பொறந்த பொறப்பு மாதிரி! இந்த மாதிரி தப்புக்கெல்லாம் எங்க வரைல இப்படித்தான் தண்டனை கொடுப்போம். இந்த மாதிரி காமவெறி புடிச்சு அலையறவனுங்ககிட்ட எல்லாம் அப்பப்பவே கணக்கு தீர்த்துப்பிடணும். இவன்லாம் ஒருவேளை உசுரோட இருந்தா நாளைக்கு நீ புருஷன் புள்ளகுட்டின்னு வாழும்போது தெகட்டலா இருக்கும். அதோட எப்ப இவனுங்களால ஒருத்தி நாண்டுகிட்டு செத்தான்னு சொன்னியோ அப்பவே இவனுங்களுக்கு மரண தண்டனையை நான் தீர்மானம் பண்ணிட்டேன். பொழுது விடியப் போகுது... ஊர் முழிச்சுக்கறதுக்குள்ள நீ ஊட்டப்பாக்க போய் சேரு. உளியாகூட போய் எல்லைல விட்டுட்டு வா'' என்றவுடன் அவளும் தலையசைத்தாள்.

''அப்படியே தர பார்புள்ள இங்க நடந்ததை இப்பவே இங்கையே மறந்துடணும். இந்த மூணு நாயிங்கள். காணம்னு இவன் உறவுக்காரங்களும் போலீசும் நாயா அலையப் போறாங்க. நீ எதையும் கண்டுக்காம உன் சோலியப்பார். இந்த மோதிரம் சங்கலிய இப்ப வெளிய எடுக்காதே... அப்படியே யும் வெச்சுக்காத! சின்னமனூர் சுந்தரம் ஆசாரிகிட்ட போய் கொடுத்தா சும்மாவே உறுக்கி எலுமிச்சங்கா உருண்ட மாதிரி கொடுத்துடுவாரு... எங்க பேரை மட்டும் சொல்லு போதும்... என்ன?''

- கடாரனின் விளக்கம் அவளுக்குள் ஓரளவு தெம்பைக் கொடுத்தது.

''உங்கள நான் அண்ணேன்னு கூப்பிடலாமா?'' அவள் நின்று நிதானமாக கேட்டாள்.

''தாரளமா... நாங்க உங்க அண்ணன்மாருங்க மாதிரிதான்'' என்றான் மாயவனும்.

''இல்ல... நீங்க நாலு பேருமே என்வரைல சாமிங்க. இப்படி ஒரு ராத்திரில, இந்த மாதிரி ஒரு இடத்துல நான் உருத்தெரியாம போயிருக்கணும். ஆனா, எங்கிருந்தோ வந்து என்னை காப்பாத்தினதோட இந்த கழுதைப் புலிங்கள கொன்னு எங்க

ஊர்ப்பொண்ணுங்க பலபேர் வயித்துல பாலை வாத்துட்டீங்க. இதை நான் என் உசுர் உள்ளவரை மறக்க மாட்டேண்ணே...''

''சந்தோசம்மா... முதல்ல ஊரப்பாக்க போய் சேர். நல்லபடியா பாத்து ஒரு பையயனையும் கட்டிக்க.... உனக்கு ஆம்பளப்புள்ள பொறந்தா... தா எங்கண்ணன் மாயவன் பேரை வை. அடுத்து ஒண்ணு பொறந்தா பெருமாள்னு வை. மூணாவதா ஒண்ணு பொறந்தா உளியன்னு வை.''

- கடாரன் சொல்லிக் கொண்டே போனான்.

''கடாரா... பொழுதுல சாம்பல் தட்டிருச்சு பார். தூரத்துல மண்பாதை. பால்காரனுங்க வர்ற நேரம் அவங்கள போகவிடு.''

மாயவன் அதட்டவும் உளியன் அவளோடு வேகமாய் நடக்கத் தொடங்கினான்.

''சாமி கும்புடப்போறோம்னு பார்த்தா மூணு பேரை போட்டுத்தள்ற ராத்திரியா ஆயிப்போச்சேப்பா...'' என்றான் உளியன். அதுவும் தாடை முடியை சொறிந்தபடி.

''இதுவும் பூசைதான் உளியா'' என்ற மாயவனின் பதில் அவர்களை சற்று சிந்திக்க மட்டுமல்ல சிலிர்க்கவும் வைத்தது!

## 21

அந்த மூன்று பேரைப் போட்டுத்தள்ளியதை ஒரு பூஜையாக கருதி மாயவன் சொன்னதிலும் பொருள் இல்லாமல் இல்லை. உலகமே கொண்டாடும். தீபாவளிப் பண்டிகையே நரகாசுரனை கிருஷ்ண பரமாத்மா வதம் செய்யப் போய் வந்த பண்டிகை தானே?

மாயவனுக்கு எங்கும் எதிலும் உண்மையாக இருப்பதும் நியாயமாக நடந்து கொள்வதும்தான் கணக்கு... அந்த வகையில் மூன்று பேரைக் கொன்றதையேதான் நிகழ்த்த இருந்த பூஜையாக கருதி அதையே தன் கருத்தாகவும் கூறிய மாயவன் பேச்சுக்கு மற்ற இருவரிடமும் மறுபேச்சில்லை!

ஆனாலும் பாண்டியமாணிக்கம் வரையில் வைக்கும் குறிகள் தள்ளித் தள்ளி போவது அவர்களுக்கு ஆயாசத்தை அளித்தது.

''மாயவா சாமியார் கரட்டோட இன்னிக்கு நாம திரும்பி வரும்படி ஆயிடிச்சு... வனக்கருப்பு பூசையை போட்டுட்டு ஒரு முடிவெடுக்கலாம்னு இருந்தோம். அதுக்கு இப்ப என்னப்பா பண்ண?'' என்று இருட்டில் நடந்தபடியே கேட்டான் பெருமாள்.



''இன்னிக்கு நாம உச்சியில இருக்கறதுதான் பாதுகாப்பு. அந்த பாண்டியமாணிக்கம் இன்னிக்கு நம்மளை புடிச்சுப் போறதாகனவு கண்டு கிட்டிருப்பான். அதுல மண்ணு உழுவவும் நாம சுதாரிச்சுகிட்டது தெரியவரும். எப்படி சுதாரிச்சோம்னு தெரிஞ்சுக்க பார்ப்பான். ஊடாலதான் நாம நம்ம வேலையைக் காட்டணும்.''

''அதான் எப்படி?''

''எப்பவும் வனக்கருப்புக்கு பூஜையோட கிளம்புன நாம இப்படி பாதி வழில திரும்புனதே இல்லை. அதேபோல வெச்ச குறியையும் மாத்துனது கிடையாது'' - கடாரனிடம் வருத்தம் கொப்பளித்தது!

''கருப்புக்கு நாம் பூஜை போடாட்டியும் அது நம்மகூட இருந்து நல்ல வழி காட்ட தவறுனதே இல்லை. அதுதான் நரி ஊளைபோட்ட சகுனமா வந்து சொல்லுச்சு. கொஞ்சம் முந்தி செக்போஸ்ட்ல பேசிகிட்டவங்கள வெச்சும் நாம சுதாரிக்க முடிச்சிச்சு...''

''நெசம்தான் மாயவா... எங்ககிட்ட வேகம்தான் இருக்குது. விவேகம் உன்னாண்ட தாம்ப்பா இருக்கு. மறுக்கல, ஒத்துக்கறோம். நீயே அடுத்து நாம என்ன செய்யணும்கறதயும் சொல்லு.''

''சொல்றேன்... உளியன் வந்துடட்டும்.''

- அப்படியே ஒரு மரத்தடியாக பார்த்து அமர்ந்தனர். கொஞ்சம் போல மூச்சிரைத்தது. கடாரன் ஒரு சுருட்டை எடுத்து பற்ற வைக்கப் போனான். மாயவன் அதை பிடுங்கி எரிந்தான்.

''அறிவில்ல...? சுருட்டுவாடை சுத்து முட்டும் நூறு மீட்டர் தூரத்துக்கு போவும். அதை வெச்சு காட்டிலாகா போலீஸ் ஓசைப்படாம நம்மள வந்து புடிக்கவா?''

- என்று தான் சுருட்டை பிடுங்கி எரிந்ததற்கு காரணத்தையும் கூறினான். கடாரனுக்கு அவனை விவேகி என்று சொன்னது எவ்வளவு பெரிய உண்மை என்று புரிந்தது!

வரதம்பட்டி ஊர் எல்லை!

பொசிந்து வளர்ந்திருந்த சோளவயல் வரப்பின் மேல் உளியனும் அந்தப் பெண்ணும் நடந்து கொண்டிருந்தனர். சோளக்கருதுகள் நன்கு திரண்டு வளர்ந்திருந்தன. ஒடிந்து அதன் உருண்டை பருப்புகளை வாயில் போட்டு பச்சையாக மென்றபோது அதிலிருந்து பால் சுரந்து நாவெல்லாம் மணக்கத் தொடங்கியது.

சாலைமேல் பால் வேன் ஒன்றின் சீரான ஓட்டம். வைகுந்த நாடார் ஐந்து மணிக்கே கடைதிறந்து கேசட்டையும் போட்டு விடுவார். அதில் அந்த சஷ்டிக்கவசம் ஓடியது. அது வயல் வரப்பில் வந்தபடி இருந்த உளியன் காதிலும் விழுந்தது.

''மணி அஞ்சுக்கு மேல் ஆச்சு.'' என்றாள் அந்த பெண்.

''மிச்சம்? ஆறைத் தொடப் போகுது! உன் ஊரும் வந்திருச்சி. பாத்துப் போயிடுவேல்ல?'' - உளியன் கேட்டான்.

அந்தப் பெண் தலையை ஆட்டி ஆமோதித்தாள்.

உளியனின் கருத்துக்கு தோதாக சூரியனின் விட்டப் பகுதி தெரியவும் கிழக்கு வானில் கலீர் என்று இதமான வெளிச்சம்...

''பொழுது விடிஞ்சிருச்சு பார்... பக்குவமா போய் சேரு.''

''சரிண்ணே நான் வரேன்.''

''தா பாரு... ராத்திரி உனக்கு நடந்ததை நீ இங்கையே மறந்துடணும். அதையே நினைச்சுகிட்டிருந்த அது உனக்கும் நல்லதுல்ல... எங்களுக்கும் நல்லதில்ல...''

''சரிண்ணே...''

''பாத்து... சூதானமா போய்ச் சேரு... ஆமா உன் பேர் என்ன... சொல்லாமலே போறியே...''

- உளியன் கேள்விக்கு சற்று தயங்கி விட்டு 'செல்லக்கிளி' என்றாள்.

''நல்ல பேராத்தான் உன் ஆத்தா வெச்சிருக்கா...'' என்று கருத்தோடு உளியன் திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

அண்ணாந்து பார்த்தபடியே தோள்துண்டை ஒரு உதறு உதறிக் கொண்டு தலைப்பாகையாக கட்டிக்கொண்டே நடந்தவன் காலடியில் ஒரு நல்ல பாம்பு ஊர்ந்து போவதை கவனிக்கவில்லை. அதன் நடு உடம்பை அவன் கால்கள் மிதிக்கவும், அந்த நாகமும் பதைத்துப் போய் அந்த மிதித்த காலின் மேல் ஒரு போடு போட்டது. அதன் பற்கள் படவும்தான் குதித்துக் கொண்டே கீழே பார்த்தான். அதுவும் விரித்த படத்தோடு அவனைப் பார்த்தது. அவனுக்குதான் கடி பட்டது புரிந்துவிட்டது. மறுக்கென்று கண்களில் குடியேறிய ஆத்திரம் அந்தப் பாம்பைக் கையால் பிடித்து விறுவிறுவென்று சங்குச் சக்கரமாய் சுழற்றியவன் அப்படியே சோள வயலில் வீசி எரிந்தான். அதுவும் நைந்து போய் எங்கோ விழுந்தது.

பிறகுதான் உளியனிடம் ஆத்திரம் அடங்கியது.



குனிந்து காலைப் பார்த்தான். பல் தடம்பட்ட இடத்தில் இரண்டு ரத்தப் புள்ளிகள் தெரிந்தன. பாம்புக்கடிபட்டு விட்டால் துளிகூட பயப்படக்கூடாது. அதுதான் முதல் மருந்து. அது உளியனுக்கும் தெரியும். தலையில் கட்டிய துண்டை அவிழ்த்து வேகமாக கடிபட்ட இடத்துக்கு மேல் உள்ள பாகத்தில் இறுக்கமாய் கட்டி முடித்தான். அப்படியே வேகமாய் கூமாச்சி மலை உச்சி நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டான்.

சூரியன் சுள்ளென்று தைக்கத் தொடங்கிவிட்டது. உலகின் ஒட்டு மொத்த இருளையும் அவன் ஒருவனே விரட்டி அடித்தது தான் என்றைக்கும் உலகின் முதல் ஆச்சரியம்! மரத்தடியில் அமர்ந்திருந்த மாயவனும் அவன் சகாக்களும் எழுந்து கண்ணில்பட்ட ஒரு மலைவேம்பின் இளம்குச்சிப் பாகத்தை உடைத்து பல்துலக்கத் தொடங்கியிருந்தனர். சற்றுத் தள்ளி மலை ஊற்று ஒரு சிறு ஓடையாக ஓடியபடி இருந்தது. அதில் மீசை முளைத்த ஜிலேபி கெண்டை மீன்கள் கூட்டம் கூட்டமாய் திரிந்து கொண்டிருந்தன.

வாயை அதிலேயே கொப்பளித்துவிட்டு நிமிரவும் கரிக்குருவி ஒன்று 'காரைய்ய்...' என்று தீனமாய் கத்தத் தொடங்கியது. மாயவன் காதிரண்டும் கூர்மையானது. அதை கடாரனும் பெருமாளும் கூட உணர்ந்னர்.

''ஏன் மாயவா... ஒரு மாதிரி விடைக்கறே?''

''கரிக்குருவி தீனமா கத்துது பாரு...''

''அதனால?''

''காட்டுக்குள்ள யாருக்கோ ஆபத்து?''

''அதுக்கு இதுவா அர்த்தம்?''

''ஆமாம்... இறை தேடிப் போன குருவி படபடத்தது. நாம என்ன பண்ண?''

''கடாரா... நீ நல்ல மரமேறி. தா அந்த தேக்கு மரத்தோட உச்சி முனை வரை ஏறி நாலா பக்கம் பாரு...''

''யாரும் வராங்களான்னு பாக்கச் சொல்றியா?''

''ஆமா... நிச்சயம் உன் கண்ணுல எதாச்சம்படும்'' என்ற மாயவன் பேச்சை கடாரன் அதற்கு மேல் கேள்வி கேட்டு குடையத் தயாரில்லை. விறுவிறுவென்று தேக்கு மரத்தின்மேல் ஏறினான். முடிந்த வரை உச்சிப் பாகத்துக்கும் போனான். யானைக் காதுபோல் தேக்கு இலைகள்! அதில் ஏராளமான சிற்றெரும்புகள் வேறு...

அவைகளின் கடியை சகித்தபடி கடாரன் எல்லாப் பக்கமும் பார்த்தபோதுதான். பார்க்க முடிந்த தூரத்தில் பாறை ஒன்றின்மேல் உளியன் விழுந்து கிடப்பது தெரிந்தது.

''மாயவா... உளியன் ஒரு பாறைமேல் உழுந்து கெடக்கறான்பா...'' என்றான் அதிர்ச்சி மிகுந்த குரலோடு...

''யாரு நம்ம உளியனா?''

''ஆமாப்பா... அவன்தானே மலைக்கு மாலை போட்டு காவி வேட்டியும் கட்டியிருக்கறவன்?''

''ஆமா... ஆமா...''

''அப்ப அவன்தான்...''

''எந்த திசைன்னு தெளிவாச் சொல்லு...''

''உனக்கு கிழக்கப்பா...''

- மேலிருந்தே கடாரன் கொடுத்த குரல் மாயவனையும், பெருமாளையும் வழி நடத்திற்று. இருவரும் வில்லை விட்டு புறப்பட்ட பாணங்களைப் போல பாய்ந்து சென்றனர். கடாரனும் மரத்தில் இருந்து சரசரவென்று இறங்கி உளியனை நோக்கி ஓடினான்.

அவர்கள் உளியனை நெருங்கியபோது உளியன் கிட்டத்தட்ட நிலம் பார்த்து விட்டிருந்தான். வாயிலும் நுரை பூத்திருந்தது.

''ஏ உளியா... என்னடா இது?''

''பாம்பு கடிச்சிடுச்சு மாயவா...'' முனங்கினான் உளியன்.

'ரத்தத்த கீறி விட்றதுக்குகென்ன?''

''கத்தி... கத்தி இல்லப்பா...'' உளியன் குரல் உள்ளடக்கிக் கொண்டே போனது... மாயவனுக்கு பதைத்தது. தன் வசம் உள்ள கட்டாரியால் காலில் கடிபட்ட இடத்தை கீறப் போனான்.

''இல்ல மாயவா... விஷம் கழுத்தக் கடந்துடிச்சி. ரத்தத்தை பிரிக்கறதுல எந்த பிரயோசனமும் இல்ல...''

''அப்ப உளியனை காப்பாத்த முடியாதுங்கறியா?''

''பேப்பய... பேப்பய... கடிபட்ட உடனே கீறி உடாம நடந்து வந்துருக்கான்... அதான் இவன் பண்ண தப்பு.''

''பேசிக்கிட்டிருக்க இதுவா நேரம். நாடி அடங்கிட்டே போகுத பார்.''

- அவர்களுக்குள் பதட்டம் கூடியது. மாயவன் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த போது தான் சித்தர் நினைவு வந்தது.



அடுத்த நொடியே உளியனை தூக்கி தோள்மேல் போட்டுக் கொண்டான்.

''எங்க மாயவா?''

''வாங்க மலைமேல் இருக்கறி சித்தர் சாமிகிட்ட போவோம். அவர் மனசு வெச்சாதான் இனி உளியன் பொழைக்க முடியும்.''

- பேசிக்கொண்டே விறுவிறுவென்று நடந்தான். மாயவன் மலைச்சரிவுகளில் கனத்த உளியனின் உடம்போடு ஏறுவது பெரும் பாடாக இருந்தது.

மனதோ 'சாமி... நீங்கதான் காப்பாத்தி கை கொடுக்கணும்' என்கிற பிரார்த்தனையில் மூழ்கியிருந்தது. நல்லவேளை எதிரிலேயே சித்தர் சாமி வந்தபடி இருந்தார்.

''சாமி... உங்களை பார்க்கத்தான் வந்துட்டிருக்கேன்...''

''என்னாச்சு மாயவா?''

''உளியன பாம்பு கடிச்சிடுச்சு சாமி... விஷமும் முழுசா ஏறிடிச்சு.''

''அடடா... பிரம்ம முகூர்த்த வேளைல சர்ப்ப கடியா?''

-அவர் வருத்தமுடன் நெற்றியை சுருக்கினார்...

''சாமி... எப்படியாவது காப்பாத்துங்க சாமி...'' மாயவன் கெஞ்சினான்.

''முதல்ல உட்காரவை...'' என்றார். உட்கார வைத்து தாங்கிப் பிடித்துக் கொண்டான் பெருமாள்.

''கடிபட்ட இடத்தை கீறிவிடு'' என்றார்.

அதேபோல கீறி விட்டான். ரத்தம் கருஞ்சாந்து போல ஒழுகத் தொடங்கியது.

''சிரசுல உச்சி முடியை மேல் நோக்கி இழுத்துப் பிடி...'' என்றார். மாயவன் அவ்வாறே செய்தான். ''அப்படியே இருங்க வந்துடறேன்'' என்றபடி சித்தர்சாமி அங்கிருந்து விலகினார்.

வழிந்த ரத்தம் மண்ணில் ஊறிக் கொண்டிருந்தது.

''எங்க போறார் மாயவா?''

மூலிகை பறிக்கறதுக்கா இருக்கும்...''

- மாயவன் யூகித்தது. சரிதான்...! மணவாள சித்தரின் பார்வை அந்த மலைத்தலத்தை ஊடுருவியது. ஓரிடத்தில் அருவி போல தண்ணீர் விழுந்தபடி இருந்தது. சுற்றிலும் ஏராளமான பாசிகள்.

பாறைகளின் இண்டு இடுக்குகளில் எல்லாம் இனம் தெரியாத செடிகொடிகள்.

அவைகளுக்கருகே சென்றவர் சற்றே செருமிவிட்டு 'சிவாயவசி... வசியசிவாய... யவசிவாயவசி' - என்று சற்று உரத்த குரலில் பன்னிரெண்டு முறை சொல்லிவிட்டு உள்ளங்கையில் ஒரு தட்டு தட்டினார்.

அது ஒரு அளவான சப்தம்... அந்த சப்தத்தையும் ஒரு நான்கைந்து முறை எழுப்பினார். அதைத் தொடர்ந்து பாறை ஒன்றின் இடுக்கு வழியாக ஒரு கொடி பசுமையான இலைகளோடு ஒரு பாம்பு எட்டிப் பார்ப்பது போல் எட்டிப் பார்த்தது!

## 22

**பா**றை இடுக்கில் இருந்து வெளிப்பட்ட அந்த கொடியைக் கடவுளை வணங்குவது போல வணங்கிவிட்டு ஒருமுழ அளவுக்கு கிள்ளி கையில் எடுத்துக் கொண்டார் மணவாள சித்தர்.

அப்படியே அண்ணாந்து வானம் பார்த்து மனதுக்குள் மந்திர உச்சாடனம் புரிந்தவர் விறுவிறுவென்று திரும்பி நடக்க ஆரம்பித்தார்.

உளியன் கிடத்த இடத்திற்கு அவர் வந்தபோது உளியன் கிட்டத்தட்ட பிணமாகி விட்டிருந்தான். உடம்பு சில்லிடத் தொடங்கியிருந்தது. விரைத்துப்போய் கட்டையாகக் கிடந்தான். மூக்குத்துவாரங்களிலும் காற்றின் ஓட்டம் இல்லை.

''சாமி... இதயத்துடிப்பு நின்னுருச்சி சாமி. உளியன் செத்துட்டான்'' என்று வெடித்தான் பெருமாள். மணவாள சித்தர் அந்த வெடிப்பை பொருட்படுத்தாமல் ''இவனை ஏன் படுக்க வெச்சீங்க... உட்கார்ந்த நிலைல சிரசு முடியை இழுத்து பிடிக்கச் சொன்னேனா இல்லையா?'' என்று கேட்டார்.

''அப்படித்தான் சாமி இருந்தோம். அப்பவே தலை தொங்கிப் போய் உடம்பு ஜில்லிட்டப் போச்சு.''

''உடம்பு ஜில்லிட்டுப் போனா உயிர் போய்ட்டதா அர்த்தமா? ஜன்னியில ஜில்லிட்றதும் ஒரு அம்சம். சப்தநாடி அடங்கினாதான் உடம்பை விட்டு மொத்தமா உயிர் பிரிஞ்சதா அர்த்தம்...''

''அப்ப உயிர் இருக்கா சாமி?''

''கைல ஜல சஞ்ஜீவி மூலிகை இருக்கு. இது கிடைக்கற விதி உள்ள ஒருவனுக்கு நிச்சயம் 120 வயசுன்னு அர்த்தம்.''



''நூத்தி இருவதா... நூறு வயசுன்னு தானே சொல்வாங்க...''

''மனுஷ உயிரோட நீளம் இந்த பூமில நூத்தி இருபது வருஷம்தான்... முறையா சுவாசிச்சு சரியா வாழ்ந்தாத்தான் அந்த நூத்தி இருபது வருஷம் சித்திக்கும். ஆனா நாமதான் காமம் குரோதம்னு எழுபத்திரண்டு அங்குலத்துக்கு பெருமூச்சு விட்டே உயிர் காற்றை எல்லாம் வாழற நாள்ல இழந்துகிட்டே போய் உடம்புலயும் உயிர் செல்களை கொன்னுடறோமே...?''

- சித்த பூர்வமாக பேசியபடியே மணவாளசித்தர் உடம்பின் சப்த நாடியை அதற்குரிய இடங்களைத் தொட்டு பரிசோதித்துப் பார்த்துவிட்டு நெற்றிப் பொட்டில் இன்னமும் துடிப்பு அடங்காமல் இருப்பதை உணர்ந்து மளமளவென்று ஜலசஞ்சீவி வேரை பிழிந்து கண்களைத் திறந்து கண்களின் மேலும், பின் செவிப்புலத்திலும் விட்டு காதுக்குள் தன் வாயாலே ஒரு ஊது ஊதியவர் மிச்சமிருந்த கொடிப் பகுதியை அப்படியே உளியன் தலைமேல் வைத்து துண்டாலே கட்டினார். பின் காலையும் இழுத்து இறுகக் கட்டியவர் கையிரண்டையும் விரித்துக் கிடத்தினார். சிலுவையில் அறையப் பட்ட யேசுநாதரைப் போல தரைமேல் கிடந்தான் உளியன். மாயவனுக்கு சித்தர் செயல் வியப்பாக இருந்தது.

''கவலைப்பட வேண்டாம்... மூணே முக்கால் நாழிகைல உளியன் எழுந்து உட்கார்ந்துடுவான்'' என்றார்.

மாயவன் கலங்கிய விழிகளோடு கைகளைக் கூப்பினான்.

''என்ன மாயவா இது... எதுக்கு என்னை கும்புடறே? இது ஒரு சித்தரோட கடமை.''

''உங்க பெருந்தன்மை இப்படி தன்னடக்கமா பேச வைக்குது சாமி. உளியன் மட்டும் செத்துருந்தா நிஜமா நான் என்னா யிருப்பேன்னே சொல்ல முடியாது. என்னால என் கூட்டாளிகளுக்கு ஒரு கஷ்டம்கறத தாங்க முடியல சாமி.''

''விடப்பா... உளியனுக்கு நல்ல விதி. ஆமா பாம்பு கடிக்கற அளவுக்கா கவனமில்லாம இருந்தீங்க?''

- மணவாளசித்தரிடம் அதன் பின் நடந்த அவ்வளவையும் கூறி முடித்தான் மாதவன். சித்தரிடமும் ஒரு ஆழமான பெருமூச்சு.

''சாமி... பூஜைக்கு போறதா நினைச்சுகிட்டு போய் மூணு பேரை வதம் பண்ணிட்டோம். வாழ்க்கைல எப்ப எது நடக்கும்னு தெரியாதும்பாங்க. அது எவ்வளவு பெரிய நிஜம் தெரியுமா சாமி.''

''விசாரத்துல நீ கூட தத்துவம் பேசிட்டே. மாயவா உன் கையால அவங்க விதிமுடியனும்னு இருக்கும்போது யாரால என்ன

செய்ய முடியும்? விட்டு தள்ளு. பாவத்துல பெரிய பாவம் பெட்டைப் பாவம். அவங்க அதுக்கு தண்டனையை அனுபவிச்சுட்டாங்க. பள்ளத்துல கிடக்கற அவங்க உடம்பை புழுக்கள் தின்னப் போறதுகூட ஒரு வகைல பரிகாரம். நீ நல்லதுதான் பண்ணியிருக்கே...''

''சாமி... நாங்க பண்ணியிருக்கறது கொலை. அதை நீங்க கண்டிப்பீங்க. பாவம்னு சொல்வீங்கன்னு நினைச்சா நல்லது பண்ணதா சொல்றீங்களே...''

- சிரித்தார் மணவாளசித்தர்.

''யப்பா... எதையும் எங்க இருந்து பாக்கறோம்கறது தான் முக்கியம் ஒரு கடுகை கண்ணுக்கு முன்னாடி வெச்சா அது உலகத்தையே மறைச்சுடும். அதையே கிழபோட்டுட்டா அது நம்ம கண்ணுக்கேகூட தெரியாது. அது எங்க இருக்குங்கறத வெச்சுதான் விஷயமே! அப்படித்தான் ஒரு விஷயத்தை எப்படி பார்க்கறதுங் கறதும், ஒருவேளை அந்த மூணு பேரும் ரொம்ப நல்லவங்களா இருந்து நீங்க கொலையே செய்திருந்தாலும் அதுக்கு பின்னாலயும் விதிக் கணக்குதான் இருக்கு.

அவங்க செஞ்ச பாவம் காரணமா அவங்க கொலை செய்யப்பட நீங்க கருவியா மாறினீங்கன்னு அர்த்தம் வரும் இப்ப அந்த பேச்செல்லாம் எதுக்கு? மாயவா எதுக்கு இந்த களவும், தலைமறைவு வாழ்க்கையும் இதை விடறது உன் வரைல அவ்வளவு கஷ்டமா என்ன?''

- மணவாளசித்தர் தன் பேச்சின் முடிவில் அப்படி ஒரு கேள்வி கேட்பார் என்று மாயவனே எதிர்பார்க்கவில்லை.

''சாமி... அவங்க சாவுக்கு விதியை காரணமா சொன்ன உங்களுக்கு நாங்க இப்படி இருக்கவும். விதிதான் காரணம்னு தெரியலியா?''

- மாயவன் மடக்கி விட்டது போலதான் கேட்டான்.

''அதே விதிதான். மாறிடு மாயவான்னு இங்க என்மூலமா பேசிகிட்டிருக்கு.''

''சாமி, இனி நாங்க மாறி எங்களுக்கு என்ன சிலையா வைக்கப் போறாங்க?'' - பெருமாள் வேடிக்கையாக கேட்டான்.

''உங்களுக்குள்ள நீங்க சுதந்திரமா வாழறது முக்கியம் இல்லையா?''

''அப்ப நாங்க இப்ப சுதந்திரம் இல்லாம இருக்கோம்னு சொல்றீங்களா?''



''இந்த காட்டுக்குள்ள மனுஷ துணையே இல்லாம பாம்பு கடியும் தேள் கடியும்பட்டு வாழறதா வாழ்க்கை?''

''அது என்னவோ சரிதான். ஆனா நாங்க திருந்த விடமாட்டாங்களே சாமி'' கடாரன் அழுத்தமாக குறிப்பிட்டான்.

சிரித்தார் சித்தர்... மெல்லிய குரலில் ''திருந்தப் போறீங்க.. பலரை திருத்தவும் போறீங்க..'' என்றார்.

''உங்க வாக்கு பலிக்கட்டும் சாமி'' - எனும் போதே உளியனிடம் அசைவு தெரிந்தது. மூச்சுவிடும் சப்தமும் கேட்டது.

''சாமி... இது அதிசயம் சாமி.''

''எதுவும் அதிசயம் கிடையாது. இதையே தினசரி நீ பார்த்தா இது சம்பவம்தான்.''

''உண்மைதான் சாமி உங்ககிட்ட ஒரு கேள்வி, எது உண்மையோ அதை சொல்லணும்.''

''கேளப்பா...''

''நாகமாணிக்கம்னு ஒண்ணு இருக்கறது உண்மையா சாமி'' - பெருமாள் அங்கு தொட்டு இங்கு தொட்டு நாகமாணிக்கத்திடம் வரவும் அவரிடம் ஒரு மென் புன்முறுவல்.

''என்ன சாமி சிரிக்கிறீங்க?''

''இப்ப இந்த கேள்வி எதுக்கு?''

''நேராவே விஷயத்துக்கு வந்துட்டேன்சாமி. ஊருக்குள்ள அந்த மாஜி மந்திரி வீட்ல அது இருக்கறதாவும். அதனால அவனை யாரும் எதுவும் செய்ய முடியாதுன்னும் ஒரு பேச்சு இருக்கு. அதுல கொஞ்சம் உண்மை இருக்கற மாதிரிதான் எங்க அனுபவமும் சொல்லுது.

நாங்க இதுவரைல ஒரு வீட்டுக்கு குறிபோட்டுட்டா அங்க அம்பு போடாம இருந்ததே இல்லை. இவன் வரைல ஒரு தடவைக்கு மூணு தடவை குறி தவறிடிச்சு. இவனுக்கு அம்பு போடத்தான் வனக்கருப்பு கோவிலுக்கும் புறப்பட்டோம். ஆனா அது கொலைல முடிஞ்சு இதோ இந்த பயலும் பாம்பு கடிபட்டு படுத்துக் கெடக்கான்.

அப்ப அதுக்கு சக்தி இருக்கற மாதிரிதானே சாமி அர்த்தம்?''

- பெருமாளின் விசாரமான கேள்வியைக் கேட்டு திரும்பவும் சிரித்தார் மணவாளசித்தர் மாயவன்கூட அந்த கேள்வியைக் கேட்க எண்ணியிருந்தான். ஆனால் பெருமாள் முந்திக் கொண்டு விட்டான். சித்தரும் பதில் சொல்லத் தொடங்கினார்.

''மனுஷ மனது ஒரு விசித்ரமான ஒண்ணு. இந்த மலைமேல நிக்கற நீ என்னால முடியும்னு உரக்கத் கத்திப்பாரேன்'' - என்றார். பெருமாளும் ''என்னால முடியும்...'' என்று உரக்கக் கத்தினான். பதிலுக்கு மலையும் 'என்னால முடியும். என்னால முடியும்... என்னால முடியும்' என்று மூன்று முறை அது எதிரொலித்தது.

'எங்க இப்ப 'என்னால முடியாது'ன்னு சொல்லிப் பாரு' என்றார் மணவாளசித்தர்.

அதுவும் மூன்றுமுறை எதிரொலித்து அடங்கியது.

''பாத்தியா... முடியும்னு சொன்னதும் நீதான். முடியாதுன்னு சொன்னதும் நீதான். மாற்றம் உனக்குள்ளதான். ஆனா வெளிய எந்த மாற்றமும் இல்லை. இந்த மனசுக்குள்ள அது பாத்திராத, அது கேட்டிராத அதுக்கு புரியாத விஷயங்களை நம்ப வைக்க செய்த ஒரு விஷயம்தான் நாகமாணிக்கம்.

ஒரு பாம்பு சில சமயம் முட்டைன்னு நினைச்சு சிறு கற்களை விழுங்கிடும். பாம்போட வயிறுக்குள்ள ஒரு எருமையும் அதோட எலும்பும் கூட செரிச்சிடும். ஆனா சிலவகை கற்கள் செரிக்காது. வயித்துல கெடந்து அந்த பாம்புக்கு நோவா மாறும். அந்த பாம்பும் அதை வெளியேத்த பாடாபடும். அதேசமயம் வயித்துக்குள்ள இருக்கற அமிலத்துல அது ஒரளவு கரைஞ்சு பட்டாணி மாதிரி, கோலி மாதிரி உருண்டையா உருமாறிடும். ஒரு கட்டத்துல அது அந்த கல்லையும் கக்கும். அப்படி கக்கப்படும் கல்லுதான் நாகமாணிக்கம்னு சொல்லப்படும். உண்மைல அந்த கல்லுக்கு சக்தியும் அதிகம்மான்... இல்லேன்னா பாம்போட வாய்வழியா வயித்துக்குள்ளேயே போயிட்டு அது திரும்ப வெளிய வந்துருக்குமா... அதுவும் மொழுமொழுன்னு மாறி! அப்படி ஒரு கல் நம்ப கைல இருக்கும்போது நம்ப ஆழ்மனசும் நம்பளை இனியாரும் எதுவும் செய்ய முடியாதுன்னு நம்பத் தொடங்கிடும். அந்த நம்பிக்கைதான் எல்லாத்துக்கும் காரணம்.''

- மணவாளசித்தர் புதிய கோணத்தில் சொன்ன அந்த விஷயம் மாயவனை உந்தி எழுப்பியது.

''அப்ப அந்த கல்லுக்கு ஏதோ ஒரு வகைல சக்தி இருக்கு. அப்படித்தானே சாமி?''

''ஆமா... அந்த கல்லுக்கு எந்த சக்தியும் கிடையாது. அது ஒரு கல்லு மட்டும்தான்னு நீ நினைச்சா நீ நினைச்சபடியே அது கல்லா மாறிடும். அதையே நீ பெரிய சக்தியா நினைச்சா அது சக்தியா மாறிடும். அது இந்த மலைப்பள்ளத்தாக்கு மாதிரி... சக்தியை உண்டுங்கறதும், இல்லைங்கறதும் நாமதான்.''



''ரொம்ப சாதுர்யமாவே பதில் சொல்றீங்களே... சாமி. இருக்குன்னு சொல்றீங்களா, இல்லைன்னு சொல்றீங்களா?''

''அது உன் பார்வையை பொருத்ததுன்னு சொன்னேனே.''

''நான் இருக்குன்னுதான் நினைக்கறேன்.''

''அப்ப அதுக்கு சக்தி இருக்கு.''

''அதை நாங்க அடைஞ்சுட்டா எங்க வாழ்க்கையும் யாராலயும் ஜெயிக்க முடியாததா மாறிடுமா சாமி.''

''நம்பறே - அப்புறம் சந்தேகப்படறே... நம்பிக்கைல மட்டும் நில்லு.''

- சித்தர் திருத்தினார். மாயவன் ஒரே வார்த்தையில் ''அது நாகசாமி... அதை நாம அடையறோம். அதுவும் இப்ப இருந்து 24 மணி நேரத்துல?'' என்றான் மிகுந்த ஆக்ரோஷத்தோடு.

உளியனும் அப்போது எழுந்து உட்கார்ந்தான்.

''மாயவா... அதை அடையப்போறோம்னு நினைச்சதுக்கே உளியன் எழுந்துட்டான். அப்ப அது நம்ம வசமாயிட்டா இந்த உலகத்தையே ஆட்டி வைக்கலாமே?'' உற்சாகமாக கேட்டான் கடாரன்!

## 23

உற்சாகமாக பேசின கடாரனை சித்தர் சற்று புன்னகையோடு பார்த்தார். அது கேலிப் புன்னகையா? இல்லை வேறு விதமான புன்னகையா என்று தரம்பிரிக்க கடாரனால் முடியவில்லை. ஆனால் மாயவனுக்கு சித்தர் மகிழ்வாக சிரிக்கவில்லை என்பது மட்டும் புரிந்தது.

''சாமி உங்க சிரிப்புல ஒரு மர்மமான விசயம் இருக்கற மாதிரி தெரியுதே?'' என்று கேட்டான்!

''உண்மைதான் மாயவா... ஒரு சித்தனான என் எதிர்லேயே ஒரு திருட்டுக்கு திட்டம் போட்ற உங்கள நினைச்சேன். சிரிப்பு வந்துடுச்சி. பாவங்கள்ள ஒண்ணுதான் திருட்டு. ஆனா உங்க வரைல அது ஒரு நியாயமா இருக்கற மாயத்தையும் நினைச்சேன். ஆச்சரியமாவும் இருந்துச்சு. கூடவே மகாபாரதத்து கிருஷ்ணன் நினைப்பும் வந்துச்சு.

நீ எதையும் பண்ணலே. நான்தான் எல்லாத்தையும் பண்றேன்! நீ எது பண்ணாலும் என்கிட்டதான் அது வந்து சேரும் நல்லது

கெட்டதும் பாக்கற விதத்தை வெச்சுதான் உருவாகுது. தர்மம் வேற - நியாயம் வேற... தர்மம் எப்பவும் ஒண்ணு... ஆனா நியாயம் ஆளுக்கு ஆள் ஊருக்கு ஊர் இடத்துக்கு இடம், மாறும்னுகிதைல படிச்சதுக்கு உங்க மூலமாவும் எனக்கு அர்த்தம் கிடைச்சிச்சு. இதெல்லாம் தான் ஒண்ணா சேர்ந்து சிரிப்பா மாறுனுச்சி. நீ கேள்வியா கேட்கவும், இப்ப பதிலா என்கிட்ட இருந்து வந்து கிட்டிருக்கு...'' என்றார் மணவாள சித்தர்.

அவரின் நீண்ட விளக்கம் மாயவனையும் யோசிக்க வைத்தது.

''சாமி பரம்பரை பரம்பரையா எங்க குலதொழிலே! களவுதான். என் முன்னோர்கள்ள சிலர் ஆகாயத்துல தெரியற நிலாவையே திருடறதுக்கு ஆசைப்பட்டவங்க. அது முடியாதுன்னு சொன்னால்லாம் கேட்க மாட்டாங்களாம். ஒருநாள் அதை நான் திருடிகிட்டு வந்து காட்றேன் பாருன்னு சொல்வாங்களாம். அமாவாசை அன்னிக்கு நிலா வராதப்போ டேய் ஆகாயம் நமக்கு பயந்துகிட்டு நிலாவை பெட்டிக் குள்ள வெச்சு பூட்டிடுச்சுடா''ன்னு சொல்வாங்களாம். அந்த அளவுக்கு களவை ஒரு கலையாகவும் உயிர் மூச்சாவும் வெச்சிருந்த குலத்து வழியில் வந்தவன் நான். அந்த அடையாளத்தை கழுவிவிட்டு என்னால ஒரு சராசரி நல்ல மனுஷனா இந்த சமுதாயத்துல வாழ முடியில சாமி! அப்படி வாழ முயற்சி செய்த என் உறவுக்காரங்கள் எல்லாம் எங்கள விட பெரிய திருடங்க ஏமாத்திட்டாங்க. இப்பகூட என் மாமனோட இடத்தை இந்த தொகுதி எம்.எல்.ஏவா இருக்கிற பாண்டியமாணிக்கம் மிரட்டி பொய் கேஸ் போட்டு எழுதி வாங்கிட்டான். இதை எல்லாம் பாக்கும்போது நாம களவை கைவிட்டு ஒழுக்கமா வாழ்ந்துதான் என்னத்த கிழிக்கப் போறோம்கற எண்ணம்தான் ஏற்படுது. ஆனாலும் ஒரு விஷம் சாமி... என் களவுல ஒரு தர்மம் இருக்குது. சாமி இடத்துக்கு இடம் ஆளுக்கு ஆள் மாறற நியாயம் வேணா இல்லாம போகட்டும். இதுதான் என்கட்சி என் தரப்பை நான் நியாயப்படுத்தல சாமி. புரிஞ்சிக்குங்க'' என்றான். அதற்கும் சிரித்தார் மணவாளசித்தர்.

''மாயவா... நம்ப வாழ்க்கையே ஒரு விதிப்பாடு தாம்ப்பா... பொறக்கும் போதே சாகறவரை நாம எப்படி இருக்கணும்னு முடியாயிடுது. அதை மாத்தற சக்தி யாருக்குமே இல்லை. இந்த உண்மை தெரிஞ்சதால தான் நான்லாம் சித்தனா மாற முயற்சி எடுத்தேன். இப்படி சொல்றதுகூட தப்பு நான் இப்படி மாறணும்கற விதிப்பாடு தான் என்னை இப்படி யோசிக்க வெச்சது. அந்த தவத்துல இருந்து ஒரு விஷயத்தை நான் உனக்கு இப்ப சொல்றேன்.



மருத்துவம் படிச்சவன், டாக்டராகற மாதிரி, சட்டம் படிச்சவன் வக்கீலாகற மாதிரி, சித்தம் படிச்சதால நான் சித்தனானேன். எனக்கு பிறர் சித்தத்தை உணர்றது ரொம்ப சாதாரணம். அந்த வகைல உன்னை கவனிச்சு உணர்ந்ததை சொன்னா இவங்க தாங்க மாட்டாங்க. ஒண்ணு மட்டும் நிச்சயம். உனக்கு ஒரு பெரிய பேரும் வரலாறும் மட்டும் நிச்சயமா உண்டு. உனக்கு எது சரின்னு படுதோ அதை தாராளமா செய்.

நியாயத்தை விட தர்மம் ரொம்ப பெருசு.

நியாயம் தவறினா தண்டனையை அனுபவிச்சு அந்த கணக்கை தீர்த்துடலாம். தர்மம் தவறுனா தண்டனையே வாழ்க்கையா மாறிடும்! கால், கை போய், பேசமுடியாம பாக்க முடியாம பொறந்து கஷ்டப்படறவங்களோட பூர்வ ஜென்ம கணக்குல இந்த தர்மத் தவறு நிச்சயமா இருக்கும். அதான் வாழ்நாள் தண்டனையா இப்படி அவங்க ஆயிடறாங்க. உன் வரயில் களவை தொழிலா கொண்ட குடும்பத்துல நீ பிறக்க காரணமேகூட இந்த தர்மப்பிசகு தான்... இதுவே உனக்கு வாழ்நாள் தண்டனையா மாறிடுச்சு. இந்தப் பிசகை இந்த ஜென்மத்துலயே நீ சரி செய்யணும். செய்துக்குவே.''

- என்று நிதானமாக பேசியவர் கடவுளைப் போலவே வலது கையை உயர்த்தி ஆசீர்வதிக்கவும் செய்தார்! அப்படியே விடைபெறும் பாவனையோடு விலகவும் தொடங்கினார். அவர்கள் நால்வரும் பார்த்தபடி இருந்தனர்.

உளியனிடம் ஒரு புதுத் தெம்பே தெரிந்தது.

''மாயவா... என்வரைல இனி இந்த சாமிதான் என்சாமி... நான் செத்து வைகுண்ட வாசலுக்கே போயிட்டேம்ப்பா... அப்படிப்பட்ட என்னை சாமிதான் பிடிச்சு இழுத்துகிட்டு வந்தாரு. இந்த உசுரு அவர்போட்ட பிச்சை'' என்றான்!

அதற்கு பெருமாளிடம் ஒரு பெரும் முறைப்பு...

''நீ என்னடா முறைக்கே?''

''இல்ல இப்ப என்னவோ சொன்னியே எங்க திருப்பிச் சொல்லு.''

''செத்து வைகுண்ட வாசலுக்கே போயிட்டேன்னேன்.''

''உனக்கெல்லாம் வைகுண்டம் கிடைக்குமாடா? எமலோக வாசல்ல நிக்கற கொம்பு முனைச்ச குண்டனுங்க கூட கிட்ட சேர்க்க மாட்டாங்க. இதுல நீ வைகுண்ட வாசலுக்கு போனியா?''

''யப்பா வாய்தவறி வந்துடுடிச்சி... விடுவியா?''

''அப்படிச் சொல்லு... நம்மள்ள மாயவன் செத்தாவேணா வைகுண்டம் கிடைக்கும். ஏன்னா நாம தண்ணி போடுவோம். கறி திம்போம். சீட்டாடுவோம். ஓலக்கொட்டாய்ல பிட்டு படம் பார்ப்போம். இது எதுலயும் சேராதவன் நம்ம மாயவன். லட்சத்துல களவாண்டாலும் நாலு இட்லி ஒரு தோசைன்னு சிக்கனமா தான் சாப்பிட்றவன். ஆகையால் மாயவன் வைகுண்டம் பக்கம் போனா கதவு திறக்கும். நமக்கெல்லாம் எமலோகத்துல வடைசட்டில வறுவல் தாண்டி...''

- என்று கிண்டலாய் பேசி சிரித்தான் கடாரன்.

''பேச்ச விடுங்கப்பா... 24 மணி நேரத்துல அந்த நாகமாணிக்கத்தை எப்படி சுட்றதுங்கறத பத்தி பேசுவோம்...''

''எப்படி மாயவா... என்ன திட்டம் வெச்சிருக்கே?''

''சொல்றேன். பெருமாள் நீ மாறு வேசத்துல ஊருக்குள்ள போய் ராத்திரி 11 மணிக்கு மேல அந்த மந்திரிக்கு ஒரு போனைப் போடு...''

''என்னன்னு?''

''டேய் மந்திரி நீ வெச்சுகிட்டிருக்கற நாகமாணிக்கத்தை இன்னிக்கு ராத்திரி மாயவன் ஆட்டைய போட திட்டம் போட்டிருக்கான். நீ எப்படியாப்பட்ட லாக்கருக்குள்ள வெச்சிருந்தாலும் அதை உடைச்சு எடுக்க மாயவனுக்கு தெரியும்னு சொல்லு.''

''சொன்னா மிரண்டு போய் அதை எடுத்து பத்ரமா இருக்குதான்னு பார்ப்பான். இதானே உன்திட்டம்.''

''ஆமாம். அப்படி அவன் பாக்க போறதுலதான் அதைதான் களவாடப் போறதே இருக்குது.''

''எப்படி மாயவா?''

''அதை நான் களவாடி முடிச்ச பிறகு சொல்றேன். நீ அந்த ஊர்முழுங்கிக்கு ரெண்டு வட்டம் போன் பண்றே முததடவை போன் பண்ணிட்ட பிறகு ஒரு அஞ்சு நிமிசம் கழிச்சு ரெண்டாவது வட்டம் போன் பண்ணு.''

''இரண்டாவது வட்டம் நான் என்னன்னு பேச?''

''பத்ரமா இருக்குதான்னு பாத்தியாடா நாயே? திரும்ப போய் பார் அப்படின்னு மட்டும் சொல்லிட்டு வெச்சிடு.''



''அப்ப இரண்டாவது வட்டமும் போய் பார்ப்பான் அப்படி தானே.''

''அப்படியேதான். அந்த இரண்டாவது வட்டம் அவன் போகும் போதுதான் அவனுக்கு இருக்கு ஆப்பு?''

''எப்படி மாயவா...! அவன் ஊட்ல மட்டும் ஒண்ணுக்கு பத்து வேலைக்காரங்க. அவங்களுக்கு நடுவுல பூந்து போய் எப்படி களவாட போறே?''

பெருமாளின் கேள்வி முன் மர்மச்சிரிப்பு சிரித்த மாயவன், ''கைக்கு நாகமாணிக்கம் வரைல உனக்கு விபரமா சொல்றேன்! அதுவரை மூடிகிட்டு இரு'' என்றான்!

அவர்கள் அதன்பின் எதையும் பேசவில்லை! ஆனால் உளியன் மட்டும் ஒரு கேள்வி கேட்டான்!

''இன்னிக்கு நாம அவனோட குலதெய்வம் கோவிலுக்கும் அவன் ஊட்டுக்கும் அவன் எதிர்பார்த்த மாதிரி போய் சிக்கப் போறதில்ல! இதுலயே அவன் பாதி டர்ர் ஆயிடுவான். அப்படி இருக்கைல மத்த விசயங்கல்லாம் நாம நினைச்ச மாதிரியே நடக்குமா மாயவா?'' என்றான்.

மாயவனிடம் இருந்து துளியும் தயக்கம் இன்றி ''நடக்கும்'' என்கிற பதில் வந்தது.

பாண்டியமாணிக்கம் பங்களா!

எஸ்.ஐ.இளங்கோ ஒரு பத்து சிவில் போலீசோடு வந்திருந்தார். அவ்வளவு பேரும் வீட்டு வேலைக்காரர்கள் போல வேட்டி பனியன் என்கிற உடையமைப்பில் தலையில் தலை பாகையுடன் பாண்டியமாணிக்கத்துக்கு ஒரு போலீஸ் சல்யூட் அடித்தனர்.

''என்னவே... அந்த கடாரன் வாறப்ப அமுக்கி பிடிக்க இப்பவே உன்பட்டாளத்தை கூட்டிகிட்டு வந்துட்டியா?''

''ஆமாம் சார். இவங்க ஆளுக்கொரு வேலை பார்ப்பாங்க. கைல துப்பாக்கியும் இருக்கு சார். கடாரன் ஏதாவது சுள்ளான் வேலை பண்ணப் பார்த்தா போட்டுத் தள்ளிருவாங்க.''

''அதுவும் சரிதான். என் ஆளுங்க சுட்டா அது கொலை கேசு. நீங்க செஞ்சாக்காக நாட்டு சேவை. நல்லாதான்யா இருக்கு இந்த விசயம்.''

-பாண்டியமாணிக்கம் மீசையை நீவியபடி சிரித்தார். அப்போது செண்பககுழல்வாய் மொழியும் எதிர்ப்பட்டாள். ஜீன்ஸ் பேண்ட், டி.ஷர்ட்டில் மார்பில் கூர்மையோடு அவள் வரவும் இளங்கோவுக்கே ரத்தம் சூடாகி பார்வை அந்த கூர்மை மேலேயே போனது. பாண்டியமாணிக்கத்துக்கு என்னவோ போலாகி விட்டது.

''அட என்னம்மா நீ. இப்படியெல்லாம் உடை உடுத்தக்கூடாதுன்னு உனக்கு சொல்லியிருக்கேன்ல'' என்று ஆரம்பித்தார்.

''இதுக்கு என்னப்பா?''

''உன்கிட்ட பேசமுடியாதும்மா... அப்புறம் கண்டபய கண்டமாதிரி பார்ப்பான். தேவையா? உள்றபோ தாயி.''

- என்று இளங்கோவை மறைமுகமாக போட்டுத் தாக்க அவளும் முகம் சிணுங்கியவளாக விலகிப் போனாள்.

இளங்கோவுக்கு ஊசியால் குத்தியது போல் இருந்தது.

''சரிய்யா எஸ்.ஐ... எங்க குலதெய்வம் கோவிலுக்கும் ஆளை அனுப்பிட்டேல்ல'' - பாண்டியமாணிக்கம் அப்படியே பேச்சை மாற்றினார்.

''கோவிலுக்கு மட்டுமில்ல சார்... வழி பூராவும் ஆள் போட்டிருக்கேன். அந்த மாயவன் எந்த பக்கமா வந்தாலும் போலீஸ் கைல தப்ப முடியாது.''

''அப்ப மதியம் அவன் கூட்டம் பரலோகம் போய் சேர்ந்த விசயம் டி.வி. நியூஸ்ல வரும்னு சொல்லு.''

''நிச்சயமா சார். அதே சமயம் என்னை மறந்துடாதீங்க.''

அவர் சொல்லி நிறுத்த வீரைய்யன் அவர் எதிரில் வந்து நிற்க சரியாக இருந்தது. அவனை பார்க்கவும் முகத்தை திருப்பிக் கொண்டு இளங்கோவை பார்த்து கேட்டார்.

''எங்கய்யா வந்துருக்கான் இவன்... கேளு.''

''கேக்றாருல்ல... சொல்லுய்யா'' - இளங்கோ.

''என்னய்யா இப்படி பேசறீங்க. இடத்துக்கு பணத்தைதான் தரலை. எனக்கு வேலை போட்டு தரேன்னு சொன்னீங்களேய்யா.''

''வேலையா...? எப்ப சொன்னேன்... என்னய்யா எஸ்.ஐ. இது புது குழப்பம்?''



''ஐயா... நீங்க சொல்லலைதான். ஆனா நான் கமுக்கமா சொல்லியிருந்தேன்யா.''

''இல்லீங்கய்யா... ஐயாவும் சொன்னாரு.''

''சரிய்யா... காலேஜ் கட்டிமுடிச்ச பிறகு பார்க்கலாம்னு சொல்லு... இப்ப கௌம்பச் சொல்லு! பாண்டியமாணிக்கம் உதறினார்.

''ஐயா... என் அக்கா என்னை ஊட்டுல சேர்க்க மாட்டேன்னுடிச்சு இந்த நிலைல நான் எங்கய்யா போவேன்.''

- வீரைய்யன் அவர் எதிரில் மிக பணிவாக மண்டியிட்டவனாக கெஞ்சிய குரலில் கேட்டான். இளங்கோவுக்கே அது ஒரு மாதிரியாக இருந்தது.

''ஐயா... நம்ப வீட்லயே பத்தோட பதினொண்ணா இருந்துட்டு போகட்டுங்களே'' என்றார். சிறிது யோசனைக்கு பிறகு ''சரி'' என்ற பாண்டியமாணிக்கம் வீரைய்யனையே நேராக பார்த்து ''போலே பொழச்சு போ... ஆனா ஒழுங்கா இருக்கணும். இல்லாட்டி இந்த எஸ்.ஐ.விட்டே பொய் கேஸ் போட்டு உள்ற தள்ளிடுவேன்'' எனவும், வீரைய்யனும் ''ஐய்யா ரொம்ப நன்றிங்க'' என்றவனாக நகர்ந்தான். அப்போது நிலைவாசல் மேல் ஒரு பல்லி இருந்து பலமாக சப்தமிட்டது. அது பழனியம்மாளை நிமிர்ந்து பார்க்க வைத்தது.

''என்னாத்தா பாக்கறே!'' என்று பாண்டியமாணிக்கமும் கேட்டார்.

''நிலை வாசல்ல பல்லி அடிக்குது... நல்லதில்லப்பா'' என்றாள்.

## 24

பாண்டியம்மாள் யதார்த்தமாக சொன்னது பாண்டியமாணிக்கம் மனதில் பெரிய சலனத்தை உருவாக்கி விட்டது. முகம் மாறிப்போனது. பழனியம்மாளும் கவனித்தவளாக பாரதம் படிப்பதை நிறுத்திவிட்டு எழுந்து சமையல்கட்டு பக்கமாய் போய் விட்டுத் திரும்பி வந்தாள். அவள் கையில் வெந்தயம் கொஞ்சம் போல இருந்தது. அதைப் பாண்டியமாணிக்கம் வாயில் போட்டவள்.

''நல்லா மென்னு தின்னு...'' - என்றாள்.

பாண்டியமாணிக்கத்துக்குள் வெந்தயக் கசப்பு என்னென்னவோ செய்தது. முகம் அஷ்ட கோணலாகியது. கஷ்டப்பட்டு விழுங்கிவிட்டு...

''என்னம்மா நீ. இப்படி வெந்தயத்தை போட்டு என்னை சோதிசிட்டே'' என்று அந்தக் கசப்பை சமன் செய்ய தண்ணீரைத் தேடினார். குறிப்பறிந்தது போல வீரைய்யனே ஒரு செம்பில் தண்ணிரோடு வந்து நின்றான்.

மளமளவென்று குடிக்கத் தொடங்கினார்.

''அது வந்து பாண்டி... கவுளி எங்க இருந்து அடிக்கணும்னு ஒரு கணக்கு இருக்குது. அது நிலை வாசல் மேல இருந்து அடிச்சா மனையாளுக்கு கசப்பா ஏதோ ஒண்ணு நடக்கப் போவுதுன்னு அர்த்தம். அந்த கசப்புக்கு பதிலாதான் வெந்தயத்தை உன் வாய்ல போட்டேன். இப்ப அந்த கசப்பு இத்தோட போச்சு'' என்றாள் பழனியம்மாள். அடுத்த நொடி ஒரு பெரிய சிரிப்பு அதற்கு எதிரொலி போல கேட்டது... செண்பகக்குழல்வாய்மொழிதான் சிரித்தவள்! பழனியம்மாளுக்கு அது கேலிச் சிரிப்பு என்று நன்றாகத் தெரிந்தது.

''எதுக்கு கண்ணு இந்த சிரிப்பு சிரிக்கறே?''

''சிரிக்காம... பல்லிக்கு என்ன அஜீரணமோ! அது பாட்டுக்கு கத்துனதுக்கு இப்படி எல்லாமா அர்த்தம் குடுப்பே?''

''உனக்கு அனுபவம் இல்ல கண்ணு... அதான் நீ இப்படி பேசறே...''

''இதுக்கு இப்படி ஒரு பதிலா? டாடி - பாட்டிதான் உளறினாங்கன்னா நீங்க அதுக்கு மேல... போய் வேலையை பாருங்க. பைதபை இன்னிக்கு நான் மதுரைக்குப் போகணும்.''

''எதுக்கும்மா?''

''என் ஃப்ரெண்ட் ஜூலி இன்னிக்கு மதுரை வரா. அவளுக்கு மதுரை காமராஜ் யூனிவர்சிட்டில ஒரு வேலை இருக்காம். நானும் அவகூடப் போறேன். அப்படியே நாயக்கர் மகாலுக்கு போய்ட்டு அப்புறமா வரேன்.''

- செண்பகக்குழல்வாய்மொழி அவளுக்கு பின் புலத்தில் இருக்கும் சிக்கல் தெரியாமல் பேசினாள். வெந்தயத்தை விட கசப்பாக இருந்தது செண்கத்தின் பேச்சு.

''என்ன டாடி... அந்த வெந்தய கசப்பு இன்னுமா போகல?''

''இல்லம்மா... நான் இப்ப நீ மதுரை போகணும்னு சொன்னதை நினைச்சேன் அதான்.''



''அதுக்கென்ன இப்போ?''

''அவசியம் போயாகணுமாம்மா?''

''ஆமா... இங்க நான் சும்மாதானே இருக்கேன்.''

''இல்லம்மா... இப்ப நீ வெளிய போறது அவ்வளவு நல்லதில்லை.''

''ஏன் அப்படி?''

''விலாவாரியா நான் சொல்ற நிலைல இல்லை...''

''சொல்லலேன்னா நானும் உங்க பேச்ச கேக்கறதா இல்லை.''

''இதோ பாரு உன்னை படிக்க வெச்சது ஒரு அந்தஸ்துக்காகத் தான். இப்படி அப்பன்கிட்ட எதிர்த்து பேசறதுக்காக இல்லை'' - பழனியம்மாள் குறுக்குசால் ஓட்டினாள்.

''பாட்டி... ப்ளீஸ் கீப் கொயட்... நான் அப்பா கூட பேசிட்டிருக்கேன்.''

''டேய்... இவகிட்ட என்ன பிரச்னைங்கறத சொல்லிடுடா. இல்லாட்டி இவ அடங்க மாட்டா'' - பழனியம்மாள் கோடு காட்டினாள்.

''பிரச்னையா?''

''ஆமாம்மா...''

''உங்களுக்கா?''

''ஆமாம்மா...''

''ஆச்சரியமா இருக்கு.''

''பிரச்னை அவனுக்கு மட்டுமில்ல - உனக்கும்தான்.''

''தயவு செய்து மென்னு முழுங்காம அது என்னன்னு சொல்றீங்களா?''

- பாண்டியமாணிக்கமும், மாயவன் அவளைக் கவர்ந்து செல்ல திட்டம் போட்டிருப்பதையும், அதைத் தவிர்க்க போலீஸ் பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்திருப்பதையும் சொன்னவர் ''இந்த நிமிஷம் இந்த வீட்டுக்குள்ளயே பத்து போலீஸ்காரங்க இருக்காங்கம்மா'' என்று முடித்தார்.

செண்பகக்குழல்வாய்மொழியிடம் ஒரு ஆச்சரிய அதிர்வு.

''ஆமாம். அந்த மாயவனுக்கு உங்க மேல அப்படி என்ன கோபம்?'' - அடுத்து அவள் கேட்ட கேள்விக்கு பாண்டியமாணிக்கத்திடம் ஒரு திணறல் தான் பதிலாக நின்றது.

''என்னடி நீ... கோர்ட்ல வக்கில் கேக்கற மாதிரி கேட்டுகிட்டு... உங்கப்பன் ஒரு பணக்காரன். அவன் ஒரு கள்ளன். திருடறதுதான் அவன் குலத் தொழிலே. இதுதான் விசயம் போதுமா?''

''அதுக்கு அவன் நம்ம வீட்டு பணப்பெட்டியைல்ல குறிவைக்கணும்.''

''இதோ பார்... அவன் அதுக்கும் குறிவெச்சுட்டான். அவன் குறி என்கிட்ட இருக்கற நாகமாணிக்கமும்தான். ஒருத்தன் வந்து நம்ம தோட்டத்துல பாம்பு பிடிச்சானே... ஞாபகம் இருக்கா?''

''உம்...''

''அவன் பாம்பு பிடிக்கறவன் இல்லை. மாயவனோட கையாள். கடாரன்ங்கறவன். அவனே பாம்பையும் விட்டு அவனே பாம்பையும் பிடிச்சு நமக்கே அல்வா கொடுக்கப் பார்த்தான்.''

''எல்லாமே எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு.''

''அதிர்ச்சியாவும் எங்களுக்கு இருக்கும்மா. தயவு செய்து மதுரைக்கு போறேன் அங்க போறேன் இங்கே போறேன்னு சொல்லாதம்மா.''

''நோ டாட்... வேணும்னா என்கூட யாரையாவது துணைக்கு அனுப்புங்க. ஒரு போலீஸ்காரர்கூட வரட்டும். ஆனா அந்த போலீஸ்காரர் ஒரு எஸ்கார்ட்டா தூரமாதான் வரணும். எனக்கு என்னோட சுதந்திரம் ரொம்ப முக்கியம். பை த பை நீங்கதான் அந்த 'மாயவன் அண்ட் கோ'வை பிடிக்க எல்லா ஏற்பாடும் பண்ணியிருக்கிங்களே... அப்புறம் என்ன கவலை?''

''அவனை பிடிச்சாச்சுன்னு தெரிஞ்ச பிறகு நாளைக்கு நீ போகக்கூடாதாம்மா?''

''என் ஜூலி இன்னிக்குதான் வரா... நாளைக்கு இல்லை. சாரி ஜூலி எங்களுக்கு ஒரு திருடனால பிரச்சனை. அதனால ஏர்போர்ட்டுக்கு என்னால வரமுடியலன்னா அவ சிரிப்பாடாட்.''

செண்பகக்குழல்வாய்மொழி இறுதியில் தன் விருப்பப்படியே பாண்டியமாணிக்கத்தை சமாதானப்படுத்தி விட்டுக் கிளம்பி விட்டாள். அவள் பின்னாலேயே பாண்டியமாணிக்கம் சொன்னதன் பேரில் இளங்கோவும் ஒரு கான்ஸ்டபிளை காவலுக்கு அனுப்பினார். செண்பகம் சென்று விட்ட நிலையில் வீடே பரபரப்போடு கடாரன் வருகைக்காக காத்திருந்தது. ஆனால் கடாரன்தான் வரவேயில்லை.



அதேபோல பனங்காட்டு கண்ணாரம்மன் கோவிலைச் சுற்றித் திரிந்த போலீசாரிடமும் ஏமாற்றம். அங்கே மாயவனும் வரவில்லை.

ஹாலில் காலாட்டியபடி அமர்ந்திருந்த பாண்டிய மாணிக்கத்துக்குள் டென்ஷன் கூடிக்கொண்டே போனபோது ஒரு போன் வந்தது. காதைக் கொடுத்தார்.

''என்ன பாண்டியமாணிக்கம்... எங்களப் பிடிக்க போலீஸ் டிபார்ட்மெண்ட்டையே இறக்கியிருக்கே போல இருக்குது?''

''டேய்! யாருடா நீ?''

''என்ன பாண்டியமாணிக்கம்... என் குரலை வெச்சு நான்தான் கடாரன்கறது உனக்கு தெரியலியா?''

''டேய் திருட்டு நாயே... எவ்வளவு தைரியம் இருந்தா எனக்கே நீ போன் போட்டு பேசுவே?''

''நேர்லயே உன்னாண்ட பேசி உன் வீட்ல ஜோசியம் சொன்னதுக்கு உன் மாமா தங்கராசுகிட்ட பணமே வாங்கிட்டேன். நான் இப்ப போன்ல பேசறதுக்கு போய் தைரியம் வேணும்ங்கறியே.''

''டேய்... இப்ப நீ எங்கடா இருக்கே?''

''பேசத் தெரிஞ்சா பேசு... எதுக்கு இப்படி உளற்றே? நான் இருக்கற இடத்தை நீ கேக்கறதுக்காக நான் சொல்லிடுவேனா. நாங்க என்ன கேனையா?''

''நானும் கேனையன் இல்லடா... வந்தது நீதான்னு எப்படி கண்டு பிடிச்சேன் பார்த்தியா?''

''என்னா புண்ணியம்... நாங்கதான் இன்னிக்கு உனக்கு நாமம் போட்டுட்டோமே...''

''அதாண்டா எனக்கும் புரியல... எப்படிடா... எப்படி?''

''இப்படியே கேட்டு மண்டைய பிச்சுக்க. நீ வேணா ஏமாறலாம். நாங்க ஏமாறப் போறதில்லை. இன்னிக்கு உன்கிட்ட நான் அடிக்கறதா சொன்ன நாகமாணிக்கத்தை உன்னாண்ட இருந்து அடிச்சு காட்றேன். அதுவும் இன்னிக்கு ராத்திரி 12 மணிக்குள்ளார... அது மட்டுமில்ல... உன்கிட்ட இருக்கற இன்னொரு விலைமதிப்பில்லாத ஒண்ணையும் இன்னிக்கு நாங்க தூக்கறோம்.''

''டேய்ய்...''

''கத்தாத, பல்லு சுளுக்கிக்க போவுது. வெச்சுட்டா...''

- கடாரனின் போன் அடங்கியது. பாண்டியமாணிக்கம் வியர்த்துப் போய் விட்டிருந்தார். பழனியம்மாளும் நெருங்கி வந்து ''என்னப்பா... எதுக்கு இந்த கத்து கத்துனே... போன்ல யாரு?'' - என்று கேட்டாள்.

''யம்மா நீ கொஞ்சம் உள்ள போ... இங்க நான் இருக்கற நிலை தெரியாம என்னத்தையாவது கேக்காதே'' - என்றவர் அடுத்த முப்பதாவது செகண்டில் இளங்கோவைப் பிடித்தார்.

''யோவ் அவனுங்க சுதாரிச்சுட்டானுங்கய்யா. இனி அவனுங்க வரப் போறதில்ல. அதே சமயம் இங்க என்வீட்ல நாகமாணிக்கத்தை திருடிக் காட்றேன்னு சவால் விட்டிருக்கான்யா?'' என்றார்.

''எப்படி சார்... நான் பிளான் போட்டது. யாருக்கும் தெரியாதே சார்.''

''அதான், மாயவன்...! இப்ப தெரியுதா?''

''கவலைப்படாதீங்க சார்... அதான் வீட்ல நம்ம ஆட்கள் இருக்காங்களே.''

''என்னய்யா ஆளுங்க... பொடலங்கா ஆளுங்க... அவன் வந்து மயக்கப் புகை போட்டாக்கா அவ்வளவு பேரும் சுருண்டு போய் உழுந்துடுவாங்க... தெரியும்ல?''

''சார். தயவு செய்து தைரியமா இருங்க. அப்படி எல்லாம் எதுவும் ஆகாது.''

''இதோபார் இளங்கோ... மாயவன் சவால் விடமாட்டான். விட்டா சாதிச்சிடுவான்...''

''சரிசார். இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க. நான் கேக்கறேன்.''

''இன்னும் ஒரு பத்து பேத்தை என் வீட்டுக்கு அனுப்பு... என் வீட்டுக்குள்ள ஒரு ஈ காக்கா நுழையக்கூடாது...''

''நானே நேர்ல வரேன் சார்... நானும் உங்க கூடவே இருக்கேன். அவன் எப்படி வரான்னு பாத்துடுவோம்.''

''வாய்யா. உடனே புறப்பட்டு வா... இனி அந்தக் கோயிலைக் கட்டிகிட்டு அழுவ வேண்டாம். அவன்தான் சுதாரிச்சுட்டானே...''

''சரிங்க சார்...''

- பாண்டியமாணிக்கம் போனை கட்பண்ணி விட்டு நிமிர்ந்தார். பழனியம்மாளின் வெறித்த விழிகள் அச்சத்தை தந்தது.



''ஆத்தா...''

''தவுளி அடிச்சது மெய்யா போச்சு பாத்தியா?''

''ஆமாம் ஆத்தா...''

''முதல்ல உன் பொண்ணுக்கு ஒரு போனைப் போடு. அவளுக்கு ஏதாவது ஆகப் போகுது.''

''ஆமாம்மா... நீ சொல்றதும் சரிதான்...''

- பாண்டியமாணிக்கம் வேகமாக செண்பகக்குழல்வாய் மொழியின் செல்லோடு தொடர்பு கொண்டார்.

''தண்ணு...''

''என்ன டாடி.''

''ஒண்ணும் பிரச்னையில்லையே?''

''என்ன டாட் கேள்வி இது...?''

''அது இல்லம்மா... நான்தான் அந்த மாயவன் பயலோட சிக்கலை சொல்லியிருந்தேன்ல...?''

''சாரி டாட். நான் உங்க பித்துக்குளிதனமான பிரச்னைகளை எல்லாம் நினைக்கவே விரும்பல. ரொம்ப நாள் கழிச்சு என் ஃப்ரெண்டை பார்க்க போய்கிட்டிருக்கேன். தயவு செய்து என்மூடை டிஸ்டர்ப் பண்ணாதீங்க.''

''இதோ பாரும்மா... உனக்கு சின்னதா ஒரு சிக்கல்னாலும் எனக்கு போன் பண்ணு... போலீசும் உன்கூட வந்துகிட்டே இருக்கு.''

''அது உங்க திருப்திக்காக... என் வரைல அந்த ஆள் என் பிரைவசில குறுக்கிடறவன்... தெரிஞ்சுக்கோங்க'' - கடுகாய் வெடித்தாள் செண்பகக்குழல்வாய்மொழி.

பாண்டியமாணிக்கமும் போனை முடக்கியவராக பெருமூச்சு விடவும் திரும்பவும் சப்தமிட்டது பல்லி!

## 25

இரண்டாம் முறையாக சுவற்று பல்லி சப்தமிடவும் பாண்டியமாணிக்கத்துக்கு காரமான அமிலத்தை உள்ளங் கையில் வைத்து நாக்கால் சப்பியது போல் இருந்தது. பழனியம்மாளும் தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு பாண்டியமாணிக்கம் அருகில் வந்து நின்றாள்.

முகத்தில் குறுக்கும் நெடுக்கும் பூச்சிகள் பறந்தன.

''ஏன்தாயி?''

''மனசே சரியில்ல பாண்டி... சாமி கும்புடவும் முடியல. இந்த பல்லி வேற பயமுறுத்திகிட்டேயிருக்குது.''

''அதுக்கு என்ன பிரச்சனையோ? இல்ல பசிக்கு கூட இப்படி கத்தறது அது வழக்கமா இருக்கலாம். உடனே நாம அதை நம்ப பிரச்சனையோட இழுத்துப் போட்டுக்கறோம். விடுதாயி. எந்த தப்பும் என்வரைல நடக்காது... வீட்டை சுத்தி பாத்தேல்ல...? போதாக்குறைக்கு இன்னும் பத்து போலீசு வரப்போவுது...''

''என்ன போலீஸோ... உனக்கு விவரம் பத்தாதுடா...'' - பழனியம்மாள் சொன்ன விதமே சரியில்லை.

''மூணு வட்டம் எம்.எல்.ஏ... அதுல ஒரு வட்டம் மந்திரியா இருந்த எனக்கு விவரம் பத்தலையா?''

''ஆமாம் பாண்டி ஒரு விசயம் நடக்கணும்னு விதி இருந்தா அது எத்தன பேர் இருந்தாலும் நடந்து முடியும். உனக்கு பரிட்சீத்து ராஜா கதை தெரியுமா?''

''இப்ப எதுக்கு அந்த கதை எல்லாம்... நீ எதையாவது சொல்லி என்னை துவட்டிப்புடாதே... நான் நம்பிக்கையா இருக்கேன். என் தலைல இருந்து உதுந்து உழுவற முடியைகூட அந்த மாயவனோ இல்ல அவன் கூட்டாளிங்களோ தீண்ட முடியாது'' - பாண்டியமாணிக்கம் மீசையை நீவியபடி மிகத்தெம்பாய்தான் பேசினார். அப்போது இளங்கோவிடம் இருந்தே போன்.

''என்னய்யா?''

''ஐயா நம்ம ஊர் எல்லைல மூணு கொலை உழுந்துருக்குய்யா?''

''கொலையா... ஊர் எல்லைலயா?''

''ஆமாய்யா... இப்பதான் தகவல் வந்துச்சு. சாமியார் கரட்டுக்கு பக்கத்துல பெரும்பள்ளத்துல மூணு பேர் உடம்பு கிடக்குதாம்! மேல ஒரு பத்து பதினைஞ்சு கழுகுங்களும், ஏராளமா நாயுங்களும் அங்க திரியறத வெச்சு தகவல் வந்துச்சுங்கய்யா.''

''சாமியார் கரட்டுகிட்டயா... எவனாவது களவாணிப்பய வேலையா. ஆமா யாரு பொணமா கிடக்கறது?''

''தெரியலய்யா. இனிமேதான்யா போய் துப்பு துலக்கனும். நான் உடனே போயாகணும். நம்ம ஊட்டுக்கு நான் ஆளுங்கள அனுப்பிட்டேன்யா...''



''சரி... சரி... நீ போய் என்னன்னு பார். சொன்னு பள்ளத்துல தூக்கி போட்ற அளவுக்கு யாருக்கு இந்த ஊர்ல தைரியமிருக்கு?''

- பாண்டியமாணிக்கம் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார். பழனியம்மாள் அதைக் கேட்டு அருகில் வந்தவளாக.

''அதுவும் அந்த மாயவன் வேலையாதான் இருக்கும். இந்த ஊர்ல கத்திய தூக்கற தைரியம் யாருக்கு இருக்கு...? இதுவோ மூணு கொலைங்கறே... நிச்சயம் அவன் வேலையாதான் இருக்கணும்'' என்றாள்.

''சும்மா இரும்மா. நீ ஒண்ணு... நான் இங்க ஏற்கனவே உடைசல்ல இருக்கேன். நீ வேற அப்பப்ப உள்ள வந்து கலக்கி கலக்கி உட்றியே.''

''எலேய்... நான் இப்ப பேசறது உனக்கு அப்படித்தான் தெரியும். 'மூத்தோர் வாக்கும் முது நெல்லிக்கனியும் முதலில் கசக்கும். பின்னர் இனிக்கும்'னு சொல்றது உண்டு. ஞாபகத்துல வெச்சுக்க. எதுக்கும் உன் பொண்ணுக்கு ஒரு போனை போட்டு அவ எப்படி இருக்கான்னு கேளு.''

- பழனியம்மாள் செண்பகக்குழல்வாய்மொழியை ஞாபகப்படுத்தினாள். பாண்டியமாணிக்கமும் மறுபேச்சு பேசாமல் மகளுக்கு போன் போடத் தொடங்கினார்.

மதுரை விமான நிலையம்!

புதுபொலிவோடு நிறையவே மாறிவிட்டிருந்தது. செண்பகக் குழல்வாய்மொழியின் கார் உள் நுழையும் போதே கார் பார்க்கிங் கட்டணத்தை வசூலித்து விட ஒருவன் ஓடி வந்தான்.

''ஏரோப்ளேன் வருதோ இல்லையோ இவங்க வந்துடுவானுங்க' என்றபடி டிரைவர் எரிச்சலோடு ரசீதை வாங்கிப் போட்டான். அப்போது செண்பகம் செல்லும் சிணுங்கியது. எடுத்தாள், எல்லோரும் பிரிந்திருக்கிறோம் என்று யார் சொன்னது! செல்போன் கையில இருந்தால் எல்லோர் காதும் நம் உதட்டருகில் வந்துவிடும் என்பதுதான் இன்றைய விஞ்ஞானத்தின் பெரும் சாகசம்.

''அம்மாடி...''

''ஓ... அப்பாவா...?''

''நான்தாம்மா - இப்ப எங்க இருக்கே?''

''நான் இப்ப ஏர்போர்ட்ல இருக்கேன். எதுக்குப்பா இப்படி பதினைஞ்சு நிமிஷத்துக்கு ஒரு தடவை போன் பண்ணி டார்ச்சர் பண்றீங்க?''

''அதெல்லாம் இல்லம்மா... இங்க நிலைமை ரொம்ப மோசம்மா நம்ம வரதம்பட்டில ஒரு கொலைக்கு மூணு கொலை வேற விழுந்துருக்குன்னா பாத்துக்கயேன்.''

''அதுக்கு காரணம் உங்கள மாதிரி திருத்தவே திருந்தாத பணக்காரங்கதான். நீங்கள்ளாம் மாறுங்க எல்லாம் சரியாயிடும்.''

''நீ என்னம்மா என்மேல இருக்கற கோபத்தை இப்படி பணக்காரங்கதான்னு எல்லார் மேலயும் காட்றே?''

''அதான் அன்னிக்கு பாத்தேனே... கார் இருக்குன்னு ஆடுங்க மேல ஏத்திக் கொன்னுட்டு கணக்குப் பாத்துக்கிட்டுல்ல நின்னீங்க?''

''நீ சொன்னேன்னுதான் முழுத் தொகையும் கொடுத் திட்டேன்ல?''

''நான் இருந்தேன் - பார்த்தேன் - சொன்னேன்... இல்லாட்டி?''

''உனக்கு வெள்ளந்தியான மனசு. அதான் இந்த ஊர் எப்படிப்பட்ட ஊர்னு தெரியல நாம தூக்கத்துல கூட முழிச்சிகிட்டு இருக்கணும்மா. இல்லாட்டி முழிச்சு பாக்கும் போது, கண்ணா முழியே இருக்காது.''

''ரொம்ப எக்ஸாஜிரேட் பண்ணியே எதையும் பாக்கறீங்க. பேசறீங்க. அப்புறம் வார்த்தைக்கு வார்த்தை எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு எதுவும் தெரியாதுன்னு சொல்றதையும் ஒரு வழக்கமா வெச்சிட்டிருக்கீங்க.

ஐ டோன்ட் லைக்... தயவுசெய்து எனக்கு போன் பண்ணி இப்படி அட்வைஸ் பண்ணாதீங்க ரொம்ப நாள் கழிச்சு என்ஃப்ரெண்ட் வரா. நான் அவகூட சந்தோஷமா பேசணும். அதனால இப்ப நான் என் செல்போனை ஆஃப் பண்ணிடப் போறேன். எதுவா இருந்தாலும் நான் வீட்டுக்கு திரும்பி வந்தபிறகு பாத்துக்கலாம்'' என்று பாக்கு வெட்டி கொட்டை பாக்கை நறுக்குவது போல பாண்டிய மாணிக்கத்தை நறுக்கி முடித்து விட்டு செல்போனையும் ஆஃப் செய்தாள்.

விமானமும் தரை இறக்கிக் கொண்டிருந்தது.



செண்பகமும் காரை விட்டு இறக்கி டொமஸ்டிக் கேட் அருகே போய் நின்று கொண்டாள்.

டிரைவர் அதை ரசனையோடு பார்த்தான்.

அவனையெல்லாம் நேருக்கு நேர்கூட பார்க்காதவர் பாண்டியமாணிக்கம். ''டேய் எருமை... பாத்து ஓட்றா... ஏ.சிய நல்லா போடுடா... ஏண்டா பள்ளம் எங்க இருக்குன்னே பாத்து ஓட்டுவியா? இங்க என் குறுக்கு போச்சுடா...'' என்று காருக்குள் அவர் இருந்தாலே அர்ச்சனைதான்... திருப்பி பேசினால் வேலை நிலைக்காது... அடிமை இனம்தானே? தன்னால் முடியாததை செண்பகம் செய்யவும் அது மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

'நல்லா போட்டு தாக்குங்கம்மா... அதிகாரம் பண்ணாட்டி உங்கப்பாவுக்கு தூக்கம் வராது. பதிலுக்கு எங்களால பேசமுடியாது. நீங்க நல்லா பேசுங்க...' என்று மனதுக்குள் கூறிக் கொண்டான்.

அப்போது அவன் அருகே ஒருவன் வந்தான்.

''அண்ணாச்சி வத்திப்பெட்டி இருக்கா?'' - என்று கேட்கவும் டிரைவரும் எடுத்து நீட்டினான். கருப்பாய் ஒரு ஃபாரீன் சிகரெட்டை அவன் எதிரிலேயே பற்ற வைத்த அந்த நபர்!

''வண்டி நம்பரை பாத்தா வத்தலகுண்டு ரிஜஸ்ட்ரேஷன் மாதிரி தெரியுது'' என்றான்.

''ஆமாம்... எம்எல்ஏ வண்டி.''

''அப்ப வண்டில வந்தது யாரு?''

''எம்எல்ஏவோட ஒரே மவ...''

''ட்ராப்பா - பிக்கப்பா?''

''பிக்கப்பு... முதலாளியம்மாவோட ஃப்ரெண்டு வர்றாங்க?''

''பரவாயில்லியே தோழிய வரவேற்க பொண்ணே ஏர்போர்ட்டுக்கு வந்துருக்குது... டிரைவரை விட்டு கூட்டிகிட்டுல்ல வரச்சொல்வாங்க.''

''எங்கம்மா தனிரகம்... எல்லா விதத்துலயும் அப்பாக்கு நேர் எதிர்...''

- இருவரும் சகஜமாய் பேசிடும்போது அவர்களைத் தொடர்ந்து வந்திருந்த போலீஸ்காரர் மஃப்டி யூனிஃபார்மில் டிரைவரை அருகில் வந்தார். அவர் வரவும் தம் அடித்த நபர் ஒதுங்கத் தொடங்கினார்.

''என்னய்யா... அடுத்து இங்க இருந்து எங்கப் போறே... ஊருக்கு தானே?''

''நீங்க வேற சார்... அடுத்து நேரா மலைமேல தாஜ் ஹோட்டலுக்கு போறாங்க. அங்க ரூம் போட்டிருக்குல்ல? அப்பால மீனாட்சியம்மன் கோவில், நாயக்கர் மகாலுன்னு ஃப்ரெண்டோட ரவுண்டடிக்கறாங்க.''

''சரிதான்... இன்னிக்கு நானும் கோவிலு மகாலுன்னு சுத்தணுமா?''

''நாய்ப்பொளப்பு சார் உங்க பொளப்பு...''

''என்ன செய்யச் சொல்றே... இந்த மாயவன் பயலால எங்க தாலி அந்து போவுது?''

''எங்க சார்... மாயவன் சேட்டை எல்லாம் நம்ம பக்கத்தோட சரி, இங்கல்லாமா சார் வருவான்?''

''அவன் எங்க வேணாலும் வருவான் எப்படி வேணாலும் வருவான். அவனைப் பத்தி உனக்கு என்னத் தெரியும்.''

''அட போங்க சார்... எனக்கு நம்பிக்கையில்லை. அதோட மாயவன் பத்தி நானும் கேள்விபட்டிருக்கேன். பொம்பளங்க மேல அவன் சுண்டு விரல்கூட படாதாமுல்ல?''

''அது எங்களுக்கும் தெரியும். ஆம்பளைங்க கூட அவனை காட்டிக் கொடுப்பாங்க. ஆனா ஒரு பொம்பள கூட மாயவன காட்டிக் கொடுக்க மாட்டாளுங்கன்னு...! பொம்பளங்ககிட்ட அவனுக்கு அப்படி ஒரு இமேஜி.''

- போலீஸ்காரரும் டிரைவரும் சகஜமாக பேசி கொண்டிருந்தாரும் போலீஸ்கார் பார்வை டொமஸ்டிக் கேட் வாசலில் நின்றபடி இருக்கும் செண்பகம் மேலேயே இருந்தது. பாண்டியமாணிக்கம் செண்பகம் செல்போனை ஆஃப் செய்து விடவும். கான்ஸ்டபிளை கூப்பிட ஆரம்பித்து அவர் செல்போனும் சிணுங்கியது.

''மந்திரிதான் லைன்ல வராரு... அய்யா வணக்கம்.''

''கும்புடாய்யா இப்ப முக்கியம் எப்படிய்யா இருக்கா என் மக!''

''ஒரு பிரச்னையும் இல்லைங்க. ஏர்போர்ட்ல அம்மாவோட தோழிக்காக காத்திருக்காங்க அய்யா. தோழியும் வந்துட்டாங்க. நல்லா செவப்பா சினேகமா மாதிரி இருக்காங்கய்யா?''



''ஆளை கவனமா பாருய்யா... தோலை பாத்து ஏமாந்துடாதே.''

''உத்தரவுய்யா...''

- போனை அணைத்தார். செண்பகமும் தோழியும் உரசியபடி கார் அருகில் வந்தனர். ஆங்கிலம் இருவர் பேச்சிலும் பீர்பாட்டில் நுரைபோல பொங்கி வழிந்தது. கான்ஸ்டபிள் நாசூக்காக நகர்ந்து கொண்டார். பின் சீட்டில் இருவரும் ஏறி அமர்ந்து கொள்ள காரும் புறப்பட்டது. அந்த ஃபாரீன் சிகரெட் பிடித்த நபர் ஒரு மறைவில் இருந்து வெளிப்பட்டான். கார் போவதை பார்த்தபடி செல்போனில் யாருடனோ பேசினான்!

**கூமாச்சி மலை உச்சி!**

இருட்டி விட்டது வேப்பெண்ணை தீப்பந்தங்கள் ஒண்ணுக்கு நான்கு ஏற்றப்பட்டதில் வெளிச்சம் வந்து கவ்விக் கொண்டது. மழைகூட வரும் போல தெரிந்தது. மாயவனும் உளியனும் ஒரு பாறைமேல் சாய்ந்திருந்தனர். பெருமாள் அவர்களின் திட்டப்படி போன் போடுவதற்காக கீழே இறங்கியிருந்தான். கடாரன் வெளியே ஓடை மீனை பிடித்து வந்து வடைசட்டியில் வறுத்துக் கொண்டிருந்தான். மண்பானை நிறைய சோறு பொங்கி முடித்திருந்தது. அப்படியே எல்லா காய்களையும் போட்டு வைத்த குழம்பும் ஒரு சட்டியில்...

உளியனுக்கு உடம்பு சோர்வாகவே இருந்தது. மனசுக்குள்ளேயும் ஏராளமாய் கேள்விகள்.

''மாயவா...''

''உம்...''

''போன் போட்டு மந்திரியை குட்டைய குழப்ப சொல்லியிருக்க. ஆனா அதனால எப்படிப்பா நாகமாணிக்கம் இங்க நம்ம கைக்கு வரும்?''

''ஏன் வராது?''

''யாராவது ஒருத்தர் அங்க இருந்து களவாண்டால்ல நம்ம கைக்கு வரும்.''

''இல்லேன்னு உனக்கு யார் சொன்னா?''

''என்னப்பா சொல்றே... நமக்கு தெரியாம யாருப்பா அது?''

''பொறுமையாக இரு... விடியும் போது நாகமாணிக்கமும் நம்ம கைல. அதுமட்டுமில்ல... அந்த மந்திரி மவளும் நம்ம கைல?''

''மவளுக்கு எப்படி குறி வெச்சிருக்கே?''

''இப்ப என்னை எதுவும் கேக்காதே...''

''இது என்னப்பா பேச்சு... எதுனாலும் நாமதானப்பா பேசி ஒண்ணா இருந்து செயல்படுவோம். பேசாதே - கேக்காதன்னா என்னப்பா அர்த்தம்?''

''நடக்க வேண்டிய காரியம் கெட்டாலும் கெட்டும்.''

''அப்படின்னா நீ எங்கள நம்பலையா நாங்க யாருக்காவது சொல்லிடுவோம்னு பயப்படறியா?''

''இனி மறந்துகூட இப்படி பேசாதே... என் வரைல நம்ம நாலு பேரை தாண்டி வெளில நடக்கற விசயங்கள் பத்தி, நான் ரொம்ப நம்பிக்கை வெச்சு வெளிய சொன்னா நடக்க மாட்டேங்குது. அடுத்து உங்களுக்கும் நான் ஒரு ஆச்சரிய அதிர்ச்சியை தர விரும்பறேன்... எல்லாத்துக்கும் மேலா காரியம் செயமாகற வரை அதை பத்தி யார்கிட்டயும் பேசமாட்டேன்னு வானக்கருப்பு மேல் சத்யம் செய்துருக்கேன்.''

- மாயவனின் சமாதானம் உளியனின் தவிப்பைத்தான் அதிகரித்தது. கடாரனும் உள்ளங்கையில் ஒரு மீன் துண்டத்தை வைத்து கடித்தபடியே ''நான் கேட்டதுக்கும் இதே பதில்தான். எலெக்ஷன் ரிசல்ட்டை தெரிஞ்சிக்க எப்படா விடியும் - எப்படா ஓட்டு எண்ணுவாங்கன்னு உக்காந்துருப்போம் பாரு... அப்படி இருக்கு'' - கடாரன் தனக்கு தெரிந்த உதாரணத்தை சொல்லி புலம்பினான்.

நேரமும் ஓடி 11 மணியை எட்டி நின்றது!

**பா**ண்டியமாணிக்கம் பங்களா!

பங்களா முழுக்க விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. எல்லோருமே கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டிருந்தனர். எங்கே அதிகம் குடித்தால் போதையில் தூங்கிப் போய் விடுவோமோ என்னும் பயத்தில் பாண்டியமாணிக்கம் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி இருந்தார். அப்போதுதான் அந்த போனும் சப்தமிட்டது!



## 26

**அ**ந்த தொலைபேசி சப்தம் பாண்டியமாணிக்கத்துக்கு அரவத்தை ஏற்படுத்தியது. எழுந்து சென்று அவர் போனை எடுக்க முனையும் போது, அதை தடுத்து விட்டு வேலைகாரன் வடிவில் இருந்த ஒரு போலீஸ்காரர் போனை கையில் எடுத்தார்.

கடாரன்தான் பேசினான்.

''யாரு போலீஸ்காரரா?'' - கச்சிதமாக கேட்டான்.

''நீ யாருடா?'' - போலீஸ்காரரிடம் அதட்டல்.

''உம்... மண்ணாங்கட்டி...''

''எலேய்ய்... யார்கிட்ட பேசறே தெரியுமா?''

''பொத்து... போனை அந்த பாண்டிய மாணிக்கத்துக்கிட்ட கொடு.''

தோரணையான பதில் அந்த போலீஸ்காரரை கோபத்தில் சிவக்க வைத்தது.

''எலேய்... நீ இப்ப யாருன்னு சொல்லப் போறியா இல்லையா?''

''அதை நான் அந்தாள்கிட்ட சொல்லிக்கிறேன். டென்ஷன் ஆகாதே நீ. போனை அத்தாள்கிட்ட கொடுங்கறேன்ல?''

- போலீஸ்காரருக்கு போன் வழியாகவே அவன் முகத்தில் எச்சில் உமிழ்ந்தது போலவும் இருந்தது. அசடு வழிய திரும்பி பாண்டியமாணிக்கத்தை பார்த்தார்.

''யாருய்யா?''

''யார்னே தெரியல. உங்ககூட பேசணுங்கறான்.''

''பகல்ல பேசுன அந்த கடாரனாதான் இருப்பான். என்னான்னு கேளு.''

''ஐயா... நான் கேட்டதுக்கு தான் உங்களாண்ட பேசணும்ங்கறான்.''

- பாண்டியமாணிக்கமும் ஆவேசமாக உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து எழுந்து வந்தார். கூடவே சற்று தள்ளி நின்றபடி இருந்த வீரைய்யனும் அவரோடு சேர்ந்து வந்தான்.

போனை வாங்கியவர் ஆவேசமானார்.

''ஏண்டா டேய்... உன் மனசுக்குள்ள என்ன பெரிய வீரப்பன்னு நினைப்பாடா உனக்கு?''

''அப்ப வீரப்பனை பெரிய ஆளா ஒத்துக்கிட்டீங்கன்னு சொல்லுங்க.''

''விசயத்துக்கு வாடா காட்டு மந்தி. நீ மட்டும் இப்ப வீட்டுப் பக்கம் வந்தே உன்னை பிரிச்சு மேஞ்சிடுவேன்.''

''ஏன் மேய மாட்டே! வீட்டை சுத்தி இருவது போலீசு. போதாக்குறைக்கு வேலைகார நாயுங்க வேற. ஆமா அந்த துரோகி வீரைய்யன் இருக்கானா?''

''அவனைபத்தி இப்ப என்னடா பேச்சு!''

''எங்க குறியே அடுத்து அவன்தான்... அவன் தலையை மட்டும் எப்படி தனியா வெட்டி தூக்கிட்டு போகப் போறோம்னு நீயும் பாக்கத்தானே போறே?''

''என்னடா மிரட்றியா... தில் இருந்தா எதிர்ல வாங்கடா?''

''வாங்கடாவா... அதான் வந்தாச்சே...''

''என்னாது வந்தாச்சா?''

''போய் உன் கஜானாவை திறந்து பாரு. அந்த நாகமாணிக்கம் இருக்குதான்னு... அப்ப தெரியும்.''

- டக்கென்று போன் கட்டானது. பாண்டிய மாணிக்கத்தையும் திகில் பற்றிக் கொண்டது. முகம் வெளிறிப் போனது. போலீஸ்காரரும் கவனித்தார். வீரைய்யனும் கேட்டான்.

''ஐயா... என்னங்கய்யா?''

''ஒண்ணுமில்ல... ஒண்ணுமில்ல'' என்று சமாளித்த பாண்டியமாணிக்கத்தை பழனியம்மாளும் கவனித்தாள். அவளுக்கும் தூக்கம் பிடிபடவில்லை. வீடே போலீஸ் காவலில் பரபரப்போடு இருக்கும்போது தூக்கமாவது ஒன்றாவது.

பாண்டியமாணிக்கத்துக்கு இரவின் குளிர்மையை மீறிக் கொண்டு வியர்க்கவும் செய்தது.

தோளில் கிடந்த துண்டாலே ஒற்றிக் கொண்டே... கஜானா அறை நோக்கி சென்றார். மாடிப்படிகளில் ஏறி அறை வாசலுக்கு சென்று ஜிப்பா பாக்கெட்டில் இருந்த சாவியை எடுத்து அறை கதவையும் திறந்து உள் நுழைந்து முதற்காரியமாக கதவை தாழிட்டார். பின்புதான் அந்த இரும்புப் பெட்டி கஜானாவையும் திறக்கத் தயாரானார். அந்த நேரம் பார்த்து மின்சாரம் வேறு தடைப்பட்டு இருண்டு போனது.

அவருக்கும் பீதியாகி விட்டது.



இருண்ட அறைக்குள் நிற்கவும் பயமாக இருக்கவே தட்டுத் தடுமாறி வந்து அறைக் கதவை திறந்தார்.

திறந்த வேகத்தில் ''டேய் எவன்டா அங்க... அந்த எமர்ஜென்சி விளக்கை கொண்டாங்கடா'' என்று கத்தவே வீரைய்யன் விளக்குடன் படிஏறி ஓடி வந்தான். வந்த வேகத்தில் கீழே விழுந்ததில் விளக்கு நொறுங்கிப் போய் மீண்டும் இருள் சூழ்ந்து கொண்டது.

''அடப் பன்னாடைப் பயலே... குருட்டுக் கோழி! யோவ் போலீசு நீ எங்கய்யா இருக்கே?'' கத்தினார். பாண்டிய மாணிக்கம். அதற்கு பதிலாக ஒரு தீக்குச்சி வெளிச்சத்தை உருவாக்கியவராக படி ஏறி வந்தவரிடம் தீக்குச்சி மட்டும் இருந்தது. ஒன்று அணையவும் மற்றதை பற்ற வைத்துக் கொண்டார். அதற்குள் வீரைய்யனும் எழுந்து ஒதுங்கிக் கொண்டான்.

தீக்குச்சி வெளிச்சத்தில் போலீஸ்காரரிடம் தீப்பெட்டியை வாங்கிக் கொண்ட பாண்டியமாணிக்கம் வெளிக்கதவை இழுத்து திரும்ப பூட்டப் பார்த்தார்.

குச்சி அணையவும் அடுத்த குச்சிக்கு முயன்றார். அந்தக் குச்சி உடைந்து போய் எரிச்சல் மூட்டியது. ஒரு வழியாக அடுத்த குச்சி எரிந்தது. அந்த வெளிச்சத்தில் கதவையும் பூட்டி முடித்தார். அப்படியே அடுத்தடுத்த தீக்குச்சி வெளிச்ச உதவியோடு படி இறங்க முற்பட்டபோது உடைந்த எமர்ஜென்சி விளக்கின் கண்ணாடித் துண்டு ஒன்று காலில் தைத்து அலறவிட்டது.

''ஐயோ அம்மா...'' என்றவரை சில போலீஸ்காரர் களும் தாங்கிப் பிடித்து சோபா அருகில் அழைத்து வருவதற்குள் பழனியம்மாள் ஒரு மெழுகுவர்த்தியை தேடிப்பிடித்து எரிய வைத்தபடி வந்து நின்றாள்.

''நாசமாப் போன கரண்ட்டு... எலேய் கவனமா இருங்கடா. இது அந்த மாயவன் கூட்டாளிங்க சதிவேலையா கூட இருக்கலாம்'' என்று படபடத்தார்.

''எல்லாரும் அலாட்டாதான்யா இருக்கோம். வெளிய கேட்டு கதவு, வீட்டு வாசக்கதவு எல்லாத்தையும் அடைச்சுட்டோம்.''

''சரிசரி முதல்ல ஈ பி ஆபீசுக்கு போன்போடு... கரண்ட்டு எப்ப வரும்னு கேளு... அப்படியே காலுக்கு மருந்து வெச்சு கட்டு போடுங்கடா... கண்ணாடித் துண்டு ஏறிக்கிட்டிருக்குது.'' என்று வலியாலும் துடித்தார். எல்லோரும் சுறுசுறுப்பாகினர்.

பழனியம்மாள் காலருகே மெழுகுவர்த்தியை கொண்டு சென்று கண்ணாடித்துண்டைப் பார்த்து பதறத் தொடங்கினாள்.

''ஆத்தி... கத்தியால குத்துன கணக்கால்ல ஏறிக் கிட்டிருக்கு?''

''இங்க நான் வலியால துடிச்சிகிட்டிருக்கேன் உனக்கு வியாக்கியானம் கேக்குதா?''

''இருடா... பாத்து பக்குவமா கண்ணாடியை எடுக்காட்டி பெரிய காயமாகி அப்பால உன் காலையே வெட்டி எடுக்கற மாதிரி ஆயிடப் போவுது... நீ ஒரு சக்கர வியாதிக்காரன் வேற...'' பழனியம்மாள் பயமுறுத்தினாள்.

பழனியம்மாளின் சமாதானத்தை தொடர்ந்து காலில் போலீஸ்காரர்கள் சூழ்ந்து நின்று தீக்குச்சி வெளிச்சத்தை உருவாக்க சமையல் கட்டில் எரிந்தபடி இருந்த எமர்ஜென்சி விளக்கை எடுத்து வந்து ஒருவர் பெரிய அளவில் வெளிச்சத்தை உருவாக்கினார்.

இதற்குள் ஒருவர் போன் போட்டார் ஈ பி ஆபீசுக்கு... ரிங் போனபடியே இருந்தது.

''ஐயா ஈ பிகாரங்க எடுக்க மாட்டேங்கறாங்க... நம்பளையும் பப்ளிக்குன்னு நினைச்சுட்டாங்க போல'' என்றார் ஒரு போலீஸ்காரர்.

''எழவெடுத்தவனுங்க... எழவெடுத்தவனுங்க... அது ஈ பி இல்லடா கி.பி. கற்காலம்! பாத்துலே எல்லாரும் சூதானமா இருங்க. அந்த விளக்கை போட்டுஉடைச்ச வீரைய்யன் எங்க... அவன் தலையை வாங்கப் போறதா எனக்கே போன் போட்டு மிரட்டல்... எலேய் விளங்காப் பயலே - சூதானமா இருடா.''

- பாண்டியமாணிக்கம் புலம்பல் எச்சரிக்கை என்று மாறி மாறிப் படபடத்தார்.

அப்போது திரும்பவும் தொலைபேசி மட்டும் அலறியது. போலீஸ்காரர்தான் எடுத்தார்.

''யோவ் போலீசு... என்ன கரண்ட்டு போயிடுச்சா எல்லாம் எங்க வேலைதான். நாகமாணிக்கத்தையும் ஆட்டைய போட்டுட்டோமுல்ல! சொல்லு அந்த மாஜி மந்திரிகிட்ட...''

குரலைக் கேட்ட போலீஸ்காரருக்கு பகீர் என்றது; தொலைபேசியும் கட்டானது.

''யாருய்யா... திரும்ப அந்த நாயா... என்ன என்கூடதான் பேசணுமாமா...?''



''இல்லய்யா... அது வந்து?''

''எது வந்து?''

''அவங்க நினைச்சத சாதிச்சிட்டாங்களாம் சொல்றான்யா?''

''என்னய்யா சொல்றே?''

''நாகமாணிக்கத்தை அடிச்சுட்டாங்களாம்யா?''

- போலீஸ்காரர் சொன்ன மறுநொடி. கால்கட்டைக்கூட பொருட்படுத்தாமல் எழுந்த பாண்டியமாணிக்கம் மீண்டும் மாடி நோக்கித்தான் ஓடினார். ஒருவன் கையில் இருந்த மெழுகுவர்த்தியை பிடுங்கிக் கொண்டு அதன் வெளிச்சத்தில் படிகளில் தடுமாறி ஏறியவர் அறைவாசலுக்கு போய் நின்று பார்த்துபோது பூட்டிய கதவு பூட்டியது போலவே இருந்தது. பின்னாலேயே எமர்ஜென்சி விளக்குடன் ஓடிவந்த ஒரு போலீஸ்காரரும் படியில் கால் வழுக்கி கீழே விழுந்ததில் அந்த விளக்கும் உடைந்து நொறுங்கிப் போனது.

''உடையுங்க. எல்லாத்தையும் போட்டு உடையுங்க'' என்று கத்திய பாண்டியமாணிக்கம் மளமளவென்று கதவைத் திறந்தார். அதே நொடி உள்ளே இருந்து முகமூடி அணிந்த ஒரு உருவம் பாண்டியமாணிக்கத்தின் மெழுகுவர்த்தியை குப்பென்று வாயால் ஊதி அணைத்துவிட்டு அவரையும் பிடித்துத் தள்ளிவிட்டு பாய்ந்து ஓடத் தொடங்கியது.

பாண்டியமாணிக்கம் அலற ஆரம்பித்தார்.

''டேய் கள்ளன் ஓட்றான் பிடிங்கடா... பிடிங்கடா'' என்ற அவர் குரலைத் தொடர்ந்து ஆளுக்கு ஆள் சுதாரித்தும் பயனில்லை. அந்த முரட்டு உருவம் அவ்வளவு பேரையும் பிடித்துத் தள்ளியபடி இருளில் மூழ்கி ஓடியே விட்டது.

எல்லோரிடமும் அலறல்... கதறல்!

அங்கங்கே சிறிது சிறிதாக தீக்குச்சி வெளிச்சங்கள்.

நடுவில் போன கரண்ட்டும் திரும்பி வந்தது.

வீடும் பளிச்சிட்டது. அப்போதுதான் யார் யார் எங்கெங்கே கிடக்கிறார்கள் என்பதும் தெரிந்தது.

கஜானா அறையில் கஜானா இரும்புப் பெட்டியும் திறந்து கிடக்க அதைப்பார்த்த பாண்டியமாணிக்கத்துக்கு நெஞ்சையடைத்தது. அந்த நாகமாணிக்கத்தை காணவில்லை!

பூட்டிய அறைக்குள் எப்படி ஒருவன் வந்திருக்க முடியும்? அவன் எப்பொழுது வந்தான்... எப்படி வந்தான்? அவர்

கேள்விகளில் விழுந்து வெலவெலத்துப் போகும் போது ஐயா! என்று அலறியடி அவர் அருகே வந்து கழுத்தில் ஒரு பெரும் கீறலோடு ரத்தம் வழிந்தோடக் கீழே விழுந்தான் வீரைய்யன்!

அவனைப் பார்க்கவும் பாண்டியமாணிக்கத்துக்கு ரத்தமே உறைந்து விட்டது!

## 27

**பா**ண்டியமாணிக்கம் ஸ்தம்பித்துப் போய் அப்படியே சோபாவில் விழுந்து விட்டார். நாகமாணிக்கம் களவு போன விஷயம் பழனியம்மாளையும் புலம்பத்தூண்டியது.

''ஐயோ... ஐயோ... நான் அப்பவே சொன்னேனே பாண்டி - நீ கேக்கலியே... பாழாப் போன கவுளி ஒரு வட்டத்துக்கு ரெண்டு வட்டம் அந்த நிலைகால் மேல் நின்னுகிட்டு அடிச்சிச்சு... பாத்தியா...? கடைசில அந்த மாயவன் சொன்ன மாதிரியே சாதிச்சிட்டான். அவன் வல்லாள கண்டன்னு நிரூபிச்சிட்டான்யா... நிரூபிச் சிட்டான். இத்தன போலீஸ் இம்புட்டு துப்பாக்கி இருந்து என்னா பிரயோசனம்?

போச்சே... போச்சே...

பணமா இருந்தாகூட சம்பாரிச்சிடலாம். இது அபூர்வமான சமாசாரமாச்சே... பாண்டி... ஏ...''

- சாவு வீட்டில் இறந்தவர்களின் கீர்த்தியை சொல்லி ஒப்பாரி வைப்பது போல பழனியம்மாள் புலம்பிய புலம்பல் அந்த பங்களாவையே உலுக்கி எடுத்தது. வீரைய்யன் கழுத்தை பிடித்தபடியே நின்றிருந்தான். ரத்தம் பெருகி முழங்கை வழியாக தரையில் சொட்டியது. அதைப் பார்த்த ஒரு போலீஸ்காரர் ''ஏய்... இப்படி நின்னே செத்துராதய்யா... முதல்ல டாக்டர் பார்க்க புறப்படுய்யா... உனக்கு ஏதாவது ஆயி நீ செத்து கித்து வெச்சா விவகாரம் பத்திரிகைல கன்னா பின்னான்னு வரும்'' என்று பேசவும் பாண்டியமாணிக்கம் ''இவனை முதல்ல ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போங்கடா'' என்று அனுமதியளித்தார்.

அப்போது அந்த மூன்று கொலைகள் தொடர்பாக விசாரணைக்கு போயிருந்த இளங்கோவும் செய்தியறிந்து அரக்கப்பரக்க வீட்டிற்குள் நுழைந்தார்.

''அய்யா...''



''வாய்யா... வா...''

''எப்படிய்யா...?''

''என்ன... உன் எதுக்க எப்படின்னு ஒரு வாட்டி நடிச்சு காட்டச் சொல்றியா?''

''இல்லய்யா இம்புட்டு பேர் இருக்கும்போது...''

''எம்புட்டு பேர் இருந்தா என்ன... பவர் கட்டானா பாக்க முடியுமா? நாம என்ன பூனை ஜென்மமா - ராத்திரில கண்ண விரிச்சுகிட்டு பாக்க?''

''கரண்ட் கட்டானா என்னய்யா... எமர்ஜென்சி லைட் இல்லையா?''

''எல்லா எழவும் சேர்ந்து கழுத்தறுத்துடிச்சிய்யா... நீ என் வயித்தெரிச்சல கொட்டிக்காதே. முதல் தடவை அவன் போன் போடும் போதே நான் சுதாரிச்சிருக்கணும். என் மண்டைக்கு அது எட்டாம போயிடிச்சு.

உங்க அவ்வளவு பேருக்கு நடுவுல உள்ள நுழைஞ்சு நான் முதல் தடவை அந்த அறையை திறக்கைல உள்ள நுழையறான். அவன் உள்ள இருக்கறது தெரியாமலே நானும் கதவை பூட்றேன். அந்த கேப்ல உள்ள பீரோவை திறந்து நாகமாணிக்கத்தையும் அடிச்சிட்றான். அடுத்து ஒரு போன் வருது. உள்ள நாகமாணிக்கம் பீரோவுல இப்ப இல்ல வேணா போய்பாருன்னு... பதறிப்போய் திறந்தா உள்ள இருந்து புலி மாதிரி பாஞ்சு வந்து என்னை தள்ளி விட்டுட்டு இருட்டுல பூனை மாதிரி ஓடியே போய்ட்டானே?''

''அப்ப நம்ம வீட்டுக்கு மட்டும் மெயின்ல பீஸை புடுங்கிட்டானாய்யா?''

''பொறவு... நீ என்ன என்னையே நோண்டிகிட்டு நிக்கறே. ஓடிப் போனவளை புடிக்கற துப்பு உனக்கு இல்லையா?''

- பாண்டியமாணிக்கம் ஆவேசமாகி கையை வீசியதில் விரல் நுனி இளங்கோவின் கண்ணில் பட்டு கண்ணும் சிவக்க ஆரம்பித்தது.

''பாண்டி... நாகமாணிக்கம் கூட போனா போயிட்டு போவுது உன் பொண்ணு... என் பேத்தி. இந்த ஊட்டுக்கே மாணிக்கண்டா, அவளுக்கு ஏதாவது ஆயிடப் போவுது?''

- பழனியம்மாள் இடையில் புகுந்து எடுத்துக் கொடுத்தாள். அடுத்த நொடியே பாண்டியமாணிக்கம் அந்த போலீஸ் கான்ஸ்டபிளுக்குதான் போன் செய்தார்.

பசுமலை தாஜ் ஹோட்டல்!

''ஐயா சொல்லுங்கய்யா...'' கான்ஸ்டபிள் போனை அட்டெண்ட் செய்து பேசத் தொடங்கினார்.

''எங்கய்யா இருக்கே?''

''மதுரை பசுமலை தாஜ்ஹோட்டல் மலை மேலய்யா...''

''என் பொண்ணு என்ன பண்ணிகிட்டிருக்கா?''

''ரூம்ல ஃப்ரெண்டோட டி.வி.பார்த்துகிட்டிருக்காங்கய்யா?''

''நெசமாத்தானே சொல்றே?''

''என்னய்யா இப்படி கேக்கறீங்க... இது என் ட்யூட்டி விஷயம்க. பொய் சொல்வேனா - அதுவும் உங்ககிட்ட?''

''அப்ப அப்படியே இந்த போனோட போய் என் பொண்ணு கைல கொடுத்து நான் கொஞ்சம் பேசணும்னு சொல்லு.''

''சரிங்கய்யா...''

அந்த கான்ஸ்டபிள் அதற்காக முனைவது பாண்டிய மாணிக்கத்தால் உணர முடிந்தது. நடந்து படிகளில் ஏறி அறை கதவை தட்டும் சப்தமெல்லாம் கேட்டது. தொடர்ந்து...

''ஹூ ஈஸ்திஸ்...?''

''மேடம் நான் எஸ்கார்ட் போலீஸ்...''

''வாட்ஸ் த மேட்டர்?''

''உங்கப்பா லைன்ல இருக்காருங்க மேடம். ஒரு வார்த்தை பேசணுமாம்?''

- கான்ஸ்டபிள் சொல்வதும் - செண்பகம் பதில் சொல்வதும் காதில் விழுந்தது. அதைத் தொடர்ந்து செண்பகமே கனத்த குரலில் ''என்னப்பா... தூங்க விடமாட்டீங்களா?'' என்று வெடித்தாள்.

''ஐயோ கண்ணு... குட்நைட் சொல்லத்தான் கூப்ட்டேன்.''

''சொல்லீட்டிங்கல்ல... போய் படுங்க... குட்நைட்...!''

- வெடிப்போடு முடித்தாள் . பாண்டியமாணிக்கமும் கான்ஸ்டபிளிடம் ''கவனமா பாத்துக்கய்யா... மாயவன் இங்க சொன்ன மாதிரி சாதிச்சுட்டான். அடுத்த அவன் குறி என் மகளாதான் இருக்கணும்.'' என்றார்.

''நான் பாத்துக்கறேன்யா...'' என்றபடியே கான்ஸ்டபிள் அறைக்கு வெளியில் காரிடார் வழி நடந்தார்.



கட்டிடத்துக்கு வெளியில் உள்ள தோட்டப் பகுதிக்கு வந்தபோது விஸ்தாரமான மதுரை நகரம் பளிச்சென்று தெரிந்தது.

அப்போது காக்கி உடுப்பில் எதிரில் ஒரு உருவம்.

நெருங்கவும்தான் அது ஒரு போலீஸ்காரர் என்று தெரிந்தது. ஆனால் எந்த பிரிவு எந்த ஸ்டேஷன் என்று தெரியவில்லை. ஒரே இனம் ஆனபடியால் அந்த கான்ஸ்டபிள் ஒரு சல்யூட் அடித்தார்.

''நீதான் நம்ப பாண்டியமாணிக்கம் சார். மகளுக்கு எஸ்கார்ட்டா வந்த போலீஸா?''

''அ... ஆமாம் சார்... நீங்க?''

''நான் க்ரைம்ப்ராஞ்ச்... இப்பதான் சார் பேசினார்.''

''எங்கிட்டயும்தான் சார்...''

''அந்த கள்ளன் மாயவன் அவர் வீட்ல சொன்ன மாதிரியே கன்னம் வெச்சுட்டானாம். சொல்லியிருப்பாரே?''

''ஆமாம் சார்... அம்மாவை இங்க கருத்தா பாத்துக்க சொன்னாரு.''

''இங்கேயும் அவன் வரப்போறான்னு தகவல்...''

''ஐயோ சார்...''

''எதுக்கு அலற்றே... அதான் நான் வந்துட்டேன்ல?''

''எப்படி சார் அவனால நம்பள மீறிகிட்டு உள்ள நுழைய முடியுது?''

''அதான் மாயவன்... ஆமா அந்த பொண்ணு எந்த ரூம்ல இருக்குது?''

''ரூம் நம்பர் 306 சார்...''

அவர் அறையை நோக்கி நடக்கவும் பின் தொடர்ந்தார் கான்ஸ்டபிள்.

''இங்க இருந்து ஷிப்ட் பண்ணி பாண்டியன் ஹோட்டலுக்கு கூட்டிகிட்டு போகப் போறேன்.''

''எதுக்கு சார்?''

''எதுக்கா... உனக்கு புரியலியா? மாயவன் இங்க வரும்போது இந்த பொண்ணு இங்க இருக்கக்கூடாது?''

''இருக்கட்டுமே சார்... அவனை நாம சுத்தி வளைச்சு புடிச்சிட்டா?''

''அவன் பாடில டைம் பாம் கட்டிகிட்டு வந்தான்னு வை இந்த இடமே பீஸ் பீஸாகும். பரவாயில்லியா?''

''ஐயோ சார்...''

''அடிக்கடி ஐயோங்கறே! நீ ஏட்டு. எஸ்.ஐ.ன்னு மேல போறது ரொம்ப கஷ்டம்.''

- அலட்சிய பதிலோடு செண்பகத்தின் அறைவாசலுக்கு சென்று கதவை தட்டினார். ஆவேசமாக திறந்தாள் செண்பகக் குழல்வாய்மொழி. கதவுக்கு அப்பால் போலீஸ் ஆபீசரை பார்க்கவும் சற்று அமைதியானாள். ஆனாலும் முகத்தில் சிடுசிடுப்பு.

''வெரிசாரி மேடம்... நீங்க இம்மீடியட்டா இந்த அறையை காலி பண்ணிகிட்டு எங்ககூட வரணும். உங்களுக்கு பாண்டியன் ஹோட்டல்ல ரூம் போட்டுருக்கு.''

''என்ன கேட்காம அங்க ரூம் போட வேண்டிய அவசியம்?''

''அதை நீங்க என்கூட வரும்போது சொல்றேன். தயவு செய்து உடனே புறப்படுங்க.''

''எனக்கு இப்பவே இங்கையே தெரியணும். நடுராத்திரியில வந்து விளையாட்றீங்களா?''

''சாரி மேடம்... விஷயம் ரொம்ப சீரியஸ். மாயவன்கற கள்ளன் இரண்டு விஷயத்துல குறி வெச்சிருக்கான். ஒண்ணு உங்க வீட்ல இருக்கிற நாகமாணிக்கம். அடுத்து நீங்க! அதுல அந்த நாகமாணிக்கத்தை அவன் சொன்னமாதிரியே திருடிட்டான்... அடுத்த குறி நீங்கதான்...''

''வாட்... நாகமாணிக்கம் திருட்டு போயிடிச்சா?''

''ஆமாம்... அதனாலதான் உங்களயாவது எப்படி யாவது காப்பாத்தணும்கற கட்டாயத்துல இருக்கோம்.''

''என்னால நம்ப முடியல... எங்க வீட்ல காலைல இருந்தே போலீஸ்காரங்க நிறைய இருந்தாங்க. பத்தாததுக்கு நிறைய வேலைகாரங்க வேற! எல்லாத்தவிட அப்பா நாகமாணிக்கம் வெச்சிருக்கற லாக்கர் சீக்ரெட் நம்பர் தெரியாம யாராலயம் திறக்க முடியாது.''

''அம்மா... மாயவன் ரிசர்வ் பேங்க் லாக்கரையே திறக்க முடிஞ்ச கள்ளன்மா. அதனாலதான் உங்களை அவன்கிட்ட இருந்து எப்பாடுபட்டாவது காப்பாத்த விரும்பறோம்.''

- அந்த ஆபீசர் பேச்சு செண்பகக்குழல்வாய்மொழியை தீர்க்கமாக யோசிக்கச் செய்தது.



''யோசிக்காதீங்க... புறப்படுங்க?''

''சரி. இங்க பில்ல செட்டில் பண்ணணுமே.''

''அதெல்லாம் நாங்க பாத்துக்கறோம்.''

- அவர் கூற அடுத்த பத்தாவது நிமிடமே செண்பகக் குழல்வாய்மொழியும், அவள் தோழியான ஜூலியுடன் அந்த போலீஸ் ஆபீசரின் காரில் ஏறினாள்.

அந்த எஸ்கார்ட் கான்ஸ்டபிளும் பின் தொடரப் பார்த்தார். அவரைக் கூப்பிட்டு ''மாயவன் இங்க தேடி வருவான். அதை கவனிச்சு தகவல் கொடு'' என்று கூறவும் அவர் முகம் ஒரு மாதிரி மாறிடத் தொடங்கியது.

''என்னய்யா முழிக்கறே?''

''இல்ல அம்மாகூட இருக்கணும்கறதுதான் எனக்கான உத்தரவு.''

''அதான் நான் இருக்கேன்ல...?'' - கேள்வியோடு கார் புறப்பட்டது.

அந்த கான்ஸ்டபிளுக்கும் 'சே என்ன வேலைடா இது' என்று மனது கொந்தளித்தது. எதற்கும் இந்த தகவலை இளங்கோவுக்கு சொல்லி வைப்போம் என்று போன் போட்டார். இளங்கோவும் லைனில் வந்தார்.

''என்னய்யா?''

''சார் ஒரு போலீஸ் ஆபீசர் வந்து நம்ப அம்மாவை கூட்டிகிட்டு போறாரு.''

''போலீஸ் ஆபீசரா... யாருய்யா அது?''

''தெரியல சார்... ஐயா சொல்லி வந்ததாதான் சொன்னாரு. மாயவன் அங்க நாகமாணிக்கத்தை அடிச்சிட்டானாம்ல? அதனால அம்மாவையும் தேடி வந்தா ஆபத்துன்னு தாஜ்ஹோட்டல்ல இருந்து பாண்டியன் ஹோட்டலுக்கு கூட்டிகிட்டு போறார் சார்...''

''என்னய்யா புதுசு புதுசா சொல்றே... மதுரை போலீசுக்கு இந்த மேட்டரே தெரியாதே. நான் ஐயா கூடதானே இருக்கேன். அவரும் யார் கூடவும் பேசலியே?''

''சார் கடைசில என்ன மாட்டி உட்றாதீங்க சார்... நான் உடனுக்குடன் எதுன்னாலும் உங்ககிட்ட சொல்லிடறேன்.''

''அதுசரி வந்த போலீஸ் ஆபீசர் யார். பேர் என்ன?''

''நேம் பேட்ஜே இல்ல சார். கேட்டதுக்கு க்ரைம் பிராஞ்ச்சன்னு சொன்னார்.''

''க்ரைம் பிராஞ்ச்சா... அப்ப, இப்ப சாரோட டாட்டர் அங்க இல்லை. அப்படித்தானே?''

''ஆமா சார்...''

''நீ மட்டும் என்னய்யா பண்றே கூட போறதுக்கென்ன?''

''தாஜ் ஹோட்டலுக்கு மாயவன் வருவான். இருந்து கவனிச்சு சொல்லுன்னு அவர் சொல்லும்போது நான் எப்படி சார் கூட போக முடியும்?''

''ரைட்... நான் இப்பவே க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர்கிட்ட பேசிட்டு உன் லைனுக்கு வரேன். வெயிட் பண்ணு.''

- இளங்கோவின் உத்தரவை தொடர்ந்து அந்த தோட்டத்தில் இருக்கும் ஒரு நாற்காலியில் போய் அமர்ந்தார்.

பாண்டியமாணிக்கம் பங்களா?

மணி ஒன்று! இளங்கோ க்ரைம் பிராஞ்சுக்கு போன் போடும் முயற்சியில் இருக்கையில் பாண்டிய மாணிக்கத்துக்கு ஒரு அழைப்பொலி.

பாண்டியமாணிக்கத்துக்கு பதைத்தது. ஆனால் இளங்கோ தான் எடுத்து பேசினார்.

''ஹலோ யாரது இந்த நேரத்துல?''

''உம்... உன் தாத்தன்... என்ன எஸ்.ஐ! எம்.எல்.ஏ.வுக்கு கால் அமுக்கி ஆறுதல் சொல்லிகிட்டிருக்கியா?''

''ஏய் நீ யாரு... மரியாதையா பேசு.''

''பேசிட்டா போச்சு இப்ப என்ன...?

சொன்ன மாதிரியே அந்த மாஜிமந்திரி பொண்ணையும் கடத்திட்டோம். அந்த ஆள்கிட்ட சொல்லிடு. அப்புறம் உனக்கும், உன் போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கும் ஒரு அம்பது பீப்பீ வாங்கி அட்டை பெட்டில வெச்சு அனுப்பியிருக்கோம். நல்லா ஊதுங்க. அதையாவது ஒழுங்கா ஊதுறீங்களான்னு பார்ப்போம்.''

-மறுபுறத்து பதில் எஸ்.ஐ. இளங்கோவின் மார்பில் யானைக் காலால் உதைத்தது போல் இருந்தது.



## 28

தொலைபேசி செய்தி இன்ஸ்பெக்டர் இளங்கோவின் முகத்தில் கசப்பை பூசவும் அவர் முகமும் மாறிப் போனது. பாண்டியமாணிக்கம் கவனித்தபடியே இருந்தார்.

''என்னய்யா... என்ன விசயம்?''

''.........''

''உன்னத்தான்யா... எதுக்கு இப்படி ஊமக்கோட்டானா நிக்கறே?''

''ஐயா...''

''என்ன ஐயா... வாயத்திறந்து பேசய்யா...''

''அந்த மாயவன் நிஜமா வல்லாள கண்டன்தாய்யா?''

''இந்த நடுராத்திரியில் எதுக்குய்யா இப்ப அவனுக்கு சர்ட்டிபிகேட் தரே. போன்ல யார் என்னத்த சொன்னா?''

''நம்ம சின்னம்மாவை மாயவன் கடத்திட்டான்யா?''

- இளங்கோ சுருதி குறைந்த குரலில் சொன்னது பாண்டியமாணிக்கத்தை ஒரு மிரட்டு மிரட்டி விட்டது.

''ஐய்யய்யோ என் பேத்திய அந்த திருட்டு நாயி தூக்கிட்டு போயிடிச்சா? கண்ணாரம்மா... என் தாயி... இப்ப நான் என்ன பண்ணுவேன்?'' என்று ஒரு ஒப்பாரி ஆலாபனையை மறுநொடியே தொடங்கி விட்டாள் பழனியம்மாள். பாண்டியமாணிக்கத்துக்கு கன்னக்கதுப்பில் இருந்து உடம்பின் அத்தனை சதைப்பற்று மிகுந்த பாகங்களும் துடித்தது.

நெடு நேரத்துக்கு பேச்சே வரவில்லை.

ஹாலின் பெண்டுல கெடிகாரத்தில் மணி ஒன்றாகியிருந்தது. அதற்கான சப்தம் மட்டும் மொத்த ஹாலிலும் தட்டு தடையின்றி பரவியது.

இளங்கோவுக்கும் அடுத்து என்ன செய்வது என்பதில் குழப்பம்.

''ஐயா...'' கூப்பிட்டு பார்த்தார்.

பாண்டியமாணிக்கம் நெறிக்க நெறிக்க பார்த்தார்.

''செக்போஸ்ட்டுக்கெல்லாம் தகவல் கொடுத்து பிளாக் பண்ணிடலாம்யா... தைரியமா இருங்க...''

''உம்... அப்புறம்?''

''இல்லய்யா... அதான் இப்ப நமக்கு இருக்கற ஒரே வழி.''

''இவ்வளவு தூரம் இத்தினி பேர் இருக்க வீடு பூந்து நாகமாணிக்கத்தையும், மதுரைக்கு போய் மகளையும் தூக்கிட்டு போனவனை நீங்க செக்போஸ்ட்டுல வெச்சு புடிச்சுட போறீங்களா... சபாஷ்யா போலீசு... சபாஷ்...''

''ஐயா... வேற என்ன செய்யலாம்னு சொல்லுங்க... செய்யக் காத்திருக்கேன்.''

''ஆமா இங்க நீ போலீசா நான் போலீசா?''

''என்னய்யா இப்படி கேக்கறீங்க?''

''போடாப்போடா பொண்டுக நாயி... அவனை பிடிக்க என்கிட்ட வழி கேட்கறியா? உனக்கு எதுக்கு காகி உடுப்பும், மீசையும் கழட்டிப் போடு. வழவழன்னு மொட்டைய போட்டுகிட்டு காவிய எடுத்து கட்டிக்க... அப்படியே ஊடு ஊடாபோய் பிச்சை எடு. உனக்கு எதுக்கு சப்இன்ஸ்பெக்டர் வேலை?''

''என்னய்யா இப்படி பேசறீங்க. எப்பவுமே காப்பான் பெருசா - கள்ளன் பெருசான்னா கள்ளன்தான் பெரியவன்னு உங்களுக்கு தெரியாதுங்களா?''

- இளங்கோ அப்படிக் கேட்ட மறுநொடி! தொண்டை கமற காறி உமிழ்ந்தார் பாண்டியமாணிக்கம். இளங்கோவின் நெற்றியில் பட்ட அந்த எச்சில் திப்பிகள் நீர்க்குமிழிகளோடு மூக்கின் மேல் ஒழுகத் தொடங்கியது.

''டேய் பாண்டி... அவனாண்ட என்னாடா இப்ப பேச்சு விலை மதிப்பே இல்லாத ரெண்டு விசயங்க உன்ன விட்டு போயிடுச்சுடா. அடுத்து என்னாடா பண்ணப் போறே!'' பழனியம்மாள் பதைத்தாள்.

''என்னா பண்ணச் சொல்றே என்னை? இனி அவன் என்ன செய்ய நினைக்கறானோ அதான்... அவன் இனி ஆடுன்னா ஆடணும் - பாடுன்னா பாடவேண்டியதுதான். வேற வழி...?''

''அடப்போடா பொசகெட்டவனே... இப்படிப் பேச உனக்கு வெக்கமா இல்லை? முதல் மந்திரிக்கு போனைப் போட்றா... ராணுவத்தை அனுப்பியாவது அந்த மாயவன் நாயை பிடிக்கற வழியை பாரு.''



''விவரம் புரியாம பேசாதே... எது எதுக்கு ராணுவத்தை கூப்பிடறதுன்னு இருக்கு. அத்தோட இத எல்லாம் பெருசுபடுத்தி பேசக்கூடாது. பத்திரிகைல பிரிச்சு மேஞ்சுடு வாங்க. நாளைக்கு செண்பகத்தை ஒரு பய கட்ட மாட்டான்.''

''அப்ப என்ன தாண்டா பண்ணப் போறே?''

''நிச்சயம் சும்மா இருக்க மாட்டேன். போதுமா? நீ போய் உறங்கற வழிய பாரு.''

''தாயில்லாத பொண்ணுடா தளதளன்னு வளர்ந்தவ வேற?''

''எனக்குத் தெரியாதுபாரு. இப்ப வாய் மூடமாட்டே?''

- பாண்டியமாணிக்கம். ஒரு அதட்டு அதட்டவும் பழனியம்மாளும் அடங்கிப் போனாள்.

அதிகாலை வேளை...

கூமாச்சி மலை குகைக்குள் கோணிச்சாக்கு, குமாரபாளையத்து கருப்புப் போர்வை என்று குளிருக்கு இதமாக சுருண்டு கிடந்த மாயவனுக்கும் அவன் சகாக்களுக்கும் அளவுக்கதிகமான பறவைகளின் இரைச்சல் சப்தம் தூக்கத்தை கலைத்தது. மாயவன் எழுந்திருக்கும் போதே தலைமாட்டில் வைத்திருந்த டார்ச்லைட்டை எடுத்தபடிதான் எழுந்திருந்தான்.

அதன் வெளிச்சமும் அறை இருட்டை மெல்லிய அளவில் போக்கிட புழுபோல சுருண்டிருந்த உளியன்.

''என்னப்பா ஒரே எறச்சலா இருக்குது. காட்டுக்குள்ள புதுசா யாரும் நுழைஞ்சு நம்மள தேடிவர்றாங்களோ?'' என்று கேட்டான்.

''அப்படித்தான் தெரியுது... என் கணக்குப்படி எல்லாம் சரி நடந்துருந்தா இப்ப வந்துகிட்டிருக்கிற ஆளும் நம்ம ஆளாத்தான் இருக்கணும்'' என்று கொட்டாவி பிரிய மாயவன் எழுந்து நின்று சோம்பல் முறித்தான்.

பின் வெளியிலும் செல்லக் காலெடுத்தான்.

''மாயவா... கீழ இறங்கப் போறியா?''

''ஆமாம்...''

''வரட்டுமா நானும்?''

''வேணாம். நீ ஒறங்கு... அவசியப்பட்டா சீட்டி அடிப்பேன் கேட்டு வந்து சேர்.''

''உம்... அப்புறம்?''

''இல்லய்யா... அதான் இப்ப நமக்கு இருக்கற ஒரே வழி.''

''இவ்வளவு தூரம் இத்தினி பேர் இருக்க வீடு பூந்து நாகமாணிக்கத்தையும், மதுரைக்கு போய் மகளையும் தூக்கிட்டு போனவனை நீங்க செக்போஸ்ட்டுல வெச்சு புடிச்சுட போறீங்களா... சபாஷ்யா போலீசு... சபாஷ்...''

''ஐயா... வேற என்ன செய்யலாம்னு சொல்லுங்க... செய்யக் காத்திருக்கேன்.''

''ஆமா இங்க நீ போலீசா நான் போலீசா?''

''என்னய்யா இப்படி கேக்கறீங்க?''

''போடாப்போடா பொண்டுக நாயி... அவனை பிடிக்க என்கிட்ட வழி கேட்கறியா? உனக்கு எதுக்கு காகி உடுப்பும், மீசையும் கழட்டிப் போடு. வழவழன்னு மொட்டைய போட்டுகிட்டு காவிய எடுத்து கட்டிக்க... அப்படியே ஊடு ஊடாபோய் பிச்சை எடு. உனக்கு எதுக்கு சப்இன்ஸ்பெக்டர் வேலை?''

''என்னய்யா இப்படி பேசறீங்க. எப்பவுமே காப்பான் பெருசா - கள்ளன் பெருசான்னா கள்ளன்தான் பெரியவன்னு உங்களுக்கு தெரியாதுங்களா?''

- இளங்கோ அப்படிக் கேட்ட மறுநொடி! தொண்டை கமற காறி உமிழ்ந்தார் பாண்டியமாணிக்கம். இளங்கோவின் நெற்றியில் பட்ட அந்த எச்சில் திப்பிகள் நீர்க்குமிழிகளோடு மூக்கின் மேல் ஒழுகத் தொடங்கியது.

''டேய் பாண்டி... அவனாண்ட என்னாடா இப்ப பேச்சு விலை மதிப்பே இல்லாத ரெண்டு விசயங்க உன்ன விட்டு போயிடுச்சுடா. அடுத்து என்னாடா பண்ணப் போறே!'' பழனியம்மாள் பதைத்தாள்.

''என்னா பண்ணச் சொல்றே என்னை? இனி அவன் என்ன செய்ய நினைக்கறானோ அதான்... அவன் இனி ஆடுன்னா ஆடணும் - பாடுன்னா பாடவேண்டியதுதான். வேற வழி...?''

''அடப்போடா பொசகெட்டவனே... இப்படிப் பேச உனக்கு வெக்கமா இல்லை? முதல் மந்திரிக்கு போனைப் போட்றா... ராணுவத்தை அனுப்பியாவது அந்த மாயவன் நாயை பிடிக்கற வழியை பாரு.''



''விவரம் புரியாம பேசாதே... எது எதுக்கு ராணுவத்தை கூப்பிடறதுன்னு இருக்கு. அத்தோட இத எல்லாம் பெருசுபடுத்தி பேசக்கூடாது. பத்திரிகைல பிரிச்சு மேஞ்சுடு வாங்க. நாளைக்கு செண்பகத்தை ஒரு பய கட்ட மாட்டான்.''

''அப்ப என்ன தாண்டா பண்ணப் போறே?''

''நிச்சயம் சும்மா இருக்க மாட்டேன். போதுமா? நீ போய் உறங்கற வழிய பாரு.''

''தாயில்லாத பொண்ணுடா தளதளன்னு வளர்ந்தவ வேற?''

''எனக்குத் தெரியாதுபாரு. இப்ப வாய் மூடமாட்டே?''

- பாண்டியமாணிக்கம். ஒரு அதட்டு அதட்டவும் பழனியம்மாளும் அடங்கிப் போனாள்.

அதிகாலை வேளை...

கூமாச்சி மலை குகைக்குள் கோணிச்சாக்கு, குமாரபாளையத்து கருப்புப் போர்வை என்று குளிருக்கு இதமாக சுருண்டு கிடந்த மாயவனுக்கும் அவன் சகாக்களுக்கும் அளவுக்கதிகமான பறவைகளின் இரைச்சல் சப்தம் தூக்கத்தை கலைத்தது. மாயவன் எழுந்திருக்கும் போதே தலைமாட்டில் வைத்திருந்த டார்ச் லைட்டை எடுத்தபடிதான் எழுந்திருந்தான்.

அதன் வெளிச்சமும் அறை இருட்டை மெல்லிய அளவில் போக்கிட புழுபோல சுருண்டிருந்த உளியன்.

''என்னப்பா ஒரே எறச்சலா இருக்குது. காட்டுக்குள்ள புதுசா யாரும் நுழைஞ்சு நம்மள தேடிவர்றாங்களோ?'' என்று கேட்டான்.

''அப்படித்தான் தெரியுது... என் கணக்குப்படி எல்லாம் சரி நடந்துருந்தா இப்ப வந்துகிட்டிருக்கிற ஆளும் நம்ம ஆளாத்தான் இருக்கணும்'' என்று கொட்டாவி பிரிய மாயவன் எழுந்து நின்று சோம்பல் முறித்தான்.

பின் வெளியிலும் செல்லக் காலெடுத்தான்.

''மாயவா... கீழ இறங்கப் போறியா?''

''ஆமாம்...''

''வரட்டுமா நானும்?''

''வேணாம். நீ ஒறங்கு... அவசியப்பட்டா சீட்டி அடிப்பேன் கேட்டு வந்து சேர்.''

''ஆமா நம்ம ஆளுன்னியே யாருப்பா அது. போன் போடப் போன கடாரனா?''

''வெச்சிக்க...'' - என்கிற ஒற்றை வார்த்தையோடு உடம்பை ஒரு சிலிர்ப்பு சிலிர்ப்பிக் கொண்டு குகைச் சுவற்றில் ஒரு இடத்தில் கிடந்த துப்பாக்கியை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டு புறப்பட்டான். படுத்திருந்த உளியனுக்கு நெருடலாக இருந்தது. தங்களுக்கே தெரியாத அந்த மூன்றாவது ஆள் யாராக இருக்கும்? எதற்காக இப்படி மாயவன் சஸ்பென்சிலேயே வைக்கிறான் என்று எரிச்சலாக கூட வந்தது. எழுந்து கொண்டவன் பெருமாளையும் உசுப்பி எழுப்பினான்.

''ஏண்டா வெண்ண... இங்க புலம்பிகிட்டிருக்கேன். உனக்கு தூக்கம் கலையலியாக்கும்!''

''யார் சொன்னா... எல்லாம் கேட்டுகிட்டுத்தான் இருந்தேன்.''

''அப்ப புறப்படு நமக்கு தெரியாத அந்த மூணாம் மனுஷன் யார்னு போய் பாப்போம்?''

''வேண்டாம் உளியா... மாயவன் நம்மகிட்ட சொல்லாம இருக்கறதுல ஒரு அர்த்தம் இருக்கும். நாம பின்னாடி போய் வேவு பாத்தா மாயவன் வருத்தப்படுவான்.''

''இப்ப நான் கூடதான் வருத்தப்படறேன். நம்மகிட்ட மறைக்கறதுல என்ன இருக்கு?''

''தா... இதுக்கு மேல் உன் விருப்பம். நான் வரலை. நீ வேணா போய் பாத்துக்க...'' பெருமாள் பதிலோடு சுருண்டு கொண்டான். உளியன் எழுந்து போர்வையை சுற்றிக் கொண்டு தன்வசம் உள்ள பென்டார்ச்சை தட்டிவிட்டபடி வெளியேறினான்.

கூமாச்சி மலை முழுக்க பனி கொட்டிக் கொண்டிருந்தது. ஆழமாக சுவாசித்து அந்த பனி நெஞ்சுக் கூடுவரை இறங்கினால் தடுமனும் இருமலும் நிச்சயம். எனவே வேகமாய் ஓடாமல், ஓடினால் ஆழமாய் சுவாசிக்க வேண்டி வருமே என்று சாவதானமாகவே நடையை போட்டான் உளியன்.

பறவைகள் சப்தமிட்டபடியேதான் இருந்தன.

வழக்கமாய் வந்து போகும் வழித்தடத்தை தவிர வேறு எந்த வழியிலும் நடக்க இடமில்லை. கன்னா பின்னாவென்று செந்தட்டிச் செடிகள் வேறு... தோலில்பட்டால் அறிப் பெடுத்தே சாக வேண்டியதுதான். அச்சத்தோடு பென்டார்ச் ஒளி மிரள



நடந்தான் உளியன். அவன் மனக்கணக்கிற்கு மாயவன் ஒரு நூறு அடி முன்னால் நடந்து கொண்டிருக்கலாம் என்று தோன்றியது.

அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள ஒரு பக்கவாட்டு பாறைமேல் ஏறிப் பார்க்கவும் மாயவன் டார்ச் லைட் வெளிச்சத்தோடு செல்வது தெரிந்தது. அவனுக்கு சற்று அருகிலேயே மூன்று உருவங்களும் தெரிந்தன. உளியன் அங்கிருந்தபடியே அவர்களை கவனிக்கத் தொடங்கினான். அந்த மூன்று பேரில் ஒரு உருவம் கையில் தீப்பந்தம் வைத்திருந்தது. அது திரும்பிச் செல்வதும் தெரிந்தது.

அடடா யார் என்று பார்ப்பதற்குள் போய் விட்டதே?

அந்த இரண்டு பேர் யாராக இருக்கும்...!

உளியனை பரபரப்பு தொற்றிக் கொள்ள மாயவன் அந்த இருவருடன் திரும்பி வருவது தெரிந்தது. ஆனால் அவர்கள் திரும்பி ஓட முற்படுவதும் மாயவன் அவர்களை போக விடாதபடி சீட்டி அடிப்பதும் காதில் கேட்டது.

உதவிக்கு அழைக்கிறான்!

இறங்கி ஓடினான் உளியன்.

போய் எதிரில் நின்றான். நெருக்கத்தில் இருவரையும் பார்த்தான். செண்பகக்குழல்வாய்மொழியும், அவள் தோழி ஜூலியும் தான் அவர்கள்! வாயில் பிளாஸ்திரியோடு, அதை சற்று பிய்த்தான். செண்பகக்குழல்வாய்மொழி உடனேயே கத்தத் தொடங்கினாள்.

''ஏய்... மேன்... எங்கள எங்க கூட்டிகிட்டு போறீங்க... திருடனுங்களா - இதெல்லாம் கொஞ்சம் கூட நல்லா இல்லை. நான் யார் தெரியுமா? என் அப்பா ஒரு மினிஸ்டர் மிலிட்டரியையே வரவைச்சுடுவார்... நீங்க அவ்வளவு தான்...'' - செண்பகத்தின் புலம்பல் உளியனுக்கு சிரிப்பைத் தான் வரவழைத்தது. திரும்பவும் பிளாஸ்திரியை ஒட்டியவன்.

''புலம்பாம வா ஆத்தா... உனக்கு போலீசை பத்தியும் தெரியல மிலிட்டரிய பத்தியும் தெரியல. எல்லாத்துக்கும் மேலா உங்கப்பன் எப்படின்னும் தெரியலை... புலம்பாம நட...''

- என்ற உளியனையும் உடன் அமைதியாக வரும் மாயவனையும் அந்த இருளில் பார்க்க முடியாமல் பார்த்தாள் செண்பகம்!

## 29

தன்னுடைய குகைப் பகுதிக்கு செண்பகக் குழல்வாய் மொழியையும், ஜூலியையும் தள்ளிக் கொண்டு வந்த மாயவன் அங்கே தான் தீப்பந்தம் பொருத்தி அதன் வெளிச்சத்தில் இருவர் முகத்தையும் பார்த்தான். இருவர் கைகளும் கட்டப்பட்டு, வாயிலும் பிளாஸ்த்திரி போடப்பட்டிருந்தது. அதனால்தான் அவர்கள் கூப்பாடு போடாமல் வந்திருந்தனர்.

அதற்கு நடுவில் இருவர் பார்வையும் மாயவனை கத்திபோல் ஊடுருவியது. அதில் ஏராளமான பயமும் ஒளிந்திருந்தது. மலைக் குளிரில் அவர்கள் இருவரிடமும் நடுக்கமும் தெரிந்தது.

''மாயவா... அந்த மந்திரி மவ இவதானா?'' - உளியன் மெல்லிய குரலில் கேட்டான். மாயவனிடம் ஆமோதிப்பு! படுத்திருந்த பெருமாள் விழித்துக் கொண்டு போர்த்திக் கொண்டிருந்த சாக்கை தலைக்கு மேல் இழுத்து மூடிக் கொண்டு அடுத்து நடக்க இருப்பதை கவனிக்கத் தொடங்கினான்.

அவர்கள் இருவரும் மழைப்புறாக்கள் ஒட்டிக் கொண்டு நிற்பது போல நெருங்கி நின்று கொண்டு மாயவனை கண்கள் கலங்கப் பார்த்தனர்.

''மாயவா... பிளாஸ்த்ரியை எடுத்துடட்டுமா...?''

''உம்...?''

''அலறுனாளுங்கன்னா?''

''நல்லா அலறட்டும். தூங்கிட்டிருக்கற கரடிங்களும் மரநாயுங்களும் இன்னிக்கு இவங்களால பசியாறணும்னு இருந்தா மாத்த முடியுமா என்ன?''

''அப்ப சரி...'' - உளியன் அவர்கள் பிளாஸ்திரியை வெடுக் வெடுக்கென்று பிய்த்தான். கைக்கட்டையும் அவிழ்த்தான். ஆனால் அவன் எதிர்பார்த்தது போல செண்பகம் கத்தவில்லை மாறாக மௌனமாகவே இருந்து வெறுப்பை மட்டும் தொடர்ந்தாள்.

''தா பாருங்க... எனக்கு உங்ககிட்ட எந்த வருத்தமும் விரோதமும் கிடையாது. இங்க நீங்க வரக் காரணம் உங்க அப்பா. அரசியல்வாதி அதுலயும் மந்திரி பதவியில இருந்துட்டா மண்டைல கொம்பு முளைச்சிட்டதா உங்கப்பனுக்கு நினைப்பு. அதனால உங்கப்பன் போட்ட ஆட்டத்துக்கும் ஒரு அளவு கிடையாது. அவனை அடக்கி வழிக்க கொண்டுகிட்டு வரத்தான் கணக்கு பண்ணி உங்கள இங்க கொண்டுகிட்டு வந்துருக்கேன்.



இங்க உங்க மேல எங்க யாரோட சுண்டு விரல்கூடப் படாது. வேளா வேளைக்கு சோறும் தண்ணியும் கிடைச்சிடும். நீங்க நல்லா விதமா திரும்பிப் போறதுங்கறது உங்கப்பன் நடந்துக்கறதுலதான் இருக்கு. அதுவரைக்கும் இங்க நீங்க எங்க விருந்தாளி மாதிரி. நீங்க நினைச்சுக்கறதும் நினைக்காததும் உங்க விருப்பம்...''

- என்று அவர்களுடன் ஒரு சின்ன அளவளாவலை முடித்த மாயவன் குகையின் ஓரமாக இருந்த பெரிய மரப் பெட்டியை திறந்து உள்ளே இருந்து இரண்டு புதிய போர்வைகளை வெளியே எடுத்தான். பின் இரண்டையும் அவர்களை நோக்கி வீசினான். ஆனால் அவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளவில்லை. அந்த போர்வை அவர்கள் மேல்பட்டு கீழே விழுந்தது.

''வெட்டி பந்தா... வறட்டு கௌரவம், அசட்டு பிடிவாதம் ஏதும் இங்க வேலைக்கு ஆவாது. போர்வையை எடுத்து முதல்ல சுத்திக்குங்க. கூமாச்சி மலைப்பனி மார்பைப் பொளந்துடும். வறட்டு இருமல் வந்தா தொண்டை புண்ணாகி ரத்தம் வந்துடும். அப்புறம் எச்சிகூட விழுங்க முடியாது.''

- அவன் எச்சரிக்கை அவர்களிடம் வேலை செய்தது. இருவரும் போர்வையை எடுத்துக் கொண்டனர். இறுக்கமாக உடம்பை சுற்றி போர்த்திக் கொள்ளவும் செய்தனர்.

''மாயவா... எப்பப்பா போர்வையெல்லாம் வாங்கி வெச்சே? இங்க நாங்க சாக்குக்குள்ள அடங்கியிருக்கைல. இதுங்களுக்கு மட்டும் போர்வை கேக்குதா?'' என்று உளியன் மெல்லிய கோபத்தை காட்டினான். மாயவன் பதிலுக்கு ஒரு பார்வை மட்டும் பார்த்தான். அதில் ஆயிரம் அர்த்தங்கள். அதுவரை ஒருவார்த்தை கூட பேசாத செண்பகக்குழல்வாய் மொழி பேச ஆரம்பித்தாள்.

''நான்தான் நீ கடத்த ஆசைப்பட்ட மந்திரி மகள். இவ என் ஃப்ரெண்ட்! இவ என்ன பாவம் செய்தான்னு இவளையும் கடத்திகிட்டு வந்திருக்கீங்க...?''

''வாஸ்தவம்தான்... ஆனா வேற வழி தெரியல... அத்தோட உனக்கும் ஒரு துணையாக இருப்பான்னுதான் போலீஸ் வேஷத்துல உன்னை கடத்துன என்னோட சகாகிட்ட சொன்னேன்?''

''நோ... நாட் நெசசரி! நான்தான் உங்க டார்கெட். பிகாஸ் ஆஃப் மை ஃபாதர்! இவ இல்லை... இவதுணை இல்லாம என்னால இங்க இருக்க முடியும். இவளை தயவுசெய்து மதுரைல கொண்டு போய் விட்டுடுங்க...''

- செண்பகக்குழல்வாய்மொழியின் பட்டுக் கத்தரித்த மாதிரியான பேச்சு மாயவனுக்கே ஒரு ஆச்சரியத்தை அளித்தது. அவளை கூர்ந்து கவனித்தான். ஆனால் அவள் தோழியான ஜூலியோ ''செண்பா... என்னை அனுப்பிட்டு நீ இங்க தனியா கஷ்டப்படாதே. உன் கூடவே நானும் இருக்கேன். எது நடந்தாலும் இரண்டு பேருக்கும் சேர்ந்தே நடக்கட்டும்?'' என்றாள் மிக வேகமாக.

''இல்ல ஜூலி... என்னால நீ கஷ்டப்படாதே. இவங்க சொன்னமாதிரி இது எங்க ரைவல். எங்க அப்பாவால வந்த சிக்கல். உனக்கென்ன தலை எழுத்து.''

''இல்ல... நான் இந்த நிலைல உன்னை விட்டுட்டு போகமாட்டேன்?''

''நீ போயிடு ஜூலி. அதுதான் உனக்கு நல்லது. இந்த மலைமேல ஏறிவரும் போது பாத்தேல்ல... ஹாரிபுள்!''

- இருவரிடமும் பரஸ்பரம் நட்பான பேச்சு முட்டிக் கொள்ளவும் குபீர் என்று சிரிப்பு வந்து விட்டது பெருமாளுக்கு. அவன் சிரிப்பு அவர்கள் இருவரையும் திரும்பச் செய்தது.

''என்னங்கடி... மாறி மாறி சொறிஞ்சிக்கிறீங்க? உங்கள இப்ப யார் கொண்டு உடப்போறா. பொத்திகிட்டு கிடங்க'' என்றான் பெருமாள். மாயவன் பதிலுக்கு அவனையும் ஒரு பார்வை பார்க்க அப்படியே சுருட்டிக் கொண்டவனாக ''பின்ன என்ன மாயவா வந்து இன்னும் இந்த தரைல உக்கார கூட இல்லை. அதுக்குள்ள போவறத பத்தி பேசறாளுங்க. இவளுங்கள பிடிக்க எத்தினி வட்டம் எப்படி எல்லாம் யோசிச்சு மண்டையை உடைச்சிட்டிருப்போம்...?''

''சரியா சொன்னே... ''ஏன்மாயவா, சொன்ன மாதிரியே இவளுங்க சிக்கிட்டாங்க. அந்த நாகமாணிக்கம்?''

''அதுவும் சிக்கிடிச்சு!''

''நெசமாவா...''

''இந்த கேள்வியை நம்ம நாலு பேர்ல யாருமே நமக்குள்ள கேட்டுக்ககூடாது?''

''இல்ல... அது சிக்கிடிச்சின்னா இப்ப எங்கன்னு தெரிஞ்சுக்கதான் கேட்டடேன்.''

''கடாரன் அதோட வருவான்... அப்ப பாப்பீங்க...''

''ஆமால்ல... போன் போட்டு அந்த மந்திரியை கொழப்புறதுக்கு போன அவனை நான் மறந்தே போனேன்'' என்றான். உளியன் சிலிர்ப்பிக் கொண்டே....



''ஆமா... இவளுங்கள ஒருத்தன் ஒப்படைச்சிட்டு போனானே அது யாருப்பா?'' என்று கேட்டான்.

''மதுரைல நம்ம இணைப்பா இருக்கற பெத்தலிங்கம்.''

''இங்க இருந்துகிட்டே எப்படி பெத்தலிங்கத்தை நீ வேலை வாங்குனே?''

- மாயவன் பதில் கூறாமல் ஒரு சிரிப்பு சிரித்தான். வெளியே பொழுதும் பொல பொலவென்று விடிய ஆரம்பித்திருந்தது!

''நாகமாணிக்கத்தை யார் எடுப்பான்னு கேட்டதுக்குத் தான் சிரிச்சே... வெளிய சொன்னா நடக்காம போயிடும்னு ஒரு ஊத்த காரணத்த சொன்னே. பெத்தலிங்கம் விஷயத்துல மறைக்க என்ன இருக்கு?''

''உங்க வரைல நான் எதையுமே மறைக்க போறதில்ல. கடாரன் நாகமாணிக்கத்தோட வரும்போது எல்லாம் தெளிவாயிடும். அப்புறம்... இந்த நிமிசம் அந்த மந்திரி டெல்லில பிரதம மந்திரிகிட்ட பேசி இந்திய ராணுவத்தையே நம்பள பிடிக்க அனுப்ப முடியாதாங்கற மாதிரி எகிறிக் குதிச்சிட்டிருப்பான். ரொம்ப சூதானமா நடந்துக்கணும்.''

''நம்ம பொழப்பே சூதானமா இருக்கறதுல தானே இருக்கு... இதுல நீ வேற சொல்லணுமா?''

- திரும்பிக் கேட்ட உளியன் குரலில் கிண்டல் தொனித்தது. அதுவரை நடுங்கியபடி நின்ற செண்பகமும், ஜூலியும் அப்படியே ஒரு பக்கவாட்டு பாறைமேல் மெல்ல அமர்ந்து விட்டிருந்தனர்.

பொழுது விடிந்துவிட்ட நிலையில் அந்த குகைப்பரப்புக்கு வெளியில் உள்ள இடப் பரப்பும், சுற்றுச் சூழலில் புகை மூட்டம் போட்டது போல் இருக்கும் பனியும் அவ்வளவு களைப்புக்கு நடுவிலும் அவள் வரையில் ரசிக்கும்படி இருந்தது!

பருத்தியின் குடிசை!

ஆடுகளுக்கு தழை ஒடித்துப் போட்டுக் கொண்டிருந்த கோசலையை நோக்கி ஒருவன் படுவேகமாக வந்து நின்றான் மூச்சிரைத்தான்.

''என்னவே... எதுக்கு இந்த ஓட்டம்... எங்கிட்டாச்சும் தீப்பிடிச்சுக்குச்சா என்ன?''

''ஆமா கோசல... உனக்கு விசயம் தெரியாதா...?''

''சொன்னாலல்ல தெரியும்.''

''உன் மாமன் மாயவன் நம்ப மந்திரி அய்யா ஊட்டுல தேட்டைய போட்டதோட மகளையும் கடத்திட்டானாம்ல...?''

- அந்த நபர் சொல்லும் போதே குடிசை வாசலுக்கு ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து பாண்டியமாணிக்கத்தின் வலது கையாளான கிட்டான் இறங்கி வந்தான். கோசலை அவனை குத்துவது போல பார்த்தாள்.

''ஏ புள்ள என்ன பாக்கறே... ஐயா உங்க இரண்டு பேரையும் கையோட இழுத்தாறச் சொன்னாரு...''

''எதுக்கு?''

''எல்லாம் நல்ல விசயம்தான்... வித்த நிலத்துக்கு பணம் வாங்கிக்க வேண்டாமா?''

''அதைத்தான் நாங்க தானமா கொடுத்துட்டமே...''

''தா... உனக்குதான் பேசத் தெரியும்னு பேசாம என்கூட புறப்படு இல்லாட்டி நீ ரொம்ப சங்கடப்பட வேண்டி வரும்.''

''புதுசா இனி சங்கடப்பட என்ன இருக்கு... போய் நீ அந்த ஆளு முதுகைச் சொரியற வழிய பாரு உன் அல்லக்கை வீராப்ப இங்க காட்டாதே.''

- முகத்தில் அறைந்தாள் கோசலை. கிட்டானும் அதை முறைப்போடு கேட்டபடியே காரில் ஏறினான்.

## 30

திரும்பிச் சென்ற கிட்டான் கோசலையின் குடிசைக்கு ஒரு நூறு அடி தூரத்தில் காரை நிறுத்திக் கொண்டு பாண்டிய மாணிக்கத்துக்கு போன் போட்டான்.

''ஐயா... அம்மாவும் மகளும் நான் எம்புட்டுக் கூப்பிட்டும் வரமாட்டேங்கறாளுக. அவுளுங்களுக்கு நம்ம ஊட்டு விசயம் தெரிஞ்ச மாதிரி தெரியுது.''

''சரி... இப்ப என்ன பண்ணப் போறே?''

''நீங்கதான்யா சொல்லணும். பொடனில தட்டி அப்படியே தூக்கி போட்டுகிட்டு வந்துடவாய்யா?''

''இத நீ என்கிட்ட கேக்கணுமா? எப்ப என்மவ அந்த மாயவன்கிட்ட சிக்கிட்டாளோ அப்பவே இந்த சிறுக்கிங்க இங்க நம்ம கைல சிக்குனால்லடா கணக்கு நேராவும்?''



''உத்தரவுய்யா... பத்து நிமிஷத்துல ஆத்தாளும் மவளும் உங்க முன்னால இருப்பாங்க.''

- பதில் சொன்ன சூட்டோடு காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டு வந்த கிட்டானுக்கு சுருக்கென்றது.

எதிரில் கடாரன்!

அதிலும் கையில் அரிவாளோடு.

கடாரன் பார்த்த நொடி கிட்டானின் தொண்டைக் குழியில் அடைப்பு.

''என்னவோ... ஆடுபுலி ஆட்டத்துல ஒரு காய்க்கு பதில் காய் எப்படி நவுரும்கறது கூட தெரியாத கூமட்டைன்னு மாயவனை நினைச்சிட்டானா உன் முதலாளி?''

- கடாரன் கேட்கும்போது பளபப்பான அரிவாள் ஒரு வீச்சு வீசி விட்டுதான் நின்றது. அதன் விளைவாக கிட்டானின் வலது கரம் அப்படியே துண்டாகி ஓரமாய் வேலிக் கருவேல மரத்தின் கீழே போய் விழுந்தது.

கிட்டான் பதிலுக்கு எழுப்பிய வலிக்குரல் அந்த பிராந்தியத்தையே உலுக்கி எடுத்து விட்டது!

பாண்டியமாணிக்கம் பங்களாவுக்குள் ஓடிவந்த ஒருவன் கிட்டானின் நிலையைச் சொல்லி, அதைக் கேட்டு போலீஸ் ஜீப்பில் இளங்கோ துணையோடு சம்பவம் நடந்த இடத்துக்கு பாண்டியமாணிக்கம் வந்து சேர்ந்தபோது கிட்டான் கிட்டத்தட்ட மரணத்துக்கு பக்கத்தில் இருந்தான்.

அவன் மயங்கி விழுந்த இடத்தில் ரத்தம் பெருகி ஓடி அப்படியே உறைந்து போய் விட்டிருந்தது. கிட்டானைப் பார்த்த நொடி பாண்டியமாணிக்கத்துக்கு மயக்கம் வராதகுறை நெற்றிப் பொட்டில் வியர்த்த வியர்வைப் புள்ளிகளுடன் அப்படியே இளங்கோவன் தோள் மேல் சாய்ந்து கொண்டார்.

சில போலீஸ்காரர்களும், பாண்டியமாணிக்கத்தின் ஆட்களும் கோசலை வீடுவரை போய் பார்த்துவிட்டு ஏமாற்றமுடன் திரும்பி வந்தனர்.

''ஐயா... ஆத்தாளையும் மகளையும் காணலீங்க'' என்றனர்.

''ஏய் போலீசு... தூக்குய்யா... கைதான் போயிடிச்சு. உசுரையாச்சும் காப்பாத்துங்கய்யா? என்று ஒரு அதிர்வுக்குரல் கொடுத்தார். போலீசாரும் மளமளவென்று கிட்டானைத் தொட்டுத்

தூக்கி ஜீப்பில் கிடத்தி ஜி.எச்சுக்கு கொண்டு செல்லத் தயாராயினர். முள்மரத்துக்கு கீழ் கிடந்தக் கையை தொட்டு தூக்கியபோது தூக்கிய போலீசுக்கே நெருடலாக இருந்தது. அப்படித் தூக்கிய அந்த காட்சி கால காலத்துக்கும் மனதை விட்டு நீங்காது போலவும் தோன்றியது!

கூமாச்சி மலை உச்சி!

கடாரனோடு மலை ஏறியபடி இருந்த கோசலைக்கும், பருத்திக்கும் மூச்சிறைத்தது.

உச்சிவெயில் தாக்கிய போதும் வெப்பம் தெரிய வில்லை. ஆனாலும் ஜில்லென்ற காற்றை மீறி மிகவே களைப்பாய் இருந்தது. ஒரு கட்டத்தில் கோசலையும் பருத்தியும் ஒரு பாறைமேல் கொஞ்சம் ஓய்வு தேவை என்பதுபோல் உட்கார்ந்து விட்டனர்.

கடாரனும் அவர்களுக்காக வளைந்து கொடுத்து உட்கார்ந்தான். கோசலை அவனை ஒரு மாதிரி பார்த்தாள்.

''என்ன பாக்கறே?''

''இன்னும் எம்புட்டு தூரம் இருக்கு?''

''அது கெடக்கு கொள்ள தூரம்?''

''ஆமா உனக்கு இளப்பெடுக்கலியா?''

''எனக்கு ஏறி இறங்கி ஏறி இறங்கிப் பழக்கமுல்ல...?''

''அது சரி... மாயவன் மாமா இப்ப இந்த மலைக்கு மேல்தான் இருக்குதா?''

''ஆமா... எங்க கோட்டை அதுதானே?''

''கோட்டையா. அப்ப மேல கட்டிடமெல்லாம் இருக்குதா?''

''கோட்டைன்னு நான் நாங்க இருக்கற இடத்தை சொன்னேன். மத்தபடி இந்த மலைல காட்டிலாகா போலீசே மேல ஏறிவர பயப்படும்.''

''அம்புட்டு கோளாறான வழித்தடமா?''

''ஆமா... வழில இரண்டு பெரிய பள்ளத்தை பலகை போட்டு தாண்டிட்டு பலகையை தூக்கி பக்கமா புதரில் ஒளிச்சு வெச்சிடுவோம்.''

''அப்ப மாமாவை பாக்கணும்னா உங்க யார் தயவாவது கட்டாயம் வேணும்னு சொல்லு.''

''அப்படியும் சொல்லலாம்... சரி உக்காந்தது போதும் நடப்போமா?''



''ஹ்ஊம். நடந்து தானே தீரணும். மாயவனை நினைச்சாதான் எனக்கு நெஞ்சயடைக்குது...'' பருத்தி சேலைத் தலைப்பால் வாய் பொத்தி லேசாக விசும்பினாள். கடாரன் பதிலுக்கு ஒரு மாதிரி பார்த்தான்.

''உன்னையும் தான்யா... உங்களுக்கெல்லாம் இது வாலிப காலம் கல்யாணம்னு ஒண்ணு ஆகியிருந்தா நண்டும் சிண்டுமா நாலு பிள்ளைய பெத்துருப்பீங்க. பொண்டாட்டி புள்ளைங்கன்னு ஆசாபாசத்தோடு வாழாம இப்படி ஒரு காட்டுல மிருகங்களோடு மிருகமா கெடக்கறீகளேப்பா...''

- பருத்தியின் ஆதங்கம் கடாரனின் நெஞ்சைத் தொட்டது.

''வாஸ்தவம்தான் ஆத்தா... ஆனா எங்க நெத்தில அந்த சாமி இப்படில்ல எழுதிப்புட்டான்...''

''என்னத்த எழுதிட்டான். கள்ளக் கூட்டத்துல வந்தவர்தான் என் புருசனும்... ஆடு மாடு மேச்சு வெள்ளாமை பாத்து பொழக்கலியா?''

''என்னத்த பொழைச்சாரு... அதான் உங்க நிலத்தை எல்லாம் பிடுங்கிட்டு நடுத்தெருவுல நிறுத்திப்புட்டானே அந்த அரசியல்வாதி...?''

- கடாரன் நடந்தபடியே கேட்ட பதில் கேள்விக்கு பருத்தியால் பதில்கூற முடியவில்லை. கண்ணீர்தான் பீறிட்டது.

'ஏ ஆத்தா... நீ சும்மா வரமாட்டே! கடாரண்ணே... எங்க அப்பு அடிக்கடி ஒரு விசயத்த சொல்லும். துவை கல்லா பொறந்துட்டா துணிக்கிட்ட அடி வாங்கிக்கிட்டே தான் இருக்கணும்னு. பொறப்பால நாமெல்லாமும் துவைகல்லா போய்ட்டோம். இந்த நிமிசம்வரை அடியும் வாங்கிகிட்டு தான் இருக்கோம். பதிலுக்கு திருப்பிக் கொடுக்கற என் மாமன்தான் என்வரைல சரியான ஆம்பளை. அது போற பாதைதான் சரி.''

- என்று தேர்ந்த ஞானியைப் போல பேசினாள் கோசலை. அப்போது சிறிது தூரத்தில் ஏதோ சலசலப்பு. கடாரன் நொடிப் பொழுதில் சூதானமாகி, இடுப்பில் அடங்கியிருந்த அரிவாளை விசுக்கென்று கையில் எடுத்துக் கொண்டான்.

சலசலப்புக்கு காரணமான இடத்தில் இருந்து ஒரு கரடி எட்டிப் பார்த்தது. கரடியை பார்க்கவும் கோசலை பருத்தியை கட்டிக் கொள்ள, பருத்தி பதிலுக்கு கோசலையை கட்டிக் கொண்டாள்.

கடாரன் அரிவாளை கரடியை நோக்கி வீசத் தயார் ஆனான். விசுக்கு விசுக்கு என்று அதன் முன் வெட்ட வெளியில் பெருக்கல்

குறியெல்லாம் போட்டான். அதுவும் நின்று பார்த்துவிட்டு பயத்துடன் திரும்பி ஓடத் தொடங்கியது. அது விலகவும் தான் கோசலைக்கும் பருத்திக்கும் நிம்மதிப் பெருமூச்சு வந்தது!

''வாங்க வேகமா போகலாம். இதெல்லாம் சும்மா. மனுசங்கள விட இந்த காட்டு மிருகங்க ஒண்ணும் ஆபத்தானதில்ல...'' என்ற கடாரன் அவர்களுக்கு முன்பாக வழித்தடத்தை உருவாக்கியபடியே நடக்கத் தொடங்கினான்.

''ஆமா. கீழ போகணும்னாலும் இதே பாதை வழியாதான் போவணுமா?''

''பொறவு... உனக்கும் எனக்கும் தார் ரோடா போட்டுத் தருவாங்க.''

''அதுக்கில்ல... மேல இந்த கரடிங்க வராதா... அங்க எப்படி சோறாக்கி... சாப்ட்டு... தூங்கி?'' - கோசலை நடைமுறை சிக்கலுக்குள் புகுந்து விட்டாள்.

''மேல வந்து பாரு...'' என்று மூன்று வார்த்தைகளில் அவளுக்கு பதில் சொன்ன கடாரன் பார்த்துப் பார்த்து கவனமாக அவர்களுடன் மலை உச்சிக்கு போனபோது கோசலையின் கண்களுக்கு முதலில் பட்டவள் செண்பகக்குழல்வாய்மொழிதான்!

வியர்க்க விறுவிறுக்க வரும் கோசலையையும் பருத்தியையும் அவளும் பார்த்தாள். அப்போது அவள் கையில் ஒரு கொட்டாங் கச்சியில் தேனும், கூம்பு வடிவ இலைக்குள் பப்பாளிப்பழ துண்டுகளும் இருந்தன. பருத்தி மாயவனைப் பார்த்த நொடி மாயவா...'' என்று ஓடிப்போய் கட்டிக் கொண்டாள். ஆனால் தன் தாயை விடவே அதிகமாக அவனை கட்டிக் கொள்ள முன் வந்த கோசலையை ஒரு எச்சரிக்கையோடு.

''உக்காரு கோசலை... முதல்ல ஓய்வெடு...'' என்றான்.

அப்போது ஜூலி தலையை கோதியபடி குளித்துவிட்டு வருபவள் போல வந்தாள்!

அவளைப் பார்க்கவும் கோசலைக்கு இன்னும் ஆச்சரியம்.

''மாமா இது...?''

''இதோட சினேகிதியாம்.''

''கீழ் இவங்கள காணாம மந்திரி எண்ணைய்ல பொரியற மீனா பொறிஞ்சுக்கிட்டிருக்காரு...''

''ஆமாம் மாயவா... நீ சொன்ன மாதிரியே அந்த மந்திரி இவங்க இரண்டு பேரையும் பணயமா பிடிக்க கிட்டானை அனுப்பி



வெச்சான். நான் அதுக்காகவே உன் மாமன் குடிசைகிட்ட ஒளிஞ்சுகிட்டிருந்தேன். அந்த நாயும் வந்தான். எந்த கைய இவங்க ரெண்டு பேரையுவு தூக்கப் பாத்தானோ அந்த கைய வாங்கிட்டேன்.''

-கடாரன் உணர்ச்சியோடு சொல்லவும், செண்பகக் குழல்வாய்மொழிக்கு பகீர் என்றது!

## 31

கடாரன் சொன்னதைக் கேட்டு செண்பகம் முகம் போன போக்கை மாயவனும் கவனித்தான். சைகையாலேயே மேற்கொண்டு பேசாதே என்று சொன்னவன் செண்பகம் அருகில் வந்து ''வாஸ்தவத்துல உங்கப்பன் கையைதான் வெட்டியிருக்கணும். ஏன்னா அதுதான் லட்சலட்சமா லஞ்சம் வாங்குன கை...! அதுதான் ஏழை மக்களோட சொத்துக்களை அபகரிச்ச கை! என் மாமனோட நிலத்தையும் ஏமாத்தி புடுங்கிட்ட கை! இப்படி ஒரு கைக்கு துணை போன பாவத்துக்குதான் கிட்டானுக்கு கைபோச்சு... இன்னும் யார் யாருக்கு என்னவெல்லாம் போகப் போகுதோ?'' என்று முடித்த போது செண்பகக்குழல் வாய்மொழி எதிர்த்து எதுவும் பேசவில்லை. அவன் பேசியதை சிந்தித்து பார்ப்பது போல் இருந்தது அவள் முகபாவம்.

அப்படியே கோசலையிடம் வந்தான். உற்றுப் பார்த்தான்.

''என்ன மாமா அப்படி பாக்கறே?''

''இல்ல... கடைசில நீங்களும் இந்த இடத்துக்கு வரும்படி ஆயிடிச்சே. அதை நினைச்சேன்.''

''மாயவா கோசலைக்கு இங்க உன்ன பாக்கவரணும் கறது தான் ரொம்ப நாள் ஆசை. ஆனா அது இன்னிக்கு இப்படி நடக்கணும்னு இருக்குது'' என்று இடையிட்டான். பருத்தி அதைக் கேட்டு விரக்தியாக சிரித்தான் மாயவன்.

கடாரன் அமைதியாக நின்றிருந்தான்.

பெருமாளிடமும் உளியனிடமும் மட்டும் அந்த நாகமாணிக்கம் குறித்த மெல்லிய தவிப்பு. ஆனால் அதை இவர்கள் அவ்வளவு பேர் எதிரில் கேட்டது சரியா என்றும் ஒரு சிறு குழப்பம். இருந்தும் உளியன் கடாரனை நெருங்கி ''எலேய்... அந்த நாகமாணிக்கம் என்னாச்சு?'' என்று காதோடு கேட்டான். கடாரனிடம் ஒரு குறுஞ்சிரிப்பு.

''எதுக்குடா இப்ப சிரிக்கிறே... இத்தினி வருஷத்துல எனக்கு தெரியாம ஒரு கோழிக்குஞ்சைகூட நீங்க யாரும் களவாண்டதில்லடா. ஆனா தெரியாம களவாண்டதோட இல்லாம அதை பத்தி மூச்சு கூட விடாம நிக்கறது கொஞ்சம் கூட நல்லால்லடா.''

இந்த பேச்சையும் மெல்லிய குரலில் கடாரனுக்கு மட்டும் கேட்கும் விதமாகத்தான் பேசினான். அதற்கும் கடாரன் சிரித்தான்.

மாயவனோ பருத்தியை அழைத்துக் கொண்டு அந்த உச்சிமலையில் இருந்து ஈசான்ய பாகம் நோக்கிச் சென்றபடி இருந்தான். கோசலை அவர்களுக்கு சில அடிகள் பின்னாலே பின்தொடர்ந்து கொண்டிருந்தாள்.

''எங்க போறாங்க?''

''ஊத்து இருக்கற இடத்த காட்டப் போறான். இதுகூட தெரியலியா? குளிக்க, ஒதுங்கன்னு எம்புட்டோ இருக்குல்ல?''

''இன்னிக்கு அப்ப சமையலும் பிச்சு எரியும்னு சொல்லு.''

''பருத்திக்கு நல்ல கைப்பக்குவம் ஆனா அடுப்பெரிச்சா புகைவரும். மாயவன் என்ன செய்யறான்னு பார்ப்போம்.''

- கடாரனும் உளியனும் பேசிக் கொண்டனர். செண்பகமும் ஜூலியும் என்ன பேசுவது என்று தெரியாமலும், சிக்கிக் கொண்ட அழுத்தத்துடனும் ஒரு பாறையை ஒட்டி உட்கார்ந்து விட்டனர். அப்போது கடாரன் பீடி பற்ற வைத்திருந்த பெருமாளை அருகில் வரும்படி சொல்லி மூவருமாக ஒரு புதர் பக்கம் சென்றனர். கடாரன் அவர்கள்எதிரில் இடுப்புவேட்டி மடிப்பில் இருந்து நாகமாணிக்கத்தை எடுத்து காட்டத் தொடங்கினான். கோலிகுண்டுப் பருமனில் இள நிலத்தில் மேனிமேல் *108* பட்டைகளுடன் கடாரனின் உள்ளங் கையில் அது மின்னியது.

''அடி ஆத்தி... இதான் அந்த நாகமாணிக்கமா?'' - உளியன் கண்கள் விரிந்தது.

''எப்படியோ அந்த ஊர்க்கொள்ளைக்காரன்கிட்ட இருந்து நீதிக் கொள்ளக்காரங்களான நம்மகிட்ட வந்துடிச்சி. ஆமா இதை யார் அடிச்சது?'' பெருமாளும் பரவசம் விலகாமல் கேட்டான்.

''சொல்றேன்... இது நம்மகிட்ட இருக்கறத அந்த புள்ளைங்க இப்ப பாக்க வேண்டாம்னுதான் வந்த வேகத்துல வெளில எடுக்கல.''



''நானும் அப்படித்தான் நினைச்சேன். ஆனா இதை அந்த மந்திரி ஊட்டுல அம்புட்டு போலீசு. சிப்பந்தியாளுங்க நடுவுல தேட்டைய போட்டது யாரு?''

''தப்பா எடுத்துக்காதே உளியா. யார்னு நான் சொன்னா மூக்குமேல விரல வைப்பே.''

''யாரப்பா அது... மொத அதைச் சொல்லு. என் மண்டைல பெரும் குடைச்சலே அதான். நமக்கு சரியான அந்த வல்லாளன் யாருங்கறதுதான்.''

''ஆமா கடாரா... எனக்கும் மனசு பரபரங்குது. நெசமா நம்ம களவுலயே இந்த களவு தானப்பா பெரும் களவு.

''இதை களவாட முடிஞ்சவன் உண்மைல நம்ம மாயவனையே மிஞ்சிட்டான்னுதான் சொல்வேன்.''

''ஓவரா பேசாதே... திட்டம் போட்டுக் கொடுத்து அதை கட்டிக்காத்ததே மாயவன்தான். அதோட நம்ம சாமியார் கொடுத்த மையும் கொஞ்சம் கை கொடுத்துச்சு?''

''யப்பா ஆள் யாருன்னு முதல்ல சொல்லு அப்பால இப்படி அடிச்சான் அப்படி அடிச்சான்னு விளக்கம் சொல்லு.''

''சரிப்பா இதுக்கு மேல நானும் சவ்வா இழுக்க விரும்பலை. அது வேற யாருமில்லப்பா இங்க வந்துருக்காளே பருத்தி அவனோட தம்பி வீரைய்யன்தான்!''

- கடாரன் வீரைய்யன் பேரைச் சொல்லவும். பெருமாளும் உளியனும் வாயைப் பிளந்தனர்.

''என்னாங்கடா நம்ப முடியலியா?''

''பொறவு... அவன் அந்த மந்திரியோட காலக்கழுவி அந்த தண்ணிய குடிக்கற பயலாச்சே?''

''அப்படிக் குடிக்கறவனுக்கே துரோகம் பண்ணா தாங்குமா மனசு?''

''அவன் எப்ப எப்படி மாயவனப் பாத்தான்... இதை ஏன் மாயவன் எங்களாண்ட மறைச்சான்?''

''மாயவனை வீரைய்யன் பாக்கல. ஆனால் போன்லபேசி கிட்டாங்க. அப்ப மாயவனும் நீ திருந்துனது நிஜம்னா என் சவாலை ஈடேத்திக் கொடு. உனக்கு நான் வெளிய இருந்து பாதை போட்டுத்தரேன். நீ ஜெயிச்சிட்டா உன்னை மன்னிச்சு எங்களோட

சேத்துக்கறேன்னு சொல்லவும். தான் மத்த விசயங்க முடிவாச்சு. நானும் கரண்ட்டு கம்பத்துல பீசை புடுங்கி போட்டு விளையாட்டு காட்னேன். அதுக்கு முந்தி தெருப்பக்கம் வீரைய்யன் வரவும் மை டப்பாவையும் தூக்கி போட்டேன்.

இருட்டும் மையும் எப்படியோ கதையை முடிச்சு கொடுத்துடுச்சி. வீரைய்யனும் விவரமா அவனுக்கு அவனே கழுத்துகிட்ட அறுத்துகிட்டு ஆஸ்பத்திரியிலயும் போய் சேர்ந்தான். நானும் ஆம்பள நர்சுங்க மாதிரி வெள்ளக் கொழாயும் சட்டையும் போட்டுப் போய் அவனாண்ட இருந்த இந்த நாகமாணிக்கத்தையும், ஊசி போடற மாதிரி வாங்கிகிட்டு அப்படியே கோசலை ஊட்டுப்பக்கம் போய் காத்திருந்தேன். கணக்கு போட்ட மாதிரியே கிட்டான் வந்தான். வெட்டும் வாங்கினான். இப்ப வீரைய்யனுக்கு பக்கத்துல தான் படுத்துருப்பான். நான் இவங்கள பத்திகிட்டு எப்படியோ இங்க வந்து சேர்ந்தேன்.

''கடாரா... என்னப்பா சினிமாப்படம் மாதிரியே கதையா சொல்றியே... வெள்ளக் கொழா சட்டைக்கு அந்த ராத்திரில எங்க போனே நீ?''

- பெருமாள் மடக்கிவிட்டது போல கேட்டான்.

''அதான் மாயவன் உன்னிய அனுப்பல. அனுப்பியிருந்தா கொழாப் பேண்ட்டு இல்லாததால வீரைய்யன பாத்து மாணிக்கத்தை வாங்க முடியலப்பான்னு வந்து நின்னுருப்பே. கூமாப்பயலே... அங்க எப்படியும் ஒரு ஆம்பள நர்சு இருப்பான்ல?''

''ஓ... அவன போட்டுத் தள்ளிதான் உடுப்பை களவாட்னியா?''

''பின்ன... அந்த நேரத்துக்கு ரேடியோல சொல்ற போத்தீஸ் கடைக்கு போய் துணியை கிழிச்சு வாங்கி டெய்லரையா பாக்கப் போவேன்?''

''இவனுக்கு ஒவ்வொண்ணையும் உரிச்சு உரிச்சு சொல்லணும். சரிப்பா... இம்புட்டு பெரிய விசயத்தை மாயவன் ஏன் இன்னும் உன்கிட்ட கேட்கலை?''

''வழியிலயே சொல்லிட்டான். நல்ல விசயம் அது. என் மாமன் செத்து முழுசா ஒரு மாசம்கூட ஆவல. பத்ரமா வெச்சிரு நல்ல நாள்ல அதை பாக்கறேன்னுட்டான்.''

- கடாரன் பதில் மாயவன்மேல் ஒரு புதிய மரியாதையை அவர்களிடம் உருவாக்கியது. அது முகத்தில் தெரிந்தது.



அப்போது ''தா எங்க இருக்கீங்க...?'' என்ற கேள்வியோடு அலுமினியக் கொட்டிலில் சுக்குகாபியோடும் சில கொட்டாங்குச்சிகளுடனும் வந்தாள் கோசலை.

''ஏ புள்ள இங்கதான் இருக்கோம்...''

''இந்தாங்க... சுக்குக்காபி குடிங்க.''

''வந்த உடனே உன் சோலில இறங்கிட்டியா?''

''பொறவு... ஊத்துப் பக்கம் கெண்ட மீனுங்கள பாத்தேன். மூணு பேரும் போய் கை நிறைய பிடிச்சுகிட்டு வர்றீங்க. இன்னிக்கு மீன் கொழம்பும் வரகரிசிச் சோறும் சாப்புடப் போறீங்க...''

''வரகுக்கு எங்க போக?''

''வழியில் விளைஞ்சு கிடைஞ்தே... புடுங்கிப் போட்டுகிட்டு வாங்க. காயவெச்சு தட்டி கையாலயே திரிச்சு திரிச்சு உமியை ஒதுக்கி நான் வரகை பிரிச்சிடுவேன்ல...''

- கோசலையிடம் ஒரு புதிய உற்சாகம் தெரிந்தது!

தாசில்தாரில் இருந்து ஆர்டிஓ வரை அவ்வளவு பேரும் வந்திருந்தனர். கலெக்டர் டெல்லி போயிருந்த படியால் வரவில்லை. டி.எஸ்.பியும் ஊரில் இல்லை. பதிலுக்கு ஏ.எஸ்.பி. வந்திருந்தார்.

''அய்யா என்ன செய்யலாம்னு சொன்னீங்கன்னா சட்டுபுட்டுன்னு ஒரு முடிவுக்கு வரலாம்'' என்று ஆரம்பித்தார் தாசில்தார்.

''யோவ் போலீசு... அவன் இருக்கற இடம் உனக்கு தெரியுமா தெரியாதாய்யா?''

''கூமாச்சி மலைன்னு நல்லா தெரியும்யா. ஆனா போய் புடிக்க முடியாதுய்யா. நாம அடிவாரத்தை நெருங்கினாலே போதும் அவனுக்கு தகவல் போயிரும். அப்படியே அந்த பக்கமா இறங்கி கேரளா கரட்டுக்குள்ற போயிடுவான்.''

''சுத்தி வளைச்சு பெரும்படையோட வட்டமா மேல ஏறினா?''

''சாத்யமில்லய்யா. அது தனிமலை இல்லய்யா... மலை வரிசைல ஒரு மலை... இங்கிட்டுதான் நம்ம பாகம். அங்கிட்டு கேரளா பாரெஸ்ட் வந்துடும்.''

''இப்ப என்ன... கேரளா மந்திரிகிட்ட பேசறேன். அவருக்கும் பொண்ணு பிள்ளைங்க இருப்பாங்கல்ல?''

''அதுக்கில்லய்யா.. அவனை பிடிக்கறதுன்னா எப்படியாச்சும் பிடிச்சுடலாம். கூட உங்க பொண்ணும் அவங்க சினேகிதக்கார பொண்ணும் இருக்காங்க. நம்ம மேல உள்ள கோவத்துல அவங்க மேல காட்டி அவங்க உசுருக்கு ஏதாவது ஆயிட்டா அப்புறம் நீங்க எங்களல்ல சொல்வீங்க.''

''என்னதான்யா சொல்றே?''

''அவன் நிச்சயமா டீல்போடுவான்யா... அது என்னன்னு பாப்போம். அவனபத்தி நான் நிறைய கேள்விப் பட்டுருக்கேன். களவாணிய இருந்தாலும் சொல்லுல இம்மிகூட பிசக மாட்டான்னு சொல்வாங்க. ஆகையால அவன் போக்குலயே போற மாதிரி போய் நம்ம பொண்ணுங்கள முதல்ல மீட்போம்யா. பொறவு எரிகுண்ட வீசிக்கூட அவனுங்கள கொன்னுடுவோம்'' என்றார் ஏ.எஸ்.பி.

''ஆமாம்யா... அவன் என்ன சொல்றான்னு பாப்போம்யா?''

''அதுக்குள்ள அங்க என் மகளை அவன் என்ன வேணா செய்வானேய்யா?''

''பதட்டப்பாதீங்க. அவன பத்தி இந்த விசயத்துல எனக்கு நல்லா தெரியும். உங்க பொண்ணு மேல அவன் நிழல்கூட படாம நடந்துக்குவான். இங்க இப்ப இல்லாமப் போன பருத்தியும் கோசலையும் இப்ப அவன் கிட்டதான் இருக்கணும். அவங்க அவன் கூட்டிகிட்டு போனதே உங்க பொண்ணுக்காக கூட இருக்கலாம்.''

''என்னமோய்யா... போலீஸ்காரங்க மாதிரியே பேசமாட்டேங்கறீங்க. நொள்ளப்பய நாலு பேருக்காக இங்க தேனி மாவட்ட அதிகார வட்டமே கூடி கும்மியடிச்சி கிட்டிருக்கோம் நாக்கப் புடுங்கிக்கலாம் போல இருக்குது.'''

- பொறுமினார் பாண்டியமாணிக்கம். வெளியே போர்ட்டிகோவில் லோக்கல் டிவியினரும் பத்திரிகையாளர்களும் திரண்டிருந்தனர். செண்பக குழல்வாய்மொழியின் ஒரு புகைப்படுத்துக்காக ஒரு பத்திரிகையாளர் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தார்.

முன்பக்க வராண்டாவில் பாண்டியமாணிக்கத்தின் புகைப் படங்களாக இருந்தது. கவர்னரின் பதவிப் பிரமாணம், முதல்வரின் அருகில் நிற்கும் தருணம். மலர்கிரீடம் அணிந்த தருணம் என்று அந்த மாதிரி படங்களாகவே இருந்தது. ஒரு ஓரத்தில் ஒரு மரத்தின்முன் நின்றபடி அப்போதைய செய்தி ஒன்றை அவசரமாக வாசித்தபடி இருந்தார் ஒருவர். அதை கேமராமேனும் பதிவு செய்தபடி இருந்தார்.



''வரதம்பட்டியில் இருந்து வாசுதேவன்...

சட்டப் பேரவை உறுப்பினரும் முன்னாள் மந்திரியுமான பாண்டிய மாணிக்கத்தின் மகளான செண்பகக்குழல்வாய் மொழியையும், அவரது தோழியையும் மாயவன் என்னும் ஒரு தீவிரவாதியும் அவனது கூட்டத்தாரும் கடத்திச் சென்று விட்டதாக தெரிகிறது.

மிக நேர்த்தியாக திட்டமிட்டு இந்த செயலை தீவிரவாதி மாயவன் நிகழ்த்தியிருப்பதாக தெரிகிறது. மாயவனையும் அவன் கூட்டத்தையும் பிடிப்பதற்காக போலீஸார் முடுக்கிவிடப் பட்டுள்ளனர். அதே சமயம் மாயவனோடு சமரசப் பேச்சு நடத்தி தன் மகளை மீட்பது தொடர்பாக திருபாண்டியமாணிக்கம் அதிகார வட்டத்தில் உள்ளவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்.

- என்று ஒரு முன்செய்தி படமாக்கப்பட்டு அந்த காட்சி தொலைக்காட்சி நிறுவனத்துக்கு அனுப்ப தயாரானது. இடையில் ஒரு ஆம்புலன்சின் வருகை!

உள்ளே பழனியம்மாளுக்கு பி.பி. எகிறியதில் மைல்ட் அட்டாக்கே வந்து விட்டிருந்தது!

அவளை ஸ்ட்ரெச்சரில் வைத்து தூக்கிக் கொண்டு வந்து வேனில் ஏற்றினர். அந்தக் காட்சியையும் டி.வி.காரர்கள் படமாக்கத் தொடங்கினர்.

## 32

பழனியம்மாவோடு வேனில் கணக்குப்பிள்ளை போனார். பின்னாலேயே தன் காரில் பாண்டியமாணிக்கம் பின் தொடர்ந்தார். பத்திரிகைக்கார்கள் மைக்கை மூக்குக்கு முன் நீட்டி கேள்வி கேட்க முயல அவர்களை கோபத்தோடு தவிர்த்தார்.

''எங்கம்மா சாவக்கடக்கறா... எனக்கு இப்ப அவங்க உசுரு முக்கியம்... உங்க கேள்விகளுக்கு பதில் சொல்றது இல்ல...'' என்று தாட்டியமாய் பேச காரும் புறப்பட்டது.

அந்த பத்திரிகயாளர் கூட்டத்தில் ஒரு இளம் பெண் டி.வி. ரிப்போர்ட்டர் பத்மினி! ஜீன்ஸ் பேண்ட்டும் டிஷர்ட்டும் அணிந்திருந்த அவளிடம் ஒரு துறுதுறுப்பு... அவளோடு வந்த காமிராமேனிடம் ''சரவணா... பைக்கை எடு. ஆஸ்பத்திரில போய் இவரை பிடிப்போம். பைதபை அந்த மாயவனை பத்தின பேக்டராப்

நமக்கு ரொம்ப முக்கியம்'' என்றபடி அந்த கேமராமேன் பைக்கில் ஏற முயன்றவள் அருகில் இருவர் ''ஹூம் நம்பளோட பலமே அந்த நாகமாணிக்கங்கதான். அதுவே போயிடிச்சு. இனி மாயவனுக்குத் தான் அதிர்ஷ்டம். எப்ப அவன் அதை அடிச்சிட்டானோ இனி அவனை யாராலையும் எதுவும் பண்ண முடியாது...'' என்று பேசிக் கொள்ளவும் அது பத்மினி சுண்டி இழுத்துத் திருப்பியது.

ஏறிக்கொண்ட பைக்கில் இருந்து வேகமாய் இறங்கியவள் அவர்களை நோக்கி சென்றாள். அவர்களிடம் லேசான அலறல்.

''எக்ஸ்யூஸ்மீ ஏதோ நாகமாணிக்கம்னு நீங்க பேசிகிட்டீங்களே... வாட் ஈஸ் தட்?''

''அம்மாடி... இது கிராமம் - தஸ்சு புஸ்சுன்னு பேசாம எங்க பாஷைல பேசு...''

''சாரி... நாகமாணிக்கம்னு ஏதோ பேசினீங்களே என்ன அதுன்னு கேட்டேன்.''

''நாகமாணிகம்னா நாகமாணிக்கம்தான்... என்ன அதுன்னா? உட்டாதங்கம் வைரம்னா என்னன்னு கூட தெரியாத மாதிரி கேப்பே போல இருக்கே?''

''யூமீன்... சாரி.. நாகமாணிக்கம்னு நீங்க சொன்னது நவரத்தினங்கள்ள ஒண்ணத்தானே?''

''இது அதுக்கும் மேல... அமாவாசை ராத்திரில சுருளி மலை காட்டுல நாகப்பாம்பு உமிஞ்சு ரத்னக்கல்லதான் நாகமாணிக்கம்னு சொல்லுவோம்.''

''பாம்பு கல்ல உமிழுமா?''

''பொறவு... நீங்க கேள்விப்பட்டதில்லையா... ராத்திரி நாகமாணிக்கத்தை உமிஞ்சு அதோட ஒளியிலதானே அது இரையே தேடும்.''

''அப்படி எல்லாம் ஒண்ணும் கிடையாது. அது கற்பனைன்னு விஞ்ஞானிகள் சொல்லிட்டாங்களே?''

''சாமியகூட தான் இல்லேங்கறாங்க. ஆனா அதுக்காக யாரும் சாமி கும்புடாம இருக்காங்களா. விஞ்ஞானிங்க என்ன ஆகாசத்துல இருந்தா குதிச்சாங்க. இந்த மண்ணுல பொறந்தவங்கதானே?''

''ஓ.கே... அது எக்ஸ் மினிஸ்டர்கிட்ட இருந்தது. அதையும் மாயவன் திருடிட்டானா?''

''பொறவு... முப்பது நாப்பது போலீசு இருக்கும் போதே உள்ளப்பூந்து அடிச்சிட்டு போய்ட்டான்ல!''



''அந்த மாயவன் அப்படி ஒரு சூப்பர்மேனா?''

''அப்படின்னா?''

''இல்ல... அவ்வளவு சாமர்த்தியசாலியான்னு கேட்டேன்.''

''பொறவு... நாம முழிச்சி பாத்துகிட்டிருக்கும் போதே கண்ணா முழியை திருடிகிட்டு போயிருவான். ஆனா நல்லவனுக்கு நல்லவன்.''

''ஓ... அவனை நீங்க பாத்துருக்கீங்களா?''

''நான் பாத்துருக்கேன். ஆளு நல்லா ஒங்குதாங்கா இருப்பால்ல... காரு, மோட்டார் சைக்கிளு எல்லாம் ஓட்டுவான். அதே போல குதிரை சவாரியிலயும் ஜித்தன்.''

''அவன் போட்டோ கிடைக்குமா?''

''இப்போதைய போட்டோ யார்கிட்டயும் இல்ல. ஆனா அஞ்சாறு வருஷத்துக்கு முந்தி ரேக்ளா ரேஸ்ல முத ஆளா வந்து கப்பு வாங்குனப்ப எடுத்த போட்டோ ஒண்ணு நம்ம இருளன் சலூன்ல இருக்குது...''

''இருளன் சலூனா... ஐ மீன் முடிவெட்டும் இடம்தானே?''

''நாங்க பேசுற இங்கிலீசு உனக்கு புரியலியாக்கும். அந்த இடமேதான்.''

''அது எங்க இருக்கு?''

''அப்படியே கிழக்கால போ... தண்ணி டேங்க் ஒண்ணு வரும். அதுக்கு பக்கத்துல மைதீன் பாய் ஆட்டுக்கறிக்கடை அதுக்கு அடுத்து சாத்தூர் நாடார் மளிகைக்கடை அதுக்கு அடுத்து ஒரு முட்டு சந்து. அந்த சந்து முன்னால அவன் கடை போனாலே பாக்கலாம். வெளிய பேப்பர் படிச்சிகிட்டு உக்காந்துருப்பாங்க. பொழுதுனிக்கும் அவன் கடைல ரேடியோ பொட்டி பாடிகிட்டே இருக்கும். இப்பதான் தட்டுவடை கணக்கா ஏதோ ஒண்ணு இருக்குதே - அதுல முன்னூறு பாட்டு நானூறு பாட்டெல்லாம் இருக்காம்ல?'' அந்த நபர் பேச்சில் எங்கெங்கோ போய் விட்டார். பத்மினி இனி நின்றால் காது கிழிந்துவிடும் என்று உணர்ந்து கேமராமேன் சரவணனை உசுப்பி பைக்கில் ஏறிக் கொண்டு இருளன் சலூன் நோக்கி செல்லத் தொடங்கினாள்.

''இப்ப எதுக்கு மாயவன் போட்டோ?''

''அதுவும் அவன் கோப்பையோட இருக்கற போட்டோ, அதுதான் இன்னிக்கு நம்ம மெயின் அட்ராக்ஷன். அப்படியே அந்த

நாகமாணிக்கம் மேட்டர். சரவணா நீ இந்த நாகமாணிக்கத்த நம்பறியா?''

''என்ன கேள்வி பத்மினி... ரைஸ் புல்லிங் கோபுர கலசம். நாகமாணிக்கம்னு எல்லாமே ஜெகஜ்ஜால பித்தலாட்டங்கள்.''

''அஃப் கோர்ஸ்... இருந்தாலும் அதுக்கு பின்னால இருக்கற பிலீஃபை பத்தி இன்னும் நாலஞ்சு பேர்கிட்ட கேட்டு ரெக்கார்ட் பண்ணிப்போம். பைதபை இந்த மாயவன் இன்னொரு மலைக்கள்ளன். இன்னொரு மலையூர் மம்மட்டியான் மாதிரி தோணுது... கரெக்டா?''

''உம்... எக்ஸ் மினிஸ்டரும் ஒண்ணும் சாதாரண ஆள் இல்ல. போன எலக்ஷன்லயே கள்ள ஓட்டாலதான் ஜெயிச்சு வந்ததா சொல்றாங்க. காலேஜ் எல்லாம் கட்டப் போறாராம். சீஸன் இல்லாத எவர்கிரீன் பிசினஸ்! மந்திரின்னா காலேஜிங்கறது சாதாரணமாயிடிச்சுல்ல?''

''சரவணன்... மந்திரியோட டாட்டர் நல்லா படிச்ச பொண்ணாம்ல?''

''அப்படித்தான் என் காதுலயும் விழுந்தது. ஏ.சி.யிலயே வளர்ந்திருக்கும். மலைல மாயவன்கிட்ட சிக்கி என்ன பாடு பட்டுகிட்டிருக்கோ?''

- பேசிக் கொண்டே சலூன் உள்ள இடத்தை அவர்கள் நெருங்கி விட்டனர்.

சுடச்சுட வரகரிசி கஞ்சி. கூடவே மீனைச்சுட்டு ஒரு தேக்கு இலையில் வைத்து செண்பகக்குழல்வாய் மொழியிடமும் ஜூலியிடமும் நீட்டினாள் கோசலை. இருவரும் அதை வாங்கிக் கொள்ளாமல் வெறித்தனர்.

''வாங்கிக்குங்க... நல்லா ருசியாயிருக்கும்?''

''சாரி... நாங்க இங்க கைதிங்க. விருந்து சாப்ட வரல.''

''இது விருந்துன்னு யார் சொன்னது. நீங்க கைதிங்களும் கிடையாது. என் மாமனுக்கு பிடிக்காத வார்த்தை அது.''

''அப்ப நாங்க யார். கெஸ்ட்டா?''

''அப்படின்னா?''

''கெஸ்ட்டுன்னா என்ன ஜூலி. ஆங் விருந்தாளிங்களான்னு கேட்டேன்.''



''தா பாருமே. நீ நியாயமானவன்னு எனக்கு தெரியும். என் ஆடுங்க ஆடிபட்டு செத்ததுக்கு உன் கணக்குப்பிள்ளை காசு கொடுத்தப்ப நீ எப்படி நடந்து கிட்டேன்னு தான் நான் பாத்தேனே? ஆனா உன் அப்பன் நல்லவன் இல்ல. எங்களுக்குன்னு இருந்த மூணு ஏக்கரா இடத்தையும் புடுங்கிகிட்டவன் அதுக்காக என் இன்னொரு மாமன் வீரைய்யனையே எங்களுக்கு எதிரா மாத்துனவன்.

நியாயம் கேட்டதுக்கு போலீஸ்ல எப்படித் தெரியுமா எங்கள புடிச்சிகிட்டு போனாங்க?''

- கோசலை கையில் வரகரிசிக் கஞ்சி பானையோடு குமுறுவது தள்ளி இருந்த மாயவன், பெருமாள், உளியன், கடாரன் ஆகிய நான்குபேர் காதுகளிலும் கேட்டது. ஒரு வாய் குடித்திருந்த பருத்தியும் கோசலை பேசுவதில் கவனமானாள்.

''என் ஊட்ல கஞ்சாவை இவங்களே கொண்டு வந்து வெச்சு எங்கள மிரட்டி கைய்யெழுத்து வாங்குனாங்க. ஏற்கனவே எங்கப்பன் தலைல இடி விழுந்து நாங்க ஆம்பள துணையில்லாம இருக்கோம்.

ஒரு நாட்டுக்கே மந்திரி ஏழை பாழைங்ககிட்ட எப்படி நடந்துக்கணும் இப்படியா?''

''நீ சொல்றதெலாலாம் நிஜமா?''

''என் கைல இருக்கறது. பசியாத்தற கஞ்சி, அதை அன்னலட்சுமின்னு சொல்வாங்க. இது மேல சத்யமா சொல்றேன்.''

- கோசலையின் சத்யாவேசப்பேச்சு செண்பகக்குழல்வாய் மொழியை ஊமையாக்கி விட்டது.

''இதுக்கு மேல நீ இதை தின்னா தின்னு இல்லாட்டி போ... உன்ன வெச்சுதான் உங்கப்பனை யோசிக்க வைக்கப் போறேன். அவன் யோசிக்கறானோ இல்ல உன்னையும் வெச்சு அரசியல் பண்ணுவானோ அது போகப்போகத்தான் தெரியும்.''

- அவள் விலகிட செண்பகத்திடம் ஒரு அழுத்தமான அமைதி. ஜூலி மெல்லப் பேச ஆரம்பித்தாள்.

''செண்பா... உங்கப்பா பத்தி நானும் கேள்விப் பட்டிருக்கேன். பொலிடீஷியன்ஸனாலே கொஞ்சம் அப்படி இப்படித்தான்... ஆனா இப்படி உன் மூலமா மாட்டிகிட்டதுதான் எனக்கு இப்ப ஆச்சர்யம்.''

''.........''

''என்ன எதுவும் பேசமாட்டேங்கறே... நாம இங்க இருந்து எப்படி போகப் போறோம். உங்கப்பா ஏதாவது ஸ்டெப் எடுத்துருப்பாரா?''

- ஜூலி மெல்லிய பதட்டத்தோடு கேட்டாள். அப்போது சுற்றுச் சூழலில் பட்சிக் கூட்டத்திடம் ஒரு படபடப்பு. பலமான சப்தங்கள்!

## 33

பறவைகள் போட்ட சப்தமும் அதன் எதிரொலிகளும் மாயவனுக்கு ஒரு கூட்டம் மலை ஏறத் தொடங்கி விட்டதை புரிய வைத்துவிட்டன. பெருமாளுக்கும் புரிந்து, ஒரு டெலஸ்கோப்புடன் வேமாய் பக்கமாய் வளர்ந்திருக்கும் மரம் ஒன்றில் ஏறி மளமளவென்னு அதன் உச்சிப் பக்கம் போனான்! அவனது வேகம் குரங்கைப் போல தாவிய்விதம் எல்லாமே செண்பகத்தையும் ஜூலியையும் ஆச்சரியத்தில் போட்டுப் புதைத்தது.

கழுத்தில் மாலை போல தொங்கிக் கொண்டிருந்த டெலஸ்கோப் வழியாக அப்படியே மலைச் சரிவில் ஊடுருவத் தொடங்கினான். ஐநூறு அறுநூறு மீட்டருக்கு கீழே அவன் பார்வை சல்லடை போடத் தொடங்கியது.

கிட்டத்தட்ட ஒரு இருபது பேர் கொண்ட போலீஸ்படை மேலேறிக் கொண்டிருந்தது. ஐம்பது மீட்டர் இடைவெளிக்கு ஒருவர் என்று ஒரு கிலோ மீட்டர் நீளத்துக்கு ஒரு நேர்கோட்டில் நின்று அப்படியே மேலேறிக் கொண்டிருந்தனர். எல்லோர், கைகளிலும் துப்பாக்கி! தலையில் கேப்புக்கு மேல் ஹெட் டார்ச், எல்லோர்கையிலும் அரிவாளும், பட்டாகத்திகளும் கூட இருந்தன. இடைப்பட்ட மரங்களை, செடிகொடி புதர்களை வெட்டி வழியை உண்டாக்கிக் கொண்டே மேலேறியபடி இருந்தனர்.

சுருக்கென்றது பெருமாளுக்கு...!

சரசரவென்று கீழிறங்கினான்.

''மாயவா போலீஸ் வந்துகிட்டிருக்கு... கணக்கா இருபத்தி நாலு பேர். துப்பாக்கி, பட்டாக்கத்தின்னு ஆயுதங்களோட தான் வர்ற மாதிரி தெரியுது.

இவ அப்பன் தன் செல்வாக்கை காட்ட ஆரம்பிச்சுட்டான்...'' என்றான்.



ஆனால் மாயவனிடம் பெரிதாய் பதட்டம் இல்லை. தாடையை தடவத் தொடங்கினான்.

''என்னப்பா பண்ணலாம்... மரத்து மேல இருந்துகிட்டு வர்றவன நம்ம துப்பாக்கியால போட்டுத்தள்ளுவோமா?''

''கூடாது... அவுகளுக்கு இது கடமை. நமக்குதான் அது பிரச்சனை.

''என்ன பேசறே நீ... அப்பால நாம மாட்டிக்கிட்டா நல்லா இருக்குமா?''

''அது எப்படி மாட்டுவோம்! நீ இவங்களோட சாமியார் குகைக்குப் போய் உள்ள குழில இறங்கி மேல பாறையை தள்ளி மூடிடு. நான் மரத்து மேல பதுங்கி இங்க வந்து அவனுங்க என்ன பண்றாங்கன்னு பாக்கறேன்.''

''இந்த சாமானை எல்லாம் என்ன பண்ண?''

''மரப்பெட்டிக்குள்ள போட்டு யானைப் பள்ளத்துல இறக்கி அதன்மேல் மூங்கில் கழியை போட்டு அது மேல் பலகையை போட்டு அதுக்கும் மேல இலை தழையை போட்டு மறையுங்க...''

''மொத்தத்துல இங்க வந்தா எதுவும் சிக்கக்கூடாது. அப்படித்தானே?''

''ஆமாம். உன் பார்வை தூரத்துல இருந்து இங்க வர எப்படியும் 30 நிமிசம் ஆகும். ஆனா நமக்கு பதுங்க பதினைஞ்சு நிமிஷம் போதும்.''

''அப்ப எவனையும் சுடவேண்டாங்கறே?''

''அவங்களுக்கும் நமக்கும் என்ன பிரச்சனை... அவங்களுக்கும் பொண்டாட்டி புள்ள குட்டிங்க இருக்குங்கறத நீ மறந்துட்டே போல இருக்கு.''

மாயவன் பதில் செண்பகக்குழல்வாய்மொழியை சற்று கவனிக்க வைத்தது. ஜூலியும் அதை உணர்ந்தவளாக ''இவன் ரொம்ப நல்லவனாத்தான் தெரியறான் செண்பகம் நாம அனாவசியமா பயப்பட வேண்டாம்'' என்றாள்.

உளியனும் கடாரனும் அவர்களை அழைத்துக் கொண்டு சாமியார் குகை நோக்கி விறுவிறுவென்று நடந்தனர்.

''அது எங்கப்பா இருக்கு?'' என்று நடக்கையில் கேட்டாள் பருத்தி.

''பின்னாலயே வா ஆத்தா... இந்தக் காட்டுக்குள்ள அத எங்கன்னு நான் சொல்ல. சொன்னாத்தான் தெரியுமா உனக்கு?'' என்று கேட்டான் உளியன்.

கோசலைக்கு மாயவன் வராதது உறுத்தியது.

''மாமா... நீயும் வந்துடேன்'' என்றாள்.

''நீ போ...''

''உனக்கு ஏதாவது ஆயிடப் போவுது.''

''போ புள்ள...''

''ஏ கோசல... பேசாம வா. நாம என்ன சொன்னாலும் மாயவன் கேக்க மாட்டான். அதே சமயம் ஒரு மிலிட்டரியே வந்தாலும் ஒளியறதுக்கு மாயவனுக்குத் தெரியும்'' என்ற கடாரனின் பதில் அவளுக்கு அவ்வளவு நிறைவைத் தரவில்லை.

நடப்பதும் சிரமமாக இருந்தது.

செண்பகக்குழல்வாய்மொழிக்கு போலீஸ் வருவது தான் தப்பிக்க கிடைத்த ஒரு வாய்ப்பு போலவும் தோன்றியது. அதன் காரணமாக சட்டென்று ஒரு யுக்திக்கு மாறியவள் தன் காலை ஒரு பாறை மேல் மோதி ரத்தம் வரும்படி செய்து கொண்டு 'ஆ' என்று கீழே உட்கார்ந்தாள். ஜூலிக்கு அவளைப் போல செய்ய துணிவு வரவில்லை.

உளியன் அவளிடம் வந்து முறைப்பாக பார்த்தான்.

காலையும் பார்த்தாள்.

''அடிபட்டுடிச்சு...''

''இடிச்சுக்கிட்டா அடிபடத்தான் செய்யும்.''

''இல்ல... நான் இடிச்சுக்கல...''

''சரி... நீ இடிச்சுக்கல. நானும் நீ இடிச்சு கிட்டதை பார்ககல, நட...''

''எப்படி?''

''வேண்டாம். நாங்க இந்த மாதிரி நாடகம், தெருக்கூத்தை எல்லாம் பல ராத்திரி பார்த்தவங்க. நீயா நடக்கறியா இல்லை நான் தொட்டு தூக்கவா?''

- அவளை தூக்குவதற்கான பாவனையோடு முன் சென்றவனை பார்த்து விடைத்தாள் அவள்.

''இதோ பார்... ஒழுங்கா வா உங்கப்பன் அவனுக்கு தெரிஞ்சத செய்யறான். போலீஸ் அதுக்கு தெரிஞ்சதை செய்யுது. நாங்க



எங்களுக்கு தெரிஞ்சதை செய்யறோம். ஆனா யார் செய்யறது உருப்படிங்கறது உனக்கு போகப் போகத்தான் தெரியும்.

உங்கப்பன் அப்படி எல்லாம் அவ்வளவு சீக்கிரத்துல இறங்கிவர மாட்டான்னு எங்களுக்கும் தெரியும் நட...''

- உளியன் பேச்சில் அனல் வீசியது. ரத்தம் சொட்டச்சொட்ட வேறு வழியின்றி செண்பகமும் நடந்தாள். ஜூலிக்கு நல்லவேளை நான் தப்பித்தேன் என்று தோன்றியது.

அடுத்த பத்தாவது நிமிடம் அந்த மலை உச்சியில் உள்ள சிறிய சமதளபகுதியில் ஈ காக்கை இல்லை. பெருமாள் தான் குடித்துவிட்டு போட்டிருந்த பீடித்துண்டை கூட பொறுக்கி எடுத்து சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு விட்டிருந்தான்.

மாயவனும் மரத்தின் உச்சியில் மெல்லிய கிளை பகுதிகளை வெட்டி இடுப்பைச் சுற்றி சொருகிக் கொண்டு ஒரு பச்சோந்தியைப் போல மரத் தண்டின் மேல் படுத்திருந்தான். அந்த போலீஸ் கூட்டமும் ஒரு நூறு மீட்டர் தூரத்துக்கு மேலேறி இருந்தது. அதில் வனஇலாகா ஆட்கள்தான் அதிகம் இருந்தனர். ஒருவர் வயர்லெஸில் கீழே கண்ட்ரோல் ரூமுடன் தொடர்பு கொண்டபடியே வந்தார்!

ஹாஸ்பிட்டல்!

பழனியம்மாள் ஐ.சி.யுவில் கிடத்தப்பட்டு, ஆக்சிஜன் எல்லாம் சொருகப்பட்டிருந்தது. பாண்டியமாணிக்கத்தின் மாமா தங்கராஜில் இருந்து மற்றுமுள்ள அவ்வளவு அங்காளி பங்காளிகளும் வந்திருந்தனர். நடு நடுவே பத்திரிகை யாளர்கள்.

தங்கராஜ் பாண்டியமாணிக்கத்தை பீராய்ந்து கொண்டிருந்தார்.

''மருமகப்புள்ள... என்னய்யா மனுசன் நீ? இப்படியா புள்ளையப் பறி கொடுத்துட்டு உக்காந்துருப்பே பாரு... எங்கக்காவும் போயிடுவா போல இருக்குது. நீ மந்திரியா இருந்து என்ன பிரயோஜனம்? சினிமால வாற மாதிரியே ஆயிப்போச்சே...!'' என்ற அவரது புலம்பலைத் தொடர்ந்து அவரை ஒரு பார்வை பார்த்தார். தங்கராஜிக்கு புரிந்து விட்டது. அதற்கு மேல் ஏதாவது பேசினால் பாண்டிய மாணிக்கம் அறைந்தாலும் அறைந்து விடும் ஆபத்து புரிந்தது.

நடுவே ஒரு போலீஸ் ஆபீசர் அவரிடம் வந்து ''சார் ஒரு நிமிஷம்'' என்று தனியே அழைத்துச் சென்றார்.

''என்னய்யா... போலீஸ் குரூப் மலை ஏறிடிச்சா?''

''ஏறிக்கிட்டே இருக்காங்கய்யா... அங்க உங்கள சுத்திகூட மாயவன் ஆளுங்க இருக்கலாம்னுதான் போலீஸ் போர்சைமலைக்கு அனுப்பறது பத்தி சொல்லலை. அதுக்கு பதிலா அவன்கிட்ட பேசறதுதான் சரிங்கற மாதிரி சொன்னேன். மாயவன் ஆளு யாராவது இருந்தா நிமிசத்துல தகவல் அவனுக்கும் போயிடும். அவனும் கொஞ்சம் அசால்டா இருப்பான். அப்ப நம்ம வனஇலாகா போலீசோட சேர்ந்து நம்ம குரூப்பும் அவனை சுத்தி வளைச்சிடுவாங்க. இதான் இப்ப நம்ம பிளான்...''

''தா... உன் பிளான் ராக்கெட்டுல்லாம் எனக்குத் தேவையில்ல எனக்கு என்மவ உசுரோட ஒரு கீறல் கூட இல்லாம வந்தாகணும். அப்பால அந்தக் களவாணி நாயோட தலைய வாங்கிட்டோம்னும் சொல்லணும்.''

- பாண்டியமாணிக்கத்தின் பற்களில் நறநறப்பு!

''தைரியமா இருங்கய்யா... மலை ஏற்ற ஸ்குவாட்ல வீரபத்தரன்னு ஒரு ஆபீசர் இருக்காரு. அவர் வீரப்பனை பிடிக்கற குரூப்லயே இருந்தவர்...?''

''மாயவன் பத்து வீரப்பன்னு... தெரிஞ்சுக்க...?''

''இருக்கலாம் சார். ஆனால் ஏ.கே.47க்கு அவனால பதில் சொல்ல முடியாது. அதோட ட்ரிபுள் ட்வெண்டி பேரல்கன் உடம்பை குடைஞ்சுகிட்டும் வெளிய போயிரும். அந்த தோட்டால கொஞ்சம் சயனைட்டும் மிக்ஸ் ஆகியிருக்கு. அது ரத்தத்துல பட்டாலே முடிஞ்சிச்சு.''

''எல்லாத்தையும் நீ சொல்லும்போது கேக்க நல்லாதான் இருக்கு. ஆனா நடக்கணுமே.''

''நடக்கும் சார் சென்னை செகரடேரியிட்ல இருந்து சி.எம்.மோட சீஃப் செகரட்ரியும் பேசினார். டிபார்ட்மெண்டுக்கு எல்லா பவரும் கொடுத்துருக்கார்...''

''இப்படி ஒரு குரூப் தங்கித்தங்கி மேல ஏற்றத்துக்கு ஜல்லுன்னு ஒரு ஹெலிகாப்டர்ல போய் இறங்கலாம்ல...?''

''என்னய்யா நீங்க... போறது தெரியாம போனாத்தான்யா காரியம் முடியும். ஹெலிகாப்டர்னா தூரவரும் போதே பாத்து ஓடி ஒளிஞ்சிடுவாங்க. பதிலுக்கு மறைஞ்சிருந்து அவங்க சுட்டா ஹெலிகாப்டருக்கும் ஆபத்துய்யா.''



''அப்ப அந்த மாதிரி பறந்து போய் தேட்றது எல்லாம் சினிமால தானா?''

''ஆமாங்கய்யா... ஹீரோ ஹெலிகாப்டர்ல பறந்து ஹீரோயின்கிட்ட வரும்போது ஹீரோவை கிட்ட பாத்துட்டு ஹீரோயின் பாட்டு பாடறதெல்லாம் சினிமாலதான் நிஜத்துல ஹெலிகாப்டர் சப்தத்துக்கு கரடியா கத்துனாலும் காதுல உழுவாதுங்க...''

''உம்... நீயும் எல்லா கேள்விக்கும் எனக்கு பதில் சொல்லிட்டே இருக்கே...''

''கூடிய சீக்கிரம் நம்ப டாட்டர் கிடைச்சிட்டாங்கன்னு தகவல் வரும் சார்... நம்புங்க?''

- அவர் அப்படி சொல்லும்போது ஐ.சி.யூ.வில் இருந்துதான் தகவல் வந்தது.

பழனியம்மாள் உயிர் பிரிந்து விட்டது என்று...!

## 34

பழனியம்மாளின் உயிர் பிரிந்த செய்தி ஒரு வினாடி பாண்டியமாணிக்கத்தின் நெஞ்சில் ஒரு முட்டு முட்டியது. அருகில் விளக்கிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் இளங்கோவுக்கும் ஒரு மாதிரியாகிவிட்டது.

சற்று நேரம் மௌனமாகத் தேங்கியவர் முன்னால் ''எக்ஸ்ட்ரீம்லி வெரி சாரி சார்'' என்றார் இன்ஸ்பெக்டர் இளங்கோ?

''என்னத்தய்யா சாரி... மாயவன் என் ஆத்தாளை கொல்லாம கொன்னுட்டான்யா...'' என்றபடியே பக்கமாய் கிடந்த நாற்காலியில் போய் விழுவது போல் அமர்ந்தார்.

பழனியம்மாள் உயிர் பிரிந்த விஷயம் வெகுவேகமாய் ஆஸ்பத்திரி முழுக்க பரவி சருகுகளில் தீப்பிடித்துக் கொண்டது போல ஒரு வெப்பமும் சூழத் தொடங்கியது.

நடுவில் ''ஐயோ அக்கா போயிட்டியே...'' என்றபடியே பாண்டியமாணிக்கத்தின் அருகில் வந்துநின்றார் அவரின் மாமனான தங்கராஜ்.

பாண்டியமாணிக்கத்திடம் பெரிதாக பாசத்துடிப் பெல்லாம் இல்லை. ஆனாலும் இந்த மரணத்தை வைத்து பெரிய அளவில்

அனுதாபத்தையும் விளம்பரத்தையும் தேடிக் கொள்ள என்ன செய்யலாம் என்பது போல யோசித்தபடி இருந்தார். ஆனால் மாமா தங்கராஜின் பேச்சு அதைக் குலைப்பது போல் இருந்தது.

''எலேய் பாண்டி... எப்ப அந்த மாணிக்கக்கல்லு போச்சோ அப்பவே எல்லாமே போயிருச்சுடா... எங்க அக்காளுக்கு கூட அதாண்டா மனசுல பெருசா விழுந்துடிச்சி. தங்கராசு, கல்லு போயிருச்சுடா, இனி அந்த மாயவனை கைல புடிக்க முடியாதேடா... நல்ல நாள்லயே அவன் வேங்கைப்புலி. இது அவனை யானையாவே மாத்திப்புடுமே ஐய்யோன்னு புலம்புனது என் காதுலயே இருக்குது'' என்று அழுகின்ற பாவனையோடு மூக்கைச்சிந்தினார்.

பாண்டியமாணிக்கத்துக்கு எரிச்சலாக வந்தது.

நாகமாணிக்கம் பற்றி அங்கே மாமா தங்கராசு பேசுவதை அவர் விரும்பவில்லை. கேமிராவும் கையுமாய் அலையும் பத்திரிகைக்காரர்கள் காதில் விழுந்தால் கொத்து பரோட்டாவே போட்டு விடுவார்கள்.

அவர் அப்படி பயந்ததும் வீண் போகவில்லை.

அங்கே லேடி ரிப்போர்ட்டர் பத்மினி அவளது காமிராமேன் சரவணனும் வந்திருந்தனர். அவர்கள் ஏற்கனவே நாகமாணிக்கம் பற்றி செய்தியை சேகரித்து முடித்திருந்தனர். இப்போது அதை பற்றி தங்கராசே பேசியது அவளுக்கு வசதியாகிவிட்டது. மைக்கோடு முன்னால் வந்தாள்.

ஆனால் பாண்டியமாணிக்கம் ஒருமுறை முறைத்து ''ஏம்மா... எங்கே எங்கேன்னே அலைவீங்களோ? இங்க நான் மகளை ஒருபக்கமும், பெத்தவளை மறுபக்கமும் பறி கொடுத்துட்டு துக்கத்துல இருக்கேம்மா போம்மா...'' என்று காக்கையை விரட்டுவது போல விரட்டினார். அப்படியே தடுமாற்றமுடன் நடந்து பழனியம்மாள் உடலைக் காண முற்பட்டவரை சிலர் வந்து தாங்கிக் கொண்டனர்.

அந்த நிலையிலும் அவர் மனது எதிர்கட்சிக்காரர்களை நினைத்து சற்று சலனப்பட்டது.

நாகமாணிக்கம் இல்லாததை அவர்கள் தங்களுக்குச் சாதகமாக கருதிக் கொண்டு பாண்டியமாணிக்கம் முற்றிலும் பலமிழந்து விட்டதாக கருதி ஏதாவது சேட்டைகள் செய்யக்கூடும் என்று அஞ்சியது.



எல்லாவற்றுக்கும் மேலாக தேர்தலில் நின்றபோது சொத்துக்கணக்கு காட்டியதில் அந்த நாகமாணிக்கம் இடம்பெற வில்லை. இப்போது அது எங்கே இருந்து எப்படி வந்தது என்று உள்ளூரிலேயே மீட்டிங் போட்டு கேள்வி கேட்கும் ஆபத்தும் மனதில் மோதியது.

மொத்தத்தில் நாகமாணிக்கம் என்று ஒன்றே தன்வசம் நேற்றும் இல்லை இன்றும் இல்லை. எல்லாம் கட்டுக்கதை என்று சொல்லிவிடுவதுதான் சரியான செயல் என்று தோன்றியது.

அப்படி ஒரு எண்ணம் தோன்றிய உடனேயே பழனியம்மாள் உடம்பை பார்ப்பது கூட பின்னால் போனது. தான் சற்று முன் சீறி விழுந்த பத்மினி முகம் நினைவுக்கு வந்து வேகமாய் திரும்பியவர்.

''எங்க அந்த டிவிக்கார பொண்ணு'' என்று கேட்டார். ஒரு போலீஸ்காரர் ஓடிப்போய் அவளை அழைத்து வந்தார். அவளைப் பார்க்கவும் சோகமாய் பேசும்பாவனையில் பேசத் தொடங்கினார்.

''மன்னிச்சிக்குங்கம்மா... துக்கத்துல நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன். என் வரைல பத்திரிகைக்காரங்க, டிவிக்காரங்கல்லாம் சாமி மாதிரி... உங்களாலதானே நாங்களே மக்களுக்கு தெரிய வர்றோம். நீங்க பாத்து ஒருத்தரை உச்சிக்கும் தூக்கலாம். பாதாளத்துலயும் தள்ளலாம்...'' என்கிற அவரது பீடிகை பத்மினி வரையில் லேசான சிரிப்பையே தந்தது.

கேமராமேன் சரவணனிடமும் மெல்லிய புன்னகை.

''சரவணா இந்த ஆள்கிட்ட ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். எவ்வளவு ஃபாஸ்டா கலர் மாத்றான் பாரு'' - என்றாள் கிசுகிசு குரலில்.

''பாண்டியமாணிக்கமும் எதுவா இருந்தாலும் கேளு தாயி...'' என்றார்.

''உங்களுக்கும் மிஸ்டர் மாயவனுக்கும் என்ன பிரச்சனை. எதனால் அவர் உங்க மகளை கடத்திகிட்டு போயிருக்கார்?'' என்று முதல் கேள்வியை முன்வைத்தாள்.

''பிரச்சனையா... எனக்கும் அவனுக்குமா? சரிதான் போ... அம்மாடி நான் அரசியல்வாதி. பொதுச்சேவை செய்யறவன். அவனோ திருட்டுப் பய... புடுங்கித் திங்கறவன் எப்படி எங்களுக்கும் அவனுக்கும் ஒத்துப் போகும்?''

''அப்ப நீங்க ஒரு அரசியல்வாதிங்கறது மட்டும்தான் காரணமா?''

''வேற... அத்தோட நான் பரம்பரை பணக்காரன் வேற! என் மகளை கடத்துனா தானே என்கிட்ட லட்சம்கொடு கோடிய கொடுன்னு பிளாக் மெயில் பண்ண முடியும்?''

''ஆனா ஊருக்குள்ள வேற மாதிரி பேச்சிருக்குதே?''

''என்னன்னு?'' - இப்படி கேட்கும்போது பாண்டிய மாணிக்கத்துக்கு கொஞ்சம் அச்சமாகக் கூட இருந்தது.

''நீங்க மாயவன் மாமாவோட நிலத்தை அபகரிச்சிட்டதாக வும் அதுக்கு பழி வாங்கத்தான் அவர் இப்படி நடந்துகிட்டதாகவும் சொல்றாங்களே...?''

''என்னது... அவன் மாமன் நிலத்தை நான் அபகரிச்சேனா? சரிதான்... அந்த நிலத்துக்கு நிஜமான சொந்தக்காரனான வீரைய்யன்கறவன் இப்ப என்கிட்டதான் வேலை பாக்கறான். அவன்கிட்டயே போய் கேளுங்க. அவங்க வந்து வித்தாங்களா இல்லை நான் அபகரிச்சேனான்னு. அது மட்டுமில்ல அந்த இடத்துக்கு இன்னிக்கு மார்கெட்ரேட்டுக்கு என்ன தொகையோ அதை வீரைய்யன்கிட்ட எப்பவோ கொடுத்துட்டேன்...''

''அப்ப மாயவன் உங்க மகளை கடத்தினது பிளாக்மெயில் பண்ண மட்டும்தானா?''

''அதுல என்ன சந்கேதம்...! அவன் களவாண்ட ஊடுங்களுக்கு கணக்கே கிடையாது. அவன் சிக்குனா கண்டதுண்டமா வெட்டிப் போட ஒரு கூட்டமே சுத்திக்கிட்டு இருக்குது.''

''உங்க வீட்லயும் கூட அவன் நாகமாணிக்கத்தை களவாண்டுட்டதா எல்லாரும் பேசிக்கறாங்களே...''

''ஆமா... அதைப்பத்தி தெளிவா பேசத்தான் இப்ப உன்னை நான் கூப்ட்டேன். அதெல்லாம் பொய்யி... நாகமாணிக்கம்கற ஒண்ணே முதல்ல என்கிட்ட கிடையாது. இயலாத ஒண்ண எப்படி களவாட முடியும்? அதுவும் வீடு கொள்ளாம வேலைக்காரங்களும் போலீசும் இருக்கும்போது...?''

- பாண்டியமாணிக்கம் பதில் பத்மினியை சற்று திகைக்கச் செய்தது. சில வினாடிகள் திகைப்பில் மௌனமாகி விட்டாள்.

''என்னம்மா திகைச்சு போயிட்டியா? நான் சொல்றதுதான் நிஜம்.''

''அப்ப நாகமாணிக்கம் களவு போகலையா?''

''இருந்தால்ல களவு போக?''



அவர் பதில் அங்கிருந்த இன்ஸ்பெக்டர், இளங்கோவை அவரை கவனிக்கச் செய்தது. அவரும், இளங்கோவுக்கு மட்டும் புரியும்படி சைகை செய்து முடித்துவிட்டு தொடர்ந்தார்.

''அம்மாடி நல்லா கேட்டுக்கோ... நாகமாணிக்கம் அது இதுங்கறதெல்லாம் புரளி. ஒரு வெற்றிகரமான அரசியல்வாதியை பத்தி எதிர்கட்சிக்காரங்க இப்படி நூறு புரளியைக் கிளப்பி விடுவாங்க. நீங்கதான் அதுல எது உண்மை எது பொய்யின்னு தெரிஞ்சு ஊர் உலகத்துக்கு சொல்லணும். என்வரைல பெரியமாணிக்கம் என் ஆத்தாதான். அதையே இப்ப நான் இழந்துட்டேன். இதை விடவா அந்த இல்லாத நாகமாணிக்கமும் மத்த விசயங்களும் பெருசு...?''

- கேட்டு விட்டு சிரமப்பட்டு அழுது கண்ணீரை வரவழைத்து துடைத்துக் கொள்ளவும் செய்தார். பத்மினிக்குத்தான் புசுக்கென்று ஆகிவிட்டது! சரவணனைப் பார்த்தாள்.

''பத்மினி... இன்னும் எத்தனை பல்டியை எப்படியெல்லாம் அடிக்கப் போறாரோ தெரியல'' என்றான் கிசுகிசு குரலில்.

அந்தக் கேப்பில் இளங்கோ இடைப்புகுந்து ''போதும் மேடம். உங்க பேட்டியை முடிச்சிக்குங்க. சார்! அவங்க அம்மா உடம்பை முதல்ல பாக்கட்டும். அவரை இனி தொந்தரவு பண்ணாதீங்க'' என்று அவர்களை தன் கன்ட்ரோலுக்கு கொண்டு வரப்பார்த்தார்.

''சார் உங்ககிட்டயும் எங்களுக்கு கேள்வி இருக்கு... மாயவனை பிடிக்க நீங்க என்னவெல்லாம் ஸ்டெப் எடுத்திருக்கீங்க சார்?'' - என்று மைக்கை இளங்கோ முன்னால் நீட்டினாள் பத்மினி.

''இந்த மாதிரி இக்கட்டான தருணங்கள்ள விவேகமான செயல்பாடுதான் ரொம்ப முக்கியம். போலீஸ் டிபார்ட்மென்ட்டும் விவேகத்தோட என்ன செய்யணுமோ அதை செய்துகிட்டிருக்கு'' என்றார் இளங்கோ சுருக்கமாக.

''அப்ப மாயவனை பிடிச்சிடுவீங்களா?''

''இது என்ன கேள்வி ஆளானப்பட்ட வீரப்பன் கதையே முடிச்சோம். இவன் என்ன...?''

''அப்ப இவ்வளவு நாளா ஏன் பிடிக்கலை?''

''அதுக்கு ஆயிரம் காரணம் இருக்கு. இப்ப பாருங்க'' இளங்கோ பதிலில் திமிர் தெரிந்தது.

நடுவில் அவர் செல்போனில் அழைப்பு அதன் எண்ணைப் பார்க்கவும் அவரிடம் ஒரு துடிப்பு கூமாச்சி மலைப்பக்கம் போன போலீஸ் ஃபோர்சில் உள்ள சார்ஜன்ட ஒருவரிடம் இருந்துதான் அந்த போன் வந்திருந்தது.

''சார்... அந்த மாயவன் மலைல இல்ல சார். நாம வரப்போறது தெரிஞ்சு கேரளா காட்டுக்குள்ளே நுழைஞ்சிட்டான்போல தெரியுது. வெரி சாரி சார்.''

''அப்படியா... நல்லா பாத்தீங்களாய்யா?''

''என்ன சார் கேள்வி இது. ஒரு ஃபோர்சோட் போயிருக்கோம். விட்ருவோமா?''

''ஒரு சின்ன தடயம் கூடவா கிடைக்கல?''

''அவன் கில்லாடி சார்... அவனை இப்படி எல்லாம் போய் பிடிக்க முடியாது சார். அவனை தந்திரமாதான் சார் அமுக்க முடியும்?''

''சரி இப்ப எங்க இருக்கீங்க?''

''கூமாச்சி மலை அடிவாரத்துல இருக்கற செக்போஸ்ட்கிட்ட இருந்து பேசறேன். கலெக்டர் டி.எஸ்.பின்னு எல்லாருக்கும் தகவல் கொடுத்துட்டோம். சார் கூடனே நீங்க இருக்கறதால உங்களுக்கும் டீம் லீடர் லோகநாதன் சார் தகவல் தர் சொன்னார்?''

- அந்த செய்தி இளங்கோவை சோர்வுடன் பெருமூச்சுவிடச் செய்தது.

பத்மினி அதையும் கவனித்தாள்!

**கூ**மாச்சி மலை உச்சி!

மரத்தின்மேல் இருந்து இறங்கியிருந்த மாயவன் முகத்தில் ஒரு மகிழ்ச்சி தெரிந்தது! பையனாகுலரால் திரும்பித் திரும்பி பார்த்தபடியே புதர் மண்டிக்கிடந்த சாமியார் குகை பக்கமாக போய் குகை வாயிலை மூடிக்கிடந்த பாறாங்கல்லை பெரும்பாடுபட்டு விலக்கினான்.

சப்தம் கேட்டு உள்ளிருந்தும் ஒத்தாசை கிடைத்தது. மொத்த பாறாங்கல்லும் விலகவும் சிறிய அளவு வியர்வையுடன் கடாரன் பெருமாள் உளியன் என்று மூவரும் வெளியில் வந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து கோசலை, பருத்தி இருவரும் வெளியில் வந்தனர.



ஆனால் செண்பகக்குழல்வாய்மொழியும், ஜூலியும் வராமல் உள்ளேயே இருந்தனர்.

''உள்ள அவங்க என்ன பண்றாங்க?''

''சித்தர்சாமி நிஷ்டைல இருக்காரு. அதை ஆச்சரியமா பாத்துகிட்டு இருக்காங்க.''

''ஓ... சாமி உள்ளதான் இருக்காரா?''

''ஆமாம்ப்பா... நாங்க அம்புட்டு பேரும் எம்புட்டோ பேசி கூப்டும் அவாகிட்ட சின்ன சலனம் கூட இல்லை.''

''அதான் உண்மையான சாமியாருக்கான லட்சணம்கறது'' என்ற மாயவன் குகைக்குள் நுழைந்து பார்த்தபோது ஒரு சிறு அகல் விளக்கு உள்ளே இருக்கும் பாறை ஒன்றில் எரிந்தபடி இருக்க அதன் மெல்லிய ஒளியில் மணவாள சாமியார் பத்மாசனத்தில் விரைப்பாக அமர்ந்திருந்தார். அவரது கோலமும் தீர்க்கமும் செண்பகக் குழல்வாய்மொழியையும், ஜூலியையும் கட்டிப் போட்டிருந்தன!

## 35

**சி**த்தரை யோக நிலையில் பார்த்த மாயவன் முதல் காரியமாக கைய்யெடுத்துத்தான் கும்பிட்டான். பின் உதட்டில் கைவைத்து யாரும் சப்தம் போடவேண்டாம் என்கிறாப் போல் சைகையுடன் ஜூலியையும், செண்பகக்குழல்வாய் மொழியையும் அழைத்துக் கொண்டு குகைக்கு வெளியில் வந்தான்.

அவர்கள் முகத்தில் ஆச்சரிய சலனம்.

''மாயவா...'' - கலைத்தது பெருமாளின் குரல்.

''சொல்லு...''

''அந்த கூட்டம் கீழ இறங்கிடிச்சா?''

''வேற திசைல போய்ட்டாங்க. எதனாலயோ இந்தப் பக்கம் அவங்க வரவேயில்லை.''

''அந்த நாகமாணிக்கம் வேலை செய்யுதுன்னு அர்த்தம்.''

''அது எனக்குத் தெரியாது... சாமிதான் யோகத்துல இருந்துகிட்டே அந்தப் போலீஸ் கூட்டத்தை இந்தப் பக்கம் வரவிடாம ஏதாவது பண்ணியிருக்கணும்.''

அவர்கள் பேசிக் கொள்வது செண்பகக் குழல்வாய்மொழிக்கு சற்று புதிராக இருந்தது.

''என்ன யோசிச்சரே... உங்கப்பன் வெச்சிருந்த நாகமாணிக்கம் இப்ப எங்க கைல'' என்று அவளுக்கான பதிலை சொன்ன பெருமாளை இன்னமும் அதிர்வோடு பார்த்தாள் செண்பகக்குழல்வாய்மொழி. அப்போது அவள் காலைப் பார்த்த மாயவனுக்கு சுரீர் என்றது.

''என்ன இது காயம்.''

''காயம்தான்... அம்முணி தனக்குதானே இடிச்சிகிட்டு நடக்க முடியலன்னு சீன் காட்ட பார்த்தாங்க. நாமளும் உட்டுட்டு ஒளிஞ்சிடுவோம். தேடிவர்ற போலீஸ் மீட்டுகிட்டு போயிடும்னு ஒரு கணக்கு போட்ருந்தாங்க. ஆனா நான் உடுவேனா அள்ளிகிட்டு போய் குகைக்குள்ள வெச்சிட்டேன்ல...?''

- பெருமாளின் விளக்கம் மாயவனுக்கு சமாதானத்தை தரவில்லை.

''என்னவே நீ... காயத்த பாத்தும் ஒரு பச்சலை கட்டு போடணும்னு கூட உனக்கு தோணலியா? அவுங்க அப்படி எல்லாம் செஞ்சு தப்பிச்சு போகத்தான் பார்ப்பாங்க. இந்த மலைக்காட்டுல நம்மகூட சேர்த்து கஷ்டப்படணும்னா ஆசைப்படுவாங்க.''

''அட என்ன மாயவா நீ... இப்பதானே குகையை விட்டே வெளியே வந்துருக்கோம். இனிமே கட்டு போட்டுட்டா போவுது...''

''பேசாதே. போ... போயி குப்பமேனி இலையை பறிச்சுகிட்டு வா. ஏ... அத்த... அவன் பறிச்சுகிட்டு வர்ற இலையை வாங்கி சாத்த பிழிஞ்சுஉட்டு கட்டு போடு... பாத்துகிட்டு நிக்காதே.''

''சரிப்பா... நீ பதட்டப்படாதே...''

- மாயவன் காட்டிய அக்கரை கோசலையை என்னவோ செய்தது.

உளியனும் கடாரனும் யானைப் பள்ளத்தில் போட்டு மூடிய தங்கள் பொருட்களை வெளியே எடுப்பதில் சுறுசுறுப்பாக இருந்தனர்.

மேகம் உருத்திரண்டு மழை வரும் போலவும் தெரிந்தது.

''போங்க... போய் உள்ள அடங்குங்க...'' என்று செண்பகத்திற்கும், ஜூலிக்கும் குகையை நோக்கி கையை காட்டினான் மாயவன்.

இருவரும் பதில் பேசாமல் திரும்பிச் சென்று குகைக்குள் அடங்கி ஒரு பாறைச்சுவர் ஓரமாக ஒடுங்கி நின்று கொண்டனர். இடி சப்தமும் கேட்க ஆரம்பித்தது.



உள்வரை குளிர்ந்த காற்று வீசி சித்தர்சாமிக்கு முன்னால் எரிந்து கொண்டிருந்த அகல் விளக்கு அணைந்து விடும்போல் தோன்றியது.

அதற்குள் பெருமாளும் போய் குப்பைமேனியை பறித்து வந்திருந்தான்.

''காலை நீட்டு...'' - என்று அதட்டும் குரலில் சொன்ன படி உள்ளங்கையில் வைத்து அதை கசக்கத் தொடங்கினான்.

உள்ளே வந்த மாயவன் அதைப் பார்த்து முறைத்தான்.

''என்ன?''

''குப்பமேனிய அத்தை கைல கொடு. நம்ப யாரோட சுண்டு விரல்கூட இதுங்க மேல படக்கூடாது. ஞாபகம் வெச்சுக்கோ'' என்றான்.

- பருத்தியும் அருகில் வந்து வாங்கிக் கொண்டு அவளது கைகளில் வைத்து கசக்கத் தொடங்கினாள். பின் அந்த சாற்றை கால் விரல்கள் மேல் விட்டபோது தொடக்கத்தில் நெருப்பைக் கொட்டியது போல் இருந்தது. அப்படியே துளியும் யோசிக்காமல் பருத்தி தன் சேலைத் தலைப்பை கிழித்து கட்டு போடத் தொடங்கினாள். செண்பகத்தின் முகத்தில் வலியின் ரேகைகள் தெரிந்தன. கவனித்த மாயவன் கனிவான குரலில் பேசத் தொடங்கினான்.

''யம்மா... நீங்க படிச்சவங்க. உங்ககிட்ட நான் வளவளன்னு பேச விரும்பல. உங்க ஊட்ல ஏசிபொட்டி வசதியோட நீங்க எப்படி எல்லாம் வளர்ந்துருப்பீங்கன்னு எனக்கு நல்லா தெரியும். அதுலயும் உங்கப்பாவுக்கு நீங்க ஒரே புள்ள. பன்னீர்ல குளிக்க வெச்சு தங்கதட்டுலகூட சோறு போட்டிருப்பான் அந்த பெரிய மனுஷன்.

ஆனா இந்த இடம் அது எல்லாத்துக்கும் நேர்மாறான இடம். கஷ்டமாத்தான் இருக்கும். சகிச்சுகிட்டு இருக்கறது தான் உங்களுக்கும் நல்லது. நான் நீங்க ரெண்டு பேரும் ரொம்பவே முரண்டு பிடிப்பீங்கன்னு நினைச்சேன். ஆனாலும் பரவாயில்லேங்கற மாதிரி நடந்துக்கிறீங்க... இப்படியே இருக்க பாருங்க இப்படி ஏகணை மொகணையா நடந்துகிட்டு அநாவசியமான கஷ்டப்படாதீங்க.

உங்கப்பா அவ்வளவு சீக்கிரத்துல வழிக்கு வரமாட்டாரு. அவர் வழிக்கு வந்துட்டா வந்த மாதிரியே உங்கள கொண்டு போய் விட்றுவேன். நீங்க இங்க இருந்து போறது என் கைல இல்ல. உங்க அப்பன் கைலதான் இருக்கு.

காலேஜ் கட்றேன்னு என்மாமன் இடத்தை மட்டுமல்ல. பலபேர் இடத்தை அடிச்சு புடுங்கியிருக்கான். அதை எல்லாம் திருப்பித் தரணும். காலேஜ் கட்டி சேவை செஞ்சா பரவாயில்ல... அதை வெச்சு லட்ச லட்சமா சம்பாரிக்கத்தான் பாப்பான் உங்க அப்பன். ஆகையால காலேஜ் கட்றத உடனும்.

போன எலெக்ஷன்லயே கள்ள ஓட்டாலே தான் ஜெயிச்சான். அதுக்கு தண்டனையா தன் எம்.எல்.ஏ. போஸ்ட்டை ராஜினாமா செய்யணும். அரசியல் விட்டும் விலகணும். இதுதான் என்கோரிக்கை இதை நிறைவேத்தினா உடனே உங்களை விடுதலை செய்வேன். என் கோரிக்கைல எனக்குன்னு நான் தனியா எதுவும் கேக்கல. எல்லாமே ஊர் உலகத்துக்கு நல்லது பண்ற விஷயங்கள்தான். உங்கப்பா மாதிரி சுருட்டல் பேர்வழிகளை அரசியல விட்டு விலகறது இந்த சமுதாயத்துக்கு நான் செய்யற பெரிய சேவையா நினைக்கறேன்.

இதை சாதிக்க எனக்கு உங்களவிட வலுவான ஒரு ஆயுதம் இருக்கறதா தோணல. அதான் திட்டம் போட்டு கடத்திகிட்டு வந்தேன். இவ்வளவுதான் விசயம். புரிஞ்சுகிட்டு நடந்துக்குங்க உங்கமேல உங்கப்பன் வெச்சிருக்கற பாசம் இந்த நல்லதுக்காவது பயன்படட்டும்.''

- என்று சொல்லி முடித்தவன் திரும்பிப் பார்த்தான். மணவாள சித்தர்சாமியிடம் ஒரு சிறு சலனமும் இல்லை - அவரது தவம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

வெளியேயும் மழை பிடித்துக் கொண்டு விட்டது. ஜூலி மட்டும் செண்பகம் காதில் விழுகிற தினுசில்.

''உங்கப்பா இதுக்கெல்லாம் சம்மதிச்சு நம்பள மீட்டுகிட்டு போவாரா?'' என்று கேட்டான்.

''மீட்டுகிட்டு போவார்... ஆனா நிச்சயம் இவன் கோரிக்கைகளை ஏத்துகிட்டு கிடையாது.''

''அப்ப எப்படி செண்பா மீட்பாரு. போலீஸே ஏமாந்து திரும்பிடிச்சே?''

''தெரியல... ஆனா நிச்சயம் ஏதாவது செய்வார்.'' - இருவரும் கிசுகிசுத்துக் கொண்டபோது படபடவென்ற அடைப்பு சப்தமுடன் உள்ளே நுழைந்தது புறா ஒன்று.''

நேராக கோசலை தோள் மேல் போய் அமர்ந்தது.

''அட... நம்ம கண்மணி...''



''கோசல... உன் வளர்ப்பா?''

''ஆமாமணே... இது மூலமாதான் நான் மாமனுக்கு சேதி அனுப்புவேன். என்கிட்ட ஏது செல்போனு...''

''இப்ப எங்க இருந்து வந்துருக்குது!''

''நான் இங்க புறப்பட்டு வரைல இதை என் சினேகிதி பஞ்சவர்ணத்துகிட்ட கொடுத்து விவரம் சொல்லிட்டு வந்தேன். ஏதாவது முக்கியமான விசயமாதான் இருக்கும். அவதான் அனுப்பியிருக்கா...'' - என்றபடியே அதன் காலடியில் கட்டப் பட்டிருக்கும் குப்பியை எடுத்து திறந்து பார்த்தாள். உள்ளே ஒரு துண்டிச்சீட்டில் ''போலீஸ் தீவிரம் - பழனியம்மாள் மரணம்'' என்று இருந்தது. அதை படித்த நொடி கோசலையின் பார்வை செண்பகம் பக்கம் திரும்பியது செண்பகமும் ஏறிட்டாள்.

''என்ன சேதி...'' - மாயவனும் கேட்டான். காட்டினாள். படித்தவன் அதை அப்படியே செண்பகத்தின் வசம் தந்தான்.

செண்பகமும் படித்துவிட்டு அதிர்வுடன் கண்களை அகல விரித்தாள்.

**பா**ண்டியமாணிக்கத்தின் பங்களாவில் கிடந்தது பழனியம்மாளின் உடல். ஊரே வந்து மாலை மரியாதை என்று அஞ்சலி செலுத்தி விட்டுப் போய்க் கொண்டிருந்தது. குறிப்பாக அரசு அதிகாரிகள் போலீஸ்காரர்கள் பழனியம்மாள் சடலத்துக்கு மாலை வைத்த கையோடு பாண்டிய மாணிக்கத்தை தேடிவந்து அவர் கைகளை பற்றி ஆறுதல் சொல்வது போல பார்த்தார்கள். இல்லா விட்டால் வராததை மனதில் வைத்துக் கொண்டு எதை வேண்டுமானாலும் செய்வார் என்கிற பயம் அவர்களிடம் வேலை செய்து கொண்டிருந்தது. யார் வருவதும் பாண்டியமாணிக்கத்துக்கு பெரிதாகவே தெரியவில்லை. முதலமைச்சர் வருவாரா என்பதில்தான் அவர் கவனமெல்லாம் இருந்தது.

அவர் மட்டும் வந்து விட்டால் தன் செல்வாக்கு துளிகூட சரியவில்லை என்பதை தன்சாக்களுக்கு நிரூபிப்பதோடு தன் மகளையே தொலைத்து விட்டு பெற்ற தாயையும் பறிகொடுத்து விட்டு தவித்துக் கொண்டிருப்பதற்கு பரிசாக இழந்த மந்திரி பதவியையும் எப்படியாவது வாங்கி விடவேண்டும் என்று பல மாதிரிகளில் மனது கணக்கு போட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் முதலமைச்சர் தொலைபேசியில்தான் பேசினார். தாயாரின் மறைவுக்கு அனுதாபத்தை தெரிவித்து விட்டு மாயவன்

விஷயத்தில் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று கூறியபோது கொஞ்சம் சுருக்கென்றது.

மார்பில் சட்டை இல்லாமல் ஒரு குற்றாலத் துண்டேர்டு எழவு காரியம் செய்பவர்களுக்கே உரிய தோற்றத்தோடு இருந்தவரை நோக்கி அவருடைய எடுபிடியான இன்ஸ்பெக்டர் இளங்கோ வந்தார். அவர் வந்தாலே மற்றவர்கள் ஒதுங்கி விடவேண்டும். அவ்வாறே ஒதுங்கிவிட இளங்கோ மட்டும் காதைக் கடித்தார்.

''ஐயா...''

''சொல்லு...''

''மாயவன்கிட்ட இருந்து ஒரு லெட்டர் வந்துருக்குது.''

''ஆள் இருக்கற இடம் தெரியல. ஆனா லெட்டர் மட்டும் வருதோ?''

''அவன் இங்க வரதம்பட்டியிலேயே யாருக்கோ போன்ல சொல்லியோ இல்ல வேறுவிதமா சொல்லியோ இங்க இருக்கறவங்க எழுதி ஒரு தெருவுல கிரிக்கெட் விளையாட்ற பையன் ஒருத்தன் கைல கொடுத்து விட்டுட்டாங்க. நான் என்னய்யா பண்ண?''

''சரி, என்னத்த எழுதியிருக்கான்?''

''அவன் பாட்டும் இஷ்டத்துக்கும் எழுதி யிருக்கான்யா?''

''எழவெடுத்த அவன் மாமன் இடத்தை தான் திருப்பிக் கொடுக்க சொல்லிட்டேன்ல?''

''என்கிட்ட நீங்க சொன்னதை நான் வெளிய சொன்னா நீங்க தப்பு செஞ்சதை ஒப்புகிட்ட மாதிரி ஆயிடும்யா... அதனால நான் அதை பத்தியே பேசல. அவன் உங்க எம்.எல்.ஏ. போஸ்ட்டை ராஜினாமா பண்ணிட்டு நீங்க அரசியலை விட்டே ஒதுங்கணும்னு சொல்லி எழுதியிருக் கான்யா?''

''நான் அரசியலை விட்டு ஒதுங்கணுமா...? நான் சொல்றேன் இவன் உலகத்தை விட்டே ஒழிஞும்.''

''ஒழிக்கத்தானே போறேன்...?''

''கிழிச்ச... கூட்டமா மலைக்கு பிக்னிக் போயிட்டு வந்து நீ எல்லாம் பேசறியா?''

''அய்யா... புரிஞ்சிக்குங்க... அவன் காத்து மாதிரி...''

''அப்ப குடுவைக்குள்ள புடிச்சு அடை... என்கிட்ட பாராட்டு பத்திரம் வாசிக்கறே?''



''அதுக்கு ஒரு ஏற்பாடு பண்ணிட்டேன்யா...''

''என்ன?''

''கொஞ்சம் செலவாவும்.''

''எவ்வளவு?''

''பெரிய நோட்டுல அஞ்சு?''

''அஞ்சு கோடியா?''

''ஆமாம்யா... அவன் உடம்பை தோள்ல தூக்கிட்டு வந்து உங்க காலடில போட்டுருவாங்க...''

''அவன் உசுருக்கு அவ்வளவு மதிப்பா?''

''கூட நம்ம பாப்பா இருக்குல்ல?''

''அப்ப உன் டிபார்ட்மென்ட் நாக்கு வழிக்கத்தான் லாயக்குங்கறியா?''

''என்னய்யா இப்படி பேசறீங்க. நாங்க சட்டப்படில்ல நடந்துக்கணும். ஆனா இவங்க அதை எல்லாம் பாக்காதவங்க'' - இளங்கோ பீடிகை போட்டார்...

## 36

இளங்கோ பாண்டியமாணிக்கத்திடம் சொன்ன விஷயம். அவருக்குள் பரபரவென்று பதறி எரிந்து கொண்டிருந்தது. நடுநடுவே அவரை சந்திக்க வந்த வி.ஐ.பிக்களும் உறவினர்களும் சம்பிரதாயமாக கையை பற்றி அதை வருடிக் கொடுத்துவிட்டு போனபடி இருந்தனர். உலகிலேயே பெரிய கொடுமைகளில் ஒன்று துக்கமான நேரங்களில் துளியும் துக்கம் இல்லாமல் இருப்பதும். துக்கப்படுவது போல் நடிப்பதும்தான்.

பாண்டியமாணிக்கத்துக்கும் கஷ்டமாத்தான் இருந்தது.

இளங்கோ ஒதுங்கி நின்று கவனித்தபடியே இருந்தார்.

ஐந்து கோடி கொடுத்தால்தான் மாயவனை ஒழிக்க முடியும் என்பதையே பாண்டியமாணிக்கத்தால் ஏற்கவும் முடியவில்லை. ஜீரணிக்கவும் முடியவில்லை.

நடுவில் ஐதீகப்படி ஜரகண்டியின் சப்தமும் சங்கு ஊதும் சப்தமும் சேர்ந்து கொண்டது. அப்போது அவர் எதிரில் கழுத்தில் போடப்பட்ட கட்டோடு ஒரு மிகப் பெரிய விசுவாசியை போல வீரைய்யனும் எதிரில் வந்தான். அவன் கையில் சாமந்தி பூ மாலை.

வந்தவன் ''ஐய்யா... அந்த மாயவனை சும்மா விடக்கூடாதுய்யா. அவனை கண்டதுண்டமா வெட்டி காக்கா குருவிக்கெல்லாம் போடணும்யா'' என்று ஆவேசமாக ஒரு ஆட்டம் வேறு ஆடினான். அதுவே அவன் அவருடைய மிகப் பெரிய விசுவாசி என்பதை சுற்றி இரப்பவர்களுக்கு புரிய வைத்துவிட்டது. குறிப்பாக கையில் மைக்கோடு சுற்றிச்சுற்றி வந்தபடி இருக்கும் பத்மினி கவனித்த படியே இருந்தாள். அவன் ஆவேசமாக பேசியதை தன் சகாவை விட்டு கேமராவிலும் சுருட்டிக் கொண்டாள்.

இளங்கோவிடம் மட்டும் என்ன பதில் கூறுவாரோ என்கிற டென்ஷன். ஆனால், ஐந்து கோடியெல்லாம் தந்து மாயவன் கணக்கை முடிக்க மனசே வரவில்லை.

இளங்கோவை முகஜாடையிலேயே அருகில் அழைத்து ''வேணாம் விட்று... அந்தப் பையனுக்கு அஞ்சு கோடியெல்லாம் ரொம்ப அதிகம். அஞ்சு லட்சத்துக்கே நான் யோசிப்பேன். அவனை நான் அம்புட்டு பெரியவனா நினைக்கல'' என்றார்.

''ஐயா நம்ம பொண்ணுங்க இரண்டு பேர் சிக்கிகிட்டு இருக்காங்க... யோசிச்சிக்குங்க.''

''எல்லாம் யோசிச்சிட்டேன். என்பொண்ணை வெச்சுகிட்டு அவனால என்ன செய்ய முடியும்? பொம்பளைங்க மேல அவன் கையேபடாது அவன் அவ்வளவு சுத்தமினும் நீதான் சொன்னே. நானும் கேள்விப்பட்டிருக்கேன். அப்பறம் நான் எதுக்கு என் பொண்ண பத்தி கவலைப்படணும்?

என்ன... அங்க அவன் கூட இருக்கைல கொசுக்கடி பூச்சிக்கடின்னு என்மவ கொஞ்சம் கஷ்டப்படுவா. பட்டுட்டு போவட்டும். இந்த நாட்டுக்கு சுதந்திரம் வாங்கறதுக்கு போராட்ன எம்புட்டு தியாகிங்க் ஜெயில்ல எவ்வளவு கஷ்டப்பட்டுருப்பாங்க? இதை சொல்லியே நாளைக்கு அவளையும் நான் அரசியல்ல பெரிய ஆளாக்கி உட்டுட்றேன்.''

- என்று பாண்டியமாணிக்கம் தன் பேச்சில் தியாகிகளிடம் போய் நின்று விட்டார். இளங்கோவுக்கே கிர்ரடித்தது. அப்போது உறவுக்காரர் ஒருவர் வந்து, 'மாப்ள உடம்பை இதுக்கு மேல வெச்சிருக்க முடியாது. காரியங்கள் தொடங்கிவிடலாமா? என்று கேட்க கையாலேயே சைகை காண்பித்தார்.



அவரை விட்டு விலகி வெளியே வந்த இளங்கோ முகத்தில் ஒரு இறுக்கம் கவனித்தபடியே இருந்தாள் பத்மினி. அப்போது இளங்கோவிடம் ஒரு சந்தனக்கலர் பட்டுச்சட்டை அணிந்த ஒருவர் வந்து பேசுவதும் தெரிந்தது. ஒட்டுக்கேட்க தயாரானாள். அதற்கு ஏற்ப இளங்கோவும் அந்த மனிதரும் பேசுமிடம் இருந்தது.

''என்னய்யா சொல்றாரு?''

''அஞ்சு கோடி எல்லாம் அவனுக்கு அதிகமாம். அஞ்சு லட்சத்துக்கே யோசிப்பாராம்.''

''அஞ்சு கோடி அவனுக்குன்னு யாருய்யா சொன்னா... அவரோட மகளுக்குதான் அந்த ரேட்டு. அத்த சொன்னியா?''

''சொல்லாம இருப்பேனா...? அதெல்லாம் கொஞ்சம் கூட அசரலை. முடியவே முடியாதுன்னுட்டாரு.''

''அப்பால எப்படி மகளை மீட்டெடுப்பாராம்?''

''விட்றுங்கறாரு... கொஞ்ச நாள் அவன்தான் வெச்சு சோறு போடட்டும்னு சொல்லாம சொல்றாரு! என்ன கொஞ்சம் கொசு கடிக்கும். அந்த காலத்துல ஜெயிலுக்குள்ள சுதந்தர போராட்ட தியாகிங்க கஷ்டபடலையான்னு மவளை தியாகி லிஸ்ட்டுல சேத்துட்டாரு. அரசியல்லயும் இழுத்து உடுவார் போல தெரியுது.''

''அப்ப கொள்ளை அடிச்ச பணத்தை வெளிய எடுக்க மனசு வரமாட்டேங்குதுன்னு சொல்லு.''

''அதை எப்படி என் வாயால சொல்ல முடியும் நீங்களா புரிஞ்சிகிட்டாசரி.''

''இப்படியாய்யா மவளை விட பணத்தை பெரிசா நினைக்கற ஒருத்தன் இருப்பான்?''

''ஆமா நானும் தெரியாமதான் கேட்கறேன். எங்க டிபார்ட்மெண்ட்டுல ஒரு படையே போய் பிடிக்க முடியாதவன நீங்க மட்டும் எப்படி புடிப்பீங்க?''

''அது தொழில் ரகசியம் அதுக்குதானே அஞ்சு கோடி விலை?''

''அதான் போணியாகலல்ல. என்கிட்ட சொன்னா என்னவாம்?''

''ஒளியத் தெரியாதவன் தலையாரி ஊட்ல ஒளிஞ்சு கதையால்ல இருக்குது. யோவ் எஸ்.ஐ... அதுக்கு வேற ஆளைப்பாரு. நீ பிரமோஷன் வாங்கி மெடலை குத்திக்கறதுக்கு நான்தான் சிக்குனேனா?''

''இதோ பாருய்யா... நான் உடுப்புல மட்டும் தான் போலீசு. மத்தபடி நானும் உங்கள்ள ஒருத்தன்தான். எனக்கும் சம்பாரிச்சு சட்டுபுட்டுன்னு லைஃப்பல செட்டில் ஆகற ஆசை இருக்க கூடாதா?''

''உன்ன கூட்டு சேர்த்துக்க சொல்றியா?''

''ஆமா... நான் ஐயாவை எப்படியாவது சம்மதிக்க வைக்கறேன்.''

''அது எப்படின்னு முதல்ல சொல்லு...''

''அங்க இவர் மகளை மாயவன் சித்ரவதை பண்றதா சொல்வோம். இங்க யார்தலை முடியையாவது வெட்டி எடுத்துகிட்டு வந்து காட்டி மகளுக்கு மொட்டை யடிச்சிட்டான்னு சொல்வோம்.''

''இதுக்கெல்லாம் மசிஞ்சிடுவாரா மாஜி மந்திரி?''

''தலைமுடிக்கு மசியாட்டியும் கட்ட விரலு, கால் விரலுன்னு போகப் போக மசிஞ்சுதானே தீரணும்?''

''நீ அப்படி வர்றியா?''

''அசையாத மனுசனை ஆட்டி ஆட்டித்தானே அசைக்க முடியும். என்ன பண்ணச் சொல்றீங்க?''

''சரிய்யா... உன் ரூட்ல நீ போ... எங்களுக்கு மாயவனை போட்டுத் தள்றது மட்டும் நோக்கமில்ல. அவனால நாங்க ஏகப்பட்டதை இழந்துட்டோம். அதை எல்லாம் ஈடுசெய்யத்தான் அஞ்சு கோடிய கேட்டோம். மஞ்சப்புதூர் வல்லாளனுங்கன்னா மாயவனுக்கும் கொஞ்சம் டார்ருதான்னு இந்த ஆளுக்கு தெரியும். மிச்சத்த நீ பாத்துக்கோ அஞ்சு கோடிங்கறது நாலு கோடியா கூட குறையட்டும். ஆனா காசை வெட்றதா இருந்தா 24 மணி நேரத்துல மாயவனை மலைக்குள்ள வெச்சி கதையை முடிச்சிடுவோம். அதுமட்டும் உறுதி ஞாபகம் வெச்சுக்கோ?''

''இதோபார். அவனை எப்படி காலி பண்ணுவீங்க. அதை சொல்லலே மாட்டேங்கறீங்களே...?''

''சரி... உனக்கு மட்டும் சொல்றேன் நல்லா கேட்டுக்கோ மாயவனோட விசுவாசக்காரன்ல ஒருத்தன் இப்ப கட்சி மாறிட்டான். மாயவனை போட்டுவிட முழுசா ஒருகோடி கேக்கறான். கொடுத்தா வேலை முடிஞ்சிச்சு... அவன் தான் அவங்களுக்கு மலைக்கு மேல மளிகை சப்ளை பண்றவன். அதுல மாயவனுக்கு சாப்புடற வவுத்து வலி மாத்திரைல இருந்து எல்லாம்



அடக்கம். அந்த மாத்திரைல நாங்க வேலைய காட்னா முடிஞ்சிச்சு. வவுத்து வலிக்கு மாத்திரையை சாப்பிட்றதா நினைச்சு சயனைட் மாத்திரையை சாப்பிட்டு மாயவன் பரலோகம் போய்ச் சேரவேண்டியதுதான் விளங்கிச்சா?''

''நல்லா விளங்கிச்சு. ஆமா அவன் விசவாசக்காரன் யார்?''

''அதை நீ பணத்தை கொடுக் கைல சொல்றேன். இப்ப வர்றேன். எங்களுக்கு தெரியாம நீ குறுக்கு சால் ஓட்டி எதையாவது பண்ண நினைக்காதே. மாயவனை நேரா போய்ல்லாம் புடிக்க முடியாது. தந்திரமாதான் தூக்க முடியும். தந்திரத்தால்தான் வீரப்பனை போட்டுத் தள்ளாங்க. தந்திரத்தாலதான் பில்லேடனை போட்டுத் தள்ளாங்க. அப்புறமா செத்தவனைத்தான் துப்பாக்கியால சுட்டு நாங்கதான் கொன்னோம்னு ஊர் உலகத்தை நம்ப வெச்சாங்க.

- அந்த மனிதர் பேச வேண்டியதை பேசிவிட்டு முழுக்கை சட்டையை ஏத்தி விட்டபடியே விலகிப் போனார். ஒட்டுக் கேட்டபடி இருந்த பத்மினி பாஸ்கரிடம் ஒருவித பதைப்பு. அவளும் இளங்கோ பார்த்து விடாதபடி நழுவி கேமராமேன் முத்துச்சாமி மற்றும் சரவணனிடம் வந்தாள்.

''என்ன பத்மினி... எனிதிங் ராங்?'' சரவணன் கேட்டான்.

''இங்க எல்லாமே ராங்காதான் இருக்கு சரவணன். சினமால வர்ற பொலிடீஷியன்ஸை நிஜ பொலிடீஜியன்ஸ் தூக்கி சாப்ட்டுடுவாங்க போல இருக்கு.''

''விபரமா சொல்லு பத்மினி.''

''முதல்ல இங்க இருந்து கிளம்புவோம். மாயவன் போட்டோ சலூன்ல கிடைச்சிடிச்சு. இப்போதைக்கு அது போதும். அவனை கொல்ல ஐந்து கோடின்னு ஒரு திட்டம் போட்டு அதை ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரே செயல்படுத்த திட்டம் போட்டுகிட்டிருக்காரு! தன்னோட டிபார்ட்மென்ட்டால மாயவன் நிழலைகூட தீண்ட முடியாதுங்கறது அவர் அபிப்பிராயம். அதனால இந்த விஷயத்துல அவர் மாயவனுக்கு எதிரானவங்களோட கூட்டு சேர்ந்து களத்துல இறங்கியிருக்காரு.''

''மைகாட்... இதுல இந்த பாண்டியமாணிக்கத்துக்கும் பங்கு இருக்கா?''

''இந்த ஆள் அஞ்சு கோடிங்கற பேரத்துக்கு படிய மாட்டேன்னுட்டான் போல இருக்கு. ஆனா படிய வைக்கறேன்னு இந்த எஸ்.ஐ. சொல்லியிருக்கான்.''

''அப்ப சட்டப்படி மாயவனை தேடி கண்டு பிடிக்கற விஷயம்.''

''அவங்க ஒரு பக்கம் தேடிகிட்டிருக்கறதா எல்லா கதையையும் சொல்வாங்க. இன்னொரு பக்கம் இப்படி ஒரு விஷயம்...''

''இவங்களையும் இங்க நடக்கறதையும் பார்த்தாக்கா அந்த மாயவன் ரொம்ப நல்லவன்னு பண்ணிடுவாங்க போல தெரியுதே.''

''அதுல என்ன சந்தேகம் மாயவன் நிஜமா ரொம்ப நல்லவந்தான்.''

''பத்மினி நான் சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன்.''

''ஆனா நான் சீரியஸாவே சொல்றேன் சரவணன். சந்தர்ப்ப சூழ்நிலைதான் மாயவனை இப்படி பண்ணி வெச்சிருக்கு. ரொம்ப முக்கியமான காரணம் பிறந்த இடமும் சூழ்நிலையும்.''

''பத்மினி இப்ப நாம என்ன பண்ணப் போறோம். அதை கொஞ்சம் சொல்றியா.''

''இந்த சப்-இன்ஸ்பெக்டரும் இவனோட பேசி கிட்டிருந்த அந்த மஞ்சப்புதூர் வல்லாளனும் சேர்ந்து போட்டுருக்கற திட்டத்தை முதல்ல தவிடு பொடியாக்கணும். மாயவன் கூட்டத்துலயே ஒருத்தனை பணத்தாசை காட்டி இவங்க மாத்தியிருக்காங்க. இந்த உண்மை மாயவனுக்கும் தெரியணும்.''

''பத்மினி, நாம ரூட் மாறிப் போற மாதிரி தெரியும். இதெல்லாம் நமக்கு தேவையா?''

''என்ன சரவணா... டி.விக்கு நியூஸ் கொடுக்கறதும் மாசச் சம்பளம் வாங்கி மளிகை பில், செல்போன் பில்கட்டி, டி.வில கிரிக்கெட் பாத்துட்டு வாழறது மட்டும்தான் வாழ்க்கையா...?''

''நோ... நோ... நான் அந்த அர்த்தத்துல சொல்லல... நம்பளால என்ன பண்ண முடியும்? அந்த மாயவனோ கடவுள் மாதிரி கண்ணுல படாமல்ல இருக்கான்.''

''சரியா யோசி... நம்ம கைலதான் மீடியாங்கற ஆயுதம் இருக்கு. இது சந்திரமண்டலத்துலயும் - செவ்வாகிரகத்துல யும் கூட பிரளயத்தை உருவாக்க கூடியது.''

''சரி உன் திட்டம் என்ன... அதை முதல்ல சொல்லு.''

''இந்த சதித்திட்டத்தை இப்பவே நம்ம நியூஸ் எடிட்டருக்கு சொல்லி நியூஸை வரும்படி பண்ணனும். நியூஸ்ல வந்தா ஊர்



முழுக்க தெரியவரும். விஷயம் தானா மாயவன் காதுக்கும் போயிடும்...?''

''நல்ல ஐடியா... அப்ப இப்பவே போனைப்போட்டு மேட்டரைச் சொல்லிட வேண்டியதுதானே?''

- சரவணன் கேட்க பத்மினியின் செல்போன் இயங்க ஆரம்பித்தது!

**கூ**மாச்சி மலை உச்சி!

ஓடைப் பகுதி! செண்பகமும், ஜூலியும் தலைமுழுக்கு போட வந்திருந்தனர். கூடவே கோசலையும், பருத்தியும்.

''போ... போய் உன் அப்பத்தா சாவுக்கு முழுக்கு போடு. இங்க இருந்தே அவுங்கள நினைச்சு ஓட்ற இந்த தண்ணியில பூ போட்டா அதுவும் அவுங்களுக்கு போய் சேர்ந்துடும். நேர்ல போவத்தான் விதி இல்லாம போச்சு. இதையாச்சும் செய்'' என்று எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள் பருத்தி. அதை எல்லாம் மாயவன்தான் சொல்லி அனுப்பியிருந்தான்.

## 37

**கை** நிறையக் காட்டுப் பூக்களோடு நின்று கொண்டு பருத்தி சொன்னதைக் கேட்ட செண்பகக்குழல்வாய் மொழிக்கு சற்று நெகிழ்ச்சியாக இருந்தது. கூடவே இருக்கும் ஜூலிக்கோ எதிர்மறையாக கோபம்தான் வந்தது.

''செத்துப்போன பாட்டிக்கு அஞ்சலி செலுத்தணும்கற அளவுக்கு சொல்லத் தெரிஞ்ச உனக்கு ஒரு உயிரே போயிடிச்சே இனியும் இங்க வெச்சுக்காம அனுப்பி வைக்கறதுதான் சரின்னு தோணலியா?'' என்று கேட்டாள்.

பருத்தி அதைக் கேட்டு அசரவில்லை.

''எப்பவும் எல்லா ஞாயத்தையும் ஏழைங்க எங்ககிட்டயே கேளுங்க். எதுவும் உங்களுக்கு கிடையாது. ஏன்னா நீங்கல்லாம் மேட்டுக் குடிங்க பாருங்க'' என்றாள்.

''நான் ஒண்ணு சொன்னா நீ ஒண்ணு சொல்றியே... இன்னிக்கு பாட்டி செத்தாங்க... நாளைக்கு இவங்க அப்பாவுக்கே ஒண்ணுன்னா அதுக்கு காரணம் நீங்கதானே?''

''அப்படி எல்லாம் எதுவும் நடந்துடாதுதாயி... கெழவிக்கு வயசாயிடிச்சு. உளுத்துப் போன உத்தரம் ஒரு தும்மல போட்டாலே போதும். உடைஞ்சு பொல பொலன்னு கொட்டிப் போவும். அதான் போய்ச் சேர்ந்தா... ஆனா இவ அப்பன் அப்படி கிடையாது தலைல இடியே விழுந்தாலும் உசுரை மட்டும் எமன் கொண்டு போக விடமாட்டான்.''

''இவ்வளவு பேசறியே... நாங்க வருத்தப்பட்டா என்ன?'' என்ற ஜூலியின் கேள்விக்கு பருத்தியால் பளிச்சென்று ஒரு பதிலை சொல்ல முடியவில்லை. ஆனால் கோசலைக்கு சிலிர்ப்பிக் கொண்டு வந்தது கோபம்.

''தா... அந்த பூவை தூக்கி போட்டுட்டு இப்படி வா. இவளுக தலைமுழுக்கு போட்டா என்ன... இல்ல போடாட்டிதான் நமக்கென்ன... அந்தக் கெழவி உசுரு அலைஞ்சா அலைஞ்சுட்டு போவுது.

எதிரியா இருந்தாலும் துக்கத்துக்கு ஒரு மரியாதை கொடுக்கணும்கறது நம்ம எண்ணம். ஆனா அதை புரிஞ்சிக்கிடாம இவ கேள்வியா கேப்பா. நீ நின்னு பதில் சொல்லணுமாக்கும்?''

- என்று பொரிந்துத் தள்ளிவிட்டு பருத்தியை இழுத்துச் சென்றாள் கோசலை. பதிலுக்கு ஜூலி எரிச்சல் குறையாமல் செண்பகக்குழல்வாய்மொழியைத்தான் பார்த்தாள். அவளோ குனிந்து பருத்தி போட்டு விட்டுப் போன காட்டுப்பூக்களை கையில் எடுக்கத் தொடங்கினாள்.

''என்ன செம்பா பண்றே?''

''பாக்கத்தானே போறே...'' என்றபடியே பூக்களோடு ஓடையில் இறங்கிய செண்பகக்குழல்வாய்மொழி குனிந்து அவைகளை... ஓடும் நீருக்குள் விட்டாள்... பின் அப்படியே உட்கார்ந்து குளிக்கத் தொடங்கினாள்.

''செம்பா... யூ பிலீவ் திஸ் திங்க்ஸ்?''

''ஒய் நாட்?''

''என்வரைல இது பைத்தியக்காரத்தனம்...''

''நான் இதை ரொம்ப பெரிய விஷயமா நினைக்கறேன் ஜூலி. இங்க நான் ஒவ்வொருத்தர்கிட்டயுமே ஹியூமன் வேல்யூஸை பாக்கறேன்... உன் கண்ணுக்கு தெரியலியா?''

- ஓடை நீரில் குளித்தபடியே கேட்டாள்.



''கஷ்டமா இருக்குது... ஆனா இப்ப சுவாரஸ்யமா இருக்கு...?''

''உன் பாட்டி இறந்தது தெரிஞ்சுமா நீ இப்படி பேசறே?''

''பாட்டிக்கு பி.பி. கொலஸ்ட்ரால், சுகர்னு எல்லாமே பிராப்ளம் நாம கடத்தப்பட்டது இதுல ஒரு சின்ன விஷயம் மட்டும்தான் உண்மைல பாட்டி உயிரோட இருந்து நம்மள கடத்தின இந்த மாயவன் குருப்பை பழிவாங்கத்தான் ஆசைப்பட்டிருக்கும், செத்ததுக்காக அதோட ஆத்மா இப்ப வருத்தம் தான் பட்டிகிட்டிருக்கும்?''

''விட்டா இவங்களோட இங்கையே இருந்துடலாம்னு கூட சொல்வே போல் இருக்கே.''

''சேச்சே. நான் அப்படி எல்லாம் யோசிக்கலலை. பார்ப்போமே. என் அப்பாவா - இல்ல மாயவனா யார் ஜெயிக்கறாங்கன்னு...?''

''செம்பா... உன் மனநிலை எனக்கு இல்லை. இந்த குளிரும் கொசுக்கடியும் நரகமா இருக்கு. என்வீட்லயும் ஒரு அளவுக்கு மேல பொறுக்க மாட்டாங்க.''

''அப்ப நீ வேணா புறப்படு. எனக்காக நீ கஷ்டப்படாதே.''

''செம்பா... நாம இரண்டு பேருமே தப்பிக்க முயற்சி செய்வோம். இவங்களுக்கு பயப்படறதோ இல்லை இவங்கள அட்ஜஸ் பண்றதோ கொஞ்சமும் சரியில்லை.''

''என்னவோ தப்பிக்க வழி தயாரா இருக்கற மாதிரியும், நாமதான் முட்டாள்தனமா இங்க இருக்கற மாதிரியும் பேசறே.''

''இதோ பார்... இந்த ஓடை போற வழியிலேயே போனா நிச்சயம் கீழ போயிடலாம். தண்ணிங்கறது எப்பவும் கீழ் நோக்கித்தான் போகும். இது போற வழித்தடமும் வெளிச்சத்தோட இருக்கும்.''

''ஒருவேளை ஆழமான நீரோட்டங்கள் வந்தா...''

''இங்க இருந்து கஷ்டப்படறதுக்கு அதுல நீந்தியாவது தப்பிக்க பார்ப்போம்.'

''இவங்க சும்மா இருப்பாங்களா... பின்னாடியே...''

''ஏன் இப்படி நெகடிவாவே பேசறே. நம்மளாலயும் தப்பிக்க முடியும்னு நம்பு. எப்படியாவது கீழ் போயிட்டா முதல் வேலையா போலீஸை பார்ப்போம். அவங்க நம்மள உங்க வீட்ல கொண்டு போய் விட்றுவாங்க.

உனக்கு அதிர்ஷ்டம் இருந்தா உன் பாட்டி உடம்பைகூட பாத்துடலாம்.

- ஜூலி துடித்தாள். செண்பகக்குழல்வாய்மொழி யோசித்தாள்.

''என்னடி யோசனை?''

''நீ சொன்ன மாதிரி நடக்குமான்னுதான் யோசிக்கறேன்.''

''எல்லாம்.நடக்கும்... கமான்...''

- ஜூலி அந்த ஓடை நீருக்குள் செண்பகக்குழல் வாய்மொழியை இழுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தாள்.

முழங்காலளவு நீர்!

இடையிடையே மலைப்பாறைகளின் குறுக்கீடுகள். அப்படி ஒன்றும் சுலபமாக ஓடிவிட முடியவில்லை!

குகைப்பகுதி.

பருத்தியும் கோசலையும் மட்டும் வருவதைப் பார்த்த கடாரன் முகத்தில் நெற்றி சுருங்கியது.

''எங்க அவளுங்க?''

''ரொம்ப வாயாடுனா ஒருத்தி... நல்லா வாய்லயே போட்டுட்டு வந்துட்டேன்.''

''அட என்ன புள்ள நீ... பொட்டச்சிங்க குளிக்க போறீங்கன்னு தானே நாங்க யாரும் வரலை. அவளுகள இப்படி தனியா உட்டுட்டு வந்தா என்ன அர்த்தம்?''

''ஏன் கடாரா... தப்பிச்சு ஓடிருவாளுகன்னு பயப்படறியா?''

''பின்ன... இங்க கிடந்து சாக யாருக்கு தான் ஆசை இருக்கும். நாங்களே இது என்ன ஈத்தற பொழப்புன்னு குமுறிகிட்டுல்ல இங்க இருக்கோம்.''

''சரி இப்ப என்ன... அவளுங்கள போய் கூட இருந்து கூட்டியாரணும் - அம்புட்டுதானே?''

''கேக்காதே பொறப்படு...'' - என கடாரன் கடுமையான குரலில் கூற கோசலை மட்டும் திரும்பி நடந்தாள். உடன் வரப்பார்த்த பருத்தியை வேண்டாம் என்று தடுத்து விட்டாள்.

அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த மாயவன் உடம்பு முழுக்க எண்ணெய் பூசிக் கொண்டு விரல்களில் சொடுக்கு எடுத்தபடி இருந்தான்.



ஓடைக்கரை பகுதி!

வந்து பார்த்த கோசலைக்கு சுருக்கென்றது.

அங்கிருந்தபடியே கத்தினாள்.

''மாயவ மாமோய்...?'' அவளின் கூக்குரல் ஓடை வழியாகவே நெடுந்தூரம் வரை போய்விட்டிருந்த செண்பகம் ஜூலி காதுகளிலும் விழுந்து எதிரொலித்தது.

''கமான் க்விக்... நம்மளை தேடத் தொடங்கிட்டாங்க'' என்று ஜூலி அதிகபட்ச வேகத்துக்கு மாறினாள். கோசலை யின் குரல் கேட்டு கடாரனும் உளியனும் பெருமாளும் அந்தக் குகை வாசலில் இருந்து ஓடைக்கரை நோக்கி ஓடினார்கள்.

மாயவன் எண்ணெய் பூசிய உடம்போடு துளியும் பதட்டத்தை காட்டாமல் அருகில் இருந்த காய்ந்த சுரைக்காய் நாரை எடுத்துக் கொண்டு அருகில் கிடந்த குற்றாலத் துண்டையும் எடுத்து தோளில் போட்டுக் கொண்டு ஓடைக்கரை நோக்கி நடந்தான். பருத்தி மட்டும் பதறினாள்.

''மாயவா... அவளுக ஓடிப் போயிடுவாளுகளா?''

''போகட்டும் அத்தை.''

''இது எதிர்பார்த்ததுதான். இப்படி எல்லாம் நடக்கத்தான் செய்யும்றது எனக்கு தெரியும். ஆனா எங்கேயும் போயிட முடியாது நான் பாத்துக்கறேன்.''

''என்னப்பா சாதாரணமா சொல்றே... அரும்பாடுபட்டு புடிச்சாந்தவளுகள பேச்சு மப்புல தப்ப உட்டுட்டோமோன்னு எனக்கு படபடப்பா இருக்குதுப்பா.''

''கவலைப்படாத அந்த ஓடைக்கரை முடியற இடத்துக்குத்தான் இப்ப நான் போறேன். அவளுக சுத்தி வரப்போற இடத்துக்கு நான் குறுக்குச் சரிவு வழியா அஞ்சு நிமிஷத்துல போயிருவேன்.''

அவன் பதில் பருத்திக்கு சற்று ஆறுதலாக இருந்தது.

அவர்களோ ஓடியபடியே இருந்தனர்.

செண்பகக்குழல்வாய்மொழியின் அடிப்பட்ட கால் விரல்களில் இருந்து ரத்தம் பெருக்கெடுத்து தண்ணீரில் கலந்தபடி இருந்தது.

''ஜூலி முடியலடி...''

''இன்னும் கொஞ்ச தூரம்தான்... அதோ அடிவாரம் தெரியுது பார். ரோடு மேல கூட ஒரு லாரி போய்கிட்டிருக்கு பார்'' ஜூலி காட்டினாள். ஒரு லாரி போனபடியே இருந்தது. பின்னாலேயே ஒரு போலீஸ் ஜீப்பும்! அதைப் பார்க்கவும் ஜூலிக்கு உற்சாகம் எகிறியது. ஜூலி மெல்லிய சிகப்பு நிறத்தில் டி ஷர்ட் அணிந்திருந்தாள். அதை துளியும் யோசிக்காமல் சுழற்றி தலைக்குமேல் ஆட்டியபடியே 'ஹெல்ப்... ஹெல்ப்' என்று கத்திக் கொண்டே பாறைகளின் மேல் ஏறி நின்றாள்.

ஆனால்...?

## 38

சிகப்பு நிற டிஷர்ட்டை கழற்றி ஆட்டியதில் எந்த புண்ணியமும் இல்லை. எதிரில் மாயவன் ஒரு பாறைமேல் தெரிந்ததுதான் காரணம்!

கைகட்டிக் கொண்டு விரைப்பாக நின்ற மாயவன். இளைக்க இளைக்க ஓடி வந்த இருவரையும் ஒருவித புன்னகையோடு பார்த்தான். அவனிடம் துளிகூட பதட்டமோ பயமோ கோபமோ எரிச்சலோ எதுவும் இல்லை.

செண்பகக்குழல்வாய்மொழிக்கும், ஜூலிக்கும் லோக வெலவெலக்க ஆரம்பித்தது. அவர்கள் தேங்கி நின்ற அந்த இடைவெளியில் அவர்கள் வந்த வழியில் கடாரன், பெருமாள், உளியன் என்று மற்ற மூவர்களும் வந்து சேர்ந்தனர்.

ஜூலிக்கு வெடவெடவென்று உடம்பு நடுங்கத் தொடங்கியது.

''நான் சொன்னப்ப கேட்கல - இப்ப பாத்தியா?'' - செண்பகம் காதை கடித்தாள். ஜூலி திருதிருவென விழித்தாள்.

அப்போது மாயவனிடம் இருந்து ஒரு கட்டளைக் குரல்.

''உளியா! அந்த சிவப்பு சட்டக் காரிய கொண்டு போய் ஊர் எல்லைல விட்டுட்டு வா'' என்றான். அந்தக் குரல் ஜூலிக்கு ஆச்சரியமாயும் அதிர்ச்சியாயும் இருந்தது.

''தேங்க்ஸ்... ரொம்ப தேங்க்ஸ்... ஆனா நான் மட்டும் போக விரும்பல செண்பா'வையுவு எங்கூட அனுப்புங்க. உங்களுக்கு கோடி புண்ணியம்'' - கை கூப்பி கெஞ்சத் தொடங்கி விட்டாள் ஜூலி. பதிலுக்கு சிரித்தான் மாயவன். ஆனால் செண்பகக் குழல்வாய்மொழி மாயவனிடம் கெஞ்ச விரும்பவில்லை.



''நீ போ ஜூலி. என்னால நீ கஷ்டப்பட்டது போதும்'' என்றாள்.

''இல்ல நான் போக மாட்டேன்.''

''சரிதான் வா புள்ள... உன் சினேகிதிக்கு எங்களால எதுவும் ஆயிராது. அதே சமயம் இங்க இருக்கற எங்க யாரோட ஒரு முடிக்காலையும் அந்த பெரிய மனுஷனாலயோ இல்லை போலீசாலையோ புடுங்கக்கூட முடியாது. போ... போய் இவ அப்பன்கிட்ட 'அய்யா சீக்கிரம் நல்ல முடிவெடுங்க! இல்லாட்டி அது உங்க பொண்ணுக்கு தான் ஆபத்துன்னு சொல்லிட்டு உன் ஊட்டபாக்க போய்கிட்டே இரு. அப்படியே இதான் சமயம்னு எங்க இடத்தை காட்டிக் கொடுக்க நினைக்காதே. அப்படியே நினைத்தாலும் கவலையில்லை. இந்த மலைல பறவைங்க இருக்கற வரை எங்கள யாராலயும் புடிக்க முடியாது. யார் வந்தாலும் நாங்க தப்பிச்சிடுவோம்.

அந்த பெரிய மனுஷனுக்கு ஒரே வழிதான் இருக்கு. அது செஞ்ச தப்புக்கெல்லாம் பரிகாரம் செஞ்சுட்டு அரசியல்ல இருந்து ஒதுங்கறது... போ... போய்... சொல்லு.''

- பெருமாள் ஜூலிக்கு எடுத்துக் கொடுக்க உளியன் அவள் அருகில் வந்து ''இப்ப நீயா வர்றியா... இல்லை கட்டி தோள்ல தூக்கிப் போட்டுக்கிட்டு போகட்டுமா?'' என்று கேட்கவும் அடுத்த நொடியே உதறிக் கொண்டு அவன் பின்னே நடந்தாள் ஜூலி. அவள் போவதையே பார்த்தபடி இருந்த செண்பகக்குழல்வாய்மொழி பெருமாள், கடாரன் இருவரையும் நெருங்கி 'போகலாமா?'' என்று கேட்டாள்.

ஒரு பாறைமேல் நின்றபடி பார்த்துக் கொண்டே யிருந்தான் மாயவன். செண்பகக்குழல்வாய்மொழி அவன் வரையில் ஒரு ஆச்சரியமானவளாக மாறிவிட்டிருந்தாள்.

தொலைக்காட்சிப் பெட்டியில் மாயவன் பற்றிய செய்தி பட்டையை கிளப்பிக் கொண்டிருந்தது!

மாயவன் புகைப்படம் ஒரு புறமும், மறுபுறம் செண்பகக்குழல்வாய்மொழி புகைப்படமும் மாறி மாறி இடம்பெற்ற நிலையில் மாயவன் பற்றிய போலீஸ், ஊர்மக்கள் கருத்துகள் காணப்பட்ட நிலையில் அப்படியே ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. கீழே ஸ்க்ரோலிங் 'மாயவனைக் கொல்ல ஐந்து கோடி பேரம்' என்கிற எழுத்துக்களுடன், ''போலீஸ் ஆபீசர்

ஒருவரே இதற்கு உறுதுணை' என்கிற வரிகளும் சேர்ந்து ஓடியபடி இருந்தன! அந்த வரிகளைத் தொடர்ந்து 'மாயவனின் ஆட்களில் ஒருவரைக் கொண்டே மாயவனை கொலை செய்ய சதித்திட்டம்' என்கிற வரிகளும் ஓடியதில் ஊரே அதிர்ந்து போயிருந்தது.

குறிப்பாக சப்-இன்ஸ்பெக்டர் இளங்கோ முகம் இருண்டு போய் விட்டிருந்தது. எதிரில் பாண்டியமாணிக்கம்.

'எலே எளவெடுத்தவனே... என்னா இதெல்லாம்?''

''எனக்கே ஒண்ணும் புரியலய்யா...''

''இந்த என்ன நம்பச் சொல்றியா?''

''அய்யா நிறைய பத்திரிகைகாரங்களும், டி.வி.க்காரங் களும் சுத்திச் சுத்தி வர்றாங்க. ஒரு யூகத்துல பரபரப்புக்காக சொல்லியிருக்கலாம்யா.''

''இத்தயும் என்ன நம்பச் சொல்றியா? நீ என்கிட்ட சொன்னதும் அஞ்சுகோடி டி.வி.லயும் அதான் ஓடிக் கிட்டிருக்குது. நீ என்கிட்ட மஞ்சப்புதூர் வல்லாளனுங்கதான் அவுகன்னு சொன்னியேய்யா?''

''அய்யா பேச்சு படியாம எதையும் சொல்லிடாதீங்கன்னு அவுகதான்யா சொன்னாங்க.''

''அப்ப நீ தரகு வேலை பாத்துருக்கே அப்படித்தானே.''

''அய்யா...''

''என்ன அய்யாங் கொய்யா... நீ ஒரு வீணாப் போனவன்யா. ஒரு எழவுக்கும் லாயக்கில்லாத ஆள் நீ இருக்கைலயே அந்த மாயவன் வூடு பூந்து என் நாகரத்னத்தை கொண்டுக்கிட்டு போனான். எப்படின்னு இந்த நிமிசம் வரை உன்னாலயும் உன் போலீஸ் கூட்டத்தாலயும் கண்டு புடிக்க முடியல. இதுல வெக்கமில்லாம மஞ்சப்புத்தூர்காரங்ககிட்ட பேசினியாக்கும்!

அந்த நாயுங்களுக்கு நான் எதுக்குய்யா பணம் தரணும்? அவனுங்கதான் அந்த மாயவனை போட்டுத்தள்ள காலகாலமா அலைஞ்சுகிட்டு கிடக்கறாங்கள்ல...?

சும்மா அலையாதீங்க... அஞ்சு கோடிய நான் வாங்கித் தரேன். அந்த தெம்போட அலையுங்கன்னு நீதான் அவுககிட்ட பேசியிருக்கணும்.

ஆமா இந்த அஞ்சு கோடில உன் கமிஷன் எவ்வளவு?''

''அய்யா சத்தியமா அதெல்லாம் எதுவுமில்லையா?''



''சும்மா நிறுத்து... என்னமோ மானரோசமுள்ள போலீஸ்காரன் மாதிரி பேசறே. நீ என்கிட்ட வாங்கித் தின்னது உனக்கு போதலியா?''

பாண்டியமாணிக்கம் நெருப்பு உலை போல கொதிப்பதும், அதில் தெரிக்கும் கேள்விகளும் இளங்கோவை கீறி ரணகாயப் படுத்தியது. முதல் தடவையாக ஒரு உண்மையான போலீஸ் அதிகாரியாக இல்லாமல் போனதன் விளைவாக ஒரு மலிவான அரசியல்வாதியான தன் காலடியில் ஒருவனை தூக்கிப் போட்டு மிதிப்பது போல மிதிப்பதும் புரிந்தது. அப்போது அந்த பங்களாவினுள் ஜூலியும் நுழைந்து கொண்டிருந்தாள். ஆனால் அவளை பெரிதாய் யாருக்கும் அடையாளம் தெரிய வில்லை.ஒருசிலர் மட்டும் தெரிந்து கொண்டனர்.

''அங்க்கிள்... அங்க்கிள்...''

''அய்யா நம்ம மகளோட சினேகிதக்காரப் பொண்ணுங்க...''

''யாருய்யா அது?''

''அய்யா நம்ம சின்னம்மாவோட சேர்ந்து மாயவன் கடத்துன பொண்ணுங்க.''

''தாயி நீ தானா அது... எப்படிம்மா வந்தே? எங்க என்மக?''

பாண்டியமாணிக்கமும் பதிலுக்கு பாசத்துடிப்பை காட்டினார்.

''அங்க்கிள் அந்த மாயவன் என்னை மட்டும் போன்னு சொல்லி அனுப்பிட்டான். ஆனா செண்பகத்தை அனுப்பல...?''

''எப்படிம்மா இருக்கா என் மவ?''

''அதை ஏன் கேக்கறீங்க... பாவம் செண்பகம் எப்படியாவது தப்பிக்கணும்னு இரண்டு பேரும் ரொம்பவே கஷ்டப்பட்டோம். அதுக்காக செம்பா காலைக்கூட உடைச்சிகிட்டா. ஆனாலும் பிரயோஜனமில்லை.''

''என்னம்மா சொல்றே...! என் மவ காலை உடைச்சி கிட்டாளா!''

''ஆமாம் அங்கிள்... நீங்க அவங்க கோரிக்கையை நிறைவேத்தற வரை நிச்சயம் செண்பகம் வரமாட்டா. அதே சமயம் இன்னும் ஒரு பத்து நாள் அங்க இருந்தா அவ மலைக் கொசுங்க கடிச்சே செத்துப் போயிடுவா... ப்ளீஸ் அங்க்கிள் ஏதாவது வேகமா செய்யுங்க.''

- ஜூலி கண்ணீர் விட்டு அழுதாள்.

''ஏ பாழாப்போன சப்-இன்ஸ்பெக்டரு. இந்தப் பொண்ணு சொல்றத கேட்டியா?''

- பாண்டியமாணிக்கம் இளங்கோவை இழுத்தார்.

''அய்யா...?''

''என்ன அய்யா... இத்த பிடி! இது அவன்கிட்ட இருந்து வந்துருக்குது எப்படி வந்துச்சு எந்த பாதை வழியா வந்துச்சன்னுல்லாம் கேக்க மாட்டியா... நான் சொல்லித் தரணுமா?''

''கேக்கறேன்யா... கேக்கறேன்... இந்தாம்மா என்கூட வா...'' இளங்கோ தாட்டியமாக பேசி ஜூலியுடன் ஒரு தனியறைக்குள் நுழைந்தார்.

அதற்குள் செய்தி பரவி சில பத்திரிகைக்காரர்கள் கேமராவும் கையுமாக வந்துவிட பாண்டியமாணிக்கத்துக்கு நிறையவே நெருடியது.

இவர்கள் ஜூலி முன் மைக்கை நீட்டி கேள்வியாய் கேட்டால் இந்த பெண்ணும் மாயவனின் கோரிக்கைகளை சொல்ல ஆரம்பித்து விடுவாள்.

இந்த நிமிடம் அந்த கோரிக்கை விவரம் இளங்கோவுக்கும் பாண்டியமாணிக்கத்துக்கும் மட்டும்தான் தெரியும். எனவே அவர்கள் ஜூலியை பார்த்து விடக்கூடாது என்கிற முடிவுக்கு வந்தவர்.

''தயவு செய்து எல்லாரும் போங்க'' என்றார்.

''உங்க மகளோட கடத்தப்பட்ட பொண்ணு திரும்ப வந்துட்டாங்களாமே அவங்ககிட்ட மாயவன் கண்டிப்பா ஏதாவது சொல்லு விட்டிருக்கணும். அது என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''அதை எல்லாம் உங்ககிட்ட இப்ப சொல்ல முடியாது. உள்ள போலீஸ் விசாரணை நடந்துகிட்டு இருக்கு. அப்புறமா உங்களுக்கு போலீஸ் அதிகாரி தகவல தருவாரு...''

- பாண்டியமாணிக்கம் அலட்சியமாக பேசும்போது அங்கே பத்மினி காமிராமேன் சரவணனும் வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் நோக்கமே ஜூலியை வளைத்து மற்ற எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்வதுதான்!



# 39

பத்மினி தவித்தபடி இருந்தாள். அதை பாண்டிய மாணிக்கமும் தூர இருந்தபடியே கவனித்தார். தனது வேலைக் காரர்களில் ஒருவனை அருகில் அழைத்தார்.

''அய்யா...''

''அதோ அந்த ஜீன்ஸ்பேண்ட் போட்ட பொண்ணுதான் டி.வி. ரிப்போர்ட்டரா?''

''அப்படிதான்யா தெரியுது... இங்கையே சுத்திச் சுத்தி வருது. யார் என்ன பேசினாலும் மைக்கை முன்னால நீட்டி பதிவு பண்ணிக்குது. அப்புறம் பார்த்தா அப்படியே டி.வி.யில வந்துடுது.

''அதை போய் என்கிட்ட கூட்டிகிட்டு வா...'' அவரது கட்டளை வேலை செய்தது. பத்மினி பாஸ்கர் அடுத்த நிமிடம் அவர் முன் நின்றாள்.

அதே சமயம் பார்வை ஜூலி சென்ற அறைக் கதவின் பக்கமே சென்றது.

''ஏம்மா எதுக்கு இப்படி இங்கையே சுத்திச் சுத்தி வர்றே. உனக்கு என்ன வேணும்?''

''என்ன சார் இது. கேள்வி? உங்க டாட்டர் கடத்தப்பட்டிருக்காங்க. கூட மாயவனால கடத்தப்பட்ட ஒரு பெண் திரும்பி வந்திருக்கா - அவங்கள கொஞ்சம் இண்டர்வியூ பண்ணணும் சார்.''

''அதை போலீஸ் பண்ணிகிட்டிருக்கு. இப்படி எல்லாத்தை யும் முணுக்கு முணுக்குன்னு படம் புடிச்சி டிவில போட்டா எப்படிம்மா?''

''அதானே சார் எங்க ட்யூட்டி?''

''என்னம்மா ட்யூட்டி... உங்க டி.ஆர்.பி. ரேட்டிங்குக்காக நான் ஒண்ணுக்கு இருக்கப் போனா அதையும் கூட எடுத்துப் போடுவியா?'' - அவள் உடனே முகம் சுளித்தாள்.

''சார் கொஞ்சம் டீசன்டா பேசினா நல்லா இருக்கும்'' என்றாள்.

''சரி இப்ப உனக்கு என்னதாம்மா தெரியணும்?''

''போலீசால் மாயவனை பிடிக்க முடியலேன்னு தெரிஞ்சு போச்சு. அஞ்சு கோடிக்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டரே உங்ககிட்ட மாயவனை கொல்ல பேரம் பேசியிருக்காரு.''

''அதெல்லாம் வதந்திம்மா... நீ அதை எல்லாம் நம்பாதே.''

''சார்... நான் என் காதால கேட்டேன். அந்த சப்-இன்ஸ்பெக்டர் உங்ககிட்ட பேசினதையும் பார்த்தேன். ஒரு முரட்டு மனிதர்கிட்ட பேசினதையும் கேட்டேன்.''

''நான்தான் ஒத்துக்கலையே... இந்த மாதிரி சட்ட விரோத செயல்களை நான் ஊக்கப்படுத்தறதே இல்லைம்மா...''

''அப்ப எப்படித்தான் மாயவனை பிடிக்கப் போறீங்க. உங்க மகளையும் மீட்க வேண்டாமா?''

''அதுக்கு என்னம்மா பண்றது. முள்மேல சேலை விழுந்துட்டா பாத்து பக்குவமாத்தானே எடுத்தாகணும்?''

''மாயவன் இதை எல்லாம் காரணமா தானே செய்திருப்பார்?''

''அவனுக்கு என்னம்மா மரியாதை களவாணிப்பய! செய்திருப்பாராம்ல... செய்திருப்பான்...''

''சரி சார். அவன் கோரிக்கை என்ன?''

''அவன் கோரிக்கை பணம்தான்! வேற என்ன?''

''அதை அவன் உங்களுக்கு போன் பண்ணி சொன்னானா இல்ல வேற எப்படி தகவல் வந்தது?''

''இதை எல்லாம் நான் விபரமா பேசமுடியாது. எல்லாத்தையுமாம்மா சொல்ல முடியும்?''

- என்று கேட்டபடியே எழுந்து இளங்கோ ஜூலியை விசாரித்தபடி இருக்கும் அறை நோக்கி நடந்தார். அறைக் கதவை தட்டவும்... அது பாதியாக திறந்தது. பாண்டிய மாணிக்கம் உள்நுழையவும் மூடிக் கொண்டது. உள்ளே நுழைந்த வேகத்தில் இளங்கோவிடம் பொரிய ஆரம்பித்தார்.

''யோவ் இளங்கோ... போய் முதல்ல இந்த வீட்ல இருக்கற அவ்வளவு பத்திரிகை டி.வி.காரர்களையும் முதல்ல வெளியேத்து. இனி அந்த மாயவன் சம்மந்தப்பட்ட விஷயம் எதுவா இருந்தாலும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொல்லிடு. என் வீட்டுப் பக்கம் ஒருத்தர் தலைகூட தெரியக்கூடாது.''

''சரிய்யா... ஆனா நாம துரத்தறதையும் சேர்த்து படம் பிடிச்சு போடுவாங்க.''

''இது அராஜகம்யா... டி.வி.ன்னா என்ன கொம்பாய்யா. அந்தக் காலத்துலயும் தான் எவ்வளவோ நடந்துச்சு. இப்படியா சுத்தி வளைச்சாங்க மீடியாக்காரங்க?''



''இப்ப டி.வி.காரங்களுக்குள்ளேயே போட்டிய்யா...''

''பேசுனது போதும் போய் முதல்ல அம்புட்டு பேரையும் துரத்து. கோர்ட்டுல வக்கிலும் நீதிபதியும் கூட அம்புட்டு கேள்வி கேட்கமாட்டாங்க. ஒரு பொட்டச்சி என்னா கேள்வி கேக்கறா?''

- இளங்கோ உடனேயே விலகினார். பாண்டிய மாணிக்கம் பார்வை அடுத்து ஜூலிமேல்தான் சென்றது. அவர் பார்க்கவும் அவளும் புலம்ப ஆரம்பித்தாள்.

''அங்கிள் நான் கீழ வந்த உடனே நேரா இங்க வந்துட்டேன்... என் வீட்டுக்கு கூட தகவல் தரலை. உங்ககிட்ட போன் இருந்தா கொடுங்க. நான் என் வீட்டுக்கு பேசறேன்.''

''அதுக்கென்னம்மா... ஆமா அந்த திருடன் வேற என்னம்மா சொன்னான்...''

''அவனுக்கு ஒரே கோரிக்கைதான் அங்கிள். நீங்க அரசியல விட்டு விலகணும். அதனால எம்.எல்.ஏ. போஸ்ட்டை ரிசைன் பண்ணனும்.''

''இவன் யாரும்மா என்னை அரசியல் விட்டு போகச் சொல்ல?''

''அது எனக்கு தெரியாது. அவன் சொன்னதை சொல்லிட்டேன்.''

''இதை நீ என்கிட்டயும் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கிட்டயும் தானே சொன்னே?''

''ஆமாம்... ஏன் அங்க்கிள்?''

''வேற யார்கிட்டயும் சொல்லலியே?''

''இல்ல...''

''சரிம்மா. நீ இங்கேயே இரு. வந்துடறேன்.''

''அங்கிள் போன்...''

''இரும்மா தரச் சொல்றேன்...''

- பாண்டியமாணிக்கம் அறைக் கதவை திறந்து கொண்டு வெளியே வந்தார். இளங்கோவும் எல்லோரையும் வெளியே மெயின்கேட்டுக்கு அப்பால் அனுப்பி விட்டு வந்திருந்தார்.

''அய்யா என் பேச்ச கேட்க மாட்டேங்கறாங்க. அந்த பொண்ணு ஜூலிய பேசச்சொல்றாங்க...''

''அதெல்லாம் பேச முடியாதுன்னு சொல்லு... இவகிட்ட என்ன பேசணுமாம்...''

''மாயவன் கோரிக்கை என்ன... அதான்யா?''

''பணம்... பணம்தான் என்னை அரசியல விட்டு விலகச் சொல்ற விஷயம் வெளிய தெரியக்கூடாது. தெரிஞ்சா எதிர்கட்சிகாரங்கள்ல இருந்து எல்லாரும் பிரச்னையை ஊதி பெருசாக்கப் பார்ப்பாங்க.''

''நான் சொல்லமாட்டேன்யா... ஆனா அந்த பொண்ணை வெளிய விட்டா அது சொல்லிடும்...''

''அது இப்பவே தன் வீட்டோட... பேசணும்னு துடிக்குது. இப்ப என்ன செய்யலாம்?''

''மாயவன் இந்த பொண்ணை அனுப்புனதே அவன் கோரிக்கை ஊர்பூரா தெரியணும்னுதான். நான் அதுகிட்ட பேசி மலைல அவன் இருக்கற இடம் அவங்ககிட்ட இருக்கற ஆயுத பலம் பத்தி எல்லாம் தெரிஞ்சுகிட்டேன்.''

''அப்ப உடனே உன்கூட்டத்தை அனுப்ப வேண்டியதுதானே?''

''அவன் இப்ப அந்த இடத்துல இருக்கமாட்டானாம். இடத்தை காலி பண்ணியிருப்பான்னு இந்தப் பொண்ணு சொல்லுச்சு சார். அந்த கோசலையும் பருத்தியும் இப்ப அவன் கூடதான் இருக்காங்க.''

''சரிய்யா... விவகாரம் ரப்பரா இழுத்துட்டே போவுது. இந்த டி.விக்காரப் பொண்ணு வேற அவனை பெரிய ஹீரோவா காட்டி என்மேலதான் தப்பு இருக்கற மாதிரி நினைக்க வைக்குது. இதை எல்லாம் உடனே மாத்தியாகணும்.''

''அவனை போட்டுத் தள்ளுனாதான் எல்லா பிரச்சினையும் தீரும். இல்லாட்டி பெருசாகிகிட்டேதான் போகும். இவங்கல்லாம் அவனைப் பத்தி கேள்விப்பட்டற தெல்லாம் பெரிய தப்பு... அவன் ஒரு கொலைகாரன்னு ஊருக்கு தெரிஞ்சாகணும்.

''அப்ப ஒண்ணு பண்ணு...'' - பாண்டிய மாணிக்கத்துக்குள் குரூரமாக ஒரு எண்ணம் ஓடி முடிந்தது.

''என்னய்யா...?''

- அவரும் கூறினார். அதைக் கேட்ட இளங்கோவுக்கு 'கிர்ர்' என்று தலையைச் சுற்றியது.

''என்னய்யா? என்ன யோசிக்கறே?''

''இது ரொம்ப ரிஸ்க் சார்... இந்தப் பொண்ணு நல்லவிதமா நடந்து வந்ததை பத்திரிகைக்காரங்களும் பாத்துருக்காங்க.''



''நான் சொன்ன மாதிரி செய். இப்ப எனக்கும் வேறு வழி இல்லை.''

''இங்க இப்ப சமாளிச்சிடலாம். அங்க மாயவனுக்கு இது தெரியும் போது ரணகளமாகிடும்யா?''

''ஒண்ணும் ஆகாது. வல்லாளனுங்கள கூப்பிடு மூணு கோடி தரேன். மாயவன் தலையை வெட்டி ஒரு கூடைல போட்டு எடுத்துகிட்டு வந்து என்கிட்ட காட்டிட்டு காசை வாங்கிட்டு போகச் சொல்லு.''

''இப்ப போய் சொன்னா கேப்பாங்களான்னு சந்தேகம்யா?''

''ஓ... டிவில இந்த மேட்டர் வந்துட்டதாலயா?''

''ஆமாம்...''

''நீ போய் சொல்லிப்பார். நிச்சயம் கேட்பாங்க. இவன் தொல்லை ஒழிஞ்சு போகட்டுன்னு மூணு கோடி தரேன். அதே சமயம் இன்னொரு கண்டிஷனும் முக்கியம்.''

''என்னய்யா?''

''என் நாகமாணிக்கமும் எனக்கு திரும்ப கிடைக்கணும்?''

''அய்யா அது எப்படிய்யா?''

''அவனை போட்டுத் தள்ளிட்டு என் சொத்தை எடுத்துகிட்டு வந்து தரதுக்கு கசக்குதா?''

''சரிய்யா இப்பவே பேசறேன்...''

''வல்லாளனுங்கள என்கிட்ட பேசச் சொல்லு. நீ போய் இந்த பொண்ணை நான் சொன்ன மாதிரி கவனி...''

''சரிய்யா...''

''காரியம் கச்சிதமா நடக்கணும் எதுவும் பிசகி துளியும் வெளிய தெரியக்கூடாது.''

''சர்ய்யா...''

''இதை நீ சரியா முடி... இல்ல நடக்கறதே வேற!''

வெளியே பார்த்தபடியே இருந்தது மீடியா.

பத்மினிக்கு மட்டும் பெரிதாக ஏதோ சதித்திட்டம் நடப்பது போல் ஒரு சரியான யூகம்.

கேமராமேன் சரவணனிடம் கூடக் கூறினாள்.

''சரவணா... அந்த பொண்ணை நம்மகிட்ட காட்டவே மாட்டேங்கறாங்க. டாப்லெவலில் போலீஸ் ஆபீசர்களும் யாரும்

வந்து என்கொயரி பண்ணல... இந்த ஜால்ரா இன்ஸ்பெக்டர்தான்
ஏதோ போறான் வரான் சம்திங் ராங்'' என்றாள்.

ஒரு பதினைந்து நிமிட இடைவெளியில் இளங்கோ திரும்பி
பங்களாவினுள் நுழைந்தபோது பேண்ட் பாக்கெட்டில்
இன்ஜெக்ஷன் சிரிஞ்சும் கூடவே மெல்ல உடம்பில் பரவி உயிரை
வாங்கும் ஒரு புதிய விஷ மருந்தும் இருந்தது.

பாவம் ஜூலி!

## 40

**பா**ண்டியமாணிக்கம் எதிரில் இளங்கோ!

முகத்தில் காரியத்தை கச்சிதமாக முடிக்கப் போகிறேன்
என்னும் பாவனை.

''என்னய்யா மேட்டர் ரெடியா?''

''ரெடிங்கய்யா... பாய்சன், இன்ஜெக்ஷன் பாக்கெட்ல
இருக்கு. வைட்டமின் ஊசின்னு சொல்லி போட்டுடறேன். பத்து
நிமிசத்துல செத்துரும்...''

''பாத்துய்யா... இனி நீ செய்யப்போற எந்த விஷயமும் பிசிறு
தட்டி பிரச்னை வந்துடக்கூடாது.''

''வராதுய்யா... அதே சமயம் இந்த மாயவன் பிரச்சனை
அடங்கவும் நானும் எழுதிக் கொடுத்துட்டு ஏதாவது தொழில்
பண்ணலாம்னு பாக்கறேன். அதுக்கு நீங்கதான் உதவி
செய்யணும்?''

''உதவின்னு மொட்டையா கேட்டா என்னய்யா அர்த்தம்.''

''அய்யா நான் வளவளன்னு பேச விரும்பலை. இந்த போலீஸ்
பொழப்பும் பிடிக்கலை. நீங்களே என்னை தப்புத் தப்பா
பேசிட்டீங்க. ஆகையால...''

''ஆகையால...'' ஒரு 50 லட்சம் தந்துடுங்க.

''என்னது 50 லட்சமா?'' வாயை பிளந்தார் பாண்டி
யமாணிக்கம்.

''சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்கய்யா... உங்ககிட்ட
எவ்வளவு பணம் கறுப்பா இருக்கு எவ்வளவு வெள்ளையா
இருக்குன்னு எனக்கும் தெரியும். அதுக்கு முன்னால ஐம்பது
லட்சம்கறது பிஸ்கோத்துய்யா.''



-இளங்கோவிடம் தென்பட்ட தீர்க்கம் பாண்டிய
மாணிக்கத்தை மிரள விட்டது.

''அப்ப போலீசுல பெரிய அதிகாரியாகற ஆசை யெல்லாம்
என்னாச்சு?''

''அதெல்லாம் மனசுக்குள்ள கருகிப் போயிடிச்சுய்யா...
எவ்வளவு மேல போனாலும் உங்கள மாதிரி அஞ்சாங்கிளாஸ் கூட
படிக்காதவங்க மந்திரியா வரும்போது அங்க அடங்கித்தானே போக
வேண்டியிருக்குது?''

- இளங்கோ பேச்சோடு பேச்சா வைத்த பஞ்ச்
பாண்டியமாணிக்கத்தை எரித்தது.

''என்னவே... நேரம் பாத்து நீயும் கோல் போட்டுக்க.
பாக்குறியோ?''

''ஆமாங்கய்யா... அதுல தப்பு என்ன இருக்குது? சீக்கிரமா
சொல்லுங்கய்யா... வெளிய அந்த டி.விக்கார குட்டி வேற ரேஸ்
குதிரை கணக்கா தாயாரா இருக்கா. நான் மட்டும் அவகிட்ட போய்
வாயைத் திறந்தா உங்க கதை என்னாகும்னு யோசிச்சிக்குங்க?''

''எலேய்ய்...'' பாண்டியமாணிக்கம் ஒரு எகிறு எகிறினார்.

''கத்தாதீங்கய்யா... புழுவைக்கூட சும்மா... சும்மா
கொட்டுனா அது ஒரு வட்டம் புலியா மாறி சீறும்கறது உங்களுக்கு
தெரியாதா என்ன?''

- இளங்கோ துளிகூட அலட்டிக் கொள்ளாமல் பேசியது
பாண்டியமாணிக்கத்தை உதறல் கொள்ள வைத்தது.

தூர இருந்து கவனித்தபடி இருந்த பத்மினிக்கு பலவித
பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன!

''சரவணா... உள்ள ஏதோ கசமுசா... இப்பவே நியூஸ்
எடிட்டருக்கு நான் சொல்றத மெயில் பண்ணுங்க?''

- 'மாயவன் கடத்திச் சென்ற பெண்களில் ஒருவர் விடுதலை.
தப்பி வந்த பெண்ணிடம் லோக்கல் போலீஸ் இன்ஸ்பெக்டர்
ரகசிய விசாரணை. மேலதிகாரிகளுக்கு தகவல் இல்லை?' -
இதான் மேட்டர்? இந்த மேட்டர் இன்னும் 15 நிமிஷத்துல ஸ்க்ரோல்
ஆகணும்னும் சொல்லிடுங்க...'' என்று சொல்லிவிட்டு அந்த
பங்களாவை சுற்றி வரத் தயாரானாள்.

''எங்க மேடம் போறீங்க.''

''அந்த பொண்ணு இருக்கற ரூம் பக்கம் போய் அந்த
பொண்ணை பார்க்க முடியுமான்னு பாக்கறேன்.''

''ரொம்ப ரிஸ்க் மேடம்...''

ரிஸ்க்தான் இந்த ட்யூட்டியோட டேஸ்ட்டே... ரிஸ்க் எடுத்தாத்தான் நம்ம கேரியர்லயும் முன்னேற முடியும். மீடியாங்கற நம்பளை எல்லாம் வெச்சுகிட்டே அவங்க எவ்வளவு ரிஸ்க் எடுக்கறாங்கன்னு பார்க்கறோம்தானே?''

- பத்மினி பதிலோடு பதிலாக பங்களாவின் பின் பக்கத்தை அடைந்தாள். அங்கிருந்து மதில் சுவர்மேல் ஏறிக் குதிக்கவும் தயார் ஆனாள். ஆனால் கேமராவை சுமந்து கொண்டு சுவர் ஏறிக் குதிக்க முடியாதபடி அதன் உயரம் தடுக்கவும் கேமராமேன் சரவணன் தயங்கி நிற்க பத்மினி ராணுவப் பயிற்சி எடுத்தவள் போல் தாவி ஏறினாள். கீழே திரும்பிப் பார்த்து சரவணனை ஏறச் சொல்ல சரவணன் மறுத்தான்.

''முடியாது மேடம்... மூணே கால் லட்ச ரூபாய் கேமரா ஒண்ணுமில்லாம போயிடும்'' - என்றான். தலையில் அடித்துக் கொண்டு அவள் மட்டும் அந்த பக்கமாக கீழே குதித்தாள்!

உள்ளே பாண்டியமாணிக்கம் ஒரு முடிவுக்கு வந்திருந்தார்.

''எலேய் இளங்கோ! நீ பெரிய காரியக்காரன்டா. என்னை சரியான நேரத்துல மடக்கிட்டே...''

''உண்மைதான்யா... பணம்தர சம்மதிச்சா போதாது. அதை இப்பவே தரணும்.''

''அடுத்து நீ இதைத்தான் கேட்பேன்னும் தெரியும். நான் உன்னைப் போல எவ்வளவு பேரை பாத்துருப்பேன். அதான் உள்ற போய்ட்டு வந்தேன். இனி உனக்கும் எனக்கும் நடுவுல வியாபாரப் பேச்சு மட்டும்தான். இந்த அம்பது லட்சம் நீ அவனை கொல்றதுக்கு மட்டுமில்ல... மலைக்கு மேல் உக்காந்துட்டு அங்க இருந்துகிட்டே இங்க என்னை ஆட்டி வைக்கறான் பாரு கிரகம் பிடிக்க மாயவன். அவனைப் போட்டுத் தள்றதுக்கும் சேர்த்துதான்...''

''இப்பவே நம்பர் போட்டு தரேன் வல்லாளனுங்க கூட பேசுங்கய்யா அதான் மூணுக்கோடி தர சம்மதிச்சிட்டீங் களே?'' - இளங்கோ உற்சாகமாகி போன் நம்பரை போடவும் மறுபுறம் வல்லாளர்களில் ஒருவனான சிங்கத்தேவன் என்பவன் லைனில் வந்தான்.

''சொல்லுங்க எம்.எல்.ஏ.?''

''என்னய்யா எகத்தாளமாப் பேசறே?''

''நீங்க எகத்தாளமா தானே இப்பவும் இருக்கீங்க.''



''சரி... சரி... மூணு ரூவான்னு நான் இளங்கோகிட்ட பேசிட்டேன. எனக்கு மாயவன் தலை வேணும். அதோட... வந்து அதே பைல மூணு கோடிய அள்ளி போட்டுகிட்டு போங்க...''

''எதுக்கு ரூவா நோட்டு அம்புட்டும் ரத்தமா மாறி உருப்படாம போறதுக்கா...''

''திரும்ப எகத்தாளமா?''

''சும்மா சொன்னேன்யா... இப்பவாச்சும் வழிக்கு வந்தீங்களே...?''

''ஏன்யா... அவன் உங்களுக்குதான் எதிரி. ஆனா போட்டுத்தள்ள நான் காசு தரணுமா?''

''உங்க மவ தானே மாட்டிகிட்டிருக்கா... எங்க ஊட்டு புள்ளைகள நாங்க வீட்டோட அடக்க ஒடுக்கமால்ல வளர்த்துகிட்டு வரோம்.''

''போதும் சிங்கத்தேவா... நாக்கு இருக்குன்னு கண்டபடி பேசாதே. இந்தப் பேச்சையும் வீராப்பையும் காரியத்துல காட்டு...''

''மூணு கோடியாச்சே... உடுவோமா?''

''ஆமா டி.வில வந்து விஷயம் உடைஞ்சி போச்சே. மாயவன் சுதாரிச்சிருந்தா என்ன செய்வே?''

''அய்யா நாங்க தண்ணியிலயே வெண்ணெய் எடுக்கறவங்க எங்க கிட்டயேவா?''

''கித்தாப்பா பேசறதல்லாம் சரி. என் கேள்விக்கு பதிலைச் சொல். மாயவன் இப்ப அந்த இடத்தை விட்டே போயிருந்தா?''

''போயிருந்தா இன்னேரம் எனக்கு தகவல் வந்துருக்கும். மலையை சுத்தி கரடி வேஷத்துல என் ஆளுங்க சுத்திகிட்டிருக் காங்கல்ல.''

''கரடி வேஷத்துலயா?''

''ஆமா... வேற எந்த வடிவத்துல போனாலும் இந்த பறவைக் கூட்டம் சளம்பி அவனை எழுப்பி உடறுதுங்க. ஆனா கரடியா போனா காட்டிலாகா ஆளுங்ககூட ஏமாந்து போகணும்ல?''

''நீ சொல்றத கேக்க நல்லா இருக்கு. அப்ப ஜோலி எப்ப முடியும்?''

''இப்ப இருந்து எண்ணிக்குங்க 24 மணி நேரத்துல தலையோட வர்றேன்...''

- சிங்கத்தேவன் சொல்லி முடிக்க இளங்கோவும் விஷ ஊசியுடன் ஜூலி இருந்த அறைக்குள் நுழைய அவர்கள் பேச்சை ஜன்னலுக்கு அப்பால் முழுவதுமாய் கேட்டிருந்த பத்மினி முகத்தில் ஏராளமான அதிர்வலைகள்!

## 41

ஒளிந்திருந்தபடி பார்க்கும் பத்மினி பாண்டியமாணிக்கம் போனில் பேசிய பேச்சுக்களும். அதன் சாராம்சங்களும் பாதி புரிந்ததும் பாதி புரியாமலும் போன நிலையில் இளங்கோ ஜூலியை அடைத்துள்ள அறை நோக்கி சென்று கதவையும் தாழிட்டுக் கொண்டது பதைப்பை ஏற்படுத்தியது.

உள்ளே ஜூலியின் முன்னால் இளங்கோ!

‘‘என்ன சார் இது. போறீங்க வர்றீங்க! நான் என் ஃபேமிலிகூட பேசணும்னு அப்ப இருந்து செல்போன் கேட்கறேன். யாரும் தரமாட்டேங்கறீங்க. அப்புறம் நீங்க மட்டும் என்னை என்கொய்ரி பண்றதும் எனக்கு டவுட்டா இருக்கு சார்... உங்க டிபார்ட்மெண்டல ஹையர் அதாரிட்டீஸ் யாரும் இல்லையா?’’

- என்று உள்ளே ஜூலி கேட்பது பத்மினி காதுகளில் விழுந்தது.

‘‘எல்லாரும் வந்துகிட்டிருக்காங்கம்மா... பைதபை நீங்க அந்த மலைக் காட்டுல இருந்து தப்பிச்சு வந்துருக்கறதால உங்களுக்கு இன்ஃபெக்ஷன் ஆக சான்ஸஸ் இருக்கு. அதுக்காக உங்களுக்கு ஒரு தடுப்பூசி போடச்சொல்லி எங்க ஹையர் லெவல்ல உத்தரவு.’’

- என்றபடியே இளங்கோ இஞ்ஜெக்ஷன் சிரிஞ்சை எடுத்து பாய்சனையும் உறிஞ்சத் தயாரானார்.

ஜூலி ஒரு வினாடி அரண்டு போனாள்.

‘‘இன்ஃபெக்ஷனா... எனக்கா? என்ன சார். உளறல் இது. அப்படியே இருந்தாலும் டாக்டர் இல்ல வந்து போடணும். நீங்க போட்டா என்ன அர்த்தம்?’’

- ஜூலியின் கேள்வியை இளங்கோ அலட்சியமே செய்யாமல் சிரிஞ்ஜ்சிக்குள் மருந்தை நிரப்பிக் கொண்டு ஜூலிக்கு ஊசியை போட அவனை நெருங்கவும் அவளிடம் படபடப்பு கூடிப் போனது.



‘‘சார்... எனக்கு ஊசி எல்லாம் வேண்டாம். என்ன விட்றுங்க சார்?’’

‘‘நோ... நோ... இது என்னோட ட்யூட்டி.’’

‘‘இல்ல... சம்திங்க ராங். நீங்க வேற ஏதோ திட்டம் போடறீங்க.’’

‘‘பேச நேரமில்லை... கொஞ்சம் வாய மூடிகிட்டு சும்மா இருக்கியா?’’ என்றபடியே அவள் கையை பற்றி இழுத்து சிரிஞ்சைச் செருக இளங்கோ முயல்வதும் ஜூலி திமிறி அதை தடுக்க முற்படுவதும் வெளியே பத்மினி வரையில் சப்தங்களாக மட்டுமே காதில் விழுந்தன.

அதுவும் சில நொடிகள்தான்.

அதன்பின் சப்தம் அடங்கிவிட்டது.

அதே சமயம் பத்மினி ஒட்டுக்கேட்டபடி நிற்கும் அந்த பக்கமாய் பாண்டியமாணிக்கத்தின் வீட்டு வேலைக்காரன் ஒருவன் வந்திருந்தான். பத்மினியைப் பார்க்கவும் கத்தினான்.

‘‘ஏய் யாரு அங்க?’’

- குரல் கேட்டு பத்மினியும் சுதாரித்து அங்கிருந்து விலகத் தொடங்கினாள். இனி அங்கிருப்பது ஆபத்து என்பதை உணர்ந்து கொண்டு அவனைச் சமாளித்து தப்பிக்கப் பார்த்தாள். ஆனால் அதற்குள் ஒருவருக்கு நாலுபேர் வந்து விட்டனர்! பத்மினிக்கு இனி வாய்தான் ஆயுதம் என்பதும் புரிந்து விட்டது.

பாண்டியமாணிக்கத்தின் எதிரில் பத்மினி ஒரு கைதியை போல கொண்டு சென்று நிறுத்தினர்.

இளங்கோவும் வேலையை முடித்துவிட்டு வெளியே வந்திருந்தார். பத்மினியை பார்க்கவும் சுருக்கென்றது.

‘‘ஐயா இவ...’’

‘‘உள்ளார பூந்து நடக்கறத எல்லாம் ஒட்டு கேட்டுக் கிட்டிருந்துருக்கா...’’

‘‘என்னய்யா இது... எப்படிய்யா உள்ற வந்தா?’’

‘‘அத்த நீயே கேளு... ஆமா அந்த குட்டி விசயம் என்ன ஆச்சு?’’

‘‘முடிஞ்சிருச்சிய்யா?’’

‘‘இவளும் நம்மளை முடிச்சிருவா போல தெரியுதே?’’

"ஏண்டி... இப்படி பர்மிஷன் இல்லாம வீட்டுக்குள்ள நுழையறதும் ஒட்டுக் கேட்கறதும் சட்டப்படி குற்றம்கறது உனக்கு தெரியாது?"

"சட்டத்தை பத்தி நீங்க பேசறீங்களா... உள்ற அந்த பொண்ணை என்ன பண்ணீங்க?"

"நான் உன்னைக் கேட்டா நீ என்னைக் கேக்கறியா?"

"யோவ் இளங்கோ... இதுகிட்ட என்னய்யா பேச்சு. இவ ஆரம்பத்துல இருந்தே சரியில்ல. இப்ப இவள வெளிய விட்டா நான் தலைல துண்டு போட்டுக்க வேண்டியதுதான்."

"என்னய்யா பண்ணச் சொல்றீங்க?"

"முதலில் இவளை கொண்டு போய் உள்ற கட்டிப் போடுங்க. இவகூட கேமராவும் கையுமா ஒருத்தன் சுத்தி வருவானே அவனையும் கூப்பிட்டு வந்து சேர்த்து கட்டிப் போடுங்க. இவங்கள என்ன பண்றதுன்னு நான் பொறவு சொல்றேன். வல்லாளன் சிங்கத்தேவன் 24 மணி நேரத்துல மாயவன் தலையோட வர்றதா சொல்லியிருக்கான். அது நடந்து முடியட்டும். பொறவு இவங்களப் பத்தி யோசிக்கலாம்..."

"ஐயா... இவங்க மீடியாகாரங்க இவங்கள காணோம்னா அதையே பெரிய விசயமா டிவில போட்டு பிரச்சனை பண்ண ஆரம்பிச்சிடுவாங்க..."

"காணாம போனாத்தானே? இங்க இருந்துகிட்டு நம்ப விருப்பத்துக்கு இவங்கள செய்தியை கொடுக்க வெச்சா?"

- பாண்டியமாணிக்கம் கேட்கவும் "நோ... இட்ஸ் இம்பாசிபிள்" என்று பலத்த குரலில் கத்தினாள் பத்மினி.

"என்னா இம்பாசிபிள்... நகக்கண்ல ஊசி ஏத்துனா தெரியும் சேதி. என் ஊருக்கு வந்து என் ஊட்டுக்குள்ள திருட்டுத்தனமாவும் நுழைஞ்சு என்னப் பத்தியே நீ தப்புதப்பா செய்தி போடுவே. நான் பட்டிமாடு மாதிரி பாத்துகிட்டு நிப்பேனா?"

"மிஸ்டர் எம்.எல்.ஏ... நீங்க தமிழ் தெலுங்கு ஹிந்தின்னு எல்லா சினிமாவுலயும் வர்ற மிகைப்படுத்தப் பட்ட அரசியல் வாதிகளை எல்லாம் அப்படியே ரெப்ரசன்ட் பண்றீங்க. எங்ககிட்ட விளையாடற ஒவ்வொரு நொடியும் உங்களுக்கு ஆபத்து..."

"வாய் மூட்றி நான் எங்கடி உன்கிட்ட விளையாட வந்தேன். நான் இப்ப என்ன நிலைல இருக்கேன்னு தெரியும் தானே? என்கிட்ட எதுக்குடி உனக்கு திருட்டு வேலை...?"



"நாகரீகமா பேசுங்க முதல்ல. உங்க நிலைக்கு நானும் பரிதாபப்பட்டேன். ஆனா இப்பதான் தெரியுது நீங்க எவ்வளவு பெரிய கிரிமினல்னு... நீங்க ஒரு பயங்கரமான செல்ஃபிஷ். மாயவன் ஒரு குற்றவாளியா இருந்தாலும் உங்க முன்னால ஒரு கிரேட்மேன்னுதான் நான் இப்ப நினைக்கறேன்..."

"இளங்கோ விட்டா இவ அவனை ஹீரோவாக்கி எனக்கு இவளே தண்டனை கொடுத்தாலும் கொடுத்துடுவா. முதல்ல இவள தூக்கிட்டு போய் உள்ற போடு. அப்படியே சூதானமா இவகூட வந்துருக்கற அந்த காமிராக்காரனை பிடிச்சு இழுத்துக்கிட்டுவா..."

"சந்தேகமேயில்லை... மாயவன் ஒரு ஹீரோதான். உங்க மகளை கடத்தினது உங்களுக்கு பாடம் கத்துக் கொடுக்கத்தான். எங்க டி.வி. இனி அவரை தப்பா புரொஜக்ட் பண்ணவே பண்ணாது..."

"டேய். அவ வாய்க்கு பிளாஸ்த்ரிய போடுங்கடா முதல்ல..."

- பாண்டியமாணிக்கத்தின் கட்டளை வெகு வேகமாக செயலானது. பத்மினியின் வாயில் பிளாஸ்திரி ஒட்டப்பட்டு அவள் கைகளும் கட்டப்பட்டன. ஒருவன் வெளியே போய் மிக பக்குவமாக பேசி கேமராமேன் சரவணனை தேடிப் பிடித்து "அம்மா உங்கள கூட்டிகிட்டு வரச் சொன்னாங்க" என்று அழைத்துச் சென்று அவன் வசம் உள்ள கேமராவையும் பிடுங்கிக் கொண்டான். பின் அவனையும் ஒரு அறைக்குள் தள்ளி கட்டிப் போட்டனர்.

ஜூலி உள்ளே கிட்டத்தட்ட அரைபிணமாக ஆகி விட்டிருந்தாள். அவள் உடம்பை தூக்கிக் கொண்டு லோக்கல் ஸ்டேஷன் போலீசார் ஜி.எச்சுக்கு புறப்பட்டனர். இளங்கோவும் புத்திசாலித்தனமாக பத்மினியின் செல்போனைப் பிடுங்கி அதில் அவளது செய்தி ஆசிரியருக்கு செய்தியை தன் விருப்பத்துக்கு அனுப்பத் தொடங்கினாள்.

"மாயவன் கை வரிசையில் கடத்தப்பட்ட இரு பெண்மணிகளில் பாண்டியமாணிக்கத்தின் மகள் செண்பகக் குழல்வாய்மொழியின் தோழி ஜூலி மரணம். விஷ ஊசி போட்டு ஜூலியை விடுவிப்பது போல மாயவன் நடிப்பு?" என்கிற செய்தி பத்மினியின் செல்போனில் இருந்த வேகமாக வெளியேறியது.

"அய்யா இப்போதைக்கு சமாளிச்சுட்டேங்க... ஆனா இவங்களை பிடிச்சதும் தேன்கூட்டுல கைய வெச்சதும் ஒண்ணுய்யா" என்ற இளங்கோவை பார்த்து சிரித்த பாண்டியமாணிக்கம்.

''ஏ போலீசு... இது எனக்கு தெரியாதாக்கும்? இவங்க ரெண்டு பேரையும் உன்கூட கூமாச்சி மலைக்கு கூட்டிகிட்டு போய் அங்க மலைல எங்கயாச்சும் வெச்சு சுட்டு தள்ளிடு. மாயவன் ஒளிஞ்சிருக்கிறத படம் எடுக்கப் போய் அவனால பலியானதாச் சொன்னா முடிஞ்சிச்சி கதை...''

''எல்லாம் சரிய்யா... மாயவன் கதை கச்சிதமா முடியணுமே?''

''சிங்கத்தேவன் கச்சிதமா முடிப்பான்... மூணு கோடில்ல?''

''என் விஷயத்த மறந்துடாதீங்க.''

''உனக்கு ஐம்பது லட்சமில்ல... ஒரு கோடி தரேன். இந்த இரண்டு குட்டிச்சாத்தனுங்கள போட்டுத்தள்ளிடு. எல்லாப் பழியும் சாவப்போற மாயவன் மேல விழுந்து நாம பத்ரமா கரை ஏறணும்.''

- இளங்கோவுக்கு பாண்டியமாணிக்கம் ஒரு கோடி என்றதும் ஒரு புது வேகம் பிறந்தது. அடுத்தடுத்த காரியங்களில் தீவிரம் காட்ட ஆரம்பித்தார். கச்சிதமாக ஜூலி வரும் வழியிலேயே இறந்து விட்டாள் என்று டாக்டர்கள் சொன்னதாக அவளைக் கொண்டு சென்ற போலீஸாரிடம் இருந்தும் தகவல் வந்து சேர்ந்தது. ஜூலி விஷயம் திட்டமிட்டது போலவே முடிந்து டிவியிலும் செய்தி பரவ ஆரம்பித்தது.

அது மாயவனைத்தான் பெரிய கொலைக்காரனாகவும் சித்தரித்து பாண்டியமாணிக்கமும் பத்திரிக்கை நிருபர்கள் முன்னால் அழுது கண்ணீர் வடித்து புலம்ப ஆரம்பித்தார்.

''அந்தப் பொண்ணு வந்த உடனேயே மயங்கிடிச்சு. நாங்களும் பயத்துலயும் பசித்தாகத்துலையும் மயங்கிட்டதாத் தான் நினைச்சோம். பிறகுதான் பாவிப்பய விஷ ஊசி போட்டு அனுப்பியிருக்கான்னே தெரிஞ்சது.

படுபாவி... என்மேல உள்ள கோபத்துல என் மகளைப் போட்டு தள்ளியிருந்தா கூட நான் கொஞ்சம் சமாதானம் ஆகியிருப்பேன். அநியாயமா இப்படி ஒரு பாவமும் அறியாத என் மவளோட சினேகிதியான ஒரு பொண்ணை கொன்னுட்டானே...''

என்று நன்றாகவே மூக்கைச் சிந்தினார். அதை பத்மினி கேமராமேனின் கேமராவிலேயே பதிவு செய்து அவர்கள் அனுப்புவது போலவே டிவிக்கும் அனுப்பி ஒரு உத்தம வேஷத்தை பாண்டியமாணிக்கம் கச்சிதமாக போட்டபடி இருந்தார்.



**கூ**மாச்சி மலை அடிவாரம்!

வேன் ஒன்று வந்து நின்றது. அதனுள் இருந்து கரடி வேடமிட்ட நான்கு பேர் இறங்கினர். அவர்களை பார்க்க அச்சு அசல் கரடியை போலவே இருந்தனர். கரடிகள் நான்கு கால்களில் எப்படி நடந்து செல்லுமோ அதே போல நடந்து காட்டுப் புதர்களுக்குள் புகுந்து கண்களை விட்டு மறைந்தும் போயினர்.

## 42

**அ**ந்த நான்கு கரடி மனிதர்களும் குறிப்பிட்ட தூரம் வரை வரிசையாக சென்று பின் பிரிந்து உச்சி நோக்கி ஏறத் தொடங்கினர். துளியும் பதட்டமில்லாமல் பக்குவமாக அந்த மலைக் காட்டுக்குள் மேலேற வேண்டும். சிறுத்தையோ இல்லை யானையோ தென்பட்டால் மிக கவனமாக நடந்து கொண்டாக வேண்டும்.

எந்த சூழ்நிலையிலும் துப்பாக்கியை பயன்படுத்தி விடக் கூடாது. சப்தம் மாயவனை உஷார்படுத்தி விடும். அங்கேயும் நான்கு பேர் இருப்பதால் அவர்களோடு நேருக்கு நேர் மோதி ஜெயிப்பது அசாத்தியம். கடாரன் எதிரியின் குரல் வளையை சிறுத்தை போல் கடித்து அப்படியே ரத்தத்தை உறிஞ்சி விடுவான். கடிப்பதற்கு துளிகூட யோசிக்க மாட்டான். அதற்கு ஏற்ப அவனுக்கு இரண்டு சிங்கப் பற்கள் இருப்பதும் வசதியாகப் போய்விட்டது. பெருமாள் குறி பார்த்து கட்டாரி எறிவதில் தேர்ந்தவன். குறிபிசகவே பிசகாது. உளியன் வாயில் மண்ணெண்ணையை சேமித்து வைத்துக் கொண்டு எதிரியோடு மோதும் போது அவர்கள் மேல் உமிழ்ந்து தீக்குச்சியை மின்னல் வேகத்தில் கொளுத்திப் போட்டு விடுவான்.

இதெல்லாமே வல்லாளர்களுக்கும் தெரியும்.

எனவே அவர்கள் வேறு மாதிரியான ஒரு திட்டத்தோடு தான் மேலேறிக் கொண்டிருந்தனர். மாயவனைச் சுற்றியுள்ள அந்த மூன்று பேர்களை தனித்தனியே வரவழைத்து கொல்வதுதான் அவர்களின் முதல்கட்ட தந்திரம்.

பிறகு நான்கு பேருமாக சேர்ந்து மாயவனை சுற்றி வளைத்து துப்பாக்கி, கட்டாரி என்று எல்லாவிதங்களிலும் அவனை கொல்வது என்பது திட்டம் கூடவே இருப்பவர்களில் செண்பகக் குழல்வாய்மொழியை தவிர பருத்தி, கோசலை என்று இருவரையும் கூடபோட்டுத் தள்ளுவதுதான் அவர்கள் முடிவு!

மேல்பரப்பில் ஐப்பசி அடைமழையின் தீவிரம்... ஆயிரக்கணக்கான அட்டைகள் அந்த சிறிய சமதளத்தில் ஊர்ந்தபடி இருந்தன. பாலிதீன் தாளை வெட்டி காலோடு சேர்த்துக் கட்டி தொடைவரை அந்த கட்டை மாயவனும் அவனது கூட்டாளிகளும் போட்டிருந்தனர். கோசலையும் போட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் செண்பகத்துக்கு கூச்சமாக இருந்தது! அவள் கட்டிக் கொள்ளவில்லை. பருத்தி ஒருகிழிந்த சாக்கை சுற்றிக் கொண்டிருந்தாள்.

ஒரு இடத்தில் கணப்பு போடப்பட்டு மெல்லிய தீ எரித்து கொண்டிருந்தது. அதிகம் புகையாதபடி அதை ஊதி ஊதி தீயை வளர்த்துக் கொண்டிருந்தாள் கோசலை.

மாயவன் பெரிய எதிர்பார்ப்பில் இருந்தான்.

குகைக்கு வெளியே தெரியும் மழை வானத்தை பார்த்தபடி இருந்தான்.

''மாயவா... அந்த புள்ள எப்பவோ போய் சேர்ந் திருக்கும்... அங்க என்ன நடந்துச்சுன்னு தெரியலியேப்பா...'' என்று பருத்தி ஆரம்பித்தாள்.

''அந்த புள்ள நிச்சயம் இந்த இடத்தை பத்தியும் நம்மகைல என்னல்லாம் இருக்குன்னும் சொல்லியிருக்கும். ஆனா அதை கேட்டு நம்மள பிடிக்க போலீஸ் வராது. அந்த கொழுப்பெடுத்தவன் போலீஸை தன் கால் பிடிக்கத்தான் பயன்படுத்திக்குவான். இந்த மாதிரி விசயத்துல எங்க எதிரிகள்ல வலுத்தவங்க யாருன்னு பாத்து அவங்கள பிடிச்சு இன்னேரம் பேரம் முடிஞ்சிருக்கும்.''

''என்னப்பா கொஞ்சம்கூட யோசிக்காம பள்ளிக்கூடத்து பிள்ள மனப்பாடம் பண்ண வாய்பாட்டை சொல்ற மாதிரி சொல்றே?''

''பெரிய மனுஷனுங்களோட புத்தி எப்ப எப்படி வேலை செய்யும்னு எனக்குத் தெரியும் அத்தை.''

''அப்படின்னா இந்த இடத்தை காலி பண்ணி யிருப்பியே. ஏன் எங்கேயும் போகாம இங்கேயே இருக்கோம்?''

''அத்தை... மலையோட அடிவாரத்துல எல்லா பக்கமும் இப்ப ஆளுங்க இருக்காங்க. என் எதிரிங்களும் தேடிகிட்டிருக்காங்க. இங்க இருக்கறதவிட இந்த இடத்தை விட்டு விலகறதுதான் ரொம்ப கஷ்டம்.''

''என்னதான்பா சொல்றே... அப்ப நாம பிடிபட்டுருவோமா?''



''நிச்சயமா அதுமட்டும் நடக்காது. இங்க இருந்து நூறு அடி தூரத்துக்குள்ள யார் கால் வெச்சாலும் எனக்கு தெரிஞ்சிடும். அப்பால அவங்க அம்பது அடி மேல ஏற முடியாது. என்னோட பங்காளிங்க அவங்கள ஏறவிட மாட்டாங்க...''

மாயவன் குரலில் நம்பிக்கை மின்னியது. அவன் பங்காளிகள் என்று குறிப்பிட்ட அவன் சகாக்களும் பதிலுக்கு செருக்கோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''எல்லாத்துக்கும் மேலா... நாம ரொம்ப மதிக்கிற மணவாளசாமி இப்ப நம்மகூட குகைல இருக்காரு. அவர் யோகத்துல உக்காந்துட்டாரு. இங்க ஒரு உசுர் போகப் போவுதுன்னா அவரால யோகத்துல உட்கார முடியாது. அது கலைஞ்சு போவும். அவரும் கூப்ட்டு எச்சரிக்கை பண்ணுவாரு. ஆகையால தைரியமா இருப்போம்.''

அவன் பேசியதை கேட்டபடி இருந்த செண்பகக் குழல்வாய்மொழிக்கு அவனது யூகமும், அதை அவன் வெளிப்படுத்தும் விதமும் மிகவே பிடித்திருந்தது. ஒருவித ஆச்சரியத்தோடு கவனித்தபடி இருந்தாள். அவளைவிட கோசலையிடம்தான் மாயவன் பொங்கி வழிந்து கொண்டிருந்தான்.

''மாயவா...''

''சொல்லு அத்த...''

''இந்த பிரச்சினை எப்பப்பா தீரும்?''

''இதுக்கு மட்டும் என்னால பதில் சொல்ல முடியாது அத்த?''

''சரி... நல்லபடியா முடியும்தானே?''

''நிச்சயம் தப்பா முடியாது, அத்த... அந்த கேடுகெட்டவன் ஜெயிக்க மாட்டான். ஜெயிக்க விடவும் மாட்டேன்.''

கேடு கெட்டவன் என்று பாண்டியமாணிக்கத்தை குறிப்பிட்ட வேகத்தில் செண்பகக்குழல்வாய்மொழியையும் கூர்ந்து கவனித்தான் மாயவன்.

அவள் முகத்தில் ஆச்சரியமாக ஒரு கேலிச்சிரிப்பு தெரிந்தது. அதை உளியனும் கவனித்துவிட்டு.

''ஏம்புள்ள... உனக்கு வலிக்கலையா?'' என்று சுருக்கமாக கேட்டான்.

''அப்பாகிட்ட தப்பு இருக்குன்னு தான் எனக்கும் தெரியுமே?''

அவள் அப்படி ஒரு பதில் கூறுவாள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

''அப்ப உங்க அப்பன் வரைல இங்க நாங்க இப்படி நடந்துக்கறதுல தப்பு இல்லன்னு சொல்லு.''

''இல்ல... நீங்களும் தப்பு பண்றீங்க...''

- பளிச்சென்ற அடுத்தகட்ட பதில் மாயவனையே அமர்ந்திருந்தவனை எழுந்து நிற்கச் செய்தது.

''நாங்க பொறந்ததே தப்பு தானே... அப்புறம் எங்க இருந்து வெளங்குவோம்! பெருமாள் கேட்டான்.

''பொறந்ததே தப்பா... என்ன இது உளறல்! உலகத்துல எந்த உயிரும் தப்பா பிறக்கறதில்ல - எல்லாம் எப்படி வளர்க்கப்படறோம் - எப்படி யோசிக்கறோம்கறதுல தான் இருக்கு?''

- செண்பகம் அழுத்தமான குரலில் அதே சமயம் நல்ல நட்புணர்ச்சி உள்ளவர்கள் பேசுவது போல பேசினாள். இதுவரை அவன் பேச்சைக் கேட்டபடி இருந்த மாயவன் இந்தமுறை சற்று பலமாகவே சிரித்தான்.

''ஏன் சிரிக்கறீங்க?''

''சிரிக்காம... தப்பா யாரும் பொறக்கறதுல்லேன்னு சொன்ன பாரு... அதை நினைச்சேன் சிரிச்சேன்...''

''நான் சொன்னது சிரிக்கற விஷயமில்ல சிந்திக்க வேண்டிய விஷயம்.''

''ஊத்தை... ஊத்தை...'' என்று பல்லைக் கடித்தான் பெருமாள்.

''ஊத்தையா... அப்படின்னா... ஐடோன்ட் அண்டர்ஸ்டாண்ட்...''

''ஊத்த வாயி, ஊத்தப்பல்லுங்கற மாதிரி ஊத்தப்பேச்சுன்னு ஒண்ணு உண்டு. அதான். நீ பேசறது! இந்த உலகத்துல ஒருநாளைக்கு இந்த தமிழ் நாட்டுல மட்டும் மூவாயிரத்து நானூறு பேர் பொறக்கறாங்களாம். இதுல பொறக்கும் போதே எய்ட்ஸோடையும் கை கால் இல்லாமலும் பொறக்கறது மட்டும் ஒரு நூறு நூத்தம்பது தேறுமாம். நான் சொல்லல... சக்கம்பட்டில் ஜேம்சுன்னு ஒரு பாதிரியார் இருக்காரு. அவரு ஒரு டாக்டரு... எங்களுக்கு ஒண்ணுன்னா அவர்கிட்ட தான் போவோம். அவர்தான் சொல்வார்!

இதாவது பரவால்ல... உடம்புல தான் ஊனம்!



ஆனா எவன் கெடுத்தான்னே தெரியாம பிள்ள பெக்கற பைத்திக்கார பிச்சைக்காரிச்சிங்க, தங்களுக்கு பிற்காலத்துல தொழில்ல ஒரு வாரிசு வரணும்னு அழகான பொட்ட புள்ளைக்காக கருத்தரிக்கிற தேவடியாளுங்கன்னு ஒரு கூட்டம் இருந்து பெத்துப் போடுதே. அப்படிப் பொறக்கறவங்களுக்கு அப்பன் யாருன்னே தெரியாது. ஆனா அவன் எங்கையோ இருக்கான். அவன் கேடு கெட்டவன்! இப்படி யாருன்னும் தெரியாம, ஒருவேளை தெரிய வந்தாலும் கேடு கெட்டவனா இருக்கிறவனுக்கு பொறக்கற உசுரெல்லாம் தப்பானது இல்லையாதாயி...!

இதுகூட பரவாயில்ல...

பொறக்கும் போதே முதுகுல கள்ளன்கற முத்திரை... அந்த குழந்தைக்கான முதல் பாலை கூட திருடிகிட்டு வந்துதான் கொடுக்கணும்கற ஒரு சடங்கு - இப்படி ஆரம்பிக்கும் போதே ஒரு பழிபாவத்தோட தொடங்குன எங்க பொறப்புல எங்க தப்பு, எங்க தாயி வந்துச்சு? பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டிய வயசுல கைல உண்டி வில்லையும், பிளேடையும் கொடுத்து பாக்கெட் அறுக்க சொல்லிக் கொடுக்கறாங்க... அத்த நாங்களா கேட்டோம்! அதை ஒழுங்கா செய்யாமப் போனா உடம்புல சூடு வெச்சு - பட்டினி போட்டு வழிக்கு கொண்டு வரச் சொல்லி நாங்களா சொன்னோம்?

அட எங்களுக்குத்தான் அடிப்படையே தப்பா போச்சு. நல்ல புத்தி சொல்ல ஆள் இல்லை... இப்படி ஆயிட்டோம். உன் அப்பன் மாதிரி ஆளுங்களுக்கு என்ன குறை?

அதான் உங்க தாத்தன் பாட்டன் சொத்தே ஏழு தலைமுறைக்கு உக்காந்து திங்கலாமே... அப்புறம் எதுக்கு ஊர் சொத்து? இங்க வெச்சா மாட்டிக்குவோம்னு வெளிநாட்டுல ஒரு பேங்க் இருக்குதாமே... அங்க எதுக்கு கொண்டு போய் போட்றே? பணம் வந்தா போதாதுன்னு அதிகாரத்தையும் நீயே வெச்சுக்க பாக்கறியே இது எந்த ஊர் நியாயம்? சனங்களுக்காக போலீஸா - இல்லை உனக்கு எடுபிடி வேலை பார்க்கவா? ரோடு போட்டா அதுல கமிஷன். கம்மாயை தூர் வாருனா அதுல கமிஷன்... சுடுகாட்டுல கொடா கட்டுனா அப்படி கட்ற கொட்டாயிலயும் கமிஷன்னு அட்ட கொட்ட பூச்சியா இந்த மக்கள் காசை உறிஞ்சு உறிஞ்சின்னு உறிஞ்சிறியே உன்னை எல்லாம் சும்மா உடலாமா?

ஆனா சும்மா விட்டுட்டு எருமை மேல மழை பேச்சா மாதிரி எனக்கென்னன்னு இருக்குது இந்த சமுதாயம். உன் அப்பனைப் பத்தியே நான் இப்ப ஒரு அதிர்ச்சியான விசயத்த சொல்றேன். உன் அப்பன் ஒரு ரியல் எஸ்டேட் பிசினஸ் பண்ணானா?''

மாயவன்தான் போட்டுத் தாக்கியவன்... அந்த தாக்குதலின் இறுதியில்தான் அப்படியும் ஒரு கேள்வி.

''எனக்கு தெரியல... ஏன்னா நான் எங்க வீட்ல இருந்ததேயில்ல. ஹைஸ்கூல் ஊட்டி கான்வென்ட்டை காலேஜ் சென்னைல ஹாஸ்டல்ல... அப்புறம் ஹையர் ஸ்டடிஸ் அமெரிக்காவுல... ஸோ... ஐடோன்ட் நோ...''

''எல்லாம் எங்க காசு... இதுல ஒத்த காசுக்காக உன் அப்பன் ஒரு சொட்டு வியர்வை சிந்துனது கிடையாது. போவட்டும் நான் விஷயத்துக்கு வரேன்... உங்கப்பன் அரசியல்ல கால் வைக்கறதுக்கு முந்தி அழிச்சாட்டியம் பண்ணது இந்த ரியல் எஸ்டேட்லதான்... ரியல் எஸ்டேட்னா என்னன்னு தெரியும்ல?''

''அப்பா என்ன செஞ்சார்... அத சொல்லுங்க முதல்ல.''

''என்ன செய்வாரு... புறம்போக்கை எல்லாம் வளைச்சு போட்டு போலி பத்திரம் தயார் பண்ணி ஏழை ஜனங்களை எல்லாம் ஏமாத்துனாருன்னு சொல்வேன்னு நினைக்காதே... அது சாதாரணம்.

ஏமாற்றவன் இருக்கறவரை ஏமாத்தறவனும் இருப்பான்.

ஆனா உன் அப்பன் அப்ப தன்னோட ஆபீஸ்ல ஒரு பொண்ணை வேலைக்கு வெச்சிருந்தான். தாயில்லாத பொண்ணு அது. அடுத்து வந்த அவளோட சித்திக்காரி இந்த பெண்ணை வேலைக்கு அனுப்பிட்டா! அந்த பொண்ணை முதல்ல உன் அப்பன்தான் கெடுத்தான். அப்புறம் தாசில்தார் ஆர்.டி.ஒன்னு உங்கப்பனுக்கு ஆமாம் சாமி போடறவங்களுக் கெல்லாம் கூட்டிக் கொடுத்தான். இப்ப அவ எங்க இருக்கா தெரியுமா?''

- மாயவன் சொன்ன தகவலும் இறுதியாக கேட்ட கேள்வியும் செண்பகக்குழல்வாய்மொழியின் நெஞ்சில் பாறை இடியாய் வெடித்தது.

''இப்ப அவ தேனிங்கற ஊருக்குள்ள ஆத்தோரமா இருக்கற குடிசைல விபசார தொழில் பண்ணிகிட்டிருக்கா... ஒரு ராத்திரி அவ குடிசைல ஒளிய வேண்டி வந்துச்சு. என்னையும் வாடிக்கைன்னு நினைச்சா... அப்புறமா விபரம் தெரியவும் தன் கதையை சொன்னா. இது எனக்கு தெரிஞ்ச கதை... தெரியாத கதை இந்த மாதிரி உன் அப்பனுக்கு பின்னாலே நூறு இருக்கு. ஊர் பொண்ணுங்க கெட்டு சீரழிஞ்சு விபசாரம் பண்ணி சாகணும்... ஆனா தன் பொண்ணு அமெரிக்காவுல படிச்சு சும்மா இளவரசி கணக்கா வாழணும்.



எவ்வளவு கேடு கெட்ட நியாயம் இது?''

- மாயவன் கேள்வி செண்பகம் கண்களில் நெருப்பைக் கொளுத்திப் போட்ட நொடி அவர்கள் முன் சாமியார் வந்து நின்றிருந்தார்.

''சாமி நீங்களா?''

''நானேதான் மாயவா... உன் பேச்சையும் கேட்டேன்.''

''ஹும்... இந்த நிமிசம் வரை பேசத்தானே சாமி என்னால முடியுது. பெருசா என்னத்த கிழிச்சுட்டேன்.''

''உன் கேள்விக்கு பதில் சொல்ல இப்ப அவகாசமில்லை. இங்க தப்பா சில விஷயங்கள் நடக்கப் போறதா என் உள்ளுணர்வு சொல்லுது. நீ இந்த பெண்ணோட புறப்படு...''

''சாமி ஈ...!''

''ஓடைக்கரை வழியா போ... உனக்கு எதுவும் ஆகாது.''

''அப்ப இங்க யாராவது வந்துட்டாங்களா சாமி.''

வந்துகிட்டேயிருக்காங்க... நெருங்கவும் செய்துட்டாங்க.''

- அடுத்த நொடி உளியன் வெளியில் ஓடினான். இருபதிலேயே பெரிய மரமான மருத மரம் ஒன்றின் மேல் குரங்கு போல் தாவி ஏறியவன் முடிந்த வரை உச்சிக்கு சென்று நாலாபுறமும் பார்த்தான்.

அங்கும் இங்குமாய் கரடி மனிதர்கள்!

## 43

மரத்தின் மேல் இருந்து பார்த்த உளியனுக்கு தெரிந்து விட்டது. விறுவிறுவென்று மரத்தில் இருந்து இறங்கியவன் ஓடிவந்தான்.

''மாயவா... கரடி வேஷம் போட்டு நாலு பேர் வர்றாங்கப்பா...இப்ப என்ன பண்ணலாம்'' என்றான்.

மாயவன் பார்வை அடுத்து மணவாள சித்தர் மேலதான் சென்றது.

''சாமி... உங்களால சுதாரிச்சிட்டோம். வர்றவங்க யாரா இருந்தாலும் எங்கள அவங்களால பிடிக்க முடியாது. தப்பிச்சு ஓடிப் போறதவிட இவங்கள மடக்கறதுதான் புத்திசாலித்தனம்.

இவுங்க பிடிக்க வரலை. என்கிட்ட சிக்சிக்க வாராங்க... இப்ப இங்க நாங்க நாலு பேரும் பதுங்கப் போறோம். நீங்க இவங்க மூனு பேரோட உங்க குகைக்கு போயிடுங்க சாமி'' என்றான்.

மணவாள சித்தரும் சிந்தித்தபடியே அவர்களை அழைத்துக் கொண்டு திரும்பி நடந்தார்.

கோசலைக்கு மட்டும் படபடப்பாக இருந்தது.

''மாயவ மாமா பாத்து...'' என்றாள். செண்பகக் குழல்வாய்மொழியும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்தாள். மிகச்சரியாக அறுபது நொடிகள் - அதாவது ஒரு நிமிடத்தில் அந்த உச்சிமலை பரப்பில் ஒருவர்கூட இல்லை.

அந்த இடமே வெறிச்சோடிப் போனது. அப்படி ஒரு இடத்திலும் முதலில் ஒரு கரடி மெல்ல எட்டிப் பார்த்து விட்டு கரடி போலவே நான்கு கால்களால் நடந்து வருவது போலவும் நடந்து வந்தது.

பின் நிமிர்ந்து நின்றது. ஆளரவமற்ற சூழல் அதற்கு மிரட்சியை தந்திருக்க வேண்டும். தலையில் உள்ள கரடியின் முக கவசத்தை நீக்கிக் கொள்ளவும் வல்லாளர்களில் ஒருவன் முகம் தெரிந்தது. வியர்த்துப் போய் முகம் முழுக்க நீர்ப்பொட்டுக்கள். அதை துடைத்து விட்டுக் கொண்டவன் இடுப்பு பாகத்தில் இருந்து துப்பாக்கியை கையில் எடுத்துக் கொண்டான். பின் தான் வந்த பக்கம் சென்று திரும்பிப் பார்த்து மற்றவர்களுக்கும் சமிக்ஞை தரவும், அவர்களும் மேலேறி வந்தனர். பின் அவர்களும் தங்கள் முககவசங்களை நீக்கிக் கொண்டனர்.

தலையை உதறியும் விட்டுக் கொண்டனர்.

''யாரையும் காணோமேப்பா?'' ஒருவன் மெல்லிய குரலில் கேட்டான்.

''ஒருவேளை நாம வாரது தெரிஞ்சி இங்க இருந்து எஸ்கேப் ஆயிட்டானோ?''

''இருக்காது... இங்கதான் குகைக்குள்ளார அடங்கிக் கிடப்பாங்க! ஓசைப்படாம எட்டிப் பார்ப்போம். கண்ணுல பட்ட மாத்திரத்துல யோசிக்காம சுட்டுப்புடணும். ஒரு வினாடி நாம தாமதிச்சாலும் நம்ம மேல அவன் தோட்டா பாஞ்சிடும்.''

- என்று அவர்களில் ஒருவன் சொன்ன நொடி சொன்ன மனிதனின் கால்களின் ஒன்றின் மேல் ஒரு தோட்டா வந்து துளையிட்டது. அவன் எகிறி விழுவதற்குள் மற்றவர்களின் கால்களிலும் தோட்டாக்களின் பாய்ச்சல்.



வல்லாளர்கள் நான்கு பேருமே கரடி உடை உடம்போடு மனிதத் தலையோடு தெரித்து விழுந்தார்கள். விழுந்தவர்களின் கைகளில் இருந்த துப்பாக்கிகளும் அடுத்தடுத்து சுடப்பட்டு எங்கெங்கோ போய் விழுந்தன.

அந்த களேபரத்தில் கும்மென்று கிளம்பிய புழுதியானது மெல்ல அடங்கியபோது அவர்களைச் சுற்றிலும் மாயவனும் உளியனும் பெருமாளும் கடாரனும் நின்றபடி இருந்தனர். நான்கு பேருக்கும் நான்கு திசைகள்! நடுவில் குப்பை குவிந்தது போல் வல்லாளர்கள்...

மாயவனின் கண்களில் மட்டும் நெருப்பு தெரிந்தது.

''சிங்கத்தேவா... மோசம் போயிட்டோம்டா...'' என்றான் வலியால் துடித்தபடியே ஒரு வல்லாளன்.

''ஏண்டா... நீங்க எம்புட்டு பட்டாலும் திருந்த மாட்டீங்களாடா?'' என்று கேட்டபடியே அருகில் வந்த உளியன், வந்த வேகத்தில் உதை பந்தை உதைப்பது போல உதைக்கவும் செய்தான். அந்த உதையில் உதடு கிழிந்து போய் அவர்கள் மூவரின் மேலும் புரண்டு போய் விழுந்தான். உதை வாங்கியவன்.

குகைப் பகுதிக்குள் குண்டு சப்தம் கேட்டு கோசலை மிரண்டு போயிருந்தாள்.

''சாமி... யாரை யார் சுட்டுடாங்கன்னு தெரியல... கொஞ்சம் எட்டிப் பாருங்க சாமி'' என்றாள்.

''அவசியமில்லம்மா... மாயவனுக்கு எதுவும் ஆகாது. அவன் கூட்டாளிகளுக்கும் எதுவும் ஆகாது. அவங்க விதி தப்பா இருந்தா நான் இங்க இருந்துருக்க மாட்டேன். வனத்துக்குள்ள சஞ்சாரம் பண்ண போயிருப்பேன். எப்ப நான் இங்க இருந்து எதிரிகள் ஊடுருவலை சொல்ல முடிஞ்சிச்சோ, அப்பவே கெட்ட நேரம் வர்றவங்களுக்குதான்னு முடிவாயிடிச்சு'' - என்று ஒரு புது விளக்கமளித்தார்.

''எப்படி சாமி அவங்க வந்துகிட்டிருக்கறது உங்களுக்கு மட்டும் தெரிஞ்சிச்சு...?''

''அதுக்கு பேர்தாம்பா தவம்கறது... மனசை அடக்கி யோகத்துல உட்கார்ந்து தவம் செய்யும்போது ஒரு குண்டூசி கீழ விழுற சப்தம்கூட துல்லியமா கேட்கும். புலன்கள் ரொம்ப கூர்மையாயிடும். அப்ப சுற்றுச் சூழல்ல ஏற்படற மாற்றங்கள்

அதிர்வுகளை சுலபமான உணரலாம். அப்படித்தான் நானும் உணர்ந்தேன்'' - என்கிற அவரின் பதில் செண்பகக்குழல்வாய் மொழியை புதிய கோணத்தில் யோசிக்க வைத்தது.

அதே சமயம் ''எல்லாரும் வெளிய வாங்க'' என்கிற பெருமாளின் குரல் காதில் ஒலிக்கவும் நால்வரும் குகைக்குள் இருந்து வெளியில் சென்றனர். வல்லாளர்கள் நான்கு பேரையும் தரைமேல் அவர்கள் வேட்டியை கொண்டே சங்கிலிக்கட்டு போட்டு குப்புறப்படுக்க வைத்திருந்தான் மாயவன். அவர்களில் ஒருவன் முதுகின்மேல் கடாரனின் தோல் செருப்புக் காலானது மிதித்தபடி இருந்தது.

அவர்களைப் பார்க்கவும் பருத்தி கண்களை அகல விரித்தவளாக ''மாயவா இவுகளா?' என்றாள்.

''ஏன் அத்தை... உன்கிட்டயும் இவனுங்க சேட்டை பண்ணாங்களா?''

''உன் மாமன் செத்தப்போ நீ எழவுக்கு வந்தியே - அப்ப உன்னை கொல்ல வந்தவனுங்க இவுக தாம்ப்பா...''

''தெரியும் அத்தை. என்னை போட்டுத்தள்ள ரத்தவெறி பிடிச்ச ஓநாய் மாதிரி இவுக அலையறாங்கன்னு நல்லா தெரியும் எனக்கு.'' என்று மாயவன் செருமியபோது சிங்கத்தேவன் என்பவன் படுத்திருந்த நிலையில் கத்தினான்.

''எலே மாயவா...! எங்க வரைல நீ தப்புமேல தப்பு பண்ணிகிட்டே போறடா. உன் தலைக்கு எவ்வளவு கோடின்னாலும் தர்ரதுக்கு எம்.எல்.ஏ. ரெடியாயிட்டாரு. எங்கள நீ தடுத்திட்டாலும் அடுத்தடுத்து அந்த பணத்துக்காக ஆசைப்பட்டு எங்கள போல வந்துகிட்டே இருப்பாங்க. அதுலயம் நாங்க கீழ முழுசா திரும்பி போகாட்டி ஒரு பெரும் கூட்டமே மேல ஏறி வந்துடும். கைஎறி குண்டு மட்டுமே ஒரு ஆயிரம் குண்ட வாங்கி வெச்சிருக்கோம். நீ தப்பிக்கவே முடியாது.''

- சிங்கத்தேவனின் கூக்குரலுக்கு அவன் வாயின் மேலேயே கடாரனின் செருப்புக்காலால் உதை விழுந்ததுதான் மிச்சம்.

மாயவன் சாமியாரைப் பார்த்தான்.

''என்ன மாயவா?''

''சாமி இவங்கள கூட்டிகிட்டு நீங்க கொஞ்சம் காட்டுக்குள்ள போயிட்றீங்களா?''

''ஏம்ப்பா...''



''போங்கசாமி... சில விசயங்களை இவங்க பாக்காம இருக்கறதுதான் நல்லது...''

''புரியுதுப்பா... புலிவாலை புடிச்சிட்டவன் ஒண்ணு புலிக்கு பலியாகணும். இல்ல புலி அவனுக்கு பலியாகணும். இங்க புலிங்க பலியாகப்போகுது.'' - என்றவர் பருத்தி, கோசலை, செண்பகம் மூவரையும் வாஞ்சையாகப் பார்த்தார்.

செண்பகம் முகம் வெளிறிப் போயிருந்தது.

கீழே குப்புறக்கிடப்பவர்களை அவளும் பார்க்க விரும்பியது தெரிந்தது. அவர்கள் கால்களில் துப்பாக்கி குண்டுபட்ட காயத்தில் இருந்து ரத்தமும் வடிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''நடங்க... இங்க நாம இருக்கறது நல்லதில்ல...'' என்று மணவாள சித்தர் அவர்களை திரும்பவும் அழைத்துச் செல்ல முயன்றார்.

''இவங்க யார்... எதுக்கு வந்தாங்க'' - என்ன பண்ணப் போறீங்க... என்னை மீட்டுகிட்டு போக வந்தவங்கன்னா தயவு செய்து இவங்கள எதுவும் செய்துடாதீங்க. எனக்காக யாரும் ரத்தம் சிந்தறதை நான் விரும்பலை...''

- என்று செண்பகம் பெரிதான குரலில் பேசியது மாயவனை சலனப்படுத்தியது.

அப்போது மலைசரிவில் பறவைகளிடம் படபடப்பு!

யாரோ மலை ஏறி வருவதற்கான அறிகுறி.

எல்லோருடைய கவனமும் அந்தப் பக்கமாய் திரும்பியது.

''சாமி இவங்களோட நீங்க உள்ள போங்க சாமி. யாரோ வர்றாங்க...'' மாயவன் படபடத்தான்.

''மணவாள சித்தரும் அவர்களுடன் வேகமாக குகைக்குள் சென்று அடங்க முயன்றார். உளியன் ஓடிப்போய் மரத்தின்மேல் ஏறி கீழே சரிவை பார்க்கத் தொடங்கினான்.

கையில் ஒரு வெள்ளைக் கொடியோடு ஒரு இளம்பெண் வந்து கொண்டிருந்தாள். உளியனுக்கு ஆச்சரியமாகிவிட்டது. விறுவிறுவென்று இறங்கியவன் மாயவனிடம் வந்து,

''மாயவா யாரோ ஒரு பொண்ணு கைல வெள்ளக் கொடி யோட நம்மளை பாக்க துணிச்சலா வந்துகிட்டிருக்காப்பா...''

''ஒரு பொண்ணா.... நல்லா பாத்தியா?''

''ஆமாம்பா...''

''இந்த வழித்தடம் அவளுக்கு எப்படி தெரியும்...! சூதானமா முதல்ல எல்லாரும் பதுங்குங்க. இவனுங்க இப்படியே கிடக்கட்டும்.''

- என்ற நால்வரும் வழக்கமான தங்கள் எச்சரிக்கைக்கு மாறினார்கள்.

அந்த இடமும் வெறிச்சோடியது.

கீழே கிடந்த வல்லாளர்கள் மட்டும் புரண்டு நிமிர வழியில்லாதபடி நெளிந்தபடியே இருந்தனர்.

காற்றிடம் புதிதாக ஒரு வேகம்... உள்ளான் பறவைகள் சில தங்கள் அடித்தொண்டை அறுக்கப்படுவது போல குரல் கொடுத்தன.

நொடிகள் சில நிமிடங்களை கடந்த நிலையில் அந்த பெண்ணும் ஒரு மரக்கொம்பில் கட்டியிருந்த வெள்ளைத் துணியுடன் உச்சி பாகத்துக்கு வந்து நாலாபுறமும் வியர்த்து வடிய பார்வையை விட்டாள்.

ஒளிந்த நிலையில் பார்த்தபடி இருந்த மாயவனுக்கு அவளை மேலே நெருக்கு நேர் பார்க்கவும் தெரிந்துவிட்டது. அவள் செல்லக்கிளி! ஒரு இரவில் குலதெய்வ கோயிலுக்கு செல்ல முற்பட்ட சமயத்தில் நான்கு பேர்களால் கொடுமையாக கற்பழிக்கப்பட்டு கதறிக் கொண்டிருந்தவள். அவளைக் கொண்டுபோய் கடாரன்தான் ஊர் எல்லை வரைக்கும் விட்டுவிட்டு வந்திருந்தான். அதே கடாரன் இப்போதும் அடையாளம் கண்டு கொண்டவளாக ஒளிந்த இடத்தில் இருந்து வெளியில் வந்தவனாக,

''அட நீதானா?'' என்று கேட்கவும் செய்தான்.

அவளுக்கும் கடாரனை பார்க்கவும் கடவுளைப் பார்த்தது போலவே இருந்தது!

## 44

செல்லக்கிளியை பார்த்துவிட்டு மாயனும் ஒளிந்திருந்த இடத்தை விட்டு வெளியில் வந்தான். கடாரன், பெருமாள், உளியன் என்று மற்றவர்களும் சூழ்ந்து கொள்ள அவள் அவர்கள் நால்வரையும் கண்கள் கலங்கப் பார்த்தாள். கை எடுத்து கும்பிடவும் செய்தாள்.

''அண்ணே?'' - என்று முழுமையாக அழைக்க முடியாமல் குரலும் உடைந்தாள்.



''ஏபுள்ள அழுவறே... அதான் பாடாபட்டு மேல ஏறி வந்து எங்களயும் பாத்துட்டல்ல...?''

''இல்லண்ணே... அது வந்துண்ணே...''

''ஏம்ப்பா... என்னாச்சு? - உன்னிய நாங்க இப்ப எதிர்பார்க்கவே இல்லை... எதுனா முக்கியமான விசயமா?''

''வீரைய்யன்தாண்ணே என்ன பாத்து விவரம் சொல்லி அனுப்புனிச்சி...''

- என்ற அவளிடம் மேல் மூச்சும் கீழ்மூச்சும் வாங்கியது. மாயவன், பெருமாளை பார்க்கவும் ஓடிப் போய் அழுக்காகிப் போன மினரல் வாட்டர் பாட்டிலில் பிடித்திருந்த ஓடைத் தண்ணீரோடு ஓடிவந்து அவளை குடிக்கச் சொன்னான்.

அதற்குள் அவள் கீழே வேட்டித் துணியில் கட்டப்பட்டு கிடக்கும் வல்லாளர்களைப் பார்த்து கண்கள் சிவந்தாள்.

''இவனுகள உனக்கு தெரியுமா புள்ள?''

''ஏன் தெரியாம... என்னை சீரழிச்சவனுங்களும் இவனுங்களும் கூட்டாளிங்க. என்னை மோப்பம் புடிக்கறது தாண்ணே இவனுங்க பொழப்பே. இவங்களுக்கு பயந்துகிட்டே நான் ரைஸ் மில்லுல பாத்த வேலையை விட்டுட்டேன்...'' அவள் சொன்ன மறுநொடி.

''மாயவா அப்ப இவனுங்கள அவனுங்க போன இடத்துக்கே அனுப்பிட வேண்டியதுதான்...'' என்றான் உளியன்.

''பொறு... செல்லக்கிளி நீ வந்த விசயத்த சொல்லு. வீரைய்யன் என்ன சொல்லி விட்டான்?''

''அண்ணே கீழ அநியாயமும், அக்குருமமும் திகிடுதம்பா நடக்குதுண்ணே... அந்த எம்.எல்.ஏ. இங்க நீங்க புடிச்சி வெச்சிருந்து வெளிய விட்டீங்களே ஒரு புள்ளைய...''

''நீ ஜூலியை சொல்றியா?''

''எனக்கு பேரு தெரியாது... ஆனால எம்.எல்.ஏ. மவளோட சேர்த்து புடிச்சீங்களே அந்த புள்ளயதான் சொன்னேன்.''

''அவளுக்கென்ன எங்கள பத்தி இல்லாததையும் பொல்லாததையும் சொன்னாளா?''

''இல்லண்ணே... அதுக்கு விஷ ஊசிப் போட்டு கொன்னுபுட்டு பழியைத் தூக்கி உம்மேல போட்டுட்டாண்ணே அந்த எம்.எல்.ஏ.?''

செல்லக்கிளி சொன்ன நொடி மாயவனுக்கு முதுகின்மேல் ஒரு கை அமிலத்தை அள்ளி யாரோ தெளித்தது போல் இருந்தது.

''மாயவா... இவன் என்ன இத்தனை கிராதகனா இருக்கான்...''

''அப்பால...?'' மாயவன் சுதாரித்து செல்லக்கிளியை தூண்டினான்.

''இது விசயமா டிவிலயும் உன்னத்தான் கொலக்காரனா சொல்லி உக்காந்து உக்காந்து பேசிகிட்டிருக்காங்க. இதுல இன்னொரு கொடுமை என்னன்னா ஒரு டிவிகார பொண்ணும் படம் புடிக்கறவரும் நம்ம ஊர்பூரா உன்னிய பத்தி ஊர்சனங்க என்ன சொல்றாங்கன்னு படம் புடிச்சாங்க. என் முன்னால கூட மைக்கை நீட்டி உன்னியப் பத்தி கேட்டப்போ நான் தைரியமா மாயவன் எனக்கு சாமி மாதிரி... மாயவனோட இருக்கறவங்க என் அண்ணன்மாருங்க அவங்கமேல ஒரு தப்பும் கிடையாதுன்னேன். ஆனா அதெல்லாம் டிவில வரலை. என்னை படம் புடிச்ச அந்த டிவிகாரங்களையும் அந்த எம்.எல்.ஏ. தன் ஊட்ல கட்டி போட்டுருக்கானாம்! அவுங்களை கொன்னுபுட்டு அந்த பழியையும் தூக்கி உன்மேல போடப் போறானாம் அந்த எம்.எல்.ஏ.

இந்த வல்லாளனுங்க உன்னைக் கொல்ல மூணு கோடி ரூபா கூலி பேசிட்டுதான் இங்க வந்துருக்காங்க. இவனுங்க உன் தலையோட போனா இவனுங்களுக்கு மூணு கோடி... உன் தலையை பாத்துட்டு அந்த டிவிகாரங்களையும் கொன்னுட்டா எல்லா பழியும் சேந்துடும் உன்மேல...

எம்.எல்.ஏ.வும் உங்க தொல்லை இல்லாம அவர் மகளையே நீங்க கடத்துனதை வெச்சு அனுதாபம் சம்பாரிச்சு மந்திரியாகவும் வந்துடணும்கறதுதான் இப்ப அவனோட திட்டமாம்?''

- செல்லக்கிளி சொன்ன விபரங்கள் கடாரனை கொழுந்துவிட்டு எரிய வைத்தது.

''எலேய் அட்டிக்கு பொறந்த அவுசாரிப் பசங்களா எங்க விலை மூணு கோடி ரூபாயா? எங்க தலையையும் நீங்க வெட்டிக் கொண்டு போவீங்களோ? உங்களை...'' - என்றவன் ஆகாயத்தில் எகிறி கால்களையும் மடித்து சப்பணமிட்டு அப்படியே அவர்கள் நால்வர் மேல் திம்மென்று விழுந்து அமர்ந்தான்.

அவன் அப்படி அழுத்த அமர்ந்த வேகத்தில் அவர்கள் நால்வரின் வயிறும் நசுங்கி வாய் வழியாக அவர்கள் வயிற்றில்



இருந்த நாராசங்கள் அவளைவும் பீறிட்டு வெளியில் வந்தன. வெளியெங்கும் சிதறின. அவர்கள் நான்கு பேருமே பட்டையடித் திருப்பது அந்த நாராசத்தின் நாற்றத்தில் இருந்து துல்லியமாக தெரிந்தது.

உளியனோ அருகில் இருந்த புங்கன் மரத்தின் இளையை படாதபாடுபட்டு ஒடித்து அதைக் கொண்டு அவர்கள் முதுகுப் பக்கம் வீறு வீறு என்று வீறத் தொடங்கினான்.

பெருமாள் கீழே அமர்ந்து அவர்களின் கால்களை திருகி ஒடித்துப் பார்த்தான். மாயவனிடம் மட்டும் தீவிரமான சிந்தனை.

அவன் பார்வை திரும்பியபோது அங்கு நடப்பதை எல்லாம் ஒரு பாறை அருகே நின்றபடி செண்பகக்குழல் வாய்மொழி பார்த்தபடியும் கேட்டபடியும் இருப்பது தெரிந்தது. அவளிடம் உறைந்து போன ஒரு தன்மை.

அவளை கையை அசைத்து அருகில் அழைத்தான்.

அவளும் நிதானமாக அருகில் வந்தாள். அப்போது குகைக்கு வெளியே பருத்தி, கோசலை, மணவாளசித்தர் என்று மூவரும் வந்த விட்டிருந்தனர்.

செண்பகத்தை பார்த்த மாயவன் கேட்டான்.

''பேசுனதெல்லாம் காதுல உழுந்திச்சா?''

''உம்...''

''உன் கூட்டுக்காரபுள்ள இப்ப உசுரோட இல்லை... அதுக்குதான் அவ இங்க இருந்து ஓடப்பாத்துருக்கா. கொன்னது உன் அப்பன். ஆனா பழி என்மேல... நான் என்ன சொல்ல வரேன்னு புரியதா?''

அவன் கேட்க செண்பகத்தின் கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் உருண்டு விழ ஆரம்பித்தன.

''உன் அப்பனுக்கு அவனை நினைக்கறது நடக்கணும். அதுக்காக யார் கழுத்தையும் அறுப்பான். அவன் ரத்தத்தையும் குடிப்பான். கேட்டேல்ல?''

செண்பகத்திடம் கண்ணீர் தொடர்ந்தது.

''இப்பவும் உனக்கு இப்படி ஆனதை வெச்சு மந்திரியாக கணக்குப் போட்டுருக்கான். எங்க தலைக்கு விலை மூணு கோடி அம்புட்டும் ஊரைக் கொள்ளையடிச்சதுட்டு...''

செண்பகம் மறுப்பின்றி அவன் பேசுவதை கேட்டாள்.

''தார் ரோடு போட்டா கமிசன். கம்மாயை தூர் வாருனா... கமிஷன். அதுக்கு பைப்பு வாங்கறதுலயும் கமிசன். நின்னா கமிசன் உக்காந்தா கமிசன். கொட்டிக் கொடுக்க ஒரு கூட்டம் அள்ளி எடுத்துக்க உன் அப்பன். அதான் எங்களுக்கும் மூணு கோடிய பேசியிருக்கான்.

இப்ப சொல்றேன் கேட்டுக்க. இந்த மூணு கோடிய மட்டுமல்ல... உன் அப்பன் உசுரையும் சேர்த்து நான் பறிக்க போறேன். உன் அப்பன்கிட்ட டிவிகாரங்க இரண்டு பேர் சிக்கிட்டிருக்காங்களாம். இவன் நோக்கத்துக்கு இப்ப டிவில நியூஸ் வந்துகிட்டும் இருக்கும். அவுகள மீட்டு அவுக முன்னாலேயே உங்கப்பனை கொல்லப் போறேன். அதை அவுக படம் எடுக்க இந்த ஊரும் உலகமும் பாக்கணும். பாக்கும்!

மாயவனா கொக்கான்னு ஊரே பேசணும்.

மூணு கோடியும் இதோ சீரழிஞ்சு நிக்குதே இந்த பொண்ணுங்க மாதிரி பல தங்கச்சிமாருங்க. இருக்காங்களே அவுகளுக்கு போயிடும். நஷ்டஈடு! கவர்மென்ட்டெல்லாம் வாங்கி தராது. அது மூணு குரங்குபொம்மையை வெச்சுக்கிட்டு தத்துவம்தான் பேசும். நான் அப்படி இல்லை...

இனி நடக்கப் போவதை பாரு... இந்த மாயவன் ஒரு ராணுவம். என் குலசாமி என்கூடவே இருக்கான். நா... என் கூட்டாளிங்க என் உசுருங்க! இவனுங்க போதும் எனக்கு...''

அனல் பறக்கப் பேசிய மாயவன் நால்வரில் சிங்கத்தேவனை மட்டும் கட்டவிழ்த்து நிமிர்த்தி நிறுத்தினான். மற்ற மூவர்கள் அணிந்து வந்த கரடி உடைகளை எடுத்து அவன் கூட்டாளிகள் அணிந்து கொண்டனர். - சிங்கத் தேவன் உடையை மாயவன் அணிந்து கொண்டான்.

கோசலை கையில் ஒரு நாட்டுத் துப்பாக்கியை தந்தவன் வல்லாளர்களிடம் மூன்று பேரை குகைக்குள் கட்டிப் போட்டு அருகில் துப்பாக்கியோடு கோசலையை காவலுக்கு வைத்தான்.

முன்னதாக மணவாளசித்தரிடம் வந்தான். அவரை ஆழமாக ஊடுருவினான்.

''சாமி...''

அவர் வெறித்தார்.

''போயாறேன்... வாரைல அந்த எம்.எல்.ஏ. உசுரோட இருக்க மாட்டான். இங்க வந்ததும் இந்த புள்ளையை விடுவிச்சிடுவேன்.



எல்லாத்துக்கும் சிலமணி நேரங்கதான் எனக்கு தேவை. எல்லாம் நல்லபடியா முடிய ஆசீர்வாதம் பண்ணுங்க சாமி'' என்றான்.

அவர் மௌனமாகவே வெறித்தார்.

''சாமி வாயத்திறந்து பேசமாட்டீங்களா?''

''என்ன பேச மாயவா?''

''என் யுத்தத்துல நான் ஜெயிக்கணும்னு ஆசீர்வாதம் பண்ணுங்க சாமி.''

''ஏன் சாமி அப்படி சொல்றீங்க? நான் ஒரு தப்பும் பண்ணலியே... ஒரு மிருகத்தை தானே வேட்டையாடப் போறேன்.''

''ஆனா...''

''என்ன சாமி ஆனா...? எனக்கு ஏதாவது ஆயிடும்னு பயப்படறீங்களா?''

''இல்ல மாயவா... உன் விதியை நான் இப்ப பாக்க விரும்பல. உன்னைத் தடுக்கவும் முடியாது. தடுக்கறதும் தப்பு. இல்லேன்னா இரண்டு உசுருங்க கீழ போயிடும். நீ உன் விருப்பப்படியே போ. நீ ஜெயிக்கறதுக்கு என் ஆசிகள்...''

- மணவாள சித்தர் கையை உயர்த்தி ஆசீர்வதிக்கவும் அதுவே மாயவனை பரவசப் படுத்தி விட்டது.

''இது போதும் சாமி... இந்த சிங்கத்தேவன்கற புழுவை வெச்சி அந்த எம்.எல்.ஏ. மீனை எப்படி பிடிச்சி காலி பண்றேன்னு பாருங்க'' என்றவன் சிங்கத்தேவனை தள்ளிக் கொண்டு மேல இருந்து கீழ் இறங்கத் தொடங்கினான்.

மாயவனின் கூட்டாளிகளும் கரடி வேடத்தில் அவர்களை தொடர்ந்தனர்.

செண்பகத்துக்கு எல்லாமே கனவுபோல் இருந்தது. அவள் கண்களில் ஜுலி கண்ணீராகி வழிந்தபடியே இருந்தாள்.

## 45

கூமாச்சி மலை முழுக்க ஐப்பசி மாத அடைமழை மேகங்கள் தாயின் மடியை முட்டும் கன்றினைப் போல முட்டிக் கொண்டிருந்தன! அந்த மூவருக்கும் கரடிக்கான உடை அந்த குளிருக்கு இதமாக இருந்தது. ஆனால் சிங்கத்தேவன் உடம்பு அந்த குளிருக்கு

நடுங்காவிட்டாலும் மாயவனிடம் வசமாய் சிக்கிக் கொண்டு விட்டதற்காக நடுங்கிக் கொண்டிருந்தது.

மலைச்சரிவில் மாயவன் சிங்கத்தேவனை தள்ளித் தள்ளிவிட்டு இறங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு அணைப்பாக கரடி உடைக்குள் பெருமாள், உளியன், கடாரன்!

''எலே வல்லாளா... அப்படியே குறுக்கால பூந்து ஓடிடலாம்னு மட்டும் நினைச்சிடாத. மேல் உன் ஆளுங்க மூணு பேரும் பணைய உசுரா... நின்னுகிட்டிருக்காங்க. இதோ இந்த மணியன்கற புறாவை தட்டி விட்டேன்னா நேரா அங்கதான் போகும். இதை அனுப்புனாலே, விசயம் சங்குதான்னு அங்க இருக்கற கோசலைக்கு தெரிஞ்சிடும். யோசிக்கவே மாட்டா - அவ கைல இருக்கற துப்பாக்கி அப்பால உன் பங்காளிங்க மார்பை துருவிப்பிடும்டி...'' என்றபடியே மாயவன் தன் வேட்டியை தூக்கி உள்ளடக்கமாய் இருந்த காக்கி ட்ரவுசரின் பாக்கெட்டில் இருந்து மணிபர்சை எடுப்பது போல ஒரு புறாவை எடுக்கவும் சிங்கத் தேவனுக்கு விடைப்பாக இருந்தது. தங்களோடு, பேசிக் கொண்டிருந்தவன் எப்போது போய் இந்த புறாவை எடுத்து வந்தான். இதுவும் மூச்சுத் திணறாமல் பாக்கெட்டுக்குள் அடங்கிக் கிடக்கிறதே என்று விக்கித்துப் போனான்.

மலையில் செல்போன் தொடர்புக்கு வழி இல்லாத நிலையிலும் பழைய முறையில் புறாத் தூதில் செய்திகள் சென்று நேர்வதை அந்த நொடியில் அவனால் அனுமானிக்க முடிந்தது.

காலில் குண்டுபட்ட இடத்தில் இருந்து ரத்தம் பெருகி உயிரரையே கூச வைத்துக் கொண்டிருந்த்து.

''மாயவா... உனக்கு தோடி புண்ணியம்'' கொஞ்சம் குந்த விடப்பா. என்னால முடியல... குண்டுபட்ட காலோட எப்படிப்பா... உங்களுக்கு சமமா என்னால நடந்து வர்ர முடியும்'' அதுலயும் இது சகடிப்பாதை. இப்படிப் போட்டு உருட்டி இழுக்கிறியே?''

- என்று பொறுமியபடியே சிங்கத்தேவனும் ஒரு பாறை மேல் அப்படியே உட்கார்ந்து விட்டான். மாயவனும் விட்டுப் பிடிக்க எண்ணி ''நல்லா மூச்சு வாங்கிக்க எங்க மூச்சு அடக்க வந்தவன் இல்ல நீ?'' - என்று குத்தலாக கேட்க சிங்கத்தேவன் தலை இளைப்போடு தாழ்ந்து கொண்டது!



## மேலே...

வல்லாளர்கள் மூவரும் குத்த வைத்து உட்கார்ந்திருக்க அவர்களின் குண்டுபட்ட கால்களுக்கு மணவாளசித்தர் மூலிகைச் சாற்றை கசக்கி வீட்டுக் கொண்டிருந்தார். அவர்கள் கைகள் பின்பக்கமாய் அவர்கள் வேட்டியாலேயே கட்டப் பட்டிருந்தன. எதிரில் கோசலை துப்பாக்கியோடு அவர்களையே வெறித்துக் கொண்டிருக்க பருத்தி, மனிதனின் கூடப்பிறந்த விரோதியான பசியை வெல்வதற்காக வரகரிசிக் கஞ்சி காய்ச்சச் சென்று விட்டாள்.

செண்பகக்குழல்வாய்மொழி வரை நடப்பதெல்லாமே ரணமாக இருந்தது. கடத்தப்பட்டு பத்துநாள் வரை போய் விட்டது. ஒரே உடை அது முழுக்க அழுக்கேறி விட்டிருந்தது. அமெரிக்காவில் இருந்தவரை அழுக்கை கண்ணால் கூட பார்த்தது கிடையாது. அதேபோல மனித வாழ்வின் அதிர்வான பக்கங்கள் பற்றி கற்பனை கூட செய்து பார்த்ததில்லை அவள்.

டிவியில் கூட வன்முறை காட்சிகள் வந்தால் தவிர்த்துவிட்டு விளையாட்டு சேனல்கள் பக்கம் சென்று விடுவாள்! ஆனால் அவள் வாழ்க்கைக்குள்ளேயே அவள் கற்பனை கூட செய்து பார்த்திராத வன்முறையும் சூழ்ச்சியும் வந்து நிற்கும்போது அவள் மனது உணங்கிப்போனது.

அதிலும் ஜூலியின் மரணம் அவளை அழுத்திக் கொண்டிருந்தது. உலகமே கருப்பாக தெரிந்தது. உடம்பு ஒரு மலை போல கனத்து மனதுக்குள் இனம் தெரியாத கலக்கம் அத்தோடு குகைப்பகுதியை விட்டு வெளியில் சென்றாள்.

வன்மையாய் அவளாக காலில் வரவழைத்துக் கொண்டு காயம் ஒரு சிறுகல் தைக்கவும் முகத்தில் வலியை பரப்பிற்று. மணவாள சித்தர் கவனித்தார். வல்லாளர்களுக்கு போட்ட மூலிகை மருந்தோடு அவளையும் நெருங்கி அவளிடம் அனுமதி கேட்காமல் அப்படியே மண்டியிட்டு அமர்ந்து அவளது காலுக்கும் அந்த மருந்தைப் போடத் தொடங்கினார்.

அவளுக்கு அவரது செயல் ஆச்சரியம், அதிர்ச்சி இரண்டையுமே தந்தது. வேகமாக விலகப் பார்த்தாள்.

''அவசரப்படாம நில்லும்மா... இந்த மருந்து காயத்தை பூரணமா குணப்படுத்திடும். அழுகுணிச் சித்தர்னு ஒருத்தர் கண்டறிஞ்ச மூலிகை இருந்தது. நசிஞ்சு போன சதைல கூட இது உயிர்ப்பை உருவாக்கி காயத்தை காணடிக்கும்...'' என்றார்.

''அவளுக்கும் சாறுபட்ட மாத்திரத்தில் ஒரு உச்சபட்ச எரிச்சல் பின் அது மளமளவென்று அடங்கி பரபரவென்று ஒரு மாறுதல். அவரும் நிமிர்ந்தார். சிரித்தார்.

''சாமி...''

''என்னம்மா?''

''எப்படி உங்களால சிரிக்க முடியாது?''

''எப்பவும் சிரிக்க முடிஞ்சாதானேம்மா அவன் சித்தன்?''

''எனக்கு இந்த சித்தம் முனிவர் பத்தி எல்லாம் தெரியாது சாமி! நான் அமெரிக்காவுல வளர்ந்தவ.''

''அதனால என்னம்மா, தாகத்துக்கு தண்ணிதானே குடிக்கறே. அம்மாவை அம்மான்னு தானே கூப்பிட்றே?''

''நீங்க கேக்கறது எனக்கு புரியல...?''

''எங்க இருந்தாலும் மனிதனோட சில அடிப்படை யான விஷயம் குணமும் மாறாதுன்னு சொல்ல வந்தேன்.''

''இவங்க திருடங்க... இங்க ஒளிஞ்சிருக்காங்க. நீங்க ஏன் இங்க இருக்கீங்க.''

''கேள்வியே தப்பும்மா... யாரும் இங்க ஒளிஞ்சிருக்க தேவையில்லை. இது ஒரு மனித நடமாட்டமில்லாத இடம். அவ்வளவுதான்.''

''இங்க எப்படி உங்களுக்கு பொழுது போகுது?''

''நீ இப்படிதான் கேட்பே... பரபரப்பா சினிமா, டி.வி. பேப்பர், புத்தகம், பயணங்கள், கல்யாணம் காட்சின்னு வாழற வாழ்க்கைல இருந்து வந்தவ இல்லையா?''

''இதுவா பதில்?''

''அம்மாடி... நான் சொன்னா உனக்கு புரியாது. இருந்தாலும் சொல்றேன். நீ பாக்கற இந்த கிழவன் ஒரு விஞ்ஞானி... அதாவது சைன்டிஸ்ட். ஃபிசிக்சும், கெமிஸ்டரியும் எனக்கு தண்ணி பட்டபாடு. அதை விடவே கணக்கும் எனக்கு நல்லா வரும்?

சென்ட்ரல் கவர்மென்ட் வேலை. கை நிறைய சம்பளம். ஆனாலும் மனைவி குழந்தைகளை காலம் ஒரு விபத்துல பறிச்சிகிச்சு. நான் மட்டும் தப்பிச்சேன். தப்பிச்சேன்னு சொல்றது தப்பு... நான் மட்டும் இந்த உலகத்துல மாட்டிக்கிட்டேன். என் மனைவி மக்கள் இந்த மோசமான மாய உலக வாழ்க்கைல இருந்து தப்பிச்சுட்டாங்க. அப்பதான் எனக்கு எதுவும் நம்ம கைல இல்லை.



நடக்க நடக்க ஏத்துகிட்டு, போறதுதான் வாழ்க்கைங்கற உண்மை புரிஞ்சது. இப்ப இங்க உன் நிலையும் அப்படிதான்.

விஞ்ஞானமோ கணக்கோ மாறவே மாறாதது. குறிப்பிட்ட அமிலத்தோட இன்னொரு அமிலத்தை சேர்த்தா புதுசா ஒரு அமிலம் வரும். அதேபோல அஞ்சையும் மூணையும் யார் எங்க எப்ப கூட்டினாலும் எட்டுதான் வரும். இதெல்லாம் மாறவே மாறாத மாற்ற முடியாத உண்மைகள். ஆனா இந்த மாதிரி மனித வாழ்க்கைல உறுதியா மாறவே மாறாத ஒரு விஷயத்தை சொல்லவே முடியல. அசுர முயற்சி செய்தும் முன்னுக்கு வரமுடியாம கஷ்டப்பட்றவங்க. எதுவுமே செய்யாம கோடிகளை குவிக்கிறவங்க, ஒரு கெடுதலும் செய்யாம வாழ்ந்தும் புத்து நோய், தொழுநோய்னு அவஸ்தை படறவங்க. கெடுதலையே வாழ்க்கையா கொண்டிருந்தாலும் சௌக்கியமா வாழறவங்கன்னு மனித வாழ்க்கையோட ஏற்றத்தாழ்வுக்கு பின்னால் இருக்கற உண்மைகளை தெரிஞ்சுக்கவோ புரிஞ்சுக்கவோ முடியல.

எப்ப எது நடக்கும்னு சொல்ல முடியல. நம்பளவிட மிருகங்கள் எவ்வளவோ பரவாயில்லைன்னு தோணிச்சு. ஏன்னா அவைகளுக்கு மனசுன்னு ஒண்ணு கிடையாது. அதனால துக்கமோ சந்தோஷமோ கிடையாது. சுயநலமும் கிடையாது. பசிச்சா சாப்பிடும் - வலிச்சா கத்தும் - தூக்கம் வந்தா தூங்கும். இப்படி உணர்வுகளோடு மட்டுமே அதோட வாழ்க்கை முடிஞ்சு போயிடுது. ஒரு கழுதைக்கோ குதிரைக்கோ தான் ஒரு கழுதை குதிரைங்கறதே முதல்ல தெரியாது! ஆனா நாம அப்படியா?

மேலான இனம்கற பீத்தல் பெருமைகளுக்கு பஞ்சமில்லை. ஆனா எதுவும் நம்ம கைல கிடையாது. எல்லாம் என்கைல... நான் வெச்சதுதான் சட்டம்னு வாழ்ந்தவங்ககூட ஒரு கட்டத்துல உடம்புகிட்ட நோய்வந்து சிக்கி பாடாபட்டு உசுரை விட்டுடறாங்க.

முடி நரைச்சா மை பூசிக்கற சாமாத்தியம்தான் இருக்கு. அந்த நரையை தடுக்க முடியறதில்ல. ஒரு தலைமுடி கூட நம்ம பேச்சை கேக்கறதில்லேங்கறது தானேம்மா நம் வாழ்வோட அடிப்படை யான உண்மை?''

- மணவாள சித்தரின் பேச்சும் இறுதியாக அவர் கேட்ட கேள்வியும் செண்பகக்குழல்வாய்மொழியை வெகுவாய் யோசிக்க வைத்திருந்தது. இப்படிப்பட்ட சிந்தனைகளை அவள் கேட்டதே யில்லையே!

படித்ததும் பொழுது போக்கு தகவல்களை...

எனவே பிரமிப்பாக இருந்தது. மனதுக்குள் சில புதிய பக்கங்கள் திறப்பது போலக்கூட தோன்றியது. மணவாள சித்தரும் தொடர்ந்தார்.

''என்னம்மா பிரமிப்பா பாக்கறே? இந்த உடம்பு ஒரு சிறைம்மா. அதுக்குள்ள இந்த உயிர் ஒரு கைதிம்மா... வாழ்க்கைங்கறதும் ஒரு அனுபவம்மா... அதுல ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு அனுபவம். என் அனுபவம் ஒரு விதம் - மாயவன் அனுபவனம் ஒருவிதம். உன் அனுபவம் ஒருவிதம்...''

''உண்மைதான் சாமி... எனக்கு இப்ப இங்க ஏற்பட்டு கிட்டிருக்கற அனுபவங்கள் ரொம்பவே புதுசு ஒரு பக்கம் பிரமிப்பா இருக்கு. இன்னொரு பக்கம் அடுத்து என்ன ஆகுமோன்னு பயமாவும் இருக்கு...''

''உன் வரைல நீ இப்ப வனவாசம் வந்த சீதை இடத்துல இருக்கே. இதுக்காக சந்தோஷப்படு. எப்பவும் வலிதான் வலிமை தரும். உனக்குள்ளேயும் பெரிய வலிமை ஏற்படப் போகுது. இந்த இடம் இங்க நீ அனுபவிக்கற கஷ்டங்கள் எல்லாம் ஒண்ணும் புதுசு இல்லை.

மனித சமூகமே இந்த மாதிரி ஒரு இடத்துல இப்படி ஒரு வாழ்க்கைலதானே தன் பயணத்தை தொடங்கிச்சு. சக்கரம்னு ஒண்ணை எப்ப மனுஷன் கண்டு பிடிச்சானோ அப்பவே பயணம்கற ஒண்ணு பிறந்தாச்சு. அதுதான் இந்த உலகம் ரொம்ப பெருசுங்கறதை மனுசனுக்கு புரியவெச்சது. அப்புறம் அவன் சுகங்களுக்கு அடிமையாக ஆரம்பிச்சான். அதுக்கு விஞ்ஞானத்தை பயன்படுத்தினான். அதனால் செல்போன், கெடிகாரம், மூக்கு கண்ணாடி, கால்குலேட்டர்னு எவ்வளவு கண்டுபிடிப்புகள். எல்லாமே இன்னிக்கு மனுஷனை முடமாக்கிடிச்சு. நடை செத்துப்போய் எல்லாத்துக்கும் வாகனங்கள், ஞாபசக்தியும் செத்துப் போய் எல்லாத்துக்கும் கையடக்கமான கருவிகள் இதனால் எல்லாருக்கும் சுயம்னே ஒண்ணு இல்லை. நாம எல்லோருமே இப்ப சமுதாயத்துல நமக்கே தெரியாம அடிமைக்கு அடிமையா தானே வாழ்ந்து கிட்டிருக்கோம்?''

''ஆமாம் சாமி! நூத்துக்கு நூறு நீங்க சொல்றது உண்மை.''

''நான் அந்த அடிமை வாழ்க்கைல இருந்து விடுபட்டு இங்க என் உடம்பை என்பிடிக்குள்ள வெச்சிருக்கேன். ஒரு சில இலைகள் போதும். ஒரு மாசம் எனக்கு பசியே எடுக்காது. ஒரு முழு கோமணம் தான் என்தேவை. முழு நிர்வாணம் லட்சியம். ஆனா அதை அடையற துணிவு இன்னும் வரலைன்னுதான் சொல்லணும்.



நான் இழக்க எதுவுமே இல்லை. உயிரை தவிர! அதையும் தியானத்துல என் கட்டுப்பாட்டுல வெச்சிருக்கேன். அதோ அந்த ஆகாயம்தான். நான் அதிகம் கவனிக்கற ஒரு இடம்... இந்த மலைப் பறவைகள்தான் என் தோழர்கள். எந்த தேவையும் இல்லை. அதனால எந்த எதிர்பார்ப்பும் இல்லை. நிம்மதியா இருக்கேன்.

கிட்டத்தட்ட என்னோட மனநிலையில் இருக்கறவன் தான் மாயவன்.''

- மணவாளசித்தர் தன் பேச்சில் மாயவனிடம் வந்து நிற்கவும் செண்பகக்குழல்வாய்மொழியும் கூர்மையானாள்.

''பாவம் மாயவன்! பிறப்பிலேயே இழிவு ஒட்டிக்க பிறந்துட்டான். ஆனாலும் மேலான எண்ணங்கள் கொண்டவன். ஒரு தர்மயுத்தம் நடத்திகிட்டிருக்கான்.''

''அவரை இதுல... இருந்து மீட்டு ஒரு சகஜ வாழ்க்கை வாழ வைக்க முடியாதா சாமி...?''

''தீக்குச்சியா இருந்தா எரிஞ்சுதாம்மா முடியணும். அவனும் அப்படித்தான். நான் புலனை அடக்கற யோகின்னா அவன் புலன்களை ஒடுக்கற யோகி.''

''ஒடுக்கறதுன்னா?''

''பிறர் குற்றங்களை தடுத்து அவங்களை தண்டிக்கற செயல்பாட்டை சொன்னேன்.''

''அப்ப சட்டம் எதுக்கு இருக்கு சாமி?''

''மாயவன் விதி விலக்கும்மா. சட்டத்தால அவனை தண்டிக்க மட்டும்தான் முடியும். அவனுக்காக பரிதாபப்பட்டு உச்சு உச்சு வேணா கொட்டும். ஆனா அவனை மன்னிக்க அதால முடியாது. இவனுக்கும் அதோட மன்னிப்பு தேவை கிடையாது.''

''அப்ப இவங்களோட முடிவு?''

''பாக்கத்தானே போறே?'' - மணவாள சித்தர் பேச்சு ஒரு புதிரோடு முடிந்து போனது.

''சாமி நான் இங்க இருந்த இந்த 10 நாள்ல மாயவன நல்லாவே புரிஞ்சுகிட்டேன். ஹி ஈஸ் எ வெரி ஹானஸ்ட்மேன். நிச்சயமா சட்டத்துகிட்ட இருந்து காப்பாத்தி ஒரு அமைதியான வாழ்க்கைக்கு அவரை அழைச்சுகிட்டு போக முடியும்னு நினைக்கறேன்.''

''அம்மாடி... உண்மைல உண்மையானவங்கள் புரிஞ்சுக்க ஒரு நொடி போதும்மா. அதான் நீயும் புரிஞ்சு கிட்டே அப்படி

இல்லாதவங்களை புரிஞ்சுக்கதான் பலப்பல வருஷங்கள் தேவை. உன் வரைல பத்து நாள் கிடைச்சு அதுல நீ மாயவனுக்காக மனிதாபிமானத்தோட யோசிக்க ஆரம்பிச்சிருக்கறது ஒரு நல்ல விஷயம்தான். ஆனாலும்,'' - அவர் அதற்கு மேல் கூறமுடியாமல் வானத்தைப் பார்த்தார்.

''என்ன சாமி என்னால முடியாதுங்கறீங்களா?''

''நடக்க நடக்க எல்லாத்தையும் பார்க்கத்தானே போறோம்?''

- திரும்பவும் பெரும் புதுராக இருந்தது. அவர் பேச்சு. ஆனால் செண்பகக்குழல்வாய்மொழியிடம் மட்டும் ஒரு பேரும் தீவிரம் முளைவிட்டிருந்தது. காலிலும் வலி நீங்கி இதமாக இருந்தது.

அடிவாரம்!

வல்லாளர்கள் வந்திருந்த வேன் ஒரு ஓரத்தில் நின்றபடி இருக்க அதில் சிங்கத்தேவனை ஏற்றிவிட்டு மாயவனும் ஏறிக்கொள்ள வண்டியை பெருமாள் ஓட்டத் தொடங்கினான். கரடி முகத்தை கழற்றிவிட்டு ஒரு துண்டை எடுத்து தலைப்பாகை போல் கட்டி அப்படியே தாடைக்கு கீழ் வளைத்து முகத்தில் பெரும் பாகத்தை மூடிக் கொண்டான்.

மாயவன் சிங்கத்தேவனிடம் அவன் பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்துத் தந்து பாண்டியமாணிக்கத்தை அழைக்கச் சொன்னான்.

''கூப்ட்டு என்ன பேச?''

''மாயவனை உசுரோட புடிச்சிட்டேன்னு சொல்லி என் முன்னால் போனை காட்டு. நானும் பேசறேன். கைல மூணு கோடி ரூபா பணத்தோட உடனே புறப்பட்டு மூங்கில் காட்டுக்கு வரச் சொல்லு.''

''வந்து பணத்தையும் வாங்கிக்கிட்டா என்னை விட்றுவதானே?''

''முதல்ல சொன்னதை செய். அந்த பெரிய மனுஷன் தனியாதான் வரணும். கூட அந்த காவாலி போலீஸ்காரனோ இல்ல. ஒரு பயலோ வரக்கூடாது. அது ரொம்ப முக்கியம்.''

''அப்படி சொன்னாலே அந்தாள் சந்தேகப் படுவானே?'' - சிங்கத்தேவனிடம் நியாயமான பயம்!



## 46

சிங்கத்தேவன் சொன்ன விஷயம் மாயவனை யோசிக்க வைத்தது. சில நிமிடங்களிலேயே பல வழிகள் புலப்பட்டன. அதை சிங்கத்தேவனிடம் கூறவும் சிங்கத் தேவன் முகம் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் அரண்டு போனது.

''என்ன பாக்கறே.. நான் சொன்ன மாதிரி பேசு. அந்த கேடுகெட்டவன் மூணு கோடி ரூபா பணத்தோட தனியா வந்தே தீரணும்'' மாயவனின் கட்டளைக் குரல் சிங்கத் தேவனை பேசவைத்தது. செல்போனை எடுத்து பாண்டிய மாணிக்கத்தையும் கூப்பிட்டான்.

''யாரு சிங்கத்தேவனா?''

''ஆமாம்...?''

''என்னவே ஆமாம்... ஆரம்பமே சரியில்லையே?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஒரு முக்கியமான சங்கதி.''

''மாயவனை போட்டு தள்ளிட்டியா. அதைச் சொல்லு முதல்ல?''

''மாயவன் இப்ப என்கைல... நாங்க இப்ப மூங்கில் காட்டுக்குள்ளார இருக்கோம்?''

''என்னலே சொல்றே? தலையோட வாரேன்னுட்டு மூங்கில் காட்டுக்குள்ளார என்ன பண்ணுறே?''

''அங்கதான் பாதுகாப்பா இருக்க முடியும்னு தோணிச்சு.''

''விசயத்துக்குவா! மாயவனைப் புடிச்சிட்டியா?''

''வ.வல்லாளனா கொக்கா... மாயவன் புலம்பல கேளு...''

- செல்போன் மாயவன் முன் நீண்டது. மாயவனும் புலம்புவது போல நடித்தான்.

''எலேய் படுபாவி... என் தலைக்கு மூணு கோடி ரூவாயா? அப்படின்னா உன்னாண்ட எம்புட்டு கோடிங்க இருக்கணும்?''

''அது இருக்குது நூத்துக் கணக்குல. நான் என்ன உன்ன மாதிரி நெற்றில முத்திரை குத்திக்கிட்ட கள்வனா - வெளிப்படையா களவாண்டு ஒளிஞ்சு திரியிறதுக்கு...''

''வேணாம்யா... எங்க பாவம் உன்னிய சும்மா விடாது.''

''பாவமா... அது எப்படி இருக்கும்? அது என்னா கலரு?''

''எகத்தாளமா? எலேய் சிங்கத் தேவா?''

''சொல்லுய்யா?''

''என்னா சொல்லுய்யா... இவனை போட்டுத் தள்ளி கரகரன்னு கழுத்த அறுத்து கையோட கொண்டு கிட்டுவராம மூங்கில் காட்டுல நின்னுகிட்டு என்னய்யா பண்றே?''

''விசயம் இருக்குல்ல...''

''என்னா விசயம். இருந்தாலும் நீங்க கில்லாடிங்க தான்யா. எப்படியோ இந்த நாயை பிடிச்சிட்டீங்களே! ஆமா எங்க என் மவ?''

''அது சரி... இப்பவாச்சும் கேக்கணும்னு தோணிச்சே.''

''விசயத்துக்கு வாய்யா... இங்க வேற இரண்டு பேர் என்ன பாடாய் படுத்திக்கிட்டு இருக்காங்க.''

''அது ஒண்ணுமில்ல... பணத்தோட நீங்க மட்டும் மூங்கில் காட்டுக்கு வந்தா நல்லா இருக்கும்.''

''நான் வர்றதா என்னய்யா ஆச்சு உனக்கு?''

''நான் வளவளன்னு பேசாம விசயத்துக்கு வந்துடறேன். இந்த மாயவனை நான் போட விரும்பல. நீங்களே வந்து உங்க கையால கொன்னு தூங்கிட்டு போங்க.

உங்க பங்களாவுக்கு இவன் தலையோட.... நான் வர்றது பெருசு இல்லை... அது உங்க இடம் - பணத்தை தரலாம். தராம என்னை சுட்டுபிட்டு மாயவனே கொன்னுட்டான்னு கூட சொல்லலாம். ஆகையால் பணத்தோட நீங்க வர்றதுதான் எங்க வரைல புத்திசாலித்தனம். அடுத்து தனியாதான் வரணும்.''

''சிங்கத் தேவா... உன் பேச்சே சரியில்லடா. ஏதோ கணக்கோட இருக்கே நீ.''

''ஆமா... எனக்கு காசு வரணும் அதான் கணக்கு. இந்த மூணு கோடிய அவனை உசுரோட விட்றதா இருந்தா மாயவனே கூட தாரேங்கறான். எப்படி வசதி!''

''அடப்பாவி!''

''பாவியா... புத்திசாலின்னு சொல்லுங்க. வருங்கால மந்திரி. உங்களுக்குதான் யோசிக்க தெரியுமாக்கும்! இப்ப வந்து என்கைல.''

''சரி என் மவள பத்தி எதுவுமே சொல்லலியே நீ...''

''பத்ரமா இருக்குறா... பணத்தோட வாங்க மாயவன போட்டுத் தள்ளிட்டு மவளயும் கூட்டிகிட்டு போய்கிட்டே இருங்க.''



''எங்க, போனை அப்படியே கொஞ்சம் என் மககிட்ட கொடு...''

- பாண்டியமாணிக்கம் சட்டென்று கேட்கவும் சிங்கத் தேவனிடம் ஒரு திணறல். மாயவனைத்தான் பார்த்தான். மாயவனும் சமாளிக்குமாறு ஜாடை காட்டினான்.

''அவ இப்ப இங்க இல்லை. என் வீட்ல இருக்கறா. பணம் என் கைக்கு வரவும், நான் போன் பண்ணா என்பங்களாளிங்க கூட்டிகிட்டு வருவாங்க.''

''அப்ப என்னை நம்பாமலே நீ என் விசயத்துல வேலை பாத்துருக்கே? அப்படித்தானே?''

''அப்படியேதான்.''

''சிங்கத்தேவா! இப்ப நான் சொல்றத நீ நல்லா கேட்டுக்க. அவன் தலையோட முன்ன பேசின மாதிரியே வர்றதா இருந்தா வா. உன்னோட பணத்தை நான் ஏமாத்த மாட்டேன். இல்லாட்டி உன் நோக்கம் போல போய்க்கோ... உன் பேச்ச கேட்டு நான் தனியால்லாம் மூங்கில் காட்டுக் கெல்லாம் வரமாட்டேன். கூட என் மவளும் வரணும். இதுல எதுவும் மாறக்கூடாது. இல்லாட்டி நடக்கறது நடக்கட்டும் எது வந்தாலும் நானும் சமாளிக்கறதுங்கற முடிவுலதான் இருக்கேன்.''

- என்ற பாண்டியமாணிக்கம் பதில் சிங்கத்தேவனை மீண்டும் மாயவனை பார்க்க வைத்தது. அப்படியே கைகளும் செல்போனை ஆஃப் செய்தன.

மாயவனும் பாண்டியமாணிக்கத்தின் பதிலை கேட்டு அடுத்து என்ன செய்வது என்பதுபோல் யோசித்தான்.

''நான் சொன்னேன்ல...? இவன் ஜித்தன் எதுக்கும் அடங்கமாட்டான். இன்னேரம் மூங்கில் தோப்புக்கு போலீசையும் அனுப்பியிருப்பான்.''

''அனுப்பட்டும். அங்கதான் நாம இல்லையே...?'' என்றான் கடாரன்.

''மாயவா... வெரசா ஒரு முடிவைச் சொல்லு. இப்ப நாம என்ன பண்ணப்போறோம்?''

''எதையாவது பண்ணியே ஆகணும்ப்பா. அவன் விவரமானவன்னா நாம விவரத்துக்கு விவரம்னு காட்டணும்'' என்றான் உளியன்.

''காட்றேன்... அவனுக்கு கொடுக்கப் போற தண்டனையை பாத்து ஊரு உலகமே அச்சப்படணும். ஆமா அந்த ஊட்ல தானே அந்த டி.விகாரங்களை அவன் அடைச்சு வெச்சிருக்கறதா செல்லக்கிளி சொன்னா?''

''எப்படிப்பா...?''

- கேள்விக்கு பதிலை மாயவன் சிங்கத்தேவன் காதில் கூறினான்.

சிங்கத்தேவனும் திரும்பவும் பாண்டிய மாணிக்கத்துக்கு போன் போட்டான்.

''என்னய்யா... என்ன முடிவு செய்துருக்கே?''

''ஐயா உங்க விருப்பப்படியே மாயவன் தலையோட வர்றேன். உங்க மவளோடயும் வரேன். ஆனா ஒண்ணு...''

''என்ன?''

நாங்க இப்பவும் கரடி உடுப்புலதான் இருக்கோம். அதே வேஷத்துல தான் வருவோம். நாங்க வரும்போது யாரும் எங்கள உள்ள விடமாட்டோன்னோ, இல்லை நாங்க யாருன்னோ தெரிஞ்சிக்கறத நாங்க விரும்பல.

''சுத்தி வளைக்காம விசயத்துக்கு வா.''

''நாங்க கரடி வேசத்தோடயே வர்றோம்... மாயவன் தலைய கொடுக்கறோம். மவளையும் ஒப்படைக்கறோம். பணத்தை வாங்கிட்டு போய்கிட்டே இருப்போம். எங்கள யாரும் பாக்கறத விரும்பல. யாரோ நாலு பேர் கரடி வேசத்துல வந்தாங்கன்னு கூட சொல்லிட்டு போகட்டும்.

வல்லாளனுங்கதான் கொன்னாங்கன்னோ, இல்லை நீங்க எங்களுக்கு பணம் தரப் போவதையோ யாரும் பாக்கவோ கேக்கவோ கூடாது. வீட்ல யாரும் இருக்கவும் கூடாது. இது எங்க பாதுகாப்புக்கு நாங்க பண்ணிக்கற விசயம். இதுக்கு உங்களுக்கு சம்மதமா?''

''தாராளமா... இதுதான் பேச்சு. எனக்கும் மாயவனை நீங்க கொன்னீங்கன்னு சொல்றதுல பெருமை இல்லை. போலீசு சாதிச்சிச்சுன்னு சொன்னாதான் எனக்கும் பெருமை. அப்பதான் நானும் திரும்ப மந்திரியா வரமுடியும்.''

- பாண்டியமாணிக்கம் சம்மதம் கூறவும் மாயவன் பார்வை உளியனை பார்த்தது.



''உளியா மேலபோய் அந்த பொண்ணை கூட்டிகிட்டு வா.''

''மாயவா... உன் திட்டம் என்ன அதை சொல்லு.''

''இவன் கைல ஒரு ஆடு ஒண்ணை வெட்டி அதோட தலைய கொடு. அதை பைல போட்டு ரத்த சகதியோட இவனும் எடுத்துக்கட்டும். நாம நாலு பேரும் கரடி வேசத்தை கலைக்காம, அவன் மகளோட இவனையும் கூட்டிகிட்டு போவோம்.

நாலு பேரும் உள்ற நுழையறோம். அந்த கேடு கெட்டவன் முன்னால முகமூடியையும் கழட்டறோம்?

''புரியுது... அவனை போட்டுத் தள்ளிட்டு பணத்தை யும் அள்ளிக்கிட்டு அதே கரடி வேசத்துல கிளம்பறோம். அதான் உன் திட்டம்.''

''ஆமாம். சிங்கத்தை அதோட குகைலயே சந்திப்போம். நமக்கு அங்க உதவி பண்ண வீரைய்யனும் இருக்கான். நம்மை காப்பாத்தப் போறது இந்த கரடி உடுப்புங்க. இவ்வளவுதான் விஷயம்.''

- மாயவனின் திட்டம் செயல்படத் தொடங்கியது. உளியன் திரும்ப மலை ஏறினான்.

சிங்கத்தேவன் மாயவனிடம் பரிதாபமாக கெஞ்சத் தொடங்கினான்.

''மாயவா... எங்கள எதுவும் செய்யாம விட்டுடு மாயவா?''

''நிச்சயம் எதுவும் செய்ய மாட்டேன். கொலை வெறி என்னோட நோக்கம் கிடையாது'' என்ற மாயவனை ஆச்சரியத் தோடும் முதல் தடவையாக மரியாதையோடும் பார்த்தான் சிங்கத்தேவன்!

## 47

**பா**ண்டியமாணிக்கம் பங்களாவில் பாண்டிய மாணிக்கத்திடம் ஒரே பரபரப்பு மனதுக்குள் தான் அப்போதே ஜெயித்து விட்டதுபோல ஒரு கும்மாளம்.

சிங்கத்தேவன் மாயவனை கொன்று விட்டதாக சொன்னது பாண்டிய மாணிக்கத்தை அப்படியே ஆகாயத்தில் மிதக்க விட்டிருந்தது இளங்கோவை அழைத்து அதை பகிர்ந்து கொண்டார்.

''எலேய் போலீசு... நீ உன் டிபார்ட்மென்ட்டால முடிச்சு முடியாததை வல்லாளனுங்க சாதிச்சிட்டாங்கடா! அப்படிச்

சொன்னா அது கூட தப்பு... நான் தாரேன்னு சொன்ன மூணு கோடி ரூபாய்க்கு அம்புட்டு சக்தி. தெரிஞ்சிக்கோ... பணம்தான் எல்லாம். அது மட்டும் இருந்தா கைலாசத்துல பரமசிவன்கிட்டயே என்ன சங்கதின்னு நெஞ்ச முட்டிக்கலாம்?''

- பாண்டியமாணிக்கம் பேசப்பேச இளங்கோவுக்குள் ஆச்சரியம் எகிறியது. அதே சமயம் அந்தப் பக்கமாய் வந்த வீரைய்யன் அதைக் கேட்டு அப்படியே அதிர்ந்து நிலைகுலைந்து விட்டிருந்தான்.

''ஐயா நெசமாங்களா...? மாயவனை வல்லாளங்க... சாச்சிட்டாங்களா?'' - இளங்கோவும் நம்பாமல் கேட்டார்.

''நீ நம்பாம இப்படி கேப்பேன்னு தெரியும்யா. அதான் மாயவன் தலையோட என்னை பாக்க வந்துகிட்டு இருக்கான் சிங்கத்தேவன்?''

''எப்படிங்க... இப்பகூட என்னால நம்ப முடியலங்க...''

''அதான்யா சிங்கத்தேவன்...! வைரத்தை வைரத்தால அறுக்கற மாதிரி அவனை அவன் போக்குல போய் அமுக்கி யிருக்காங்க. இப்பகூட எப்படி வரப்போறாங்கன்னு நினைக்கறே...? அவனை புடிக்க எந்த கரடி வேஷத்துல போனாங்களோ... அதே வேஷத்துலதான் வந்துட்டிருக்காங்க வெளிய உன் டிபார்ட்மென்ட் ஆளுங்களாண்ட சொல்லி அவங்க வண்டிய உள்ள விடச் சொல்லு. கூடவே என் மவளும் வர்றா...''

''அப்படிங்களா... பாப்பாவை அவன்கிட்ட இருந்து மீட்டுட்டாங்களா?''

''அவன் தலையையே வாங்கியாச்சு. அப்புறம் என்னய்யா?''

''இப்பவும் சொல்றேன். நம்ப முடியலய்யா.''

''அடேபோய்யா புண்ணாக்கு. நீயும் உன் டிபார்ட் மெண்ட்டும். சைக்கிள்ள டபுள்ஸ் போறவங்கள பிடிக்கறதான்யா லாயக்கு. சரி... சரி... நான் இப்ப உன்ன கூப்ட்டது எதுக்குன்னு சொல்லிடறேன்.

அந்த டி.வி.க்கார குட்டியையும் கேமராமேனையும் கூட்டிக்கிட்டு நீ வேகமா கிளம்பறே. இப்ப இருந்து முப்பது நிமிசத்துக்குள்ளார அவங்கள துப்பாக்கியாலே சுட்டுப்பிடு. உன் டிபார்ட்மென்ட் துப்பாக்கியால சுட்டு வெச்சு பின்னால பிரச்சனையை இழுத்து விடாதே. நான் தர்றேன் ஒரு நாட்டுத் துப்பாக்கி. உன் கணக்குப்படி அது மாயவன் வெச்சிருந்த துப்பாக்கி.



மாயவனை படம் புடிக்கப் போன அந்த டி.விக்காரக் குட்டியையும் கேமராக்காரனையும் மாயவன் சுட்டுப்பிட்டான்னு நீ கதை கட்ட தோதா இருக்கும்.

அப்புறம் இன்னொரு முக்கியமான விசயம்...

மாயவனை கொன்னது வல்லாளங்களா இருக்கலாம். அது உனக்கும் எனக்கும் மட்டும்தான் தெரியும். கடைசி வரைலயும்கூட உனக்கும் எனக்கும் மட்டும்தான் தெரிஞ் சிருக்கணும். ஊரைப் பொருத்த வரை விசயம் என்னன்னா நீங்கதான் மாயவனை விரட்டி சுட்டது.'' என்றார்.

- பாண்டியமாணிக்கம் நிஜம் தெரியாமல். ஆனால் தன் பாணியில் ஒரு ஸ்கெச் போட்டுத் தந்தது இளங்கோவை வாயடைக்கச் செய்துவிட்டது. அது திருதிருவென இளங்கோ முழிப்பதில் நன்றாகவே தெரிந்தது. ஒளிந்திருந்த வீரைய்யனுக்கோ நெஞ்சை அடைத்தது. கண்களில் கண்ணீர் பீறிடத் தொடங்கி யிருந்தது.

''என்னய்யா பாக்கறே?''

''ஒண்ணுமில்லீங்க.''

''ஒண்ணுமில்லைதான்யா... இனி ஒண்ணுமே இல்லை. எவன் எனக்கு வில்லனோ அவன் இல்லவே இல்லை. இனி நான் வெச்சதுதான் சட்டம். நீ வேணா பாரு. இதே சூட்டோட நான் திரும்பி மந்திரியாகிக் காட்றேன். அது மட்டுமில்ல. என் மகளுக்கும் ஒரு ராஜ்யசபா எம்.பி. போஸ்ட் உறுதி.''

- பாண்டியமாணிக்கம் பேசப்பபேச. இளங்கோவுக்கு நின்ற இடத்துக்குக் கீழ் பாதங்கள் குறுகுறுத்தது.

'இந்த மனிதனுக்கு இப்படி ஒரு பவர் ஜெனரேட் ஆகும்' என்று கற்பனை கூட செய்து பார்த்திராமல் அவரிடம் ஐம்பது லட்சம் வரை பேரம் பேசியதெல்லாம் நிரடியது. டி.வி.காரப் பெண்ணான பத்மினியையும் அந்த கேமராமேனையும் வேறு போட்டுத்தள்ள வேண்டும். இதெல்லாம் என்ன கணக்கு? இதற்கு தானே ஐம்பது லட்சம் பேசினோம்? ஏற்கனவே ஜூலியை கொன்றாயிற்று.

நான் காவல் காக்கும் போலீஸ்காரனா - இல்லை இந்த அரசியல்வாதி, யூனிஃபார்ம் போட்டு வைத்திருக்கும் கொலைகாரனா?' - இளங்கோவுக்குள் நியாயமாக எழும் கேள்வி எழும்பி மனசாட்சியை கொஞ்சம் போல இன்றி நிறையவே கிள்ளிற்று.

''என்னா யோசிச்சிகிட்டே இருக்கே...? போலீஸ் உத்யோகமே வேண்டாம். அம்பது லட்சத்த கொடுன்னு பேரம்பேசினோமே இப்ப என்ன பண்றது? சார் மந்திரியா யிட்டா ஐ.ஜி. வரை கூட ஆவறதுக்கு சான்சு இருக்குதே. அதை கெடுத்துக் கிட்டோமேன்னு மனசு அறுக்குதா?''

''இல்லீங்க. அப்படி எல்லாம் இல்லை. அதே சமயம் சத்தியமா இந்த மாயவன் விசயம் இப்படி பொசுக்குன்னு முடியும்னும் நான் நினைக்கலீங்க.''

''நீ பேசறத பார்த்தா ஏண்டா முடிஞ்சிச்சின்னு நினைக்கற மாதிரி தெரியுதே.''

''இல்லீங்க... அவன் என்னிக்கு இருந்தாலும் தலைவலி தாங்களே? என் கையால் சுட்டுக் கொன்னுருந்தா இன்னும் கொஞ்சம் நல்லா இருந்துருக்கும். ஆனா அது நடக்காம போயிடிச்சேன்னுதான்.''

''ஏய்... மூடு - அதான் நீ கொன்னதாதான் ஊர் உலகம் சொல்லப் போவுதுங்கறேன்ல... உனக்குத் தான்யா மெடல்.''

''அட. மெடல் யாருக்குங்க வேணும்.''

.''என்னா சுருதி குறையுது...! முனங்காதே... நேரமும் ஆகிகிட்டே போவுது பார்... அந்த சிங்கத்தேவன் தலையோட இங்க வரும்போது நீ இங்க இருக்கக்கூடாது புறப்படு அந்த ரெண்டு பேரையும் கூட்டிகிட்டு..''

''ஐயா...''

''என்ன?''

''திரும்பவும் சொல்றேன்... எனக்கு போலீஸ்ல மெடலெல்லாம் வேண்டாங்க.''

''அப்ப நீ அந்த அம்பது லட்சத்த உடமாட்டே?''

''......''

''புரிதுய்யா... வல்லாளனுங்களுக்கு மூணு கோடிய கொடுக்க முடியுது எனக்கு அம்பது லட்சம் தரமுடியாதான்னு பாக்கறே... இப்ப சொல்றேன் கேட்டுக்க. போலீஸ்ல உன்னிய மாதிரி ஒருத்தன் எப்பவும் என் பக்கத்துல இருக்கணும்யா. அதுவும் இப்ப இருக்கற போஸ்டிங்கை விட பெரிய போஸ்டிங்ல. ஆகையால் உனக்கு பணமும் தரேன். போஸ்டிங்கும் வாங்கித் தரேன் போதுமா?''

''ஐயா நெசமாங்களா?''



''இது என் ஒரேமவ செண்பகக்குழல்வாய்மொழி மேல சத்தியம்... போதுமா?''

அடுத்த வினாடி இளங்கோ முகத்தில் போன கரண்ட் திரும்ப வந்த மெர்குரி பல்பாட்டம் ஒரு ஒளி.

''பொறப்படு... காரியத்த கச்சிதமா முடிக்கணும். ஒருத்தருக்கு இரண்டுபேர் கூட யாரையாச்சும் கூட்டிப் போறியா?''

- பாண்டியமாணிக்கம் கேட்கும்போதும் இளங்கோ யோசிக்கும் போதும் சற்று தள்ளி மறைவில் நின்றபடி இருந்த வீரைய்யனிடம் ஒரு முடிவு.

ஆனால் இளங்கோவிடம் ''வேண்டாங்க... களவுக்கும் கொலைக்கும் கூட்டு ஆவாதும்பாங்க. நான் தனியாப் போய் பாத்துக்கறேன்...'' என்ற பதில் வீரைய்யனை மேலும் பதற வைத்தது.

இவர்கள் பேசிக் கொண்டபடியே எல்லாம் நடப்பது என்பது சரியில்லையே... ஜூலியைத்தான் இந்த போலீஸ்காரனிடம் இருந்து காப்பாற்ற முடியவில்லை. குறைந்தபட்சம் பத்மினி. சரவணனையாவது எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்கிற ஒரு முடிவுக்கு வந்து விட்டிருந்த வீரைய்யன் அடுத்து நடப்பதை ஒண்ணும் தெரியாததைப் போல் கவனிக்கத் தொடங்கியிருந்தான்.

இளங்கோ அறைக்குள் நுழைந்து பத்மினியையும், கேமராமேன் சரவணனையும் வீட்டின் பின்பக்கம் கொண்டு சென்று அப்படியே அங்கிருக்கும் குளக்கரை வழியாக ரகசியமாக வெளியேறி அவர்களோடு அங்கிருந்து கிளம்ப ஏற்பாடு செய்திருந்தார்.

குளக்கரை கடந்து வயல் வெளியில் ஒரு வேன் நின்று கொண்டிருந்தது. பத்மினிக்கும் சரவணனுக்கும் வாயில் பிளாஸ்திரி. கைகள் இரண்டும் பின்பக்கமாக கட்டப்பட்டிருந்தன.

'நடங்க' என்று ஆடுகளை பிரம்பால் அடிபத்து தள்ளி அழைத்துச் செல்வது போல இருவரையும் அழைத்துச் செல்ல முயல்கையில் பத்மினி சரேலென்று திரும்பி வீட்டுக்குள் ஓடப் பார்த்தாள்.

அவள் நோக்கம் வீட்டிற்கு வெளியே இருக்கும் சில பத்திரிகையாளர்கள் - பொதுமக்கள் கண்ணில்தான் பட்டுவிட வேண்டும் என்பதுதான்.

ஆனால் பாவம்...! வாசல் அருகே இருந்த பாண்டிய மாணிக்கத்தின் ஆட்கள் அவள் ஆசையை குலைப்பது போல வழிமறித்து அவளை திருப்பி அனுப்பினர். இளங்கோவும் திரும்பி வந்து,

'தட்டுவாணி... எனக்கே தண்ணி காட்றியா நீ...' என்று சடையைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் செல்ல ஆரம்பித்தார். அதை மாடியில் இருந்து பார்த்த பாண்டிய மாணிக்கமும் ''இளங்கோ... இவளுக்கு ஒரு தோட்டா வெல்லாம் போதாது. மெஷின் கன்னாலயே போட்டு தாளிச்சிடு...'' என்றார் நறநறக்கும் குரலில்...

இளங்கோவும் தரதரவென்று இழுத்துச் செல்ல மெல்ல வீரைய்யனும் சென்றான்.

குளக்கரைப் பகுதி! தயாராக இருந்த வேனுக்குள் இருவரையும் தள்ளிவிட்டு இளங்கோ ஏறிக் கொள்ள ஓடிப்போய் அருகில் நின்றான் வீரைய்யன்.

''என்ன வீரைய்யா...''

''ஐயா உங்ககூட என்ன போவச் சொன்னாரு.''

''நான் யாரும் தேவையில்லன்னுல்ல சொல்லி யிருந்தேன்.''

''அது சரி... இவ இப்படி இங்க ஓடுன மாதிரி காட்டுல ஓடப் பார்த்தா என்ன செய்வீங்க. ஒரு ஆளா இருந்தாலும் பரவாயில்ல. அதான் நீயும் போடான்னு என்னை அனுப்புனாரு.''

- வீரைய்யன் அழகாக சமாளித்தான்.

அதே வேகத்தில் வேனுக்குள் ஏறியவன் ''இந்த இரண்டு பேரையும் நல்லா நெஞ்சுலயே சுடணும். எவ்வளவு தைர்யம் இருந்தா எங்க ஆண்டே கிட்டயே மோதுவீங்க?'' படம் புடிக்கத் தெரிஞ்சா பெரிய தொரமாருங்கங்கற நெனைப்பா?'' என்று கேட்டப்படியே கேமராமேன் கன்னத்திலும் ஒரு இடி இடித்தான். அது இளங்கோவையும் கட்டிப் போட்டது. வேனைக் கிளப்பச் செய்தது.

பத்மினி மட்டும் தன் கூரிய விழிகளால் அதிகபட்சமாய் கலங்கி வெறித்தாள். அப்போது இளங்கோவுக்கு தெரியாதபடி அவர்களுக்கு ஜாடை காட்டிய வீரைய்யன் மெல்ல அவர்கள் கை கட்டையும் அவிழ்த்துவிட முனைந்தான்.

பேச்சோ அவர்களை திட்டியபடியே இருந்தது.



''ஏண்டா கண்ணாடிக்காரா உன் கண்ணுக்கே கண்ணாடி போட்டுகிட்டிருக்கே. இதுல நீ கேமராவுல படம் புடிச்சா அது என்னத்தடா வெளங்கும்?

ஏண்டி பொட்டச்சியா லட்சணமா ஊட்ல இட்லி சுட்டோமா சட்டினி அரைச்சோமான்னு இல்லாம உனக் கெல்லாம் எதுக்கு இப்படி ஒரு வேலை? நீ எல்லாம் சேலை கட்னாலே பாக்க சகிக்காது. இதுல கொளாய் வேற... கருமம்டி...''

- இப்படி வீரைய்யனிடம் எகத்தாளப் பேச்சு. ஆனால் கைகள் மளமளவென்று அவர்கள் கை கட்டுகளை அவிழ்த்துவிட்டு விட்டிருந்தது.

வேன் நிற்கும்போது இருக்கிறது அடுத்த கட்டம்!

செண்பகக்குழல்வாய்மொழி வந்து விட்டிருந்தாள். சிங்கத்தேவனுடன் அந்த வேனும் புறப்பட்டது. செண்பகம் மாயவனிடம் ''உங்க திட்டம் என்ன... என்னை என்ன செய்யப் போறீங்க!

- என்று கேட்டாள்.

அது நடக்கையில நீ தெரிஞ்சுக்கவே... உங்கப்பனோட எங்க கணக்கு நேராகப் போவுது. இனி உன்னை எங்க கூட வெச்சிருந்து உன்னை கஷ்டப்படுத்த நாங்க விரும்பலை. எதுவா இருந்தாலும் சரி... உனக்கு ஏற்பட்ட கஷ்டத்துக்காக நான் வருத்தப்பட்றேன். உன்கிட்ட அதுக்காக மன்னிப்பு கேட்டுக்கறேன்.

''சத்யமா... நீ எப்படி அந்த ஆள் வயித்துல வந்து பொறந்தேன்னே தெரியல. நெனைச்சா மலைப்பா இருக்கு? என்றான் மாயவன்.

அந்த பேச்சு சுவாரஸ்யத்தில சிங்கத்தேவனை சற்று கவனிக்கத் தவறிய வினாடிகளில் சிங்கத்தேவனிடம் ஒரு புது வேகம். மளுக்கென்று ஓடும் வேன் கதவை திறந்து கொண்டு ஆட்டுத்தலை உள்ள பையை உதறிவிட்டு வெளியே குதித்தான்.

## 48

பாண்டியமாணிக்கம் எல்லையில்லாத செருக்கில் இருந்தார். ஹாலில் பழனியம்மாளின் படத்திற்கு மாலை போடப்பட்டிருந்தது. அதன் முன்னால் சென்று நின்று ஏறெடுத்துப் பார்த்தவர் ''ஆத்தா நீ அநாவசியமாப் பதட்டப்பட்டு, அவசரமா போய் சேர்ந்துட்டே. உன் மவன் ஒரு வேட்டை நரி. வேங்கைப்புலின்னு தெரிஞ்சும் பயந்துட்டே... இப்ப பார்! நான் ஜெயிச்சுட்டேன்!

கைக்காசு கொஞ்சம் போவப் போவுது.

அதனால என்ன? அம்புட்டையும் ஆறு மாசத்துல எடுத்துட மாட்டேன்?''

- என்று மனதுக்குள் பேசிக்கொண்டார். அப்போது அருகில் கண்டரோல் ரூமில் எலெக்டரானிக்ஸ் எந்திரங்களை ஆபரேட் செய்யும் கண்ட்ரோல் ரூம் போலீஸ்காரர் ஒருவர் அவர் அருகில் வந்தார். அவர் மூலமாகத்தான் பத்மினி நியூஸ் சேனலுக்கு அவளது செல்போனில் இருந்தும் செய்திகளும் காட்சிகளும் சென்ற வண்ணமிருந்தன.

''என்னய்யா சொன்ன மாதிரி செய்திய அனுப்பிட்டியா?''

''பவர் கட்டாயிடிச்சிய்யா... செல்லுலயும் சார்ஜ் இல்லை. பவர் வந்த உடனே மெஸ்ஸேஜ். போயிரும்...''

''விசயம் அந்த டி.வி.காரங்களுக்கு மட்டுமில்ல போலீஸ் டிபார்ட்மென்ட் பெரிய தலைங்களுக்கும் போய்ச் சேரணும்.''

''கரண்ட் வந்த உடனே அஞ்சு நிமிஷத்துல போயிரும்யா...''

''பாத்து... கவனம்...''

''ஐயா...''

''என்ன?''

''நெசமாலுமே மாயவனை கொன்னாச்சுங்களா?''

''புரியுதுய்யா... என் இஷ்டத்துக்குல்ல இப்ப செய்தி போய்கிட்டிருக்குது. அதனால மாயவன் செத்துட்டாங்கறதும் என் இஷ்டம்னு நீ நினைச்சுட்டே... அப்படித்தானே?''

மௌனமாய் அதை ஆமோதித்தார் அவர்.

''அவன் செத்துட்டான்யா... இன்னேரம் அவன் உடம்பு வேற கழுத்து வேறன்னு ஆகியிருக்கும் இதை சாதிச்சது யாருன்னு நினைக்கிறே?''



''யாருய்யா?''

''உன் டிபார்ட்டென்ட்டுதான்... என் கூடவே இருப்பானே எஸ்.ஐ.இளங்கோ... அந்தாள்தான்?''

''இளங்கோ சாருங்களா?''

''உனக்குதான் அவன் சாரு - மோரு - தயிர் வடை...! எனக்கு அவன் என் காவல்காரன் அவ்வளவுதான். இப்ப அவன் எங்கேயிருக்காங்கறே... மாயவனை புடிக்கத்தான்... அப்பால இன்னொரு விசயத்தையும் நீ பாக்கப்போற இந்த இளங்கோ என்கிட்ட காட்டுன விசுவாசத்துக்காக இந்த தேனி ஜில்லா எஸ்.பி.யாவே வரப் போறான். எனக்கு விசுவாசம் எப்பவும் ரொம்ப பெரிசுலே. நீகூட இப்ப என் பேச்ச கேட்டுச்செய்தி அனுப்பி கிட்டிருக்கே. இது அப்படியே நமக்குள்ள ரகசியமா இருக்கணும். உனக்கும் பிரமோசன் நிச்சயம். கவலைப்படாதே. இந்த பாண்டியமாணிக்கம் எதையும் மறக்காதவன்... மறக்கவும் மாட்டேன்.''

- பாண்டியமாணிக்கம் குரலில் உற்சாகம் பீறிட்டது. உதட்டில் சுருட்டு ஒன்று ஏறி அமர்ந்த கொண்டது. அவர் பற்ற முனையும்போது அந்த போலீஸ்காரரே தன் லைட்டரால் பற்ற வைத்தார்.

''கப்புன்னு புடிச்சிகிட்டியே... எங்க இப்ப எப்படி மேட்டரை அனுப்பப் போறே. கொஞ்சம் சொல்லு கேட்போம்...''

''எழுதி வெச்சிருக்கேன் சார். படிச்சிட்றேன்.''

''படி... படி... படி...'' புகை உமிழும் உதட்டோடு பரபரப்பானார்.

''பிரபல கள்ளன் மாயவன் போலீசாரால் கொல்லப் பட்டான் சுற்றி வளைத்துப் பிடிக்க முனைந்போது போலீஸ் வசம் உயிரோடு சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காக தன் வசம் உள்ள கத்தியால் கழுத்தை வெட்டிக் கொண்டு உயிரை விட்டான்'' - இது ஒரு ஸ்க்ரோலிங் நியூஸ்யா...

''அப்படின்னா?''

''டி.வில கீழ எழுத்தா ஓடுங்களே... அது...''

''ஓ... அதுவா... சரிதான்... ஆமா இந்த டி.விக்காரப் பொண்ணு - கேமராக்காரன் இவங்களை எல்லாம் மாயவன் கொன்னுட்டான்னு சொன்னேனே... அந்த நியூசு?''

''அது அடுத்த ஸ்க்ரோலிங் வரிகள்யா... படிக்க றேன்யா... பல பேரை கொலை செய்தும், பல வீடுகளை கொள்ளை அடித்தும் தலை மறைவுக் குற்றவாளியாக வாழ்ந்தவன் இவன்!''

''சபாஷ்... அப்பால...?''

''முன்னாள் அமைச்சர் பாண்டியமாணிக்கத்தின் மகளின் தோழியையும் விஷஊசி போட்டு கொலை செய்த இந்த மாயவன், பேட்டி காணச் சென்ற தொலைக்காட்சி நிருபர் பத்மினியையும், கேமராமேன் சரவணனையும் சுட்டுக் கொன்று விட்டான்...''

''அப்படி போடு... இன்னும் ஒரு விசயம் மிச்சமிருக்கற மாதிரி தெரியுதே...?''

''இவனது சகாக்கள் உளியன், பெருமாள், கடாரன் ஆகியோர் போலீஸ் வேட்டையின் போது ஓடிவிட்டனர். விரைவில் அவர்களும் பிடிபடுவார்கள். வரதம்பட்டி காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் இளங்கோ தன் உயிரைப் பணயம் வைத்து மாயவனை சுற்றி வளைத்தார்...''

''அப்படி போடு... அப்படியே அந்தப் பருத்தி, கோசலைங்கற அவன் அங்காளி பங்காளிங்கல்லாமும் ஓடி ஒளிஞ்சிட்டாங்கன்னு போடு. இந்தப் பருத்தி, கோசலை ரெண்டு பேரும் கஞ்சா தொழில் பண்ணி போலீஸ்ல மாட்டுனாங்கன்னும் சேர்த்துக்க...

இனி அந்த ரெண்டு நாயுங்களும் இந்த தமிழ் நாட்டுலயே இருக்கக்கூடாது. ஒண்ணு நாண்டுகிட்டுச் செத்துப் போவணும். இல்ல திருட்டுரயில் ஏறி வடக்க ஓடிடணும்...''

செருமலோடு மீசையை நீவிவிட்டுக் கொண்டார். கண்ட்ரோல் ரூம் போலீஸ்காரருக்கோ ஒரு தப்பான மனிதன் வசம் அதிகாரமும் பணமும் சேர்ந்தால் அவன் எவ்வளவு மோசமாக மாறுவான் என்பதற்கு உதாரணம் கிடைத்து விட்டது போல் இருந்தது!

ஜி.எச்!

ஜூலியின் உடம்பை போஸ்ட்மார்ட்டம் செய்து வெள்ளை காடாத்துணிக்குள் சுருட்டி அடக்கி ஸ்ட்ரெச்சரில் வைத்து வெளியே எடுத்து வந்தனர். வெளியே ஜூலியின் அப்பாவான வின்செண்ட்டும் தாயான லீமா ஜாஸ்மினும் அப்படியே கண்ணீர் கொப்பளிக்க நின்று கொண்டிருந்தனர்.



ஜூலி நல்ல அழகி! மிக நீண்ட கூந்தலைக் கொண்டவள். நல்ல தைரியசாலி. பார்க்கப் பார்க்க பார்த்துக் கொண்டே இருக்கலாம். ஆசைதான் அதிகரிக்கும். அப்படி ஒரு செழுமிய முகம். அந்த முகத்தில் இப்போது ஒளியே இல்லை. கண்களிரண்டும் திறந்த நிலைலேயே இருந்தன.

ஜூலியின் உடம்பைப் பார்த்த மாத்திரத்தில் லீமாஜாஸ்மின் கொந்தளிப்போடு போய் மகளின் மார்பின்மேல் விழுந்து கதறி அழத் தொடங்கினாள்.

வின்சென்ட் மிக இறுக்கமாய் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்.

அருகில் உறவுக்காரர்கள்!

''வின்சென்ட். அந்த மாயவனுக்கும் நமக்கும் என்னப்பா சம்பந்தம்? ஜூலிக்கு எதுக்குப்பா அவன் விஷஊசி போடணும்...? அவனுக்கு பிரச்னை. அந்த எம்.எல்.ஏ. தானே?'' என்று கேட்டார் ஒருவர்.

''சார்... சி.எம். தன்னோட பொதுநல நிதியில இருந்து இம்மீடியட்டா அஞ்சு லட்ச ரூபாயை நஷ்ட ஈடாத் தரச் சொல்லி உத்தரவு போட்டுருக்காங்க. அதுக்கான செக்கோட டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் வந்துகிட்டிருக்காராம்...'' என்றார் இன்னொருவர்.

''வின்சென்ட் நம்ம ஜூலியோட மதிப்பு வெறும் அஞ்ச லட்சமாப்பா...? இவ நம்ம குடும்பத்து தேவதைப்பா. இதுக்கு அந்த மாயவன் பிடிச்சிட்டோம்னோ இல்லை கொன்னுட்டோம்னோ சொல்றது எவ்வளவோ மேல். ஆனா இந்த போலீஸ்காரங்க எப்பவும் ஹெல்மெட் போடாதவனை பிடிக்கறேன். லாரில 'ஓவர் லோட்' ஏத்தறவனை பிடிக்கறேன்னு இங்கதான் அவங்க மவுசைக் காட்டுவாங்க.

மாயவன் ஒரு பரம்பரைத் திருடன்னா இந்த போலீஸ்காரங்க அரசாங்கம் அனுமதிச்ச லைசன்ஸ் வாங்கின திருடங்க...'' என்று இன்னொருவர் கோபத்தில் கொந்தளித்தார். இப்படி பல மாதிரிப் பேச்சுகள். ஆனால் வின்சென்ட் மட்டும் பேசவேயில்லை. தன் சோகம், ஆற்றாமை, அழுகை, ஆத்திரம் என்று சகலத்தையும் சிந்தாமல் சிதறாமல் சேர்த்து அடக்கியப்படியே இருந்தார்.

உள் மனதுக்குள் ''மாயவா... உன்னை இந்த போலீஸ் பிடிக்க முடியாம போகலாம். சட்டமும் தண்டிக்க காலதாமதம் செய்யலாம். ஆனா உனக்கு என் கையாலதான் சாவு. என்கிட்ட இருக்கற லைசென்ஸ் பிஸ்ட்டலோட ஆறுகுண்டுகளும் உன்

மார்பைத் துளைக்காம விடாது. என் மகளை அடக்கம் பண்ணிட்டு நீ இருக்கற காட்டுக்கு நான் தனியாவே வரேன். அப்ப ஒண்ணு நீ சாகணும். இல்ல நான் சாகணும். எங்க ஜூலி, இல்லாத உலகத்துல வாழறதைவிட அவ போயிட்ட பரம பிதாகிட்ட நானும் போறதுதான் சரியான முடிவு...''

- என்று உருக்கமாய் தனக்குள் ஒருமுடிவை எடுத்திருந்தார்.

**கா**ட்டுப்பகுதி! ஆளரவமே துப்புரவாக இல்லை.

இளங்கோ ஓட்டி வந்த வேன் ஒருவழியாக ஓரமான இடமாகப் பார்த்து தேங்கி நின்றது. வேனுக்குள் பத்மினியும், சரவணனும் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்ட நிலையில் ஒரு பாசாங்குடன் கட்டப்பட்டிருப்பது போல அமர்ந்திருந்தனர்.

வேனை விட்டு டிரைவிங் சீட்டில் இருந்து இறங்கிய இளங்கோ வேன் டோரை திறந்து வீரைய்யனை முதலில் இறங்கச் சொல்லி வீரைய்யனும் ஒருமாதிரி சிரித்தபடி இறங்கினான்.

வாயில் பிளாஸ்திரியுடன் பத்மினியும் சரவணனும் மடிமேல் போலியான கயிற்றுக்கட்டோடு இளங்கோவை பார்த்தனர்.

இளங்கோ தன் இடுப்பு பவுச்சில் இருந்து ரிவால்வரை எடுத்து அதன் தோட்டா பாகத்தைத் திறந்து பார்த்தார். பாண்டியமாணிக்கம் கொடுத்த நாட்டுத் துப்பாக்கி அது!

''ஐயா கொடுத்த துப்பாக்கி போல இருக்குது...?''

''ஆமாம்... ஏய் இரண்டு பேரும் இறங்குங்க?''

அவர்கள் இறங்காமல் வீரைய்யனை பார்த்தனர்.

''என்னய்யா உன்ன பாக்கறாங்க. இறங்கி காட்டுக்குள்ள ஓடச் சொல்லுய்யா...?''

''ஓடவிட்டு சுடவா...?''

''ஆமாம்.''

''அதுக்கு முந்தி இந்த குட்டிய கொஞ்சம் அனுபவிச்சுக்கலாம் தானே?'' - வீரைய்யன் எடுத்துக் கொடுக்கவும். இளங்கோவுக்கும் அது ஆசையை தூண்டி விட்டது. அதே சமயம், பத்மினி தன் கண்களில் அதிர்ச்சியை பளிச்சென்று காட்டினாள். அவள் சற்றும் எதிர்பாராத ஒரு விஷயம் அது.

''நீ சொல்றதும் சரிதான்... ஆனா இவ திமிறு பிடிச்சவள் ஆச்சே?''



''அப்படிப்பட்டவளை அடக்கறதுதானே ஆம்பளைத் தனம்.''

''அப்ப எங்க நீயே அடக்கு பார்ப்போம்.''

''அட நீங்க வேற... முதல்ல நீங்க - பொறவு நான்... தலை இருக்க வால் ஆடுனா நல்லாவா இருக்கும்?''

- வீரைய்யன் பேச்சை ரசித்த இளங்கோ. ''அதுவும் சரிதான்... இந்த துப்பாக்கியை பிடி'' என்று வீரைய்யன் வசம் துப்பாக்கியை தந்து விட்டு உள்ளே கையை நீட்டி பத்மினியை இழுக்க முனைந்த நொடி வீரைய்யன் கைக்குமாறிய துப்பாக்கிமுனை இளங்கோவின் நெற்றிப் பொட்டில் இருந்தது!

''ஏய் போலீசு... நில்லு...''

''ஏய் வீரைய்யா என்ன பண்றே?''

''அசையாதே... கொஞ்சம்கூட யோசிக்க மாட்டேன். சுட்டுப்புடுவேன்.''

''வேண்டாம்யா... வேண்டாம் சுட்றாதே.''

''அப்ப அப்படியே பின்னால் போ... நீ இறங்கு தாயி...''

- வீரைய்யனின் விவேகம் வேகமாக செயல்பட ஆரம்பித்தது. பத்மினியும், சரவணனும் இறங்கி வாயில் ஒட்டப்பட்ட பிளாஸ்திரியையும் பிய்த்து எரிந்தனர்.

வீரைய்யன் நெற்றிப் பொட்டில் இருந்து துப்பாக்கி முனையை சற்று இறக்கி கழுத்துக்கு கொண்டு வந்திருந்தான்.

பத்மினி அவனை நன்றியோடு பார்த்தாள்.

''தேங்க்யூ வீரைய்யன் தேங்க் யூ சோ மச்... இந்த ஆளை சுட்டுடாதீங்க. இந்த ஆள் ஒரு பெரிய விட்னஸ். அந்த எம்.எல்.ஏவோட எல்லா அந்தரங்கமும் தெரிஞ்சவன். இவனோட இப்படியே நாம கலெக்டர் ஆபீசுக்கு போறோம். சரவணன் கமான் வேனை ஸ்டார்ட் பண்ணு.''

- பத்மினி கலெக்டரை பார்க்க வேண்டும் என்று சொன்ன நொடியே இளங்கோவுக்கு சகலமும் புரிந்து விட்டது.

''மிஸ் பத்மினி... வேண்டாம். சொன்னா கேளுங்க. நானும் உங்கள எதுவும் பண்ணல... நீங்களும் எதுவும் பண்ணாதீங்க... ப்ளீஸ்'' என்று உளறினார்.

''இனி நீ பண்றதுக்கு என்னய்யா இருக்கு? உன்னை மாதிரி இன்னும் எவ்வளவு கருப்பு ஆடுங்க இந்த டிபார்ட்மெண்ட்ல

இருக்கோ? சினிமா, டிராமா, நாவல்னு எல்லாத்துலயும் உங்கள கிழிகிழின்னு கிழிச்சாலும் நீங்க திருந்த மாட்டீங்களா...?''

- பத்மினி தன் கோபத்தை வார்த்தைகளாக்கி வெடித்தாள். வீரைய்யன் துப்பாக்கியை பத்மினி வசம் தந்து விட்டு அவர்களை கட்டிய கயிற்றால் இளங்கோவையும் போட்டு கட்டி வேனின் பின்னால் தூக்கி போட்டு அதே பிளாஸ்திரியை அவர் வாயிலும் ஒட்டினாள்!

வேன் சீறிக் கொண்டு தேனி கலெக்டர் அலுவலகம் நோக்கி ஓடத் தொடங்கியது.

''சரவணன் வழில பிசிஓ எங்க கண்ணுலபட்டாலும் வேனை நிறுத்துங்க முதல்ல நம்ம நியூஸ் எடிட்டருக்கு போன் பண்ணி இப்ப நம்ம பொசிஷனை சொல்லி, நம்ம நம்பர்ல இருந்தும் என் லேப்டாப் மூலுமா வர்ற மெயில்களை எல்லாம் கன்சிடர் பண்ண வேண்டாம்னு முதல்ல ஸ்டாப் பண்ணனும்'' என்றாள்.

இளங்கோவுக்கு அப்போதே மாயவன் ஜெயிக்க ஆரம்பித்து விட்டது புரிந்து விட்டது!

## 49

**வே**னில் இருந்து தாவிக்குதித்துத் தப்பித்து ஓடப்பார்த்த சிங்கத்தேவனை வளைத்துப் பிடித்து இழுத்து வந்ததில் சிங்கத்தேவன் உடலெங்கும் காயம். போதாத குறைக்கு அவன் தப்பியோடப் பார்த்ததற்காக விழுந்த அடிகள் வேறு சேர்ந்து கொண்டிருந்தன. எல்லாம் சேர்ந்து சிங்கத்தேவனை கட்டிப்போட்டு வைத்திருந்க வேனின் டேஷ் போர்டின் முன் டிரைவிங் சீட்டுக்கு பக்கத்தில் அவன்தான் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு பின்னால் துப்பாக்கியை மறைவாக நீட்டியபடி கரடி வேடத்தில் மாயவன். வேன் ஓடியபடி இருந்தன.

ஊட்டுக்குள்ளார நுழைஞ்சு அந்த கேடுகெட்டவன் முன்னால் நாங்க இந்த கரடித் தலையை கழட்டற வரை அடக்கமா ஒடுக்கமா சொன்னபடி நடக்கறே. இதுல எது பிசகினாலும் சரி தோட்டா பாய்ஞ்சிடும். நான் நல்லதுக்கு மட்டும்தான் நல்லவன். கரண்ட்டு மாதிரி கரண்ட்டு விளக்கை தொட்டா எரியும். சலவைப் பொட்டின்னா சூடாமாறும், காத்தாடிகிட்ட காத்த கொடுக்கும். அப்படியேதான் நானும்...'' என்று அவன் கொடுத்திருந்த



விளக்கத்தில் செண்பகக்குழல்வாய்மொழியே திகைத்துப் போயிருந்தாள்.

''இதே கையாலதான் உன் பங்காளிங்க நாலு பேரோட தலைல கல்ல தூக்கிப் போட்டே கொன்னோம். ஒரு ஏழைப் பொண்ணை மாறி மாறி கற்பழிச்சதுக்கு எங்க ராஜாங்கத்துல அதான் தண்டனை'' என்றான் உளியன்.

''தெரியும்... உங்களைத்தவிர அவங்கள் வேற யாராலும் தீண்ட முடியாது. எமகாதகனுங்க அவனுங்க. அதே சமயம் எம்.எல்.ஏ.வையும் சாமான்யமா நினைச்சுடாதீங்க. அவனும் பெரிய கை. எங்களுக்கு அ ந்த ஆள் அரசாங்கத்தை ஏச்சு சம்பாதிச்ச பணத்து மேலதான் குறி. அந்த ஆள்மேல் எங்களுக்கு மரியாதை கிடையாது'' என்று சிங்கத்தேவனும் உளியன் பேச்சுக்கு பதில் சொன்னான். அப்படியே மிரள மிரள அமர்ந்திருக்கும் செண்பகக் குழல்வாய்மொழியையும் பார்த்தான்.

''இந்த பொண்ணு மட்டும் இல்லாட்டி நான் எம்.எல்.ஏ. பத்தி இன்னும் எவ்வளவோ சொல்லுவேன். ஆனா அவ்வளவும் அசிங்கம்'' என்றதும் செண்பகக் குழல்வாய்மொழியே அதிர்ந்து சிங்கத்தேவனை வெறித்தாள்.

''என்ன தாயி பாக்கே... உன் அப்பனை குத்தம் சொல்றதால குத்துதா மனசு...?''

''அது ஒரு பக்கம்... ஆனா நீங்க எல்லாருமே யோகயன் மாதிரி பேசறதுதான் ஆச்சரியமா இருக்கு... அப்பாவுக்காவது அரசியல் காரணங்கள் இருக்கு. உங்களுக்கு என்ன வந்தது.''

''அப்ப நீ உன் அப்பன் பண்ணத எல்லாம் சரிங்கறே... அப்படித்தானே?''

''இல்ல... எல்லாருமே மாறிமாறி தப்பு பண்ணி கிட்டே போறீங்க... வன்முறையால இந்த உலகத்துல ஒரே ஒரு விஷயம்கூட சாதிக்கப்பட்டதில்லை! தெரியுமா? படிச்சிருந்தா உங்களுக்கு தெரிஞ்சிருக்கும்... எங்க... நீங்கதான் பிறக்கும் போதே கத்தியோடல்ல பிறந்திருக்கீங்க?''

- செண்பகத்திடமும் தீர்க்கம் வெளிப்படத் தொடங்கியது. மாயவன் கரடித்தலை முகமூடியை கழற்றி மடிமேல் வைத்துக் கொண்டு ஆச்சரியமாக அவளைப் பார்த்தான்.

''என்ன மாயவன் அப்படிப் பாக்கறீங்க? நான் சொன்னது தான் உண்மை. பள்ளிக்கூடத்துல எனக்கு ரொம்ப பிடிச்ச பாடம் சரித்திரம்

எனக்கு இந்திய சரித்திரமும் சரி, உலக சரித்திரமும் சரி விரல் நுனியில... இந்த உலகத்துல நடந்த மிகப்பெரிய யுத்தம் எது தெரியுமா?'' - செண்பகத்தின் ஆவேசமான கேள்வி மற்றவர் களையும் கவனிக்க வைத்தது.

''இந்த ஜப்பான் மேல குண்டு போட்டாங்களே அந்த யுத்தத்தை சொல்றியா?''

''அதை விடவே பெரிய யுத்தம் நம்ம மகாத்மா காந்தி நடத்தின சுதந்திரப் போராட்டம்தான். அந்த யுத்தத்துல எல்லாம் போர் வீரர்கள்தான் கலந்துகிட்டாங்க. இந்த யுத்தத்துல குமரியில இருந்து காஷ்மீர் வரை நாடே கலந்துகிட்டது. துல்லியமான புள்ளி விபரம் சொல்ற கணக்குப்படி நம்ம சுதந்திர போராட்டத்துல நேரடியாக பங்கு கொண்டவங்க ஒண்ணரை கோடி பேர். மறைமுகமாக பங்கு கொண்டவங்க 12 கோடி பேர். ஹிட்லர் நடத்தின யுத்தத்துல செத்தவங்க மட்டும் நாலரை லட்சம். உலகின் மிகப் பெரிய கொலைகாரன் ஹிட்லர்தான். ஆனாலும் அவன் ஜெயிக்கல. அவன் கட்சியோ, கொள்கையோ எதுவும் ஜெயிக்கல. அதேசமயம் ஒரு முழம் இடுப்புத் துண்டோட மகாத்மாகாந்தி நடத்தின யுத்தத்துல இறந்தவங்க சில ஆயிரம் பேர்கள்தான். அவரது யுத்தமும் ஜெயிச்சது. இன்னிக்கும் காந்தீயம் ஒரு தனி வழிமுறையா மதிக்கப்படுது. உலகம் பூரா காந்திக்கு மட்டும் ஏழு லட்சம் சிலைகள் இருக்கு. ஹிட்லருக்கு விரல் விட்டு எண்ணிடலாம். அதுவும் ஒரு சரித்திர அடையாளத்துக்குதான்...''

''நீ இதை எல்லாம் இப்ப எதுக்கும்மா சொல்றே?''

''இது என்ன கேள்வி... ஏன் இப்படி தப்பான வழில போய்கிட்டே இருக்கீங்க... ஒரு அமைதியான வாழ்க்கை வாழ உங்களுக்கு இஷ்டமில்லையா?''

''உன் அப்பன மாதிரி ஆட்கள் வாழ விட்டா தானேம்மா...?''

''அப்பா தப்பானவர்தான். எனக்கே நல்லாத் தெரியுது. ஆனா அவர் தொடர்ந்து தப்பு செய்ய நீங்களும் காரணமா இருக்கீங்கறத மறந்துடாதீங்க. அவர் லஞ்சம் கேட்டா ஏன் கொடுக்கறீங்க? அவர் கூலிக்கு கொலை செய்யச் சொன்னா ஏன் செய்றீங்க. முடியாதுன்னா அவரால என்ன பண்ண முடியும்?''

''அப்போ நாங்கதான் முதல்ல திருந்தணும். அப்படி தானே?''

''குதர்க்கம் பேசாதீங்க. இப்பக்கூட எதுவும் கெட்டுப் போயிடல. என்னை இப்படியே வழில இறங்கி விட்டுட்டுநீங்க



திரும்பிப் போங்க. அப்பாவை திருத்தறது என் பொறுப்பு. அவர் இனி அரசியல் பக்கமே தலை வெச்சுப் படுக்காதபடி நான் பாத்துக்கறேன். அதேபோல உங்க மேலயும் எந்த தப்பும் இல்லை. என்னை யாரும் கடத்தலைன்னு மீடியாவுல சொல்றேன்.''

- செண்பகக்குழல்வாய் பேசிமுடிக்க வேனை ஓரமாக நிறுத்தினான் பெருமாள். அது ஒரு புளிய மரத்தடி... பக்கத்து மைல் கல்லில் வரதம்பட்டி 3 கிலோ மீட்டர் என்னும் எழுத்துக்கள்.

பொழுதிலும் இருள் இறங்கும் அந்தி நேரம்!

வேன் நிற்கவும் அவ்வளவு பேரும் அவளை துளியும் உணர்ச்சியே இல்லாதபடி வெறித்தனர்.

''என்ன இப்படி பாக்கறீங்க... நான் உங்க நன்மைக்காகத்தான் சொல்றேன். புரிஞ்சுக்குங்க.''

''உனக்குத் தாம்மா பல விஷயம் புரியல?''

''என்ன புரியல...?''

''உங்க அப்பாவை திருத்தறேன். அரசியல்லையும் ஈடுபடாதபடி பாத்துக்கறேன்னு சொன்னே பாரு - அதான்.''

''நான் சொல்ல மாட்டேன் - சொல்லிட்டா உயிரைக் கொடுத்தாவது சாதிச்சு காட்டுவேன்.''

''இனி நீ சாதிக்கப் போறது இருக்கட்டும். இதனால கொல்லப்பட்ட உன் தோழி உசுரு திரும்ப வந்துருமா?'' - பெருமாளின் கேள்வி அவளை திணறச் செய்தது.

''உனக்கு ஒரு விசயம் தெரியுமா?'' - கடாரன் ஒரு புதிய செய்தியை அடிபோட்டான்.

''என்ன?''

''உங்கம்மாவே விஷம் குடிச்சு தற்கொலை பண்ணி கிட்டுதான் செத்தா. அது தெரியுமா?'' கடாரன் சொன்னது நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டியது.

''எங்களுக்கு எப்படி தெரியும்ன்னு கேக்காதே. உங்க அப்பாக்கிட்டயே கேள். அம்மா எப்படி செத்தாங்கன்னு.''

''இது எனக்கு ரொம்ப அதிர்ச்சியா இருக்கு. உங்களுக்கு எப்படி தெரியும்?''

''ஊர்ல பலபேருக்குத் தெரியும். ஆனா மேலிடத்து விசயம்கறதால யாரும் வாயை திறக்கறதில்லை...''

''எதனால விஷம் குடிச்சாங்க?''

''ஊருக்கு ஒரு கூத்தியா இருந்தாக்கா எந்த பொண்ணால தாங்கிக்க முடியும்?''

''இதை உங்களால நிரூபிக்க முடியுமா?''

''உங்கம்மா சாவு தேதிதான் உனக்குத் தெரியுமே. வத்தலக்குண்டு பெரியாஸ்பத்திரில போய் விசாரி. ஏன்னா அங்கதானே உடம்பை அறுத்துக் கூறுபோட்டாங்க.''

''நீங்க பொய் சொல்லலியே...!''

''நாங்க கும்புடற குலசாமி மேல சத்தியம் இது...''

''சரி... இப்ப அப்பாவை நீங்க என்ன செய்யப் போறீங்க?''

''இது பதிலை நேர்லயே பாத்து தெரிஞ்சிக்கோ.''

''அப்ப அவரை கொல்லப் போறீங்களா?''

''இல்லாட்டி உங்கப்பன் நிச்சயமா என்ன கொன்னுடுவான்.''

''அப்புறம் உங்க நிலை.''

''எங்களுக்கென்னமோ இப்ப நல்லநில இருக்கற மாதிரியும் இப்படி நடந்துகிட்டாக்கா அது போயிடும்கற மாதிரில்ல பேசறே.''

''இல்ல... இனி நீங்க சின்னத் தப்புகூடப் பண்ணக் கூடாது. பழசை எல்லாம் மறந்துட்டும் விட்டுட்டும் நல்லா வாழணும்.''

''அப்படி எல்லாம் ஒண்ணு எங்களுக்கு இந்த பொறப்புல கிடையாது.''

''போலீஸ் கமிஷர்கிட்ட பேசறேன்.''

''புரியாமலே பேசறே - ஒரு பக்கம் உலக சரித்திரம் பேசற உனக்கு இப்போதைய யதார்த்தம் துளிகூட தெரியலியே.''

''ஏன் தெரியாம... சம்பல் பள்ளத்தாக்குல கொலையும் கொள்ளையும் பண்ண பல கொள்ளையர்கள் இன்னிக்கு சமுதாயத்துல திருந்தி நல்லபடியா வாழ்ந்துகிட்டிருக்காங்க. பொது மன்னிப்புன்னு ஒரு விஷயம் இருக்கு. அதுக்கு தகுதியிருக்கான்னு பார்க்கும்போது தகுதியோட இருக்கணும். அதுதான் முக்கியம்.''

''அம்மாடி உனக்கு நல்ல எண்ணம் இருக்குது. அதுமட்டும்தான் எங்களுக்கு புரியுது. மத்த எதுவும் சாத்திய மில்லை. டேய் வண்டிய எடுடா. இனி எங்கேயும் தேக்கம் கூடாது. தாபார் ஆத்தா. இனி நீயும் எதையும் பேசாதே. எங்கள எங்க போக்குல விட்டுடு. நீ நெசமாலுமே ஈர நெஞ்சுக்காரின்னா உங்கப்பன் சொத்து பத்து அவ்வளவையும் ஏழை பாழைகளுக்கு



திருப்பிக் கொடு. ஏன்னா சல்லிக்காசை உங்கப்பன் உழைச்சு சம்பாதிக்கல. அடிச்சுதான் சம்பாரிச்சான்'' என்ற கடாரன் 'எட்றா வண்டிய' என்று திரும்ப கத்தவும் புழுதிப் புரட்டலோடு வேன் கிளம்பியது.

அடுத்த 10வது நிமிடம் அது பாண்டியமாணிக்கம் பங்களாவுக்குள் நுழைந்துவிடும். அதற்கடுத்த பத்து நிமிடங்கள் தான் மாயவன் வாழ்வில் மிகவே முக்கிய மானவை.

பங்களா பால்கனியில் கழுத்துத்துண்டை இழுத்துப் பிடித்தபடியே எதிரில் தெரியும் சாலைமீது பார்வையோடு இருந்தார் பாண்டியமாணிக்கம். எல்லோரையும் போகச் சொல்லிவிட்டார். குளத்தங்கரையை ஒட்டிய ஷெட்டில் டீ கேனையும், மிக்சர் பொட்டலங்களையும் வைத்து அங்கே சிலரை அடைத்து விட்டார். பங்களா முகப்பே வெறிச்சோடிக் கிடந்தது. எதிரில் வேனும் தெரிந்தது. பரபரப்பும் பாண்டிய மாணிக்கத்திடம் தொற்றிக் கொண்டது.

## 50

அவ்வளவு பேரும் வேனில் இருந்து உதிர்ந்தார்கள்! நான்கு கரடி மனிதர்கள். ஆட்டுத்தலை உள்ள மஞ்சள் பையுடன் சிங்கத்தேவன் இவர்களோடு செண்பகக்குழல் வாய் மாழி! பால்கனியில் இருந்து பார்த்த பாண்டிய மாணிக்கம்.

''வாவே... வா... என் அசல் சிங்கமே வா... வேகமா உள்ற வாங்க...'' என்றார்.

அவர்களும் உள்நுழைந்தனர். செண்பகம் அடுத்து நடக்கப் போகின்ற விபரீதத்தை உணர்ந்தவளாக தேங்கித் தேங்கி நின்றாள்.

அவளை அதுவரை தொட்டிராத மாயவன் முதல் தடவையாக தொட்டான். அவளது இடது கரத்தின் சதைப் பகுதியான மேல் பாகத்தை இறுகப் பற்றியவன் வலிந்து அவளை இழுத்துச் செல்லத் தொடங்கினான்.

உள்ளே சென்ற வேகத்தில் கதவுகளையும் ஓடிப்போய் அடைத்தனர். ஜன்னல்களையும் அடைத்தனர். பாண்டிய மாணிக்கமும் மாடியில் இருந்து ஹாலின் மையத்தில் வந்து முடியும் மாடிப்படிகளின் வழியாக இறங்கி வந்தார். நடையில் துள்ளல்,

முகத்தில் உற்சாகம். பார்வை ஆட்டுத் தலையுள்ள பையின் மேல்தான் இருந்தது. அந்த பையின் வெளிப்பக்கம் ரத்தம் தோய்ந்து அதில் சில ஈக்களும் உட்கார்ந்திருந்தன.

அந்தப் பையைப் பார்க்கும் போதே பாண்டிய மாணிக்கத்தின் கண்ணிரண்டும் அகண்டு கொண்டன. சிங்கத்தேவன் முகத்தை கூர்ந்து பார்த்தாலே போதும் அவன் முகத்தில் ஒரு தவிப்பு ஒளிந்திருப்பதை உணர முடியும். ஆனால் மாயவன் கொல்லப்பட்டு விட்டான் என்கிற பொய்யான சந்தோஷம் பாண்டியமாணிக்கத்தின் கண்களை கட்டிவிட்டிருந்தது. அதனால்தான் பெற்ற மகளைக் கூட வரவேற்றுப் பாசம் காட்டத் தோன்றவில்லை. அது செண்பகக்குழல்வாய்மொழிக்கே ஒரு அதிர்ச்சியான விஷயமாகத்தான் இருந்தது.

''சிங்கத்தேவா கலக்கிப்புட்டடா... கலக்கிப்புட்டே... ஆமா மாயவன் உடம்பு எங்க கிடக்கு?''

என்று கேட்கும்போதும் சிங்கத்தேவன் முகம் பீதியடைந்து கிடைப்பதை உணர முடியவில்லை.

''எலேய்... கேக்கேன்ல... பைல இருந்து தலைய வெளிய எடு. அவன் முகத்தை நான் ஒரு தடவை பாக்கேன். பாழாப்போனவன் - என்ன பாடுபடுத்திப்புட்டான்...''

- தீக்குழி மிதிப்பவர்கள் கால்களை உதற விட்டுக் கொள்வது போலெல்லாம் உதற விட்டுக்கொண்டே பையில் ஊன்றினார்.

''டாடி...'' செண்பகம் குரல் கொடுத்துப் பார்த்தாள். முதல் தடவை காதில விழவில்லை. இரண்டாவது முறைதான் அவள் பக்கம் திரும்பினார்.

''செண்பகம்... நல்லபடியா வந்துட்டியா கண்ணு. ஆமா உன் எதிரில்தான் தலைய வெட்டினாங்களா... உனக்கு இந்த கண்றாவி யெல்லாம் புடிக்காதேம்மா...? எல்லாம் தலையெழுத்து'' என்றார்.

''முதல்ல வாய் மூடுங்க. நீங்க இவ்வளவு குரூரமானவரா கேடு கெட்டவரா இருப்பீங்கன்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கல...'' அவள் கத்திப் பேசும்போது கழுத்து நரம்புகள் புடைத்துக் கொண்டன.

''செண்பகம் நீ என்ன சொல்றே.''

''உங்களுக்கு மகளா பொறந்ததுக்கு வெட்கப்படறேன். வேதனைப் பட்றேன். ஏம்பா... ஏன் இப்படி எல்லாம் நடந்துக்கறீங்க?''



''செண்பகம்...''

''கத்தாதீங்க... எல்லா நேரமும் உங்க அதிகாரமும் பணமும் ஜெயிச்சிடாது. இப்பகூட நீங்க ஜெயிக்கல. நீங்க ஜெயிச்சா அதைவிட கேவலம். அதைவிட மோசமான ஒரு விஷயமும் இருக்க முடியாது.''

- செண்பகம் வெடித்து அழும்போது சிங்கத் தேவனிடம் மின்னலைப் போல் ஒரு செயல். ஆட்டுத்தலைப் பையை கீழே போட்டுவிட்டு மாடிப்படிகளில் ஏறி பால்கனிக்கு சென்று அப்படியே வெளியே குதித்து ஓடிவிட முயன்றான். ஆனால் உளியனின் துப்பாக்கித் தோட்டா மாடிப்படிகளிலேயே சிங்கத்தேவனை சாய்த்து விட்டது.

அலறினாள் செண்பகக்குழல்வாய்மொழி.

''நோ...''

மாயவனும் அவன் சகாக்களும் கூட கரடித்தலை முகமூடியை கழற்றினர்!

பாண்டியமாணிக்கத்தின் கண்களில் முதல் தடவையாக மரண பயம் தோன்றத் தொடங்கியது. அவர் கற்பனைகூட செய்து பார்த்திராத காட்சி அது.

''என்னா பெரிய மனுஷா... தொண்டக்குழிய. அடைக்குதா. உனக்கு என் தலைய பாக்கறதுல அவ்வளவு ஆனந்தமா. நல்லா பாத்துக்க... தா... உன் முன்னாலேயே கரடி உடம்புமா மனுஷத் தலையுமா நிக்கறேன். பாரு... நல்லா பாத்துக்க பார்ப்போம்.

பாரு... பாரு... பாரு...'' என்றபடியே பாண்டிய மாணிக்கத்தை ஒரு சுற்றி சுற்றி வந்தான் மாயவன். அதே சமயம் உள்ளே ஒலித்த துப்பாக்கிக்குண்டு சப்தம் குளத்தங்கரையில் டீ குடித்தபடி இருப்பவர்கள் காதுகளிலும் ஒலித்து பாண்டிய மாணிக்கம்தான் வல்லாளர்களில் ஒருவரையோ இல்லை யாரையோ சுட்டிருக்க வேண்டும் என்பது போல் நினைத்துக் கொண்டு,

''எலேய் உள்ள குண்டு வெடிச்சிருக்குது... நாம போனா அம்புட்டுதான். நம்ப மேலயும் தோட்டா பாஞ்சாலும் பாஞ்சிடும்'' என்று அங்கேயே நின்றுவிடும் முடிவுக்கு வரச்செய்தது.

உள்ளே செண்பகக்குழல்வாய்மொழி மாயவனிடம் கை கூப்பியிருந்தாள்.

''மாயவன் ப்ளீஸ்... அப்பாவை எதுவும் செய்துடாதீங்க. நீங்களும் எவ்வளவு பணம் வேணுமோ அவ்வளவையும் எடுத்துகிட்டு புறப்படுங்க. இவரை நான் பாத்துக்கறேன். கட்சித் தலைவர்க்கு நான் கடிதம் எழுதறேன். இவர் இனி அரசியலில் எந்த காலத்துலயும் ஈடுபடமாட்டார். சட்டம் நிச்சயமா இவரை கைது செய்யும். அப்பான்னு பார்க்காம நான் இவர் தவறுகளை எல்லாம் கோர்ட்டுல சொல்வேன். யாருக்காக இல்லேன்னாலும் என் ஜூலிக்காக நான் சொல்வேன்'' என்று மாயவனிடமும் அவன் சகாக்களிடமும் கைகளை கூப்பிக் கொண்டு கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

''மாயவா... உள்ள வந்து அஞ்சு நிமிஷம் ஆச்சு. இன்னும் பத்து நிமிசத்துல நாம வெளியப் போயிடணும். அதுக்கு பொறவு சனிஹோரை வந்துடுது. சட்டுபுட்டுனு பணத்தை மூட்டை கட்டப் பார்ப்போம்'' என்றான் கடாரன். பெருமாள், பாண்டிய மாணிக்கத்தின் இடுப்பு மடிப்பில் பதுங்கியிருந்த சாவிக் கொத்தைத் தெளிவாக வெளியில் எடுத்தவனாக மாடி ஏறினான்.

அசுர வேகத்தை அன்றுதான் செண்பகக்குழல் வாய்மொழியும் பார்த்தாள். கட்டுக்கட்டாய் பணம், தங்கக்கட்டிகள், வெள்ளிப் பாத்திரங்கள் அவ்வளவும் மூட்டைகளாயின.

மாயவனின் துப்பாக்கி பாண்டியமாணிக்கத்தின் நெற்றிக்கு அருகிலேயே இருந்தது. பாண்டியமாணிக்கத்துக்கு தன் சம்பாத்தியம் அவ்வளவும் கண் எதிரில் மூட்டைகளாக மாறுவது கொந்தளிக்க விட்டிருந்தது. கண்களில் அது அதீதமாகவே தெரிந்தது.

''என்ன பாக்கறே... இதுக்கு பேர்தான் ராசகளவு. என் கொள்ளுத்தாதனுக்கு பொறவு நான்தான் அதை இப்ப சுருதி சுத்தமா செய்துருக்கேன்.

''கொள்ளையடிச்சவன் கண் எதிர்ல தில்லா திருட்றதுங்கறது களவு இல்ல. கலை! அதுவும் உன்னியப் போல போலீசு, கலெக்டரு, தாசில்தாரு ஆளு, அம்பு, தோலான் துருத்தியங்கள தாண்டி நீ ஏவிவிட்டியே வல்லாளனுங்க அவனுங்கள கட்டிப் போட்டு உன் பங்களாவுல, உன் கண் எதிர்லேயே மூட்ட கட்டியிருக்கேன். பாரு... இதை நீ வந்தாங்க களவாட்னாங்கன்னு சாதாரணமா நினைச்சுடக்கூடாது.

எனக்கு இப்ப எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா? இது அம்புட்டும் ஊரான் பணம். இது ஊருக்கே போகப் போவுது. சல்லிக்காசு நான் தொடமாட்டேன். ஒரு குடிசைக்கு ஒரு கட்டு!



காலைல வாசலுக்கு கோலம் போட வரைல கிடக்கும். நான் கொடுத்ததா இருக்காது. நீ திருப்பிக் கொடுத்ததா தான் அதுல துண்டுச்சீட்டு இருக்கும். அதே சமயம் உன்னை உசுரோட உட்டா நீ திருந்தியெல்லாம் வாழற ஜென்மம் இல்லங்கறதும் தெரியும்.

நெருப்புலயும், விஷத்துலயும் மிச்சம் கூடாது. மிச்சமே கூடாது...''

- ''மிச்சமே...'' என்று இழுத்து 'கூடாது' என்றபோது மாயவனின் துப்பாக்கித் தோட்டா பாண்டியமாணிக்கத்தின் நெற்றிப் பொட்டைதுளைபோட்டு முடித்திருந்தது! அடித்தண்டில் வெட்டு விழுந்த மரம் அப்படியே சரிந்து விழுவது போல பாண்டிய மாணிக்கமும் கீழே விழுந்தார். செண்பகக் குழல்வாய்மொழி காதைப் பொத்தியபடி கண்கள் விரிய மாடிப்படியின் ஆரம்பப் படியில் போய் அமர்ந்து விட்டாள்.

அவர்களும் மூட்டைகளுடன் வெளியேறினர்.

திரும்பவும் கரடி உருவம்!

வேன்புறப்பட்டு செல்லும் சப்தமும் கேட்டது.

பிறகுதான் டீக்குடிக்க போனவர்களில் இருந்து எல்லோரும் வந்தனர்.

வந்தவர்கள் ஹாலில் பிணமாக கிடந்த பாண்டிய மாணிக்கத்தை பார்த்து விக்கித்துப்போய் நின்றனர். அவர்கள் வருவதற்குள் பாண்டியமாணிக்கத்தின் பீரோவில் இருந்து அவரது கைத்துப்பாக்கியை எடுத்து வந்திருந்த செண்பகக் குழல்வாய்மொழி.

''என்ன பாக்கறீங்க... நான்தான் அப்பாவை சுட்டுக் கொன்னேன்...'' என்றாள் அவர்களிடம்...

அவர்கள் வாயைப் பிளந்து விட்டனர்! ''சிங்கத் தேவனை கொன்னதும் நான்தான்...'' என்றபோது அவர்களிடம் மூர்ச்சை!

அவ்வளவு தொலைக்காட்சி பெட்டிகளிலும் அவசரச் செய்தி அறிவிப்பாக பத்மினி பாஸ்கர் பேசிக் கொண்டிருந்தாள்.

''மாயவன் மேல் எந்தத் தவறுமில்லை... பாண்டிய மாணிக்கத்தின் அதிகார வெறியும், பணவெறியும்தான் அனைத்துக்கும் காரணம்? உண்மையை சொல்ல முயன்ற என்னையே கொல்ல முயன்றார். கடைசி நிமிடத்தில் வீரய்யனால் நாங்கள் தப்பிப் பிழைத்தோம்' என்கிற அவளது பேட்டியோடு.

சப்-இன்ஸ்பெக்டர் இளங்கோவை போலீசார் கைது செய்து அழைத்துச் செல்லும் காட்சிகளும் வந்து கொண்டேயிருந்தன.

ஒரு டி.வி. ஒருபடி மேலே போய் மாயவனின் மாமன் நிலத்தை அப்படியே படம் பிடித்து காட்டிக் கொண்டிருக்க பின்புலத்தில் 'இந்த நிலத்தால்தான் பிரச்சினையே தொடங்கியது. தான் கட்ட விரும்பிய கல்லூரிக்காக இந்த இடத்தை மாயவனின் மாமன் குடும்பத்தாரிடம் இருந்து அபகரிக்க முயன்றதால்தான் மாயவன் பாண்டிய மாணிக்கத்துக்கு பாடம் கற்பிக்க விரும்பி அவரது மகளான செண்பகக்குழல்வாய்மொழியை கடத்தியதாக கூறப் படுகிறது' என்று மிகவேகமாக செய்தியை முந்திக் கொண்டு கூறிக்கொண்டிருந்தது.

பத்மினியும் கேமராமேன் சரவணனும் கலெக்டரைச் சந்திக்கும் முன்பே வழியில் உள்ள பி.சி.ஓ.வின் வழியாக போன் செய்து தனது சேனலுக்கும், லோக்கல் பத்திரிகைக்காரர்களுக்கும் தகவல் கொடுத்து கலெக்டர் ஆபீசுக்கு அவ்வளவு பேரையும் வரச்சொல்லி விட்டாள்.

பிறகுதான் கலெக்டரையே சந்தித்தாள். இளங்கோ அவர்களை அதிகம் சோதிக்கவில்லை பத்மினி கலெக்டரிடம் சொன்ன குற்றச்சாட்டுக்களை எல்லாம் ஒப்புக் கொண்டு தலை குனிந்தபடி இருந்தார்.

ஆனால் பத்மினியும், வீரைய்யனும்கூட மாயவன் கொல்லப் பட்டு விட்டதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்க அவர்களுக்கும் செண்பகக்குழல்வாய்மொழி பாண்டியமாணிக்கத்தையும், சிங்கத்தேவனையும் கொன்றதாக மாறியிருந்த விஷயம் வந்து சேர்ந்தபோது இருவருக்குமே அதிர்ச்சியாக மட்டுமில்லை. நிச்சயம் பின்புலத்தில் ஏதோ நடந்திருக்கிறது என்பதும் புரிந்து விட்டது!

**கூ**மாச்சிமலை உச்சி!

அவ்வளவு மூட்டைகளோடும் மாயவனும் சகாக்களும் மேலே வந்தபோது வல்லாளர்களில் சிங்கத்தேவன் போக மிஞ்சியிருந்த மூன்று பேருமே அங்கங்கே பிணங்களாகத்தான் கிடந்தனர்.

ஒரு புதரில் பருத்தியும், ஒரு பாறை இடுக்கில் கோசலையும் உயிரை கையில் பிடித்தபடி கிடந்தனர். மாயவன் பதறிப்போய் தூக்கி கோசலையை மடியில் போட்டுக் கொள்ளவும் கோசலை தண்ணீர் கேட்டு முதலில் சைகை செய்தாள்.



பின் ''மாமா... நீ போகவும் வல்லாளனுங்க என் துப்பாக்கிக்கு, பயப்படாம எங்கள தாக்கிட்டு ஓடப் பார்த்தாங்க. நான் விடலை. அதே சமயம் அவங்களும் விடலை மாமா'' என்றவள் அவர்கள் கையில் இருந்த மூட்டையை பார்த்து ''நீ சாதிச்சுட்ட மாமா'' என்றாள். அதற்குமேல் பேச வார்த்தையின்றி அவள் உயிரும் மாயவன் மடிமீதே பிரிந்தது.

பருத்தியிடம் நெருங்கிய போது அவள் உயிரும் மாயவனைப் பார்த்து கைகளை உயர்த்தி ஆசிகூறும் பாவனையில் பிரியப் பார்த்தது.

''மாயவா... உன் மாமா போன இடத்துக்கே போறோமப்பா. நல்லா இரு... எங்க உசுரு உனக்காக உன்னையே தான் சுத்திச்சுத்தி'' என்று 'வரும்' என்று முடிப்பதற்குள் பிரிந்தும் விட்டது!

மாயவன் எதற்குமே அழாதவன்... அழுவதை ஆணுக்கான அவமானமாக நினைப்பவன். முதல் தடவையாக அழ ஆரம்பித்தான்.

அப்போது மணவாள சித்தரும் வந்தபடி இருந்தார்!

## 51

**மா**யவன் அழுவதைப் பார்த்தபடி வந்த மணவாள சித்தர் மௌனமாய் அவனை வேடிக்கை பார்த்தார். அப்படி அவர் பார்ப்பதில் ஆயிரமாயிரம் அர்த்தங்கள்.

''சாமீீ...''

''நீயா அழுறே?''

''என்ன சாமி கேள்வி எனக்கு இதயம் இல்லேன்னு முடிவு பண்ணிட்டீங்களா...''

''தப்பா கேக்கறியே... எல்லாருக்கும் உடம்புக்குள்தான் இதயம் இருக்கும். உனக்கு மட்டும் இதயத்துக்குக்குள்ளதான் உன் உடம்பிருந்ததா நான் நினைக்கறேன்.''

''அப்ப எப்படி சாமி என்னால அழாம இருக்க முடியும்? எனக்குன்னு இப்ப யாருமே இல்லையே சாமி! எல்லாரையும் இழந்துட்டேனே சாமி.''

''அப்ப இதோ இங்க இருக்கற உன் சகாக்கள் யார்?''

''இவங்களும் என்னைப் போல அனாதைகள் தான் சாமி?''

''மாயவா... எதையும் எங்க இருந்து பாக்கறோம் கறதுல தான் எல்லாமே இருக்கு. நீ இப்ப பெரிய துக்கத்துல இருக்கே. எப்பேர்பட்ட துக்கத்துக்கும் ஆயுள் அதிகபட்சம் பத்துநாள்தான். பதினோறாவது நாள் நாம பழையபடி ஆயிடுவோம். பசிக்கற வயித்துக்கு சோறு போடவும் சோகப் பட்ட மனசுக்கு மருந்து தேடியும் வாழ ஆரம்பிச்சிடுவோம். நீ மட்டும் என்ன விதி விலக்கா? நல்லா அழு மாயவா... நல்லா அழு!' எல்லாத்தையும் தாங்கிக்கற இதயத்தைவிட நெகிழ்ந்து அழற இதயம்தான் நல்ல இதயம்.''

- மணவாள சித்தர் சொன்ன சூட்டோடு அங்கு கிடந்த உடல்களில் பருத்தியின் உடலையும், கோசலை உடலையும் எரியூட்டுவதற்கு தயார் படுத்த தொடங்கினர். குனிந்து கால் விரல்களைக் கட்டி கையை இழுத்து மார்பு மீது வைத்து ஆடைகளைத் திருத்தி அவர் முனையவும் மாயவனின் சகாக்களும் சேர்ந்து கொண்டனர்.

வல்லாளர்களின் பிணங்களையும் ஒன்றாக்கி அவைகளின் மேல் மரங்களை வெட்டி வந்து போட்டு மூடினார். மாயவன் அவ்வளவையும் மௌனமாக பார்த்தபடி அழுது கொண்டே யிருந்தான்.

சட்டென்று உளியனிடம் ஒரு பதட்டம்.

''சாமீ.''

''சொல்லு.''

''தீயிட்றத விட புதைச்சிடறதுதான் சாமி சரி. தீயிட்டா புகை நாங்க இங்க இருக்கறதை ருசுவா காட்டிக் கொடுத்துடும்.''

''மணவாள சித்தர் அந்த பதிலைக் கேட்டு சிரித்தார்.

''சாமி சிரிக்காம என் கேள்விக்கு பதில் சொல்லுங்க. நான் ஒண்ணும் தப்பா சொல்லிடலையே!''

''உன்னோட இந்த எச்சரிக்கையான புத்திக்கு இனி பெருசா வேலை இருக்காதுப்பா.''

''எதை வெச்சு சாமி சொல்றீங்க?''

''உங்க வாழ்க்கை மாறப் போகுது.''

''அது நெசம் தான்சாமி. அது மாறத்தான் போவுது. நாங்க இன்னிக்கு அடிச்ச களவுதான் கடைசிகளவு. எங்ககிட்ட இருக்கற அம்புட்டு நகை நட்டையும் ரூவாவையும் வரதம்பட்டி ஏழை ஜனங்களுக்குன்னு கொடுத்துட்டு நாங்க அந்தமானுக்கு போய் அங்க மரமேறிங்களா பிழைக்கறதுன்ற முடிவுக்கு வந்துருக்கோம்.''



''அப்படியா?''

- மணவாள சித்தர் 'அப்படியா?' என்று கேட்டதில் அப்படி எல்லாம் நடக்கவே போவதில்லை என்னும் பாவனை ஒட்டிக் கொண்டிருந்தது. அது மாயவனுக்கு புரிந்தது.

'சாமி! நாங்க அந்தமானுக்கு போகப் போறது சத்யம் சாமி. அந்த எம்.எல்.ஏ.கிட்ட களவாண்ட பணத்துல சல்லிக்காசு நாங்க தொடப் போறதில்லை சாமி. அதை ஏழை ஜனங்களுக்கு எங்க கையால கொடுக்கத்தான் போறோம்.

இந்த மாட்டுப் பொங்கலன்னிக்கு காலைல பட்டில கட்டியிருக்கிற மாடுங்ககிட்ட போற என் வரதம்பட்டி ஜனங்க சந்தோசப்படுவாங்க. ஒவ்வொரு மாட்டுக் கொம்புலயும் ஒரு பணமூட்டையோ, நகைமூட்டையோ இருக்கும். குறிப்பா எம்.எல்.ஏ.வால பாதிக்கப்பட்டவங்களுக்கு நஷ்ட ஈடும் சேர்ந்து இருக்கும்.''

''சரிப்பா அப்படியே செய்யப்பாரு... முடிஞ்சா.''

''முடிஞ்சாவா... என்ன சாமி. முடியாதுன்னு சொல்லாம சொல்றீங்களா?''

''மாயவா... மனசும் காத்தாடியும் ஒண்ணு. இஷ்டத்துக்கு தான் பறக்கும். ஆனா கயிறு அறுந்துட்டா பட்டம் அவ்வளவுதான். நீயும் இப்ப அப்படித்தான்.''

- மணவாள சித்தரின் பொடி வைத்த பேச்சு பெருமாளை கோபப்பட வைத்தது.

''சாமி, எங்க வரைல உங்களுக்கு என்னவோ தெரிஞ்சிருக்கு. ஆனா அதை நேரா சொல்லாம தலைய சுத்தி மூக்கத் தொட்றீங்க. எதுவா இருந்தாலும் நேர்ல சொல்லுங்க சாமி...''

''ஆமா சாமி. நீங்க சாடையாவே பேசறீங்க. எதையோ சொல்ல வர்றீங்க. ஆனா சொல்ல மாட்டேங்கறீங்க'' - என்று கடாரனும் தன் பாட்டுக்கு பேசினான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா... நான் இந்த மலையை விட்டு கீழ இறங்காத ஒரு சன்யாசி. எனக்கு என்ன தெரியும்? ஆனா உள்மனசுக்குள்ள ஒரு சின்ன நம்பிக்கை அதுதான் உங்க வாழ்க்கை மாறப் போறதா சொல்லுது.

அந்தமானுக்கு போய்தான் திருந்தி வாழணும்னு இல்லை. இங்கேயே வாழப் போற மாதரிதான் எனக்கு தோணுது. ஆனாலும் மாயவா... இவங்கல்லாம் வெளிப்படையா பேசச் சொன்னதுக்காக

ஒரு விசயம் சொல்லிக்கிறேன். என்ன நடந்தாலும் ஒரு பத்து நாளைக்கு இந்த மலையை விட்டு இறங்காதே. பத்து நாளை நீ தாண்டிட்டா அமோகமா இருப்பே. இப்ப இவங்கள அடக்கம் பண்ற வழிய பார். கோசலை கன்னியா இருந்து இறந்துருக்கா! அவ சமாதிக்கு அணையா விளக்கை ஏத்தி வை. அது உனக்கு பெரிய நன்மையச் செய்யும். அப்புறமா உங்களுக்கெல்லாம் ஒரு விசயம். நான் இந்த கூமாச்சி மலையை விட்டு சதுரகிரி பக்கம் போயிடப் போறேன். அங்க என்னப் போல உள்ள சாமிங்களோட சேர்ந்து எனக்கான யோக வாழ்க்கையை நான் தொடரப் போறேன்.

ஒண்ணுக்கு நாலு சவம் விழுந்துட்ட இந்த மலைமுகடு இனி எனக்கு சரிபட்டு வராது. எதிர்காலத்துல கோசலை சமாதி கோவிலாகற வாய்ப்புகள் அடிமனசுல தெரியுது. அத்தமட்டும் சொல்லிக்கறேன்'' என்று அவர் விளக்கமாக பேசி முடிக்கவும் மாயவனுக்கு கண்ணிரண்டும் திரும்பவும் கலங்கி கண்ணீர் பொலபொலவென்று கொட்டியது.

மணவாள சித்தர் இனி பேசவோ சொல்லவோ எதுவுமில்லை என்பதுபோல் சிரித்தபடியே கூமாச்சி மலையின் ஒரு குறிப்பிட்ட சரிவில் இறங்கிச் செல்லத் தொடங்கினார்.

அவர்கள் சிலைபோல் நின்று அதை பார்த்துக் கொண்டிருந்தனர்.

எல்லா டிவிகளிலும் 'மாயவனுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுமா?' என்கிற கேள்விதான். விவாதத்தில் இருந்தது. புலனாய்வுப் பத்திரிகைகள் எல்லாம் மாயவனைப் பற்றி தங்களுக்கு தெரிந்த தகவல்களைப் போட்டு தாக்கியிருந்தன.

பல வார இதழ்களின் அட்டையில் செண்பகக் குழல்வாய்மொழி தான் அட்டைப்பட நாயகி! 'சேற்றில் பிறந்த செந்தாமரை?' 'நம்பிக்கைதரும் புதிய தலைமுறை' - இப்படி பல தலைப்புகளில் செய்திகள்.

'ஜி.எச்.சில்' மார்ச்சுவரியில் இருந்த பாண்டிய மாணிக்கம் உடம்புக்கு மரியாதை செலுத்த வெகு சிலரே வந்திருந்தனர். அந்த அளவிற்கு அவர் பற்றிய செய்திகள் பூதாகரமாய் பரவிவிட்டிருந்தன.

குறிப்பாக அவரால் விபச்சாரி ஆன கண்ணம்மாள் என்பவன் பட்டுச்சேலை கட்டிதலை நிறைய பூச்சூடி நெற்றி நிறைய குங்குமத்துடன் பேட்டி அளித்தபடி இருந்தாள்.



'எனக்கு இன்னிக்கு தான் தீபாவளி... எனக்கு இன்னிக்குத் தான் பொங்கல். அந்த மாயவன் நூறு வருசம் நல்லா இருக்கணும்' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஒரு தொலைக்காட்சி மாயவன் கூட்டத்தை மன்னிக்கலாமா? என்று கேட்டு 'நீயா நானா' பாணியில் விவாதப் போர் நடத்திக் கொண்டிருந்தது. அந்த விவாதத்தில் பத்மினி பாஸ்கரும் பங்கெடுத்துப் பேசியிருந்தாள்.

'மாயவனை மன்னிக்கறதுலதான் நம்ம சட்டத்தோட மாண்பே இருக்கு. மாயவன் சட்டத்தை கைல எடுத்துகிட்டு தானே ஒரு நீதிபதியா நடந்துகிட்டிருக்கலாம். ஆனா மாயவன் விஷயத்தை இந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு மனிதனோட பிரச்சினையா பார்க்க கூடாது. மாயவன் இந்த சமுதாயத்துல இழிவான கள்ளன்கற முத்திரை குத்தப்பட்ட ஒருவன்.

பிறந்த நொடில இருந்து ஒருத்தர் எப்படி வழி நடத்தப்படறாரோ அப்படித்தான் அவர் வாழ்க்கை இருக்கும். மாயவனும் அவர் நண்பர்களும் தப்பா வழி நடத்தப் பட்டாங்க. அது அவங்க குத்தமே இல்லை. அவங்க திருந்தி வாழ வழிவகை செய்து கொடுத்தா மாயவன் நிச்சயம் ஒரு பெரிய ஹீரோயிச வாழ்க்கையே வாழ்ந்து காட்டுவார். அவரோட அவர் கூட்டத்தோட எனர்ஜி பாசிடிவுக்கு பயன்படணும். 'அது சட்டம் மாயவனை மன்னிக்கறதுலதான் இருக்கு. இந்த விஷயத்துல தமிழக முதல்வர் சட்ட மன்றத்தை கூட்டி ஒரு தீர்மானத்தையே நிறைவேற்றலாம். ஒரு ஊழல் புலியான எம்.எல்.ஏ.வான பாண்டிய மாணிக்கத்தை தன் கட்சியில வெச்சிருந்ததுக்கு இதைவிட ஒரு நல்ல பரிகாரத்தை செய்யவே முடியாது'' என்கிற அவனது கருத்தோடு கையில் விலங்கோடு செண்பகக் குழல்வாய்மொழியின் பேட்டியும் வெளிவந்தபடியே இருந்தது.

'மாயவன் என்னை கடத்தினதா சொன்னதெல்லாம் பொய்... நான்தான் மாயவனை தேடிப் போனேன். என் அப்பா அவர் குடும்ப நிலத்தை அநியாயமா அபகரிச்சு அதுல காலேஜ் கட்ட முயற்சி செய்தது எனக்கு பிடிக்கல. எனவே அவர்கிட்ட பறிச்ச நிலப்பத்திரத்தையும் அதுக்கான நஷ்ட ஈடையும் தர நான்தான் தேடிப் போனேன். என்கூட ஜூலியும் வந்தா.

எங்க செயல் எங்கப்பாவுக்கு பிடிக்காம போனதால தான் அவர் ஜூலிக்கு விஷ ஊசி போட்டு கொன்னார். அவளை கொல்றதன் மூலம் என்னை மிரட்டி வழிக்கு கொண்டுவரப்

பார்த்தார். ஆனா நான் அசரலை. அவர் செஞ்ச துரோகத்தையும் என்னால சகிக்க முடியல... அதனாலதான் அவரை நானே சுட்டேன்.

மாயவனைக் கொல்றதுக்காக என் அப்பா சிங்கத் தேவனை ஏவினதும் பிடிக்கல. அதனால சிங்கத்தேவனையும் சுட்டுக் கொன்னேன்.

மாயவன் இடத்தை குறுக்கு வழிய அபகரிக்க என் அப்பா செய்த முயற்சிகளுக்கு பின்னால சப்-இன்ஸ்பெக்டர் இளங்கோ இருந்தார். இந்த இளங்கோவை வெச்சு ரிப்போர்ட்டர் பத்மினியையும் சரவணனையுமே அப்பா கொல்ல முயற்சி செய்தார். அதுல அவங்க தப்பிச்சது தெய்வச் செயல்னுதான்னு சொல்லணும்.''

- இப்படி செண்பகக்குழல்வாய்மொழி பேசுவதும் டிவியில் எல்லா சேனல்களிலும் ஓடியபடி இருந்தது.

**மா**வட்ட ஆட்சித் தலைவர் முன்னால் எதிரில் அமர்ந்திருந்தாள் பத்மினி.

''சார்... நான் சொன்ன தகவல்களை வெச்சு எவ்வளவோ நல்லதை செய்துட்டீங்க. உங்களுக்கு என் நன்றி'' - என்று அவள் கூறவும் கலெக்டர் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல்,

''மாயவன் இப்ப எங்க இருக்கார். அவர் ஏன் நேர்ல வராம இன்னும் தலைமறைவாவவே இருக்காரு? அவருக்கு பொது மன்னிப்பு கொடுக்கறது பத்தி மீடியாவே பேசி கிட்டிருக்கும்போது அவருக்கு அதுல எந்த அளவு விருப்பம் இருக்கு - அவர் கருத்து என்னன்னு தெரிய வேண்டாமா?'' - என்று கேட்க வேண்டிய கேள்வியைத்தான் கேட்டார்.

''சார்... அதிகபட்சம் 24 மணிநேரத்துல மாயவன் மற்றும் அவர் கூட்டாளிகளோட உங்கள சந்திப்பேன். மலைக்காட்டுல மறைஞ்சு வாழற அவரை நேர்ல சந்திக்க வைக்க ஒரு சரியானதுணை கிடைச்சிருக்சு'' என்ற பத்மினி செல்லக் கிளியை அழைத்து காட்டவும் செல்லக்கிளி அவருக்கு வணக்கம் சொன்னாள்.

''உங்களுக்கு போலீஸ் உதவி தேவையா இருக்குமா?''

''அவசியமே இல்ல. போலீஸ் வந்தா காரியம் கெட்டாலும் கெட்டுடும். நானும் செல்லக்கிளியும் போதும். செண்பகக் குழல்வாய்மொழியோட ஸ்டேட்மென்ட் ஒண்ணு போதும். மாயவனை மலையை விட்டு வரவழைக்க '' என்று கூறியவள் செல்லக்கிளியுடன் புறப்பட தயாரானாள்.



# 52

**சூ**மாச்சி மலை உச்சி!

நூற்றுக்கும் மேலான சிறிய துணிப்பைக்குள் நகைகள், பணக்கட்டு என்று பார்த்துப் பார்த்து போட்டுக் கொண் டிருந்தனர் கடாரனும், பெருமாளும்! மாயவனும் உளியனும் கோசலைக்கும் பருத்திக்குமான சமாதியில் காட்டுப் பூக்களை தூவியபடி இருந்தனர்.

மீதமுள்ள மற்ற மூன்று வல்லாளர்களின் சடலங்களையும் வனக்கழுகுகள் தின்று தீர்க்கட்டும் என்று விரும்பி வெகுதூரத்தில் உள்ள வானம் பார்த்த பாறையின் மேல் கிடத்திவிட்டு வந்து விட்டிருந்தனர்.

அதற்கேற்ப அங்கே கழுகுகளும் கூடி விட்டிருந்தன. போதாக் குறைக்கு காட்டு நாய் பூனை என்று அங்கே ஒரே கூட்டம். அவைகளிடமும் முண்டல் மோதல்.

மாயவன் கோசலையின் சமாதிக்கு அருகிலேயே எழுந்திருக்க மனமில்லாதபடி அமர்ந்து விட்டான். உளியன் அழைத்தும் அவனால் எழுந்திருக்க முடியவில்லை. கண்ணிரண்டும் அவ்வப் போது கண்ணீரை சொரிய விட்டது.

''ஏப்பா இம்புட்டு ஆசைய வெச்சுகிட்டுதான் உன் மாமன் மவகிட்ட வெடுக்கு வெடுக்குன்னே பேசி கிட்டிருந்தியா?'' என்று உளியன் கேட்டே விட்டான்.

''பாவம் உளியா கோசல...! நாமதான் நாசமா போறதுக் குன்னே பொறப்பெடுத்துருக்கோம் - அவளாவது கல்யாணம் காட்சின்னு நல்லா இருக்கட்டும்னு நினைச்சுதான் அவ ஆசைக்கு அப்பப்ப நான் அணை போட்டேன். ஆனா இப்படி ஆகும்னு நினைக்கல... வல்லாளனுங்க நம்பள ஜெயிக்காம போயிருக்கலாம். ஆனா கோசலையையும், அத்தையையும் கொன்று அடிமனசு காலத்துக்கும் என்னை அழுவ உட்டுட்டுதான் போயிருக்கானுங்க.

நெசத்துல நாம ஜெயிக்கல உளியா? தப்பித்தான் பொழச்சிருக் கோம். இந்த இடத்தை விட்டும், நம்ம இனத்தை விட்டும் போவப் போறத நினைச்சா என்ன பொழப்புடா இதுன்னுகூட இருக்கு.

பாழாப் போன வவுரு...! இதால தானே இந்த உலகத்துல எல்லாருமே சீரழியறோம்... கூடனே இருக்கற இந்த எழவெடுத்த வவுத்த விடவா ஒரு எதிரி ஒருத்தருக்கு வெளிய இருக்க முடியும்?

- மாயவனிடம் விசாரம் உடைத்துக் கொண்டு மனசு தத்துவமாய் புழுங்கத் தொடங்கிவிட்டது.

''சரிப்பா... அம்புட்டு பணம் காசு நகை நட்டையும் பைக்குள்ள போட்டுட்டோம்பா... விடியக்கருக்கல்ல வீட்டுக்கு வீடு வீசி எரிஞ்சுட்டா ஒரு சோலி முடிஞ்சிச்சு. அம்புட்டு ஊர்க்காசையும் ஊருக்கே கொடுத்துட்ட திருப்தியோட அம்புட்டு திரும்ப மலை ஏறி இங்கிட்டு கூடி போய் கேரளா பார்டர் அப்படியே இறங்கிடுவோம்ப்பா. என்ன சொல்றே? மாறுவேசம் போடத் தோதா நாடகக் கம்பெனி பொன்னுரங்கம் டோப்பாவுல இருந்து ஒட்டுத்தாடி வரை கொடுத்து விடருக்காம்ப்பா...'' என்றான் பெருமாள். மாயவனிடம் மறுபேச்சில்லை. அதே சமயம் மலைச்சரிவில் சலனம் யாரோ வருகிறார்கள் என்பது தெரியத் தொடங்கியது. வானில் பறவைகளின் சலசலப்பு...!

''நிச்சயமா போலீசு வர்ரதுக்கு சந்தர்ப்பம் இருக்குது. அவுகளாதான் இருக்கணும். இப்பகூட அவுக நம்ம தேடி வராட்டி அந்த டிபார்ட்மெண்டையே எடுத்துடலாம்'' என்றவன். ''கடாரா நீ உச்சிமரம் ஏறி நோட்டம் பாரு. நாங்க குழில பதுங்கறோம்'' என்று மூவரும் பதுங்க ஆயுத்த மாயினர். பணப்பைகள் அவ்வளவையும் ஒரு துணி மூட்டையாக கட்டி தோளில் சுமந்து கொண்டே பதுங்கு குழிக்குள் அடங்கிக் கொண்டு மேலே சருகுகள் மூடிக் கிடக்கும் மூங்கில் தட்டியையும் இழுத்து விட்டுக் கொள்ளப் பார்த்தனர்.

ஆனால் கடாரன் உச்சி மரக்கிளையில் பச்சோந்தி போல நீளவாக்கில் ஒட்டிக் கொண்டு கீழே பார்த்தபோது செல்லக் கிளியும் பத்மினியும் வந்து கொண்டிருந்தனர். அவர்களோடு கேமராமேன் சரவணன், அவன் முதுகில் ஒரு லெதர் பேக் பள்ளிகூட பிள்ளைகள் போல அதை தோளில் மாட்டிக் கொண்டிருந்தான்.

செல்லக்கிளியை பார்க்கவும் பெருமூச்சோடு கீழ் இறங்கிய கடாரன் பெரிதாக விசில் ஒன்றை அடிக்கவும் பதுங்கியவர்களும் வந்திருப்பது பகைவர்களில்லை என்னும் தைரியத்தோடு பதுங்குழிக்கு வெளியே வந்தனர்.

அவர்களையும் அந்த சூழலையும் பத்மினி முதல் முதலாக பார்க்கிறாள். நிறையவே வியர்த்து பெருமூச்சு வாங்கும் நிலையில் மாயவனை கச்சிதமாய் பார்த்து மிகப் பணிவாக வணக்கமும் சொன்னாள்.

''செல்லக்கிளி யாரு இவுக?''

''டி.வி.காரவுக அண்ணே.''



''ஒரு வார்த்தை எங்களாண்ட கேக்காம எதுக்கும்மா இப்படி கூட்டியாந்தே?'' - 'மாயவன் குரலில் அதட்டல் பரவியது.

''ஒரு நிமிஷம் நான் பேசலாமா?'' பத்மினி கத்தரித்து இடையில் பேசத் தொடங்கினாள்.

''செல்லக்கிளி முடியவே முடியாதுன்னுதான் சொன்னா. ஆனா உங்களுக்கு கிடைக்கப்பெற விடுதலை, உங்க எதிர்காலம் இதைப் பத்தி எல்லாம் சொல்லவும் உடனே சம்மதிச்சுட்டா.''

''என்னது எங்களுக்கு விடுதலையா... என்னம்மா பொண்ணு உளர்றே?'' - மாயவன் புருவம் வளையத் தொடங்கியது.

''உளறல... நான் சொல்றது நிஜம். இந்த செகண்ட் தமிழ் நாட்டே 'ஹாட்' டாபிக்கே நீங்கதான். இந்த நொடி தமிழ்நாட்டு டிவில உங்க பேர், உங்க போட்டோதான் காட்டப்பட்டுகிட்டிருக்கு. உங்க விஷயத்தை நான் சமூக அக்கறை உள்ள பெரியவங்க அலசிகிட்டும் இருக்காங்க...!''

''ஆமாண்ணே... நீங்க நினைக்கற மாதிரி பயப்படும் படியாவோ நீங்க ஓடி ஒளியும்படியாவோ எதுவும் 'இல்லண்ணே எம்.எல்.ஏ.வை கொன்னது கூட அவரு மகதான்னு அதுவே ஒத்துகிட்டு இப்ப அது ஜெயிலுக்குள்ள தாண்ணே இருக்கு...!''

- செல்லக்கிளி பத்மினியின் பேச்சை வழி மொழிந்து பேசியதில் செண்பகக்குழல்வாய்மொழி பற்றி சொன்னது மாயவன் தொண்டைக் குழியை விசுக்கென்று அடைத்தது.

''செல்லக்கிளி! என்ன ஆத்தா சொல்றே?''

''ஆமாண்ணே... உங்களப் பத்தி அது பெருமை யாதாண்ணே சொல்லியிருக்கு. ஊருக்குள்ள சனங்களும் யாரும் உங்களத் தப்பா சொல்லல அண்ணே. அந்த கேடுகெட்ட போலீஸ்காரனும் குத்தத்தை ஒத்துக் கிட்டாண்ணே...''

- செல்லக்கிளி சந்தோஷ விம்முதலோடு விஷயங் களைக் கொட்டினாள். மாயவன் உட்பட நால்வரும் ஒரு வினாடி பேச்சு மூச்சற்றுப் போயினர்.

''செல்லக்கிளி நீ கொஞ்சம் சும்மா இரு... மிஸ்டர் மாயவன் நீங்க இந்த லேப்டாப்பை பாருங்க. இதுலதான் எல்லாருடைய பேட்டியையும் ரெக்கார்ட் பண்ணி கொண்டு வந்துருக்கேன். சரவணன்... எடுங்க அந்த லேப்டாப்பை - கமான் - க்விக்...''

- பத்மினி துரிதப்படுத்தினாள். சரவணனும் அதை வேகமாக வெளியே எடுத்தான். பேட்டரி சார்ஜில் இயங்கும் அதுவும்

சகலத்தையும் காட்சியாகவே அவர்களுக்கு காட்டத் தொடங்கி விட்டது. அவர்கள் அந்தக் காட்சியில் இருக்கும் போது சுற்றுச்சூழலை கவனித்து உள்வாங்கிக் கொள்ளத் தொடங்கினாள்.

சற்று தூரத்தில் காட்டுப் பூக்களோடு கிடந்த கோசலை மற்றும் பருத்தியின் சமாதியையும் நெருங்கிச் சென்று பார்த்தாள். செல்லக்கிளிக்கும் அந்த சமாதிகள் அதிர்வைத் தான் தந்தன.

பேட்டிகளையும், செய்திகளையும் பார்த்து முடித்திருந்த மாயவன் உறைந்து போய் விட்டிருந்தான். ஆழ்ந்த மௌனம் அவனிடம்.

''அண்ணே அந்த சமாதிங்க...'' என்று செல்லக்கிளி கேட்டதற்கு கூட அவன் பதிலைச் சொல்லவில்லை. உளியன்தான் பேசினான்.

''வல்லாளனுங்க பருத்தி, கோசலை ரெண்டு பேரையும் சாகடிச்சிட்டாங்கம்மா... அவுகளும் சும்மாச் சாயல. அந்த மூணு நாயுங்களையும் கொன்னுட்டுதான் செத்தாக? அதான் அந்த நாயுங்கள காட்டு நாயுங்க திங்கட்டும்னு மண்டபப்பாறை மேல போட்டுட்டோம். அதோ...'' என்று கை காட்டினான்.

விடைப்போடு பத்மினி, சரவணன் இருவரும் கூட அந்தப் பக்கமாய் பார்க்க கழுகுகளின் வட்டமும், நாய்களின் குரைப்பும் அவர்களுக்கும் தேய்ந்த நிலையில் கேட்டது!

கூமாச்சி மலையின் காற்று வீச்சுக்கு நடுவே மாயவன் தொட்டு சகலரிடமும் கனத்த மௌனம் நிலவும் நிலையில் பத்மினி திரும்பவும் இடையிட்டாள்.

''மாயவன்... உங்க வரைல இனி இந்தமாதிரி போராட்டமான ஒரு வாழ்க்கை முடியப்போகுது. நீங்க போலீஸ்ல சரணடைஞ்சா போதும்! நிச்சயம் உங்களுக்கு ரொம்ப ரொம்ப குறைந்த பட்ச தண்டனையோ இல்லை பொது மன்னிப்போ உங்களுக்கு உறுதியா கிடைக்கும். அதுமட்டுமில்ல. நீங்க நல்லவிதமா வாழ அரசாங்கமே உங்களுக்கு எல்லா உதவிகளும் செய்யும்...''

- பத்மினி சொன்னதைக் கேட்டு முதல் தடவையாக கேலியான பாவனையில் புருவத்தை வளைத்தான் மாயவன்.

''புரியுது... நான் ஏதோ ஒரு ஆர்வத்துல பேசறதா நினைக்கறீங்க அப்படித்தானே?''

''அம்மாடி நீங்கல்லாம் பொறக்கும் போதே நல்லா பெரிய ஆஸ்பத்திரில செகுசா பொறந்தவங்க... உங்க ஆத்தாளுக்கு இடுப்புவலி கூட தெரியக் கூடாதுன்னு ஊசி எல்லாம் போட்டு



ஆப்ரேசன் பண்ணித்தான் பொறந்துருப் பீங்க. அப்படி பொறந்ததுல இருந்து பொத்துன மாதிரி உங்கள் வளத்து ஆளாக்கியிருப்பாங்க.

பாத்து பாத்து வளந்து நல்லா படிக்க முடிச்சு பசி தாகம்னாகூட என்னன்னே தெரியாம வளந்து எடுத்த எடுப்புல இருபதாயிரம் முப்பதாயிரம்னு சம்பளமும் வாங்கிட்டு இப்ப நீங்க பாக்கற உலகம் வேற... நாங்க பாக்கற உலகம் வேற தாயி!

குறிப்பா உங்களுக்கெல்லாம் நல்லது தெரிஞ்ச அளவுக்கு கெட்டது தெரியாது. எங்களுக்கோ கெட்டதை தவிர வேற எதையுமே தெரியாது. நீ நினைக்கற மாதிரி இந்த பொது மன்னிப்பு, கூடி உக்காந்து பேசி கும்மி அடிக்கற தெல்லாம் உங்க டிவிகாரங்க பொழப்பு. நடக்கவேணா தோதா இருக்கும். ஆனா எங்கள எல்லாம் வாழ உடமாட்டாங்கம்மா. எங்களுக்கும் இவங்க யாரும் மன்னிப்பும் தரவேண்டாம். மண்ணாங்கட்டியையும் தரவேண்டாம்'' என்றான் பெருமாள்.

உளியனோ கோவமாக, ''யாரை யாரும்மா மன்னிக்கறது? நாங்கதாம்மா எல்லாரையும் மன்னிக்கணும். பாக்கறேல்ல இந்த மலைக் காட்டை...? இங்க கிடந்து கொகக்கடிலயும், அட்டக் கடிலயும் தினம்தினம் சாவறோம்மா... இதுக்கு இந்த சமுதாயம் தானே காரணம்?'' - என்று கேட்க கடாரன் பிடித்து கொண்டான்.

''நாங்க நாணயமா வேலை பாக்கறோம்னாலும் யார் எங்கள நம்பறா? அப்பன் ஆத்தா பேருவெச்சிருந்தாலும் 'வாடா களவாணி'ன்னா தானே பேசறவங்களுக்கு திருப்தியா இருக்குது... இது மகா மோசமான உலகம்மா... இந்த உலகத்த சேர்ந்த யாரும் எங்கள மன்னிக்க வேணாம். நாங்களே இந்த ஊரை விட்டே கிளம்பற முடிவுலதான் இருக்கோம்.

பொழுது விடியும் போது தெரியும்... நாங்க யாரு... எப்படிப்பட்டவங்கன்னு...''

- கடாரனின் பேச்சில் உண்மைகளும் ஆதங்கமும் கலந்து இருந்தது. அது பத்மினிக்கும் நன்றாகவே புரிந்தது.

''சார்... ரொம்ப நல்லா பேசினீங்க. ஆனா உங்களுக்கு எல்லா நல்லதும் நடக்கப்போற இந்த நேரத்துல நீங்க இப்படி பேசறது தான் தப்பு. தயவு செய்து நீங்க என்னை நம்புங்க. என்கைல மீடியா இருக்கு. எந்த அரசியல்வாதியும் எங்கள மீறி எதையும் செய்துட முடியாது.''

''சந்தோசம்மா... நீ சொன்ன விசயத்துக்காக இல்ல. சாருனு கூப்ட்டே பாரு - அதுக்காக... ரொம்ப சந்தோசம்.''

- பெருமாளின் பதிலுக்கு பதில் பத்மினிக்கு மட்டுமல்ல செல்லக்கிளிக்கும் நெருடலாக இருந்தது.

''அண்ணே... இந்த அக்கா சொல்றத கேளுங்கண்ணே. இவங்க ரொம்ப நல்லவங்கண்ணே - இவங்களவிட எம்எல்ஏ பொண்ணு ரொம்ப வேகமா இருக்குண்ணே...''

என்றாள்.

''எக்ஸாக்ட்லி...'' செல்லக்கிளி சொல்றதுதான் சரி. செண்பகக்குழல்வாய்மொழி உங்களுக்காக ரொம்பவே போராடிக்கிட்டிருக்காங்க. அவங்க அப்பாவோட பிணத்தை கூட பாக்க மாட்டேன். நீங்களே கொளுத்திடுங்கன்னு சொல்லிட்டாங்க. யாரோ தூரத்துச் சொந்தக்காரர்தான் மிஸ்டர் பாண்டியமாணிக்கம் சிதைக்கே நெருப்பு வெச்சார். எந்த ஒரு அரசியல்வாதியும் இறுதி மரியாதை செலுத்தக்கூட வரலை. அப்படி வந்தா எங்க அந்த எம்எல்ஏ செய்த தப்புல தங்களுக்கும் சம்பந்தம் இருக்குன்னு சொல்லிடுவாங்களோங்கற பயம்தான் காரணம்.

ஓய்வு பெற்ற நீதிபதி தலைமைல விசாரணை கமிஷன் அமைக்க ரிப்போர்ட் கொடுக்கச் சொல்லிட்டு நம்ம சி.எம். வெளிநாட்டுக்கு போயிட்டாங்க அந்த நீதிபதி தலைமைல ஒரு 'போலீஸ் குரூப் உங்களை சந்திக்க தயாராகிட்டு இருக்காங்க. அவங்க உங்கள தேடி வந்து பிடிச்சா அதுக்கு அர்த்தமே வேற. அதே நீங்க சரண்ட்ராயிட்டா ஒரு பிரச்னையுமில்ல. ஏன்னா இப்ப உங்கமேல இந்த எம்.எல்.ஏ. சம்மந்தமா ஒரு குற்றச்சாட்டு கூட கிடையாது. செண்பகக்குழல்வாய் மொழியை கூட நீங்க கடத்தலை. அவங்கதான் உங்ககூட விரும்பி இருந்ததா சொல்லியிருக்காங்க. இங்க கொல்லப் பட்ட கூலிப்படை ஆட்களான வல்லாளர்களை கூட நீங்க கொல்லல... அதோ சமாதில இருக்கற கோசலையும், பருத்தியும்தான் கொன்னுருக்காங்க? ஆகையால உங்களுக்கு தண்டனை தர இடமே இல்லை. உங்கமேல போலீஸ் ஸ்டேஷன்ல ஏதாவது பழைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தா அதை எல்லாம் தள்ளுபடி செய்ய கவர்னர் உத்தரவு போடுவார். அந்த அளவு கவர்னருக்கு பிரெஷர் உருவாகிகிட்டு இருக்கு.

ஆகையால விரக்தியிலையும் கோபத்துலயும் தவறான முடிவு எடுக்காம என்பேச்சை கேட்டு இப்பவே என்கூட வாங்க.''

- என்று ஒரே மூச்சாய் பேசினாள் பத்மினி.

ஆனால் விரக்திச் சிரிப்பு மாயவனிடம்...

''என்னங்க சிரிக்கிறீங்க?''



''எதிர்கட்சிக்காரன் வக்கீல். கோர்ட்ல பேசற மாதிரியே பேசறம்மா நீ. நாங்க கொள்ளக்காரனா இல்லையான்னு எங்களுக்கு தெரியாதது உனக்கு தெரிஞ்சிடிச்சா தாயி?'' என்று கேட்ட மாயவனை அப்படியே செல்லக்கிளி பக்கம் திரும்பி ''தங்கச்சி... உன் விசயம் இதுக்கு தெரியாதா? உன்ன சீரழிச்ச பாவிங்க தலைல பாறாங்கல்ல தூக்கி போட்டு கொன்னோமேம்மா... சொல்லலியா நீ.'' என்று கேட்டான்.

''அண்ணே அதை எல்லாம் நான் எப்படிண்ணே சொல்வேன். எனக்கு நீங்க நல்லா இருக்கணும்கறது தானேண்ணே நோக்கம்?'' செல்லக்கிளி உடைந்த குரலில் திருப்பிக் கேட்டாள்.

''அதான் இந்த சென்மத்துல இல்லன்னு முடிவாயிருச்சே தங்கச்சி.''

''ஐயோ போதும்... இன்னும் எவ்வளவு நேரம்தான் இப்படியே பேசிகிட்டு இருக்கப் போறீங்க. செல்லக்கிளியக் கெடுக்க வந்தவங்கள நீங்க கொன்னுருந்தா அதைப் பத்தி எனக்கு கவலையே கிடையாது. பார்டர்ல கூடதான் நம்ம சோல்ஜர்ஸ் பலபேரை சுட்டுகொன்னுக்கிட்டிருக்காங்க. அவங்க யூனிஃபார்ம் போட்டுக்கிட்டு செய்ததை நீங்க போடாம செய்திருக்கீங்க. அவ்வளவுதான் விஷயம் அதை எல்லாம் இப்ப பேசவேண்டாம். நானும் பேச மாட்டேன். ஆனா ஒண்ணு மிஸ்டர் மாயவன்! நீங்க எனக்காககூட சரண்டராக வேண்டாம். செண்பகக்குழல்வாய் மொழிக்காக நீங்க சரண்டராகறதுதான் நியாயம். ஏன்னா நீங்க நல்லா இருக்கணும்னுதான் அவங்க நீங்க செய்த கொலைகளை தான் செய்ததா போலீஸ்ல சொல்லி இப்ப கைதியாகவும் இருக்காங்க. என்கிட்ட அவங்க மனம்விட்டு பேசினாங்க.

எம்எல்ஏ செய்த அவ்வளவு துரோகங்களையும் பாவங்களையும் அவங்க தன்மேல போட்டுக்கிட்டு உங்க பழியை துடைச்சிருக்காங்க. அவங்களுக்கு இப்ப ஒரே நோக்கம்தான். அது நீங்களும் உங்க கூட்டமும் இனியும் களவுத் தொழில் பண்ணாம நல்லபடியா வாழணும்கறது தான். ஆகையால் அவங்களுக்காக வாவது நீங்க தயவுசெய்து இப்ப என்கூட வாங்க. உங்கள சந்திக்க கலெக்டர்ல இருந்து போலீஸ் கமிஷனர் வரை எல்லாரும் தயாரா இருக்காங்க...''

பத்மினி செண்பகக்குழல்வாய்மொழியை தொட்டு பேசியது மாயவனை வெகுவாகவே யோசிக்க வைத்தது. அது அவனே எதிர்பார்த்திராத திருப்பம்...

பெருமாளின் பதிலுக்கு பதில் பத்மினிக்கு மட்டுமல்ல செல்லக்கிளிக்கும் நெருடலாக இருந்தது.

''அண்ணே... இந்த அக்கா சொல்றத கேளுங்கண்ணே. இவங்க ரொம்ப நல்லவங்கண்ணே - இவங்களவிட எம்எல்ஏ பொண்ணு ரொம்ப வேகமா இருக்குண்ணே...''

என்றாள்.

''எக்ஸாக்ட்லி...'' செல்லக்கிளி சொல்றதுதான் சரி. செண்பகக்குழல்வாய்மொழி உங்களுக்காக ரொம்பவே போராடிக் கிட்டிருக்காங்க. அவங்க அப்பாவோட பிணத்தை கூட பாக்க மாட்டேன். நீங்களே கொளுத்திடுங்கன்னு சொல்லிட்டாங்க. யாரோ தூரத்துச் சொந்தக்காரர்தான் மிஸ்டர் பாண்டியமாணிக்கம் சிதைக்கே நெருப்பு வெச்சார். எந்த ஒரு அரசியல்வாதியும் இறுதி மரியாதை செலுத்தக்கூட வரலை. அப்படி வந்தா எங்க அந்த எம்எல்ஏ செய்த தப்புல தங்களுக்கும் சம்பந்தம் இருக்குன்னு சொல்லிடுவாங்களோங்கற பயம்தான் காரணம்.

ஓய்வு பெற்ற நீதிபதி தலைமைல விசாரணை கமிஷன் அமைக்க ரிப்போர்ட் கொடுக்கச் சொல்லிட்டு நம்ம சி.எம். வெளிநாட்டுக்கு போயிட்டாங்க அந்த நீதிபதி தலைமைல ஒரு 'போலீஸ் குரூப் உங்களை சந்திக்க தயாராகிட்டு இருக்காங்க. அவங்க உங்கள தேடி வந்து பிடிச்சா அதுக்கு அர்த்தமே வேற. அதே நீங்க சரண்ட்ராயிட்டா ஒரு பிரச்னையுமில்ல. ஏன்னா இப்ப உங்கமேல இந்த எம்.எல்.ஏ. சம்மந்தமா ஒரு குற்றச்சாட்டு கூட கிடையாது. செண்பகக்குழல்வாய் மொழியை கூட நீங்க கடத்தலை. அவங்கதான் உங்ககூட விரும்பி இருந்ததா சொல்லியிருக்காங்க. இங்க கொல்லப் பட்ட கூலிப்படை ஆட்களான வல்லாளர்களை கூட நீங்க கொல்லல... அதோ சமாதில இருக்கற கோசலையும், பருத்தியும்தான் கொன்னுருக்காங்க? ஆகையால உங்களுக்கு தண்டனைதர இடமே இல்லை. உங்கமேல போலீஸ் ஸ்டேஷன்ல ஏதாவது பழைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தா அதை எல்லாம் தள்ளுபடி செய்ய கவர்னர் உத்தரவு போடுவார். அந்த அளவு கவர்னருக்கு பிரெஷர் உருவாகிகிட்டு இருக்கு.

ஆகையால விரக்தியிலையும் கோபத்துலயும் தவறான முடிவு எடுக்காம என்பேச்சை கேட்டு இப்பவே என்கூட வாங்க.''

- என்று ஒரே மூச்சாய் பேசினாள் பத்மினி.

ஆனால் விரக்திச் சிரிப்பு மாயவனிடம்...

''என்னங்க சிரிக்கிறீங்க?''



''எதிர்கட்சிக்காரன் வக்கீல். கோர்ட்ல பேசற மாதிரியே பேசறம்மா நீ. நாங்க கொள்ளக்காரனா இல்லையான்னு எங்களுக்கு தெரியாதது உனக்கு தெரிஞ்சிடிச்சா தாயி?'' என்று கேட்ட மாயவனை அப்படியே செல்லக்கிளி பக்கம் திரும்பி ''தங்கச்சி... உன் விசயம் இதுக்கு தெரியாதா? உன்ன சீரழிச்ச பாவிங்க தலைல பாறாங்கல்ல தூக்கி போட்டு கொன்னோமேம்மா... சொல்லலியா நீ.'' என்று கேட்டான்.

''அண்ணே அதை எல்லாம் நான் எப்படிண்ணே சொல்வேன். எனக்கு நீங்க நல்லா இருக்கணும்கறது தானேண்ணே நோக்கம்?'' செல்லக்கிளி உடைந்த குரலில் திருப்பிக் கேட்டாள்.

''அதான் இந்த சென்மத்துல இல்லன்னு முடிவாயிருச்சே தங்கச்சி.''

''ஐயோ போதும்... இன்னும் எவ்வளவு நேரம்தான் இப்படியே பேசிகிட்டு இருக்கப் போறீங்க. செல்லக்கிளியக் கெடுக்க வந்தவங்கள நீங்க கொன்னுருந்தா அதைப் பத்தி எனக்கு கவலையே கிடையாது. பார்டர்ல கூடதான் நம்ம சோல்ஜர்ஸ் பலபேரை சுட்டுகொன்னுக்கிட்டிருக்காங்க. அவங்க யூனிஃபார்ம் போட்டுக்கிட்டு செய்ததை நீங்க போடாம செய்திருக்கீங்க. அவ்வளவுதான் விஷயம் அதை எல்லாம் இப்ப பேசவேண்டாம். நானும் பேச மாட்டேன். ஆனா ஒண்ணு மிஸ்டர் மாயவன்! நீங்க எனக்காககூட சரண்டராக வேண்டாம். செண்பகக்குழல்வாய் மொழிக்காக நீங்க சரண்டராகறதுதான் நியாயம். ஏன்னா நீங்க நல்லா இருக்கணும்னுதான் அவங்க நீங்க செய்த கொலைகளை தான் செய்ததா போலீஸ்ல சொல்லி இப்ப கைதியாகவும் இருக்காங்க. என்கிட்ட அவங்க மனம்விட்டு பேசினாங்க.

எம்எல்ஏ செய்த அவ்வளவு துரோகங்களையும் பாவங்களையும் அவங்க தன்மேல போட்டுக்கிட்டு உங்க பழியை துடைச்சிருக்காங்க. அவங்களுக்கு இப்ப ஒரே நோக்கம்தான். அது நீங்களும் உங்க கூட்டமும் இனியும் களவுத் தொழில் பண்ணாம நல்லபடியா வாழணும்கறது தான். ஆகையால் அவங்களுக்காக வாவது நீங்க தயவுசெய்து இப்ப என்கூட வாங்க. உங்கள சந்திக்க கலெக்டர்ல இருந்து போலீஸ் கமிஷனர் வரை எல்லாரும் தயாரா இருக்காங்க...''

பத்மினி செண்பகக்குழல்வாய்மொழியை தொட்டு பேசியது மாயவனை வெகுவாகவே யோசிக்க வைத்தது. அது அவனே எதிர்பார்த்திராத திருப்பம்...

# 53

பத்மினி சொன்ன விஷயங்களும் அவளது அழைப்பும் மாயவனை ஆச்சரியத்தில் மட்டுமல்ல, சிந்தனையிலும் ஆழ்த்தி விட்டிருந்தது. செண்பகக்குழல்வாய் மொழி அந்த நொடியில் அவன் வரையில் ஒரு தேவதையாகத் தான் தெரிந்தாள்.

அப்பன் அசுரன் என்றால் மகள் தேவதையாக இருந்து வரமும் தரப் பார்க்கிறாள். 'இப்படி ஒரு தேவதையை சிறைக்கு அனுப்பி விட்டு எங்கே போய் தன்னால மட்டும் வாழ்ந்து விடமுடியும்?' என்கிற கேள்வியும் அவனுக்குள் மெல்ல எழும்பியது.

ஆனால் அவன் சகாக்களிடம் அப்படி ஒரு எண்ண ஓட்டமெல்லாம் இல்லை.

''அப்பன் தப்புக்கு பொண்ணு அனுபவிக்கப் போறா? நாங்களா அதுகிட்ட குத்தத்தை ஒத்துக்க சொன்னோம்? அது நெசமா அந்த பாண்டியமாணிக்கத்துக்குதான் பொறந்துச் சான்னு எனக்கு சந்தேகமா இருக்கு'' என்று கடாரன் கூறவும் ஆமோதிப்பது போல.

''நான் நினைச்சேன். நீ சொல்லிட்டே...'' என்றான் உளியன்.

அந்த பதில் பத்மினிக்கும் சரி செல்லக்கிளிக்கும் சரி லேசான எரிச்சலைத் தந்தது.

மாயவனிடம் மட்டும் செண்பகக்குழல்வாய் மொழியை உத்தேசித்து கனத்த மெளனம்.

''மிஸ்டர் மாயவன்? என்ன யோசனை... இவங்க கருத்துதான் உங்க கருத்தா? வாயத் திறந்து சொல்லுங்க'' என்று மாயவனை தூண்டிவிடத் தொடங்கினாள் பத்மினி.

மாயவனும் தன் மெளனத்தை கலைத்துக் கொண்டு வாயைத் திறந்தான்.

''அந்த படுபாவியோட மவ பாக்கத்தான் அழகுன்னு நினைச்சிட்டிருந்தேன். அதுக்கு மனசும் அழகாத்தான் இருக்கு. இங்க இருக்கைல அதுவும் எங்களாண்ட இத்ததான் சொன்னிச்சு. ஆனா அதுக்கும் சரி, இப்ப எங்ககூட பேசற உனக்கும் சரி ஆத்தா... போலீசு, சட்டம் பத்தி எல்லாம் தெளிவா தெரியலங்கறதுதான் என் அபிப்பிராயம்.

என் அனுபவத்துல பத்து போலீஸ்ல ஒரு போலீசுதான் நல்ல போலீசு! அந்த ஒத்த ஆளால சொச்சமுள்ள ஒம்போது பேரை எதிர்த்து என்னாத்த கிழிச்சுட முடியும்? சொல்லு பார்ப்போம்...



சட்டம் வக்கீலு கோர்ட்டு சமாச்சாரமெல்லாமும் அதே மாதிரிதான் பொய்யா புளுகறதுக்குன்னே ஒரு பட்டப் படிப்புன்னா அது வக்கில் படிப்புதான். அந்த கறுப்புக்கோட்டு போட்ட ஆளுங்க காக்காய குயிலும்பாங்க. குயில மயிலும்பாங்க.

உனக்கெல்லாம் அனுபவம் கிடையாது ஆத்தா. ஆனா உன் நல்ல எண்ணத்த நான் மதிக்கறேன். அதுக்காண்டி கையத்தூக்கி கும்புடக்கூடத் தயாரா இருக்கேன். இந்த சரண்டராவறது, கலெக்டரு நீதிபதின்னு பாத்து 'ஐயா மன்னிச்சு உட்ருய்யா'ன்னு கெஞ்சற சோளி எல்லாம் எனக்கு ஒப்பாது ஆத்தா.

எங்கள விட்றுங்க. அதான் நாங்க இந்த மண்ண விட்டே போவப் போறோமே? எம்எல்ஏவையும் போட்டுத் தள்ளிப் புட்டோம். போய் பெரிய அதிகாரிகளாண்ட சொல்லுங்க. அந்த படுபாவி எம்எல்ஏவை போட்டுத் தள்ளுனது நான்தான். சிங்கத்தேவனைத்தான் அவன் போட்டுத் தள்ளுனான். இத்தச் சொல்லி அந்தப் புள்ளய வெளிய விடச் சொல்லுங்க.

அப்படியே அக்குருமம் பண்ணப் பத்து பேர்னா அந்த அடக்க என்னிய மாதிரி ஒருத்தன் வந்தே தீருவான்னும் சொல்லுங்க''

பேச்சோடு பேச்சாக மாயவன் அங்கிருக்கும் தங்களின் பொருட்களை கட்டியபடியே பேசியதைக் கேட்டு தன்னையும் மறந்து சிரித்து விட்டாள் பத்மினி.

அது அவர்கள் நால்வரையுமே பெரிய அளவில் பாதித்தது. பதிலுக்கு அவளை குத்துவது போல பார்த்தனர். மாயவன் கண்களில் கணிசமாய் கோபமும் தெரிந்தது.

''சாரி... நீங்க நல்லாத்தான் பேசிட்டு வந்தீங்க... ஆனா செண்பகக்குழல்வாய்மொழி கொலை செய்யலை. நான்தான் செய்தேன்னு சொல்லச் சொன்னீங்கள் பாருங்க... அதான் சிரிச்சிட்டேன்.''

''இதுல சிரிக்க என்ன ஆத்தா இருக்கு?''

''என்ன இருக்கா... நீங்களா கேக்கறீங்க இப்படி? சட்டம், போலீஸ், வக்கீல்னு எல்லாரையும் பிரிச்சு மேஞ்ச நீங்களா கேக்கறீங்க...?'' தெரியாமதான் கேக்கறேன்... இதை நான் போய் சொன்னா உடனே கேட்டுக்கிட்டு, 'அம்மா செண்பகம் - வெரி சாரிம்மா நாங்க உன்னை தப்பா கைது செய்துட்டோம். நீ வீட்டுக்கு போம்மா'ன்னு சொல்லிடுவாங்களா?''

- பத்மினி ~~பாஸ்கர்~~ குரலிலும் மெல்லிய கோபம் பற்றத் தொடங்கியது. மாயவனும் அதை உணர்ந்தான்.

''எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு மிஸ்டர் மாயவன். உங்களப் பத்தி நீங்க எதுவுமே எனக்கு சொல்லத் தேவையில்லை. அந்த அளவுக்கு ஊர்ல உங்களப் பத்தி சொல்லிட்டாங்க. நீங்க அடுத்தவங்க பொருளை திருடற ஒரு திருடனா இருந்தாலும் அந்த விஷயத்துல ஒரு ராபின்ஹீட் மாதிரி சில கொள்கைகளோடதான் இருந்துருக்கீங்க. எவ்வளவோ திருடியும் உங்கள நீங்க வளப்படுத்திக்கவே யில்லை. உங்க கைல ஒரு ரிஸ்ட் வாட்ச்கூட இல்லை. இப்பக்கூட கொள்ளை அடிச்ச பொருட்களோட தப்பிச்சுப் போக வழி இருந்தும் ஊருக்கே திருப்பித் தரத்தான் முயற்சி செய்துகிட்டிருக்கீங்க. இதெல்லாம் கதைகள்ல மட்டுமே நான் படிச்ச விஷயங்கள். நிஜத்துல இப்பதான் நேர்ல பாக்கறேன்.

ஒரு கவர்மென்ட் செய்ய வேண்டியதத்தான் நீங்க செய்திருக்கீங்க. ஆனா கவர்மென்ட்டுக்கு இருக்கற உரிமை உங்களுக்கு கிடையாதுங்கறதுதான் சிக்கலே.

அதனால பாதகமில்லை. உங்க தவறுகளுக்கு நீங்க மட்டுமே காரணம் இல்லேங்கறதுதான் என் பாய்ன்ட். ஆகையால உங்களுக்கு உறுதியா பொது மன்னிப்பு கிடைக்கும்.

அப்படி இருக்கும்போது எதுக்கு இப்படி அந்தமானுக்கும் நிக்கோபாருக்கும் நீங்க ஓடணும்? இங்கேயே நீங்க வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்ந்தாதானே உங்களுக்காக பழியை தூக்கி தன்தலை மேல் போட்டுக்கிட்டிருக்கற செண்பகக்குழல்வாய் மொழியோட முயற்சிக்கும் ஒரு அர்த்தம் இருக்கும்?''

- பத்மினி வளைத்துப் பிடிக்கத் தொடங்கியது. நன்றாக வேலை செய்தது. மாயவன் அவளையே கூர்ந்து கவனித்தான்.

''என்ன யோசிக்கறீங்க...? இப்ப நான் உங்களுக்கு ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லப் போறேன். இதைக் கேட்டா உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கும். ஆனா அது இன்ப அதிர்ச்சியா தான் இருக்க முடியும்கறது என் கருத்து. செண்பகக்குழல்வாய் மொழியை நீங்க கடத்தினதாத்தான் உங்க மேல வரதம்பட்டி போலீஸ் ஸ்டேஷன்ல கேஸ் ஃபைல் செய்யப்பட்டிருருக்கு. ஆனா செண்பகக்குழல்வாய்ெழி 'மாயவன் கடத்தலை நானாதான் மாயவனை தேடிப் போனேன்'னு சொன்னதை பத்திரிகைகளும் சரி மற்றவர்களும், குறிப்பாக டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்ல இருந்து போலீஸ் கமிஷனர் வரை யாரும் நம்பலை. உங்களுக்குப் பயந்துக்கிட்டு நீங்க சொல்லச் சொன்னதால அப்படிச் சொல்றா ளோன்னு அவங்க சந்தேகப்பட்டப்போ செண்பகக்குழல்வாய்



மொழி ஒருபடி மேல போய் மாயவனை நான் காதலிக்கறேன் அதனால்தான் தேடிப் போனேன். இது என் அப்பாவுக்கு பிடிக்கலை. அதனால் அவர் அராஜகமா நடந்துக்கப் பார்த்தார். என்னால பொறுத்துக்க முடியாமதான் என் அப்பாவை சுட்டேன்'னு சொன்னப்ப எல்லோருக்குமே ஷாக்! அதாவது, உங்கமேல பழிவரக் கூடாதுங்கறதுக்காக பழியை மட்டும், செண்பகக்குழல்வாய்மொழி தன்மேல போட்டுக்கல - காதலையும் சேர்த்து போட்டுக் கிட்டிருக்காங்க. கடைசில அந்த அஸ்திரம்தான் நின்னது. இப்ப சொல்லுங்க... அப்படிப் பட்ட செண்பகக்குழல்வாய்மொழி ஆசைப்பட்டபடி நீங்க சரண்டராகி பொது மன்னிப்பு பெற்று, புதுசா ஒரு நல்ல வாழ்க்கை வாழறது புத்திசாலித்தனமா? இல்ல, ஓடிப்போறது புத்திசாலித்தனமா?''

- பத்மினியின் இறுதி அஸ்த்திரம் பயங்கரமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. மாயவன் முகத்தில் அது அப்பட்ட மாகத் தெரிய ஆரம்பித்தது.

''அய்யோ... என்ன இந்தப் பொண்ணு என்னப் போய் காதலிக்கறேன்னுல்லாம் சொல்லிக்கிட்டு? அது எங்க - நான் எங்க? அது சாமி மாதிரி... நான் கள்ளன்... கேடு கெட்டவன்...'' என்று படபடப்பானான் மாயவன்.

''அப்ப அந்த சாமி விருப்பப்படி நடந்துக்கப் பாருங்க - எல்லா உண்மைகளையும் நீங்களே நேர்ல வந்து கலெக்டரப் பாத்துச் சொல்லுங்க. இல்ல, போலீஸ் கமிஷனர்கிட்ட சொல்லுங்க. ஏன்னா செண்பகக்குழல்வாய்மொழி ஒரு தவறும் செய்யாததால பொய்யா அவங்க எந்த தண்டனையையும் அனுபவிக்கக்கூடாதுல்ல.''

''அதுல என்ன சந்தேகம்... நான் இப்பவே உங்ககூட வர்றேன்...'' என்ற மாயவன் தன் சகாக்கள் பக்கம் வேகமாக திரும்பினான். அவர்கள் கிட்டத்தட்ட உறைந்து போயிருந்தனர்.

''என்ன மக்கா அப்படிப் பாக்கறீங்க...?''

''வேற எப்படி பாக்க...? அந்த புள்ள இப்படிப் பண்ணிட்டாளே?''

''நெசம்தான்... வேற வழி?''

''சாமியார் சொன்னதை மறந்துட்டியா?''

''என்ன சொன்னார்?''

''எது நடந்தாலும் சரி - ஒரு பத்து நாளைக்கு இந்த மலையைவிட்டு நீ போவக்கூடாதுன்னாருல்ல?''

''அப்ப அந்த பத்து நாளும் அந்தப் புள்ள ஜெயில்ல கிடந்து கஷ்டப்படணும்கறியா?''

''இப்படிக் கேட்டா எப்படி மாயவா?''

''அப்ப என்ன செய்யலாம்னு நீங்களே சொல்லுங்கடா.''

''இந்தா புள்ள டி.வி...! ஒரு பத்துநாள் பொறுத்துக்க - பதினோராம் நாள் நாங்க நாலுபேருமே கீழவந்து நீ யார்கிட்ட சரண்டராவச் சொல்றியோ? அவுககிட்ட சரண்டராயிட்றோம். அதுவரை கொஞ்சம் அவுகள பொறுத்துக்க சொல்லு ஆத்தா'' என்றான் உளியன்.

''அப்படி எல்லாம் சொல்ல முடியாது. எதுக்கு பத்துநாள் டைம்னு கேப்பாங்க. சாமியார் சொன்னார்னா சிரிப்பாங்க. இப்ப நாட்டுலயும் ரொம்பக் கெட்டப்பேர் சாமியார்களுக்குதான்.''

''ஆத்தா! எங்க சாமி அப்படி எல்லாம் டுபாக்கூர் ஆள் கிடையாது. தங்கம்... தக்கத்துலயும் தங்கம்.''

''அதுக்கும்மேல பிளாட்டினமாவே கூட அவர் இருக்கட்டும். ஆனா அதெல்லாம் நிக்காது. சொன்னா புரிஞ்சுக்குங்க.''

''ஆமாம் மக்களே... இனியும் ஒத்த நாள் அந்தப் பொண்ணு எனக்காக ஜெயிலுக்குள்ள இருக்கறதயும் என்னால ஒத்துக்க முடியாது. என்மேல ஆசையா இருந்த கோசலையைத்தான் போட்டு புதைச்சிபிட்டேன். இதாச்சும் நல்லா இருக்கணும் மக்களே...'' என்று மாயவன் சொல்லவும் குரல் திரும்பவும் உடைந்து கண்ணீர் பீறிட்டது.

''சரிப்பா... இந்த நக, நட்ட எல்லாம் என்ன பண்ண? இதை ஊட்டுக்கு ஊடு சேர்க்க ஒரு நாளாச்சும் வேண்டாமா?'' - பெருமாள் கேட்டதும் வேலை செய்தது.

''சரி... நாளைக்குக் காலைல பத்து மணிக்கு நீங்க சரண்ட்ராகறதா, நான் கலெக்டர், எஸ்.பின்னு எல்லார்கிட்டயும் சொல்லிடவா?'' என்று பின்பாய்ன்ட்டாக கேட்டாள் பத்மினி.

''ஆமாம் தாயி, அதான் சரி. அப்படியே சொல்லிடு. நாங்களும் இத்த எல்லாம் ஊருக்குள்ள எல்லார்கிட்டயும் சேத்துடறோம்.''

''இந்த நகை பணத்தை எல்லாம் நீங்க சரண்டாகும் போது ஒப்படைக்கறதுதான் சரியா இருக்கும். ஆனா இந்த விஷயத்துல நான் உங்க பக்கம். கவர்மென்ட்டுக்கு இது போய் ஊருக்கு பயன்படறதுங்கறது கடல்நீரை குடிநீராக்கற மாதிரி ஒரு நீளமான



பிராசஸ். நீங்க உங்க ஆசைப்படியே செய்யுங்க. இதைப்பத்தி நான் எதுவும் பேசமாட்டேன். உங்களுக்காக நான் பத்துமனிக்கு வரதம்பட்டி டிராவலர்ஸ் பங்களாவுல காத்திருப்பேன். நான் மட்டுமில்ல. கலெக்டர் எஸ்.பி. தாசில்தார்னு இந்த மாவட்ட நிர்வாகம் மட்டுமல்ல மீடியா உலகமே காத்திருக்கும்'' என்றாள்.

''வரேன்னு சொல்லிட்டு வராம மட்டும் இருந்துடாதீங்க. இப்பவே உங்களை பிடிக்க ஒரு பெரிய போலீஸ் ட்ரூப் ரெடியாயாச்சு. நீங்க சரண்டராகத் தயாரா இல்லைன்னு நான் சொன்னா அவங்க களத்துல இறங்கிடுவாங்க. அப்புறம் அவங்க கைல நீங்க சிக்கும்போது அது வேற மாதிரியான போக்காதான் இருக்கும். எங்க எல்லார் விருப்பமும் முயற்சியும் வீணா போறதுக்கும் வாய்ப்பு இருக்கு'' என்றாள்.

மாயவனோ நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொன்னான். ''எனக்கு எப்பவும் ஒரு நாக்குதான். ஒரு வார்த்தைதான்...! காலைல 10 மணிக்கு நாங்க அந்த பங்களா முகப்புல நிப்போம். இது சத்தியம்'' என்றான்.

அவனிடம் அதற்குமேல் பத்மினி வாதம் செய்ய விரும்பவில்லை. செல்லக்கிளியுடன் அவள் அந்த மலைப்பகுதியை விட்டு நீங்கத் தொடங்கினாள்.

அவர்கள் விலகவும் மற்ற மூவரும் மாயவனை சூழ்ந்து கொண்டனர்.

''என்ன மக்கா?''

''நாம நிஜமாலுமே நல்லாருப்போமா மாயவா?''

''நம்ப முடியலை?''

''நமக்குத்தான் இத்தன வருசத்துல ஒரு நல்லதுகூட நடந்தது இல்லையேப்பா.''

''அப்படித்தான் நானும் நினைச்சேன். ஆனா அந்த வெள்ளாவி புடிச்ச பொண்ணு இம்புட்டு வீம்பா பழியத் தூக்கி தலையில போட்டுகிட்டத பாத்தா நமக்குக்கூட நல்லது நடக்கும்னுதான் தோணுது. போதாக்கொறைக்கு, தா வந்துட்டு போகுதே இந்த டிவிக்காரப் பொண்ணு... இது நம்பள எல்லாம் எம்.ஜி.ஆர் மாதிரில்ல டிவில காட்டியிருக்குது?''

''அப்ப நாமளும் புள்ளகுட்டின்னு கண்ணாலம் கட்டி வாழ்வோமாப்பா?''

''நம்புவோமே... காசா - பணமா?''

''மாயவா! இன்னிக்கு ராத்திரி இந்த பையுங்கள
ஊருக்குள்ளார போட்டுகிட்டு குலசாமி கோவிலுக்கும்
போவணும்ப்பா. மனசு பரபரங்குது. என்ன சொல்றே?''

''கட்டாயமா... போய் சாமிகால்லயும் உழுவோம்...
'கருப்பா, இனியாச்சும் கைதூக்கி உடப்பா'ன்னு கேட்போம்'',
கண்களில் கண்ணீர் துளிர்க்க ஒருவித புதுவித நம்பிக்கை யுடன்
அவர்கள் பேசிக் கொண்டதை அந்த மலை உச்சியும் கேட்டபடி
இருந்தது!

விதியின் பக்கங்கள் மிக மர்மமானவை - மர்மம் விலக
விலகத்தான் அந்த பக்கத்தில் எழுதப்பட்டவையும் தெரிய வரும்.

இவர்கள் வரையிலும் நாளை தெரிந்து விடுமா?

**மா**வட்ட ஆட்சியர் அலுவலகம்!

பத்மினி கலெக்டரைப் பார்த்துவிட்டு வெளியில் வந்தாள். சில போலீஸ் அதிகாரிகள் அவளை நட்போடு பார்த்துச் சிரித்தனர்.

''எங்க ஆள்ல ஒருத்தர் தப்பு பண்ணவும் எங்க டிபார்ட்மெண்ட்ட நம்பாம கலெக்டரப் பிடிச்சுட்டீங்க போல'' என்றார் ஒரு இளம் போலீஸ் அதிகாரி.

''புரிஞ்சாச் சரி'' என்பது போல சிரித்தாள் பத்மினி.

மாயவன் சரணடையப்போகும் செய்தியும் சரசரவென பரவி விட்டது. அங்கிருந்து நேராக 'க்ரைம் பிராஞ்ச்'சின் என்கொயரி செல்லுக்குத்தான் சென்றாள்.

காத்துக்கொண்டிருந்தாள் செண்பகக்குழல்வாய் மொழி.

''என்ன சொன்னாங்க மிஸ் பத்மினி... சரண்டராக சம்மதிச்சுட்டாங்களா?'' ஆவலாகவும் கேட்டாள்.

''இன்னுமா உங்க காதுக்குச் செய்தி வரலை...?''

''வந்தது... நம்பறதுக்கு கஷ்டமா இருந்தது. ஏன்னா நான் உணர்ந்த வரைல எந்த குழப்பத்துக்கும் இடம் கொடுக்காத ஒரு புத்தி மாயவனுக்கு... அவ்வளவு சுலபமா யாரும் அவரை கன்வின்ஸ் பண்ணிட முடியாது.''

''ஆனா நான் பண்ணிட்டேன் செண்பகம். ஐ ஆம் சாரி உங்கள இனி செண்பகம்னே கூப்பிட்றேன்.''

''ப்ளீஸ்... ஆமா எப்படி சம்மதிச்சாங்க?''



''அதைச் சொல்லியே ஆகணும் ஏன்னா உங்க அனுமதி
இல்லாம உங்க பேரால ஒரு பொய்ய சொல்லவும்தான் சரண்டராக
சம்மதிச்சாங்க.''

''அப்படி என்ன பொய் சொன்னீங்க.''

''நீங்க மாயவனைக் காதலிக்கறதா சொன்னேன். காதலுக்
காகத்தான் இவ்வளவு பெரிய தியாகம்கற மாதிரி மோல்ட் பண்ணப்
பார்த்தேன்...''

- பத்மினி சொன்ன மறுநொடி செண்பகக்குழல்வாய் மொழியிடம் ஒரு தேக்கம்! கூடவே பதட்டமான ஒரு உணர்ச்சி.

''செண்பகம் என்னாச்சு நான் சொன்னது உங்கள டிஸ்டர்ப் பண்ணிடிச்சா?''

''இ... இ... இல்ல?''

''இல்ல, நீங்க டிஸ்டர்ப் ஆயிட்டது தெரியுது.''

''ஆக்சுவலி...''

''அது...''

''எது...?''

''அது... அது ஒரு உண்மைதான் பத்மினி!''

- செண்பகக்குழல்வாய்மொழி அப்படிச் சொன்ன மறுநொடி பத்மினியிடம் ஒரு திகைப்பு. அந்த திகைப்போடு நெடுநேரம் மௌனமாக வெறித்தாள். பின், ''இது எனக்கு பெரிய சர்ப்ரைஸ் மட்டுமல்ல. நம்ப முடியாத ஒண்ணாவும் இருக்கு'' என்றாள் மெல்லிய குரலில்...

''இருக்கலாம்... ஆனா மாயவன் மேல எனக்கிருக்கறது மரியாதை மட்டுமல்ல. அதுக்கும் மேலான ஒரு உணர்ச்சி. அதைக் காதல்னு சொன்னா தப்புமில்ல. அந்த காதல் மாயவனை அவரோட குற்றவாழ்க்கையில இருந்து மீட்டெடுக்கப் போகுதுன்னா நான் அதை ஊரைக்கூட்டி 'டிக்ளேர்' பண்ணவே தயாரா இருக்கேன்'' அதிகபட்ச சிலிர்ப்போடு பேசினாள் செண்பகக்குழல்வாய்மொழி.

''ஷ்யூர் செண்பகம்! உங்க காதலுக்கு அந்த சக்தி உண்டு. அதே
சமயம் உங்கள வெளிய எடுக்க குற்றத்தை அவர் ஒத்துக்கப்
போறாரு. அப்படி ஒத்துகிட்ட நிலைல பொதுமன்னிப்பு எந்த
அளவு சாத்யம்னு எனக்கு தெரியலை...''

''நோ... அவர் ஒத்துக்கக் கூடாது. அவருக்குப்
பொதுமன்னிப்பு கிடைச்சே தீரணும். ஒரு சுதந்திரமான மனுஷனா
அவரும் அவரோட நண்பர்களும் வாழ்ந்தே தீரணும்...''

''அவர் ஒத்துகிட்டு சரண்டராகப் போறதே உங்களுக்காகத்தான்! அப்ப எப்படி அது சாத்தியம்?''

''இல்ல... கூடாது... அவர் அப்படிச் சொன்னா நான் அதை பொய்யின்னு சொல்வேன்.''

''இப்படி ஒரு போட்டியா? நான் உங்ககிட்ட எனக்கு நிறைய கண்டனங்கள் இருக்கும்னு நினைச்சுதான் வந்தேன். ஆனா என்னை திக்குமுக்காட வெச்சுட்டீங்க. ஒரு அமெரிக்கன் ரிடர்னான உங்ககிட்ட இப்பகூட என்னால இதை எதிர்பார்க்க முடியல.''

''நானே எதிர்பார்க்கலேன்னுதான் சொல்வேன். நான் எப்பவுமே மனசுக்காக வாழறவ. உடம்பும் அது சார்ந்த சுகங்களும் எனக்கு எப்பவுமே இரண்டாம் பட்சம்தான். உறுத்தலோட வாழறத விட ஒரு தண்டனை இருக்க முடியுமா?''

''செண்பகம் ரியலி யூ ஆர் கிரேட்! நான் ஒண்ணு சொன்னா கேட்பீங்களா?''

''சொல்லுங்க.''

''மாயவனும் எது உண்மையோ அதை ஒத்துக்கட்டும். நீங்க வெளிய வாங்க. அவங்க விடுதலைக்காக அப்புறமா அழுத்தமா போராடுங்க. பொதுமன்னிப்பு கிடைக்காம ஆயுள்தண்டனையே கிடைச்சாலும் ஒரு கோணத்துல அது அவங்க வரைல நல்ல விஷயம்தான். களவு வாழ்க்கைல இருந்து அவங்கள மீட்கறதுதான் முதல் நோக்கமா இருக்கணும். அப்புறமா நன்னடத்தை, தலைவர்கள் பிறந்தநாள், அது இதுன்னு நிறைய வாய்ப்புகள் இருக்கும். அவங்கள வெளிய கொண்டுவர...''

- பத்மினி சொன்னதை செண்பகக்குழல்வாய் மொழியும் சிந்திக்கத் தொடங்கினாள். ''நீங்க உள்ள இருந்து அவங்க இப்ப வெளிய இருக்கறது ஒரு வகைல பாதுகாப்பும் இல்லை. மாயவனால பாதிக்கப்பட்டவங்க அவரை தொந்தரவு செய்ய முயற்சிக்கலாம். அதனால மாயவன் திரும்பவும் தனக்குத் தன் பழைய வாழ்க்கைதான் சரின்னு தோணி அந்த வாழ்க்கைக்கே திரும்பிடவும் வாய்ப்பு இருக்கு. நான் சொல்றத நல்லா யோசிச்சு பாருங்க...''

பத்மினி சரியாகத்தான் சொன்னாள். செண்பகக் குழல்வாய் மொழியும் அதற்குமேல் அவளிடம் விவாதிக்கவில்லை.

''குட்... இனி எல்லாம் நல்லபடியாவே நடக்கும்... நடக்கட்டும். உங்க நல்லெண்ணம், என் நல்லெண்ணம் எதுவும் வீண்போகாது. போகவும் விடக் கூடாது... வரட்டுமா?'' என்றவளாக விடையும் பெற்றாள்.



சி.பி.ஐ. ஆபீஸ். டிவியிலேயே ஓடும் ஸ்க்ரோலிங்கில் 'மாயவன் சரணடைய முடிவு - நாளை பத்து மணிக்கு விருந்தினர் மாளிகையில் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை ஆய்வாளர் முன்னிலையிலும் சரணடைகிறார்' என்ற எழுத்துக்கள் ஓடியபடி இருந்தன.

பார்க்கப் பெருமையாக இருந்தது. ஒரு போலீஸ் அதிகாரியும் பத்மினியின் கையை குலுக்கி, ''எங்களால முடியாதத நீங்க சாதிச்சுட்டீங்க'' என்றபோது பத்மினிக்கு சற்று இருமாப்பு கூட ஏற்பட்டது.

விடிந்து விட்டது!

வாசலுக்குக் கோலம்போட வரதப்பட்டி குடிசைவாசிப் பெண்களுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது! ஒரு வீட்டு வாசலில் மூன்று பவுனில் சங்கிலி. ஒரு வீட்டு வாசலில் ஐம்பதாயிரம் ரூபாய் ரொக்கம் - ஒரு தொழுவத்தில் மாட்டின் கொம்பின் நுனியில் தங்க வளையல்கள் சில...

வரதம்பட்டியே சந்தோஷப்பட்டியாகி விட்டது.

''எல்லாம் மாயவன் கருணை...'' என்று பேசிக் கொண்டவர்கள் அவன் சரணடையப் போவதைப் பார்க்கவும் அவனுக்கு ஆதரவாகக் கோஷம் போடவும் அப்போதே முடிவெடுத்துவிட்டனர்.

சிலர், ''உனக்கு மட்டும் மாயவன் அள்ளி கொடுத்துட்டு எனக்கு கிள்ளிக் கொடுத்துட்டானே'' என்று வருத்தப்பட்டும் கொண்டனர்.

நேரமும் உருண்டு கொண்டே போனது! விருந்தினர் மாளிகையிலும் பரபரப்பு... கேமராவும் கையுமாக மீடியாக்களை சேர்ந்தவர்களும் பத்திரிகையாளர்களும் ஒருபுறம் குவிய மறுபுறம் ஜனக்கூட்டம். நடுவில் முதலில் மாவட்ட ஆட்சித்தலைவரும், பின்னர் காவல்துறை ஆய்வாளரும் வந்து சேர்ந்தனர்.

பத்மினியும் பிரதானமாக நடமாடிக் கொண்டிருந்தாள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவ்வப்போது அவளைப் பார்ப்பதும் கடிகாரத்தைப் பார்ப்பதுமாக இருந்தார்.

மணி பத்தடிக்க சில நொடிகள்தான் இருந்தது.

அப்போது கூட்டத்திலும் சலசலப்பு. எப்பொழுதோ வந்த மாறுவேடத்தில் இருந்த மாயவனும் அவன் சகாக்களும்

வேஷத்தைக் கலைத்தபடி ஜனங்களைப் பார்த்துக் கையசைத்தபடி ஒரு நூறு அடி தொலைவில் இருக்கும் பங்களா நோக்கி நடக்கத் தொடங்க ஜனங்களிடம் ஒரே கூச்சல்... சப்தம்! அது உள்ளே எதிரொலித்து விருந்தினர் மாளிகையின் வராண்டாவுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரும், காவல்துறை ஆய்வாளரும் வந்து நின்றனர்.

எதிரில் அவர்கள் வருவதற்கான பாதை!

எதிரில் அவர்கள் வருவதற்கான பாதை!

அதில் மாயவனும் சகாக்களும் வருவது தெரிந்தது.

முழங்கால் வரைக்குமான வேட்டியும் இடுப்பில் பச்சை பெல்ட் கட்டுமாக காலில் டயர் செருப்பு சகிதம் மாயவன் நடந்துவரும் தோரணையே அலாதியாக இருந்தது. மேலே சட்டை இல்லை - மாறாக உருத்திரண்ட மார்பு கழுத்தில் நரிப்பல்லும், புலிப்பல்லும் கொண்ட தங்கச்சங்கிலி. அவன் சகாக்களும் அவனை அப்படியே ஒத்தி எடுத்திருந்தனர். கேமராக்காரர்கள் அதைச் சுடச்சுட படம் பிடித்தபடி கூடவே நடந்தனர். ஜனங்களிடம் 'மாயவண்ணே... மாயவா... எஞ்சாமியே...'' என்று பலமாதிரியான அன்பு விளிப்புகள்.

கிழவி ஒருத்தி சரேலென்று இடையிட்டு, ''எங்கண்ணு! போலீசுல உன்ன ஒப்படைச்சுக்கப் போறியா? உன்னை தூக்குல போட்டுருவாங்களா?'' என்று எதிர்பாராத கேள்வியை கேட்டு பதைக்க அவளை போலீஸ்காரர் ஒருவர் விலக்கி விட்டார்.

அவளை விலக்கிய நொடி எதிரில் பத்து நாள் தாடியோடு செத்துப் போன ஜூலியின் அப்பாவான வின்சென்ட்! அவரது கையிலும் ஒரு துப்பாக்கி.

கண்ணிமைக்கும் நேரத்தில் அது 'ட்ரிகர்' ஆகியது. அதன் தோட்டா மாயவனின் மைய மார்பைத் துளைத்தது. அடுத்த தோட்டாவும் வேகமாக வந்து துளையிட்டது. மாயவனின் சகாக்களும் மின்னலாயினர். அவர்மேல் பாய்ந்தனர். ஆனால் அவர் முகத்திலோ பெரிய அளவில் ஒரு ஆவேசம். தன்மேல் பாய்ந்த மாயவன் சகாக்களையும் தன் துப்பாக்கியைக் காட்டியே மிரட்டியவர் கூட்டத்தில் அங்கும் இங்குமாக ஓடமுயன்று முடியாமல் போய் சட்டென்று அதே துப்பாக்கியால் தன் நெற்றிப் பொட்டில்சுட்டுக்கொண்டு அப்படியே கீழே விழுந்தார்! எல்லாமே சில நொடிகளில் நடந்து முடிந்துவிட்டது.

பத்மினி பாஸ்கர் அந்த காட்சியை பார்த்து உறைந்து போய்விட்டாள்.

ஐயோ என்று மனதுக்குள் பெரும் ஓலம்!



மறுநாள்!

வின்சென்ட்டின் மனைவி லீமாஜாஸ்மின் பேட்டி டிவியில் ஓடியபடி இருந்தது.

''ஜூலியோட சாவை என் கணவரால ஜீரணிக்கவே முடியல. அதுக்கு காரணம் மாயவன்தான்னு அப்ப சொல்லப்பட்டதால அவர் மனசுல அப்பவே மாயவன் மேல வன்மம் விழுந்திடிச்சு. அதன்பிறகு அவர் பித்துப் பிடிச்சவர் போலதான் இருந்தார். மாயவன் எந்தத் தப்பும் பண்ணலைங்கறது பின்னால தெரிய வந்தப்போ அதை கேட்டுக்கவோ தன் மனசை மாத்திக்கவோ அவர் தயாரா இல்லை. அதே சமயம் அவர் இப்படிக் கொலை செய்யற அளவுக்கு போவார்னும் நாங்க யாரும் நினைக்கல. ஒரு பத்து நாள்ல வெளிநாட்டுல இருக்கற எங்க மகனோட போய் கொஞ்ச நாள் இருப்போம்னு நான் பாஸ்போர்ட் விசா வாங்கற முயற்சியில இருந்தேன். ஆனா ஒரு தப்புக்கு இரண்டு தப்பா இப்ப இவரையும் இழந்துட்டு நான் நிக்கறேன்'' என்று அவள் கண்ணீர் சிந்தியதை பார்த்தபடி இருந்த பத்மினிக்கு உளியன் பத்துநாள் தவணை கேட்டதும், சாமியார் சொன்னார் என்று சொன்னதும் உள்ளே ஓடியது.

யார்தான் எவ்வளவுதான் சொன்னாலும் விதி தன் காரியத்தை கச்சிதமாக முடித்துக் கொண்டே தீரும் என்பதும் புரிந்தது. மாயவனைத்தான் சென்று பார்த்திருக்காவிட்டால் அந்தமானிலாவது உயிரோடு இருந்திருப்பான் என்றும் தோன்றி மனதுக்குள் வலி எடுத்தது.

அதே நினைவுகளோடு செண்பகக்குழல்வாய் மொழியை அன்று கோர்ட்டில் ஆஜர்படுத்த இருப்பதை தெரிந்து கொண்டு சுரத்தே இல்லாமல் கோர்ட்டுக்கும் புறப்பட்டாள்.

கோர்ட்டில் அவளை நேருக்கு நேர் பார்க்க துணிவில்லாமல் போய்விட்டது போலவும் தோன்றியது.

இருந்தும் ஆயிரம் மன உழற்சிக்கு நடுவில் கடமை நிமித்தம் கோர்ட்டை அடைந்தவள் போலீஸ் காவலோடு வந்திறங்கிய செண்பகக்குழல்வாய்மொழியைப் பார்க்கவும் விக்கித்துப் போய்விட்டாள்.

தூய வெண்ணிறப் புடவையைக் கேட்டு வாங்கி அணிந்து வந்திருந்த அவள் காதலுக்கும் கற்புக்கும் ஒரு இலக்கணம் போல

கூண்டில் ஏறத் தயாராகிக் கொண்டிருந்தாள்! பத்மினி அதுவரை அழுததில்லை. அப்போது அழ ஆரம்பித்தாள் - துணைக்கு வருகிறேன் என்று வானமும் அழ ஆரம்பித்தது.

இந்த மனிதர்களின் வாழ்க்கைக்குள் தான் எவ்வளவு வண்ணங்கள்!

நிறைந்தது